
# நினைவுக் குமிழிகள்

91

பேராசிரியர்
டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்



ன்றாம்
பகுதி

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode


**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.


You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.



வேங்கடம் வெளியீடுகள்
AD-13 (PLOT. 3354)
அண்ணா நகர் – சென்னை-600 040


VENKATAM PUBLICATIONS
AD-13 (PLOT. 3354)
ANNA NAGAR - MADRAS-600 040.

நினைவுக் குமிழிகள்—3

தமிழ் வளர்ச்சிக்கான
சிறந்த நூல்களை வெளியிட
தமிழக அரசின் நிதியுதவி
வழங்கும் திட்டத்தின்கீழ்
நிதியுதவி பெற்று இந்நூல்
வெளியிடப் பெறுகின்றது

பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்

## என்பேறும் நின்பேறும்

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனொர்கைம் மாறே[1]

—மாணிக்கவாசகர்

## என்னை விழுங்கிய மாயன்

வாரிக்கொண்டு உன்னை விழுங்குவன் காணில்என்று
ஆர்வுஉற்ற என்னைஒழிய என்னில் முன்னம்
பாரித்துத் தான்என்னை முற்றப் பருகினான்;
கார்ஒக்கும் காட்கரை அப்பன் கடியனே[2]

—நம்மாழ்வார்

1. *திருவா. கோயிற்றிருப்பதிகம்—10*
2. *திருவாய் 9-6:10*

# நினைவுக் குமிழிகள் - 3

(ஆசிரியரின் 74-வது அகவை நினைவாக)

'அருங்கலைக்கோன்', 'ஸ்ரீசடகோபன் பொன்னடி'
பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்
(எம்.ஏ., பி.எஸ்சி., எல்.டி., வித்துவான், பிஎச்.டி)
தமிழ்ப் பேராசிரியர்—துறைத் தலைவர் (ஓய்வு)
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்
திருப்பதி

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
184, பிரகாசம் சாலை, சென்னை-600 108

முதற் பதிப்பு : நவம்பர், 1989

© டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் M.D.

ஆசிரியரின் இளையமகன்
AD – 13 (Plot-No. 3354)
அண்ணா நகர், சென்னை-600 040
தொலைபேசி எண் : 62 11583

பக்கங்கள் : xx + 440 = 460

**விலை : ரூ. 43-50**

NINAIVUK-KUMIZHIKAL—Part III

VENKATAM PUBLICATION'S
AD-13 (Plot No. 3354)
Anna Nagar, MADRAS-600 040
Phone : 62 155 83

---

அச்சிட்டோர் : ஸ்ரீகோமதி அச்சகம்
41, சூரப்ப முதலி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005
தொலைபேசி எண்: 84 45 54


# எனக்குக் காப்பு


நாளும் பெரிய பெருமாள்
  அரங்கர் நகைமுகமும்
தோளும் தொடர்ந்தென்னை யாளும்
  விழியும் துழாய்மணக்குந்
தாளும் கரமும் கரத்திற்சங்
  காழியும் தண்டும்வில்லும்
வாளும் துணைவருமே தமியேனை
  வளைந்து கொண்டே[3]

—பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்


3. *திருவரங்கத்து மாலை-காப்பு*

# அன்னையும் பிதாவும்






மாதா பிதுவாக வைத்தேன் எனதுள்ளே
யாதுஆகில் யாதே இனி? (பெரி. திருவந், 70)
—நம்மாழ்வார்.



# பக்திப் படையல்

நல்லறம் குறைந்து கொடுஞ்செயல் மலிய
நானிலப் பாரத்தைக் குறைக்க
மல்லலார் அயோத்தி முதலிய பதியில்
மாண்பொடு வயங்கிய சிறப்பைத்
தொல்லறம் அறியா மாந்தரும் கண்டு
துய்த்தொளி எய்தவேங் கடத்தில்
அல்லலைப் போக்கி விளங்குமா மாயன்
அருளடிக் குரியதிந் நூலே

*(வேங்கடவனை விபவ மூர்த்தியாகக் காண்பது)*



# அணிந்துரை

(டாக்டர் ச. மெய்யப்பன்,
தமிழ்த்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

தமிழில் திரு. வி.க. அவர்களின் வாழ்க்கைக் குறிப்பும் உ. வே. சாமிநாத ஐயரின் வாழ்க்கை வரலாறும் வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தில் சிறப்பிடம் பெறுவன. திருச்சி T.S.S.ராஜன் அவர்கள் எழுதிய 'நினைவலைகள்' குறிப்பிடத்தக்கது.

பல்லாயிரம் சிறுகதைகளும், ஆயிரக்கணக்கான புதினங்களும் மலிந்துள்ள தமிழில் வாழ்க்கை வரலாறுகள் விரல்விட்டு எண்ணத்தக்க அளவிலேயே எழுதப் பெற்றுள்ளன. நீண்ட வரலாறு உள்ள நெடிய தமிழில் பல்வகை இலக்கியவடிவங்கள் பெருகியுள்ளன. தற்புகழ்தல் குற்றம் என்று கருதித் தமிழ்ப் பெருமக்களும், தமிழறிஞர் களும் தங்கள் வரலாறுகளை எழுதாது விட்டுவிட்டனர். இந்தத் தலைமுறையில் கவியரசுகண்ணதாசன் அவர்களின் 'வனவாசமும்,' கலைஞரின் 'நெஞ்சுக்கு நீதியும்,' ஜெயகாந்தனின் ஓர் இலக்கியவாதியின் அரசியல் அநுபவங்கள் ஆகிய மூன்றும் வாழ்க்கை வரலாற்றிலக் கியங்களில் மும்மணிகளாகத் திகழ்வன.

கல்வியாளர் சுந்தரவடிவேலு அவர்கள் ஏறத்தாழ மூவாயிரம் பக்கங்களில் எழுதிய 'நினைவலைகள்' குறிப்பிடத்தக்க வாழ்க்கை வரலாறு ஆகும். மேலே குறிப்பிட்ட வாழ்க்கை வரலாறுகள் அனைத்தும் தமிழ்

நாட்டு வரலாற்றில் ஒரு நூற்றாண்டுக் காலத்தினுடைய நிகழ்ச்சிகளை, உணர்வுகளை, போக்குகளை, அலைகளைப் பதிவு செய்துள்ளன. வாழையடி வாழை என வருகிற மரபில் வந்துதித்த அறிஞர் சுப்புரெட்டியார், தாம் வாழ்க்கையில் கண்டவற்றை, கேட்டவற்றை, கற்றவைகளை, உணர்ந்தவைகளை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து எழுதி மகிழ்கிறார்.

டாக்டர் சுப்புரெட்டியார் அவர்கள் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராக வாழ்வைத் தொடங்கிப் படிப்படியாகத் தமிழ்த்துறைத் தலைவராக விளங்கிப் பின்பு கலைக்களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராக உயர்ந்த செம்மல். அரை நூற்றாண்டுக் காலமாகக் கல்வி உலகில் சிறந்து வருபவர்கள். பல்துறைப் பயிற்சி மிக்கவர்கள். பல நிலைகளில் பதவி ஏற்றுச் சிறந்தவர்கள். எதனையும் ஆழ்ந்து கற்பவர்கள். எளிதாகக் கற்பிப்பவர்கள். கல்வி இயலில் தனிநோக்குச் செலுத்துபவர்கள். இவர்தம் படைப்புகளின் பயனாக முகிழ்த்த நூல்கள் பல. எதனையும் விரிவாகவும், விளக்கமாகவும் எழுதுபவர்கள். இவர்கள் படைத்த நூல்கள் அனைத்தும் அளவாலும் பொருளாலும் பெரியவை.

பெரு நூல்கள் எழுதிப்பழகிய டாக்டர் சுப்புரெட்டியார் தம் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவற்றைத் தொகுத்து ''நினைவுக் குமிழிகள்'' என்ற தலைப்பில் நூலாக்கியுள்ளார்கள். இந்நூலில் ஆசிரியரின் வாழ்வில் சிறந்த பகுதியாகிய காரைக்குடி வாழ்வு மலரும் நினைவுகளாகின்றது. காரைக்குடி கவின்மிகு நகர். கற்றோரைப் போற்றும் நகர். கம்பனுக்கு விழா எடுக்கும் நகர். செல்வர்கள் பலர் சிறப்போடு வாழும் திருநகர். தமிழ் விழாக்களும் திருவிழாக்களும் மலிந்த மாநகர். சொ. முருகப்பாவும், இராய. சொக்கலிங்கமும், கம்பன் அடிப்பொடி கணேசனும், கண்ணதாசனும் வாழ்ந்த நகர்

பல பத்திரிகை ஆசிரியர்களை உருவாக்கிய நகர். நாடெங்கும் நற்பணிகள் பல செய்யும் நகரத்தார்கள் வாழும் நன்னகர்.

இத்தகு திருநகரில் தாம் வாழ்ந்த காலங்களை எண்ணி நினைவலைகளைப் பதிவு செய்கிறார் அறிஞர் சுப்புரெட்டியார். ஒவ்வொரு நினைவுக் குமிழியிலும் ஒரு பெரிய அல்லது ஒரு சிறிய நிகழ்ச்சி அமைந்திருக்கும். ரெட்டியாரின் கைவண்ணத்தால் அவை உயிரோவியம் ஆகின்றன. காரைக்குடியின் கதையினை, பெருமக்கள் வாழ்வினை, கல்வி நிலையங்களின் வளர்ச்சியினை, சான்றோர்களின் சால்புகளை, அறிஞர்களின் அறிவுரைகளை கவிதை அழகுடன் கல்வெட்டுகளாக்கித் தருகிறார்கள். அவர்கள் கண்ட காட்சி ஒன்றா? இரண்டா? ஓராயிரமல்லவா! மனிதர்களின் சாதனைகள் எத்தனை எத்தனையோ? தனித்தனி வளையங்களாக அவை வட்ட மிடுகின்றன. ஓர் ஆசிரியர் நல்லாசிரியர் பேராசிரியர் உருவான கதையை பொன் இழைச் சரடாக இந்நூலுள் இழையோடுகிறது.

பத்துப் பக்கம் கூட எழுதமுடியாத 'பெருமக்கள்' வாழும் இந்நாளில் பேராசிரியர் சுப்புரெட்டியார் அவர்கள் பல்லாயிரம் பக்கம் எழுதிச் சாதனை செய்தவர் ஆகிறார். பழைய நிகழ்ச்சிகளை அசைபோடாமல் அந்நிகழ்ச்சிகள் இன்றுவரை வளர்ந்துள்ள பாங்கினையும் படம் பிடித்துக் காட்டுகிறார். திருப்பதியில் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் இவருடன் பேராசிரியர் பதவிக்குப் போட்டி யிட்ட குமாரசாமி ராசா அண்மையில் ஆகஸ்ட்-89 காணாமல் போன கதையைக்கூட கலையழகுடன் விவரிக்கும் திறம் வியப்பிற்குரியது. திரும்பிப்பார்க்கிறார், நிகழ்ச்சிகளை. நெஞ்சில் நிறுத்துகிறார். ஓவியங்களாக வரைந்து நம் மனக்கண் முன் உலவ விடுகிறார். இது ரெட்டியாரின் நினைவாற்றலையும் எடுத்துச் சொல்லும் திறமையினையும் எழுத்தாற்றலையும் புலப்படுத்துகிறது.

பல நிகழ்ச்சிகளைப் பின்னினைந்து பெருமைப்படுகிறார். சிலரின் பிரிவுக்கு இரங்கி ஏங்குகிறார். ஒவ்வொரு குமிழியும் ஒரு வகையில் நம் உள்ளத்தில் ஒரு அசைவினை உருவாக்குகிறது. அவர்காலத்தில் வாழ்ந்த அறிஞர்களைப் பற்றிய அடுக்கடுக்கான செய்திகள் பெருமக்களைப்பற்றிய மதிப்பீடுகள் நம் நெஞ்சை விட்டு என்றும் நீங்காதவை. டாக்டர் ரெட்டியாரின் உயர்கல்விப் பணிக்குப் 'பிள்ளையார் சுழி' போட்ட சா. க. வைப்பற்றிய சில நினைவுகள்:

'காரைக்குடியில் மிகவும் பிரபலமானவர் சா. கணேசன். காந்திவழி நிற்பவர்; நாட்டுப் பற்று மிக்கவர். பலமுறை சிறைக்குச் சென்றவர் (பக்-166)......நாற்பது ஆண்டுகட்குமேல் கம்பன்புகழ் பாடிக் கன்னித்தமிழ் வளர்த்தவர். காரைக்குடிக் கம்பன் திருநாள் இவர்தம் திருத்தொண்டு. கம்பனுக்கு ஒரு மணி மண்டபமும் தமிழன்னைக்கு ஒரு திருக் கோயிலும் கட்டி முடித்த திருத்தொண்டர். கம்பன் மேல் அளவற்ற ஈடுபாடுகொண்டு 'கம்பன் அடிப் பொடி' ஆனவர் (பக்-167)...... என் எல்லா நூல் களின் கைப்படிகளிலும் இவர்தம் கைவண்ணத்தின் பங்கு உண்டு. பெரும் பகுதிகளைப் படித்துத் திருத்தங்களைக் கூறிச் செம்மைப்படுத்தியவர் (பக் 167)... நூல்களைப் பொறுத்தமட்டிலும் இவர்தம் திருக்கை இராசியான கை என்பது என்கணிப்பு.

ஊரில் நடைபெறும் எல்லாத் திருவிழாக்களிலும் இவர் பங்கு உண்டு. சுவாமியின் திருமேனியை வாகனங்களில் ஏற்றி அலங்காரம் செய்வதில் அருகி லிருந்தே ஒவ்வொரு செயலையும் கவனித்துக் கலை யுணர்ச்சியுடன் குறிப்புகளைத் தந்து செம்மைப் படுத்துபவர். சீவகனை நந்தட்டன் முதலிய எட்டு நண்பர்கள் சூழ்ந்து கொண்டிருப்பதுபோல் பல தன வைசிய இளைஞர்களும் பிற வகுப்பு இளைஞர்களும்

இவரைச் சூழ்ந்தவண்ணம் இருப்பர்; ஏவல் கேட்டு நிற்பர். இவர்களும் இவர்களைப் போன்ற எண்ணற்ற வர்களும் இவரை வீர வழிபாடுசெய்வர் (பக் 169)

திரு.சா. கணேசன்பற்றிய மதிப்பீட்டில் ரெட்டியார் தரும் உவமைகளும் கருத்துக்களும் இந்நூலுக்கு வலிமை தருகின்றன. பொழுதினை அவமே போக்காது கல்வித் தவம் செய்த ரெட்டியார் வரலாறு என்போல்வார்க்கு வழிகாட்டி. நல்வாழ்வு வாழத் துடிக்கும் இளைஞர் களுக்குக் கலங்கரை விளக்கம். பொதுவாக எல்லோரும் இந்நூலைப்படிக்க வேண்டும். சிறப்பாக ஆசிரியர் ஒவ்வொருவரும் கற்க வேண்டும். ஒரு மனிதனின் எண்ணமும் செயலும் எவ்வாறு அவரை வளர்க்கின்றன, உயர்த்துகின்றன என்பதனை அறிய விரும்பும் அனைவரும் கட்டாயம் படிக்க வேண்டிய நூல். ரெட்டியார் அவர்களை முப்பது ஆண்டுகளாக நான் நன்கறிவேன். மூன்று ஆண்டுகட்டுமுன் நினைவுக் குமிழிகள் பற்றிய திட்டத்தை விளக்கினார்கள். இன்று இந்நன்னூலுக்கு அணிந்துரை அளிக்கும் பேறு பெற்றது குறித்துப் பெருமைப்படுகிறேன். வாழ்க்கை வரலாறு படிப்பது எனக்கு விருப்பமான செயல். இதனைப் பலமுறை படித்தேன். ரெட்டியாருக்காக ஒருமுறை, காரைக்குடியின் கதைக்காக ஒருமுறை, நாடறிந்த பெருமக்கள் பலரை உயிரோவியமாக்கியதை கண்டுகளிக்க ஒருமுறை, எங்கள் பகுதி மக்களின் வாழ்வும் வளமும் வரலாறும் சுவையாகக் கூறப்பெறுதலின் அதற்காக மீண்டும் ஒருமுறை, சமகால வரலாற்றின் சாறு பிழிந்து

தருவதால் இந்நூலைப் பன்முறை படித்து மகிழ்ந்தேன்; திளைத்தேன்.

ரெட்டியார் அவர்கள் நிரம்பப் படிப்பார்கள். நிரம்பப் பேசுவார்கள். நிரம்ப எழுதுவார்கள். இது அவர்கள் இயல்பு. மூளைச் சுறுசுறுப்பும், உடல் சுறுசுறுப்பும் ஒருங்கே வாய்ந்தவர்கள். எத்தனையும் சிரத்தையுடன் உவந்து செய்வார்கள். அவர் எழுதிய நினைவுகளை நினைப்போம். சிந்திப்போம். போற்றுவோம். மகிழ்வோம்.

சிதம்பரம்
28-11-89

ச. மெய்யப்பன்

# நூல் முகம்

தெளிவுறவே அறிந்திடுதல், தெளிவுதர
    மொழிந்திடுதல், சிந்திபபார்க்கே
களிவளர உள்ளத்தில் ஆனந்தக்
    கனவுபலகாட்டல் கண்ணீர்த்
துளிவரஉள் ளுருக்குதல்இங் கெவையெல்லாம்
    நீயருளும் தொழில்களன்றோ?
ஒளிவளரும் தமிழ்வாணீ! அடியனேற்(கு)
    இவையனைத்தும் உதவுவாயே[4]

—பாரதியார

திண்ணைப் பள்ளிக்கூட வாழ்வில் சுமார் நான்கு ஆண்டுக் காலம் கணபதியின் தாளைக் கருத்தினில் வைக்கும் வாய்ப்புகள் இடைவிடாமல் இருந்தன. சின்னப் பிள்ளைகளாகிய நாங்கள் விடாதுஅவன் புகழ்பாடினோம். அவனுடைய அருளால்தான் என் உட்செவி திறந்தது; அகக்கண் ஒளிர்ந்தது. அமுதமும் விளைந்தது. வித்தையும் வளர்ந்தது. வெற்றியையும் தோல்வியையும், நன்மையையும் தீமையையும் சமமாக ஏற்கும் துணிவும் என்பால் ஏற்பட்டது. அசையா நெஞ்சமும் அருளப் பெற்றேன். எதிர்பாராத நிலையில் மனம் துன்புற்றிருந்தபோது துணிவும் என்பால் இருந்தமைக்கு அவன் அருளே காரணம் என்பதை உணர்கின்றேன். இந்நிலையில் நான்கு நாட்கள் (1949—மார்ச்சு) காரைக்குடிக் கம்பன் திருநாளில் பார்வையாளனாகக் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் 'கம்பன் அடிப்பொடி' சா.கணேசனின் நட்பு கிடைத்தது. பழகியது சிறிது காலமே. எனினும் 'ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை இருநிலம் பிளக்கும் வேர் வீழ்க்கும்மே' என்ற

4. பாஞ்சாலி சபதம்—சூதாட்டம்-154

அதிவீரராமபாண்டியனின் திருவாக்குப்படி அந்தக் கேண்மை அவர் உள்ளத்தில் ஆழப்பதிந்திருந்தது அந்தக் கற்பக விநாயகக் கடவுளின் கருணையே என்று இப்போது நினைந்து பார்க்கின்றேன். இந்தக் கருணையின் விளைவு தான் புதிதாகத் தொடங்கப்பெற்ற வள்ளல் அழகப்பரின் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணி ஏற்கவும் காரைக்குடி வாழ்வு அமையவும் சா.கணேசன் அவர்கள் கருவியாக அமைந்தார்கள். பத்தாண்டுகள் தொடர்ச்சியாகவும் ஆறாண்டுகள் விட்டுவிட்டும் அமைந்த காரைக்குடி வாழ்வு தான் நினைவுக் குமிழிகள்—3 என்று இலக்கிய வடிவம் பெறுகின்றது.

காரைக்குடி வாழ்வில்தான் துறையூர் வாழ்வில் அங்குரித்த இலக்கிய வாழ்வு —அகவளர்ச்சி—பேராசிரியர் க. அன்பழகன் கூறியது போல் 'இமயம்போல்' வளர்வதற் கேற்ற சூழ்நிலை ஏற்பட்டது. இந்த நிலையை எண்ணும் போது,

தடித்தஓர் மகனைத் தந்தையீண் டடித்தால்
    தாயுடன் அணைப்பள்; தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன் ஈங்கெனக்குப்
    பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத் தாடும்
    புனிதநீ ஆதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
    அம்மைஅப் பாஇனி ஆற்றேன்[5]

என்ற வடலூர் வள்ளலாரின் திருவாக்கும் நினைவுக் குமிழியாகின்றது. என் வாழ்க்கையில் ஏற்பட்ட இக்கட்டு களைத் தகர்க்கும் பாங்கில் ஏற்பட்ட கல்லூரிப் பணி அமைந்தமைக்கு வான்வழியாக இலங்கைக்குத் தாவிச் சென்ற அநுமனுக்கு மகேந்திர மலை அமைந்ததுபோல்

5. திருவருட்பா—ஆறாம் திருமுறை—பிள்ளைச் சிறு விண்ணப்பம்—1

என் துறையூர் வாழ்வும் கடுமையான உழைப்பும் அமைந்தன என்று நீள நினைந்து பார்க்க முடிகின்றது.

என் வாழ்க்கை வரலாற்றின் இந்தப் பகுதி (மூன்றாம் பகுதி) வெளிவருவதற்கும் எம்பெருமானின் கருணையினால் கருணாநிதியின் தமிழகஅரசு சிறிது நிதிஉதவியது. 'திணைத் துணை நன்றி' யாகஇருக்கும் இந்த உதவியினைப் 'பயன் கருதிப் பனைத் துணையாகக்' கொள்கின்றேன். அரசின் சால்பு எவ்வளவு பெரிதோ அவ்வளவு பெரிதாயிற்று இந்த உதவியும்—'செயப்பட்டார் சால்பின் வரைத்து'. இங்ஙனம் உதவிய தமிழக அரசுக்குத் தமிழ் வளர்ச்சிஇயக்ககத்தின் மூலம் என் உளங்கலந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

இந்த நூலைச் செவ்விய முறையில் அச்சிட்டு உதவிய ஸ்ரீ கோமதி அச்சக உரிமையாளர் திரு. சி. சரவணகுமார் அவர்கட்கும்; எழில் கொழிக்கும் முறையில் அட்டை ஓவியம் வரைதல், அச்சுக் கட்டை தயாரித்து மூன்று வண்ணத்தில் அச்சிட்டு உதவிய கலைமன்னர் திரு. P. N. ஆனந்தனுக்கும்; நூலைக் கவின் பெறக் கட்டமைத்துத் தந்த அருமைத்தம்பி V. திருநாவுக்கரசுக்கும் என் உளங்கலந்த நன்றி என்றும் உரியது.

இந்த நூலுக்கு அணிந்துரை நல்கிய டாக்டர் ச. மெய்யப்பன் என் நெடுநாளைய நண்பர். சுமார் முப்பது ஆண்டுகள் நெருங்கிப் பழகியுள்ளோம். அண்மையில் டாக்டர் பட்டம் பெற்றவர், பல்லாண்டுகட்கு முன்னமே பெற்றிருக்க வேண்டிய பட்டம் தாமதமாகப் வந்து சேர்ந்தது. எதையும் ஆழ்ந்து கற்பவர். ''உரைக்கப் படும் பொருள் உள்ளத்து அமைத்து விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து, கொள்வோன் கொள் வகை அறிந்து, அவன் உளங்கொளக்கோட்டமில் மனத்தில்'' கொடுக்கும் பண்பை இவருடைய மாணாக்கர்கள் பேசிக் கொள்வதைக் கேட்டு மகிழ்ந்ததுண்டு. 'செல்வத்துப் பயனே ஈதல்' என்ற ஆன்றோர் மொழியை மனத்தில் இருத்தி 'ஈத்துவக்கும் இன்பம்' கண்டவர். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பல அறக்கட்டளைகளை

ஏற்படுத்திக் கல்வி முன்னேற்றத்தில் பேரார்வம் காட்டு பவர். 'நல்லவர்; மனத்தூய்மையுடையவர்.'; 'வல்லவர், விரைந்து செயற்படும் வேந்து.' என்பால் அளவற்ற அன்பும் மரியாதையும் காட்டி வருபவர். நகரத்தார் களிடம் காணப்படும் எல்லா நற்பண்புகளையும் இவரிடம் காணலாம். சோம்பல் ஒன்று மட்டும் இவரிடம் காண முடியாதது. பம்பரம்போல் சுழன்று பணியாற்றுபவர். இத்தகைய என் கெழுதகை நண்பரின் அணிந்துரை இந் நூலுக்குப் பெருமை அளிக்கின்றது. யானும் பேறு பெற்றது போன்ற பெருமை அடைகின்றேன். அணிந்துரை அளித்த அன்பருக்கு உளங்கனிந்த நன்றி என்றும் உரியது.

ஓய்வு பெற்ற நிலையில் எனக்கு உடல் நலமும் மன வளமும் எதையும் தாங்கும் இதயமும் நல்கி என்னைத் தமிழ்ப் பணியில் ஈடுபடுத்தியும் சமய நூல்கள் வெளிவரக் கணிசமான அளவு திருமலை—திருப்பதி தேவஸ்தானத்தின் மூலம் நிதி வழங்கியும் தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம் ஏதோ ஓரளவு நிதி கிடைக்க உதவவும் வழியமைத்துத் தந்தும் என்னை வாழ்விக்கும் 'வேங்கடம் மேய விளக்கினை',

இன்று ஆக நாளையே ஆக, இனிச் சிறிது
நின்றுஆக நின்அருள் என்பாலதே; நன்றாக
நான்உன்னை அன்றிஇலேன் கண்டாய்; நாரணனே!
நீஎன்னை அன்றி இலை.[6]

—திருமழிசையாழ்வார்

என்ற ஆழ்வார் பாசுரத்தால் மனம் மொழி மெய்களால் வாழ்த்தி வணங்கிச் சரண் அடைகின்றேன்.

'வேங்கடம்'
AD-13; (Plot 3354)
அண்ணாநகர்
சென்னை—600 040
நவம்பர் 29, 1989

ந. சுப்புரெட்டியார்
தொ.பே. 62 155 83

6. நான்முகன் திருவந்தாதி—7

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | | பக்திப் படையல் | vii |
| | | அணிந்துரை | viii |
| | | நூல் முகம் | xii |
| குமிழிகள் | | | |
| 108 | 1. | கல்லூரியில் பணி ஏற்றல் | 3 |
| 109 | 2. | காரைக்குடி நண்பர்கள் | 13 |
| 110 | 3. | தமிழ் எம். ஏ. தேர்வு பெறல் | 20 |
| 111 | 4. | கல்லூரி நூலகப் பொறுப்பு | 29 |
| 112 | 5. | கல்லூரியில் இரண்டாம் ஆண்டு | 36 |
| 113 | 6. | என் எதுமலைப் பயணம் | 43 |
| 114 | 7. | சொ. முருகப்பர் | 48 |
| 115 | 8. | சொ. முரு. இராமகாதை | 58 |
| 116 | 9. | டி. கே. சி. பாடபேதங்கள் | 68 |
| 117 | 10. | செருகு கவிகள் | 77 |
| 118 | 11. | சிறுவர்களின் வளர்ச்சி | 97 |
| 119 | 12. | இந்து மதாபிமான சங்கம் | 105 |
| 120 | 13. | கல்லூரி வளாகத்தில் பொருட்காட்சி | 117 |
| 121 | 14. | செல்வராசனின் திருமணம் | 121 |
| 122 | 15. | குன்றக்குடி அடிகளார் | 127 |
| 123 | 16. | செட்டிகுளத் திருத்தலப் பயணம் | 134 |
| 124 | 17. | பல பல பள்ளிகள் | 123 |
| 125 | 18. | சென்னைப் பல்கலைக் கழகத் தொடர்பு | 146 |
| 126 | 19. | என் கல்விப் பணி | 154 |
| 127 | 20. | கம்பன் அடிப்பொடி | 166 |
| 128 | 21. | பேராசிரியர் அ. முத்துசிவம் | 173 |
| 129 | 22. | கல்லூரி வளாகத்தில் விழாக்கள் | 183 |
| 130 | 23. | நகை வணிகர்களின் தொடர்பு | 191 |

| | | | |
|---|---|---|---|
| 131 | 24. | திரு. V .சொக்கலிங்கம் பிள்ளை | 206 |
| 132 | 25. | கடனில் சிக்கிய நண்பரைக் காத்தல் | 215 |
| 133 | 26. | என் மாமனார் பரமபதித்தல் | 219 |
| 134 | 27. | ஓர் ஏழைக்கு உதவியது | 222 |
| 135 | 28. | தினமணித் தொடர்பு | 232 |
| 136 | 29. | தமிழ்க் கடல் ராய சொ. | 235 |
| 137 | 30. | கன்னன் கண்ட கண்ணன் | 244 |
| 138 | 31. | அமுத அன்னையும் ஐவரின் மனக்கலக்கமும் | 252 |
| 139 | 32. | தருமன் உண்மையில் தருமனே | 258 |
| 140 | 33. | சேயும் தாயும் சந்திப்பு | 266 |
| 141 | 34. | நோயால் தாக்குண்டது | 275 |
| 142 | 35. | பன்மொழிப் புலவர் தெ. பொ. மீ. | 283 |
| 143 | 36. | மீனாட்சி சுந்தரம் | 288 |
| 144 | 37. | ஆண்டு விழாக்கள் | 296 |
| 145 | 38. | குடிமைப் பயிற்சி முகாம்கள் | 306 |
| 146 | 39. | என் பதவி உயர்வு | 318 |
| 147 | 40. | என் பதவி உயர்வில் ஏற்பட்ட தடைகள் | 325 |
| 148 | 41. | அறிவியலைத் தமிழில் பயிற்றல்: கருத்தரங்கம் | 340 |
| 149 | 42. | பல்கலைக் கழகத்தில் நுழைய முயற்சி | 351 |
| 150 | 43. | நினைவுச் சிதறல்கள் | 359 |
| 151 | 44. | என் ஜபல்பூர் பயணம் | 377 |
| 152 | 45. | என் நெல்லை நிகழ்ச்சிகள் | 383 |
| 153 | 46. | என் அன்னையின் சிவப்பேறு | 393 |
| 154 | 47. | என் அம்மானின் மறைவு | 399 |
| 155 | 48. | என் கோபிப் பயணம் | 402 |
| 156 | 49. | காரைக்குடியில் பதவி விலகல் | 410 |

பின்னிணைப்புகள்

| | | |
|---|---|---|
| 1. | நினைவில் எழுந்த நூல்கள் | 417 |
| 2. | பொருட்குறிப்பு அடைவு | 419 |
| | பேராசிரியர் ரெட்டியாரின் நூல்கள். | 436 |

# பிழை - திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 4 | 19 | வேண்டாம் | வேண்டா |
| 24 | 15 | சுண்ணாம்ப | சுண்ணாம்பு |
| 35 | 16 | ஆலோசனைக்குத் | ஆலோசனைக் குழுவிற்குத் |
| 59 | 21 | பாஸ்கரகவி | பாஸகவி |
| 118 | 11 | சிந்தித்து | சிந்தித்துத் |
| 138 | அ.கு | வெள்ளத்தாமரை | வெள்ளைத் தாமரை |
| 210 | 16 | மதுரை | இராமநாதபுரம் |
| 215 | 8 | பாடல் மறையோன் | மாடலமறையோன் |
| 215 | 13 | T.V.வாசுதேவன் | T. M.வாசுதேவன் |
| 232 | | குமிழி—134 | குமிழி—135 |
| 235 | | குமிழி—135 | குமிழி—136 |
| 244 | | குமிழி—136 | குமிழி—137 |
| 252 | | குமிழி—137 | குமிழி—138 |
| 254 | 9 | அசரீரி | (நீக்குக) |
| 257 | 16 | எனசெய்தேனே | என்செய்தேனே |
| 258 | | குமிழி—138 | குமிழி—139 |
| 266 | | குமிழி—139 | குமிழி—140 |
| 330 | 9 | இருந்து | இருந்தது |
| 411 | 19 | 215-300-15-20-500 | 200-20-500 |
| 413 | 5 | செனறோம் | சென்றோம். |

குறிப்பு : தயவு செய்து பிழைகளைத் திருத்திக்கொண்டு நூலைப் படிக்கவும்.

# நினைவுக் குமிழிகள்—3

''அகிலத்து உள்ளே
மெய்யாய் இருத்தது நாள்செல
நாள் செல வெட்டவெறும்
பொய்யாய்ப் பழங்கதை யாய்க்கன
வாய்மெல்லப் போனதுவே''[1]

டாக்டர். ந. சுப்புரெட்டியார்

1. *பட்டினத்தார் பாடல்கள்—பொது 52*

## பாடம் சொல்லுதல்

ஈதல் இயல்பே இயல்புறக் கிளப்பின்
பொழிப்பே அகலம் நுட்பம் எச்சமெனப்
பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
புகழ்ந்த மதியில் பொருந்தும் ஓரையில்
திகழ்ந்த அறிவினை தெய்வம் வாழ்த்திக்
கொள்வோன் உணர்வகை அறிந்தவன் கொள்வரக்
கொடுத்தல் மரபெனக் கூறினர் புலவர்.[2]

ஈதல் இயல்பே இயம்பும் காலைக்
காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்தவன் உளம்கொளக்
கோட்டமில் மனத்தின்நூல் கொடுத்தல் தென்ப.[3]

—பவணந்திமுனிவர்

2. *நச்சினார்க்கினியர்-தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரையில் காட்டும் மேற்கோல் நூற்பா.*

3. *நன்னூல்—நூற். 36.*

காரைக்குடி வாழ்வில்

குமிழி—108

# 1. கல்லூரியில் பணி ஏற்றல்

**சா.** கணேசன் இல்லம் எனக்கு ஓராண்டுக்குமுன்னரே நன்கு அறிமுகமான இடம், ஆகவே, யாருடைய துணையுமின்றிக் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு நீராடலையும் நிறைவு செய்து கொண்டு அன்றைய பணிக்குத் தயாரானேன். காரைக்குடியில் கல்லுக்கட்டி என்ற இடம் தான் ஊருக்கு இதயம் போன்றது. ஒரு சிறிய தெப்பக் குளம். அதைச் சுற்றி நான்கு திசையிலும் வீதிகள், வீதிகளின் இருமருங்கும் கடைகள், உணவுவிடுதிகள், காய்கறிச் சந்தைகள் எல்லாம் இருந்தன. தென்கிழக்கு மூலையில் கொப்புடையம்மன் கோயிலும், மேலை வீதியில் கிருட்டிணன் ஆலையமும் உள்ளன. முதல் வேலையாக கொப்புடைய நாயகியின் திருக்கோயிலை அடைந்து அங்குள்ள கணேசப் பெருமானை வழிபட்டேன்.

செய்யுந் தொழிலுன் தொழிலேகாண்
சீர்பெற் றிடநீ அருள்செய்வாய்
வையந் தனையும் வெளியினையும்
வானத் தையுமுன் படைத்தவனே!
ஐயா! நான்முகப் பிர்மா!
யானை முகனே! வாணிதனைக்
கையா லணைத்துக் காப்பவனே!
கமலா சனத்துக் கற்பகமே![1]

1. பா. க: தோ. பா. வி. நா. மா—3

என்ற பாடலை நாவினால் நவிற்றிக் கொண்டே அடுத்து, கொப்புடைய நாயகியை வணங்கி அருள் பெற்றுக் கிருட்டிணன் ஆலயத்திற்கு வந்தேன்.

நாளும் பெரிய பெருமாள்
அரங்கர் நகைமுகமும்
தோளும் தொடர்ந் தென்னை
யாளும்விழியும் துழாய்மணக்கும்
தாளும் கரமும் கரத்திற்சங்
காழியும் தண்டும் வில்லும்
வாளும் துணைவருமே தமியேனை
வளைத்துக் கொண்டே[2]

என்ற பாடலைச் சேவித்து வழிப்பட்டேன். 'ஆனந்த பவன்' உணவு விடுதியில் சிற்றுண்டி அருந்தி சா. கணேசன் இல்லம் வந்தடைந்தேன். இதற்குள் காலை மணி 8-30 ஆகிவிட்டது. ஒன்றிரண்டு நாட்கள்தான் திரு. கணேசன் இல்லத்தில் தங்கியதாக நினைவு.

கல்லூரிக்குப் போகத் தயாராக இருப்பதைப் பார்த்த திரு. கணேசன், ''மிஸ்டர் ரெட்டியார், குதிரை வண்டி அமர்த்த வேண்டாம், கல்லூரிப் பேருந்துகள் மூன்று ஓடு கின்றன. இவற்றில் ஏதாவது ஒன்றில் போகலாம். நீங்கள் 'இந்திரா மருந்தகம்' அல்லது 'கல்லுக்கட்டி அஞ்சல் நிலையம்' என்ற ஏதாவது ஓரிடத்தில் நின்று பேருந்தில் ஏறிக்கொள்ளலாம்'' என்று விவரமாக விளக்கி னார். முதல் நாள் கல்லுக்கட்டி அஞ்சல் நிலையத்திடம் நின்று கொண்டிருந்தேன். அப்போது பன்னிரண்டு ஆண்டுகட்குப் பின்னர் என்னுடன் திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் வேதியியல் பயின்ற திரு. V. V. சுப்பிரமணியம் என்பவரைக் கண்டு மகிழ்ந்தேன். தான்

2. திருவர, மாலை—காப்பு

இரண்டாண்டுகளாக அழகப்பர் கல்லூரியில் வேதியியல் விரிவுரையாளராகப் பணியாற்றுவதாகக் கூறினார். இரு வரும் பேருந்தில் ஏறிப் பேசிக்கொண்டே சென்றோம். இவரும் பயிற்சிக்கல்லூரி அறிவியல்கட்டடம் ஒன்றன் முதல் தளத்தில் இயங்குவதாக விளக்கினார். ஆகவே, இருவரும் ஒரே இடத்தில் இறங்கினோம். கல்லூரி இயங்கும் இடத்தைக்காட்ட, அங்குச் சென்றேன். சான்றிதழ்கள், பணியேற்கும் பொறுப்புக் கடிதம் இவற்றுடன் சென்றிருந் தேன்.

திரு. எஸ். திருவேங்கடாச்சாரி, அழகப்பர் (கலைக்) கல்லூரியில் பணியாற்றியவர் திரு. ஐ. என். மேனனுக்கு உதவி புரிந்து கொண்டிருந்தார். எல்லோருமே (அறி வியல், உடற்பயிற்சி, கைத்தொழில்-ஓவியம் இதற்குரியவர் களைத் தவிர) அன்றுதான் சேர்ந்தோம். விளம்பரப் படுத்தியிருந்தாலும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் பரிந்துரைகளின் மூலம்தான் பணியேற்றனர். உளவிய லுக்குத் திரு. V.N. சுப்பிரமணியன் (சென்னையில் அடை யாற்றில் ஏதோ ஓர் உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றிய வர்) என்பவரும், ஆங்கிலத்திற்குத் திரு. K. நாராயணன் (இவர் திருவரங்கம் உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றிய வர் — என்னுடன் எல். டி. வகுப்பில் பயின்றவர்), கணிதத் திற்குத் திரு. எஸ். கிருஷ்ணய்யங்கார் (இவர் பம்பாயில் ஒரு பள்ளியில் சில ஆண்டுகள் தலைமையாசிரியராக இருந்து தாய்மொழிமூலம் கல்வி கற்பிக்கும் நிலை வந்த தால் பதவியை இழந்து பின்னர் சைதை ஆசிரியர்க் கல்லூரியில் பயின்று பி. டி. பட்டம் பெற்று அடுத்த ஆண்டே காரைக்குடிக்கு வந்தவர்), தமிழுக்கு அடியேனும், தலைமை எழுத்தராக முத்தையா என்ற ஒரு தனவைசிய இளைஞரும் பணியேற்றோம். ஒருவாரத்தில் ஒருவரை யொருவர் நன்கு புரிந்துகொண்டு சிறந்த முறையில் ஒற்று மையாகப் பணியாற்றினோம். ஒரு திங்கள் கழித்து திருநெல்வேலி மாவட்டத்தில் ஓர் உயர்நிலைப் பள்ளியில்

பணியாற்றிய திரு. அய்யாத்துரை ஜேசுதாசன் என்பவர் அறிவியல் விரிவுரையாளராகவும், திரு. குருப்பால் (மலை நாட்டைச் சேர்ந்தவர்) கைத்தொழில் ஆசிரியராகவும் வந்து சேர்ந்தனர். கல்லூரியில் மாணாக்கர்கள் 100 பேருக்குத்தான் இடம் உண்டு. முதலாண்டு தமிழ்த்துறையில் அறுவர் வந்து சேர்ந்தனர்.

இடநெருக்கடியுடன் அறிவியல் கட்டடத்தில் செயற்பட்ட அழகப்பர் ஆசிரியர் கல்லூரி தமிழகத்தில் முதல் முதலாகச் செயற்பட்ட தனியார் கல்லூரியில் முதலாவது; முதன்மையானது. பின்னர் தொடங்கப்பெற்ற அரசினர் கல்லூரிகள் எல்லாம் இதன் தகுதியை எப்பொழுதும் பெறவில்லை! நாடு விடுதலை பெற்றபிறகு வட்டத்திற்கு ஓர் உயர்நிலைப் பள்ளி என்ற குறிக்கோளுடன் பள்ளிகள் தொடங்கப்பெற்றதால் அவற்றிற்குப் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் கிடைக்கவில்லை. பள்ளிகள் திறக்கப்பெறும் போதே சில கல்லூரிகளையும் தொடங்கலாம்; அப்படித் தொடங்குவதற்குத் திட்டம் அரசிடம் இல்லை. மாவட்டக் கழகங்களும் தனியார்களும் பள்ளிகளைத் தொடங்கினர். இதனால் மாவட்டக்கழகங்கள் ரூ 500 = நிதி உதவி பயிற்சி பெறும் மாணாக்கர்களைத் தங்கள்பால் ஈர்க்க முன் வந்தன. கன்னியாகுமரி, நெல்லை மாவட்டங்களிலிருந்து அதிகமான மாணாக்கர்கள் வரத் தொடங்கினர். அக்காலத்தில் சைதைக் கல்லூரியில் 200 பேருக்கும் (ஆண்கள்) மெஸ்டன் பயிற்சிக் கல்லூரியில் 50 பேருக்கும் (ஆண்கள்) இடம் இருந்தது. கிறிஸ்டோஃபர் பயிற்சிக் கல்லூரியில் (பெண்கள்) 50 பேருக்குத்தான் இடம் இருந்தது.

இதற்கு (1950) இரண்டாண்டுகட்கு முன்னர்தான் கலைக் கல்லூரி 6 அறிவியல் துறைகள், 5 மானிட இயல் துறைகளுடன் தொடங்கப் பெற்றது. வள்ளல் அழகப்பர் மனவிரிவுக்கு ஏற்ப 1200 ஏக்கர் பொட்டல் நிலத்தை வாங்கினார். கல்லும் முள்ளும், மேடும் பள்ளமு

மாக இருந்த காடும் புல்டோசர் (Bulldozer) களைக் கொண்டு அசுர வேகத்தில் சமப்படுத்தப் பெற்றுக் குறுக்கும் நெடுக்குமாகச் சாலைகள் அமைக்கப் பெற்றன; நிழல் தரும் மரங்கள் சாலையோரமாக இருபுறமும் வரிசையாகப் பாதுகாப்புடன் வளர்க்கப் பெற்றன. கல்லூரி வளாகத்திற்குள் நுழைவாயிலில் மாதிரி உயர்நிலைப் பள்ளி, பயிற்சிக் கல்லூரி இவற்றிற்கு இடம் ஒதுக்கப் பெற்றுக் கட்டட வேலைகள் தொடங்கின. அசுர வேகத்தில் செட்டிநாட்டரசரால் தொடங்கப் பெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகம்போல் காரைக்குடியில்— செட்டி நாட்டருகில்—ஒரு பல்கலைக் கழகம் தொடங்கப் பெறல் வேண்டும் என்ற நல்லெண்ணம் வள்ளலின் நல்லுள்ளத்தில் இருந்திருத்தல் வேண்டும் என்ற கருத்தைச் சாதாரண மக்களும் பேசிக் கொள்ளத் தொடங்கினர். வள்ளல் அழகப்பர் மட்டிலும் நீண்ட ஆயுளுடனும் உடல் நலத்துடனும் வாழ்ந்திருந்தால் 1985 இல் அரசால் தொடங்கப் பெற்றுள்ள பல்கலைக் கழகம் 1960திலேயே— இருப்பத்தைந்து ஆண்டுகட்கு முன்பே — தொடங்கப்பெற்று, 1985 அப்பல்கலைக் கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டாகத் திகழ்ந்திருக்கும் என்பதற்கு எள்ளளவும் ஐயம் இல்லை.

1948-இல் கலைக் கல்லூரி நகராட்சிக் கட்டடமாகிய காந்தி மாளிகையில் தொடங்கப் பெற்றது. கல்லூரி வளாகத்தில் அசுர வேகத்தில் அறிவியல் கட்டடங்கள் கட்டும் வேலை தொடங்கப் பெற்று ஓராண்டுக் காலத்தில் நிறைவு பெற்றன. மானிடவியல் துறைகள் சில ஆண்டுகள் அழகான கீற்றுக் கொட்டகைகளிலேயே நடைபெற்று வந்தன. நான்கு ஆண்டுக்குள் மானிடவியல் துறைகளுக்கான கட்டடம் தயாராகி விட்டது, சில வகுப்புகள் சில ஆண்டுகள் கீற்றுக் கொட்டகையிலேயே நடைபெற்று வந்தன. 1950 இல் நான் காரைக்குடிக்குச் சென்று பயிற்சிக் கல்லூரியில் பணியேற்றபோது ஆறு அறிவியல்

துறைகளுக்கான கட்டடங்கள் நிறைவு பெற்றிருந்தன. இவற்றில் ஒரு கட்டடத்தின் முதல் தளத்தில்தான் பயிற்சிக் கல்லூரி ஓராண்டுக் காலம் இயங்கியது.

வள்ளல் அழகப்பரின் கவனம் ஆசிரியர் நியமனத்திலும் சென்றது. நாட்டில் திறமையான ஆசிரியர்களையெல்லாம் தம் கல்லூரிகளில் சேர்த்து விட வேண்டும் என்று அவர் நல்லுள்ளம் விழைந்தது. ஆகவே கலைக் கல்லூரியின் முதல்வராக ஓய்வு பெற்ற கல்வித்துறை இயக்குநர் தென்னட்டி சூரிய நாராயணா (தெலுங்கர்) நியமனம் பெற்றார். அங்ஙனமே திரு. ஆ. முத்துசிவன் (தமிழ்), திரு. V. சுவாமிநாதன் (வேதியியல்), திரு. K. G. கிருஷ்ணன் (இயற்பியல்), மாணிக்கவாசகம் பிள்ளை (கணிதம்), திரு. K. ஏகாம்பரநாதன் (விலங்கியல்), திரு. C. இராசகோபாலன் (நில உட்கூற்றியல்), டாக்டர் கருணாகரமேனன் (ஆங்கிலம்) என்று பேராசிரியர்களாக நியமனம் பெற்றிருந்தனர். தென்னட்டி சூரிய நாராயணா 1950 இல் ஒப்பந்தப்படி விலகிக் கொண்டார். ஆகவே கலைக் கல்லூரிக்குத் திருவனந்தபுரத்தைச் சார்ந்த திரு. ஏ. நாராயண தம்பியும் புதிதாகத் திறக்கப் பெற்ற பயிற்சிக் கல்லூரிக்குத் திருச்சூரைச் சார்ந்த திரு. ஐ. நாராயண மேனனும் முதல்வர்களாக நியமிக்கப்பெற்றனர். நான் காரைக்குடி சென்றபோது இருவருமே வேலையில் அமர்ந்திருந்தனர்.

பயிற்சிக் கல்லூரி திறக்கப்பெற்ற ஆண்டே நாற்பது பேர் தங்கக் கூடிய உணவு விடுதியும் திறக்க ஏற்பாடு செய்யப் பெற்றது. காரைக்குடிச் சிவன்கோயில் அருகிலிருக்கும் மீனாட்சிசுந்தரேசுவரர் பள்ளிக்குச் சொந்தமான அமிர்தவல்லி உணவு விடுதிக் கட்டடம் பல ஆண்டுகள் மூடிக் கிடந்தது. இதனை கல்லூரி உணவு விடுதிக்குப் பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்யப்பெற்றது.

நானும் இந்த விடுதியில் சேர்ந்து கொண்டேன்; திரு. எஸ். திருவேங்கடாச்சாரியும் இதில் சேர்ந்தார். இருவரும் ஓர் அறையில் தங்கியிருந்தோம்.

1950-இல் தமிழ் எம்.ஏ. தேர்வு எழுத முடியாத சூழ்நிலை ஏற்பட்டதால், 1951-இல் எப்படியும் எழுதி முடிக்க வேண்டும் என மன உறுதி கொண்டேன். கல்லூரி வாழ்வு; படிப்பதற்கும் எழுதுவதற்கும் நல்ல சூழ்நிலை. பணியில் அமர்ந்த மறுவாரமே துறையூர் சென்று முக்கிய மான நூல்களில் 60, 70 எடுத்துக் கொண்டு வந்தேன். இந்த நூல்களை என் அறையில் வரிசையாக இரண்டு மூன்று சிறுமேசைகளை ஒன்று சேர்த்து அவற்றின் மீது இரண்டு மூன்று வரிசைகளாக அடுக்கி வைத்தேன். ஒருநாள் மாலை 7 மணிக்குப் பக்கத்திலுள்ள உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் திரு. K. R. சீநிவாச அய்யர் மாணவர் விடுதிக்கு வந்து சேர்ந்தார். திருவேங்கடாச்சாரி அவருக்கு என்னை அறிமுகம் செய்து வைக்கும்போது ''இவர்தான் தமிழ்ப் பேராசிரியர் ரெட்டியார். எங்கள் கல்லூரிக்கு இவரைப் பேராசிரியராக நியமித்துள்ளோம். சிறுவயதிலேயே ஓர் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கி அதன் தலைமையாசிரியராக ஒன்பது ஆண்டுகள் உழைத்து அதைச் சிறந்த பள்ளி யாக்கியவர். அருமையாக வளர்த்த அப்பள்ளியை விட்டு இங்கு வந்துள்ளார் 'இதுவரை உண்மை; இதற்கு மேல்) இவர் தமிழ்க் கடல்; வித்துவான் பட்டம் பெற்றவர். இரண்டு ஆண்டுகட்கு முன்னரே M.A.பட்டம் பெற வேண்டியவர். ஏதோ சில அசந்தர்ப்பங்களால் எழுத முடியாமல் இந்த ஆண்டு எழுதவிருக்கின்றார். இவரது நூல்களைப் பாருங்கள். இவை இவர்தம் நூல்களில் பத்தில் ஒரு பங்குதான். இரண்டு மூன்று பீரோக்களில் உள்ள நூல்கள் இன்னும் இரண்டு வாரங்களில் வீட்டுச் சாமான்களுடன் லாரியில் வரும்'' என்று கூறி முடித்தார்.

(இப்போது நாணத்தால் முகம் கவிழ்ந்தது. அவர் தம் உயர்வு நவிற்சியை என்னால் தாங்கிக் கொள்ள முடிய வில்லை.)

திரு. K. R. சீநிவாச அய்யர் பள்ளிக்கருகிலேயே குடியிருந்தார். வெகுளி; மிக நல்லவர். எங்களோடு நன்கு பழகுவார். செல்வச் செழிப்புள்ளவர். ஆசிரியர்களைப் பொதுவாகத் தன் வசப்படுத்திக் கொள்ளும் வறுமையால் இவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. தன்னிறைவு மிக்கவராகக் காணப்பட்டார். இவருடைய பள்ளிக்கு எங்கள் கல்லூரி மாணவர்கள் கற்பிக்கும் பயிற்சிக்கும் நடைமுறையில் பள்ளி எப்படி இயங்குகின்றது என்று பார்க்கவும் வேண்டிய சந்தர்ப்பங்கள் நிறைய இருக்கு மாதலால் இவரைப்பற்றியும் இவருடைய பள்ளி இதர ஆசிரியர்களைப் பற்றியும் பள்ளியின் சூழ்நிலைபற்றியும் நடப்புகளைப்பற்றியும் அறிந்துகொள்ள வாய்ப்புகள் பின்னர் ஏற்படுமாதலால் இவரைப்பற்றி இத்துடன் நிறுத்திக் கொள்ளுகின்றேன். என்னுடைய புத்தக அளவைக் கொண்டே என்னைப் பேரறிஞர் என்று நினைத்துக் கொண்டுவிட்டார். இவர் நினைப்பை மெய்ப்பிப்பதற்கு இன்னும் எவ்வளவோ கற்க வேண்டும். 'கல்வி கரை இல' என்பது நாலடியார் வாக்கு; 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்' என்பது பொய்யாமொழி, இவைதான் எனக்கு இன்றுவரை இரு கண்களாக வழி காட்டி வருகின்றன.

ஒன்பது மாதம் நிறைவு பெற்றிருந்த என் மகன் இராமலிங்கத்தைப் பார்க்க முடியாமல் இருக்க முடிய வில்லை. குடும்பத்தைக் கொண்டு வருவதற்கு முன் இரு முறை வார விடுமுறை நாட்களில்போய் வந்ததாக நினைவு. வெள்ளி மாலையே இரவு பத்து மணிக்குள் துறையூர் வந்து சேர்ந்துவிடுவேன். ஒரு சனியன்று 'விடைபெறுதல்' நிகழ்ச்சிக்குத் துறையூர்ப் பள்ளி ஆசிரியப் பெருமக்கள் அவசரமாக ஏற்பாடு செய்திருந்தனர். பள்ளியிலிருந்து விடுதலை பெற்ற சூழ்நிலை சரியாக இல்லாததால் இதில்

கலந்துக்கொள்ள சிறிதும் விரும்பவில்லை. வற்புறுத்தலின் பேரில் ஒருவாறு ஒப்புக்கொண்டேன். ஞாயிறு மாலை புறப் பட்டு அன்றிரவு பத்து மணிக்கு நூல்களுடன் அமிர்தவல்லி உணவு விடுதியை வந்தடைந்தேன்.

விரைவில் குடும்பத்தைக் காரைக்குடி கொணர வேண்டும் என்று துறையூரில் சில ஏற்பாடுகள் செய்தேன். சோபனபுரம் நல்லுசாமி ரெட்டியார் என் நெருங்கிய நண்பர். அவரிடம் குதிரைவால் நெல்லில் புழுங்கல் இரண்டு மூட்டையும் பச்சையில் மூன்று மூட்டையும் தயார் செய்யு மாறு ஏற்பாடு செய்தேன். மூன்று மாதத்திற்கு ஆகுமாறு நல்ல விறகு வீட்டிலிருந்தது. அதையும் காரைக்குடிக்குக் கொணரத் தீர்மானித்தேன். பாலுக்கு நல்ல பசு மாடு வைத்திருந்தேன். அதை விற்க ஏற்பாடு செய்துவிட்டேன். பீரோ, மேசை, நாற்காலி, கட்டில்கள் (மூன்று) இருந்தன. எல்லாவற்றையும் சாமான் வண்டி (Lorry) யில்தான் கொணர வேண்டும் என்று திட்டம் செய்தேன். இந்தப் பொறுப்பை திரு. நல்லுசாமி ரெட்டியாருக்கு விட்டிருந் தேன். லாரியில் சாமான்களுடன் வருவதற்குப் பள்ளி உதவியாள் P. முத்துசாமியைப் பணித்திருந்தேன்.

ஒரு வாரம் 'வீடு தேடும் படலம்' காரைக்குடியில் தொடர்ந்தது. இருபது நாட்களுக்குள் வீடு கிடைத்தது; ரூ 35/- வாடகை பேசி முன் பணமும் கொடுத்துவிட்டேன். வீட்டுக்கு உரிமையாளர் திரு. சு. ராம. கிருஷ்ணப்ப செட்டியார் மிக நல்லவர். பொதுவாக தன வைசிய இளைஞர்கள், பெரியவர்கள் புதியவர்களுடன் மிக அன்பாகப் பழகி வேண்டிய உதவிகளைச் செய்வது அவர் களின் தனிச்சிறப்பு; உயரியபண்பு. நல்ல நாள் பார்த்து பால் காய்ச்சிவிட்டேன். வீடு புதிதாகக் கட்டப்பெற்றிருந்த வீடு. சந்துக்குள் இருந்தாலும் எல்லா வசதிகளுடன் அமைந் திருந்தது, ஒரு நல்ல நாள் பார்த்து அன்று குடும்பத்தையும் சாமான்களையும் கொணர்வது என்று நாளும் உறுதியா யிற்று. இரண்டு நாள் முன்னதாகக் காரைக்குடியிலிருந்து

துறையூர் வந்து லாரிக்கு ஏற்பாடு செய்தேன் திரு. நல்லு சாமி ரெட்டியார் மூலமாக.

திருச்சியில் பகல் ஒரு மணிக்கு இருப்பூர்தி வண்டி இருந்தது, சாமான்களை ஏற்றும் பொறுப்பையும் லாரியில் வரும் பொறுப்பையும் முத்துசாமிக்கு விட்டுவிட்டு பகலுணவு முடித்துக்கொண்டு இரவுக்கும் உணவு தயார் செய்துகொண்டு காரைக்குடி புறப்பட்டேன். ஒன்பது ஆண்டுகள் சிற்றூர் வாழ்க்கைபோல் துறையூரில் வாழ்ந் தேன்; கடுமையாக உழைத்தேன். என் உழைப்பையும் பள்ளியின் வளர்ச்சியிலும் மாணவர்களின் முன்னேற்றத்தி லும் நான் கொண்டிருந்த அக்கறையையும் ஊர் மக்கள் நன்குஅறிவார்கள்; தோழ ஆசிரியர்கள் நன்கு உணர்ந்திருந் தனர். ஆசிரியர் P. மாதுர்பூதத்தின்மூலம் பேருந்தில் ஐந்து இடங்கட்கு ஏற்பாடு செய்திருந்தேன். அது என் அருமை நண்பர் மணவாளன் ஓட்டும் வண்டி. எங்களை நேராக இருப்பூர்தி சந்திப்பிலேயே கொண்டு வந்து விட் டிடுமாறு கேட்டுக்கொண்டிருந்தேன். அவரும் அன்புடன் இதைச்செய்தார்.

துறையூரில் நான் வீட்டை விட்டுப் புறப்படும்போது என்னுடன் சேர்ந்து உழைத்த ஆசிரியர்கள், என்பால் நல்லுதவி பெற்றுக் கல்விகற்கும் சில மேல்வகுப்பு மாணவர் கள், திரு. நல்லுசாமி ரெட்டியார், எழுத்தர் திரு. K. சீனிவாச அய்யங்கார் அருகிலிருந்தனர். இவர்களைப் பார்க்கும் போது பழைய நினைவுகள் வெளிவந்தன. ‘நான் வளர்த்த பள்ளியை விட்டுப் போகிறேனே’ என்று நினைக் கும்போது என் கண் கலங்கிவிட்டது; அழுகையே வந்து விட்டது. ஆசிரியர்கள், சீநிவாச அய்யங்கார், நல்லுசாமி ரெட்டியார் இவர்கள் கண்களும் குளமானதைக் கண்டேன்; அவர்கள் என்பால் கொண்ட அன்பைப் புரிந்துகொண் டேன். ஒருவாறு தேறி குழந்தை இராமலிங்கத்துடன் என் மனைவி என் மனைவியின் தாய், என் அன்னை, என் மைத்துனரின் முதல் மனைவி இவர்களுடன் பேருந்தில் ஏறி

திருச்சி இருப்பூர்தி சந்திப்பை அடைந்தேன். எங்களை விட்டுப் பிரியும்போது பேருந்தை ஓட்டிவந்த மணவாளனும் கண் கலங்கியதைக் காணமுடிந்தது. இருப்பூர்தி வண்டி பகல் 1.15 க்குப் புறப்பட்டது. நாலரை மணிக்குக் காரைக் குடி வந்து சேர்ந்தோம். குதிரைவண்டி அமர்த்திக்கொண்டு சுமார் ஐந்தரை மணிக்குக் காரைக்குடியில் புது வீடு புகுந்தோம். இந்த வீட்டிலேயே பதினாறு ஆண்டுகள் வாழ்ந்தோம், பத்து ஆண்டுகள் நான் இருந்தேன்; பதினாறு ஆண்டுகள் குடும்பம் இருந்தது, ஆறு ஆண்டுகள் திருப்பதியில் தனியாக இருந்தேன்; விடுமுறைக் காலங் களில் காரைக்குடியில் தங்கியிருந்தேன். சதா என் வாழ்வில் தோன்றாத் துணையாக இருந்த இறைவனின் கருணையை எண்ணிப் பார்க்காத நேரமே இல்லை.

குமிழி—109

## 2. காரைக்குடி நண்பர்கள்

நாங்கள் வந்த அன்றே இரவு எட்டு மணிக்கு லாரியும் வந்து சேர்ந்தது. சாமான்களை இறக்கிக் கொண்டு வாடகை கொடுத்து லாரியை அனுப்பி விட்டேன். முத்துசாமி வந்ததால் சாமான்களையெல்லாம் அத்தந்த இடங்களில் பொருத்தமாக வைப்பதற்கு வசதியாக இருந்தது. என் வாழ்நாளில் முத்துசாமியைப் போன்ற ஒரு திறமையான வேலையாளைப் பார்த்ததே இல்லை. இவன் திறமையைக் கண்டு நான் வந்த ஒன்றிரண்டு ஆண்டு களில் என் அருமை நண்பர் திரு K. S. முத்துவேல் பிள்ளை (Agent, Ceylon Labour Commission) தன்னுடைய அலுவலகத்தில் உதவியாளாக அமர்த்திக் கொண்டார்.

ரூ 25/- மாதச் சம்பளம் வாங்கினவனுக்கு ரூ 200/- சம்பளமாகவும் வெளியூர் சென்றால் படியும் (நாளொன் றுக்கு ரூ 5/-) கிடைத்ததை அறிந்து மகிழ்ந்தேன். முத்துசாமி எட்டாம் வகுப்பு வரை படித்தவன்; இயற்கை யிலேயே எல்லாத் திறமைகளும் அவனிடம் அமைந் திருந்தன, 'வெட்டிக் கொண்டு வா' என்றால் கட்டிக் கொண்டு வந்து விடுவான். இவனது செயலைப் பார்க்கும் போதெல்லாம் பாரதியாரின் 'கண்ணன் — என் சேவகன்' நினைவுக்கு வருவான். கொத்தடிமைபோல் தகப்பனும் மகனும் ஜமீந்தாரிடம் பணி புரிந்தவர்களில் தந்தை பொன்னம்பலம் வயதினால் ஓய்வு பெற்றார்; மகனுக்கு திரு. முத்துவேல்பிள்ளை மூலம் விடுதலை கிடைத்தது.

சாமான்களை வைக்க வேண்டிய இடங்களில் வைப்ப தற்கே இரண்டு மணிநேரம் ஆயிற்று. வீட்டிலேயே உணவு கொள்ளச் செய்தேன். மறுநாள் காலை அதிகாலையி லேயே மீண்டும் சாமான்களை ஒழுங்குபடுத்தினோம். விறகு வைப்பதற்குப் புழைக்கடையில் நல்ல இடம் இருந்தது; மழையிலும் விறகு நனையாத அமைப்பு இருந்தது. காலையில் சிற்றுண்டி காஃபி அருந்தச்செய்து வழிச் செலவுக்கும் அன்பளிப்புக்குமாக ரூ 25- கொடுத்த னுப்பியதாக நினைவு. தொகையை வாங்க மறுத்தான். வற்புறுத்தி வாங்கிக் கொள்ளச்செய்தேன். அவன்சாமான் களைப் பாதுகாப்புடன் கொண்டுவந்து சேர்த்ததற்கும் ஒன்பதாண்டுக்காலம் இட்ட வேலைகளையெல்லாம் முக மலர்ச்சியுடன் செய்தமைக்கும் இந்தத் தொகை போதாது; ஆனால் இத்துடன் கலந்த அன்புக்கு விலை மதிப்பே இல்லை.

துறையூரில் வைத்திருந்த மிதி வண்டியும் லாரியில் வந்து சேர்ந்தது. அதைச் சரிப்படுத்திக்கொண்டு கல்லூரிக்குப் போய்வரப் பயன்படுத்திக் கொண்டேன். அவதி அவதியாகக் குறித்தகாலத்தில் ஓடுவது,விரைவாகச்

சாப்பிடுவது, நிற்க வேண்டிய இடத்தில் போய் நிற்பது, சில சமயம் பேருந்து போய்விடுவது—இவை எல்லாம் என் பழக்கத்திற்கும் இயல்பிற்கும் சரிப்பட்டு வரவில்லை. மிதிவண்டிதான் எனக்கு மிகவும் வசதியாக இருந்தது. காரைக்குடியில் வெயில் அதிகம். எனக்கு லக்னத்தில் சூரியன் ஆட்சி; இதனாலோ என்னவோ இளமையி லிருந்தே சூரிய வெப்பம் தாங்கிக்கொள்ள முடியாத நிலை. இதற்காக நல்ல தலையணி (Hat) வாங்கிக்கொண்டேன்; இஃது எனக்கு மிகவும் வசதியாக இருந்தது. காரைக்குடி யில் கல்லூரி வட்டத்தில் நான் ஒருவனே தொப்பி அணிப வன்; திருப்பதியிலும் இதே நிலைதான். முதலில் சிலர் என்னை வேடிக்கையாக நோக்கினார்கள். நாளடைவில் இஃது எல்லோர் கண்ணுக்கும் பழக்கமாகிவிட்டது.

காரைக்குடியில் இருக்கும்போது முதலில் கண்டு அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டியது இருவர்; ஒருவர் பெரும்புலவர் ராய. சொக்கலிங்கம். இவர் தேசபக்தர்; காந்தி அடியார்; மற்றவர் சீர்திருத்தத்தொண்டர் சொ. முருகப்பர். இருவரும் 4 கல் தொலைவிலுள்ள தேவ கோட்டை சாலையிலுள்ள அமராவதிப் புதூரில் வாழ்ப வர்கள். இருவரும் 1949 இல் கம்பன் விழாவில் அறிமுக மானவர்கள். புலவர்கள்பால் அன்பும் பாசமும் மிக்க வர்கள்! நான் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் கல்லூரியில் பணியேற்றதைத் தெரிவித்துக் கொள்ளவும் இனி அடிக்கடி சந்தித்துப் பழக வாய்ப்புகள் பெறவும் நினைந்து அவர் களைச் சந்திக்க நினைத்தேன். ஒரு சனிக்கிழமை மாலை ராய. சொ. அவர்களின் இல்லத்தை விசாரித்துக்கொண்டு அங்குச் சென்று வணக்கம் செலுத்தி உரையாடித் திரும்பி னேன். அடுத்த நாள் காலையில் மீண்டும் அமராவதிப் புதூர்—மகளிர் இல்லம்—சென்று சொ. முருகப்பரைச் சந்தித்து உரையாடி மகிழ்ந்து திரும்பினேன். இவர்கள் நட்பு அவர்கள் திருநாடு அலங்கரிக்கும் வரையில் இருநிலம் பிளக்க வேர் வீழ்த்தது. இவர்கள் நட்பினால் எனக்குப்

புலமையும் ஆய்வு மனப்பான்மையும் செழித்து வளர்ந்தன. தவிர, சா. கணேசன் அவர்கள் இல்லத்திற்குப் பின்புறத் தெருவில் என் வீடு இருந்தமையால் அவர்களை அடிக்கடிச் சந்திக்கும் பேறு பெற்றேன். சந்திக்கும் போதெல்லாம் ஏதாவது ஒரு புதிய இலக்கியக் கருத்து அவர் திருவாயினின்று உதிரும்; அஃது என் சிந்தனையைத் தூண்டுவதுமாகவும் அமையும். என்னுடைய நூல்களின் கைப்படிகளை அவருக்குக் காட்டாமல் வெளியிடுவதில்லை. என்னுடைய 'தமிழ் பயிற்றும் முறை' என்ற பெரு நூல் வெளிவந்தது அவருடைய ஆசியால்தான் என்று கூறினால் அது மிகைபடக் கூறியதன்று.

அடுத்து ஐப்பார் மருத்துவமனையருகிலிருந்த ஓர் இல்லத்தில் பேராசிரியர் ஆ. முத்துசிவன் தங்கியிருந்தார். அவர் இல்லத்திற்குச் சென்று என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். அவருடைய 'கவிதை' என்ற திறனாய்வு நூலாலும் வேறு ஒன்றிரண்டு நூல்களாலும் தமிழகத்தின் அறிஞர் பெருமக்களுக்கு இவர் நன்கு அறிமுகமானவர். மற்றொரு நாள் என்னுடன் எல்.டி. வகுப்பில் (1940-41) இல் பயின்ற V. சொக்கலிங்கம்பிள்ளைபற்றிப் பலரிடம் விசாரித்து அவர் நகராண்மைக்கழக உயர் நிலைப்பள்ளியில் தற்காலிகத்தலைமையாசிரியராக இருந்ததை அறிந்து அவரைப் பள்ளியில் சந்தித்து அளவளாவி மகிழ்ந்தேன். V. சொக்கலிங்கம்பிள்ளை அமைதியான போக்குடையவர்; பழகுவதற்கு மிகவும் இனிமையானவர், அவரது இல்லற வாழ்க்கை சரியாக அமையவில்லை என்பதை அறிந்து மிகவும் மனம் கவன்றேன். இறுதிவரை அவர் மனைவியுடன் சேர்ந்து வாழவில்லை. 'கலியாணம் பண்ணியும் பிரமச்சாரி' என்ற பழமொழிக்கு இணங்க அவருக்கு மாணி வாழ்க்கையே தலைவிதியாக அமைந்து விட்டது.

இவரைப் பார்க்கச் சென்ற போது இன்னோர் அறிய நண்பர் அறிமுகம் ஆனார். அவர் அப்பள்ளியில்

தமிழாசிரியராகப் பணியாற்றிய பூ. அமிர்தலிங்கம் என்பவர். ஆழ்ந்த புலமை நிரம்பியவராகக் காணப்பட்டார். அவர் புது நகர் (New Town) என்ற பகுதியில் 1000 சன்னல் வீட்டுக் கருகில் — ஆறகம் (ஆறுசிறு வீடுகள் அடங்கிய குடியிருப்பு) — என்ற இடத்தில் குடியிருப்பதாகவும், தன் இல்லத்திற்கு எதிர் வீட்டில் திரு க. தேசிகன் என்ற அழகப்பா கல்லூரி ஆசிரியர் இருப்பதாகவும் கூறினார். ஒருநாள் ஆறகம் சென்று அறிமுகப்படுத்திக் கொண்டேன். திரு. தேசிகன் புலமை நிரம்பிய கவிஞர்; மாணவர்கள் கவரும் முறையில் பாடம் சொல்லுபவர் என்பதை அறிந்துமகிழ்ந்தேன். இந்த ஆறகத்தின் இன்னொரு வீட்டில் குடியிருந்த R. நடராசன் என்ற பெயர் கொண்ட இடைநிலை ஆசிரியரும் அறிமுகமானார். இவர் மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றுபவர், தமிழறிவு மிக்கவர்; மொழி பெயர்ப்பில் வல்லவர். பொது மக்களிடையேயும் மாணவர்களிடையேயும் செல்வாக்கு மிக்கவர்.

நாளடைவில் காரைக்குடியில் நண்பர்குழாம் பெருகியது. கல்லுக்கட்டியில் மணிக்கூண்டிற்கருகில் தனவைசிய இளைஞர் ஒருவர் 'இலக்கியப் பதிப்பகம்' என்ற ஒரு பதிப்பகம் நடத்தி வந்தார். இவர் பெயர் சோமய்யா என்பது. பெரும்புகழ் வாய்ந்தவர். எல்லா நிலை, வகை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் இவரிடம் வந்து போவதுண்டு. பலரை நண்பர்களாக்கிக் கொள்வதில் இவருக்கு நிகர் இவரே. இவருடைய துணைவியாரும் இவருடைய பண்புக்கேற்றபடி அமைந்திருந்தது ஒரு தனிச்சிறப்பு. இவருடைய நட்பும் கிடைத்தது, நான் இவருடன் தொடர்பு கொண்ட போது பதிப்பகம் நன்கு செயல்படவில்லை; பெருத்த பொருள் இழப்பு, ஒரு சில ஆண்டுகளில் இவர் சென்னைக்குச் சென்றார். 'கெட்டும் பட்டணம் சேர்' என்பது பழமொழியல்லவா? சில ஆண்டுகட்கு முன்னர் சென்னையில் இவரை எங்கோ சந்தித்தேன்; இவர்

நன்னிலையில் இருப்பதையும், காரைக்குடியில் சிறு பிள்ளைகளாக இருந்தஇவர்தம் அருமை மக்கள், வளர்ந்து, நல்ல கல்வி பெற்று நல்ல வேலைகளில் அமர்ந்து நன்னிலையில் உள்ளார்கள் என்பதையும் அறிந்து மகிழ்ந்தேன்.

காரைக்குடியில் அறிமுகமான இன்னொரு அரிய நண்பர் புதுமைப் பதிப்பகம் அ. லெ. நடராசன். நல்ல நல்ல நூல்களை வெளியிட்டுப் பெரும் புகழ் பெற்றவர். தமிழ்க்கடல் ராய. சொ.வுக்கு மிகவும் நெருக்கமானவர். நான் இவருடன் அறிமுகமானபோது பதிப்பகம் சரியாக இயங்கவில்லை. நல்ல உழைப்பாளி. எழுத்தாளர்களை நன்கு மதிக்கும் பதிப்பாளர், இவரும் 1960 — வாக்கில் சென்னைக்குக் குடியேறி விட்டார். இவரே எழுத்தாளராகிப் பல நூல்களை வெளியிட்டுள்ளார். 1957-இல் இவருக்கு எடித் ஸ்ப்ரௌல் எழுதிய The Science Book of Human Anatomy என்ற நூலை மொழி பெயர்த்துக் கொடுத்தேன். அது 1958 இல்- மானிட உடல் என்ற தலைப்பில் மிக அழகாக வெளி வந்தது (ஏப்பிரல்—1958). இஃது என் ஆறாவது வெளியீடு, ராய. சொ.வுடன் ஒரு சமயம் இவர் வீட்டில் விருந்துண்டது இன்னும் என் மனத்தில் பசுமையாக உள்ளது. இப்போது 1989; இவர் தியாகராய நகரில் (வடக்கு)—பாரதிநகர் என்ற பகுதியில் வாழ்ந்துவருகின்றார்.

கல்லுக்கட்டியில் (மேற்கு) ரெ. முத்துக்கணேசன் என்ற தன வைசிய இளைஞருடன் அறிமுகம் ஆனேன். நல்ல தமிழ் ஆர்வலர்; கவிபாடும் ஆற்றல் வாய்ந்தவர். சிறுசிறு கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். இவர் எளிய நடையில் உரை எழுதி வெளியிட்ட முத்தொள்ளாயிரப் பதிப்பு மிகவும் தரமானது. சதா தமிழ்ப் புலவர்கள் சூழ இருப்பவர். இவருடன் உரையாடிக் கொண்டிருப்பது நல்ல பொழுது போக்கு. பேச்சில் பொதுவாக நாட்டு நடப்புகள் பங்கு பெற்றாலும் இலக்கியம் பற்றிய குறிப்புகளே அதிகமாக இடம் பெறும்.

இவரிடம் உள்ள சொந்த நூலகத்தில் பல அரிய நூல்கள் இடம் பெற்றுள்ளன.

தெற்குத் தெருவில் என் வீட்டருகில் குடியிருந்த இராம சிதம்பரம் அறிமுகம் ஆன நாள் தொட்டே மிக அன்புடன் பழகியவர். நல்ல இலக்கியச் சுவைஞர். இவரிடம் உரையாடிக் கொண்டிருந்தால் காலம் போவதே தெரியாது. ஓன்றிரண்டு ஆண்டுகளில் ஆத்தூரிலுள்ள ஒரு கண்ணாடித் தொழிற்சாலையில் மேலாளராகச் சென்று அத்தொழிலைத் திறம்பட நிர்வகித்து ஓய்வு பெற்று ஆத்தூரிலேயே (சேலம்) வாழ்ந்து வருகின்றார். இவர்தம் ஒரு மகன் காரைக்குடியில் வழக்குரைஞர் தொழில் செய்து வருகின்றார். மற்றொரு மகன் சென்னையில் இந்தியன் வங்கியொன்றில் கிளை மேலாளராகப் பணியாற்றி வருகின்றார்.

மகா நோன்பு அக்ரஹாரத்தில் சுவாமிநாதன் என்ற கலைஞர் ஒருவர், நல்ல ஓவியர். ஒரு புத்தகக் கடையில் இராம சிதம்பரத்துடன் உரையாடிக் கொண்டிருந்த போது அந்தக் கடையில் முன்னதாகவே அமர்ந்திருந்த சுவாமிநாதனை அறிமுகப்படுத்தி வைத்தார். இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் ஏதோ நரம்புக் கோளாறு நோயினால் தாக்கப்பெற்று படுத்த படுக்கையாகி விட்டார். மூன்று, நான்கு மாதங்கட்கொரு முறை அப்பக்கம் போகும் போது இவரைப் பார்த்து உரையாடி விட்டு வருவதில் தவறுவதில்லை. இவருக்கு மூன்று நான்கு பெண் குழந்தைகள். ஒரே ஒரு பையன். முதல் பெண் தங்கம் என்பவள் பள்ளியிறுதி வகுப்பு படித்து இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்று மீனாட்சி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றி வந்தாள். இப்பெண் மிகவும் அறிவுடையவள். தனியாகவே பயின்று, பி.ஏ., எம்.ஏ. பெற்று குறுகிய கால பி.டி. பயிற்சி பெற்று தான் பணியாற்றும் துறையில் உயர்ந்தாள். இப்போது எங்கோ பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியை

யாகப் பணியாற்றிவருவதாகவும், திருமணம் செய்து கொள்ளவில்லை என்றும் அறிகின்றேன். தன் சகோதரி களையெல்லாம் பள்ளியிறுதித் தேர்வுவரை படிக்க வைத்தாள்; தம்பியை பி. எஸ்சி வரை படிக்க வைத்தாள். பையன் பாரத வங்கியில் எழுத்தராகச் சேர்ந்து திருமணமாகி இப்போது எங்கோ கிளை மேலாளராகப் பணியாற்றி வருவதாக அறிகின்றேன். நாளிதழ்களில் விளம்பரத்தைப் பார்த்தே சகோதரிகளையெல்லாம் நல்லவர்கட்குத் திருமணம் செய்து வைத்ததாகவும் அறிகின்றேன். மெழுகுவர்த்திபோல் தன்னை உருக்கிக் கொண்டு தியாகச் சுடரில் உடன் பிறந்தவர்கட்கெல்லாம் நல்வாழ்வு அளித்தாள் தங்கம் என்ற பெயர் கொண்ட பத்தரை மாற்றுத் தங்கம்!

இப்படிப் பலர், இன்னும் அவ்வப்போது பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு நல்லவர்களின் நட்பு கிடைத்தது. இனி, வரும் குமிழிகளில் அவர்களைக் குறிப்பிடுவேன்.

குமிழி-110

## 3. தமிழ் எம்.ஏ. தேர்வு பெறல்

புதிய இல்லத்தில் மேல்மாடியில் இரண்டு அறைகள் இருந்தன. ஓர் அறைக்கு வேலை இல்லை. முன்னதாக உள்ள அறையில் இருபெரிய அலமாரியில் எனக்குத் தேர்வுக்காகப் பயன்படும் நூல்களை மட்டிலும் வைத்துக் கொண்டேன். அமர்ந்து கொள்வதற்கு ஓர் ஆடும் சாய்விருக்கையும், எழுதுவதற்கு ஒரு மேசையும் நாற்காலி யும் இருந்தன. அவை பேரளவில் தான் பயன்பட்டன.

சாய்விருக்கையிலேயே இருந்து கொண்டு சிறுசிறு எழுத்து வேலையையும் முடித்துக் கொள்வேன். படுப்பதற்கு ஒரு நாடாக் கட்டில், மெத்தை, தலையணைகள். ஊருக்குச் சற்று ஒதுக்குப்புறமாக இல்லம் இருந்ததால் கார், பேருந்து இரைச்சல்கள் இல்லாமல் அமைதியாக இருந்தது. தரைதளத்தில் என் மனைவிக்குத் துணையாக அவள் தாய்.

இந்தச் சூழ்நிலை படிப்பதற்கு வாய்ப்பாக இருந்தது. காலை நேரத்தில் அதிகாலையில் 4 மணிக்கே எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு நெற்றியில் திருநீறு அணிந்து கொண்டு படிக்கத் தொடங்குவேன். ஆறரை மணிக்கு கீழே இறங்கி 'போர்ன் வைட்டா' பானம் அருந்தி விட்டு, ஓர் அரைமணி நேரம் என் குழந்தை இராமலிங்கத்துடன் கொஞ்சி விளையாடுவேன். பிறகு அவனுக்குப் புட்டிப்பால் ஊட்டுவேன். ஏழு மணிக்கு மீண்டும் மாடிக்குச் சென்று படிப்பை நன்கு தொடங்குவேன். 8½ மணிக்குக் கீழிறங்கி நீராடுவேன். அதற்குள் குழந்தை குளித்துத் தந்தையை எதிர்நோக்கிக் கொண்டிருப்பான். குழந்தைக்கு ஆரஞ்சு அல்லது தக்காளி சாறு ஊட்டுவேன். ஊட்டுவதற்கு முன் 'அடைக்ஸலின்' என்ற மீன் எண்ணெயை நான்கைந்து சொட்டுகள் வாயில் விட்டு சாற்றைப் பருக வைப்பேன். சிறிது நேரம் அவனிடம் கொஞ்சிக் கொண்டிருப்பேன். மழலை மொழிகள் அவன் வாயிலிருந்து வரத்தொடங்கி விட்டன.

பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே!
அள்ளி அணைத்திடவே — என் முன்னே
ஆடிவருந் தேனே!
கன்னத்தில் முத்தமிட்டால் — உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடீ!
உன்னைத் தழுவிடிலோ — கண்ணம்மா!
உன்மத்த மாகுதடீ! [1]

1. பா.க: கண்ணம்மா - என் குழந்தை—2,5

என்ற பாரதியார் காட்டும் அநுபவத்தை நாடோறும் அநுபவித்து மகிழ்வேன்.

நான் காரைக்குடி வந்து ஒன்றிரண்டு மாதங்களுக்குள் துறையூரில் என்னிடம் நெருங்கிப் பழகின மௌன சாமியார் ஒருவர் வருவதாகக் கடிதம் எழுதியிருந்தார். இவர் பேசுவதில்லை. எண்ணங்களை எழுதிதான் காட்டுவார். இவரை இருப்பூர்தி நிலையத்திலிருந்து இட்டுக் கொண்டுவந்து இல்லத்தில் விருந்தினராக வைத்திருந்தேன். நான்கு நாட்கள் தங்கியிருந்ததாக நினைவு. தங்குவதற்கு மாடியை ஒதுக்கித் தந்திருந்தேன். இந்தச்சமயத்தில் ஆகஸ்டு-செப்டம்பரில் இரண்டு வாரம்(?) சா. கணேசன் அவர்கள் காரைக்குடிக் காங்கிரசின் ஆதரவில் 'நூற்பு வேள்வி' ஒன்று நடத்திவந்தார். ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் யக்ஞத்தில் கலந்து கொண்டு தக்ளியிலும் இராட்டையிலும் நூல் நூற்றது பொது மக்களுக்குக் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. எதைச் செய்தாலும் 'செய்வன திருந்தச்செய்' என்பது இவர்தம் தனிச்சிறப்பு. திறந்து வைப்பதற்குச் சென்னை மாகாண முன்னாள் தலைமையமைச்சர் திரு ஓ.பி. இராமசாமி ரெட்டியார் வந்திருந்தார்கள். கல்லுக்கட்டியில் கொப்புடையம்மன் கோயிலுக்கு எதிரில் மணிக் கூண்டிற்கும் கி. நாராயணன் செட்டியார் வீட்டிற்கும் இடையில் பெரிய அலங்காரக் கொட்டகை ஒன்று அமைத்து அதில் இந்த வேள்வி நடைபெற்றது.

ஒருநாள் ஞாயிறன்று காலையிலேயே மௌனசாமிக்கு அளிக்கும் விருந்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று சா. க. வை வேண்டிக் கொண்டேன். பகல் பன்னிரண்டு மணி சுமாருக்கு நேரில் வந்து அழைத்துப் போவதாகவும் சொல்லியிருந்தேன். விருந்து சிறிய விருந்துதான். தேங்காய் சாதம், எலுமிச்சை சாதம், பருப்பு, சாம்பார், ரசம், தயிர், ஒரு கூட்டு, 2 கறிகள், அப்பளம், மெதுவடை, சேமியா பாயசம் இவை தாம்

விருந்தின் உணவு வகைகள். வேள்வி நடைபெறும் இடத்திற்கு உள்ள தூரம் 100 கெஜம் இருக்கும். நடந்து வந்து விடலாம். வாடகைக் கார் அமர்த்தலாம்; சா. க. கோபித்துக் கொள்வார் என்று அதைச் செய்ய வில்லை. எளிமையை விரும்புபவர். அவரவர் சக்திக்குத் தக்கவாறு வாழவேண்டும், வீண் ஜம்பம் கூடாது என்ற கொள்கையுடையவர் சா.க. என்பதை ஒன்றரை மாதப் பழக்கத்திலேயே புரிந்து கொண்டிருந்தேன்.

முற்பகல் 10½ மணிக்கு வேள்விக்குப் போய் வரலாமா என்று சுவாமிகளைக் கேட்டேன். முறுவலித்து ஒப்புக் கொண்டார். அவருடன் விருந்து கொள்வதற்கு சா. கணேசன் வருகின்றார் என்றும், 12, 12½ மணிக்கு வேள்வியிலிருந்து நேராக அழைத்து வந்து விடலாம் என்றும் சுவாமிகளிடம் தெரிவித்தேன். அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். சுவாமிகளும் அடியேனும் முற்பகல் 10½ மணிக்கு வேள்வி நடைபெறும் இடத்திற்குச் சென்றோம். சா. க. வை சுவாமிகட்கும் சுவாமிகளைச் சா. க. வுக்கும் அறிமுகப்படுத்தி வைத்தேன். ஓரிரு முறை தாளில் எழுதிக் காட்டினார். சுவாமிகள் பச்சை நிற ஆடையைப் போர்த்திருந்தார். கௌபீனம்தான் உடுத்தின ஆடை. தங்க நிறத் திருமேனி. முகப்பொலிவு நன்றாக இருக்கும்; கண்களில் அருள் பாய்வது போன்ற தோற்றம். வேள்வியில் கூடியிருந்தோர் அனைவரும் சுவாமிகளை வியப்புடன் நோக்கினார்கள். பலர் என்னைச் சுவாமி களைப் பற்றிக் கேட்டார்கள் நான் ‘அடிகள் திருச்சி பக்கம்’ என்று சுருக்கமாகப் பதில் இறுத்தேன். பொதுவாக சா.க. சாதுக்கள்மீது மிகவும் அன்பு கொண்டவர். செட்டி நாட்டுப் பெருமக்களும் இளைஞர்களும்கூட இவர் கள்மீது விருப்பும் அன்பும் கொண்டவர்களே.

சரியாகப் பகல் 12½ மணிக்கு விருந்து தொடங்கியது. குதிரைவால் அரிசி; முனை முறியாதது. என்றுமில்லாத முறையில் அன்று தேங்காய் சாதமும் எலுமிச்சை சாதமும்

அருமையாக அமைந்திருந்தன. வெள்ளை சாதமும் தும்பை மலர்போல் குழையாமல் பதமாக இருந்தது. சா.க. அரிசி யின்மீது கவர்ச்சியுற்று எந்த ஊர் அரிசி? என்று வினவி னார். துறையூருக்கு 10 கல் தொலைவிலுள்ள சோபன புரத்து விளைவு என்று கூறினேன், நல்ல பசி நேரம்; நன்றாகச் சுவைத்துச் சாப்பிட்டார். சுவாமிகளும் நன்கு உண்டார்கள். இவர்கள்மீது உள்ள கவனத்தினால் நான் சுவைத்துஉண்ண முடியவில்லை. செட்டி நாட்டில் பல்வேறு வகையான உணவுகளைஉண்ட சா.க.வுக்கு எங்கள்விருந்து பிடித்தது. சத்துவ உணவு; காரம் அதிகமில்லாதபடி இருந்தது. சா.க. சைவ உணவு கொள்பவராதலால் உணவு அவருடைய சுவைக்குத் தக்கவாறு அமைந்திருந்தது. சேமியா பாயசம் மிகச் சிறப்பாக இருந்தது. தாம்பூலம் தரிப்பவராதலால் பிஞ்சு வெற்றிலை, வாசனை சுண்ணாம்பு வாசனைப் பாக்கு வைத்திருந்தேன்; புகையிலை போடாதவர். பின்னர் சா.க. விடைபெற்று வீடு சென்றார்கள்...பக்கத்தில்தான் அவருடைய வீடு. வீடு வரை சென்று விட்டு வந்தேன். சா. கவும் சுவாமிகளும் எங்கள் வீட்டு விருந்து கொண்டதால் ''என்ன மாதவம் செய்ததோ இச்சிறு குடில்?'' என்று பரந்தாமன் விருந்து உண்ட அன்று விதுரன் பெற்ற மகிழ்ச்சியைப்போல் நானும் பெரும் பேறு பெற்றேன்.

மறுநாள் சுவாமிகள் சென்னை போகவேண்டும் என்று விருப்பத்தைத் தெரிவித்தார்கள்; ஒரு பயணச் சீட்டுமட்டி லும் வாங்கித்தந்தால் போதும் என்றார்கள். நான் அவரை இருப்பூர்தி நிலையத்திற்குச் சென்று பயணச்சீட்டு வாங்கித் தந்தேன்; வண்டியிலும் ஏற்றிவிட்டேன்,செலவுக்குப் பத்து ரூபாய் தந்தேன்; வாங்க மறுத்துவிட்டார்கள். 'நாளைக்கு வேண்டும்' என்ற பற்று துறவிக்கு இருக்கக்கூடாது என்று எழுதிக் காட்டினார்கள்.யாரோ ஒருவர் கவனித்துக் கொள்ள இறைவன் கட்டளையிடுவான் என்று எழுதிக் காட்டி முறுவலித்தார்கள். வண்டியும் கிளம்பிவிட்டது; நானும் பேருந்தில் வீடு திரும்பினேன்.

இந்த ஆண்டு முழுதும் ஓயாத படிப்பு; ஆராய்ச்சித் திறன் வளர்ந்து வரும்போது நினைவுத் திறன் குறைகின்றதா?என்பதுஎன் ஐயம்; 1939-B.Sc. தேர்வு எழுதினபோதும், 1941-L.T. தேர்வு எழுதினபோதும், 1944-வித்துவான்-முதல் நிலை தேர்வு எழுதினபோதும், 1945 வித்துவான்-இறுதி நிலை எழுதினபோதும், 1947-B.A. தேர்வு எழுதினபோதும் இருந்து வந்த நினைவுத் திறன் 1951- M.A., தேர்வு எழுதினபோது குறைந்து விட்டதாக உணர்ந்தேன். எல்லோருக்கும் இந்நிலை உண்டா? என் உளவியல் அறிவுப்படி இஃது இன்னும் விளங்காத புதிராகவே உள்ளது. M.A. பயிலும்போது ஒவ்வொரு தாளுக்கும் குறிப்புகள் எழுதுவது வழக்கம். குறிப்புகளைப் படிக்கும்போது தெளிவு ஏற்படவில்லை. குறிப்புகளில் பாடல் எண்கள் குறிக்கப் பெற்றிருந்தமையால் மூலத்தை அடிக்கடிப் பார்க்க வேண்டியிருந்தமையால் நினைவுத் திறன் குறைந்ததோ என ஐயப்படுகின்றேன், இந்த ஐயம் இன்னும் தீர்ந்தபாடில்லை. B.Sc. படித்தபோது குறிப்புகளை வைத்திருந்தேன், அவை பெரும்பாலும் கணிதம், அறிவியல் பற்றியிருந்தமையால் எளிதாக நினைவு கூர முடிந்தது. அப்போது உழைத்த உழைப்பைவிட அதிகமாகவே உழைத்தேன். அக்காலத்தில் பச்சையப்பன் கல்லூரி மட்டிலும் B.O.L (Hons)க்கு மட்டிலும் மாணவர்களை அனுப்பிக்கொண்டிருந்தது. பின்னர்தான் அப்பட்டத்தைக் கைவிட்டு B.A. (Hons), M.A. தேர்வுகளுக்காக மாற்றிக்கொண்டது. வேறு எங்கும் தமிழில் முதுகலை பயில்வதற்கு வாய்ப்பு இல்லை. ஆசிரியர்கள்தாம் விதிவிலக்குபெற்று தேர்வு எழுதிப் பட்டங்கள் பெற்றுவந்தனர். நான் தேர்வு எழுதின ஆண்டு 10 பேர்களுக்குக் குறைவாகத்தான் தேர்வு எழுதினதாக அறிந்தேன். அரசு இதழில் (Gazette) எம்.ஏ.யில் தேர்ந்தவர்கள் ஏழெட்டு பேர்களின் பெயர்கள்தாம் அறிவிக்கப் பெற்றிருந்தன.

தேர்வு தொடங்கும் ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்னர் விடுப்பு வாங்கிக்கொண்டு திருச்சி சென்றேன். மாயூரம்

விடுதியில் (வாணப்பட்டறைத் தெருவில் உள்ளது) தனி அறை வாங்கிக்கொண்டு தங்கியிருந்தேன். ஏராளமான நூல்களைக் கட்டிக் கொண்டு போயிருந்தேன். தேர்வு நடை பெற்ற இடம் திருச்சி தேசியக் கல்லூரி; ஆண்டார் தெருவுக்கு எதிரில் அப்போது இருந்தது. ஒன்றிரண்டு மணித்துளிகளில் தேர்வு நடைபெற்ற இடத்திற்குப் போய் விடலாம். திருச்சி மையத்தில் இரண்டு மூன்று பேர்தான் தமிழ் எம். ஏ. தேர்வு எழுதினார்கள். அவர்களுள் ஒருவர் தேசியக் கல்லூரியில் பொருளாதாரத் துறையில் பயிற்சி யளிப்பவராகப் (Tutor) பணியாற்றியவர். முதன்முதலாகத் தேர்வு மண்டபத்தில் பழக்கமானவர். ஒரு தேர்வு முடிந் ததும் என் அறைக்கும் வந்தார். நான் கொண்டு வந்திருந்த நூல் குவியலைக் கண்டு மலைத்துப் போனார், "இவ்வளவு படித்தீர்களா?" என்றுகூடக் கேட்டுவிட்டார். "தேர்வுக் குரிய பாட நூல்கள் இவ்வளவு இருக்கின்றனவே, 52 கல் வெட்டுகளில் சென்னைப் பல்கலைக்கழக நூலகத்தில் 2 திங்கள் சென்று குறிப்புகள் எழுதி வைத்திருக்கின்றேன். கால்டுவெலின் A Comparative Grammer of Dravidian Languages என்ற நூல் முழுமையும் படித்துக் குறிப்புகள் எழுதி வைத்திருந்தேன். தென்னிந்தியத் தொடக்க கால வரலாறுபற்றி அப்போது சரியான நூல்கள் இல்லை[2]. C. S. சீநிவாசாச்சாரியின் நூல்களிலிருந்து குறிப்புகள் எழுதி வைத்திருந்தேன். இவ்வளவையும் பார்த்து நண்பர் மலைத்துப் போனார். 'எந்தத் தேர்வாக இருந்தாலும் அசுவமேத யாகத்திற்குத் தயாரிப்பதுபோல் தயாரித்து விடுவேன். பாடத் திட்டத்திலுள்ள பகுதிகள் யாவும் நன்கு செரிமானம் ஆன பிறகுதான் தேர்வுகள் எழுதுவேன். இது என் பழக்கம்' என்று நண்பரிடம் தெரிவித்தேன்.

என் நண்பர் தான் இவ்வளவு முயன்று படிக்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டார். நாள்தோறும் அவரைக்

2. 1951க்கு மேல் பேராசிரியர் K.A. நீலகண்ட சாஸ்திரி The Early South Indian History என்ற நூலை வெளியிட்டார்.

கவனித்ததில் அலட்சியமாகத்தான் தேர்வுமண்டபத்திற்கு வந்து கொண்டிருந்தார். ஒவ்வொரு நாளும் அரைமணி தான் தேர்வு எழுதுவார்; அரைமணியானதும் வெளியில் சென்று விடுவார். இந்நேரத்திற்கு முன்னர் யாரையும் வெளியில் அனுப்புவதில்லை. இது தேர்வு பற்றிய விதி. தேர்வுகள் முடிந்த பிறகு என் அறைக்கு வந்தார். மாலை காஃபி நேரம் வரை இருந்ததாக நினைவு. தான் தேர்வு களைச் சரியாக எழுதவில்லை என்றும், இன்னும் இரண்டு நாட்களில் சென்னை செல்வதாகவும், தேர்வு முடிவுகள் தெரியும் வரை சென்னையில் தங்குவதாகவும் கூறினார்.

தேர்வுகளின் முடிவுகள் ஜூன் மாதம் வெளி வந்தன. நான் முதல் வகுப்பு எதிர்பார்த்தேன்; இரண்டாம் வகுப்புதான் கிடைத்தது (பின்னர் மதிப்பெண்கள் வாங் கிப் பார்த்ததில் 1400க்கு 833 வந்திருந்ததை அறிந் தேன்) தேர்வாளர்களின் கூட்டத்தில் 840 போட்டு முதல் வகுப்புக்குக் கொணர்ந்திருக்கலாம். அங்ஙனம் செய்யப் பெறவில்லை. ஆனால் சரியாக எழுதாத என் நண்பர், ஒவ்வொரு தாள் தேர்வு நடைபெற்ற பொழுது அரைமணி நேரத்தில் தேர்வு மண்டபத்தை விட்டு வெளி வந்தவர், முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்தவராக அறிவிக் கப்பெற்றது. இது அதிசயத்திலும் அதிசயமாக இருந்தது எனக்கு! 3 மணி நேரம் எழுத வேண்டிய தேர்வில் ½ மணி நேரம் எழுதி விட்டு, தேர்வு மண்டபத்தை விட்டு வெளி வந்தவர் முதல் வகுப்பு பெற்றார்! அவர்தான் தேர்வு முடிவுகள் தெரியும்வரை சென்னையில் தங்குவதாகச் சொல்லிச் சென்றாரே, எப்படி முதல் வகுப்பு பெறாமல் இருக்க முடியும்? அப்படி வராதிருந்தால் சென்னையில் தங்கியிருந்ததற்குப் பொருள் இல்லையே. எத்தனைத் தில்லுமுல்லுகள் நடந்தனவோ? யார் கண்டார்கள்? இவை இறைவனுக்குத்தான் வெளிச்சம்! வேலியே பயிரை மேய்ந்தால் என்ன பாதுகாப்பு இருக்கின்றது?

நான் தேர்வு எழுதிய இரண்டு மூன்று ஆண்டுகட்கு முன்னர் தமிழ் எம்.ஏ. தேர்வு எழுதிய ஓர் உயர் அதிகாரி என்னிடம் சொன்னது: ''ரெட்டியார்வாள், நான் எம். ஏ. தேர்வு எழுதி வெற்றி பெற்றது அதிசயத்திலும் அதிசயம். பொதுக்கட்டுரை மட்டிலும்தான் எழுதினேன். ஏனைய ஏழு விடைத்தாள்களிலும் என்னாலான மட்டிலும்தான் எழுதி வைத்தேன். தேர்வுத் தலைவருக்கு 'பொதுக் கட்டுரையைக் கொண்டு எம்.ஏ. பட்டம் பெறத் தகுதியை அறுதியிடுங்கள்' என்று கடிதம் எழுதினேன். அவரும் அங்ஙனமே அறுதியிட்டு எனக்கு எம்.ஏ. பட்டம் வழங்க ஏற்பாடு செய்தார். பட்டமும் பெற்றேன்.'' என்றார். ''இப்படித் தேர்வு ஆலைக்குள் நுழையாமல் சில அரசியல் வாதிகட்கு D.Litt (Honorary) பட்டம் பல்கலைக்கழகம் வழங்குகின்றதே, அப்படி எம்.ஏ. பட்டமும் வழங்கினால் நன்றாக இருக்கும். பிரமன் எழுதிய தலை எழுத்தைத் தான் மாற்ற முடியாது, பல்கலைக்கழக விதிகளை மாற்றுவது எளிதுதானே'' என்றேன். அவரும் ''அதுவும் சரிதான்'' என்று சிரித்துக் கொண்டே என் கருத்துக்கு (Proposal) ஒப்புக்கொண்டார்.

1955,1956 என்று நினைக்கின்றேன். ஒரு கல்லூரித் தமிழ்த் துறையில் பயிற்றும் ஆசிரியர் (Tutor) ஒருவர் எம்.ஏ. (தமிழ்) தேர்வு எழுதினார். அவர் தேர்வாளர்கள் அனைவரையும் தனித்தனியே சந்தித்தார். ''வேலை பளுவினால் இந்தத் தாள் மட்டிலும் சரியாக எழுத வில்லை. இதில் 60 % க்கு மேல் வழங்கினால் எனக்கு முதல் வகுப்பு கிடைக்கும்'' என்று கூறியே முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். இப்படித் திரை மறைவில் அந்தக் காலத்திலேயே பல செயல்கள் நடைபெறுகின்றன என்பதை அறிந்தேன். பணியாளர்கட்கு மனச்சான்று மட்டிலும் இல்லாததிருந்தால் எத்தனையோ அடாவடித் தனங்கள் நடைபெறும். ''ஆண்டவன்தான் என்னைக் கருவியாகக் கொண்டு இப்படிச் செய்கின்றான்'' என்ற

கீதோபதேசத்தைக் கொண்டு மனத்தையும் சமாதானம் செய்து கொள்ளலாம்.

இத்தகைய ஓரிரு செயல்கள் நூற்றாண்டு தாண்டிய பல்கலைக் கழகங்களிலேயே நடை பெறுகின்றன. அண்மையில் கேரளப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்று அம்பலமான அடாவடித்தனங்கள் — மலையை விழுங்கும் செயல்கள் — இவற்றை நோக்கும் போது எங்கோ அத்தி பூத்த மாதிரி ஒன்றிரண்டு நடப்பது கொசு மாதிரி என்று நினைத்துக்கொண்டு வாளா இருக்க வேண்டியதுதான்.

குமிழி-111

## 4. கல்லூரி நூலகப் பொறுப்பு

முதல்வர் திரு. ஐ.என். மேனன் திருச்சூர் அரச பரம்பரையைச் சேர்ந்தவர். பரந்த நோக்குடையவர். பொறுப்புடன் பணியாற்றுபவர்கட்கு அவர் தலைமை உகக்கும்படியாக இருக்கும். சிறு சிறு விஷயங்களில் தலையிடமாட்டார். மேலோட்டமாக அனைத்தையும் தெரிந்து கொள்வதில் அக்கறை கொண்டவர். அனைத்தும் சரியாக நடைபெற்றால் மகிழ்ச்சியடைவார். எங்காவது சிறு தவறுகள் நடைபெற்றால் அவற்றைக் கண்டும் காணாததுமாகப் போய் விடுவார். தமக்கு அவை தெரியும் என்ற குறிப்பினால் புலப்படுத்துவார். உரியவர்கள் தாமாகவே திருத்திக் கொள்வார்கள். ஆனால் விவரமாகக் காரியங்கள் நடைபெறுவதைக் கவனிப்பதைத் திரு வேங்கடாச்சாரியின் பொறுப்பில் விட்டு விடுவார். நடைமுறைக் கடிதங்களை திருவேங்கடாச்சாரியே தயார் செய்து விடுவார். முக்கியமான கடிதங்களுக்குப் பதிலிறுக்கும் நிலை ஏற்பட்டால் இருவரும் கலந்து பேசிய

பிறகு திருவேங்கடாச்சாரி கடிதங்களைத் தயார் செய்வார். சுருக்கமாகக் கூறினால் நிர்வாகப் பொறுப்பைத் திரு. மேனன் காலத்தில் திருவேங்கடாச்சாரியே கவனித்து வந்தார். திரு மேனன்போல் தாராளமாகச் சம உரிமையுடன், சகோதரப் பேராசிரியர்களுடன் பழகுபவர்களைக் காண்டல் அரிது. சோம்பேறிகளும் பொறுப்பற்றவர்களும் கடமையுணர்வு இல்லாதவர்களும் இவர்கள் தலைமையில் பணியாற்ற நேர்ந்தால், இவருக்கு விரைவில் கெட்ட பெயர் வந்து விடும். இறையருளால் வள்ளல் அழகப்பர் திருவுள்ளப்படி எல்லோரும் திறமையுள்ளவர்களாக வந்து சேர்ந்தது கல்லூரியின் முன்னேற்றத்திற்கு வழியமைத்து விட்டது. எல்லோரும் கருத்து வேறுபாடு இன்றி நன்கு இணைந்து செயற்பட்டனர்.

திரு மேனன் என்னை 'ரெட்டியார்' என்றே அழைப்பார். என்னைப்பற்றிப் பிறரிடம் குறிப்பிடும் போது Tamil Lexicon (தமிழ்ப் பேரகராதி) என்று செல்லமாகக் குறிப்பிடுவார். எனக்கு இது மகிழ்ச்சியைத் தருவதாக இருந்தது. நல்ல படிப்பாளி (Scholar) என்று என்மீது நல்ல மதிப்பு வைத்திருந்தார். நான் வந்து சேர்ந்த போது என் படிப்பு போதாது என்ற உணர்வைத் தந்தது. சைதைக் கல்லூரியில் எனக்குப் பேராசிரியராக இருந்த பேராசிரியர் குருசாமி ரெட்டியாரையும் பன்மொழிப்புலவர் திரு. வேங்கடராஜுலு ரெட்டியாரையும் அடிக்கடி நினைத்துக் கொள்வேன். அவர்கள் எனக்குக் குறிக்கோள் மனிதர்களாக இருந்து வந்தனர். அவர்கள் மாதிரி பெயர் எடுக்க வேண்டும் என்று கடுமையாக உழைத்தேன். கல்வி பயிற்று முறைகள், ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கற்பிக்கும் முறைகள்பற்றிய நூல்கள், கல்வி உளவியல்பற்றிய பல்வேறு நல்ல நூல்கள் இவற்றையெல்லாம் அக்கறையுடனும் ஆர்வத்துடனும் பயின்று வந்தேன். சில அரிய கருத்துகளை குறிப்பேட்டில் பதிந்து வைத்துக் கொள்ளும் பழக்கத்தையும்

மேற்கொண்டிருந்தேன். பின்னால் நான் நூல்கள் எழுதும்போது இவற்றை நன்முறையில் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. 'கற்றது கை மண் அளவு; கல்லாதது உலக அளவு' என்ற பொன்மொழியின் ஒளி எனக்கு வழி காட்டிக் கொண்டே இருந்தது. 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்'[1] என்ற வள்ளுவர் வாக்கையும் நினைவுறுத்திக் கொண்டும் இருந்தது.

பயிற்சிக்கல்லூரி நூலகம் தனித்தன்மை வாய்ந்ததாக அமைதல் வேண்டும். தமிழ் இலக்கியம், இலக்கணம் பற்றிய எல்லா நூல்களும் இடம் பெறுதல் வேண்டும். ஆங்கில இலக்கியத்தில் ஓரளவு இடம் பெறுதல் வேண்டும். புதுக்கல்லூரியாதலால் நூல்கள் ஒன்றுமே இல்லை. திரு மேனன் அவர்கள் நூலகத்தை விரிவுபடுத்தும் பொறுப்பை எனக்கு விட்டிருந்தார். ஆகவே தான்தோன்றித்தனமாகச் செயற்படாமல் ஒருவிதத்திட்டம் வகுத்துக்கொண்டு நூல்களை வாங்குவதற்கு முன்னர் எல்லா நூல் நிறுவனங்களினின்றும் முதலில் விலைப்பட்டியல்கள் வரவழைத்துக் கொண்டேன். ஆசிரியர், நூல் பெயர், வெளியிட்ட, கிடைக்கும் நிறுவனம், விலை என்று கட்டங்கள் அமைத்து கோடிட்ட தாள்களைத் தயாரித்துக் கொண்டேன். விலைப்பட்டியல் வந்தவுடன் கணிதம், அறிவியல், வரலாறு, தத்துவம், பயிற்று முறைகள். கல்வி, உளவியல், கல்வி உளவியல், தமிழ் இலக்கியம், இலக்கணம், சங்க இலக்கியங்கள், காவியங்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், சில முக்கிய புராணங்கள், சிற்றிலக்கியங்கள், பாரதியார் இலக்கியங்கள், பாரதிதாசன் படைத்தவை, தேசிக விநாயகம் பிள்ளை படைப்புகள், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை இயற்றிய நூல்கள், பல்வேறு அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், அபிதான சிந்தாமணி, தொடக்கநிலை, உயர்நிலை, கல்லூரி-பல்கலைக் கழக மட்ட நிலைகளில் வெளியி

1. குறள் — 1110 (புணர்ச்சி மகிழ்தல்)

டப்பெற்ற அறிக்கைகள், முக்கியமான வார, திங்கள், பிறை முதலிய சஞ்சிகைகள், முக்கியமான நாளிதழ்கள்—இவற்றையெல்லாம் வாங்கி வைக்க வேண்டும் என உறுதி செய்து கொண்டேன்.

மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்.[2]

என்ற பாவேந்தர் வாக்கை இச்சமயத்தில் அடிக்கடிச் சிந்திப்பதுண்டு.

கணிதம், அறிவியல், வரலாறு, புவிஇயல், சமூகஇயல் உளவியல், பயிற்று முறைகள் இவை பற்றிய நூல்களைத் தேர்ந்தெடுப்பதை அந்தந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து விலைப்பட்டியலில் குறியீடு செய்யுமாறு கேட்டுக் கொண்டேன்; அவர்களிடம் அந்தந்த விலைப்பட்டியலை வாங்கி நூற்பட்டியல் தயாரித்தேன். இதற்கு ஒரு செவ்வைப்படி எடுக்கச் செய்து கடிதங்கள் தயாரித்து அந்தந்தப் புத்தக நிறுவனங்களுக்கு அனுப்பச் செய்தேன். சிறிதும் தாமதமின்றி அனுப்பியதால் நூல்கள் விரைவாக வந்து குவிந்து கொண்டிருந்தன. இவை வருவதற்குள் கண்ணாடி முகப்புடைய பல தேக்கு அலமாரிகள் தயாராகிக் கொண்டிருந்தன.

அசுர வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த கட்டட வேலைகள் முக்காற் பகுதி கிட்டத்தட்ட 10 மாதங்ளிகல் நிறைவெய்தின. கீழ்-மேலில் பகரவடிவமாக ஆனால்

2. பாரதிதாசன் கவிதைகள்-முதற்பகுதி-புத்தகசாலை-2

இடைவெளியிட்டு-இரண்டு பகுதிகளாகக் கட்டடங்கள் அமைந்தன. நெடுஞ்சாலையின் அருகில் கீழ்ப்புறம் ஒரு பெரிய மண்டபம்-அஸ்பெஸ்டாஸ் கூரை அமைந்தது-தயாராயிற்று. இதுதான் தற்காலிகமாக நான்கு ஆண்டுகள் விரிவுரை மண்டபமாகப் பயன்பட்டது. இதற்கு நேர்மேற்கில்-இடையில் கல்லூரிக்குள் நுழையும் பிரதான வாயிலைக் கடந்து இதே மாதிரி இன்னொரு கட்டடமும் தயாராயிற்று, இதில் தற்காலிகமாக 40 பேர்களுக்குரிய கீழ்கோடியிலும் மேல்கோடியிலும் இரண்டு வகுப்பறைகள், இரண்டிற்கும்இடையே முதல்வருக்கான ஓர் அறை, அருகில் அலுவலக அறை, இன்னொரு சிறிய அறை, ஆகியவை தடுக்கப்பெற்றன. இரண்டு பகரவடிவான பகுதிகளில் மேல் புறமாக உள்ளதில் பலமான அடிப்படையில் அமைந்த பல கீற்றுக்கொட்டகைகளும், கீழ்புறம் உள்ள பகரவடிவான பகுதியில் ஒரு பெரிய கல் கட்டடமும், பல கீற்றுக்கொட்டகைகளும் போடப்பட்டன. கல் கட்டட வேலை நான்கு ஆண்டுகளில் நிறைவெய்தியது. கீழ்ப்புறமாக உள்ள பகரவடிவப் பகுதியில் வடபுறம் ஒரு சிறு அறையும் ஒரு வகுப்பறையும், கீழ்ப்புறம் வடகோடியில் ஒரு வகுப்பறையும், தென்கோடியில் ஒரு வகுப்பறையும் இவற்றிற்கிடையில் ஆசிரியர்க்கென நான்கு சிறிய அறைகளும் (மேற்குபுறம் இரண்டு; கிழக்குப் புறம் இரண்டுமாக) அமைந்தன. இதில் மேற்குப் புறமாக உள்ள ஒரு சிறிய அறை எனக்கு ஒதுக்கப் பெற்றது. இதில்தான் ஒன்பது ஆண்டுகள் தங்கி என் பணிகளையும் கடமைகளையும் சிறந்த முறையில் ஆற்றி வந்தேன். மேல்புறமாகவுள்ள தற்காலிக நூலகம், அறிவியல் அறை, முதல்வர் அலுவலகம் இணைந்து ஒன்றாக அமைந்திருந்தன. பல சரக்குக் கடைபோல் அமைந்த இதில்தான் 4 ஆண்டுகள் காலம் தள்ள வேண்டியிருந்தது. புத்தகங்கள்அடுக்கடுக்காய்க்குவிந்து கொண்டே வந்தன. 1955-இல் தான் புதிய கெட்டிக் கட்டடம்-கெட்டியான கல் கட்டடம்-தயாரானது. தரை தளத்தில் மேற்குப்

புறப் பகுதியில் முதல்வர் அறையும் அலுவலக அறையும் அமைந்தன. இவற்றைத் தவிர கீழ்ப்புறப் பகுதி முழுதும் நூலகத்திற்காக ஒதுக்கப்பெற்றது. விசாலமான இந்த இடத்தில் கல்லூரிக்கு வேண்டிய நூல்கள் அனைத்தும் வாங்கி அடுக்கலாம். கீழ்புறமும் மேற்புற அலுவலறை போல் ஒன்று இருந்தது. இதுதான் விரிவுப் பணித்துறை அமைய உதவியது. இது வந்த பிறகு ஆறு ஆண்டுகள் என் மனம் விரியும் அளவுக்கு-பணம் ஒதுக்கப் பெறும் அளவுக் கேற்ப-தரமான நூல்களின் எண்ணிக்கை பெருகியது.

கலைக் கல்லூரிக்கும் பயிற்சிக் கல்லூரிக்கும் நடைமுறையில் எத்தனையோ வேறுபாடுகள் உண்டு. கலைக் கல்லூரியில் மாணாக்கர்கட்குக் கற்பிப்பது, தேர்வுகட்குத் தயார் செய்வது இவற்றுடன் பொறுப்பு முடிந்துவிடுகின்றது. நல்லாசிரியர்களிடம் பயிலும் வாய்ப்புகள் இருப்பின் அவர்கள்மூலம் மாணாக்கர்களில் சிலராவது அகத்தெழுச்சி (Inspiration) பெறுவர். பயிற்சிக் கல்லூரியின் பொறுப்பு வேறு. பட்டம் பெற்றவர்கள் ஒவ்வொருவரையும் ஆசிரியர்களாக்குவது, குழுவாகக் கொள்கைகளைக் கற்பித்த பிறகு வகுப்பறையில் கற்பிக்கும்போது மேற்கொள்ளவேண்டிய முறைகளைக் கொள்கை நுணுக்கங்களுடன் பொருத்திக் காட்டி விளக்குவதுதான் முக்கியமான படியாகும். சந்தர்ப்பத்தையொட்டி, கற்பிக்க வேண்டிய பாடத்தையொட்டி, மாதிரிப் பாடங்களை அடிப்படையாகக் கொண்டு பாடக் குறிப்புத்தயாரிக்கும் முறையைத் தனித் தனியாக ஆசிரிய மாணாக்கரைச் சந்தித்து விளக்க வேண்டும். இதற்கு வசதியாக பயிற்சிக் கல்லூரிகளில், பல்கலைக்கழக ஆசிரியர்கட்குத் தந்திருப்பதுபோல் தனித் தனிஅறைகள் தரவேண்டும் என்ற இன்றியமையாமையைக் கருதிப் புதிதாகத் தொடங்கப்பெற்ற கல்லூரியில் தனித் தனி அறைகள் ஒதுக்கப் பெற்றிருந்தன.

தவிர, நூலகத்திலுள்ள எல்லா நூல்களைப்பற்றியும் பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்கள் சிறிதளவாவது அறிந்து

கொண்டிருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் பயிற்சி பெறும் ஆசிரியர்களை நூலகத்தைப் பயன்படுத்தும் முறையில் ஆற்றுப்படுத்த இயலும். சில சமயம் நூல் களையே நூலகத்திலிருந்து பயிற்சிபெறும் ஆசிரியரைக் கொண்டு குறிப்பிட்ட நூலை எடுத்துவரச் செய்து விளக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் எழும்.

இந்தத் தனி அறை எனக்குத் தனிமையாகப் பயிலவும், ஆய்வுக் குறிப்புகளைச் சேகரிக்கவும் பயன்பட்டது. கூரைக் கட்டடமாதலால் மின் விளக்குகள் வசதி செய்யப்பெற வில்லை: ஆதலால் கல்லூரியில் தங்கி பயில்வதாக இருந் தாலும் மாலை ஆறு மணிக்கு மேல் தங்கமுடிவதில்லை.

இன்னொரு முக்கிய செய்தியையும் இக்குமிழியில் நினைவு கொள்ளுகின்றேன், சென்னைப் பல்கலைக்கழக விதிப்படி ஒவ்வொரு கல்லூரியிலிருந்தும் அக்கல்லூரி ஆசிரியர்கள் இரண்டு பேரைச்சென்னைப் பல்கலைக்கழக கல்வி ஆலோசனைக்குத் தேர்ந்தெடுப்பது வழக்கம். இவர் களின் பதவிக் காலம் மூன்றாண்டுகளாக இருக்கும். பெரிய கல்லூரிகளில் ஆசிரியர்கள் கூட்டம் அதிகமாக இருப்பதால் இத்தகைய கல்லூரிகள் சிலவற்றில் பலர் அனுப்பப் பெறு வதை விரும்புவர். இதனால் முதலாண்டுத் தேர்ந்தெடுத்து அனுப்பப் பெறுபவர்கள் இரண்டு கூட்டங்கள் முடிந்த பிறகு ஆண்டிறுதியில் தங்கள் உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்வர்; அடுத்த ஆண்டு வேறு இருவரை அக்கல்லூரி ஆசிரியர்கள் தேர்ந்தெடுத்து அனுப்புவர். சில கல்லூரிகள் இதை ஒரு மரபாகவே கொண்டிருந்தன. ஆனால், எங்கள் கல்லூரியில் இந்த மரபை மேற்கொள்ள வில்லை. மூன்றாண்டு காலத் தகுதியை நாங்கள் சிதைக்க விரும்பவில்லை. முதலாண்டு தேர்ந்தெடுக்கப் பெற்ற பேராசிரியர்கள் எஸ். திருவேங்கடாச்சாரியாரும் V.N. சுப்பிரமணியமும் மூன்றாண்டுகள், அதாவது **1950-51, 1951-52, 1952--53, உறுப்பினர் பதவியை வகித்துவந்தனர்.**

# 5. கல்லூரியில் இரண்டாம் ஆண்டு

**1951** -பிப்பிரவரி மாதத்திலேயே கலைக் கல்லூரி வளாகத்திலிருந்து சொந்தக் கட்டடத்தில் குடிபுகுந்தோம். கலைக்கல்லூரிக்குப் பேருந்தில் செல்லும் சில ஆசிரியர்கள் பயிற்சிக் கல்லூரியைக் கீற்றுக் கொட்டகைக் கல்லூரி என்று ஏளனமாகப் பேசிக் கொண்டு போகும் சொற்கள் எங்கள் காதில் விழாமல் இல்லை. இதனால், எங்கள் மனம் தளரவில்லை. அந்தக் கலைக்கல்லூரியில் கூட அறிவியல் பகுதிகளைத் தவிர ஏனைய துறைகள் யாவும் கீற்றுக் கொட்டகையில்தான் அடங்கியிருந்தன என்பதை அவர்கள் மறந்தனர் போலும்.

அவமதிப்பும் ஆன்ற மதிப்பும் இரண்டும்
மிகைமக்களான்மதிக்கற் பால—நயமுணராக்
கையறியா மாக்கள் இழிப்பும் எடுத்தேத்தும்
வையார் வடித்த நூலார்.[1]

[அவமதிப்பு — தாழ்ந்த மதிப்பு; ஆன்ற — உயர்ந்த; மிகை மக்கள் — பெருமையுடைய மேன்மக்கள்; நயம் — நற்குணம்; கை அறியா — நல்லொழுக்கத்தை அறியாத — இழிப்பு — அவமதிப்பு; வையார்—மனத்தில் கொள்ளார்.]

என்ற நாலடியாரை நினைத்துக் கொண்டேன். இதில் சமண முனிவர் பெரியாரது மதிப்பின் சிறப்பையும், சிறியாரது மதிப்பின் சிறப்பின்மையையும் கூறியுள்ளது சிந்திக்கத் தக்கது.

வைணவர்கள் எவ்வளவு பெரிய மாளிகையில் வாழ்ந்தாலும் தம் இல்லத்தைக் 'குடில்' என்றும், மிகச்சிறிய குடிசையில் இருந்தாலும் பிறரது இல்லத்தைத் 'திருமாளிகை' என்றும் சொல்லிக் கொள்வது மரபாக

1. நாலடியார்-163 (பெரியாரைப் பிழையாமை)

இருந்துவருகின்றது. பாண்டவர்கள் சார்பாகத் துரியோதனன்பால் தூது சென்ற கண்ணன் அத்தினபுரத்திற்கு வந்தபோது விதுரன், துரோணன், வீடுமன் முதலியோர் இரண்டு யோசனை தூரம் எதிர் சென்று கண்ணனை வரவேற்றனர். கண்ணன் அத்தினபுரம் புகுந்தபின் துரியோதனன் இல்புகாமல் ''விதுரன்வாழ் வளமனை புகுந்தான்''[2]. அமரர்க்கு அமிழ்தம் அருளிய மாயோன் விருந்தாகத் தம் குடிலுக்கு எழுந்தருளினமை கண்டு உளம் உருகுகின்றான் விதுரன். கண்ணனை நோக்கிக் கூறுகின்றான் :

முன்ன மேதுயின் றருளிய
  முதுபயோ ததியோ ?
பன்ன காதிபப் பாயலோ ?
  பச்சைஆல் இலையோ?
சொன்ன நால்வகைச் சுருதியோ ?
  கருதிநீ எய்தற்கு
என்ன மாதவம் செய்ததுஇச்
  சிறுகுடில்?' என்றான்.[3]
[பயோததி — பாற்கடல்; பன்னகம் — பாம்பு;
  சுருதி — மறை; குடில் — குடிசை]

இந்த பாடல் வைணவ சம்பிரதாயத்தின் உயிர்நாடியாக அமைந்து விடுகின்றது. இதை மனத்தில் கொண்டே வைணவர் ஒருவர் 'அடியேன் குடிசைக்கு ஒரு நாள் எழுந்தருள வேண்டும்' என்று மற்றொருவரை வேண்டும்போது அவர் 'தேவரீர் திருமாளிகைக்கு சமயம் வாய்க்கும்போது வருவேன்' என்று கூறிக் கொள்வதை இன்றும் நாம் வைணவ சம்பிரதாயமாக வழங்கி வருவதைக் காணலாம். பெரிய பெரிய மாளிகைகளுக்கும் இக்காலத்தில் 'குடிசை' என்று பெயர் சூட்டும் வழக்கமும் இருந்து வருகின்றது.

2. கிருட், தூது — 73.
3. ஷை. 78.

பல்கலைக்கழகங்களிலும் School of Tamil Studies என்று பெயரிட்டு வழங்குவதையும் ஈண்டு நினைவு கூரலாம். இவற்றையெல்லாம் நினைத்துக் கொண்டால் 'கீற்றுக் கொட்டகைக் கல்லூரி' என்ற ஏளனப் பேச்சுக்குப் பொருள் இல்லாது போகும்.

முதலாண்டுக்குள் மாணவர்க்கு 300 சிறு மேசைகள், கையில்லாத 300 நாற்காலிகள், கண்ணாடி முகப்புள்ள பல பீரோக்கள், முதல்வர் அறைக்கு வேண்டிய பெரிய மேசை, பல கையுள்ள நாற்காலிகள், ஆசிரியர்கட்கு வேண்டிய 20 மேசைகள், 20 கையுள்ள நாற்காலிகள் — இவை அசுர வேகத்தில் தயாராகி முடிந்தன. எங்களுக்கு 'மயன் படைப்பு' தான் நினைவுக்கு வந்தது. எல்லாம் தேக்கு மரத்தாலானவை. வரையாது வழங்கும் வள்ளலின் பொருளுதவியும், திறமை மிக்க தச்சுத் தொழிலாளர்களின் இடைவிடாத உழைப்பும் இவை தயாரானமைக்கு முதற் காரணமாக அமைந்தன. அரசுகூட இவ்வளவு விரைவாகச் செயற்பட முடியாது. அங்குக் கோப்புகள் ஆமை வேகத் திற்குக் குறைவாக நகரும்; இங்குக் கோப்புகள் முயல் வேகத்திற்கும் அதிகமாக நகர்ந்தன. 'அது இல்லை, இது இல்லை' என்ற குறையையே நாங்கள் எப்பொழுதும் உணரவில்லை. ஆசிரியர்கள் பற்றாக் குறையை நிறைவு செய்ய வள்ளல் முன் வந்தமை தமிழகத்தின் தவப்பய னாகும். ஆசிரியர்கள் பற்றாக் குறையை நிறைவு செய்ய வேண்டிய பொறுப்பை, அரசின் விருப்பத்திற்கிணங்க, வள்ளல் மேற்கொண்டு நிறைவேற்றினமையும் தமிழர் களின் தவப்பயனாகும், இப் பொறுப்பை அரசு மேற் கொண்டிருந்தாலும் இவ்வளவு விரைவாக, இவ்வளவு சிறப்பாக இவ்வளவு திறமையாகக் கல்லூரியை உருவாக்கிப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை வெளிக் கொணர்ந்திருக்க முடியாது.

இங்கு (காரைக்குடியில்) ஒரு பயிற்சிக் கல்லூரி நிறுவு வதற்குச் சென்னைப் பல்கலைக் கழகம், ஆணையம்

(Commission) ஒன்றை ஏற்படுத்தியது. அதன் தலைவர் ஏ.என்.தம்பி என்பவர் பரிந்துரைத்த அறிக்கையில் பல நல்ல அம்சங்கள் இருந்தன; கல்லூரி நல்ல அடிப்படையில் அமைவதற்கு இவை துணை செய்தன. எல்லாம் நன்கு அமையினும் பேராசிரியர்கள் நன்கு தேர்வு செய்து நியமிக்கப் பெறாவிடில் கல்லூரி நன் முறையில் அமையாது. கல்விக் கொள்கைகள், கற்பிக்கும் முறைகள், கல்வி உளவியல், தமிழ், ஆங்கிலம், அறிவியல், சமூக இயல், உடற்பயிற்சி, கைத்தொழில் — ஓவியம் — இவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொருவர் நியமிக்கப் பெற வேண்டும் என்றும், இவர்களில் இருவர் பேராசிரியர் ஊதியத்தில் இருக்க வேண்டும்என்றும் நிபந்தனைகளை விதித்திருந்தது ஆணையம்.கட்டடங்கள், வகுப்பறைகள், நூலகம், ஆசிரியர்க்குத் தனித்தனி அறைகள் போன்ற குறிப்புகள் அறிக்கையில் அடங்கியிருந்தன. இவற்றையெல்லாம் மிக விரைவில் நிர்வாகம் நிறைவேற்றின. இந்நிலையில் துறையூர்ப் பள்ளி நிர்வாகம், இங்குக் கல்லூரி நிர்வாகம் இவற்றின் தாரதம்மியங்களை ஒப்பிட்டு நோக்கினேன் ; மலைக்கும் மடுவிற்கும் உள்ள வேறுபாடுகள் பளிச்சிட்டன.

ஏ. என் தம்பியும், ஐ. என். மேனனும் ஒரே சமயத்தில் நியமனம் பெற்றனர். ஏ. என். தம்பி பயிற்சிக் கல்லூரிக்கும் ஐ. என். மேனன் கலைக்கல்லூரிக்குமாகப் பொறுப் பேற்றிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் என்று இப்போது என் மனம் எண்ணுகின்றது. காரணம், ஏ. என். தம்பி கல்வியியல் கல்லூரியில் பணியாற்றிய அநுபவம் உள்ளவர்; ஐ.என். மேனன் கலைக்கல்லூரியில் பணியாற்றிய அநுபவம் மிக்கவர். அப்படி ஏற்பாடு இருந்தாலும் தம்பி பயிற்சிக் கல்லூரிக்கு வர விரும்பியிருக்க மாட்டார், மேனன் எதில் இருப்பினும் சரி என்று ஒப்புக் கொண்டிருப்பார். கலைக் கல்லூரியில் மாணவர் கூட்டமும் அதிகம்; ஆசிரியர் கூட்டமும் அதிகம்; பணப்புழக்கமும் அதிகம். பல்வேறு விதமாகக் செலவு செய்துபகட்டான விழாக்களை அமைக்கலாம். ஜம்ப

மாகவும் இருக்கமுடியும், இராஜசக் குணம் மிக்க தம்பிக்கு இது பொருத்தமாக அமைந்தது. மேனன் அமைதியான போக்குடையவர்; சத்துவ குணம் மிக்கவர். இருவரும் கேரளத்தைச் சார்ந்தவர்களாதலின் இவர்கள் காரைக் குடிக்கு வரும் முன்பே மனம் பொருத்தம் இல்லாதவர்கள் என்பது கூர்ந்து நோக்குபவர்கட்குத் தெரியாமற்போகாது. ஏதோ இருவரும் ஓரளவு பேசிக் கொண்டார்களாயினும் நெருங்கிப் பழகவில்லை என்பதை எல்லோரும் அறிவர், கீரியும் பாம்பும் போன்று ஒற்றுமையுடையவர் என்பதைச் சாதாரண மக்களும் நன்கு அறிந்து கொள்ள முடிந்தது.

நிர்வாகக் குழு உறுப்பினர்களில் சா. கணேசன் முக்கிய மானவராகத் திகழ்ந்தார். ஆனால் நிர்வாகத்தில் தலை யிடுவதில்லையானாலும் அழகப்பா கல்லூரி கல்வி நிகழ்ச்சி கள் அனைத்திலும் உள்நுழைந்து கலந்து கொள்வார். மாணாக்கர்கள்மீது அளவற்ற அன்பு காட்டி வந்தார். மாணவர்களின் படிப்பு முன்னேற்றத்தில் அதிக அக்கறை கொண்டிருந்தாலும் படிப்பைவிட அவர்களிடையே ஒழுக் கம், பண்பாடு இவற்றைப் படிய வைத்து வளர்ப்பதில் பேரூக்கம் காட்டிவந்தார். எல்லா ஆசிரியர்களிடம் அள வற்ற அன்பும் பாசமும் கொண்டிருந்தாலும் தமிழாசிரியர் களிடம் அதிக மதிப்பும் மரியாதையையும் வைத்திருந்தார். இவருடைய 'கற்பக நிலையத்தில்' (இல்லத்தின் பெயர்) பல துறை ஆசிரியர்களில் சிலரும் தமிழாசிரியர்கள் பலரும் அடிக்கடி வந்து போவதைக் காணலாம். ஆட்சிக்குழு உறுப்பினர் என்பதற்காக இவர்கள் வரவில்லை என்பதை யும் இவருடைய பல துறை ஆர்வமும், தேசபக்தியும், நேர்மையும் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசாத வெள்ளை மனமும், பொதுமக்களுக்கு இயன்ற வரை உதவும் தாராள மனப்பான்மையும் அனைவரையும் இவர்பால் ஈர்த்தன என்பது என் கணிப்பு.

சா. கணேசனிடம் மேல்விழுந்து பழகுபவர் திரு ஏ. என். தம்பி; அதிகமாகவே பழகினார் என்பதை

எல்லோருமே நன்கு அறிவர். சா. கணேசனும் தம்பியின் இல்லத்திற்கும் அடிக்கடி வந்து போவதுண்டு; இவர் போகாவிட்டாலும் வாகனத்தை அனுப்பியாவது வருவிப்பார் தம்பி. ஆனால் இந்தச் சந்திப்புகள் யாவும் கல்லூரியின் மேம்பாடு பற்றியும், மாணவர்களின் முன்னேற்றம் பற்றியவுமாகவே இருக்கும். ஆனால், மேனன் அளவோடு பழகுபவர்; கல்லூரியிலும் பிரச்சினைகள் அதிகமாக எழுவதில்லை. இதனாலும், மாலை மூன்று, மூன்றரைக்கு மேல் அவர்கள் கல்லூரியில் தங்கும் வழக்கத்தை மேற்கொண்டிராததால் மேனன், ''மிஸ்டர் திருவேங்கடாச்சாரி கல்லூரி நடைமுறையைப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லிவிட்டு இல்லம் திரும்பிவிடுவார். கிட்டத்தட்ட கல்லூரியில் வேலையும் ஒன்றிராது. தமக்குரிய வகுப்பு வேலையையும் முற்பகலிலேயே முடித்துக் கொள்வார். 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்' என்பதுபோல சா. கணேசன் தம்பிமேல் வைத்திருந்த பற்றையும் பாசத்தையும்போல் மேனன் மேல் வைக்கவில்லை என்பதை நான் நன்கு அறிவேன். சா. கணேசனை அடிக்கடிச் சந்திக்கும் என்னிடம் தம்பியின் நிர்வாகத்தையும் அவர் கல்லூரிபால் கொண்டுள்ள தனி அக்கறையையும் அடிக்கடிப் புகழ்ந்து பேசுவார். அதுபோல மேனனைப் பற்றிப் பேச்சே எழுவதில்லை. ஆயினும், மேனனைப் பற்றிக் குறைத்துப் பேசுவதில்லை. ஒரு சமயம், ''மேனன் மூன்று, மூன்றரை மணிக்கே வீட்டிற்குப் போய் விடுகின்றாராமே'' என்று மட்டிலும் சொன்னதாக நினைவு. நான் ''அவர் கடமைகளை ஒரு நாளும் புறக்கணிக்க மாட்டார். சின்னக் கல்லூரி; அதுவும் ஆசிரியப் பணிக்குப் பயிற்சி பெறும் ஆசிரியர்களால் பிரச்சினை ஒன்றும் இராது. அவருடைய முன்னைய வாழ்வில் (மாநிலக் கல்லூரி, சென்னை) மாலையில் மூன்று, மூன்றரைக்கு மேல் கல்லூரில் தங்குவதில்லை போலும். அதனால்தான் பெரும்பாலும் கல்லூரியில் பொறுப்பான

பணி இல்லாதபோது வீடு திரும்புவார்'' என்று சொல்லுவேன். ''அது சரி, வேலை செவ்வனே நடந்தால் சரி. ஒவ்வொருவருடைய பழக்கம் ஒவ்வொரு மாதிரி இருக்கும்'' என்று சொல்லி வாளா இருந்து விடுவார். ஒரு நாளும் சா. கணேசனுக்கு மேனன்மேல் வெறுப்பு இருந்த தில்லை என்பது மட்டிலும் தெளிவு.

சோமலெ : திரு சோம. லெட்சுமணன் செட்டியார் என்பவர் செட்டி நாட்டிலும் பிற இடங்களிலும் புகழ் பெற்றவர். உலகம் சுற்றிய தமிழர்; இரண்டாவது தமிழர். இதற்கு முன்னர் ஏ. கே. செட்டியார் உலகத்தைச் சுற்றி 'உலகம் சுற்றிய தமிழன்' என்ற நூலும் எழுதிப் பெரும் புகழ் பெற்றவர். இவர் வெளியிட்டு வந்த குமரி மலராலும் அறிஞர் உலகத்திற்கு அறிமுகமானவர். திரு சோமலெயும் தமது பல வெளியீடுகளால் தமிழறிஞ ருக்கு நன்கு அறிமுகமானவர். 1951-செப்டம்பர் என நினைக்கின்றேன்; ஒருநாள் பிற்பகல் தன்னை அறிமுகப் படுத்திக் கொள்வதற்காக கல்லூரிக்கு வந்தார். நான் சோமலெயை ஒளிப்படத்திலும் பார்த்ததில்லை. காரைக் குடியில் பலர் அவரைப் பற்றி என்னிடம் சொன்னார்கள். அப்போது குன்றக்குடியிலிருந்த சாமி. பழநியப்பன் இவரைப் பற்றி நன்கு சொல்லியிருந்தார். ஆகவே, நானும் அவரைப் பார்ப்பதற்காகத் துடித்துக் கொண்டிருந்தேன். நெற்குப்பை அவரது சொந்த ஊர் என்பதை அறிந் திருந்தும், அங்குப் போக நினைக்கவில்லை. தேடிச் செல்ல வேண்டிய மருந்து காலில் அகப்பெற்றதுபோல அந்த நண்பரே கல்லூரிக்கு வந்துவிட்டது எனது பேறு என்றே கருதினேன். வந்தவர் தன்னை யார் என்று சொல்லாம லேயே பேசிக் கொண்டிருந்தார். தன்னை அறிந்து கொண் டிருக்கவேண்டும் என்று சொல்லாது விட்டார் போலும். மிக எளிமையான தோற்றத்துடன் இருந்தமையாலும், நான் அவரைப் பற்றிய கற்பனையில் கொண்டிருந்த உருவம் வேறாக இருந்தமையாலும் உடனே புரிந்து

கொள்ள முடியவில்லை. பிறகு—அரைமணிக்குள்—இவரை எப்படியோ அறிந்துகொண்டேன். பிறகு அன்பு கிளர்ந்தெழ மேலும் அரைமணி அளவளாவினோம். கல்லூரியில் ஒரு பானம்கூட வழங்கமுடியவில்லையே என வருந்தினேன். இல்ல முகவரியைத் தந்து ஒருநாள் ஞாயிறு அன்று இல்லத்திற்கு எழுந்தருளுமாறு வேண்டினேன். அவரும் என் வேண்டுகோளுக்கிணங்க என் வீடு தேடி வந்துவிட்டார். ஒரு சிறிய விருந்து அளித்தேன்; உண்டு மகிழ்ந்து அளவளாவிச் சென்றார். அன்று முதல் அவர் திருநாடு அலங்கரிக்கும் வரை (1986) மிகவும் நெருங்கிய நண்பர்களாகப் பழகி வந்தோம். திருப்பதியில் உமாமகேஸ்வர ரெட்டி குடியிருப்பில் நான் வாழ்ந்த பொழுது அவரும் ஆச்சியும் அவர் தம் அருமை மகனுக்கு முடியிறக்கத் திருப்பதி வந்தவர்கள் இரண்டு நாட்கள் என் விருந்தினர்களாகத் தங்கினார்கள். ''என்ன மாதவம் செய்ததோ இச்சிறுகுடில்?'' என்ற விதுரனின் உணர்வு பெற்று மகிழ்ந்தேன்.

குமிழி-113

## 6. என் ஏதுமலைப் பயணம்

ஏதுமலை என்னும் சிற்றூர் காவிரியின் வடபால் திருச்சியிலிருந்து இருபது கல் தொலைவிலுள்ளது. இந்த ஊரில் காமாட்சியம்மன்—கறுப்பண்ண சுவாமி—தங்கை அண்ணன் முறையில்—எழுந்தருளியுள்ளனர். இப்போது திருச்சியிலிருந்து பேருந்து வசதி உண்டு. 1952-இல் இந்த வசதி இல்லை. எங்கள் குடும்பத்தில் முதல் மகனுக்கு இத்திருக்கோயிலில் முடி இறக்கும் வழக்கம் வழி வழியாக வந்து கொண்டுள்ளது. இந்த வழக்கத்தையொட்டி என் மூத்த மகன் இராமலிங்கத்திற்கு 1952—பிப்பிரவரியில்

(சிவன்ராத்திரியன்று) முடி இறக்க முடிவு செய்தோம். என் அன்னையார் அப்போது காரைக்குடி வரவில்லை; கோட்டாத்தூரிலேயே இருந்தார்கள்.

நாங்கள்-நான், என் மனைவி, செல்வன் இராமலிங்கம் —முதல் நாள் கோட்டாத்தூர் வந்து சேர்ந்தோம், கோட்டாத்தூரில் அரும்பாவூர் குணம் நல்லப்ப ரெட்டியார் அவர்கள் உதவியால் மாட்டு வண்டியில் என் அன்னையாருடன் மாலை எதுமலை வந்தடைந்தோம். கோயில் ஊருக்குக் கிழக்கே சுமார் 3 கல் தொலைவில் உள்ளது; இரவு உணவு கொண்டு வந்திருந்தமையால் நேராகக் கோவிலை வந்தடைந்தோம்-இரவு ஏழு மணிக்கு. அக்காலத்தில் கோயிலுக்கு அடைப்பே இல்லை. பகல் நேரங்களில் ஆடுமாடுகள் வந்தடையும் இடமாகத் திகழ்ந்தது. ஆண்டிற்கு இருமுறை (ஆடி, மாசி) இம் மாதங்களில் இரு நாட்களில் துப்புரவு செய்யப் பெற்று, விழாக்களும் பூசையும் நடைபெறும். ஏராளமான பக்தர்கள் வந்து காமாட்சியம்மன் — கறுப்பண்ண சுவாமியை வழிபட்டு அவர்களின் கருணைக்குப் பாத்திரர் களாவர்.

நாங்கள் வந்த அன்று வரகூர், பெரகம்பி முதலான இடங்களிலிருந்து ரெட்டி குலப் பெருமக்கள் வந்திருந்தனர். பெரகம்பியிலிருந்து என் தாய் மாமன் (அம்மான்) வந்திருந்தார். இவர் வாழ்நாள் வரை இடையில் விட்ட உறவு தொடர்ந்தது; எதிர்காலத்தில் என்னாமோ? யார் அறிவார்கள்? பெரகம்பியிலிருந்து என்னுடன் திண்ணைப் பள்ளியில் படித்த ஓரிரு இளைஞர்களும் வந்திருந்தனர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர் பூனையார் வீட்டுத் தம்பு சிதம்பரம் என்பவர். இவர்எதுமலையில் உள்ள சொ. சிதம்பர அய்யரின் முன்னோர் சொக்கலிங்கய்யரால் எளிமையான முறையில் அனைவரும் பொருளுணருமாறு சந்தப் பாடல்கள் கலந்து பாடப் பெற்ற (கைப்படியில்

உள்ளது) காத்தவராய சுவாமியின் கதையை இசையுடன் பாடி அனைவரையும் மகிழ்வித்தார். சிவன்ராத்திரியில் தூங்காமலிருக்க இவர் பாட்டு துணை செய்தது. இந்த ஆண்டு இவர் பாடியதைக் கேட்டு மகிழ்ந்தேன்.

அதிகாலையில் வண்டியைப் பூட்டிக் கொண்டு கோயிலிலிருந்து எதுமலைக்கு வந்தோம். பிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள என் நண்பர் பெத்துசாமி வீட்டில் காலை சிற்றுண்டி, காஃபியை முடித்துக் கொண்டு கோட்டாத்தூர் வந்தோம். பகலுணவை முடித்துக் கொண்டு துறையூருக்குப் பேருந்தில் வந்தோம். அன்று என்ன காரணமோ, திருச்சிக்குச் செல்லப் பேருந்தில் இடம் கிடைக்கவில்லை. எப்படியோ இடம் கிடைத்து திருச்சிக்கு 4 மணிக்கு வந்து சேர்ந்தோம்; இருப்பூர்தி ஏறி இரவு 8-30 மணி சுமாருக்குக் காரைக்குடி வந்து சேர்ந்தோம். என் அன்னையார் கோட்டாத்தூரிலேயே தங்கி விட்டார்கள்; மகனுடன் வந்து சேர்ந்து வாழும் பேறு இன்னும் பெறவில்லை. அடுத்த ஆண்டு (1953) தன் பேரில் இருந்த நிலத்தை 3½ ஆயிரத்திற்கு விற்று விட்டுக் காரைக்குடி வந்து விட்டார்கள்.

1979-சிவன்ராத்திரியன்று என் முதல் மகன் இராமலிங்கத்தின் முதல் மகள் மிருணாளினிக்கு முடி இறக்கச் சென்ற போதும் 1981-சிவன்ராத்திரியன்று என் இளைய மகன் டாக்டர் இராமகிருட்டிணன் மகன் வேங்கடேசனுக்கு முடி இறக்கச் சென்றபோதும் வழக்கமாக வரும் சிதம்பரம் வரவில்லை. விசாரித்ததில் பக்கவாதத்தால் தாக்குண்டு கிழக்கே ஏதோ ஓர் ஊரில் (ஊர் பெயர்நினைவு இல்லை) தன் மகள் வீட்டில் வதிகின்றார் என்ற செய்தி கேட்டு மிகவும் வருந்தினேன்.

பேத்திக்கு முடி இறக்கும்போது திருச்சியில் ஆனந்தா காப்பரேஷன் கருப்பையாபிள்ளை வீட்டில் குளியல்,

சிற்றுண்டி முடித்துக் கொண்டு வாடகைக் கார் அமர்த்திக் கொண்டு காலையில் கோட்டாத்தூர் சென்றோம். குணம் நல்லப்ப ரெட்டியாருக்கு முன்னரே அறிவித்துச் சென்றோம். நான் பள்ளிச் சிறுவனாக இருந்த காலம் முதல் அவர் மறையும்வரை அன்புடனும் பாசத்துடனும் பழகி வந்தவர். அடிக்கடி நோய் வாய்ப்பட்டுத் (பெரும் பாலும் நீரடைப்பு) துன்புறுவர். பல்வேறு பழவகைகளை வாங்கிக் கொண்டு சென்றிருந்தோம். நல்லப்ப ரெட்டியார் வீட்டில் பகல் விருந்து; மாலையிலும் சிற்றுண்டியும் அங்குத்தான் கொண்டோம். மாலை ஐந்து மணிக்குக் கோட்டாத்தூரிலிருந்து புறப்பட்டு ஆறு மணிக்கு எது-மலையை அடைந்தோம். தியாகராச ரெட்டியார் (என் தங்கையின் மகள் வீடு) வீட்டில் தங்கி இரவு சிற்றுண்டிக்குப் பிறகு கோயிலுக்குச் சென்றோம். நள்ளிரவு 3 மணிக்கு முடி இறக்கிக் குழந்தையை வெந்நீரில் குளிப்பாட்டினோம். 3-30 மணிப் பூசை முடிந்தது.

அதிகாலை 4 மணிக்கு கார் அனுப்பி தியாகராச ரெட்டியார் வீட்டிலிருந்து குழந்தைக்குப் பால், எங்கட்குக் காஃபி தருவித்துக் கொண்டோம். ஆறு மணிக்குப் புறப்பட்டுத் தியாகராச ரெட்டியாரிடம் விடைபெற்றுக் கொண்டு 7-30க்குத் திருச்சியை அடைந்தோம். எங்களுடன் என் சம்பந்தி குப்புசாமி ரெட்டியாரும் வந்திருந்தார்.

R. பாலகிருஷ்ணன் (ஜமால் முகமது கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்) தில்லை நகருக்கருகில் ஓர் உணவு விடுதியில் நாங்கள் தங்க ஏற்பாடு செய்திருந்தார். அவர் வீட்டிற்கு விருந்து உண்ண அழைத்தார். கோயிலுக்குப் போனவர்கள் நேராக வீடு போக வேண்டும். பிறர் வீடு போகக் கூடாது என்ற மரபுப்படி நான், என் மனைவி, என் சம்பந்தி குப்புசாமி ரெட்டியார் மட்டிலும் அவர் வீடு சென்று உண்டோம். என் மகன், மருமகள், பேத்தி இவர்கட்கு விருந்துணவை விடுதிக்கு அனுப்பிவிட்டார். காலைச்

சிற்றுண்டியை முடித்துக் கொண்டு மலைக் கோட்டை பார்க்கச் சென்றோம். என் பேத்தி சிரமமில்லாமல் மலை ஏறி விட்டாள்; உச்சிப் பிள்ளையார் கோயிலையும் உதவி யின்றி ஏறிப் பார்த்துவிட்டாள். தாயுமானவர் கோயில் திருச்சுற்றிலுள்ள எல்லா தேவதைகளையும் தொட்டுத் தொட்டு வணங்கினது இன்றும் என் மனதில் பசுமையாக உள்ளது. அன்றிரவே, சிற்றுண்டியை முடித்துக் கொண்டு மலைக்கோட்டை விரைவு வண்டியில் ஏறிச் சென்னையை அடைந்து விட்டோம்.

1982 இல் என் பேரன் வேங்கடேசனுக்கு (என் இரண்டாம் மகன் டாக்டர் இராமகிருட்டிணனின் முதல் மகன்) முடி இறக்கும்போது என் சம்பந்தி துரைசாமி ரெட்டியார் தன் மனைவியுடன் வந்திருந்தார். திருச்சி யிலிருந்து கார் ஏற்பாடு செய்து கொண்டு சென்றிருந் தோம். முன் மாதிரியே தியாகராச ரெட்டியார் வீட்டில் சிறிது நேரம் தங்கித் திருக்கோயிலை அடைந்தோம். பூசை விடியற்காலை 4 மணிக்கு முடிந்தது. கார் அனுப்பிக் குழந்தைக்குப் பால், எங்கட்குக் காஃபி தியாகராச ரெட்டியாரிடமிருந்து தருவித்துக் கொண்டோம். கோயி லிலிருந்து 6 மணிக்குக் கிளம்பி தியாகராச ரெட்டியாரிடம் விடைபெற்றுக் கொண்டு திருச்சி வந்தடைந்தோம். ஆனந்தாஸ் கார்ப்பரேஷன் கடையில் மேல்மாடியிலுள்ள அறையில் தங்கி, குளியல், சிற்றுண்டியை முடித்துக் கொண்டு திருவள்ளுவர் பேருந்து நிலையத்திற்கு வந்தோம். காலை 10 மணி வண்டிக்குப் பயணச் சீட்டுகள் கிடைத்தன. மாலை ஐந்து மணிக்குச் சென்னை வந்தடைந்தோம்

எதுமலையான் துணையிருந்தால்
ஏதுமிலானும் எதற்கும்மலையான்

என்ற ஆன்றோர் வாக்கு இன்னும் என் மனத்தில்

ஒலித்துக் கொண்டுள்ளது இனியொருமுறை ஏழுமலை செல்ல வாய்ப்பு இருக்குமா? முதுமை நிலையில் பயணம் குறைந்து வருகின்றது கையில் பணமும் இல்லை, உடலில் வலிவும் குறைந்துவிட்டது ஆனால் திருப்பதிக்குச் சென்று ஏழுமலையானை வழிபடும் வாய்ப்புகள் மட்டிலும் இருந்து வருகின்றன இஃது ஏழுமலையான் திருவருள்

குமிழி—114

## 7 சொ முருகப்பா

சொ. முருகப்பா, செட்டிநாடு தமிழகத்திற்கு வழங்கிய சீர்திருத்தச் செம்மல்களில் ஒருவர் பிழைப்பின் நிமித்தம் கல்லூரிகளில் சேர்ந்து படித்துப் பட்டம் பெறாதவர் உயர்நிலைப்பள்ளிகளில் சிறிது காலம் பயின்றவர் நல்ல தமிழாசிரியரிடம் தனியாகத் தமிழை முறையாகப் பயின்று தமிழறிவையும் பண்பாட்டையும் வளர்த்துக்கொண்டவர் இளமையில் தாம் கற்ற கல்வியை அரசியல், சமூகம், மொழி, சமயம் முதலியவற்றின் சீர்திருத்தப் பணியில் பயன்படுத்தி வந்தவர் இப்பணிகளுக்குச் சிறந்த கருவியாகக் குமரன் முதலான வார இதழ்களைத் துணை கொண்டு நடத்திப் பெரும் புகழ் பெற்றவர் நான் திருச்சியில் புனித சூசையப்பர் கல்லூரியில் பயின்றபோது திருச்சித் தேவர் மன்றத்தருகில் அக்காலத்தில் (1934-39) இருந்த ஒரு படிப்பகத்தில் தினந்தோறும் மாலை 6-30 மணி முதல் 7-30 மணி வரை நாளிதழ்களைப் படிக்கும் பழக்கம் கொண்டிருந்தேன் அப்போது குமரன் இதழைப் படித்துப் பயன் பெற்றேன், திரு வி க நடத்திய நவசக்தி போன்ற இதழ்கள் போல நல்ல ஆற்றொழுக்கான

நடையில் எழுதப் பெற்ற குமரன் இதழில் அதிகமாக ஆழங்கால் படுவதுண்டு. அப்பொழுது முருகப்பரை நான் கண்டதும், இல்லை. அவரைப் பற்றிப் பிறர் சொல்லக் கேட்டதும் இல்லை. தமிழ் நாட்டின் பற்பல கழகங்களில் தலைவராகவும் சொற்பொழிவாளராகவும் கலந்து தொண்டாற்றிய பெருமை இவருக்கு உண்டு.

அரசியலில் காந்தி நெறியைக் கடைப்பிடித்தவர். கதரைத் தவிர வேறு துணிகளை உடுத்துவதில்லை. தேசபக்திமிக்கவர். இவருடைய துணைவியார் மரகதவல்லி அம்மையாரும் கதரைத் தவிர வேறு ஆடைகளை அணிவதில்லை. கணவன் கருத்துக்கிசைய நடந்து கொள்ளும் சீலம் மிக்கவர் அம்மையார். இருவரும் பருந்தும் நிழலும் போல இணைந்து செயற்பட்டுச் சமூகப்பணி செய்து புகழ் பெற்றவர்கள். மரகதவல்லி அம்மையாரை அவர் இளம் கைம்பெண்ணாக இருந்த போது மணந்து கொண்டவர். இளம் கைம்பெண்களின் இழி நிலையையும் அவர்கள் படும் இன்னல்களையும் கண்ட முருகப்பத் தம்பதியர் கைம்பெண்களுக்கு மறுவாழ்வு அளிப்பதில் அக்கறை கொண்டு அமராவதி புதூருக்கு அரைக் கல் தொலைவில் காரைக்குடி - தேவகோட்டை சாலையில் 'மகளிர் இல்லம்' என்ற பெயரில் ஓர் இல்லம் தொடங்கிப் பல கைம்பெண்களுக்கு மறுவாழ்வு அளித்தனர். கல்வி கற்பித்து, சில கைத்தொழில்களில் பயிற்சி தந்து திருமணமும் புரிவித்தனர். 'கொடிறும் பேதையும் கொண்டது விடா' என்பது போல மூடப் பழக்கங்களில் மூழ்கிக் கிடக்கும் சமூகம் அக்காலத்தில் அதிகமாக ஒத்துழைப்பு நல்கவில்லை. சில ஆண்டுகள்தாம் இப் பணி தொடர்ந்தது. வரவரக் கைம்பெண்களின் எண்ணிக்கை குறைந்ததால் மகளிர் இல்லத்தின் பணி நின்றது. அது குழந்தைகளின் இல்லமாக (Children's Home) மாற்றப் பெற்றது.

முருகப்பர் மரகதவல்லிஅம்மையாரை மணந்து கொண்டதே ஒரு சுவையான நிகழ்ச்சி. முருகப்பர்—

‘முருகபபா’ எனறே அழைககபபடுபவா — தநதை பெரியாரின சுயமரியாதை இயககததில (தன-மான இயககததில) தீவிரமாக ஈடுபட்டுச சமூகச சீாதிருததங களைப பறறிப பிரசாரம செயது வநத காலததில ஒரு சமயம பட்டுககோட்டையில மாநாடு போனற ஒரு பெரிய கூட்டததில இளங கைமபெணகள சமூகததில நிலவும மூட்ப பழககஙகளின பிடியில அகபபட்டுப பலவேறு இனனலகளை அனுபவிததுத தவிககும நிலையிலிருநது விடுவிககபபெறுதல வேணடும எனறும, அவாகட்கு மறு மணம செயவிததுப புனா வாழவு அளிகக வேணடும எனறும பேசிப பலதத கைததட்டலகளைப பெறறாா மககள அவாகள பேசசில ஈாககபபெறறு மதுவுணட வணடுகள போலாயினா பல இள உளளஙகளில இக கருததுகளை ஆழபபதிததாா இவா பேசசால கவரப பெறற ஓா இளம கைமபெண துணிவாக மேடையின மீது ஏறி ஒலிவாஙகி (Mike) முன நினறு, ‘பெரியோா களே, பேசசாளா இனிகக இனிககப பேசி நமமனததைக கவாநதாா நமமுடைய பாராட்டுதலகளைக கைததட்டல களால பெறறாா இககாலததில வாயபபநதல போட்டு வாயசசொல வீராகளாகத திகழுபவாகட்குக குறை விலலை இதெலலாம போகட்டும நேராகப பிரச சினைககு வருவோம நான ஒரு கைமபெண வயதுககு வராததறகு முனபே திருமணம செயயப பெறறு கணவனை இழநததறகுப பினனா வயதுககு வநத கைமபெண பேசசாளா எனனைத திருமணம செயது கொளவாரா? என சவாலை ஏறபாரா? எனறு முழங கினாா, எலலோரையும தம துணிவான பேசசினால வியபபில ஆழததினாா இநத அமமையாா வேறு யாரும இலலை, இவரை மணநது கொணட மரகதவலலி அமமையாாதான ரோஷததால உநதப பெறற முருகபபா சவாலை ஆணமையுடன ஏறறாா இருவருககும தநதை பெரியாா தலைமையில திருபபரஙகுனறததில சீாதிருததத திருமணம நடைபெறறது அனறு முதல இருவரும

இணைந்து ஆற்றிய சமூகத் தொண்டு தமிழ்ப் பெரு மக்களுக்குக் கிடைத்தது.

இவர் சமயத் தொண்டிலும் இறங்கி அக்கமணியும் தெய்வத் திருநீறும் தரித்து ஆற்றிய சொற்பொழிவுகள் பல. காரைக்குடியில் பலர் இதை எனக்குச் சொல்லிய துண்டு. இவரது நட்பு எனக்கு ஏற்பட்ட பிறகு தம் சமயப்பணியை எனக்குச் சொன்னார். ஒரு நாள் நான் அமராவதிப் புதூர் மகளிர் இல்லத்தில் (1952) பல விஷயங்களைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்த பொழுது திடீரென்று என்னை நோக்கி, "ரெட்டியார் வாள்! சுயமரியாதைக்காரனான என்னை என்ன வென்று நினைக்கின்றீர்கள்? நெற்றியில் ஒன்றும் அணிய வில்லை என்பதால் கடவுள் நம்பிக்கை அற்றவன் என்று கருதுகின்றீர்களா? (என் நெற்றியிலிருந்த திருநீற்றுக் காப்பும் குங்குமப் பொட்டும் இவ்வாறு பேசத் தூண்டி யிருக்க வேண்டும்). எனக்குக் கடவுள் நம்பிக்கை உண்டு. நான் நாளொன்றுக்கு அணிந்த திருநீற்றின் எடை ஐந்து பலம் இருக்கும். கழுத்தில் நிரந்தரமாக ஓர் அக்கமணி திகழும். சிறப்பான நிகழ்ச்சியின் போது முக்கால் கிலோ எடை அக்கமணி மாலை தலையிலும் கழுத்திலும் பொலி யும். திருவாசகம், தேவாரம், பெரியபுராணம் இவைபற்றி எண்ணற்ற பேச்சுகள் நிகழ்த்தியிருக்கின்றேன். அவை இப்போது 'பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்ல மெல்லப் போயின.' ஆஷாடபூதிகள் நிறைந்த இவ் வுலகில் இவை பயன்படா என்று நினைத்து இவற்றைக் கைவிட்டேன். வைதிகப் போர்வை பயன்படாது என்று கருதி, அதனைத் துறந்து எந்தப் போர்வையுமின்றி நேர்மையாகப் பணியாற்றி வந்தேன். இப்போது எல்லாவற்றையுமே துறந்து தமிழ்ப் பணியிலும் இறங்கி விட்டேன்........." என்று வேகமாகப் பேசி என்னை உணர்ச்சி வசப்படுத்தி விட்டார். இப்போது

முருகபபனாரின உளளம (சொருபம) எனககுத தெளி வாகியது

இபபடிப பலநிலைத தொணடுகடகுப பின இலககியப பணியில இறஙகும தருணததிலதான இவருடைய நடபு எனககுக கிடைததது யானை துறையூரை விடடுக காரைககுடி வநதது முதல இவருடன நெருஙகிப பழகும வாயபபு கிடைததது இநநிலையில கமபராமாயணததைச செமமைபபடுததும பணியில இறஙகினார எனனையும வேறு சில புலவாகளையும இதில ஈடுபடுததினார பெரும புலவா ராய சொ அவாகளின தலைமையில இச சீாதிருததப பணி நடைபெறறது இவா கருததுபபடி கமபனைப புகழவதில தமிழகம முனனணியில நிறகினறது 'கலவியிற பெரியவா கமபா', 'கமபா வீடடுக கடடுததறியும கவிபாடும' எனற தொடாகளே இதறகுச சானறுகளாகும இவரைக கவிச சககரவாததி எனறு போறறும அளவுககு இவா புகழ ஓஙகியது இநத வகையில கமபருககுக குறைவிலலை இரணடாம உலகத தமிழ மாநாடடின போது கமபருககுக கடறகரையில சிலையே எழுபபியுளளது தமிழக அரசு இஙஙனம தமிழகததில பெரியோாககுப பாராடடு நடககும புகழ பெருகும கோயிலும கடடபபடும கோயிலில ஆறு காலப பூசைககும ஏறபாடுகள செயயபபடும எநதப புலவரும யாரும கமபரை 'மடடமான கவிஞன' எனறு கூறுவதுமிலலை கருதுவதுமிலலை கமபருடைய ஒபபறற காவியம — கமபராமாயணம — சீாகெடடிருபபதை நோசகினால 'நெஞசு பொறுககு திலையே' எனற மனககுமுறலதான ஆனால இநத இழிநிலைககு புலவாகள காரணமலலா எனபதையும முருகபபா ஒபபுக கொளளுகினறாா

சீாதிருததப பணியில இறஙகுவதறகு முன இவா கூறியவை 'கமபா காவியம எனற பூஞசோலை காடடு விலஙகுகளின மேயசசலிடமாகிக கிடககினறது அது மடடுமினறி, அஙகு உயாநிலையிலுளள கனி மரஙகளும

பூஞ்சோலைகளும் இருந்த இடங்களில் கள்ளியும் கற்றாழையும் முளைத்துக் கிடக்கின்றன. இடை இடையே எத்தனையோ அழகாகக் கனி மரங்களும் பூஞ்செடிகளும், மேடைகளும், ஓடைகளும் இன்பம் சொரிந்து கொண்டிருப்பதையும் காண முடிகின்றது. இவற்றைப் புலவர்கள் கண்டு மகிழ்கின்றனர்; அநுபவித்துக் களிக்கின்றனர். அங்கே வளர்ந்து நிற்கும் முட்செடிகளும் மரங்களும், புதர்களும் வெட்டி சாய்க்கத்தக்கவை என்பதைத் தெரிந்தும் மனம் வராது தவிக்கின்றனர்; துணிவு பெறாது திண்டாடுகின்றனர்; ஆயினும்இதன் முடிவு? இந்த நூல் இப்படியே மக்கள் நெருங்க முடியாத காடாக இருக்க வேண்டியது தானா? அல்லது அவற்றை வெட்டி எறிந்து, மக்கள் யாவரும் எளிதாக உள்ளே சென்று கம்பன் கவிதை மலர்களை மணக்கும்படிச் செய்ய வழி வகுப்பதா? இதைப் புலவர் பெருமக்களும் சுவைஞர்களும், பெருமக்களும் ஊன்றிச் சிந்திக்கவேண்டும்'' என்று கூறி நம்மையெல்லாம் யோசிக்கச் செய்கின்றார்.

ராய. சொ அவர்கள் தலைமையில் கூடிய புலவர் குழுவும் இதனைச் சிந்தித்துச் சீர்த்திருத்தப் பணியின் இன்றியமையாமையை ஒப்புக் கொண்டது. வாரந் தோறும் சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் கூடக் காவியத்தில் கவிதைகளுடன் கலந்துள்ள 'வெள்ளிப்பாடல்களை' இனம் கண்டு நீக்கவேண்டும் என்று முடிவுசெய்தது. இயன்றவரைக் கிளைக் கதைகள் பற்றிய செய்திகளைக் குறைத்துக்கொண்டு காவிய நடை குன்றாதவாறு காவிய மாந்தர்களின் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து அறிந்து கொள்வதற்கு ஏற்பக் காவியத்தைச் சுருக்கிக் காட்ட வேண்டும் என்றும் முடிவு செய்தது. அடியிற்கண்ட நியமங்களை நினைவிற்கொண்டு பணி தொடங்க வேண்டும் எனக் கருதியது.

(1) கதை தொடர்புற அமைதல்

(2) முக்கிய நிகழ்ச்சிகள் அனைத்தும் அவற்றுக்குரிய பூர்வாங்கத்துடன் காணப்படுதல்.

(3) கதை மாந்தர்களின் தனிச்சிறப்பு விளங்குதல்

(4) நூலின் அமைப்பு, பெருமை பெருங்காப்பியத்தின் சிறப்பியல்புகள் முதலியன நன்கு புலப்படுதல்

(5) சுவையுடைய கவிதைகள் அனைத்தும் உளவாதல்

இவை போன்ற வேறு சில நியமங்களையும் இயன்றவரை தழுவிச் சுருக்கம் அமைதல் நலமாகும் என்று முடிவு செய்யப் பெற்றது.

□ □ □

நான் காரைக்குடி சென்ற தொடக்கக் காலத்தில் துறையூர் வக்கீல் அரங்கசாமி ரெட்டியார் தம் மகன் (நான்காவது மகன்) சுந்தரராஜனை மகளிர் இல்லத்தில்—குழந்தைப் பள்ளியில் சேர்க்கக் காரணமாக இருந்தேன். சுந்தரராஜன் சிறந்த மாணவராகத் திகழ்ந்து சென்னை கிறித்துவக் கல்லூரியில் M.A. (ஆங்கிலம்) படித்து இந்தியப் போலீஸ் சர்வீஸ் (IPS) தேர்வில் தேர்ச்சிப் பெற்றுப் பெரிய பதவியில் இருக்கின்றார். தந்தையார் திருமகனாரை 'அவையத்து முந்தி இருக்கச் செய்தார்.' மகனோ 'இவன் தந்தை என்நோற்றான் கொல்?' என்று பலர் பேசக் காரணமாக இருப்பவர். இந்தத் தொடர்பால் வக்கீல் அரங்கசாமி ரெட்டியார் சொ. முரு. குடும்பத்திற்கே யோசனை கூறும் வழக்குரைஞராகவும் இருந்து வந்தார்.

1954-வாக்கில் சொ.முரு.வின் உடல் நிலை தளர்ந்தது. ஏதோ நோய்வாய்ப் பட்டார். இவர் மகன் வீரபாண்டியன் காரைக்குடி அழகப்பர் பொறியியற் கல்லூரியில் படித்து கொண்டிருந்தசமயம். சொ. முரு.வின் முகத்தில் கவலைபடர்ந்திருந்ததை நேரில்கண்டேன். காரணம்வினவி

னேன். மனம் விட்டுச் சொன்னார். ''ரெட்டியார்வாள் அம்மாவுக்கு (மரகதவல்லி அம்மையார்) முன்னர் நான் இவ்வுலகத்தைத் துறப்பேன் என்று என் உள்மனம் அறிவிக்கின்றது. அதனால் கவலை; செட்டிநாட்டு மரபுப்படி அம்மா 'சின்னவீடு.' நான் அமராவதிப்புதூர்-மகளிர் இல்லத்தில் மரித்தால், செட்டியார் பெருமக்கள் வீட்டை ஆக்ரமித்து அம்மாவை வெளியேற்றிவிடுவார்கள். பிணத்தின் பக்கம் இருப்பதைக் கூட அநுமதியார்கள். அம்மா என்னுடன் நீண்ட நாள் வாழ்ந்தவர்கள். என்னுடைய செயல்களில் எல்லாம் கூட இருந்தவர்கள்- என்னுடைய மனைவி காரைக்குடியில்தான் (ஆச்சி) இருக்கின்றாள்; குழந்தைகள் இல்லை. திருமணமாகிச் சில ஆண்டுகள் தான் ஆச்சியுடன் வாழ்ந்தேன். மனமொத்த வாழ்க்கை இல்லாததால் பிரியநேரிட்டது. நான் இறந்த அன்றே ஆச்சி வீட்டிற்கு வந்து விடுவார்கள். அவர்களைக் கொண்டு வந்து பிணத்தின் பக்கத்தில் இருக்க வைத்து (பின்னர் வீட்டிலும் நிரந்தரமாகத் தங்க வைத்து) விடுவார்கள். பின்னர் வீட்டிற்கும் சொத்திற்கும் உரிமையாக்கி விடுவார்கள். அம்மாவின் கதி அதோகதிதான். வீட்டைவிட்டுத் தெருவிற்கு ஓட்டிவிடுவார்கள், இப்போது தீராத கவலை இதுதான்'' என்று கூறிக் கண் கலங்கினார். ''வக்கீல் அரங்கசாமி ரெட்டியாரை வரவழைக்கட்டுமா? அவர் யோசனைப்படி செயலாற்றுவோம்'' என்றேன். அதற்கு அவரும் ஒப்புக் கொண்டார்.

வக்கீல் யோசனைப்படி சென்னைக்குப் போய் ஓர் இல்லத்தை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அதில் வாழ்ந்து வந்தார். சொத்துக்களையெல்லாம் தனக்குப்பின் அம்மாவுக்குச் சேரும்படி எழுதி வைத்து விட்டார். ஒரு சில ஆண்டுகளில் இறைவனடி சேர்ந்தார். உடலை அடக்கம் செய்தல் முதல் அனைத்தும் சுமுகமாக நிறைவேறின. அவர் மனம் போல அம்மையார் வாழ்வு அமைந்தது. சொ.முரு. இருந்தவரை அவர் நிழலில் இனிமையாக வாழ்ந்து அவர்

மறைந்த பிறகு மகன் நிழலில் இனிமையாக வாழ்ந்து வரு கின்றார். பத்து ஆண்டுகட்கு முன் பேத்தியின் திருமணத் தைக் கண்டுகளித்தார். நானும் அரங்கசாமி ரெட்டியாரும் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டோம். இத் திருமணம் 1978-ல் கே. கே. நகரில் நடைபெற்றதாக நினைவு.

இறுதியாக எட்டு ஆண்டுகட்கு முன்னர் (1981) அம்மை யாரையும் வீரபாண்டியனையும் அண்ணா பொறியியல் பல்கலைக்கழக வளாகத்தில் பார்த்தேன். உத்தியோகத்தில் இருக்கும் ஒருவருக்கு B.E. படிக்க (மாலை நேரக் கல்லூரி யில்) இடம் வாங்கும் விஷயமாகச் சென்றிருந்தேன். இட மும் கிடைத்தது; அவரும் B.E. பட்டம் பெற்று விட்டார். இப்போது வீரபாண்டியன் அமெரிக்காவில் வேலை பார்த்து வருகின்றார். அம்மா இருக்கும் இடம் தெரிய வில்லை. பேத்தியுடன் இருக்கின்றாரா? அல்லது மகனுடன் போய்விட்டாரா? என்பது அறியக்கூடவில்லை. உடல் பற்றிய பந்த பாசங்கள் எல்லாம் இப்படித்தான். கீதையும் இதைத்தானே உணர்த்துகின்றது?

☐ ☐ ☐

1953-இராமகாதை-பாலகாண்டம் உரையுடன் வெளி வந்தது. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர் களின் முகவுரையும் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை யவர்களின் அணிந்துரையும் நூலை அலங்கரிக்கின்றன. நூல் கம்பர் கவிச்செல்வத்தில் ஊறித் திளைக்கும் ராய. சொ. அவர்கட்கு உரிமையாக்கப் பெற்றுள்ளது. இதன் வெளியீட்டு விழா காரைக்குடி மீனாட்சி மகளிர் உயர் நிலைப் பள்ளியில் நடை பெற்றது. பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் விழாவிற்குத்தலைமைதாங்க வள்ளல் அழகப்பர் நூலை வெளியிட்டார். அறிஞர்கள் நூலைப் பாராட்டிப் பேசினார்கள்; சொ. முரு. அவர்கள் பணித்தபடி அடியேனும் 15 மணித்துளிகள் பேசினேன்.

முரு. அவர்கள் தம்மிடமிருந்த தங்கத்தை (நகைகளாக இருந்தவற்றை) உருக்கி (150 சவரன் இருக்கும்) பால

காண்டம் நூலுக்கு அட்டையாக்கிப் போற்றினார். தம்மிடம் உள்ளஉடல், பொருள், ஆவி அனைத்தையும் கம்ப னுக்கு—கம்பன் காவியத்திற்கு —அர்ப்பணித்ததைக் கண்டு அனைவரும் வியந்தனர். பொதுவாக மக்கள் வள்ளல் நூல் வெளியிட்டதைக்கண்டு வள்ளல்தான் 150 சவரன் தங்கத் தையும் தந்திருப்பாரோ என்று நினைக்கலாம் என்று கருதி நூல் வெளியீட்டுப் பேச்சிலே, வள்ளலே தாம் சவரன் அளிக்கவில்லை என்றும், முரு. அவர்களே தம்மிடமிருந்த தங்கத்தை நூலின் அட்டையாக்கிக் கம்பனைப் பெருமைப் படுத்தினார் என்றும் தெளிவுபடுத்திவிட்டார். ஆகவே இதுபற்றிப் பேச்சு எழவில்லை. ஆயினும் கூட்டத்திற்கு வந்திருந்த சிலர், 'இப்படித் தங்கத்தால் அட்டைபோட் டால்தான் இராமகாதைக்குப் பெருமையா?' என்று முணு முணுத்தனர். கூட்டம் கலையும் போது சிலர் உரத்தும் பேசினர். இதைக்கேட்ட சா. க. ''இஃதெல்லாம் அவரவர் மன நிலை; முரு. அவர்கள் கம்பனுக்கே அனைத்தையும் அர்ப்பணிக்கின்றார் என்பதற்கு இஃது ஓர் அறிகுறி. நாம் திருவாசகத்தை பூசையில் வைத்து வழிபடவில்லையா? கோயிலில் தேங்காய் உடைத்துப் பழம் வைத்து வழிபட வில்லையா? அப்பூதி அடிகள் தாம் வைத்த தண்ணீர்ப் பந்தல், தனது இல்லம் தம் பிள்ளைகள் இவர்கட்கெல்லாம் 'திருநாவுக்கரசு' என்று பெயரிட்டுப்போற்றினாரல்லவா? இப்படி எல்லாம் பேசி ஒருவர் செயலைத் தாழ்வு படுத்த வேண்டாம்'' என்று கூறி அவர்கள் வாயை அடைத்தார்.

இதனை அடுத்து அயோத்திக் காண்டமும் வெளி வந்தது உரையுடன். ராய சொ.வின் அணிந்துரை நூலை அலங்கரிக்கின்றது. நூலின் பிற் சேர்க்கையாக அமைந்த கிளைக் கதைகளை அடியேன் எழுதி அகர வரிசைப் படுத்தித் தந்து இப்பணியில் பங்கு கொள்ளும் பேறு பெற்றேன். பின்னர் எல்லாக் காண்டங் களும் உரையுடன் வந்தனவா? என்பது தெரியவில்லை. ஆனால் தொகுத்த பாடல்களின்மூலம் மட்டிலும் வெளி

வந்திருப்பதாக நண்பர் ஒருவர் கூறினார். அத்தொகுதியை நான் பார்க்கவில்லை, நானும் வேறு பணியில் ஆழ்ந்து போனதால் இதையெல்லாம் கவனிக்க முடியவில்லை. இந்நிலையில் திருப்பதி போன பிறகு என் பணியின் திசையே மாறியது. சிந்தனையும் வேறு திசையில் திரும்பி விட்டது.

குமிழி-115

## 8. சொ. முரு : இராம காதை

ஒரு சனிக்கிழமையன்று ராய. சொ. அவர்கள் தலைமையில் புலவர் குழு கூடியது. இதில் அடியேன், திரு. க. தேசிகன் (அழகப்பா கல்லூரித் தமிழாசிரியர்), திரு பூ. அமிர்தலிங்கம் (காரைக்குடி நகராண்மைக் கழக உயர் நிலைப் பள்ளித் தமிழாசிரியர்) கூடியிருந்தோம். சொ. முருகப்பாதான் பிரச்சினைகளை எழுப்புவார். வாதங்கள், எதிர்வாதங்கள் எல்லாம் நடைபெறும். ஏற்றுக்கொள்ளத் தக்க முடிவு உருவாகும். ராய. சொ. பச்சைக் கொடி காட்டுவார். முருகப்பாவும் அதை ஏற்றுக் கொள்வார். எல்லோரும் ஒருமனதாக அதை ஒப்புக் கொள்வோம். இக் கூட்டத்தில் கம்பன் காவியத்தின் பெயர் என்னவாக இருக்கும் என்று ஆராய்ச்சி நடைபெற்றது. பலர் பலவாறாகக் கூறினர். முருகப்பா தமது கருத்தை நிரல் பட அமைத்துப் பின்வருமாறு கூறினார்.

(1) 'கம்பராமாயணம்' என்று வழக்கிலுள்ள பெயர் நூலுக்குக் கம்பரால் இடப் பெற்றதன்று. இந்நூலிலுள்ள சொற்கள் தமிழ் மரபு கெடாமல் ஆளப் பெற்றிருப்பதைக் காண முடிகின்றது. இராமன், இலக்குவன்,

இராவணன் என்ற சொற்களைக் காண்க. வடமொழிச் சொற்கள் யாவும் தமிழ் மரபிற்கு ஏற்பவே அமைந்துள்ளன. எனவே கம்பன் + ராமாயணம் = கம்பனி ராமாயணம் என்று அல்லது கம்பவிராமாயணம் என்று வழங்கப் பெற்றிருத்தல் வேண்டும். அப்படி வழங்கப் பெறாமையால் கம்பர் இந்நூலுக்குக் கம்பராமாயணம் என்று பெயர் வைக்கவில்லை என்பது தெளிவு. அப்படி அவர் இதற்கு 'இராமாயணம்' என்று பெயர் வைக்கக் கருதினாலும் தன் பெயரை அதற்கு முன்னால் சேர்த்திருக்க மாட்டார். மேலும் அகச்சான்றாக 'ராமாயணம்' என்ற சொல் நூலிலும் இல்லை. பாயிரச் செய்யுட்களிலும் காணப் பெறவில்லை.

(2) வான்மீகி முனிவர் தான் எழுதிய இராம காதைக்கு 'ராமாயணம்' என்று பெயரிட்டார். அந்த நூலின் கதைப் போக்கு, அதன் தத்துவம், கவிதை முதலியவற்றை அநுபவித்த மற்றைய மொழிக் கவிஞர்கள் அதில் ஈடுபட்டு வியப்பெய்தினர். அதன் புகழை உணர்ந்து தங்கள் மொழியிலும் அப்படிப்பட்ட காவியம் ஏற்பட வேண்டும் என்று அவாவுற்றனர். இப்படி இராம காதையைப் பாடின புலவர்கள் பலர். இக்கதைக்கு பாஸ்கரகவி பிரதிமாநாடம் என்று பெயர் சூட்டினார். கம்பர் பெருமான் 'இராமகாதை' என்று பெயரிட்டார். துளசிதாசர் 'ராமசரித்திரமானஸ்' (இராமனின் சரித்திர மான தடாகம்) என்று பெயர் வைத்தார். என்ற போதிலும் இராம கதையை முழுதும் சொல்லும் பெரு வழக்குள்ள நூல்களையெல்லாம் இராமாயணம் என்றே தமிழ் மக்கள் வழங்கினர். இதுதான் எளிதாக விளங்குவதாக இருந்தது. 'ராமாயணம்' என்றால் அது வான்மீகி முனிவர் இயற்றின காவியம்தான். வேறு பலரும் 'ராமாயணம்' என்று தமது நூலுக்குப் பெயர் சூட்டவில்லை. பொது மக்கள் வழக்கில் 'ராமாயணம்' என்றால் இராமனுடைய கதையைச் சொல்வது என்ற கருத்து

அழுத்தமாகப் பதிந்து விட்டபடியால், எல்லாவற்றையுமே இராமாயணம் என்று வழங்கினர். 'ராமாயணம்' என்ற சொல்லுக்கு முன்னால் பாடினவர் பெயரையும் ஒட்டி விட்டனர். இந்த நியதியில் தான் வான்மீகி முனிவர் இயற்றிய 'ராமாயணத்தையும் 'வான்மீகி ராமாயணம்' என்று கூற வேண்டியதாகி விட்டது. எனவே, ராமாயணம் என்றாலே வான்மீகி முனிவரால் செய்யப் பெற்ற நூலின் பெயராகக் கொள்ள வேண்டியிருக்க, அப் படிக் கொள்ளாமல் அதையும் 'வான்மீகி ராமாயணம்' என்று குறித்துக் காட்ட வேண்டிய நிலைமையைத் தமிழ் நாட்டில் கம்பருடைய காவியம் செய்து விட்டது என்பது நுனித்து உணர வேண்டிய தொன்றாகும். இனி இந்த நூலுக்கு 'இராமகாதை' என்ற பெயரே பொருத்தமுடைய தாகும். சாற்றுகவிகள் இப்பெயரையே குறிப்பிடுகின்றன.

(3) இன்னொரு கருத்தும் ஈண்டு சிந்திக்க வேண்டிய தொன்று.

நடையில் நின்றுயிர் நாயகன் தோற்றத்தின்
இடைநி கழ்ந்த இராமாவ தாரப் பேர்த்
தொடைநி ரம்பிய தோம்அறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் ஊர்வயிற் தந்ததே
-தற்சிறப்பு-11

இதில் 'இராமாவதாரப் பேர்' என்று இருப்பதைக் கொண்டு கம்பர் இந்நூலுக்கு 'இராமாவதாரம்' என்று பெயர் வைத்திருக்கலாம் எனக் கருதப்பெறுகின்றது (வை. மு. கோ.). 'திருவவதாரப் படலம்' என்று யாரோ ஒருவர் பாட, அதற்கேற்பச் சாற்று கவியாக இப்பாடல் இருக்கக்கூடும். இராமாவதாரம்என்ற பெயர்அந்நூலுக்குப் பொருத்தமாகலாம். கம்பர் இராமாவதாரம் பாடினார் என்று ஒன்றும் இல்லை. யாரோ பாடிய 'இராமாவதாரம்' என்ற நூலைத்' திருவவதாரப் படலம்' என்று திருத்தி இதில் செருகியுள்ளனர்'' என்று கருதுவர் முருகப்பனார். மேலும் அவர் 'இராம' என்ற வடமொழிப் பெயரைத்

தமிழ் மரபுக்கு இணக்கித் தம்முடைய நூல் முழுவதும் ஆண்டிருப்பதைக் காண்கின்றோம். 'இராமன் என்னும் செம்மை சேர் நாமம் தன்னைக் கண்களால் தெரியக் கண்டான்''[1] என்பது குறிப்பிடத்தக்க சான்றாகும். ''இராமன் + அவதாரம் = இராமாவதாரம் என்று வடமொழிச் சந்தித் தொடராகி அதுவும் நூற்பெயராவது சிறிதும் பொருந்தாததாகும்'' என்று வற்புறுத்துவர்.

இன்னும் அவர் கருதுவது 'நடையில் நின்றுயர்' என்ற பாடலில் இராமாவதாரத்தைக் கம்பர் பாடினார் என்று கூறப் பெறவில்லை. அந்தப் பாடலைக் கம்பரே 'தற்சிறப்புப் பாயிரமாகப்' பாடினார் என்று கூறுகின்றனர். அதே பாயிரத்தில் மற்ற கவிகளில்,

நொய்தின் நொய்யசொல்
நூற்கலுற்றேன் (5)

வையம் என்னை இகழவும்
மாசு எனக்கு
எய்தவும் இது இயம்புவது (6)

இறையும் ஞானம் இலாதஎன்
புன்கவி (9)

என்று தன் கவியைப்பற்றிக் கூறிக் கொண்ட கம்பர் பெருமான் இக்கவியில் மட்டும்,

'தொடை நிரம்பிய தோமறு மாக்கதை'

என்று தன்னுடைய நூலைத் தானே ஏற்றிப் புகழ்ந்து கூறிக் கொண்டிருப்பாரா? என்பது சொ. முரு. அவர்கள் விடுக்கும் வினா. இது நம்மைத் திகைக்க வைக்கின்றது.

இம்பர் நாட்டிற் செல்வம்எலாம்
எய்தி அரசாண்டு இருந்தாலும்
உம்பர் நாட்டில் கற்பகக்கா
ஓங்கு நீழல் இருந்தாலும்

1. கிட்கிந்தை—வாலி வீடுற்ற படலம்-71

செம்பொன் மேரு அனையபுயத்
திறல்சேர் இராமன் திருக்கதையில்
கம்ப நாடன் கவிதையிற் போல
கற்றோர்க் கிதயம் களியாதே

—காப்பு-8

[இம்பர்நாடு-இவ்வுலகம்; உம்பர் நாடு-மேல் உலகம்; கா-காடு]

எண்ணிய சகாத்தம் எண்ணூற்
றேழின்மேல் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர்
தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை
பங்குனி உத்த ரத்தில்
கண்ணிய அரங்கர் முன்னே
கவியரங் கேற்றி னானே.

காப்பு-12

[சகாத்தம் — சாலிவாகன சகாப்தம்; நண்ணிய-பொருந்திய; பண்ணிய—இயற்றிய; கண்ணிய—மாலை சூட்டிய]

ஆதவன் புதல்வன் முத்தி
அறிவினை அளிக்கும் அண்ணல்
போதவன் இராம காதை
புகன்றருள் புனிதன் மண்மேல்
கோதவம் சிறிதும் இல்லான்
கொண்டல்மால் தன்னை ஒப்பான்
மாதவன் கம்பன் செம்பொன்
மலர்அடி சென்னி வைப்பாம்

—காப்பு (வை.மு கோ. விட்டது)

[ஆதவன்; புனிதன் — தூயவன்; மண் — பூமி; கோது—குற்றம்; கொண்டல்—மேகம்]

என்ற இந்த மூன்று பாடல்களிலும் 'இராமன் திருக்கதை,' 'இராமகாதை' என்று கம்பராமாயணப் பதிப்புகளில் குறிப்பிடப் பெற்றிருப்பதையும், நூலினுள் கம்பரால் அவையடக்கமாகப் பாடப் பெற்ற.

ஓசை பெற்(று)உயர் பாற்கட லுற்(று)ஒரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அரையல் உற்றேன்இது
ஏசில் கொற்றத்(து) இராமன் கதையரோ
—தற்சிறப்பு-4

என்ற பாடலிலும் 'இராமன் காதை' என்று குறிப்பிடப் பெற்றிருப்பதையும் எடுத்துக் காட்டிக் கம்பர் தன் காவியத்திற்கு 'இராமகாதை' என்றே பெயர் சூட்டி யிருக்க வேண்டும் என்று தம் கருத்திற்கு அரண் அமைத்துக் கொள்வார்.

கம்பரின் 'இராமகாதை' உலகில் பயிலத் தொடங்கிய பிறகு தமிழகத்தில் வால்மீகிராமாயணப் பிரியர்கள் அதனை அதிகமாகப் பரிமளிக்கச் செய்ய முற்பட்ட பொழுது இரண்டு கூட்டத்தாரின் பிரசாரத்தில் ஒன்று வான்மீகி ராமாயணம் என்றும், மற்றொன்று கம்பராமாயணம் என்றும் வழங்க வேண்டிய தேவை ஏற் பட்டிருக்கின்றது என்றும், இது மக்களின் வாய்வழக்கில் மட்டுமின்றி நூலுக்குப் பெயராகவும் ஏற்பட்டு விட்டது என்றும் கூறி 'கம்பராமாயணம்' என்று பெயர் ஏற்பட்டதற்கு அமைதி காட்டுவர். இங்ஙனம் ஏற்பட்ட பிரசாரத்தில் பல படியாகப் புதுக்கவிகளும் செருகப் பெற்று அவை வளர்ந்தேறி அசலைப்போல் பன்மடங்கு 'செருகு கவிகள்' கலந்த பிறகு 'இராமகாதை' என்ற உரிமைப் பெயரை வைத்து வழங்க மனம் ஒவ்வாமல் 'கம்பராமாயணம்' என்றே இதுவும் வழங்கப்படட்டும் என்று விட்டிருக்கலாம் என்று 'கம்பராமாயணம்' என்று வழக்கில் வந்தமைக்குக் காரணமும் காட்டுவர்.

இங்ஙனம் காட்டும் சொ. முரு.வின் வாதம் நம்மை அவர் கருத்தை ஒப்புக் கொள்ள வைத்து விடுகின்றது.

காண்டங்கள்: நூலில் காண்டங்கள் வகுக்கப்பெற்றிருப்பதைப்பற்றியும் இவர் கருத்து தெரிவிக்கின்றார். பொதுவாகக் காண்டங்களின் பெயர்கள் கதை நிகழும் இடத்தையொட்டியே கொடுக்கப்பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்திலும் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்று கதை நிகழும் இடங்களைக் கொண்டே வகுக்கப்பெற்றிருப்பது ஈண்டு நினைக்கத் தக்கது. அயோத்தி, ஆரணியம், கிட்கிந்தை ஆகிய மூன்று காண்டங்களும் இடங்களைக் குறிக்கின்றன. பாலகாண்டம் அயோத்தியிலும் மிதிலையிலும், செல்லும் தடங்களிலும் நிகழ்வதால் அதற்கு இராமனின் பருவம், குறித்துப் பெயர் ஏற்பட்டிருப்பது பொருத்தமாக அமைந்துவிடுகின்றது. இங்ஙனமே கடற்கரையிலும், இலங்கையிலும் செல்லும் வழிகளிலும் நிகழ்வதால் ஓர் இடப் பெயரைக் கொடாமல் 'சுந்தர காண்டம்' என்று பெயரிடப் பெற்றுள்ளது போலும் என்று ஒன்றும் கூறாமல் விட்டுவிடுகின்றார். இதற்குப் பலர் பல காரணங்களைக் கூறினும், (1) இராமன் பிராட்டி ஆகிய இருவருடைய அழகு இனிது கூறப்பெற்றிருப்பதாலும், (2) பிரிவுத் துயரால் வருந்திய சீதா ராமர் இருவரும் ஒருவருக்கொருவர் நலனை எண்ணி மகிழ்வதாலும் (3) ஏனைப்பகுதி சரிதைகளின் புணர்ப்புகளில் இப்புணர்ப்பு மகிழ்ச்சியைத் தருவதாலும், (4) அநுமனின் மனத்தில் சுந்தர மூர்த்திகளாகிய இருவரும் உறைவதாலும் 'சுந்தர காண்டம்' எனப் பெயர் வந்தது என்று கருதலாம். யுத்த காண்டத்தின் முக்கியப்பகுதி முழுவதும் இலங்கையிலேயே நடைபெற்றிருப்பதால் இதற்கு 'இலங்கைக்காண்டம்' என்ற பெயர் பொருத்தமாக இருக்கும் என்பது சொ. முரு.வின் கருத்து.

படலங்கள்: படலங்களின் பெயர்களில் ஏராளமான பாட பேதங்கள் உள்ளன. இன்றுள்ள அச்சுப்படிகளிலும்

ஏட்டுப்படி பலவற்றுள்ளும் காணப்படும் படலங்களின் பெயர்கள் 260 எனக் கணக்கிட்டுள்ளார் முருகப்பனார். ஆனால், இவற்றுள் 113 பெயர்களைத்தான் இதுவரை அச்சிட்டவர்கள் எல்லோரும் கைக் கொண்டுள்ளார்கள். இராமன் பக்கமுள்ளோர் அறவழிச் செல்வோர்; இராவண னுடைய பக்கமுள்ளவர் மறவழிச்செல்வோர். இராவணன் பக்கமுள்ளோர் இறப்பு 'வதை' என்று கூறப்படுகின்றது. இந்த முறைப்படி தாடகை, கரன், கும்பகருணன், இந்திர சித்து, இராவணன் முதலியோருடைய இறப்புப் படலங் கள் 'வதைப்படலம்' என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. இருபக்கங்களிலும் இல்லாமல் நடுவே இறந்தவர் இருவர். ஒருவர் சடாயு; மற்றொருவர் வாலி. சடாயு வதைப்படலம் என்று இல்லை. இராவணன் சங்கரன் தந்த வாளால் சடாயுவை வெட்டிக் கொன்றாலும் 'சடாயு உயிர் நீத்த படலம்' என்றே படலப் பெயர் தரப்பெற்றுள்ளது. வாலி இராவணனைச் சேர்ந்தவன் அல்லன். எனினும் அவன் இறந்த படலத்திற்கு 'வாலிவதைப் படலம்' என்ற பெயர் தரப்பெற்றுள்ளது. முருகப்பனார் இப்பெயர் பொருத்த மன்று என்கின்றார். இராமனது அம்பினால் பட்டவர்கள் யாவரும் வதைப்பட்டவர் என்ற பிறழ்ந்த எண்ணத்தால் ஏற்பட்ட தவறு என்பதாகக் கொள்வர். இராவணனது கூட்டத்தினர் பலரையும் இராமனின் சரங்கள் தாம் கொன்றன. இராமனை நேரே அவர்கள் கண்டனர். அவனைப் பார்த்து மிகவும் பாராட்டி வியந்தவர்களும் பலர். ஆனால் அவர்களில் எவரும் மேலுலகம் சென்ற தாகச் சொல்லப் பெறவில்லை. வாலியை இராமனது அம்பு கொன்றது என்றாலும்,

> வானுக்கு அப்புறத்து
> உலகன் ஆனான்.[2]

என்று கூறப் பெற்றுள்ளது. எனவே வாலியின் மரணம் வதையன்று, அதனால் 'வாலிவதைப் படலம்' என்று

2. வாலி வீடு-152

வழங்காமல் 'வாலி வீடுற்ற படலம்' என்று பெயரிடுவதே பொருத்தம் என்பது முருகப்பனாரின் கருத்து.

பாடல்கள் : இராமகாதையில் கம்பர் பாடிய பாடல்களின் தொகை என்ன என்பது தெரியவில்லை; தெரிந்து கொள்வதற்கு வழியும் இல்லை. வான்மீகி முனிவர் 24,000 சுலோகங்களில் தம் காவியத்தை அமைத்தார் என்றும் அதைக் கம்பர் 12,000 செய்யுட்களில் பாடினார் என்றும் ஒரு கருத்து உண்டு. அப்படியானால் 'உத்தர காண்டமும்' கம்பர் பாடினார் என்று கொள்ள வேண்டி வரும்,

கரைசெறி காண்டம் ஏழு;
கதைகள்ஆ யிரத்தெண் ணூறு;
பரவுறு சமரம் பத்து;
படலம்நூற்று இருபத்து எட்டே;
உரைசெயும் விருத்தம் பன்னீர்
ஆயிரத்து ஒருபத்து ஆறு;
வரம்மிகு கம்பன் சொன்ன
வண்ணமும் தொண்ணூற்று ஆறே.

—காப்பு (வை. மு. கோ. தள்ளுபடி செய்தது.)

என்ற பாடல்தான் இவ்வாறு கொள்வதற்கு ஆதாரம். உத்தரகாண்டம் ஒட்டக்கூத்தர் பாடியதாக உறுதியாய் விட்டது. ஆகவே கம்பர் பாடியது யுத்தகாண்டம் வரை தான். கம்பராமாயணத்தின் ஏட்டின் இறுதியில் இப் பாடலைக்கோத்து வைத்திருந்ததால் வந்த வினையாகும் இது. எல்லாம் சேர்ந்து அச்சுக்கு வந்த பாடல்கள் :

| | |
|---|---|
| பாலகாண்டம் | 1399 |
| அயோத்திக் காண்டம் | 1212 |
| ஆரணிய காண்டம் | 1203 |
| கிட்கிந்தைக் காண்டம் | 1053 |
| சுந்தர காண்டம் | 1334 |
| யுத்த காண்டம் | 4358 |
| மொத்தம் | 10,559 |
| உத்தர காண்டம் | 1,510 |
| ஆக | 12069 |

இது முருகப்பனார் கண்டறிந்த கணக்கு. கம்பர் பாடிய காண்டங்கள் (கரை செறி காண்டம் எழு—என்ற பாடலின் படி) 7. படலங்கள் 128; பாடல்கள் 12016. இது ஒரு காலத்தில் கொள்ளப்பட்ட கருத்து. யுத்த காண்டம் வரை படலங்கள் 113-உம் உத்தர காண்டத்தி லுள்ள படலங்கள் 17-உம் சேர்ந்தால் மொத்தம் 130 படலங்கள் ஆகும். உத்தர காண்டம் கம்பர் பாடவில்லை என்று பின்னாளில் உறுதிப்பட்டு விட்டபடியால் மேற் குறிப்பிட்ட பாடல் தொகை செல்லாக் காசு ஆகி விடுகின்றது. இப்போது கம்பராமாயணத்தில் யுத்த காண்டம் வரை 6 காண்டங்களில் உள்ள படலங்கள் 113; பாடல்கள் 10, 559.

படலங்களில் உள்ள பாடல்கள் வரிசை மாறித் தாறு மாறாக இருப்பதற்கு ஒரு கணக்கே இல்லை. ஒவ்வொரு படலத்திலும் பாடல் வரிசை மாறி மாறி இருப்பது சர்வ சாதாரணம்.

# 9. டி. கே. சி: பாட பேதங்கள்

தமிழகத்தில் எந்த நூலை எடுத்தாலும் பாடபேதங்களுக்குக் குறைவில்லை. வை. மு. கோ. கம்பராமாயணத்தில் ஒவ்வொரு பாடலின் கீழும் பாடபேதங்கள் காட்டப்பெற்றுள்ளன. பாடலின் கீழ் 'பிரதிபேதம்' (பி-ம்) என்று போடப் பெற்றிருப்பதைக் காணலாம். மர்ரே கம்பெனி ராஜத்தின் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பதிப்பில் ஒவ்வோர் ஆயிரத்தின் இறுதியிலும் பிற்சேர்க்கையாக 'பாடரூபபேதங்கள்' என்ற தலைப்பில் பெரிய பட்டியல் தரப் பெற்றிருப்பதைக் காணலாம். பெரும்பாலும் தமிழ்நூல் பதிப்பில் இந்தப் பாட வேற்றுமைகள் ஒரு பொது அம்சமாக அமைந்து விட்டன. அச்சுப் பொறி இல்லாத காலத்தில் மக்கள் பலர் பாடல்களைப் பாடியும் ஏடுகளில் எழுதியும் வந்தார்கள். பாடியவர்களும் எழுதியவர்களும் சிலர் புலவர்களாக இருந்திருக்க முடியாது. 'எழுதியவன் ஏட்டைச் கெடுத்தான்; படித்தவன் பாட்டைக் கெடுத்தான்' என்ற பழமொழியே பாடவேற்றுமைகள் ஏற்பட்டதன் காரணத்தை விளக்குவதாகும்.

துறையூரில் நான் இருந்தபோது என் அரிய நண்பர் திரு. முத்துவேல் பிள்ளை காரைக்குடிக் கம்பன் திருநாளுக்குப் போவதற்கு ஆற்றுப்படுத்தியபோது டி.கே.சி. அவர்களுக்கு என்னை அறிமுகப்படுத்தி வைத்த நாள் முதல் அவர்மீது தனிப்பட்ட மரியாதையும் அன்பும் கொண்டு விட்டேன். இந்தத் 'தாடியில்லாத் தாகூர்' (கவிமணி வாக்கு) என மனத்தில் நிலையான இடம் பெற்று விட்டார். அவரை அடிக்கடி பார்த்துப் பழகும் வாய்ப்பு இராவிட்டாலும் அவர் நூல்களைப் படிக்கும் பழக்கமுடையவனானேன். டி.கே.சி.யின் 'கம்பராமாயணத் திருத்தங்கள்' என் கவனத்திற்கு வந்தன. அவர் பதிப்பித்த இராமாயணப் பதிப்புகளைப் பார்த்தேன்; படித்தேன். கம்பர் காவியம், கம்பர் வாழ்ந்த

காலத்திலேயே பலராலும் படிக்கப் பெற்று பிரசாரம் செய்யத்தக்க ஒரு நூலாகி விட்டது. இந்தக் காவியத்தில் தமிழக மக்கள் அளவு கடந்து ஈடுபட்டனர். இராமகாதை மக்கள் உள்ளத்தைக் கவர்ந்த மாதிரி ஏனைய நூல்கள் கவரவில்லை, ஏன்? இன்றும் அதே நிலையைத்தானே காண்கின்றோம்?

பக்தியினாலும், பிழைப்பின் நிமித்தமும், பெருமைக் காகவும், கல்விநயத்திற்காகவும் பாராட்டிப் பிரசாரம் செய்ய முற்பட்டவர்கள் தங்கள் தங்கள் ஏடுகளில் பாடல் களை எழுதி வைக்கும்போது இந்தப் பாட வேற்றுமைகள் சேர்ந்து விட்டன. ஒவ்வொருவர் ஏட்டிலும் அவரவர் விருப்பத்திற்கேற்பப் பாடல்களைத் திருத்தி ஏடுகளில் எழுதிக் கோத்து வைத்துக் கொண்டனர். சில பாடல் களைப் படிக்கும்போது 'அபத்தக் களஞ்சியமாகக்' காட்சி அளிக்கும். கம்பனையே குறைத்துக் காட்டவும் துணை செய்வனவாகவும் அமைந்து விடும். பிற் காலத்தில் வை. மு. கோ. போன்ற பெரும் புலவர்கள் தாம் விரும்பும் பாடத்தைப் பாடல்களில் சேர்த்தும், ஏனைய வற்றை அந்தப் பாடல்களின் கீழ் 'பி-ம்' என்ற தலைப் பிலும் காட்டியுள்ளனர். எனவே 'பாட வேற்றுமை' என்ற கருத்து அனைவருமே ஒப்புக் கொண்ட ஓர் உண்மையாகி விட்டது.

இந்தப் பாடல்களைப் படிக்கும் டி. கே சி. போன்ற சுவைஞர்கள் கம்பனைப் போன்ற ஒரு பெருங்கவிஞன் எக்காரணத்தை முன்னிட்டும் இவ்வளவு கீழான நிலையில் பாடியிருக்க முடியாது என்று எண்ணுவது இயல்பு. உண்மையும் அதுதான். ஆகவே, கம்பன் எப்படிப் பாடியிருக்க வேண்டும் என்று தெரிந்து கொள்ள வேண்டியது தமிழன் ஒவ்வொரு வனுடைய கடமை. கவிதைகளில் ஓர் எழுத்தோ சொல்லோ மாறிவிழுந்து விட்டால் அதைப்படிக்கும் சுவைஞனுக்கும் அஃது உண்மையில் வேதனையைக் கொடுக்கும் என்று சொல்லத் தேவை இல்லை. கம்பன்

கவிதையைப் பாடிப்பாடி அதன் ஒலி நயத்தில் (Rhythm) தன்னை மறந்திருக்கும் ஒரு பண்பட்ட உள்ளம் ஒரு தவறான பாடத்தை எப்படிச் சகிக்க முடியும்? நல்ல கவிதையையே அநுபவித்து வந்த டி. கே. சி., எந்த இடத்தில் ஒலி நயம் குலைகின்றது, எங்கே கவிதையின் உருவமே (Form) சிதைகின்றது என்பதை மிகவும் எளிதாக அறியக் கூடிய ஆறாவது புலனை உடையவர். அப்படிப் பட்ட கவிதைகள் அவர் காதில் ஒலிக்கின்றபோது அவர் முகம் சுழிக்கின்றார். உள்ளத்தில் வேதனை உறுகின்றார்; நல்ல பாடத்தைத் தேடி அலைகின்றார்; துருவித் துருவி நோக்குகின்றார். இப்படிச் செய்தும் அவர் மனம் நிறைவு பெறாவிட்டால் அதில் கை வைக்கின்றார். பாடல் வியக்கத்தக்க உருவம் அடைந்து விடுகின்றது. நாம் அவரது மந்திரக் கையின் ஆற்றலைக் கண்டு இறும்பூது அடைகின்றோம். நமது உள்ளத்தில் புத்துணர்ச்சிகள் எழுகின்றன. நாமும் அவருடன் சேர்ந்து அநுபவிக்கின்றோம்.

சில திருத்தங்களைக் கண்டால் டி. கே. சி செய்தது சரி என்பதை நாமும் ஒப்புக்கொள்வோம் (1) பால காண்டம் குலமுறை கிளத்துப் படலத்தில்,

> கோதமன்றன் பன்னிக்கு
> முன்னையுருக் கொடுத்திவன்
> போதுநின்ற தெனப்பொலிந்த
> பொலன்கழற்கால் பொடிகண்டாய்
> காதலென்றன் உயிர்மேலும்
> இக்கரியோன் பால்உண்டால்
> ஈதிவன்றன் வரலாறும்
> புயவலியும் எனஉரைத்தான்[1]

என்பது அச்சு வடிவம் பெற்ற கவிதை. இதன் இடம் நாம் அறிவோம். விசுவாமித்திரன் இராமனையும் இலக்குவனை

1. குலமுறை—29 (கடைசிப் பாட்டு)

யும் சனகனிடம் அறிமுகப்படுத்துகின்றான். மூன்றாவது அடி. 'இராமன்மீது என் உயிர்மேல் வைத்திருக்கும் காதலைவிட அதிகமான காதலை வைத்துள்ளேன்' என்ற கருத்தை வெளியிடுகின்றது. இங்ஙனம் ஒரு முனிவர் தம் அளப்பரிய அன்பையே விளம்பரப்படுத்திக் கொள்வதை ஒருவரும் ஒப்புக் கொள்ளார்; முற்றத் துறந்த முனிவருக்கு இஃது சிறிதும் அடுக்காது. அன்றியும்,

காதல்என்றன் உயிர்மேலும்
இக்கரியோன் பாலுண்டால்

என்ற அடியில் ஒலிநயம் சிதைகின்றது; அது திசைமாறிச் செல்வது போன்ற உணர்வை நம்மிடம் உண்டாக்குவதை அறிய முடிகின்றது. இந்த மூன்றாவது அடியை அப்படியே மாற்றுகின்றார் டி.கே.சி. விசுவாமித்திரன் சனகனைப் பார்த்து நேரே அழைத்துப் பேசுவது போன்று அமைந்து விடுகின்றது.

வேதம்என்ற உருவுடையாய்!
மிதிலையர்தம் உயிர்அனையாய்!

என்று இதில் சனகனை விசுவாமித்திரன் அழைத்துப் பேசுவதில் அற்புதமான பொருத்தம் அமைந்து விடுகின்றது. ஒலி நயமும்கூட அற்புதமாக அமைந்து விடுகின்றது புதிய திருத்தத்தில்.

இப்போது பாட்டின் முழு உருவம்,

கோதமன்தன் பன்னிக்(கு)
முன்னைஉருக் கொடுத்த(து), இவன்
போதுவென்ற தெனப்பொலிந்த
பொலன்கழற்கால் பொடிகண்டாய்
வேதம்என்ற உருவுடையாய்!
மிதிலையர்தம் உயிர்அனையாய்!
ஈ(து) இவன்தன் வரலாறும்
புயவலியும் எனஉரைத்தான்.

என்று அமைந்து விடுகின்றது. இதுதான் டி. கே. சி. பதிப்பிலுள்ள பாடல். இப்போது இதைப் பன்முறை படித்து அநுபவித்தால் திருத்தத்தின் பெருமையை அறிய முடியும்.

2. இன்னோர் எடுத்துக்காட்டு. இராமனுக்கு முடிசூட்டு விழா நடைபெறப் போகின்றது என்பதை வருணிக்கின்றார் கம்பர் பெருமான்.

மாதர்கள் கற்பின் மிக்கார்
கோசலை மனத்தை ஒத்தார்
வேதியர் வசிட்டன் ஒத்தார்
வேறுள மகளிர் எல்லாம்
சீதையை ஒத்தார் அன்னாள்
திருவினை ஒத்தாள்; அவ்வூர்
சாதன மாந்தர் எல்லாம்
தயரதன் தன்னை யொத்தார்.

என்பது பழைய படிகளில் உள்ள ஒருபாடல். 'மாதர்கள் **கற்பின்** மிக்கார்' என்று முதலடியில் கூறியவர் இரண்டாம் அடியில், 'வேறுள மகளிர் எல்லாம்' என்றுசொன்னால் எந்த மகளிரைக் குறிக்கும் ' என்ற வினா எழுதல் இயற்கை. அயோத்தி மாநகரில் உள்ள பெண்களை 'கற்புடைய மாதர்' 'மற்ற மாதர்' என்று கம்பர் பாகுபாடு செய்வாரா? இஃது எவ்வளவு அசம்பாவிதமாக அமைகின்றது? இதைத் தவிர்க்கவே டி.கே.சி,

மாதர்கள் வயதின் மிக்கார்
கோசலை மனத்தை ஒத்தார்;
வேதியர் வசிட்டன் ஒத்தார்
வேறுள மகளிர் எல்லாம்
சீதையை ஒத்தார்; அன்னாள்
திருவினை ஒத்தாள்; அவ்வூர்
சாதன மாந்தர் எல்லாம்
தயரதன் தன்னை ஒத்தார்

என்று திருத்தி அமைக்கின்றார். இப்பொழுது பெரிய அபவாதம் எளிதாக நீங்கி விடுகின்றது.

3. மற்றுமோர் எடுத்துக்காட்டு.

இராமனைக் கானாளக் கட்டளை இடுகின்றாள் கைகேயி. 'இஃது அவரது ஆணை' என்று சொல்லி பயமுறுத்துகின்றாள். 'தனக்குப் பட்டம்' என்று தழைக்கும் உள்ளத்துடன் வரும் இராமன் இக்கட்டளையை எப்படி ஏற்றுக் கொள்ளுகின்றான்? அவன் முகமாகிய தாமரை கட்டளையைப் பெறுவதற்கு முன்னர் எப்படி இருந்தது? கட்டளையைப் பெற்றபின் எப்படி இருந்தது? இதைத் தெரிவிக்க விரும்பும் கவிஞர் பெருமான்,

இப்பொழு தெம்ம னோரால்
இயம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத்தி ராமன்
திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்புஅவ்
வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா
மரையினை வென்ற தம்மா!

என்று பாடுகின்றார். இது வை.மு.கோ. பதிப்பில் காணப்பெறும் பாடல். டி.கே.சி. சிறிய திருத்தங்கள் செய்த பிறகு பாடல் புதுக்கோலம் கொள்ளுகின்றது.

இப்பொ(து) எம்ம னோரால்
இயம்புதற்(கு) எளிதோ யார்க்கும்
செப்பருங் குணத்தி ராமன்
திருமுகச் செவ்வி நோக்கி

2. கைகேயி சூழ்வினை-108 (இறுதிப் பாடல்)

ஒப்பதே முன்பு, மற்று அவ்
வாசகம் உணர்ந்த பின்னர்
அப்பொழு(து) அலர்ந்த செந்தா—
மரையினை வென்ற(து) அம்மா!

என்பது திருத்தம் பெற்ற பிறகு உள்ள பாடல். இந்தத் திருத்தத்தில் என்ன குறை? திருத்தங்கள் மிகவும் இனிமையாக இருப்பதுடன் பொருளையும் எளிதாக, அருமையாக, விளக்குகின்றதல்லவா? இத்தகைய திருத்தங்களால் 'கம்பர் எப்படி எழுதி இருப்பார்?' என்பதைக் கண்டு பிடிக்கின்றார் டி.கே.சி.

மற்ற பாடல்கள் : 1. கவிதைகளில் காணும் சுளுக்கை எடுக்கும் கைங்கரியம் வேறு பாடல்களிலும் தொடருகின்றது. கருப்பூரம் நாறுமோ? (நாச்.திரு.7:1) என்ற ஆண்டாள் பாசுரம். திவ்வியப் பிரபந்தத்தில்,

கருப்பூரம் நாறுமோ?
கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான்
தித்தித் திருக்குமோ?
மருப்பொசித்த மாதவன்தன்
வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன்
சொல்லாழி வெண்சங்கே!

என்று அச்சுவடிவம் கொண்டுள்ளது. 'நாற்றம்' என்பது நல்ல சொல்தான்; மோனையைக் கருதி மூன்றாவது அடியில் 'வாயமுதும் வாசமும்' என்று திருத்தி அமைக்கப் படுகின்றது. இத்திருத்தம் பாசுரத்தின் வடிவத்தில் பெரிய மாற்றம் செய்யாவிடினும் பாசுரத்தின் ஒலி நயத்தை அழகாக அமைக்கின்றது.

கருப்பூரம் நாறுமோ?
கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான்
தித்தித்(து) இருக்குமோ?
மருப்பொசித்த மாதவன்தன்
வாயமுதும் வாசமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன்
சொல்ஆழி வெண்சங்கே!

என்பது திருத்திய பாசுரத்தின் வடிவம்.

2. வட்டத் தொட்டி அன்பர்களில் ஒருவரான திரு. ஆண்டியப்பபிள்ளை கொண்டு வந்த பாடல் இது:

எய்யவந்த காமாநீ
இங்குவர வேண்டாம்காண்
உய்யவந்தா னோடு
உறவானேன்—பையவே
தேரைவிடு பூவைமுடி
தின்றுவிடு வெண்கரும்பை
மீனையொரு காசாக
வில்.

இஃது ஒரு பழம் பாடல்; பாடினவர் பெயர் தெரியாது இப்பாடலுக்குக் கூட மருத்துவம் செய்கின்றார் டி.கே.சி அவர்கள். அங்கும் இங்குமாகச் சுளுக்கெடுத்தபின்னர்,

எய்யவந்த காமா!
இனியுனக்கு வேலையிங்கென்
உய்யவந்தான் தன்னோடு
உறவானேன்—பையவே
தேரைவிட்டு மென்கரும்பைத்
தின்றுவிட்டுச் செய்யவந்த
போரைவிட்டுப் பூமுடித்துப்
போ

என்பது பாடலின் வடிவம்.. இரண்டு பாடல்களையும் நாவில் தவழவிட்டு நடை பயிற்றினால் முன்னது நொண்டி யடிப்பதையும், பின்னது கம்பீரமாக நடப்பதையும் கண்டு மகிழலாம். டி.கே.சியின் மருத்துவத்தின் பெருமையும் விளங்குவதைக் காணலாம்.

''சாதாரண அறிவிற்குப் பொருத்தமான திருத்தங் களையுமா செய்யக் கூடாது? இத்தனை ஆண்டுகளாகத் தனித்தும் பலரைக் கூட்டி வைத்தும் திரும்பத் திரும்பக் கம்பனைப் படித்த நான் அக்கிரமமாக—அடாவடித்தன மாக—ஏதேனும் திருத்தம் செய்யத் துணிவேனா? எனக்கு இலக்கிய மனச்சாட்சி (Literary conscience) இல்லை யென்றா நினைக்கின்றீர்கள்?'' என்ற பெருமகன் டி.கே.சி.யின் குரல் நம் காதில் விழும்போது அவரது ஆன்மா பேசுவதை அறிகின்றோம். நாமும் வாயடைத்துப் போகின்றோம். அவர் குரலில் அவர்தம் பண்பட்ட உள்ளம் பளிச்சிடுவதைக் காணும்போது நம் கண்கள் குளமாகின்றன.

எத்தனையோ 'பாடவேற்றுமைகள்' கம்பன் பாடல் களில் பல்வேறு காரணங்களால் குவிந்ததை நாம் பொறுத்துக் கொண்டுதான் இருக்கின்றோம். அவர்களை நாம் பார்த்ததில்லை. ஆனால் நம் காலத்தவர் டி.கே.சி. அவரை நேரில் பார்க்க முடிகின்றது; பார்த்தோம். இவர் திருத்தங்களையும் 'பாட வேற்றுமைகளாகக்' கொண்டு விட்டால் அவர்மீது குறை காண வேண்டியதில்லை. காழ்ப்பும் சினமும் கொண்டு தாக்க வேண்டியதில்லை. 'ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை, இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே' என்பது ஔவை மூதாட்டியின் பொன்மொழி. ஒரு நாள்தான் இப்பெருமகனாரிடம் பழகி னேன்; இவர்தம் உயர்பண்பு என்னை ஈர்த்து அடிமை யாக்கிக் கொண்டது. இவர்தம் நூல்களையெல்லாம் படித்த பிறகு இவர் உள்ளக்கிடக்கை பளிங்கெனத் தட்டுப்

படுகின்றது. இப் பெருமகனாரின் தமிழ்ப் பணியை என் வாழ்க்கைக்குறிப்பில் பதிவு செய்யும் பேறும் பெறுகின்றேன்.

## 10. செருகு கவிகள்

கம்பராமாயணம் ஒரு பிரச்சார நூலாகிவிட்ட பிறகு சிறிது சிறிதாகப் புதிய பாடல்கள் சேரத் தொடங்கி விட்டன. அக்காலத்தில் அச்சு நூல்கள் இல்லை. பாடல்களை ஓலைத் துண்டுகளில் எழுதிக் கோத்து வைத்துக் கொள்வது வழக்கம், படலம் படலமாகவும் காண்டம் காண்டமாகவும் இவ்வாறு கோத்து வைக்கப் பெற்றிருந்தன. பிரசங்கியார் சாதாரண மக்களிடம் கைதட்டல் பெறுவதற்காக தம் கற்பனைக்கேற்ப ஒரு நிகழ்ச்சியைப் பாடலாக எழுதிப் பொருத்தமான இடத்தில் கோத்து வைத்துக் கொள்வர். அது பிரசங்கியாரின் 'கோவையில்' நிரந்தரமாக இடம் பெற்றுவிடும். இவ்வாறு இடை இடையே செருகப் பெற்ற பாடல்களே 'செருகு கவிகள்' என்ற 'திருநாமம்' பெற்றன. தங்களால் எழுத முடியாவிட்டாலும் பாகவதர்கள் புதுப்பாடல்கள் தயார் செய்து கூட்டத்தில் சொல்லும்படி விட்டிருக்கின்றனர். இவ்வாறு கருதுவர் சொ. முரு. எடுத்துக்காட்டு:

விடங்கொண்ட மீனைப் போலும்
வெந்தழல் மெழுகு போலும்
படங்கொண்ட பாந்தள் வாயில்
பற்றிய தேரை போலும்

திடங்கொண்ட ராம பாணம்
செருக்களத்து உற்ற போது
கடன்கொண்டார் நெஞ்சம் போலும்
கலங்கினான் இலங்கை வேந்தன்

என்பது பாடல், இதைப் பலரும் கேட்டிருத்தல் கூடும். வாழ்க்கையின் பொருட்டும் செய்யும் சிறு தொழில் பொருட்டும் பல இடங்களில் கடன் பெற்று அந்தப் பளு தாங்க முடியாமல் ஏற்பட்ட பெரு வருத்தத்தை எண்ணித் துன்பப்படுபவர்கட்கு இந்தப் பாடலின் இறுதி அடி 'குளிர்பானம்' பருகுவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டு மகிழ்ச்சி தந்திருத்தல் கூடும். பெரும்பாலும் கம்பர் பாடல்களும், கதையின் கட்டங்களும் தொடங்கும்போது எளிதாகத் தொடங்கப் பெற்று இறுதியில் உணர்ச்சி பொங்கச் சென்று முடியும். போகப் போக உணர்ச்சியின் வேகம் 'கங்குகரையின்றிக்' கடந்து போகும்; பாடல்களும் அப்படியேதான் செல்லும். அவற்றின் கடைசி அடி 'சுள்' என்று வேகத்தைப் பற்றி நின்று உட்பொருளைத் திரட்டி எடுத்துக் காட்டும். இந்த அழகை நினைத்துக் கொண்டு இறுதி அடியை முதலில் தயார் செய்து வைத்து மேலே பொருத்தமான எதுகைகளுடன் மூன்று வரிகளை ஒட்ட வைத்து 'இமிடேஷன்' பாடல்களைத் தயாரிக்கப் பலர் மேற்கொண்ட முயற்சியே நூற்றுக்கணக்கான பாடல்கள் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது. இவை நூலிலும் 'ஒண்டவந்த பிடாரிகள்' போல் இடம் பெற்றுள்ளன. சில சமயம் இவை ஊர்ப்பிடாரிகளை வெளியேற்றவும் காரணமாக அமைந்து விடுகின்றன.

தமிழ் நூல்களில் மற்றவர்களால் பாடப் பெற்று செருகப் பெற்ற பாடல்கள் ஏராளம். சிந்தாமணி தொடக்கத்தில் 2500/- பாடல்களால் முடிந்தன. கந்தியார் பல பாடல்களைப் பாடி இடை இடையே சேர்த்ததால் நூலில் 4000 பாடல்கள் வரை பெருகிவிட்டது. அசல் பாடல்

களுக்கும் செருகு பாடல்களுக்கும் வேற்றுமை தெரியாமல் இவை இடம் பெற்று விட்டன. அஸ்ஸாமில் பிற மாநிலத்தார் ஊடுருவிக் குடியேறினது போல, இப்பாடல்கள் 'கந்தியார் பிணிப்பு' என்று திருநாமமும் பெற்றுத் 'திகழ்கின்றன', இப்படியே வெள்ளியம்பலத் தம்பிரான் என்பவர் பல பாடல்களைப் பாடி ஒவ்வொரு தமிழ் நூலிலும் இடை இடையே சேர்த்துள்ளார் என்பது புலவர்கள் கண்டறிந்த உண்மையாகும். தம்முடைய பாடல்களும் எல்லா நூல்களிலும் சேர்ந்திருக்கட்டும் என்று அவர் கருதினாராம். இம்மாதிரி இவர் செருகிய பாடல்களை 'வெள்ளிப் பாடல்கள்' என்று பெயரிட்டழைக்கின்றது புலவர் உலகம். இப்படி வெறுப்போ விருப்போ இல்லாமல் பாடல்களைப் பாடிச் சேர்ப்பவர் ஒரு புறம்; கொள்கைகளை வற்புறுத்துவதற்கென்றே பல பாடல்களைப் பாடிச் சேர்த்துள்ளனர் வேறு பலர்.

தம்முடைய கம்பராமாயணப் பதிப்பில் முகவுரையில் செருகு கவிகள் செருகப்பட்டதன் காரணங்களை ஆய்கின்றார் டி. கே. சி. ''கம்பராமாயணத்தில் காண்கின்ற மாதிரி வேறு எந்த நூலிலும் காண முடியாத வஸ்து ஒன்று உண்டு. அதுதான் செருகு கவி. கம்பராமாயணப் புத்தகம் செருகு கவி மயம் என்று சொன்னால் குற்றம் இல்லை'' என்று கூறியவர் காரணங்களையும் காட்டுகின்றார்.

(1) கம்பரது கவிதைகள் அபூர்வமான பாவங்களைக் கொண்டவையாய் இருந்தபடியால் படிப்பவர்களின் இதயத்தைப் பற்றிக் கொண்டன, சதா பாடிக் கொண்டே இருக்கும்படி தூண்டின. அதிலிருந்து ஒரு மயக்கம் உண்டாகிப் போலிச் செய்யுட்களையும் இயற்றும்படி சிலரைத் தூண்டிவிட்டன. இப்படி இயற்றிய போலிச் செய்யுட்களைப் புத்தகத்தில் கட்டம் கட்டமாகப் பார்க்கலாம்.

(2) எல்லாருக்கும் தெரிந்த கதையைக் கம்பர் கையாண்டார். இக்கதையை வால்மீகி ஒரு விதத்தில் நடத்தினார். வேறு பலரும் வேறு விதமாக நடத்தினர். இந்தக் கதைகளைக் கேட்டு வந்தவர்கள் கம்ப ராமாயணத்தைப் படிக்க நேர்ந்தது. கம்பர் தம்முடைய பாத்திரங்களுக்கும் இலட்சியங்களுக்கும் தக்கவாறாக ஆங்காங்குக் கதையையும் கதையின் போக்கையும் மாற்றியுள்ளார். அப்படி மாற்றியதன் காரணமாகவே பாத்திரங்களுக்குத் தனித்தனியான தெளிவு ஏற்படுகின்றன. இதையெல்லாம் தெரிந்து கொள்ளாத ஒருவர் தம்முடைய கோணலான குறுகிய அளவுகோலைக் கொண்டு வந்து கம்பர் போட்ட பாதையில் வைத்தார். பொருந்தவில்லை. அப்படியே கட்டத்தை மாற்றி எதுகை மோனைகளோடு செய்யுட்களாகக் கொட்டி நிரப்பி விட்டார். எ.டு. மிதிலைக் காட்சிப் படலம். இராமன், இலக்குவன், விசுவாமித்திரர் மூவரும் சனகனது அரண் மனைக்கு வருகின்றனர். இவர்களைச் சதானந்த முனிவர் வரவேற்கின்றார். இராமனைப் பற்றி விசுவாமித்திரர் புகழ்ந்து பேசிவிடுகின்றார். அப்பாவி சதானந்தர் தம் பேச்சிற்குப் பொருள் அகப்படாமல் திண்டாடுகின்றார். இராமனைப் பார்த்தே விசுவாமித்திரரைப் பற்றி (இத்தனை நாளும் இராமனுடன் இருந்த விசுவமா மித்திரரைப் பற்றி!) ஒரு புராணமே பாடித் தீர்க்கின்றார். மிதிலைக்காட்சி 91 முதல் 137 செய்யுள்வரையுள்ள (வை. மு. கோ. பதிப்பின்படி) புராணந்தான் அது. சொல்லுகின்றார் டி. கே. சி: ''இந்த அருமையான கைங் கரியத்தைச் செய்தவர், கம்பருடைய உண்மையான பாட்டுகள் அடங்கிய எத்தனை ஓலைகளைக் கிழித்து எறிந்தாரோ சொல்ல முடியாது. நமக்கு வருத்த மெல்லாம், இப்படித் தொலைந்து போன ஓலையைப் பற்றித்தான். போலிக் கவிகளையோ சுண்டிப் பார்த்து மட்டம் என்று தள்ளி விடலாமே!'' என்று.

(3) கம்பரது காவியத்தை ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்தார்கள். சுவடிகளை வைத்த இடம் மண்தளம், மண்சுவர். கூரைமேடு இவற்றாலாகிய சாமானியக் கட்டடங்கள்தாம். மழைக் காலத்தில் மேலேயிருந்து ஒழுகும்; கீழேயிருந்து ஈரமும் கறையானும் ஏறும். இது காரணமாக எத்தனையோ ஏடுகள் கெட்டுப் போயிருக்க வேண்டும். சுவடிக்காகப் பயன்படுத்தப் பெற்ற ஓலைகளில் சில பதனுக்கு வராத குருத்தோலைகளாகவும் முற்றிய ஓலைகளாகவும் இருந்திருக்கக் கூடும். இவை மக்கி உதிர்ந்து போயிருக்கலாம். இத்தகைய ஓலைகளின் காரணமாகவும், கறையான், ஈரம், அந்துப்பூச்சி இவற்றின் காரணமாகவும் எத்தனையோ கவிகளும் படலங்களுமே ஒழிந்து போய் விட்டன. கம்பராமாயணத்தைப் பாடிப் பாடி அதில் ஈடுபட்ட சிலர் தொலைந்து போனவற்றிற்குப் பதிலாக செய்யுட்களை எழுதிச் சேர்த்தார்கள். இப்படிச் சேர்க்கும்போது மனப்பாடமாகி இருந்த சில செய்யுட்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக அப்படியே வைத்தும் விட்டுள்ளனர்.

இப்படியெல்லாம் சேர்ந்த செருகு கவிகளையெல்லாம் இயன்றவரை இனங்கண்டு கம்பராமாயணத்திலிருந்து நீக்குவதற்கு எவ்வளவோ துணிவு வேண்டும். முதன் முதலாக டி.கே.சியிடம் இத்துணிவு பிறந்தது. வட்டத் தொட்டி[1]யில் ஆய்வு நடந்தது. இந்த ஆய்வு-முடிவுதான் டி.கே.சியின் கம்பராமாயணப் பதிப்புகள். இது போன்ற

1. திருநெல்வேலியில் இலக்கிய சங்கம் ஒன்று இருந்தது. அது டி. கே.சியின் வீட்டில்தான் கூடுவது வழக்கம். டி. கே. சியின் வீட்டின் முன்கட்டு ஓர் அகலமான கூடம். அக்கூடத்தின் நடுவில் வானவெளியுள்ள வட்ட வடிவமான ஒரு தொட்டிக் கட்டு ஒன்றும் உண்டு. இதில்தான் ஞாயிறுதோறும் மாலை ஐந்து மணிக்குக் கூடி கம்பராமாயண ஆய்வு நடைபெறும். எல்லோரும் கூடுவது இந்த வட்டத் தொட்டியில்தான்.

ஓர் ஆய்வுதான் ராய. சொ. தலைமையில் அமராவதி புதூர்-மகளிர் இல்லத்தில் நடைபெற்றது. சொ. முரு. தான் அரசு வக்கீல் நிலையிலிருந்து பாடல்களை அலசு வார்; சுண்டிப் பார்த்துப் போலிநாணயங்களை அகற்றுவது போல் செருகு கவிகளை இலேசாக இனம்கண்டு காட்டு வார். அக்கவிபற்றி ஆய்வு தொடங்கும். சரியான மணி களை ஏற்றுக் கொண்டு பதர்கள் காற்றில் விடுவதுபோல் செருகு கவிகள் என்று முடிவானவை தள்ளப்பெறும். தரங் குறைந்த—மட்டரகமான—பாடலுக்கு எடுத்துக்காட்டு இது.

மசரதம் அனையவர் வரமும் வாழ்வும் ஓர்
நிசரத கணைகளில் நீறு செய்யயாம்
கசரத துரகமாக் கடல்கொள் காவலன்
நசரதன் மதலையாய் வருதும் தாரணி
—திருவவதாரம்-21

இது, திருமால் தாம்பரிவாரத்தோடு தசரதனுக்குப் புதல்வ னாய் வருவதாகக் கூறுவது. 'தசரதன்' என்ற சொல்லுக்கு எதுகை தயார் செய்யப் புலவர் எவ்வளவு அவதிப் பட்டிருக்கின்றார்? பாவம்! இந்த நகலுக்கு அசல் எப்படி யிருக்கின்றது என்பதையும் எடுத்துக்காட்டுவார் சொ. முரு.

கயரதத் துரகமாக் கடலன், கல்வியன்
தயரதன் எனும்பெயர்த் தனிச்சொல் நேமியான்
புயல்பொழி தடக்கையான் புதல்வன்; பூங்கணை
மயல்விளை மதனற்கும் வடிவு மேன்மையான்
— காரிமுகம்-58

இந்தப் பாடலையும் மேலே காட்டிய பாடலையும் படித்துப் பார்த்தால் பாட்டு எது என்பது தெளிவாகும். இப்படிப் பல பாடல்களைப் பதர்களாக இருப்பவற்றைக் காட்டுவார்.

ஒரு சமயம் ரசிகமணி டி.கே.சி. சொன்னது நினைவிற்கு வருகின்றது. ஒரு கண்ணாடி கோப்பையில் இரண்டு மூன்று குலோப் ஜாமுன் உருண்டைகள் ஜீராவில் மூழ்கடிக்கப்பட்டு ஒரு கரண்டியும் அதில் வைக்கப் பெற்றுள்ளது. அத்துடன் குலோப் ஜாமுன் உருண்டை போல்—நிறம், அளவு பொருந்துமாறு—செய்யப் பெற்ற இரண்டு களிமண் உருண்டைகளும் கலந்து வைக்கப் பெற்றுள்ளன. உண்மையான குளோப் ஜாமுன் உருண்டைகளைக் கரண்டியால் வெட்டி ஜீராவில் முக்கிக் கலந்து உண்கின்றார் ஒருவர்; அநுபவிக்கின்றார். களிமண் உருண்டையைக் கரண்டியால் வெட்டி ஜீராவில் கலந்து வாயில் வைக்கும்போது அவர் முகத்தைப் பார்க்க வேண்டுமே; அசடு வழிவதைக் காணலாம். மேற்காட்டிய திருவவதாரப் படலப் பாடலைப் படிக்கும்போது இந்த அநுபவம்தான் கிடைக்கும். இரண்டாவதாகவுள்ள கார்முகப் படலப் பாடலைப் படிக்கும்போது உண்மையான குளோப் ஜாமுனை உண்பது போன்ற அநுபவம் முகத்தில் தென்படும். ரசிகமணி, ரசிகமணிதான் என்பது எவ்வளவு உண்மை. சொ. முரு.வும், ராய. சொ.வும் இந்த டி.கே.சியின் உவமையைக் காட்டி எங்களையெல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவார்கள். சொ.முரு. அவர்கள் காட்டிய செருகு கவிகள் ஒன்றிரண்டைக் காட்டுவேன்.

1. வாலிவதைப் படலத்தில் ஒன்று. வாலியை இராமன் அம்பெய்து வீழ்த்தி விடுகின்றான். அம்பு பட்டு வீழ்ந்தவன் இறக்கவில்லை. அம்பைப் பிடித்துக் கொள்ளுகின்றான். எப்படி? ''கரம்இரண்டினும் வாலினும் காலினும் கழற்றிப் பரமன் இன்னவன் பெயர் அறிகுவன்'' (வாலி வதை-66) என அம்பைப் பற்றி இழுத்து ''வாங்கினான் மற்றுஅவ் வாளியை யாளிபோல் வாலி'' (ஷை-67)

என்பதால் வேகத்தோடு பாய்ந்து உருவுகின்ற அம்பினைப் பிடித்து நிறுத்தி வெளியே வாங்கிவிட்டான் என்பது தெரிகின்றது.

வாசத் தாரவன் மார்பெனும்
    மலைவழங்கு அருவி
ஓசைச் சோரியை நோக்கினன்;
    உடன்பிறப்பு என்னும்
பாசத்தால் பிணிப்(பு) உண்டஅத்
    தம்பியும் பசுங்கண்
நேசத் தாரைகள் சொரிதர
    நெடுநிலம் சார்ந்தான்.

—கிஷ்-69

[வாசம்—வாசனையுடைய; தார்—மாலை. வழங்கு—பெருகிய; சோரி ஓசை—இரத்த வெள்ளமாகிய ஆரவாரம்; பாசம்—கயிறு; சொரிதர—பெருக].

இதில், அம்பைப் பிடுங்கவே அந்தப் புழையின் வழியாகக் குருதி பீறிட்டு வழியத் தொடங்குகின்றது. இந்த நிலையைப் பார்த்த தம்பி சுக்கிரீவன் குருதிப் பாசத்தால் தாழாதவனாகி மயங்கித் தரையில் வீழ்ந்து விடுகின்றான் என்ற செய்தி கூறப் பெறுகின்றது. இதற்குமேல்,

பறித்த வாளியைப் பரூஉ வலித்
    தடக்கையால் பற்றி
இறுப்பன் என்று கொண்டு எழுந்தனன்
    மேருவை இறுப்போன்
முறிப்பன் என்னினும் முறிவதுஅன்
    றாம்என மொழியாப்
பொறித்த நாமத்தை அறிகுவான்
    நோக்கினன் புகழோன்

—கிஷ்-70

[பறித்த—பிடுங்கிய; வாளி—அம்பு; பருவலி—பருத்த வலிமையுள்ள; இறுப்பன்—முறிப்பேன்; நாமம்—பெயர்].

இப்படி நெஞ்சிலிருந்து பிடுங்கி எறிந்த அம்பை மிகுந்த வலிமையுள்ள பெரிய கைகளால் பிடித்து 'ஒடித்து விடுகிறேன்' என்று எழுந்து நின்று வளைக்கின்றான். முடியவில்லை. 'இது முறியாது' என்று சொல்லிக் கொண்டே அதில் பொறிக்கப் பெற்றுள்ள பெயரைப் பார்க்கின்றான் என்பது இப்பாடலால் அறிகின்றோம். இந்த இரண்டு பாடல்களால் அம்பை மார்பினின்றும் பிடுங்கி எடுத்து ஒடிக்க முயன்று முடியாமல் பெயரைப் பார்த்தான் என்பதுவரை அறிய முடிகின்றது.

இதன் பிறகு, வாலி இராமனை நேரில் காண்கின்றான்; திட்டுகின்றான். அப்பால் இராமனுக்கும் இவனுக்கும் வாதப் பிரதிவாதங்கள் நடைபெறுகின்றன. வாலி ஒருவாறு சமாதானம் அடைகின்றான். பின்னர்,

என்(று)அவற்(கு) இயம்பிப் பின்னர்
இருந்தனன் இளவல் தன்னை
வன்துணைத் தடக்கை நீட்டி
வாங்கினன் தழுவி மைந்த

—செ-131

[இளவல்-தம்பி: துணைக்கை-இரண்டு கைகள்]

இதில் துயருற்று நின்ற தம்பி சுக்கிரீவனை வாலி தன்னுடைய வலிய இரு கைகளாலும் பிடித்துக் கட்டித் தழுவி, 'வலிமையுடையவனே!' என்று பாராட்டி அறங் கூறுகின்றான். அப்பால் வாலியின் மகனான அங்கதன் வருகின்றான்; அலறித் துடிக்கின்றான். அவனை வாலி தேற்றி,

ஆயன் பலவும் பன்னி
அழுங்கினன்; புழுங்கி நோக்கித்
தீஉறு மெழுகிற் சிந்தை
அலமரும் செங்கண் வாலி

'நீஇனி அயர்வாய் அல்லை'
என்றுதன் நெஞ்சிற் புல்லி
நாயகன் இராமன் செய்த
நல்வினைப் பயன்இ(து) என்றான்
—செய்-146

[பன்னி - அடுத்தடுத்துச் சொல்லி; அழுங்கினன்-அழுதான்; அயர்வாய்-வருந்துவாய்; புல்லி-அணைத்து].

என்று இவ்வாறு வருந்திப் பின் அங்கதனைக் கட்டிப் பிடித்து நெஞ்சோடு தழுவிப் பேசினான் என்று கூறப் பெறுகின்றது.

என்றனன் இனைய ஆய
உறுதிகள் யாவும் சொல்லித்
தன்துணைத் தடக்கை ஆரத்
தனயனைத் தழுவிச் சாலக்
குன்றினும் உயர்ந்த திண்தோள்
குரங்கினத் தரசன் கொற்றப்
பொன்திணி வயிரப் பைம்பூண்
புரவலன் தன்னை நோக்கி.
—செய்-150

[இனைய - இத்தன்மைத்தான; உறுதிகள் - இத மொழிகள்; தனயன்-மைந்தன்; ஆர-இறுக; புரவலன்-இராமன்].

இப்பாடலிலும் மகனைத் தன்னுடைய இரண்டு கைகளாலும் தழுவிப் பேசினான் என்று தெரிகின்றது. இதற்குப் பின்னர்,

தன்அடி தாழ்த லோடும்
தாமரைத் தடங் கணானும்
பொன்உடை வாளை நீட்டி
'நீஇது பொறுத்தி' என்றான்;

என்னலும் உலகம் ஏழும்
ஏத்தின; இறந்து வாலி
அந்நிலை துறந்து வானுக்(கு)
அப்புறத்(து) உலகன் ஆனான

—ஷை-152

[தன்அடி-இராமன் திருவடி; தாழ்தல்-வீழ்ந்து வணங்குதல்; பொறுத்தி-ஏற்றுக்கொள்].

இப்படியாக வாலி வீடு பெற்ற பின்னர் ஒரு பாட்டு வருகின்றது.

கைஅவண் நெகிழ்த லோடும்
கடுங்கணை காலன் வாலி
வெய்யமார் பகத்துள் தங்கா(து)
உருவிமேக்(கு) உயர மீப்போய்த்
துய்யநீர்க் கடலுள் தோய்ந்து
தூய்மலர் அமரர் சூட்ட
ஐயன்வெந் விடாத கொற்றத்(து)
ஆவம்வந்(து) அடைந்த(து) அன்றே.

—ஷை-153

[நெகிழ்தல் - தளர்தல்; கடு - விரைவையுடைய; காலன்-யமன்; அமரர்-தேவர்கள்; வெந்-முதுகு; ஆவம்-அம்பு அறாத் தூணி].

''இப்பாடலை (செருகு பாடல்) வைத்து வைத்துப் பார்த்துப் பார்த்துச் சுவைக்கலாம்; அல்லது சிரிக்கலாம்; வேண்டுமானால் அழவும் செய்யலாம்'' என்கின்றார் சொ. முரு.

வாலி தன் மார்பில் பாய்ந்த அம்பைப் பிடுங்கு கின்றான் (67). பிடுங்கிய வாளியை ஒடிக்க முயல்கிறான்; முடியவில்லை (70). இரு கைகளையும் நீட்டித் தம்பியைத் தழுவுகின்றான் (131). மகனைப் பற்றி நெஞ்சில் அணைத்துத் தழுவுகின்றான் (146). தன்னுடைய இரு

கைகளாலும் மகனைப் பிடித்து மார்பில் சேர்த்துப் புல்லுகின்றான் (150). மோட்சம் அடைகின்றான் (152). ''இத்தனை நிகழ்ச்சிகட்குப் பின் வருகின்ற பாடலில் அம்பைப் பிடித்திருந்தகை இப்பொழுதுதான் நழுவினதாக வும், உடனே அம்பு உடலைஉருவிப்பின்புறம்போய், கடலில் மூழ்கித் தேவர்களிடத்தில் ஆசி பெற்று அம்பறாத் தூணி யில் வந்து நுழைந்ததாகவும் வருகிறதே! இது வியத்தற் குரியதுதானே!'' என்கின்றார் முருகப்பா.

மேலும், ''சிறியன சிந்தியாத மாபெரும் வீரனான வாலியின் முதுகில் புண் தோன்றும்படி ஒரு நிகழ்ச்சி ஏற்படுமா? இராமன் எய்தாலும் அம்பு செல்லுமா? அம்பு சென்றாலும் கம்பர் விடுவாரா? செருகு கவிகளைச் சேர்த்தவர் பலர், அவற்றில் முன் உள்ள பாடல்களைப் பார்க்காமலேயே, பாடிச் சேர்த்த வகையைச் சேர்ந்தது 'கை அவண் நெகிழ்தல்' என்ற பாட்டு'' என்கின்றார்.

(2) இந்திரசித்து வதைப் படலம். இலக்குவன் கணை யால் இந்திரசித்து மடிகின்றான். வெட்டுப்பட்ட இந்திர சித்தின் தலையை அங்கதன் எடுத்துக்கொண்டு வர, இலக்குவன் கூட வருகின்றான். இக்காட்சியைக் கவலை யோடிருந்த காகுத்தன் காண்கின்றான். அவனுக்கு எல்லை யற்ற மகிழ்ச்சி உண்டாகின்றது. ஒரே வியப்பு. கம்பர் பாடுகின்றார்.

வன்புலம் கடந்து மீளும்
　　தம்பிமேல் வைத்த மாலைத்
தன்புல நயனம் என்னும்
　　தாமரை சொரியும் தாரை
அன்புகொல்? அழுக ணீர்கொல்?
　　ஆனந்த வாரி யேகொல்?
என்புகள் உருகிச் சோரும்
　　கருணைகொல்? யார்அது ஓர்வார்?

—இந்திர, வதை 65

விழுந்திழி கண்ணின் நீரும்
உவகையும் களிப்பும் வீங்க
எழுந்துஎதிர் வந்த வீரன்
இணையடி முன்னர் இட்டான்;
கொழுந்துஎழும் செக்கர் கற்றை
குழங்கொள எயிற்றின் ஈட்டம்
அழுந்துற மடித்த பேழ்வாய்த்
தலைஅடி இறைஒன் றாக

—ஷை 66

இவ்விரு பாடல்களிலும் கூறப்பெறும் செய்தி: இலக்குவனை நோக்கி இராமன் ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றான். இந்த நிலையை யாரால் வருணிக்க முடியும்? இந் நிலையில் இராமன் எழுந்து தம்பியின் எதிரே செல்லுகின்றான். இந்திரசித்தின் தலையை அங்கதனிடமிருந்து வாங்கி அதனை இராமனுக்குப் பாத காணிக்கையாக வைக்கின்றான் இலக்குவன். இனி, இராமன் செயல் எப்படியாகின்றது? இராமனுக்கு வாய் அடைத்துப் போகின்றது. அளவு கடந்த உவகையில் ஏற்படும் மெய்ப்பாடு இங்கே தெளிவு பெற நிகழ்கின்றது.

தலையினை நோக்கும்; தம்பி
கொற்றவன் தழீஇய பொற்றோள்
மலையினை நோக்கும்; நின்ற
மாருதி வலியை நோக்கும்;
சிலையினை நோக்கும்; தேவர்
செய்கையை நோக்கும்; செய்த
கொலையினை நோக்கும்; ஒன்றும்
உரைத்திலன்; களிப்புக் கொண்டான்

—ஷை 67

வீர உணர்ச்சியோடு, கோபக் கனலோடு காட்சி யளிக்கும் இந்திரசித்தின் தலையைப் பார்க்கின்றான்; உடனே திரும்பி இந்தத் தலையை வெட்டி வீழ்த்திய தம்பி

யின் மலை போன்ற திருத்தோள்களை நோக்குகின்றான்; அருகில் நிமிர்ந்து நிற்கின்ற மாருதியின் வலி எப்படிப் பட்டது என்று கருதுகின்றான். இந்த வில்தானா இவ்வளவு பெரிய வலிய வீரனைச் சாய்த்தது என்று தம்பி கையிலிருக்கின்ற வில்லை நோக்குகின்றான்; களிப்பினால் கூத்தாடும் தேவர்களையும் பார்க்கின்றான்; உலகிலேயே நடவாத இந்தப் பெரிய பேர்வழி செத்தானா என்று நினைக்கின்றான். வாய் அடைத்துப் போகின்றது. களிப்பு மேலும் மேலும் பொங்கி வழிகின்றது. முந்தின களிப்புக்கே இலக்குவனைக் கண்டது முதல் வாய்ப் பேச்சு நின்றுபோய் இருந்தது. இப்போது களிப்பு மேலும் ஏறி வளர்கின்றது. அடுத்து நிகழ்வது என்ன?

காளமே கத்தைச் செசகா
கலந்தெனக், கரிய குன்றம்
நாள்வெயில் பரந்தது என்ன
நம்பிதன் தம்பி மார்பில்
தோளின்மேல் உதிரச் செங்கேழ்ச்
சுவடுதன் மார்பில் தோன்றத்
தாளின்மேல் வணங்கி னானைத்
தழுவினன் தனித்தொன்று இல்லான்

—டெ 68

தன் காலில் விழுந்து வணங்கிய இலக்குவனை இராமன் வாரித் தூக்குகின்றான். இலக்குவனுடைய மார்பிலும் தோளிலும் நிறைந்திருந்த குருதியின் சுவடு தன் மார்பிலும் தோன்றும்படித் தழுவுகின்றான்; வாய் பேசவில்லை.

தூக்கிய தூணி வாங்கித்
தோளொடு மார்பைச் சுற்றி
வீச்சிய கவச பாசம்
ஒழித்துஅது விரைவின் நீக்கித்.

தாக்கிய பகழிக் கூர்வாய்
 தடிந்தபுண் தழும்பும் இன்றிப்
போக்கினன் தழுவிப் பல்கால்
 பொற்றடம் தோளின் ஒற்றி

— ஷை. 78

தழுவிக்கொண்ட இராமன் என்ன செய்கின்றான்? அம்பறாத் தூணியை அவிழ்க்கின்றான். கவசத்தைக் கழற்றுகின்றான். தம்பியின் உடலில் பாய்ந்திருந்த அம்புகளைப் பிடுங்குகின்றான். பிறகு ஆயிரம் முறை கட்டிக் கட்டித் தழுவுகின்றான். அந்த அன்புக் கடலில் திளைத்து இலக்குவன் புண் ஏற்பட்ட உணர்ச்சியும் தழும்பு உண்டு என்ற உணர்ச்சியும் அற்று அன்புமயமாகி விடுகின்றான்.

இதற்குப் பிறகுதான் இராமனின் வாய் திறக்கின்றது; பேசுகின்றான்.

ஆடவர் திலக! நின்னால்
 அன்று;இகல் அநுமன் என்னும்
சேடனால் அன்று; வேறோர்
 தெய்வத்தின் சிறப்பும் அன்று
வீடணன் தந்த வெற்றி
 ஈதுஎன விளம்பி மெய்ம்மை
ஏடுஅவிழ் அலங்கல் மார்பன்
 இருந்தனன் இனிதின், இப்பால்

— ஷை. 71

இராமன் இலக்குவன் தோளைத் தழுவிக் கொண்டிருக்கும் போதே இந்த வெற்றிக்குக் காரணர் யார் என்று உள்ளம் எண்ணுகின்றது; மெய்ப்பாடு முற்றுப் பெறும் இடம் கண்டு வாய் தானாகப் பேசுகின்றது. இந்த வெற்றிக்கு இலக்குவன் செயல், அநுமன் உதவி, தேவர் ஆசி எல்லாம் காரணங்களாக இருந்தாலும் வீடணனாலே தான் வெற்றி கிட்டியது என்று ஒரு வார்த்தை சொல்லு

கின்றான். இதற்கு மேல் அவனைப் பேசவிடாமல் படலத்தை நிறைவு செய்து விடுகின்றார் கம்பர். இந்த ஒரே சொல்லுக்கு மேலே, சொல்ல என்ன உள்ளது?

இராமனின் வியப்பிலிருந்து முகிழ்த்த எண்ணம் 67ஆம் பாடலில் கருக்கொள்கின்றது. தலையைப் பார்க்கின்றான்; தம்பியின் தோளைப் பார்க்கின்றான்; தேவரைப் பார்க்கின்றான். இவர்களில் யாரால் இவ்வெற்றி கிடைத்தது என்ற சிந்தனை உள்ளத்தினுள்ளே ஒரு புறத்தில் நடைபெற்றுக் கொண்டே இருந்திருக்கின்றது. அந்த ஆய்வின் முடிவாக 70-ஆம் பாடலில் தன் எதிரில் இல்லாத வீடணன் நினைப்பு வந்ததும், அவனால்தான் வெற்றி கிடைத்தது என்று தோன்றுகின்றது. அந்த முடிவு தானாக வெளி வருகின்றது. அதி உச்ச நிலையில் நிற்கும் இந்த மனோதத்துவத்தை எடுத்துக்காட்டுதல் பெருங் கவிஞர் கட்குத்தான் முடியும்?

இப்படிக் கம்பன் இப்படலத்தை அற்புதமாக நடத்திக் கொண்டிருக்க யாரோ ஒரு 'புண்ணியவான்' அடியிற் கண்ட பாடலைப் பாடி 68-க்கும் 70-க்கும் இடையில் 69-ஆவது பாடலாகச் செருகியுள்ளார். 68,70 ஆவது பாடல்கள் இராமனின் மெய்ப்பாடு கட்டிப் பிடித்துக் கொண்டுள்ளது. நல்ல மைசூர் பாகைக் கடித்துத் தின்று மென்று சுவைக்கின்றபோது ஒரு மண்ணாங் கட்டியை வாயில் திணிக்கின்றமாதிரி செருகு பாடல் முந்திரிக் கொட்டை மாதிரி தலையைக் காட்டுகின்றது.

கம்ப மதத்துக் களியானைக்
காவல் சனகன் பெற்றுஎடுத்த
கொம்பும் என்பால் இனிவந்து
குறுகி னாள்என்று அகம்குளிர்ந்தேன்

வம்பு செறியும் மலர்க் கோயில்
மறையோன் படைத்த மாநிலத்தில்
'தம்பி உடையான் பகையஞ்சான்'
என்னும் மாற்றம் தந்தனையால்

—ஷை-69

இது செருகு பாடல் என்பதை மாறுகின்ற சந்தமே காட்டி விடுகின்றது. இப்பாடல்களைப் பன்முறைப் படித்து, மெய்ப்பாடு எப்படி நிகழ்கின்றது என்பதை உணர்தல் வேண்டும். மகிழ்ச்சியின் உச்சம் எப்படி மலரும்? எப்படி மௌனம் கலைந்து சொல் தோன்றும்? என்பன எல்லாம் கம்பரது ஆழ்ந்த அகன்ற அறிவிலே தோன்றுகின்றன. கவியிலே கொண்டு வருகின்ற பரிபூரண கடாட்சமும் அவருக்குக் கிடைத்திருக்கின்றது. படிப்போராகிய நாமும் உணர்ச்சிக் கடலில் மிதக்கின்றோம். ஆனால் 'கம்ப மதத்து'ப் பாடல் முகத்தில் கரியைப் பூசிக்கொண்டு நடுவில் நின்று சண்டித்தனம் செய்கின்றது. சாலையில் வீழ்த்தப்பெற்ற மரம் வாகனப் போக்குவரத்தைத் தடுத்து நிறுத்துகின்றதுபோல் கதையின் ஓட்டத்தை, உணர்ச்சிப் பெருக்கைத் தடுத்து விடுகின்றது 'தம்பியுடையான் பகைக்கு அஞ்சான்' என்ற உலக வசனத்தை நடுவில் நுழைத்த பாடலைச் சந்தடி வாக்கில் நுழைத்தால் மக்கள் கை தட்டுவார்கள் என்று நினைத்துப் பிரசங்கியார் செய்த கைங்கரியம் இது. நல்ல கவியரங்கப் பாடல்களின் நடுவே இடைப் பிறவரலாக எதையாவது நுழைத்துப் பலத்த கை தட்டலைப் பெறுகின்றார் அல்லவா? அது போல.

3. நாட்டு படலம் (பாலகாண்டம்), திருமுடி சூட்டுப் படலம் (யுத்த காண்டம்-II) இவற்றில் வரும் இரண்டு பாடல்களைக் காட்டுவேன்.

நாட்டுப் படலத்தின் பாடல்:

முந்துமுக் கனியின் னானா
முதிரையின் முழுத்த நெய்யில்
செந்தயிர்க் கண்டம் கண்டம்
இடையிடைச் செறிந்த சோற்றில்

தந்தமில் இருந்து தாமும்
விருந்தொடும் தமரி னோடும்
அந்தணர் அமுத ருத்தி
அயில்வுறும் அமலைத் தெங்கும்.
—நாட்டு.22

[முதிரை- பருப்பு வகை; முழுத்து- முழுத்து கின்ற; தயிர்க்கண்டம் —தயிர்க் கட்டி; கண்டம்—கண்ட சருக்கரை; இல்—வீடு; தமர்—பந்துகள்; அருத்தி-உண்ணச் செய்து; அயில் உறும்— உண்கின்ற; அமலைத்து— ஆரவாரத்தையுடையது.]

அளவு கடந்த மேம்பாடான உணவை உண்டு. ஆரவாரிக்கும் ஓசை நாடு முழுதும் கேட்கும் என்று இதில் கூறப்பெற்றுள்ளது. இது நியாயமாக நாட்டு மக்கள் உணவுக்குப் பஞ்சப்படாமல் பெருமிதமாக உண்டு களித்தனர் என்று கூறவேண்டிய இடம். இதில் அந்தணர் வீடுகள் மட்டும் இப்படி உண்ட களிப்பைக் கொண்டிருந்தன என்று கூறவேண்டியதில்லை. இந்தப் பாடலுக்கு உரை எழுதும்போது வை.மு.கோ. அவர் களுக்குச் சிறிது திணரல் ஏற்பட்டுள்ளது. பல சாதியாரும் பாடுபட்டுச் சம்பாதிக்க, ஒரு சாதியார் மட்டும் தலைகால் தெரியாமல் உண்டு கொண்டிருந்தார்கள் என்று பாடல் இருந்தால் யாரைத்தான் கலங்க வைக்காது?

> "...விளை பொருள்களை அம்மள்ளர் எல்லா வருணத்தார்க்கும் பயன்படுமாறு ஏற்றபெற்றிச் செய்வரென்பதைத் தெரிவிக்கக் கருதி, முதல் வருணத் தவரான அந்தணர்க்கு அவை பயன்படுவதைக் கூறி, மற்றையோருக்குப் பயன்படுவதை உபலக்கணத்தாற் பெற வைத்தனர் என்க."

என்று கூறுவர். நாட்டில் விளைந்த பொருள்கள் எல்லாருக்கும் பயன் பட்டன என்று கூறுவதற்குத் திறமின்றிக்

'கல்வியிற் பெரிய கம்பர்' உபலக்கணத்தைத் துணைக் கொண்டார் என்று கூறுவது வருந்தத்தக்கதாகும். இருப்பவையெல்லாம் கம்பர் பாடல் என்று கருதியதால் நேர்ந்த பிழையாகும் இது.

கம்பர் பாடல்களில் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்றோ, அல்லது அந்தணர், அரசர், வணிகர் வேளாளர் என்றோ சாதி கூறப் பெறவில்லை. கம்பராமாயணத்தில் ஆற்றுப் படலம், நாட்டுப் படலம் நகரப் படலம் என்ற மூன்று படலங்களின் 168 பாடல்களிலும் 'சாதியைக்' காட்டும் குறிப்புகளில் கொடிச்சியர், எயினர், ஆயர், கோவலர்; மள்ளர், உழத்தியர், கடைசியர், நுழைச்சியர் என்ற பெயர்களே காணப் பெறுகின்றன. படிப்பவரைப்பற்றி வேள்வி செய்பவரைப் பற்றி, போர்த் தொழில் பழகுபவரைப் பற்றி, கப்பல் சரக்கு ஏற்றி இறக்கி வாணிகம் செய்பவரைப் பற்றி, உழுபவரை பற்றி இன்னும் எவ்வளவோ செயல்கள் செய் பவரைப் பற்றித்தான் பாடல்கள் உள்ளன. இவற்றுள் சாதிப்பாகுபாடு காணும்படி எந்தச் சொல்லும் இல்லை. இந்த ஒரு பாடல்தான் இடையே நின்று 'மிளிர்' கின்றது.

அந்தணரைக் கேலி செய்ய நினைத்த ஒருவர் இந்தப் பாடலைப் பாடியிருத்தல் கூடும். 'பிராமணா போஜன பிரிய:' என்ற பழமொழி உண்டல்லவா? தாறு மாறாக உண்டு அமலையை உண்டாக்குவது அந்தணர்க்கு அடுத்த தன்று. அளவாக உண்டு அருள் பரப்புவதே அந்தணர்க்கு அழகு; உரியதும் அதுவே. பிராமணர் விருந்து நடப்பதைப் பார்த்தால் இந்தப் பாடல் மிகவும் பொருத்தமாகத் தோன்றும். அக்கார அடிசில், ததியோதனம், திருக்கண்ண முது (திருக்கன்னல் அமுது) போளி, மிளகு வடை போன்ற உணவுவகைளைச் சாப்பிட ஆயிரக்கணக்கான கூட்டம் சேராதா? இவர்கள் வந்து—ஒரேயடியாக வந்து—மண்டு வதைத் தடுத்து நிறுத்த நூறு ஜவான்கள்! கைகலப்பு!

ஓரே இரைச்சல்! இப்படிப்பட்ட நிகழ்ச்சியை அநுபவித்தால்தான் 'அமலை' என்ற சொல் வாய்க்கு வரும். அறிவையும் அறத்தையும் இறைவனையும் நோக்கி உடலை ஒறுத்து நிற்கும் அந்தணர்க்கும் அமலைக்கும் சம்பந்தம் ஏது? பின்னாளில் பிராமண போஜனம் சிறந்ததென்று கருதிப் பிரசாரம் செய்தவரின் கைங்கரியம் இப்பாடலின் சேர்ப்பு.

இம்மாதிரியான பாடல்களைக் கண்ட எதிர்க்கட்சிக்காரர்கள் தங்கள் கைவரிசையையும் காட்டப் பின்வாங்கவில்லை. திருமுடிப்படலத்தில் (யுத்த காண்டம்-II) ஒரு பாடல்,

வேசியர் உடுத்த கூறை
  வேதியர் சுற்ற வெற்றிப்
பாசிழை மகளிர், அன்னார்
  ஆடையைப் பரிந்து சுற்ற
வாசமென் கலவை சாந்(து)என்று
  இனையன மயக்கந் தன்னால்
பூசினர்க்கு இரட்டியானார்
  பூசலார் புகுந்து ளோரும்

—திருமுடி-13

இராமன் காட்டிலிருந்து நகரத்திற்குத் திரும்பியவுடன் திருமுடி சூட எல்லா ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கின்ற சமயம். விலைமாதர்களின் வீடுகளில் பிராமணர்கள் எல்லாரும் குவிந்து நிர்வாணமாய்க் கிடந்தார்களாம். மகிழ்ச்சி மண்டைக்கு ஏறி விடுகின்றது. உடனே வெளியே புறப்பட்டார்களாம். அவர்களும் கைக்கு அகப்பட்ட துணிகளை எடுத்துச் சுற்றிக் கொண்டு ஓடினார்களாம். வேசியர் ஆடைகளை வேதியர் சுற்றிக் கொள்கின்றனர். வேதியர் ஆடையை வேசியர் உடுத்திக் கொள்கின்றனர். வாசனைச் சாந்து பூசிக் கொள்ளாதாராகப் புகுந்தவர்கள் சன நெருக்கத்தால் கலவைச் சாந்து பூசிக் கொண்டவர்

களைவிட இருமடங்கு பூசிக் கொண்டார்களாம். எப்படி இருக்கின்றது காட்சி? இந்தப் பாடலும் கம்பர் பாடியதாக கம்பராமாயணத்தில் 'பொதிந்து' கிடக்கின்றது. இத்தகையவை கம்பர் பாடியவையாகக் கொள்ளலாகாது என்று கூறினால் புலவர்கட்குக் கோபம் வருகின்றது. வெட்கம்! வெட்கம்!! இப்படிப் பல இடங்களில் செருகு கவிகள் மயம். இத்துடன் இக்குமிழி அடங்குகின்றது. மேலும் அறிய வேண்டுவோர் 'கம்பர் காவியம்—அதன் நிலை விளக்கம் (1953) என்ற சொ. முரு.வின் நூலில் கண்டு கொள்ளலாம்.

இப்படி இரண்டு ஆண்டுகள் முருகப்பனாரின் கலைத் தொண்டில் நாங்கள் கலந்து கொள்ளும் பேறு பெற்றோம். முருகப்பனார் ஆச்சரியமான மனிதர். சமூக சீர்திருத்தப் பாங்கு இலக்கியத்திலும் புகத் தொடங்கிச் செயற்கரிய செயலைச் செய்யத் தூண்டி விட்டது. ரசிகமணியின் கூட்டுறவும் ஈ. வே. ரா. பெரியாரின் தோழமையும்தான் இவருக்கு இத்தகைய துணிவைக் கொடுத்தன என்று கருது வதில் பொருத்தம் உண்டு. பெரியார் இராமகாதையைத் தீயிலிட வேண்டும் என்றார்; சொ. முரு. அதைத் திருத்திப் பயன் கொள்ள வேண்டும் என்றார். குருவிற்கும் சீடருக்கும் உள்ள வேற்றுமை இது!

குமிழி — 117

## 11. சிறுவர்களின் வளர்ச்சி

காரைக்குடியில் பல குழந்தை மருத்துவர்கள் உள்ளனர். தேவகோட்டையிலும் புகழ் பெற்ற மருத்துவர் ஒருவர் இருந்தார். வாரம் ஓரிரு முறை மாலையில்

காரைக்குடியில் தங்குவார். ஏராளமான கூட்டம் இருக்கும். சிறுவர்கட்கு வரும் பல நோய்கள் ஒவ்வாத உணவு வகைகள், தின்பண்ட வகைகள், இவற்றை உண்பதால் ஏற்படும் செரிமானம் இல்லாமை பற்றியே இருக்கும். இவ்வித வயிற்றுக் கோளாறுகட்கு நாட்டு மருத்துவத்தில் பல்வேறு குளிகைகள், சூரணங்கள் உள்ளன. இவற்றைத் தேனில் குழைத்துக் கொடுத்தால் விரைவில் நோய்கள் நீங்கிக் குணமாகும். காற்றின் மூலமாகவும், நீரின் மூலமாகவும் பரவும் நோய்களும் உள்ளன. இந்நோய்களையும் சூரணங்கள் போக்கும். பல நோய்கள் வந்து வந்து போனால் குழந்தையின் உடலிலும் நோய்களைத் தாங்கும் ஆற்றல் ஏற்படும்.

அக்காலத்தில் (1950) ஆண்டிற்கு ஒரு குழந்தைக்கு ரூ.25 வீதம் கட்டி விட்டால் மருத்துவரே வாரம் ஒரு முறையாவது குழந்தையைப்பார்த்துப் போகும் வழக்கமும் இருந்தது. பல குழந்தைகள் உள்ள பெரிய வீடுகளில் இந்தப் பழக்கம் நடைமுறையில் இருந்து வந்தது. காரைக்குடி மகர் நோன்பு அக்கிரகாரத்தில் (கல்லுக் கட்டிக்கு அருகில்) கோபால கிருஷ்ண அய்யர் என்ற நாட்டு மருத்துவர் ஒருவர் இருந்தார். இவர் தினமணி நிருபராகவும் பணியாற்றி வந்தார். மேற்படி அக்கிரகாரத்திலேயே வாடகைக்கார் நிலையமும் உள்ளது. காரைக்குடி சென்ற சில நாட்களில் கோபால கிருஷ்ணய்யரைப் பற்றிச் சிலர் சொல்லக் கேட்டு அறிந்து கொண்டேன். நல்லவர்; சாதுவானவர்; சத்துவ குணம் மிக்கவர். இராமலிங்கத்திற்கு (பத்து வயது வரை) வயிற்றுக் கோளாறு ஏற்படும் போதெல்லாம் இவர் தரும் சூரணங்களாலேயே குணமாயிற்று. ஒரு தடவைக்குரிய மருந்து 10 பை, 15 பை மேல் இல்லை. 3 நாட்கள் சாப்பிடும்படி (நாளொன்றுக்கு மூன்று வேளை) தருவார்; ஒரு ரூபாய் ஒன்றரை ரூபாய்க்கு மேல் போகாது. நோயும் குணப்பட்டு விடும்.

இவர் தவிர அதே அக்கிரகாரத்தில் டாக்டர் எஸ். சுப்பிரமணிய அய்யர் மருத்துவ நிலையமும் இருந்தது. அதில் டாக்டர் P. K. நாராயண அய்யர் என்ற மருத்துவரும் பணியாற்றினார்; இவர் அந்த அக்கிரகாரத்லேயே குடியிருந்தார். டாக்டர் சுப்பிரமணிய அய்யர் செக்காலை என்ற இடத்தில் குடியிருந்தார். மருத்துவ நிலையத்திற்கும் அவர் இல்லத்திற்கும் 2 கி. மீ. தொலைவு இருக்கும். இவர் முற்பகல் 8 முதல் 12 மணிவரையிலும் பிற்பகல் 5 முதல் 7½ மணி வரையிலும் மருத்துவ நிலையத்தில் இருப்பார். டாக்டர் P. K. நாராயண அய்யரும் இதே நேரத்தில் நிலையத்தில் பணியாற்றுவார்; அவசரத்திற்கு இல்லத்திலும் இவரைப் பார்த்துச் சிகிச்சை பெறலாம். டாக்டர் சுப்பிரமணியம் நாட்டுப் பற்றாளர். ஒரு சமயம் காங்கிரசின் சார்பாக ஐந்தாண்டுகள் (1947—52) சட்டசபை உறுப்பினராகவும் பணியாற்றியவர். நான் காரைக்குடியிலிருந்த பொழுது கோவாப்பரேட்டிவ் துறையில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்தார்.

இராமலிங்கம் : இவன் என் மூத்த மகன். 13-10-1949—துறையூரில் பிறந்தவன். இவனுக்குப் பத்து வயதுவரை பல்வேறு உடற்கோளாறுகள் ஏற்பட்டன. சாதாரண வயிற்றுக் கோளாறுகள் கோபால கிருஷ்ணய்யரின் சூரணங்களாலேயே குணப்பட்டுவிடும், இவனுக்கு நான்குமுறை கவலைக்கிடமான கோளாறுகள் ஏற்பட்டன. இவற்றை நினைவு கூர்கின்றேன்.

(1) காதுக் கோளாறு : ஒரு சமயம் காதில் சீழ் வடிந்தது. டாக்டர் சுப்பிரமணியரிடம் காட்டினேன். அவர் கம்பவுண்டரிடம் சுத்தப்படுத்தி மருந்து போட்டனுப்புமாறு கூறினார். அவ்வாறு செய்யப்பட்டது. மறுநாள் அதிகமாகச் சீழ் வடிந்தது. முதல் நாள் சிகிச்சையே மேற்கொள்ளப் பெற்றது. மூன்றாம் நாள் இன்னும் அதிகமான சீழ் வடிந்தது, இதே சிகிச்சை செய்யுமாறு ஏவினார். எனக்குப்பயமாய்ப் போய்விட்டது.

''ஐயா, சற்றுச் சிறப்பான முறையில் கவனியுங்கள்'' என்றேன். அவர் ''மண்டையிலிருப்பவையெல்லாம் வெளிவர வேண்டுமல்லவா?'' என்றார். ''மூளையைச் சொல்லுகிறீர்களா?'' என்றேன். ''இல்லை, சீழைச் சொல்லுகின்றேன்'' என்றார். ''சின்ன டாக்டர் எங்குள்ளார்?'' என்று வினவினேன். ''என்னைப் பார்த்தால் டாக்டர் மாதிரி தெரியவில்லையா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார். ''தெரிகிறது. ஊரிலும் உங்கட்கு நல்ல பேர். ஆனால் கோவாப்பரேட்டிவ் விஷயங்களில் இருக்கும் கவனம் மருத்துவத்தில் இல்லை. என்பதைக் காண்கின்றேன். அதனால்தான் சின்ன டாக்டரைக் கேட்டேன்'' என்று கூறினேன் நானும் சிரித்துக் கொண்டே. ''அடுத்த அறையில் இருக்கின்றார் போய்ப் பாருங்கள்'' என்றார் கோபமில்லாமல்.

அவரைப் பார்த்து காதை நன்கு சோதிக்குமாறு வேண்டினேன். ஒரு பென்சிலின் ஊசி மருந்தும் காய்ச்சி ஆவியாக்கி வடித்த நீரும் வாங்கி வருமாறு சொன்னார்; அவ்வாறே வாங்கி வந்தேன். காதை நன்கு தூய்மை செய்து பென்சிலின் ஊசி மருந்தைச் சொட்டிப் பஞ்சினால் காதை மூடி அனுப்பினார். அடுத்த நாள் சென்று பார்த்த போது, சீழ் வடிவது நின்றது. சுத்தம் செய்து ஏதோ சொட்டு மருந்து இட்டு பஞ்சினால் மூடினார். இதோடு நின்றுவிடும்; இனி வரத் தேவை இல்லை என்று சொல்லி அனுப்பினார். மருத்துவர் கவனம் குறைந்தாலோ நோயாளியின் பாடு ஆபத்துதான் என்பதற்கு இஃது ஓர் எடுத்துக் காட்டு.

(2) சிறுநீர் கழிக்க முடியாமை : 1954-என்று நினைக்கின்றேன். ஒருநாள் இராமலிங்கம் சிறுநீர் கழிக்க முடியாமல் துன்பப்பட்டான் (5-வயது சிறுவன்). குறியைச் சோதித்தலில் இலிங்கக் கவசம் (Prepuse) மூடிக் கொண்டு இருந்தது; மிகச் சிறிய துவாரமே காணப் பட்டது. அது வழியாக நீர் சரளமாக வெளிப்பட முடிய

வில்லை. உடனே டாக்டர் P. K. நாராயண அய்யரிடம் காட்டினேன். அவர் சோதித்து அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்றார். உடனே அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப் பெற்றான் சிறுவன். அறுவை செய்து ஒன்பது தையல் போடப் பெற்றன. மருத்துவமனையிலேயே படுக்கை; என் அன்னையார் வேளாவேளைக்கு உணவு கொண்டு சென்று இரவு கூட அங்கேயே தங்கிப் பைய னுக்குத் துணையாக இருந்தார்கள். ஒருவாரம் மருத்துவ மனையிலேயே தங்கியிருக்க வேண்டுமென்று சொல்லி விட்டார்கள்.

ஒருநாள் ஒன்றிரண்டு தையல்கள் பிரிந்துவிட்டன போலும்! குருதி மிக அதிகமாக வடிந்தது. சலவை செய்த என் பழைய வேட்டி முழுதும் நனைந்துவிட்டது. எங்களுக்கு ஒரே அச்சம். டாக்டர்கள் இருவருமே ஊரில் இல்லை. இரண்டு நாள் கழித்து டாக்டர் நாராயணன் வந்தார்; பிரிந்த தையல்களைச் சரிப்படுத்தினார். நான்கு நாட்கள் அதிகம் தங்க நேரிட்டுவிட்டது. புண் ஆறி பூர்ண குணம் அடைந்தான் சிறுவன். வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டோம்.

(3) மூன்றாவது முறை வந்ததுதான் பெரிய ஆபத்து. ஒருநாள் இரவு பத்து மணிக்குமேல் வயிறு உப்பி மந்தம் ஏற்பட்டுக் கால் கைகள் உதறி ஓய்ந்து போய்விட்டான். பேச்சு இல்லை; மூச்சுதான் இருந்தது. வாயில் நுரை நுரையாக வழிந்தது. எங்களுக்கு ஒரே பயமாய்ப் போய்விட்டது. ஓட்டமாக ஓடி கோபால கிருஷ்ணய்யரை வாடகைக் காரில் (Taxi) இட்டு வந்தேன். அவரும் திகைத்துப் போய் ஒன்றும் புலப்படாமல் திண்டாடினார். சிறிது நேரத்தில் அதே வாடகைக் காரில் டாக்டர் P. K. நாராயண அய்யரைக் கொணர்ந்தேன். அவரும் திகைத்தார்; இந்த நிலையில் ஊசி போடக் கூடாது என்று சொல்லி விட்டார். உடனே அதே காரில் சா. க.வை

அழைத்து வந்தேன். அவரும் மருந்துப் பெட்டியுடன் வந்திருந்தார். சா. க. குழந்தை மருத்துவத்தில் கை தேர்ந்தவர். அவருக்கும் ஒன்றும் புலப்படவில்லை. மணிகாட்டியின் முட்கள் வேகமாகச் சுழன்று கொண்டிருந்தன. மணி இரவு 12, 1, 2...வரை ஆகிவிட்டது. இறுதியாக ஓந்தி எண்ணெய் சிறிது அளவு வாய் வழியாகச் செலுத்தி விட்டால் சரியாய் விடும் என்றார் கோபால கிருஷ்ண அய்யர். எல்லோரும் பொறுமையை இழந்த நிலையில் இருந்தோம். எல்லோருமே ஓந்தி எண்ணெயைச் சங்கின் மூலம் செலுத்துமாறு கேட்டுக் கொண்டோம். வாய் இறுக மூடி இருந்தது; பற்களை 'நர ர' என்று கடித்துக் கொண்டிருந்தான். மிக்க சிரமத்துடன் ஒன்றிரண்டு அவுன்சு எண்ணெய் இறங்கி விட்டது. ஒரு மூன்று மணித்துளிக்குள் தண்ணீர் தண்ணீராக நுரையுடன் வாந்தி எடுத்து விட்டான் சிறுவன். வயிறும் குறைந்து விட்டது; செருகிக் கிடந்த கண்களும் திறந்தன; விழித்துப் பார்த்தான். சில்லிட்டுக் கிடந்த உடலிலும் வெப்பம் தோன்றியது; கடுங்காய்ச்சல் போன்ற வெப்பம் ஏறியது. மீண்டும் பயம் தோன்றியது. டாக்டர் P.K நாராயணஅய்யர் ''பயப்படவேண்டாம்; வெப்பம் இந்த உடலுக்கு வேண்டும். அஃது இயல்பாகவே வந்து விட்டது. இந்தக் கம்பளியில்அப்படியே கிடக்கட்டும். விடிந்தால் ஒன்றும் இராது'' என்று கூறினார். நான் அயோத்தியில் கூனியின் சூழ்ச்சியால் கைகேயியின் அந்தப்புரத்தில் மயங்கிக் கிடந்த தசரதன் பட்ட பாட்டை நினைத்துக் கொண்டேன். சா. க.வும் ஒப்புமை சரியே என்று கூறினார். பிறகு காத்துக் கிடந்த வாடகைக் காரில் ஏற்றி அவரவர்களை அவரவர் வீடு கொண்டு போய்ச் சேர்த்தேன். குழந்தை வளர்ப்பில் எதிர்பாராமல் இத்தகைய பிரச்சினைகளையெல்லாம் சந்திக்க நேரும் என்பதை வலியுறுத்தவே இந்நிகழ்ச்சியை எடுத்துக் காட்டினேன்.

(4) நான் திருப்பதியில் இருந்த பொழுது இராமலிங்கத்தின் உள்ளங்காலில் துருப்பிடித்த ஆணி குத்திச் சீழ்ப்பிடித்துப் பெருந்தொல்லையை விளைவித்து விட்டது. டாக்டர் P K நாராயணஅய்யர் அப்பகுதியை வெட்டி எடுத்து விட்டு 10 நாட்களில் குணப்படுத்தினார் என்று கடிதம் மூலம் அறிந்து கொண்டேன்.

இராமகிருஷ்ணன் : இவன் என் இளையமகன். காரைக்குடியில் 22-11-1953இல் பிறந்தான். இவனுடைய குழந்தைப்பருவத்திலும் நான்கு முறை உடற்கோளாறுகள் ஏற்பட்டன.

1. காதுக்கோளாறு : இவனுக்கும் ஒரிரு முறை காதில் சீழ் வடிந்தது. டாக்டர் நாராயண அய்யர் எளிதில் குணப்படுத்தினார். கவலைக்கு இடம் தராத நிலை.

2. நெஞ்சில் மார்புகளுக்கிடையில் பெரிய இரத்தக் கட்டி-தக்காளிப் பழம் அளவுக்கு கிளம்பியது. எங்களுக்கு ஒரே பயம்—இதயத்தைத் தாக்குமோ என்று. என் அன்னையார் பையனை மருத்துவமனைக்கு இட்டுச் சென்றார்கள். டாக்டர் சுப்பிரமணியர்தான் இருந்தார். பையனைச் சோதித்து, ''ஐயோ, இதில் ஒரு வண்டிச் சீழ் உள்ளது. மாவு வைத்துக் கட்டி நாளைக்கு அழைத்து வாருங்கள்'' என்று சொல்லிவிட்டார். அன்றிரவு மாவு வைத்துக் கட்டிவிட்டார்கள். மறுநாள் கட்டை அவிழ்த்துப் பார்த்ததில் கட்டி இருந்த இடமே தென்படவில்லை. மருத்துவமனைக்குப் போக வேண்டிய நிலையே ஏற்பட வில்லை.

(3) ஓராண்டு காரைக்குடியில் தண்ணீர்ப் பஞ்சம்; அந்த ஆண்டு வானமும் பொய்த்தது. இராமகிருஷ்ண னுக்குத் தலையெல்லாம் வேனல் கட்டிகள்; கட்டிகள் இல்லாத இடம் மிகக் குறைவு. புறப்படும்போதே மருத்துவரிடம் காட்டத் தவறிவிட்டேன். சிறிய கட்டிகள் ஒன்று சேர்ந்து பெரிய கட்டிகளாயின; வலி தாங்க முடிய

வில்லை. அறுவை சிகிச்சை செய்து சீழ் நீக்கப்பட்டது. பென்சிலின் ஊசி மருந்தைத் தெளித்துக் கட்டினார். விரைவில் குணமாயிற்று. இன்றும் பையன் தலையில் பெரிய வடு இருப்பதைக் காணலாம்.

(4) இவனுக்கும் வயிற்றுக் கோளாறு பயங்கரமாக ஏற்பட்டது. அண்ணன் மாதிரியே இவனும் வாயில் நுரை தள்ளி பல்லைக் கடித்துக்கொண்டு வயிறு உப்பிக் கிடந்தான். எங்களுக்கு ஒரே பயம். கோபாலகிருஷ்ண அய்யரின் ஓந்தி எண்ணையே குணப்படுத்திவிட்டது.

இந்த இரண்டு பயங்கரமான அநுபவங்களும் குளிர் காலத்தில்தான் ஏற்பட்டன. அதிரசங்களை அதிகமாகத் தின்றதால் ஏற்பட்ட விளைவுகள் இவை என்பதை அறிய முடிந்தது. குழந்தைகட்கு எட்டு, ஒன்பது வயது வரையில் மாலை 3 மணிக்கு மேல் அதிரசம் போன்ற எண்ணெய்ப் பொருள்கள் அதிகமாக உண்ணத் தரலாகாது என்பது எனக்குப் படிப்பினை. இந்த நூலைப் படிப்பவர்களும் இப்படிப்பினையைப் பின்பற்றுவார்களாக.

பள்ளியில் இந்தி பயிற்றப்படாததால் வெளியில் இந்தி பிரச்சார சபையால் நடத்தப் பெறும் தனிப் பயிற்சிப் பள்ளியில் படிக்க வைத்து முதல் மூன்று தேர்வு களிலும் வெற்றி பெறச் செய்தேன். இஃது எய்ப்பினில் வைப்பாக இருக்கட்டும் என்றே இரு சிறார்களையும் இந்தி படிக்க வைத்தேன். பள்ளியிலும் இராமலிங்கம் பகுதி-II தமிழுக்குப் பதிலாக சமஸ்கிருதம் படிக்கச் செய்தேன். பல மொழிகள் அறிவு பெறுவதால் நன்மையுண்டு என்பது என் கருத்து. 1954 முதல் இராமலிங்கம் முதல் வகுப்பில் சேர்ந்தான்; 1958இல் இராமகிருஷ்ணன் முதல் வகுப்பில் சேர்ந்தான். இருவரையும் 8-ம் வகுப்பு வரை (மூன்றாம் படிவம்) ஓய்வு பெற்ற இடைநிலை பயிற்சி ஆசிரியர் திரு A. இராமசாமி அய்யர் பொறுப்பில் தனிப் பயிற்சி பெறச் செய்தேன். வகுப்பில் பாடங்களில் பிற்போக்கு

நிலை ஏற்படக்கூடாது என்பதற்காக இந்த ஏற்பாடு. 1962 வரை இராமலிங்கத்தையும் 1966 வரை இராம கிருஷ்ணனையும் இந்த ஆசிரியர் நன்கு கற்பித்துக் கல்வி யில் நல்ல அடிப்படை அறிவை உண்டாக்கினார். இப் பெருமகன் நான்கு ஆண்டுகட்கு முன்னர்தான் (1985) மதுரையில் தன் மகன் வீட்டில் திருநாடு அலங்கரித்தார் என்ற செய்திகேட்டு வருந்தினேன். 85-அகவையைத் தாண்டிதான் இப்பூவுலக வாழ்வை நீத்தார் திரு. இராம சாமி அய்யர்.

குமிழி - 118

## 12. இந்து மதாபிமான சங்கம்

சற்றேறக்குறைய அறுபது ஆண்டுகட்கு முன்னர் காரைக்குடியிலுள்ள சில இளைஞர்கள் ஒன்றுகூடி இச் சங்கத்தைத் தோற்றுவித்தனர். இந்த இளைஞர்களில் சொ. முருகப்பர், ராய. சொக்கலிங்கம், சா. கணேசன் முக்கியமானவர்கள். இந்தச் சங்கத்திற்கு தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் வந்திருக்கின்றார். சங்கத்தின் மீது ஏழு பாடல்கள் பாடியுள்ளார்.[1] இச்சங்கம் ஒன்றே பாரதியாரின் பாடல் பெற்றது. இந்த இளைஞர்களுடன் பாரதி ஒளிப் படமும் எடுத்துக்கொண்டார். இப்படம் சங்கக் கட்டடத்தில் உள்ளது. இதில் சொ. முருகப்பர், ராய. சொ., சா கணேசன் வேறு ஒன்றிரண்டு இளைஞர் கள் உள்ளனர். இந்த மூன்று பெரியார்களின் இளமைக் கோலத்தை இப்படத்தில் காணலாம். முதல் இரு பெரியார் களை விட சா. கணேசன் மிக இளையவர். இவர்கள்

1. பா. க: தனிப் பாடல்கள். இந்து மதாபிமான சங்கத்தார்.

கணேசனை ஏகவசனத்தில் அன்பாக அழைப்பதைப் பார்த்திருக்கின்றேன்.

செட்டி நாட்டில் தேசபக்தி தலைதூக்கி இருந்தது. மேற்குறிப்பிட்ட மூன்று இளைஞர்களும் தேசபக்தி மிக்கவர்கள்; தங்கள் வாழ்நாள் முழுதும் கதரைத் தவிர வேறு ஆடைகள் அணிந்ததை நான் பார்த்ததில்லை. இவர்கள் மூவரும் சிறைவாசமும் செய்தவர்கள். 1942 புரட்சியின் போது சா. க. தலைமறைவாக இருந்தும் செயற்பட்டவர். வெள்ளையர் அரசு இவரைப் பிடிக்க எவ்வளவோ முயன்றும் அவர்கள் பிடியில் இவர் அகப்படாமல் தாடி வளர்த்துக்கொண்டு பல்வேறு மாறுவேடங்களில் இருப்பார்; அற்புதமாகச் செயற்படுவார். தேவக்கோட்டை நீதிமன்றம் தீக்கிரையானதில் இவர் பங்கு உண்டு என்று மக்கள் பேசிக் கொள்வதை நான் கேட்டிருக்கின்றேன். தேசபக்தியுடன் இந்த இளைஞர்கள் சமயப் பற்றும் மிக்கவர்கள். இவர்கள் எல்லோருக்கும் மலேயா, சிங்கப்பூர், பினாங்கு, ஈப்போ முதலிய அயல்நாட்டுத் தொடர்புகளும் இருந்துள்ளன. இவர்களுள் ராய. சொ. சிறந்த கவிஞர். காந்தி பிள்ளைத் தமிழ் இவர் பாடிய நூல்களுள் ஒன்று. இவர்களின் பல்வேறு தொண்டுகளைப் பற்றிப் பாரதியார்,

பலநூல்கள் பதிப்பித்தும், பலபெரியோர்
  பிரசங்கம் பண்ணு வித்தும்
நலமுடைய கலாசாலை புத்தகசா
  லைபலவும் நாட்டி யுந்தம்
குலமுயர நகருயர நாடுயர
  உழைக்கின்றார் கோடி மேன்மை
நிலவுறஇச் சங்கத்தார் பல்லூழி
  வாழ்ந்தொளிர்க நிலத்தின் மீதே! (7)

என்று போற்றியுள்ளார். இச்சங்கத்தின் ஆண்டுவிழாவில் தமிழ்த் தென்றல் திரு.வி.க. போன்ற சான்றோர்கள்

தலைமையேற்றுப் பேசியுள்ளனர். நான் காரைக்குடி சென்ற பிறகு இந்தச் சங்க விழாக்களில் பண்டிதமணி கதிரேசச் செட்டியார், டாக்டர் ஏ.சி. செட்டியார், சுவாமி சித்பவாநந்தர், பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், செல்வி இ. தெ. இராஜேசுவரி அம்மையார், வள்ளல் அழகப்பச் செட்டியார், தொழி லதிபர் தியாகராசச் செட்டியார் போன்ற புலவர் பெரு மக்களும் வள்ளல்களும் தொழிலதிபர்களும் பங்கு கொண்டு சிறப்பித்ததை நேரில் கண்டவன்.

தொடக்கக் காலத்திலிருந்தே நான் பொது மேடையில் பேச விரும்பாதவன். காரைக்குடியிலிருந்தபோது சுற்றுப் புறங்களில் உள்ள சிற்றூர்ப் பள்ளிகளில்தான் பேசி உள்ளேன். ஒரு சமயம் சா. கணேசன் வற்புறுத்தலின் பேரில் கம்பன் திருநாள் நிகழ்ச்சியில் 'கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்' என்ற தலைப்பில் தாரையைப் பற்றிப் பத்து மணித்துளிகளும், இந்து மதாபிமான சங்கச் சிறப்பு நிகழ்ச்சிகள் ஒன்றில்வள்ளல் அழகப்பர் தலைமையில் 'சமய வானில் துருவ மீன்' என்ற தலைப்பில் 30 மணித்துளிகளும் முருகப்பனார் இயற்றிய பாலகாண்ட வெளியீட்டு விழா வில் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் தலைமையில் பதினைந்து மணித் துளிகளும் பேசியதாக நினைவு. அதன் பிறகு கும்பகோணத்தில் நடைபெற்ற ஒரு சைவ மாநாட்டில் ராய. சொ. தலைமையில் 30 மணித் துளிகள் பேசினேன். 1948-இல் நான் துறையூரிலிருந்தபோது பள்ளி ஆண்டு விழாவில் மு. வ. அவர்களை சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தேன். அவருடன் உரையாடிக் கொண்டிருந்த போது, ''ரெட்டியார், நான் பொதுவாகப் பேச விரும்புவ தில்லை. நான் படிப்பவன்; எழுதுபவன். அமைதியான போக்கை விரும்புபவன். நீங்கள் வற்புறுத்தியதன்பேரில் நீங்கள் தொடங்கிய பள்ளியில் ஆண்டு விழாவில் கலந்து கொள்ள அழைத்தீர்கள். உங்கள் அன்புக்குக் கட்டுப் பட்டேன்; ஒப்புக்கொண்டேன். ஒருநாள் நிகழ்ச்சியானா

லும் மூன்று நாள் பணி வீணாகின்றது. பயணம், உணவு மாற்றம் இவை எனக்கு ஒத்துக் கொள்வதில்லை'' என்று கூறினார். மேலும், ''ரெட்டியார், நீங்களும் அமைதியான போக்கையுடையவராகக் காணப்படுகின்றீர்கள். பள்ளி வளர்ச்சியில் உங்களையே அர்ப்பணித்துக் கொண்டுள்ளீர்கள். அதிகமாகப் பேசாதீர்கள்; கூட்டத்திற்குப் போவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அதிகமாகப் படியுங்கள்; எழுதுங்கள். இப்பழக்கம்தான் உங்கள் வாழ்வை வளமாக்கும்'' என்றும் அறிவுரை—அறவுரை—கூறியது இன்றும் என் மனத்தில் பசுமையாகவே உள்ளது. அதை மறைமொழிபோல் இன்றளவும் கடைப்பிடித்து வருகின்றேன்.

காரைக்குடியில் இருந்த வரையில் செட்டிப் பெருமக்களிடம் நான் நன்கு பழகியவரை நான் அவர்களிடம் கண்டவற்றை நினைவுகூர்கின்றேன். பெரும்பாலோர் தேசபக்தி மிக்கவர்கள்; தமிழ்ப்பற்றும் சமயப்பற்றும் மிக்கவர்கள். சிவம் பெருக்கும் சீலர்கள். சிவன் கோயில் மேற்கு வீதியில் நிலையாக அமைக்கப் பெற்றிருக்கும் அறுபத்து மூவர் திருமடமும், இந்து மதாபிமான சங்கமும் நிலையான சான்றுகளாகும். எல்லோருமே.

நண்ணியெல்லாப் பொருளினும் உட்பொருளாய்ச்
செய்கையெலாம் நடத்தும் வீறாய்த்
திண்ணியநல் அறிவொளியாய்த் திகழுமொரு
பரம்பொருளை அகத்தில் சேர்த்துத் (1)

திகழ்பவர்கள். இவர்களைப் பற்றி அறிவுரையும் அருளுரையும் பொதித்த போக்கில் சங்கத்தின் மீது பாடிய பாடல்களை நினைவு கூர்கின்றேன்.

'செய்கையெலாம் அதன்செய்கை நினைவெல்லாம்
அதன்நினைவு தெய்வ மேநாம்
உய்கையுற நாமாகி நமக்குள்ளே
யொளிர்வ'தென உறுதி கொண்டு

பொய்கயமை சினம்சோம்பர் கவலைமயல்
வீண்விருப்பம் புழுக்கம் அச்சம்
ஐயமெனும் பேயையெலாம் ஞானமெனும்
வாளாலே அறுத்துத் தள்ளி (2)

எப்போதும் ஆனந்தச் சுடர்நிலையில்
வாழ்ந்துயிர்கட் கினிது செய்வோர்
தப்பாதே இவ்வுலகில் அமரநிலை
பெற்றிடுவார்; சதுர்வே தங்கள்
மெய்ப்பான சாத்திரங்கள் எனுமிவற்றால்
இவ்வுண்மை விளங்கக் கூறும்
துப்பான மதத்தினையே இந்துமத
மெனப்புவியோர் சொல்லு வாரே. (3)

அருமையுறு பொருளிலெல்லாம் மிகஅரிதாய்த்
தனைச்சாரும் அன்பர்க் கிங்கு
பெருமையுறு வாழ்வளிக்கும் நற்றுணையாம்
இந்துமதப் பெற்றி தன்னைக்
கருதியதன் சொற்படியிங் கொழுகாத
மக்களெலாம் கவலை யென்னும்
ஒருநரகக் குழியதனில் வீழ்ந்துதவித்
தழிகின்றார் ஒய்வி லாமே. (4)

இத்தகைய துயர்நீக்கிக் கிருதயுகந்
தனையுலகில் இசைக்க வல்ல
புத்தமுதாம் இந்துமதப் பெருமைதனைப்
பாரறியப் புகட்டும் வண்ணம்
தத்துபுகழ் வளப்பாண்டி நாட்டினிற்கா
ரைக்குடியூர் தனிலே சால
உத்தமராந் தனவணிகர் குலத்துதித்த
இளைஞர்பலர் ஊக்கம் மிக்கார் (5)

உண்மையே தாரகமென் றுணர்ந்திட்டார்
அன்பொன்றே உறுதி யென்பார்
வண்மையே குலதர்ம மெனக் கண்டார்;
தொண்டொன்றே வழியாக் கண்டார்;
ஒண்மையுயர் கடவுளிடத் தன்புடையார்;
அவ்வன்பின் ஊற்றத் தாலே
திண்மையுறும் இந்துமத அபிமான
சங்கமொன்று சேர்த்திட் டாரே. (6)

இந்தச் சங்கத்தில் ராய. சொ. என்னை உறுப்பின ராக்கி விட்டார். பின்னர் நிர்வாக சபையிலும் சில ஆண்டுகள் பணி புரிய வாய்ப்பளித்தார். நான் காரைக்குடியில் இருந்த பத்தாண்டு காலத்திலும், அதற்குப் பிறகு திருப்பதியிலிருந்து குடும்பத்தைப் பார்க்க விடுமுறைக் காலங்களிலும், அதற்குப் பிறகு தாம் மறையும் வரையிலும் சொ. முரு., ராய. சொ., சா. க. இவர்கள் என்னிடம் அளவற்ற பற்றுக் கொண்டிருந்ததை நினைவு கூர்கின்றேன். எல்லாத் தமிழாசிரியர்களிடமும் இவர்கள் நிறைந்த அன்புடையவர்கள்தாம். ஆனால், நான் இவர்களிடம் மிகவும் நெருங்கிப் பழகினமையால் இவர்கள் என் மீது தனியன்பு காட்டி வந்தது இன்றும் (1989) என் மனத்தில் பசுமையாக உள்ளது.

**சங்கத்துச் சான்றோர்கள்** : இந்து மதாபிமான சங்கத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் இருந்தார் ராய. சொ. ஆண்டுதோறும் தேர்தல் நடந்தாலும் எல்லோரும் ராய. சொ.வையே ஒரு மனதாகத் தேர்ந்தெடுப்பார்கள். மூன்று நான்கு ஆண்டுகள் என்னை நிர்வாகச் சபைக்குத் தேர்ந்தெடுத்தார்கள். நான் 1960இல் திருப்பதிக்குப் போன பிறகு ஆறு ஆண்டுகள் காரைக்குடிக்கு அடிக்கடி (விடுமுறை நாட்களில்) வந்து போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் ராய. சொ. என்னை ஆயுள் உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டார்.

நான் காரைக் குடியிலிருந்தபோதே ராய. சொ. வின் வாழ்க்கைத் துணைவி உமையாள் ஆச்சி சிவப்பேறு அடைந்தார்கள். ஆகவே ராய. சொ. அமராவதி புதூர் இல்லத்தை—ஓர் ஆசிரமம் போல் இருந்த இல்லத்தை—விற்று விட்டுக் காரைக்குடியிலேயே தங்கி விட்டார்கள். ஒரு கணிசமான தொகையை சங்கத்திற்கு அர்ப்பணம் செய்தார்கள். அதைக் கொண்டும் போதாதற்குச் சங்க நிதியில் சிறிது எடுத்தும் சங்கக் கட்டடத்தின்மேல் ஒரு மண்டபம் எழுப்பினார்கள். இஃது இன்று ராய. சொ. உமையாள் மண்டபம் என்ற பெயரால் வழங்கி வருகின்றது. அதில் சமைப்பதற்குத் தனியறையும் படுப்பதற்குத் தனி அறையும் (கழிப்பறையுடன் கூடியது) நடுவில் விசாலமான அறையும் (Hall) அமைத்தார்கள். இந்த விசாலமான அறை சிறிய கூட்டம் (50 பேர்) நடைபெறுவதற்குப் போதுமானது. எஞ்சிய வாழ்நாளை ஒரு சமையல் ஆள் உதவியுடன் வாழ்ந்து சிவப்பேறு அடைந்தார்கள். (30.9.1974 இரவு 9 மணி.), இவரோடு உரையாடும்போது பொழுது போவதே தெரியாது. பேச்சு முழுவதும் இலக்கியத்தில்—குறிப்பாக பக்தி இலக்கியத்தில்—தோய்ந்தே இருக்கும்.

சங்கத்துச் சான்றோர்களில் சிலரைத் தான் இப்போது நினைவு கூர முடிகின்றது.

1. கா. காடப்பச் செட்டியார்: இவர் குன்றக்குடிக்கருகிலுள்ள ஆத்தங்குடியைச் சேர்ந்தவர். செல்வச் செழிப்புள்ளவர். ராய. சொ. விடம் பெருமதிப்புடையவர். தமிழ்ப்பற்றும் சிவப்பற்றும் மிக்கவர். சங்கத்து நிர்வாக சபையில் சில ஆண்டுகள் பணியாற்றினார். நிர்வாக சபைக் கூட்டத்திற்குத் தவறாது வருபவர். ராய. சொ. நடத்தி வந்த வில்லி பாரதத் தொடர் கூட்டத்திற்கும் சனி தோறும் தவறாது வந்திருந்து கேட்டுப் பயன் பெற்றவர். கொடை வள்ளல். என்மீது பேரன்புடையவர்.

2. இராமநாதன் செட்டியார் : இருப்பூர்தி நிலைய சாலையில் உள்ள ஒரு பெரிய வீட்டில் வாழ்ந்தவர் படிப்பு குறைவாக இருப்பினும் கேள்வி ஞானம் மிக்கவர் ராய. சொ.விடம் பேரன்புடையவர். இவர் திருமேனி இருந்த வரை மாலை நேரத்தில் நாள்தோறும் சங்கத்தில் இவரைக் காணலாம். ஒரு சமயம் ராய. சொ. அவர் கட்கு அளித்த விருந்தொன்றில் பல நண்பர்களுடன் அடியேனும் கலந்து கொண்டது நினைவில் உள்ளது. பழகு வதற்கு இனியவர். ராய. சொ. தொடர்புள்ளவர்களிடம் பேரன்பு கொண்டவர். நான் திருப்பதி சென்ற பிறகு சிவப்பேறு அடைந்ததாகக் கேள்வியுற்றேன். சங்கத்தில் ஆயுள் உறுப்பினராக இருந்தவர்.

3. சொக்கலிங்கம் செட்டியார் : மகர்நோன்பு பொட்டலுக்கு (காந்தி சதுக்கம்) அருகில் முதல் தெருவில் ஒரு பெரிய மாளிகையில் வாழ்ந்தவர். கும்பகோணத்தில் இவருக்கு அரிசி ஆலை உண்டு. பெரும்பாலும் அங்கேயே இருப்பார். காரைக்குடி வந்து சில மாதங்கள் தங்குவார். அப்போது சங்கத்திற்குத் தவறாது எழுந்தருள்வார். செம்மை நிறத் திருமேனி. சிவபூசை எடுத்தவர். கழுத்தில் அக்கமணி அணிந்திருப்பார். இப்போது இவர் சிவலோகத்தில் வாழ்கின்றார்.

4. திருப்பூர் நாராயணன்: இளைஞர். தமிழ்ப் பற்று மிக்கவர். கேள்வி ஞானந்தான் அதிகம். சங்கத்தின் உறுப்பினர். நிர்வாகசபை உறுப்பினராகவும் ஒன்றிரண்டு ஆண்டுகள் பணியாற்றியவர். நான் காரைக் குடியிலிருந்த காலத்திலேயே இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.

5. அபிசீனியா பழ. நாச்சியப்பன்: செயல் திறம் மிக்கவர். ராய. சொ. விடம் பேரன்பு மிக்கவர். ராய. சொ. இடும் பணியைத் திறம்பட நிறைவேற்றுவார். அவர் 'வெட்டிக் கொண்டு வா' என்றால் இவர் 'கட்டிக் கொண்டு' வருபவர். பர்மாவில் நேதாஜி படையில் (INO)

சிறந்த பதவியை வகித்தவர். அவர் மறைந்த பிறகு இவர் தாய்நாடு திரும்பி விட்டார். நான் காரைக்குடியில் இருந்த போது 'திருமகள் அச்சகம்' என்ற ஓர் அச்சகம் தொடங்கி மிகத் திறம் படநடத்தி வந்தார். இதற்கு மகன் பொறுப்பாக இருந்தார். நான் திருப்பதியில் இருந்த போது இவருக்கு மணிவிழா நடைபெற்றது; எனக்கு அழைப்பும் வந்தது. நான் வாழ்த்துச் செய்திதான் அனுப்ப முடிந்தது. மணிவிழா நடைபெற்ற ஒன்றிரண்டு ஆண்டுகட்குப் பின்னர் சிவலோக பதவி அடைந்து விட்டார்.

6. மெ.ந. சிதம்பரம் செட்டியார்: இவர் சு. ராம. வீதியில் ஓர் இல்லத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார். சா. கணேசனுக்கு மிகவும் வேண்டியவராதலாலும், இலக்கியக் கூட்டத்தில் ஆர்வத்துடன் கலந்து கொள்பவராதலாலும் நான் காரைக்குடிவந்த ஒன்றிரண்டு திங்களிலேயே இவர் தொடர்பு ஏற்பட்டது. ராய. சொ. விடமும் நெருக்கமாகப் பழகுபவர். சங்கத்தின் ஆயுள் உறுப்பினர்; சில ஆண்டுகள் நிர்வாக சபை உறுப்பினராக வும் பணியாற்றியவர். இவரை M.N.ST. என்றால் தான் எல்லோரும் நன்கு அறிவார்கள். கழுத்தில் சிறியஅக்கமணி மாலை தரித்திருப்பவர். இவருக்கு ஒரே பெண்; சிறந்த முறையில் திருமணம் நடத்தினார். மாப்பிள்ளை ஒரு வழக்கறிஞர்.

7. மெ.செ.மெ. முத்துராமன்: இவர் சு.ராம. தெருவிலுள்ள ஒரு பெரிய வீட்டில் வாழ்கின்றார். தத்துப் பிள்ளையாக வந்தவர். வந்த இடத்துத் தந்தையார் பேரில் அளவற்ற பாசம் உடையவர். தெய்வ பக்தி மிக்கவர். கழுத்தில் சிறிய அக்க மணிகளாலான மாலை தரித்திருப்பவர். சங்கத்து ஆயுள் உறுப்பினர். சில ஆண்டுகள் நிர்வாக சபை உறுப்பினராகவும் பணி யாற்றினவர். ராய.சொ,சா.க. இவர்கள்பால் அளவற்ற

அன்பும் பாசமும் உள்ளவர். எந்தத் திருக்கோயில் விழாக்க ளாயினும் தோள் கொடுத்து முன்னின்று நடத்துவதில் நேசமும் மகிழ்ச்சியும் கொள்பவர். செல்வச் செழிப்பு மிக்கவர், இப்போது கம்பன் சேவையில் களிப்பெய்து கின்றார்.

8. திருநாவுக்கரசு செட்டியார் : பெருமாள் கோயிலுக்கருகிலுள்ள செல்லப்பச் செட்டியார் வீதி யிலுள்ள இல்லத்தில் வாழ்ந்தவர். தமிழறிவு மிக்கவர். நல்ல இசையுடன் பாடல்களைப் படிப்பவர். சங்கத்துக்கு அடிக்கடி வருபவர். ராய. சொ. வில்லிபாரதம் நடத்தின போது இரண்டாண்டுக்குமேல் இவர்தாம் பாடல்களை நன்கு படிப்பார்; படிப்பது மிகவும் கவர்ச்சியாக இருக்கும். இவர் இப்போது சிவப்பேறு அடைந்து விட்டார்.

9. சொக்கலிங்கய்யா: சிறந்த தமிழறிஞர். சங்கத்தில் தொடக்க காலத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். நான் காரைக் குடிக்குச் சென்றபோது இவர் சிவப்பேறு அடைந்திருந்தார். இவரது திருமகனார் திருநாவுக்கரசு செட்டியார்தான் சங்கத்திற்கு அடிக்கடி வருபவர். (இப்போது செப்டம்பர்-89-இவர் இல்லை). கழுத்தில் ஓர் அக்க மணியுடன் திகழ்பவர். சிவப்பழம்; சத்துவகுண மிக்கவர். சில சமயம் இவருக்கு மூக்குக்குமேல் கோபம் வருமென்று சொல்வார்கள். நான் இதைக் கண்டதே இல்லை.

10. சொக்கலிங்கம் செட்டியார்: புதுக் கோட்டை யைச் சேர்ந்தவர். அங்கு வட்டித் தொழிலுடன் வேறு ஏதோ தொழிலையும் செய்து வருபவர். சங்கத்தில் ஆயுள் உறுப்பினர். காரைக்குடிக்கு வரும் போதெல்லாம் சங்கத்திற்கு வந்து ராய.சொ.வைச் சேவிப்பவர். மாலை நேரத்தில் கடமைகளை முடித்துக் கொண்டு நெற்றியிலும் உடலிலும் திருநீற்றுக் காப்பணிந்து சங்கத்தில் அமர்ந் திருக்கும்போது பார்த்தால் சிவப்பழமாகக் காட்சி அளிப்பார். கரிய திருமேனி; சற்றுப் பருத்த திருமேனியர்

திருநீற்றுக் காப்பு சற்று வசீகரமாக இருக்கும். சாந்த சொரூபி. ஒரு சமயம் மாலை நேரத்தில் திருநீற்றுக் காப்புடன் சங்கத்தில் அமர்ந்திருந்தபோது ராய.சொ. இவரை நோக்கி, ''என்ன சொ. உங்களைப் பார்த்தால் முனியாண்டி விலாஸ் சோற்றுப் பானைக்குப் பட்டை தீட்டிய மாதிரி காணப்படுகின்றீர்கள்!'' என்று நகைச் சுவையை உதிர்த்தார். எல்லோரும் ராய.சொ. வின் உவமையைக் கேட்டு மகிழ்ந்தனர். சொ. அவர்களும் எல்லோருடனும் சேர்ந்து சிரித்து மகிழ்ந்தார்.

11. **சொ. நாராயணன்:** சொ.நா. என்றால் தான் அனைவருக்கும் நன்கு தெரியும். சிவநேசச் செல்வர். காரைக்குடி, முத்துப்பட்டணம், கீழ வீதியில் ஓர் இல்லத் தில் குடியிருப்பு. வில்லிபாரதம் கேட்கத் தவறாது சங்கத்துக்கு வருவார். வருமானவரி கணக்குத் தணிக்கை யாளர் தொழில். தொழிலில் நேர்மையுள்ளவர். என் மனைவி கணக்கைப் பதினைந்து ஆண்டுகள் பார்த்தார். அதன் பிறகு வரி இல்லாது போய் விட்டது. சங்க ஆயுள் உறுப்பினர். சங்கக் கணக்கிற்கும் தணிக்கையாளர் இவர். இப்போது சிவப்பேறு அடைந்தவர்.

12. **திருப்பதி செட்டியார்:** சங்க உறுப்பினர். முத்துப் பட்டணம் மேல் வீதியில் ஒரு பெரிய மாளிகையில் வசிப்பவர். ராய.சொ. மீது பேரன்பு மிக்கவர். இலக்கியச் சுவைஞர். ஒரு சமயம் ராய.சொ. வுக்கு இவர் வைத்த விருந்தில் அடியேனும் கலந்து கொண்டதாக நினைவு.

13. **ராய. சிதம்பரம் செட்டியார்:** ராய சித. என்று தான் வழங்குவார்கள். சங்கத்தில் ஆயுள் உறுப்பினர்; சில ஆண்டுகள் நிர்வாக சபை உறுப்பினராகவும் பணி யாற்றியவர். செல்வச் செழிப்புள்ளவர். குழந்தைப் பேறு இல்லை. ஒரு நல்ல பையனைத் தத்துஎடுத்துக் கொண்டார். நான் திருப்பதியில் இருந்தபோதே சிவப் பேறு அடைந்துவிட்டார்.

14. தேவராயன் செட்டியார் : சங்கத்து ஆயுள் உறுப்பினர். ராய. சொ. அவர்களிடம் பேரன்பு கொண்டவர். இலக்கியச் சுவைஞர். முத்துப் பட்டினத்தில் வாழ்பவர். இவர் ராய. சொ.வுக்கு ஒருமுறை அளித்த விருந்தில் அடியேனும் பங்கு கொண்டவன். அடியேன்பால் பேரன்பும் பெரு மதிப்பும் கொண்டவர். இவர்தம் திருக்குமாரன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நிலக் கூற்றியல் (Geology) துறையில் அதன் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றி வருகின்றார்.

எத்தனையோ நண்பர்கள் நினைவில் உள்ளனர். பெயர் நினைவு இல்லை. காரைக்குடியில் இருந்தவர் சுற்றுப்புற ஊர்களில் உள்ள பெரிய இடத்துத் திருமணங்கட்கு எல்லாம் ராய. சொ. எனக்கு அழைப்பு அனுப்பச் செய்வார்; தன்னுடன் என்னையும் கூட்டிச் செல்வார். அவர் வெளியிடும் நூல் கட்கு நான்தான் பார்வைப் படிவங்களைச் (Proofs) சரி பார்ப்பேன். இராயவரம் குழந்தையன் செட்டியார் மகன் திருமணத்தில் 'ஆழ்வார் அமுது' (நாலாயிரத்தில் 400 பாசுரங்களின் தொகுப்பு) என்ற நூல் இலவசமாக வழங்கப் பெற்றது. அந்த நூல் புதுக்கோட்டையில் அச்சாயிற்று. பார்வைப் படிவங்களைச் சரிபார்க்க என்னை அழைத்துச் சென்றார். அச்சக உரிமையாளர் சக்தி செட்டியாரின் விருந்தினர்களாக நான்கு நாட்கள் தங்கின தாக நினைவு. ராயவரத்தில் நடைபெற்ற திருமணத் திற்கும் என்னைக் கூட்டிச் சென்றார்கள். இதனால் குழந்தையன் செட்டியார், சக்தி செட்டியார் இருவரது அன்பிற்கும் நட்பிற்கும் பாத்திரமானேன். இவர்கள் இருவரும் இப்போது (1989) இல்லை; சிவப்பேறு அடைந்து விட்டார்கள். இருவருமே செல்வச் செழிப்புடையவர்கள். ராய. சொ. வின் கூட்டுறவால் என்னுடைய சமூக உறவு செட்டி நாட்டில் விரிந்தது.

## 13. கல்லூரி வளாகத்தில் பொருட்காட்சி

**1952**, டிசம்பர் மாதம் என்பதாக நினைவு. கல்லூரி வளாகத்தில் ஒரு பெரிய பொருட்காட்சிக்கு (Exhibition) ஏற்பாடு நடந்தது. அப்போது பொறியியற் கல்லூரியும் தொடங்கப் பெற்றிருந்தது. ஒவ்வொரு கல்லூரியும், கல்லூரியில் ஒவ்வொரு துறையும் இந்தப் பெரும் பணியில் மும்முரமாக இறங்கின. பொறியியல் துறை, அறிவியல் துறைகளாக இருப்பின் பொருட் காட்சியை அமைப்பது எளிது. அறிவியல் துறையிலுள்ள துணைக் கருவிகளைக் கொண்டே பல்வேறு கவர்ச்சிகர மான சோதனைகளை அமைத்துக் காட்டலாம். அரும் பொருட்காட்சியகம் (Museum) ஒன்று இருந்தால் அதிலுள்ள பொருட்கள் யாவற்றையும் கண்கவர் முறையில் 'கொலு'வாக அணி செய்து காட்டலாம். அறிவியல் துறை செயல் முறையாதலால் பிற துறைகளில் காட்ட முடியாத பல்வேறு செயல்களைக் காட்டிப் பார்வையாளர் களின் மனத்தைக் கவரலாம். மாணாக்கர்களாலேயே ஆயத்தம் செய்யப்பெறும் இத்தகைய பொருட்காட்சி யகத்தில் மாணாக்கர்களால் ஆயத்தம் செய்து காட்டப் பெறும் சோதனைகளின் உள்நோக்கத்தை அவர்கள் தெளி வாக அறியவும் கையாளும் முறைகளைப் புரிந்து கொள்ள வும் வாய்ப்புகள் கிடைக்கின்றன.

'குருவிக்குத் தகுந்த இராமேசுவரம்!' என்ற பழமொழிக்கிணங்கத் தமிழ்த் துறையிலும் ஒரு சிறிய ஏற்பாடு செய்திருந்தோம். இந்த ஆண்டு இத்துறையில் பத்துப் பன்னிரண்டு மாணவர்கள்தாம் சேர்ந்திருந்தனர்.

பிற துறை மாணாக்கர்களும் ஒத்துழைத்ததால் தமிழ்த் துறைக் கண்காட்சியும் மிகச் சிறப்பாக அமைந்தது. எந்த நிகழ்ச்சியானாலும் நம் நாட்டில் விநாயகப் பெருமானை முன் வைத்துதான் அது தொடங்கப் பெறுவது மரபாக இருந்து வருகின்றது. அது போலவே கல்லூரி வளாகத்தில் தமிழ் என்றாலேயே சா. கணேசன் தோன்றுவார். அவர் இல்லாவிட்டால் பருப்பு இல்லாத கல்யாணந்தான். பொருட்காட்சி தொடங்குவதற்குமுன் திட்டம் தீட்டப் பெறல் வேண்டும். இத்திட்டம் சா. க. இல்லத்தில் கருக் கொண்டு உருப் பெற்றது. நானும் அவரும் ஒருவாரம் சிந்தித்து திட்டத்தை உருவாக்கினோம்; பின்னர் செயற் படுத்தினோம்.

இத்திட்டத்தில் (1) எழுத்து வளர்ச்சி வட்டெழுத்து முதல் இன்றைய அச்செழுத்து வரை—விளக்கப் படங்கள்; (2) எழுதும் கருவிகள்: எழுத்தாணி முதல் இன்றைய பல்வேறு எழுது கருவிகள்; (3) எழுதும் தளம்; பனை ஓலை முதல் AIR MAIL தாள் வரை; (4) இலக்கியங்கள்; பத்துப் பாட்டு எட்டுத் தொகை நூல்களும் வரைவு விளக்கங்களும்; பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள்; ஐம்பெருங்காப்பியங்கள்; ஐஞ்சிறு காப்பியங்கள்; காவியங்கள், புராணங்கள்; பக்தி இலக்கியம்—சைவம், வைணவம்; பதி நான்கு சாத்திரங் கள்; வைணவ சாத்திர நூல்கள்; பண்டார சாத்திரங்கள். சிற்றிலக்கியங்கள்—தூது, உலா, பிள்ளைத் தமிழ், மடல் முதலியவை; பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், ச. து. யோகியார், சுத்தாநந்த பாரதியார்; நாடக நூல்கள்; நாட்டுப் பாடல்கள்—இவை கிடைத்தவரை பாகுபடுத்தி வைக்கப் பெற்றன (அஸ்பெஸ்டாஸ் கூரை வேயப் பட்ட கட்டடத்தில்).

துறைக்குரிய வகுப்பறைகளில் பெரும்பாலும் வரை படங்களே காட்சி ஒழுங்கில் அமைத்திருந்தோம். ஐந்திணை--விளக்கம்; ஐவகை நிலங்கள்-வண்ண ஓவியங்

களால் சூழ்நிலைகள் காட்டப் பெற்ற விளக்கப் படங்கள்; தமிழ்க் கவிஞர்கள், எழுத்தாளர்கள் இவர்கள் படங்கள் (கிடைத்தவரை) 'கொலு'வைக்கப் பெற்றிருந்தன.

அந்தோ! இவையெல்லாம் இரண்டு மூன்று நாட்கள் ஓயாது அடித்த புயல் மழையால் அழிந்தன. தென்—வடலாகக் கூரை வேயப் பெற்ற கட்டடம் அழிந்தது. கூரை காற்றால் தூக்கி எறியப் பெற்றுச் சுவர்களே நின்றன. இந்தக் கந்தர் கோலத்தில் சா. க. அவர்கள் தந்திருந்த எழுத்தாணி, ஓலைச்சுவடிகள் கூட போன இடம் தெரிய வில்லை. அவர் மிகவும் வருந்தினார். இந்தக் கோரக் காட்சியை நேரில் பார்த்தவர்கள் அழாமல் இருக்க முடியாது. இரண்டு மாதம் பல மாணவர்கள் கடுமையான உழைப்பு வீணாகப் போய்விட்டது. இஃது என்னைத் தமிழ் வரலாற்றை நினைக்கச் செய்தது. சம்பந்தர் காலத்தில் அனல் வாதத்திற்கும் புனல் வாதத்திற்கும் தப்பிய தமிழ், கடல் கோளால் பெரும் பகுதியை இழந்தது. நிலத்தைக் கடல் ஆக்கிரமித்தது போல, புயல் தமிழ்த் துறைக் கட்டடத்தையே சேதப்படுத்தியது. கடல் கோளுக்குப் பிறகும் தமிழ் இன்றும் செழிப்புடன் வாழ்கின்றது; வளமாக வாழ்கின்றது. அங்ஙனமே துறைக் கட்டடமும் சீர்திருத்தப் பெற்று இன்றளவும் (1989) துறையும் சீருடனும் சிறப்புடனும் வளர்ந்தோங்கியுள்ளது.

பழைய இராமநாதபுரம் மாவட்டம் முழுதும் பெரும் பாலும் மணற்பாங்கான நிலப்பரப்புடைய பகுதியைக் கொண்டது. காரைக்குடிப் பகுதி முழுவதும் இத்தகை யதே. ஓரடி ஒன்றரையடி ஆழத்திலேயே பாறை தட்டுப் படும். ஆதலால் மரங்களின் வேர்கள் ஆழமாகச் செல்வ தில்லை. இந்தப் புயல் ஏற்பட்டபோது சாலையின் இரு புறமும் வளர்க்கப் பெற்ற மரங்களில் பெரும்பான்மை யானவை சாய்ந்தழிந்தன. நான் குடியிருந்த வீட்டில் பத்து வாழை மரங்கள் பிறர் கண்ணெச்சில் படும்படிச்

செழிப்பாக வளர்ந்திருந்தனர்; ஒன்றிரண்டு மாதங்களில் குலைகள் தள்ளும். இவை யாவும் சாய்ந்து, ஒடிந்து பாழா யின. பிறகு நான் காரைக்குடியிலிருந்த வரை வாழை வளர்ப்பதையே விட்டொழித்தேன்.

பின்னர் 1962-இல் பொறியியல் கல்லூரியில் மீண்டும் ஒரு பொருட்காட்சி நடைபெற்றது. இப்பொழுது மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. கல்லூரியின் வயது பத்தா தலால் வசதிகள் பெருகி இருந்தன. இதனால் பொருட் காட்சியை மிகச் சிறப்பாக அமைக்க முடிந்தது. என் குடும்பம் 1966-வரை காரைக்குடியில் இருந்தமையால் நான் திருப்பதியிலிருந்து காரைக்குடி வந்திருந்தேன். பொருட்காட்சியையும் பார்க்கச் சென்றிருந்தேன். யாரோ மத்திய அமைச்சர் ஒருவர் வந்திருந்தார் பல்கலைக்கழக ஆணையமும் வந்திருந்தது. தாளாளர் C. V. CT. V. வேங்கடாசலம் செட்டியார் எல்லோரையும் சுற்றிக் காட்டிக் கொண்டிருந்தார், நானும் அவர்களுடன் சேர்ந்து சுற்றினேன்.

அந்தக் காலத்தில் அழகப்பர் நிறுவிய அறம் பொருளாதாரத் தட்டுப்பாட்டால் தொல்லைப்பட்டது. கடனுக்காகப் பல சொத்துகள் விற்கப்பட்டதாகக் கேள்விப்பட்டிருந்தேன். C. V. CT. V. வேங்கடாசலம் செட்டியாருடன் சுற்றி வந்து கொண்டிருந்த போது அழகப்பர் அறத்தின் பொருளாதார நிலையில் ஏதாவது முன்னேற்றம் உண்டா? என்று கேட்டேன். "மிஸ்டர் ரெட்டியார், முன்னர் நாம் ஆண்டுதோறும் கடன்தொகை வட்டிக்காக எழுபது ஆயிரம் கட்ட வேண்டியிருந் தது, இப்போது நமக்கு எழுபதாயிரம் வட்டி வருகின்றது" என்றார் கணிதத்தில் வரும் வாய்பாடு (Formula) போல் தெளிவாக்கியது என்னை வியப்பில் ஆழ்த்தியது. இதற்குமேல் விளக்கம் என்னைப் போன்ற மூன்றாவது மனிதருக்குத் தேவையும் இல்லையே. திருப்பதியில் என் நலத்தையும் விசாரித்தார். "குடும்பம் காரைக்குடியில் தான் உள்ளது; 1966-வரை மாற்றுவதற்கில்லை—

அங்குத் தமிழ் படிக்கப் பள்ளியில் வாய்ப்பில்லாததால்'' என்று கூறினேன். பிறகு அவரிடம் விடை பெற்றுக் கொண்டு வீடு திரும்பினேன். ''நான் நடைமுறைப் பொருளாதாரப் பேராசிரியர் (I am a Professor of Practical Economics)'' என்று தம்மை அடிக்கடிச் சொல்லிக் கொள்வார் செட்டியார். இதனைச் சிந்தித்து அசை போட்ட வண்ணம் வீடு வந்து சேர்ந்தேன்.

குமிழி—120

## 14. செல்வராசனின் திருமணம்

நான் துறையூரில் இருந்தபோது செங்காட்டுப்பட்டியிலிருந்து நா. செல்வராசன் என்ற நன் மாணாக்கன் துறையூரில் படித்தான். அவனைச் சேர்த்தவர் அவனது பெரியப்பா, அடிக்கடிப் பையனைப் பார்க்க வரும் போதெல்லாம் என்னைச் சந்தித்துப் பேசாமல் போக மாட்டார். இதனால் அன்பும் பாசமும் எங்களிடையே வளர்ந்தன. பையனும் மிக அன்புடன் பழகினான். பள்ளியிறுதித் தேர்வினை முடித்துக் கொண்டு கல்லூரியில் சேர்ந்து இளங்கலைப் பட்டமும் பெற்றான். நான் காரைக்குடியில் பணியேற்ற பிறகு பி. டி. படிக்க காரைக்குடியில் வந்து சேர்ந்தான். காரைக்குடியிலும் என்னிடம் மிக்க அன்புடன் பழகினான்.

பயிற்சிக் கல்லூரியில் படித்தபோது அவனுக்குத் திருமணமும் கூடியது. சற்றுச் செல்வச் செழிப்புள்ள குடும்பத்தைச் சேர்ந்தவன். பின்-குமரப் பருவக் காலத்தில்—கல்லூரி வாழ்வில்—குறிக்கோளும் கொள்கையும்

ஓர் இளைஞனை ஆட்கொள்ளும் என்பது உளவியல் உண்மை; மனித இயல்புங்கூட. ஆனால் பையன் அண்ணாத்துரையின் கொள்கையால் மிகவும் கவரப்பட்டிருந்தாலும், அரசியலில் தீவிரமாக ஈடுபடாதவன். இந்த மாணவன் சீர்திருத்தத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று விரும்பினான். காரைக்குடி வந்த பிறகு கம்பனடிப்பொடி இவனது வீர வழிபாட்டுக்குள்ளவரானார். தன் திருமணத்தை அவர்தாம் செய்து வைக்க வேண்டும் என விரும்பினான். இக்கருத்தை ஒருநாள் என்னிடம் கூறினான். காரைக்குடியிலிருந்து திருச்சிக்கு முதல் வகுப்பு- இருப்பூர்திப் பயணம் வசதி, திருச்சியிலிருந்து செங்காட்டுப்பட்டி வரை மகிழ்வுந்து வசதி செய்து தர வேண்டியிருக்கும் என்று சொன்னேன். அப்போது செல்வராசன் திருமண விழாவுக்கும் என்னைத் தலைமை தாங்க வேண்டும் என்று மற்றொரு புதிரும் போட்டான்; மிகவும் வேண்டினான். ஒருவாறு ஒப்புக் கொண்டேன்.

இருவரும் ஒரு ஞாயிறு அன்று கம்பனடிப்பொடியின் இல்லம் சென்றோம். நான்தான் பையனை அறிமுகம் செய்து வைத்தேன். "இந்தப் பையன் செல்வராசன் துறையூரில் என் மாணவன். இளங்கலைப் பட்டத்தை முடித்துக் கொண்டு பி. டி. என்னிடம்தான் படிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் இங்கு வந்து சேர்ந்துள்ளான். நல்ல மாணவன்; படிப்பில் ஆர்வம் மிக்கவன். இப்போது திருமணம் கூடியுள்ளது. தன் மணம் தமிழ் மணமாக நடைபெற வேண்டும் எனவும் அதனைத் தாங்கள்தான் நடத்தி வைக்க வேண்டும் எனவும் விரும்புகின்றான். மறுக்காமல் செய்து வைத்து ஆசி கூற வேண்டும்" என்றேன். "தங்களைச்செங்காட்டுப்பட்டிக்கு இட்டுச் சென்று மீண்டும் காரைக்குடி திரும்பும் வரை என் பொறுப்பில் விட்டிருக்கின்றான்" என்றேன். "செங்காட்டுப்பட்டி திருச்சியிலிருந்து 36 கல் தொலைவு.

வாடகைக் காரில் சென்று திருமணத்தை முடித்துக் கொண்டு அதே காரிலேயே திரும்பி விடலாம்'' என்று மேலும் கூறினேன். கணேசப்பெருமான் ஆசி கிடைத்தது.

திருமணம் நடைபெற இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே செல்வராசன் செங்காட்டுப்பட்டி சென்று விட்டான். என்னிடம் ரூ. 200 தந்து சா. கணேசனைக் கூட்டி வரும் பொறுப்பினையும் என்னிடம் விட்டான். திருமணத்திற்கு முதல் நாள் மாலை 4 மணி வண்டியில் திருச்சி சென்றோம். இருப்பூர்தி சந்திப்புக்கு அருகிலுள்ள 'அசோக் பவன்' என்ற விடுதியில் அறைகளைத் தனித்தனியாக அமர்த்திக்கொண்டு அவற்றில் தங்கினோம்; இரவு சிற்றுண்டியை விடுதியில் முடித்துக்கொண்டோம். விடுதி T.M. நாராயணசாமிபிள்ளை மகன் கேப்டன் T. N. இராமசாமியின் பொறுப்பில் இருந்தது. இராமசாமியின் உதவியால் அதிகாலை ஐந்து மணிக்கு செங்காட்டுப் பட்டி சென்று பிற்பகல் திரும்ப ஒரு வாடகைக் கார்பேசிக் கொண்டேன். இராமசாமியும் கம்பனடிப் பொடியுடன் சிறிது நேரம் உரையாடி மகிழ்ந்தார்.

மறு நாள் அதிகாலையில் 4 மணிக்கு இருவரும் எழுந்து காலைக்கடன்களையும் நீராடலையும் முடித்துக்கொண்டு பயணத்திற்குத் தயாரானோம். வாடகைக்காரும் விடுதி வாயிலில் தயாராக வந்து காத்திருந்தது. பயணம் செங்காட்டுப்பட்டி ஏரி வரை நன்றாக அமைந்தது. முதல் நாள் மாலை சிறிது மழை பெய்திருந்ததால் ஏரிக்கரை ஏற்றத்தில் சற்றுச் சிரமம் இருந்தது. மண் சாலையாதலால் சிறிது வழுக்கல்; ஏரிக்கரை ஏற்றத்தில் நாங்களும் அருகிலிருந்த வேறு சிலரும் வண்டியைத் தள்ளிக் கரையில் ஏற்றினோம். பிறகு சரளை கொட்டப்பெற்றிருந்ததால் வழுக்கலின்றி 7 மணிக்குச் செங்காட்டுப்பட்டியை அடைந்தது வண்டி. செல்வராசனும் அவன் தந்தையும் எங்களை வரவேற்று சிற்றுண்டி கொள்ளச் செய்தார். 8—9.30 மணிக்குத் திருமணம் நடைபெற வேண்டும்.

திருமண ஏற்பாடு சிறப்பாகச் செய்யப் பெற்றிருந்தது; கம்பனடிப் பொடி ஏற்கெனவே சொன்னபடி அமைந்திருந்தது. முதலில் பிள்ளையார் வழிபாடு நடைபெற்றது; இதனை மிக்க பக்தியுடன் செய்தார் கம்பனடிப் பொடி. பிள்ளையார் பட்டிக்காரர் அல்லவா? அதிலும் அத்திருக்கோயிலின்பால் தனி ஈடுபாடுடையவர். அடுத்து ஹோமம் வளர்த்து பல வைதிகச் சடங்குகள் நடைபெற்றன. தமிழ் மந்திரங்கள் ஓதப்பெற்றன. தமிழ் மணத்திற்கென அவர் வகுத்துக் கொண்டிருந்த முறைகள் யாவும் மிக்க பக்தியுடன் செய்யப்பெற்றன. திருமுறையிலும் தேவாரத்திலும் சிலபாடல்கள் ஓதப் பெற்றன. இறுதியில் வாழ்த்து. நான் கம்பன் அடிப்பொடியை அவைக்கு, ''சா. க. சிறந்த தேசபக்தர்; காந்தி நெறிப்படி வாழ்பவர்; கதரைத்தவிர வேறு துணிகளைப் பயன் படுத்தார். சட்டை அணியாதவர். நீங்களே இதைப் பார்க்கின்றீர்கள். சிறந்த தமிழ்ப்பற்றாளர். கம்பனில் தனி ஈடுபாடு கொண்டவர். பல்லாண்டுகளாக நான்கு நாள் கம்பன் திருநாள் கொண்டாடிக் கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்பவர். அழகப்ப வள்ளலுக்குக் கல்லூரிகளை நடத்துவதில்வலக்கரமாகச் செயற்படுபவர். இவர் துணை இல்லை என்றால் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்த்துறையே தோன்றி இராது, 1942 விடுதலைப் போராட்டத்தில் இவர் பங்கு அளவிடற்கரியது. மாறு வேடத்தில் தாடி வளர்த்துக் கொண்டிருந்த இவரை அரசால் பிடிக்க முடியவில்லை. இவர் கைராசிக்காரர். இவர் நடத்தி வைத்த திருமணத்திற்குரிய மணமக்களின் வாழ்வு சிறக்கும் என்பதற்கு ஐயமில்லை'' என்று அறிமுகப்படுத்தி வைத்தேன். பின்னர் கம்பனடிப்பொடி 10 நி. மணமக்களை வாழ்த்திப் பேசினார்; நானும் 10 மணித் துளிகள் பேசினேன்.

திருமணம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது எதிர்பாராத பலத்த மழை ஒரு மணி நேரம் பெய்து ஓய்ந்தது. திருமணம் முடிந்தவுடன் மண மகனின் மாடிவீட்டுத்

திண்ணையில் அமர்ந்தோம். பெரகம்பியிலிருந்து என்னுடன் திண்ணைப் பள்ளியில் படித்த பல தோழர்கள், பெரியவர்கள் பலர் வந்திருந்தனர். அவர்களுடன் உரையாடி மகிழ்ந்தேன். அவர்கட்கு இவரை ''என் வாழ்க்கையில் திருப்பம் செய்த நடமாடும் கணேசப் பெருமான்'' என்று அறிமுகம் செய்து வைத்தேன். திருமணத்திற்கு வந்திருந்த ஆடவர், மகளிர், சிறுவர்கள் அனைவரும் காந்தியடிகளைத் தரிசித்தால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவார்களோ சா.க. வைக்கண்டு அவ்வளவு மகிழ்ச்சியடைந்தனர். திருமண விருந்து தொடங்க 12-30 மணி ஆகும் போல் இருந்தது. 11·30 மணிக்கே எங்கள் இருவருக்கும் அமுது படைக்கப் பெற்றது. 12 மணிக்கு மணமக்களிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பினோம். வழியில் இறக்கமாதலால் முன்பு ஏற்பட்ட தொல்லையில்லை. வண்டியும் நல்ல நிலையிலிருந்ததால் வண்டியோட்டி பகல் 1-15 க்கு இருப்பூர்தி நிலையத்திற்கு எங்களைக்கொண்டு வந்து சேர்த்து விட்டார். காலையிலேயே அறைகளைக் காலி செய்து விட்டதால் விடுதிக்குப் போகாமல் நேராக இருப்பூர்தி நிலையத்திற்கு வந்துவிட்டோம். வண்டியோட்டிக்கு வாடகையைத் தந்து விட்டு, முதல் வகுப்பு பயணச்சீட்டு வாங்கிக் கொண்டு வண்டியேறி விட்டோம்.

வண்டியில் கம்பன் அடிப்பொடி, ''மணமகன் தி.மு.க. சார்புடையவர்போல் தோன்றுகின்றதே!'' என்றார். ''எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?'' என்று வினவினேன். ''நாம் காலையிலும் பகலிலும் உண்ட வீட்டில் பெரியார், அண்ணாத்துரை படங்கள் இருந்ததைக் கண்டேன்; அதனால்'' என்றார். ''அருகில் காந்தி, புத்தர் படங்களும் இருந்தனவே'' என்றேன். மேலும் ''இவற்றைக் கொண்டு ஒருவரை ஒரு கட்சிச்சார்புடையவர் என்று கருதுதல் கூடாது. இளமை உள்ளங்கள் எப்படி எப்படியோ மாறும் தன்மையுடையது. சிலர் கொள்கைகளில் நல்லனவற்றையும் கொண்டு கட்சியில் ஈடுபாடு

கொண்டிருக்கலாம். உயர்நிலைப் பள்ளியில் பையன் கதர் ஆடையை மட்டிலும் அணிவான். இவன் எல்லாப் பெரியோர்களின் கொள்கைகளைப் பின்பற்றுபவன்போல் தோன்றுகின்றது. இப்போதுதான் வந்து சேர்ந்தான். இந்த ஆண்டு முழுவதும் கவனித்தால் இவனை நன்கு அளந்து காணலாம்'' என்றேன். ''அன்றியும் நாம் உண்ட வீடு யாருடையது என்று கூட எனக்குத் தெரியாது. வீட்டில் யாரும் இல்லை. கல்யாணச் சந்தடியும் இல்லை'' என்று மேலும் தொடர்ந்தேன். ''பையன் தெய்வபக்தியுள்ளவன். பெரியாரிடம் போகாமல் உங்களை நாடினதே எனக்குப் பரமதிருப்தி'' என்றேன். கம்பனடிப் பொடியும் ''மொத்தத்தில் பையன் நல்லவனாகக் காணப் படுகின்றான். எந்தக் கட்சியில் சேர்ந்தவனாக இருந்தால் நமக்கென்ன?'' என்று கூறிவிட்டார்.

மணி 3-45க்கு வண்டி புதுக்கோட்டையை அடைந்தது. காஃபி மட்டிலும் தருவித்துப் பருகினோம். பின்னர் வண்டி கிளம்பியது. மாலை ஐந்து மணிக்கு வண்டி காரைக்குடியை அடைந்தது. வாடகைக் கார் ஒன்றில் 'கற்பக நிலையம்' (சா.க. வீடு) வந்து சேர்ந்தோம்.

இந்த இடத்தில் ஒன்று சொல்ல வேண்டும் எனத் தோன்றுகிறது. வாழ்க்கை முழுதும் காங்கிரசுக்கே உழைத்த இந்தப் பெருமகனுக்கு தேர்தலுக்கு நிற்க கட்சி இசைவு தரவில்லை. சுயேட்சையாக நின்று 2000 வாக்கு வித்தியாசத்தில் தோல்வியுற்றார். ஆனால் தி.மு.க. ஆட்சியில் இவருடைய நாட்டுப் பற்று, தமிழ்ப் பற்று, பொதுத்தொண்டு, தூய்மையான உள்ளம் இவற்றைப் பாராட்டுமுகத்தான் சட்டமன்ற மேலவை உறுப்பினர் பதவியளித்தார் அண்ணாத்துரை. தமிழ் அன்னைத் திருக்கோயில், கம்பன் மணி மண்டபம் இவற்றை எழுப்புவதற்கு ஒல்லும் வகையெல்லாம் உதவினார் அண்ணா.

சென்னையில் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் இவருக்குப் பெரும் பொறுப்பு நல்கி இவரைக் கௌரவித்தார். அண்ணா இன்னும் சில ஆண்டுகள் வாழ்ந்திருப்பாராயின் இவரை அமைச்சரவையையும் அலங்கரிக்கச் செய்திருப்பார்.

சிறிது நேரம் கம்பனடிப் பொடி இல்லத்தில் தங்கி அவரிடம் விடை பெற்றுக் கொண்டேன். பக்கத்துச் சந்து வழியாக அவர் வீட்டிற்குப் பின்புறம் அடுத்த வீதியிலுள்ள என் இல்லம் அடைந்தேன்.

குமிழி—121

## 15 குன்றக்குடி அடிகளார்

திருவண்ணாமலை ஆதீனம் தெய்வசிகாமணி பரமாசாரிய சுவாமிகள் (குன்றக்குடி) என்பது இவரது திருப்பெயராகும். பொதுமக்கள் நீளமான பெயர்களை விரும்புவதில்லை. சொற்சுருக்கத்தையே விரும்புவது கண்கூடு. இதுதான் சொல்லுவதற்கு எளிதாக இருக்கும். கிருட்டிணசாமியைக் 'கிட்டு', கிச்சான் என்றும், வேங்கடசாமியை 'வெங்கிட்டு' என்றும், பார்த்தசாரதியைப் பார்த்தன், பாச்சு என்றும் அன்றாட வழக்கில் மக்கள் குறிப்பிடுவதைக் காணலாம். தொடக்கத்தில் பேருந்துகள் தேசிய மயமாக்கப் பட்டபோது அவை பல கழகங்களின் பெயர்களில் அடங்கின. அவை மிக நீளமாக இருந்தமையால் அரசே அநுபவத்தில் சுருக்கிக் கொண்டது. எ-டு:

| நீளம் | சுருக்கம் |
| --- | --- |
| திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகம் | திருவள்ளுவர் |
| பல்லவன் போக்கு வரத்துக் கழகம் | பல்லவன் |
| பாண்டியன் போக்கு வரத்துக் கழகம் | பாண்டியன் |
| சோழன் போக்கு வரத்துக் கழகம் | சோழன் |

நீளப் பெயர்களை ஒவ்வொரு பேருந்திலும் எழுது வதற்கு சாயங்கள், தூரிகை, எழுதும் நேரம், எழுத்துக் கூலி இவற்றிற்கு எவ்வளவு செலவு? இவற்றையொட்டியே பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் என்று தொடக்கத்தில் சூட்டப் பெற்ற பெயர் 'அண்ணா பல்கலைக் கழகம்' என்று சுருக்கிக் கொள்ளப் பெற்றது. இதனால் அநுபவத்தால் பெறக் கூடிய அறிவே சிறந்தது என்றாகின்றது. இது கருதியே நீளமான பெயரை 'குன்றக்குடி அடிகளார்' என்று சுருக்கமாக வழங்கப் பெறுகின்றது; மக்கள் வழங்கி அதையே வழக்கிற்கும் கொண்டு வந்து விட்டனர்.

தருமபுர ஆதீனத்தின்கீழ்க் கட்டளைத் தம்பிரானாக இருந்தவர்தான் திருவண்ணாமலை ஆதீனத்தின் தலைவ ரானார். நான் காரைக்குடி சென்ற (1950) சில மாதங் கட்கு முன்னர் (அல்லது ஓராண்டுக்கு முன்னர்) தான் குன்றக்குடியில் பதவி ஏற்றார் என்பதாக நினைவு. அடிகளார் மடாதிபதிகளுள் ஒரு பெரும் புரட்சியாளர். தமிழ்ப் பற்று மிக்கவர்; சங்க இலக்கியத்தில் ஆழ்ந்த புலமையுள்ளவர்; திருக்குறள்பால் ஈடும் எடுப்புமற்ற காதலர். குன்றக்குடிக்கு வந்த புதிதில் அப்பகுதியிலுள்ள எல்லா மேடைகளிலும் தோன்றுவார். பள்ளி, கல்லூரி ஆண்டு விழாக்களிலும் தொடக்க விழாக்களிலும் இவர்

பேச்சு இருக்கும். பேசவிரும்புபவர்; பேச்சுக் கலையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற பேரவாவினர். கோயில் விழாக்களிலெல்லாம் பேசுவார். இந்து மதாபிமான சங்கத்திலும் பேசியுள்ளார்.

காலத்திற் கொவ்வாத பல மடத்துச் சம்பிரதாயங் களை உதறித் தள்ளிவிட்டுப் பொதுமக்களிடம் எளிதாகப் பழகியதால் இவர் புகழ் எங்கும் பரவியது. மடத்திலும் பல விழாக்களை நடத்துவார்; திருப்புத்தூரிலும் விழாக்கள் இவர் ஆதரவில் நடைபெறும். குரு பூசைக்கு அழைப்பு அனுப்புவார். அறிஞர்கள், புலவர்கள், பேராசிரியர்கள் எல்லாம் இவருக்கு நன்கு அறிமுக மானார்கள். தந்தை பெரியார்கூட இவர்பால் ஈர்க்கப் பெற்றார். இருவரும் நெருங்கிப் பழகினர்; ஈடுபாட்டுடன் பழகினர். அடியேன்பாலும் அடிகளார் மிக்க அன்புடை யவர். தமிழறிவைவிட என்னுடைய அறிவியலறிவுக்கு மிக்க மதிப்பு தருபவர். என்னுடைய அறிவியல் நூல்களை மிகவும் பாராட்டிப் பேசுவார். அடிகளை நினைக்கும் போது இரண்டு மூன்று நிகழ்ச்சிகள் நினைவிற்கு வருகின்றது.

(1) ஒரு சமயம் குன்றக்குடிக்குக் குரு பூசைக்காகச் சென்றிருந்தேன். பெரும் புலவர்கள், அறிஞர்கள், பேராசிரியர்கள், வணிகர்கள் முதலியோர் வந்திருந்தனர். பண்டித மணி கதிரேசன் செட்டியார், புலவர் கோவிந்தசாமிப் பிள்ளை, டாக்டர் B. நடராசன், சா. கணேசன், கா. காடப்பச் செட்டியார், வேறு தன வணிகப் பெருமக்கள் முதலியோர் வந்திருந்தனர். மலையை வலம் வருதல் முற்பகல் தொடங்கியது. எல்லோரும் நடந்து சென்று கொண்டிருந்தனர். இவர் களுள் தருமபுரம், திருப்பனந்தாள் முதலிய ஆதீனப் புலவர்களும் சென்று கொண்டிருந்தனர். பொதுவாக ஆதீனப் புலவர்கள் இம்மாதிரியான குருபூசை நிகழ்ச்சி களில் கலந்து கொள்ளும் போது 'ஆதீனப் புலவர்' என்ப

தற்கு அடையாளமாக அப்பெயர் பொறிக்கப் பெற்ற பொற்காசுகளை அணிந்து கொள்வது வழக்கம். பண்டித மணி நடந்து செல்லும்போது சற்று விலகிய நிலையில் கோவிந்தசாமிப் பிள்ளையும் (இவர் பண்டிதமணியின் சீடர்) நடந்து சென்று கொண்டிருந்தார். பண்டிதமணி, ''கோவிந்தசாமி பிள்ளை, இங்கே அருகில் வாரும். கழுத்தில் ஏதோ தொங்குகின்றதே அதைப் பார்ப்போம்'' என்று கூறி அழைத்தார். அவரும் நெருங்கி வந்தார். தொங்குகின்ற பொற் காசைப் பார்க்கும்போது ஆதீனப் பெயருடன் ''நாதஸ்வரவித்துவான்'' என்றும் பொறிக்கப் பெற்றிருந்ததைக் கண்டார். ''கோவிந்தசாமிப் பிள்ளை, நீர் என்னிடம் தமிழ்ப் படித்தீர்; நினைவிருக்கின்றது. நாதஸ்வரத்தை எங்கு எப்பொழுது யாரிடம் கற்றுக் கொண்டீர்?'' என்று கிண்டலாகக் கேட்டார். அதற்கு அவர் ''மாற்றிக் கொடுத்து விட்டார்கள் போலிருக் கின்றது; முட்டாள்தனமான காரியம் நடந்து விட்டது'' என்றார். பின்னர் பண்டிதமணி ''கோவிந்தசாமிப் பிள்ளை, மடத்து நிர்வாகிகள் முட்டாள்கள் என்பது உலகறிந்த செய்தி. அவர்கள் கொடுத்தாலும் நீராவது பார்த்து வாங்கிக் கொள்ளக்கூடாதா? உமக்குப் புத்தி எங்குப் போயிற்று? எத்தனை ஆண்டுகளாக இதனை மாட்டிக் கொண்டு திரிகின்றீர்களோ?'' என்று சற்றுக் கடிந்தே அறிவுறுத்தினார். இதனால் குரு-சீடர் உறவு தெளிவானது; முதுமைப் பருவத்திலும் இந்த உறவு நீடித்ததைக் காண பெருமையாக இருந்தது. அதே சமயத்தில் மடத்து மதியீன நிலைமையும் ஆதீனப் புலவர் களின் ஏளன நிலையும் தெளிவாகத் தெரிந்தது.

(2) அடிகள் 'அருள்நெறித் திருக்கூட்டம்' என்ற பெயரில் தமிழகமெங்கும் பக்தர்களைக் கூட்டினார். எப்பக்கம் நோக்கினும் விழாக்கள், வழிபாடுகள் நடை பெற்றன. எந்த நல்ல அமைப்பிலும் சில தீயவர்களும் இடம் பெற்று விடுவர் என்பது உலகியல். மெய்ப்பொருள்

நாயனார் வாழ்வில் ஒரு முத்திநாதன் தோன்றவில்லையா? இங்ஙனமே அருள்நெறித் திருக்கூட்டத்திலும் சில ''ஆஷாடபூதிகள்'' நுழைந்து விட்டதில் வியப்பொன்றும் இல்லை. மடத்துப் பணியாளர்களிலும் இத்தகைய கயவர்கள் சிவ வேடத்துடன் புகுந்து விட்டனர்; இதனால் அடிகளாரின் உண்மைத் தொண்டர்கள் இக்கூட்டத்தை 'அருள்நெறித் திரு(ட்டு)க் கூட்டம்' என்று கிண்டலாகவும் மறைமுகமாகவும் பேசத் தொடங்கினர். இது அடிகளாரின் செவிக்கும் எட்டி அவர் தூய்மையான உள்ளத்தை வருத்தி இருக்க வேண்டும்...

இது தவிர, சில அன்பர்கள் அடிகளாரை 'ஞான சம்பந்தப் பெருமானின் மறு பிறப்பு' என்று கூட பேசத் தொடங்கினர்; புகழ் மாலையும் சூட்டத் தொடங்கினர். மிகைப்படுத்திப் பேசுதல், புகழ்தல்களும் தாழ்த்திப் பேசுதல் இகழ்தல்களும் மொழி கற்றுள்ள மனித உள்ளத்தில் இயல்பாகத் தோன்றும் பண்புகள். வைணவத்தில் சிறப்பு கருதி வடகலையார் வேதாந்த தேசிகரையும், தென்கலையார் மணவாள மாமுனிகளையும் 'இராமா நுசரின் மறு பிறப்பு' என்று புகழக் கேட்டிருக்கின்றேன். இரு பெரியார்களின் அறிவு, ஒழுக்கம், பக்தி, புலமை ஆகியவை இங்ஙனம் பேசச் செய்ததில் வியப்பொன்றும் இல்லை.) இத்தகைய புகழ் மாலை அடிகளாரைப் பற்றி எழத் தொடங்கியதும் என் கெழுதகை நண்பர் எம். எஸ். சண்முகம் (அக்காலத்தில் 'தமிழ்நாடு' என்ற இதழின் துணை ஆசிரியர்), ''ஞானசம்பந்தப் பெருமான் காலத்தில் சமணர்கள் அந்த ஞானக் குழந்தையை எதிர்த்து ஒழிந்தனர். இப்போது அவர்கள் மறுபிறப்பு எடுத்து மடத்து ஊழியர்களாகவும், அருள் நெறித் திருக்கூட்டத்தில் முத்தி நாதர்களாகவும் அடிகளாரை ஒழித்துக் கட்டவே நுழைந்துள்ளார்கள். ஆகவே அடிகளார் விழிப்புடன் செயற்படுவது நல்லது'' என்ற எச்சரிக்கையும் விடுத்தார். இது நகைச்சுவையை எழுப்பக் கூடியதாயினும்,

இதில் உண்மையும் இருக்கலாம் என்று என் மனம் எண்ணியது. அடிகளார்பால் உண்மையான அன்பும் அளவற்ற மதிப்பும் கொண்டிருந்த என் உள்ளத்தில் இத்தகைய எண்ணம் தோன்றியிருக்கலாமோ?

(3) துரைக்கண்ணு முதலியார் பயிற்சிக் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றத் தொடங்கிய முதலாண்டில் (1954—1955) கல்லூரித் தமிழ் மன்றத்தின் அந்த ஆண்டு நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைக்க அடிகளாரை அழைத்திருந்தோம். அடிகளார் வருகை புரிவதற்குச் சற்று முன்னதாகவே நானும் முதலியாரும் சொற்பொழிவு மண்டபத்திற்குப் போய் இருக்கை வசதிகள் முதலியவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தோம். மாணவர்கள் வெளியில் கூட்டம் கூட்டமாக இருந்தவர்கள் ஒவ்வொருவராக மண்டபத்தில் நுழைந்து கொண்டிருந்தனர். அப்போது எஸ். திருவேங்கடாச்சாரி, கே. நாராயண அய்யங்கார், எஸ்.கிருஷ்ணஅய்யங்கார் (மூவரும் கல்லூரிப் பேராசிரியர்கள்) சேர்ந்தாற்போல் மண்டபத்தில் நுழைந்தனர். அப்போது நான் ''முதலாழ்வார்கள் மூவரும் வந்துவிட்டனர்; கூட்டத்திற்கு ஒரு களையும் தட்டும்'' என்றேன். முதலியார் உடனே ''(சற்றுக் கிண்டல் தொனியுடன்?) இவர்களுள் பொய்கை யார்? பூதம் யார்? பேய் யார்?'' என்று கேட்டார். இவர்களுள் திருவேங்கடாச்சாரியைத் தவிர, ஏனைய இருவரும் சரியாக வைணவம் தெரியாதவர்கள்; இவர்கள் ஏதாவது தவறாகக் கருதிவிடுவார்களோ என்ற ஐயமும் அச்சமும் என்னிடம் எழுந்தன. ஒரு வகையாகச் சமாளித்துக் கொண்டேன்.

பொய்கையார் காஞ்சியில் திருவெஃகாவின் வடபுறத்திலுள்ள பொற்றாமரைப் பொய்கையில் பூத்த நற்றாமரைப் பூவிலே பிறந்தவர்; பரபக்திக்கு இருப்பிடமானவர். பூதத்தாழ்வார் திருக்கடல்மல்லையில் (மாமல்லபுரம்) குருக்கத்திப் பந்தரிலுள்ள குருக்கத்தி மலரில் பிறந்தவர்; பரஞானத்திற்கு எல்லை நிலமாகத்

திகழ்பவர். வடமொழியில் ('பூ—ஸத்தாயாம்') என்கின்ற வேர்ச் சொல்லடியாகப் பிறந்தது பூதம் என்னும் சொல் சத்தைப் பெற்றது என்பது பொருள். பேயாழ்வார் மயிலாப்பூரில் ஒரு கிணற்றிலுண்டான செவ்வல்லிப் பூவில் பிறந்தவர். இவர் பரமபக்திக்கு எல்லை நிலமாகத் திகழ்பவர். 'பேய் பிடித்தவர்' என்று சொல்லும்படி நெஞ்சழிந்து கண் சுழன்று அழுதும் சிரித்தும் தொழுதும் எழுந்தாடியும் மகிழ்ந்து பாடியும் அழுதுமே பொழுது போக்கிக் கொண்டிருந்தமையால் இவர் பேயாழ்வார் என்ற திருநாமம் பெற்றார்.

'பரபக்தி' என்பது எம்பெருமானை நேரில் காண வேண்டும் என்னும் ஆவல்; அவனை நேரில் காணல் பரஞானம்; பின்பு மேன்மேலும் இடையறாது அநுபவிக்க வேண்டும் என்னும் ஆவல் 'பரமபக்தி'. இவ்வாறு முதல்வர் வினாவிற்கு நேராக விடை தராமல் திசை திருப்பி ''இந்த மூவரின் பக்தி நிலையை அடியேனால் அறுதியிட்டு உரைக்க முடியாததால் இவர்களுள் யார் பொய்கை, யார் பூதம், யார் பேய்? என்பதை என்னால் இனம் பிரித்துக் காட்ட இயலவில்லையே'' என்று ஒருவாறு சமாளித்துக் கொண்டேன். மூவருமே இவ் வரலாற்றைக் கேட்டு மகிழ்ந்தனர்.

குறிப்பிட்ட நேரத்தில் அடிகளார் வருகை புரிந்தார். மாணவர் ஒருவர் இறைவணக்கம் பாட, முதல்வர் வரவேற்புரை நல்க விழா தொடங்கியது. அடிகளார் பேச்சு தொடங்கிப் பாதி முடிந்தது. இந்நிலையில் கோட்டையூர் அழகப்பர் மகளிர்க் கல்லூரி முதல்வர் சரோஜினி அம்மையார் 70 மாணவிகளுடனும் மூன்று ஆசிரியைகளுடனும் ஒரு பேருந்தில் வந்து சேர்ந்தார். இப்போது மண்டபம் நிறைந்துவிட்டது. கிட்டத்தட்ட 200 பேர். கூட்டத்தைக் கண்டதும் அடிகளாருக்குத் தனி உற்சாகம்; முதலிலிருந்தே பேசத் தொடங்கிவிட்டார். அன்று முதல்வரும் அதிக உற்சாகத்துடன் இருந்தமையால்

அவரையே நன்றியுரையையும் சொல்லுமாறு கேட்டுக் கொண்டேன். முதல்வரும் அதை விரும்பியதைக் குறிப்பால் அறிந்து கொண்டமையால் இந்த வேண்டு கோள். ''அடிகளார் தமது மட வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு'' என்று முதல்வர் நன்றியுரையைத் தொடங்கும்போது மண்டபம் கைதட்டலால் அதிர்ந்து போயிற்று. உடனே முதல்வரும் ''அத்துச்சாரியை விட்டுப் போயிற்றா?'' என்று தான் பேசுவதைத் திருத்திக் கொண்டு ''மடத்து வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு'' என்று பேசவே மீண்டும் கைதட்டல். ஒருவாறு நன்றியுரை முடியவே ''வாழிய செந்தமிழ்'' என்ற நாட்டு வாழ்த்துடன் கூட்டமும் நிறைவு அடைந்தது. அடிகளாரும் விடைபெற்றுச் சென்றார்.

குமிழி-122

## 16. செட்டிகுளத் திருத்தலப் பயணம்

புன்னெறி யதனிற் செல்லும்
போக்கினை விலக்கி மேலா
நன்னெறி யொழுகச் செய்து
நவையறு காட்சி நல்கி
என்னையும் அடிய னாக்கி
இருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல்
பாதபங் கயங்கள் போற்றி

என்ற கந்த புராணப் பாடலைச் சிந்தையில் பதித்த வண்ணம் இக்குமிழி வெளி வருகின்றது, என் அன்னையார் நேர்ந்து கொண்ட கடனைத் தீர்க்கச் செட்டிகுளப்பயணம் தொடங்குகின்றது-1955 இல்.

1955 இல் பங்குனி மாதத்தில் இப்பயணத்தை மேற்கொண்டேன். செட்டிகுளம் என்ற ஊர் திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டத்தில் உள்ளது; ஊர் சிற்றூர் அன்று; நகரமும் அன்று; நடுத்தரமான ஊர். பெரம்பலூரிலிருந்தும் திருச்சியிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன. ஊரையடுத்துக் கீழ்த்திசையில் சுமார் 2 கி. மீ. தொலைவில் உள்ள ஒரு குன்றின்மீது குமரன் கோயில் கொண்டுள்ளான். இந்தக் குமரனுக்கு என் அன்னையார் தனக்கு ஒரு பேரன் வாய்த்தால் அவனை வெள்ளிக் காவடி எடுக்கச் செய்து ஒரு மூட்டை அரிசியை அமுதாக்கி உறவினர், ஏழைகள் இவர்கட்குச் சம ஆராதனை செய்வதாக நேர்ந்து கொண்டார். இந்தப் பிரார்த்தனையை நிறைவேற்றவே இந்த ஏற்பாடு. காரைக்குடியில் ஐம்பது ரூபாய் எடையில் ஒரு வெள்ளிக் காவடி தயார் செய்து கொண்டேன். கோட்டாத்தூர் நல்லப்பரெட்டியாருக்கு எழுதி 2 மூட்டை நெல் வேக வைத்து புழுங்கல் அரிசி தயாரிக்கச் செய்தேன். அதற்கு வேண்டிய மளிகை சாமான்கள், பாத்திரங்கள், இலைக்கட்டு இவற்றை வண்டியில் கொணர்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே என் தாயாரைக் கோட்டாத்தூருக்கு அனுப்பினேன். ஒரு குறிப்பிட்ட நாளில் சாமான்கள், சமையல் ஆட்களுடன் செட்டி குளம் மலைக் கருகிலுள்ள ஒரு தோப்பை வந்தடைந்தன.

நானும் என் மனைவியும் குழந்தைகளுடன் மூன்று நாட்களுக்கு முன்னதாகவே புறப்பட்டு இருப்பூர்தி, பேருந்து மூலம் செட்டிக்குளம் வந்தோம். திரு தியாகராச ரெட்டியார் வீட்டில் (எலுமிச்சை தோட்டக்காரர் வீடு) ஒரு நாள் தங்கினோம். செட்டிகுளத்துக்கு 3 கல் தொலைவிலுள்ள பெரகம்பி என்ற ஊரில் இருக்கும் என் தாய் மாமனை (அம்மான்) பார்ப்பதற்காகவே மூன்று நாள் முன்னதாகப் புறப்பட்டு வந்தேன். குதிரை வண்டி அமர்த்திக்கொண்டு பெரகம்பி சென்றோம். இராமலிங்

கத்திற்கு வயது ஏழு; இராமகிருட்டிணனுக்கு வயது மூன்று. இந்தச் சமயத்தில் நான் நோயால் சிறிது தாக்குண்டேன். பெரகம்பி செல்லும்பொழுதெல்லாம் உண்ணும் உணவு அளவில் குறைந்து விட்டது. இரண்டு நாள் நான் பிறந்து ஏழு வயது வரை வளர்ந்த ஊரிலுள்ள பல உறவினர்களையும் நண்பர்களையும் பார்த்து மகிழ்ந்தேன்.

குறிப்பிட்ட நாளில் நானும் மனைவியுடனும் குழந்தைகளுடனும் மாட்டு வண்டியில் தோப்பை அடைந்தேன். என்னுடன் என் அம்மான், சிற்றப்பா முறையிலுள்ள நெருங்கின உறவினர் (என் தாயாரைப் பெற்ற பாட்டி குடும்பத்தைச் சேர்ந்தவர்) வந்தார்கள். இராமலிங்கத்திற்குக் கிராப்புத் தலை.இராமகிருஷ்ணனுக்குத் தலைவாரி இரண்டு சடைகள் போட்டு ஆரஞ்சு வண்ண நாடாக்கள் சூட்டியிருந்தோம். இருவருக்கும் தோப்பில் முடி இறக்கப் பெற்றது. இராமகிருஷ்ணன் முடி துறந்த இளவரசன் போல் திகழ்ந்தான். வெந்நீரால் இருவரையும் குளிப்பாட்டினோம். என் மனைவி, குழந்தைகள், என் தாய் மாமன், சிற்றப்பா, தியாகராஜ ரெட்டியார் அவர் தந்தையார், என் தாயார் இவர்களுடன் மலைக்குப் புறப்பட்டேன். கோட்டாத்தூரிலிருந்து குதிரை வண்டியில் வந்திருந்த நல்லப்பரெட்டியாரும் மலைக்கு வந்தார். என் தம்பி துணைவியுடன் வந்திருந்தான். இருவரும் மலைக்கு வந்தனர். சின்ன மலை தான். குழந்தைகளால் ஏற முடியவில்லை. தூக்கிக்கொண்டோம். முருகனை அருச்சனை செய்து வழிபட்டோம். வெள்ளிக்காவடியை முருகன் திருவடியில் வைத்து வணங்கினான் இராமலிங்கம். சுமார் முற்பகல் 11-30 க்குக் கீழே இறங்கிவிட்டோம். இறங்கும் போது நான் இராமகிருஷ்ணனைத் தூக்கிக்கொண்டேன். தியாகராசரெட்டியார் இராமலிங்கத்தைத் தூக்கிக் கொண்டார்.

**குமரன் வழிபாட்டுடன் சமஆராதனை தொடங்கியது. ஏழைகள் உட்பட சுமார் 75 பேர்**

உண்டனர். உண்டபிறகு மேலும் வந்த ஏழைகட்குச் சாம்பார் சாதம் உருண்டை உருண்டையாக வழங்கப் பெற்றது. மாலை நான்கு மணிக்குக் கோட்டாத்தூர் திரும்பினோம். நான் சிறுவர்களுடன் குதிரை வண்டியில் புறப்பட்டதால் மாலை ஆறு மணிக்கே கோட்டாத்தூர் வந்தடைந்தேன். மீதி சோற்றுடன் மற்றவர்கள் வந்த வண்டி மாலை ஏழு மணிக்கு வந்து சேர்ந்தது. மீதி சோறு பண்ணையாட்களுக்கு வினியோகிக்கப் பெற்றது. நாங்களும் உண்டோம்.

மறுநாள் காலையில் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு என் மனைவி, தாயார், குழந்தைகள் இவர் களுடன் பேருந்தில் நேராகத் திருச்சி வந்தோம்; திருச்சிக்குத் துறையூரிலிருந்து கோட்டாத்தூர் வழியாகச் சில பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்தன அக்காலத்திலேயே. இருப்பூர்தி சந்திப்பில் உள்ள உணவு விடுதியில் உணவு உண்டோம். பகல் 1-30க்கு காரைக்குடிக்கு இருப்பூர்தி இருந்தது. அதில் ஏறி மாலை 4-30 மணிக்கு காரைக்குடி வந்து சேர்த்தோம். இந்தப் பயணத்தில் மிகச்சிரமப்பட்டுப் போனேன். சமஆராதனை ஏற்பாடுதான் மிகச் சிரமத்தைத் தந்து விட்டது; பலருக்கும் தொல்லை விளை வித்தேன். செட்டிகுள வேலனின் அருளால் எல்லாம் மன நிறைவுடன் நிறைவு பெற்றன.

துய்யதோர் மறைக ளாலும்
துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க;
சேவலும் மயிலும் வாழ்க;
வெய்யசூர் மார்பு கீண்ட
வேற்படை வாழ்க; அன்னான்
பொய்யில்சீர் அடியார் வாழ்க;
**வாழ்கஇப் புவன மெல்லாம்**

ஆறிரு தடந்தோள் வாழ்க;
 அறுமுகம் வாழ்க; வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க;
 குக்குடம் வாழ்க; செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க;
 யானைதன் அணங்கு வாழ்க;
மாறிலா வள்ளி வாழ்க;
 வாழ்கசீர் அடியார் எல்லாம்

என்ற கச்சியப்பரின் வாழ்த்துப் பாடல்களுடன் இக்குமிழி நிறைவு பெறுகின்றது; அடங்குகின்றது.

குமிழி—123

## 17. பலபல பள்ளிகள்

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்;
 இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்;
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்;
 ஆல யம்பதி னாயிரம் நாட்டல்;
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
 பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்;
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
 ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்![1]

என்று கல்வித் தொண்டு பற்றிக் கூறினான் பாரதி. வள்ளல் அழகப்பர் பாரதியின் இதயத்தை நன்கு அறிந்தவர். ஆகவே, கல்வித் தொண்டில் தம் கருத்தைச் செலுத்தினார். ஓர் அரசு செய்ய வேண்டிய பணியைத்

1. பா. க: தோத்திரப் பாடல்கள்—வெள்ளத் தாமரை—9.

தாம் செய்யும் பொறுப்பை மேற்கொண்டார். செய்வன வற்றையெல்லாம் தெய்வப் பணிகளாகச் செய்து வந்தார். இத்தகைய வள்ளல் அமைத்த பயிற்சிக் கல்லூரியில் பணி யாற்றும் வாய்ப்பினை நல்கிய இறைவன் பற்றிய சிந்தனை சதா என் உள்ளத்தில் குமிழியிட்டுக் கொண்டே இருக்கும்.

1. அழகப்பர் மாதிரி உயர்நிலைப்பள்ளி : பயிற்சிக் கல்லூரி தொடங்கின மறு ஆண்டே பயிற்சிக் கல்லூரிக்கு சோதனைக் களம்போல் இலங்க வேண்டிய மாதிரிப் பள்ளியும் தொடங்கப்பட்டது. ஆசிரியர் தேவைக்காக விளம்பரம் செய்யப் பெற்றது. ஏராளமான விண்ணப்பங் கள் வந்தன. அழகப்பர் கல்லூரி வளாகத்தில் உள்ள கலைக் கல்லூரியில் எல்லாவிதப் பட்டப் படிப்புகளுக்கும் வாய்ப்பிருந்தன. ஆசிரியப் பயிற்சியில் பட்டப் படிப்புக்கும் வசதி. பொறியியல் கல்லூரி, பல துறை நுண்கலை பயிற்சி நிலையம் (Polytechnic), மின்சார வேதியியல் ஆய்வு நிறுவனம் (Electro-Chemical Research Institute) போன்ற நிலையங்கள் இருந்தமையால் இவற்றில் எல்லாம் பயில்வதற்கும், படிப்பு முடிந்தபின் வேலை வாய்ப்பிற்கும் இடம் கிடைக்கும் என்ற எண்ணத்தால் இத்தனை விண்ணப்பங்கள். திரு ஐ. என். மேனன் காலத்தில் மாதிரி பள்ளி தொடங்கப்பெற்றதால் பாலக்காட்டைச் சேர்ந்த அய்யர் ஒருவர் (மலையாளம்; தமிழ் பேசத் தெரியும்) தலைமையாசிரியராக நியமிக்கப் பெற்றார். காட்டுப்புத்தூர் உயர்நிலைப்பள்ளியிலிருந்து திரு. சங்கர நாராயண சாஸ்திரி வடமொழி ஆசிரியராகவும், இராதா கிருஷ்ணன் என்பவர் தமிழாசிரியராகவும், கண்ணன் என் பவர் இந்தி ஆசிரியராகவும் வந்து சேர்ந்தனர். இவர்கள் என்னிடம் நெருங்கிப் பழகினமையால் இவர்கள் பெயர்கள் நினைவிலிருக்கின்றன. இவர்களுள் திரு. சங்கர நாராயண சாஸ்திரியின் பிள்ளைகள் அனைவரும் (பெண் உட்பட)

நல்ல கல்வி கற்று நல்ல நல்ல வேலையில் அமர்ந்ததை நேரில் கண்டு மகிழ்ந்தேன்:

நான் காரைக்குடியில் பணியாற்றிய போது சேலம் நகராண்மைக் கல்லூரியில் திரு. வீ. உலக ஊழியனார் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார்; இவர் என்னை நன்கு அறிந்தவர். துறையூரில் நான் இருந்தபோது நல்ல பழக்கம். இவர் வீ. முனியாண்டி என்பவருக்கு ஓர் அறிமுகக் கடிதம் கொடுத்து அனுப்பியிருந்தார். திரு. முனியாண்டி ஓவிய ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித் திருந்தார். நான் அவருக்கு உதவக்கூடுமா? என்று கேட் டிருந்தார். ஒரு பெரிய நிர்வாகத்தின்கீழ்ப் பணி புரிபவ னால் என்ன செய்ய முடியும்? திரு. முனியாண்டிக்கு எல்லாத் தகுதியும் இருந்தமையால் அவருக்குப் பதவி கிடைத்தது. பள்ளிப் பணியில் திறமையிருந்ததைத் தவிர வேறு திறமைகளையும் வளர்த்துக் கொண்டிருந்தார். அணுவின் ஆக்கம், இல்லற நெறி, கவிதை அநுபவம், என்ற எனது மூன்று நூல்கட்கும் நூற்றுக்கு மேற்பட்ட அச்சுக் கட்டைகள் (Blocks) தயாரிப்பதற்கேற்றவாறு கறுப்பு மையில் அழகான ஓவியங்கள் வரைந்து தந்து உதவினார். இந்த மூன்று நூல்களும் இன்றளவும் (இருபத்தைந்து ஆண்டுகளாகப்) புகழுடன் நூல் உலகில் நடமாடுகின்றன.

மலையாளத் தலைமையாசிரியர் முதல் இரண்டு ஆண்டுகள் தாம் பணியாற்றினார். இந்தப் பணி அவரால் தாக்குப் பிடிக்க முடியாமையால் விலகிக் கொண்டார். இவர் இருந்தஇடத்தில் கீழச்சீவல் பட்டி உயர்நிலைப்பள்ளி யில் தலைமையாசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த திரு எஸ். இராகவாச்சாரி, நியமிக்கப்பெற்றார். இவர் புவியியலில் (Geography) முதுகலைப் பட்டம்பெற்றிருந் தார். இவர் மிகத் திறமைசாலி. மிகச் சிறப்பாகத்தான் பணியாற்றினார். என்ன காரணத்தாலோ மூன்று ஆண்டு கட்குமேல் இவர் நிலைக்கவில்லை. கும்பகோணத்திலுள்ள நகர உயர்நிலைப் பள்ளிக்குத் (Town High school)

தலைமையாசிரியராகப் போய் விட்டார். கும்பகோணம் தமது சொந்த ஊராக இருக்கலாம். அல்லது பயிற்சிக் கல்லூரியில் இடம் கிடைக்குமா? என்ற நோக்கத்துடனும் வந்திருக்கலாம். கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்பத னால் விலகிக் கொண்டிருக்கலாம். இவர் எல்லோருடனும் நன்றாகத்தான் பழகுவார். ஆயினும், சக ஆசிரியர் களுடன் ஒத்துப் போகும் பண்பு இவரிடம் அமைய வில்லையோ என்ற ஐயம் என்பால் இருந்து கொண் டுள்ளது. இவரையடுத்துத் தேவகோட்டையில்உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக இருந்த மகாகணபதி அய்யர் தலைமையாசிரியராக நியமனம் பெற்றார். இவர் வந்த பிறகு 'ஆசிரியர் அரசியல்' உருவாகி அதன் அலை பயிற்சிக் கல்லூரியையும் தாக்கியது; பிறகு அந்த அலை பயனற்று அடங்கிப் போயிற்று. இவர் ஓய்வு பெற்ற பிறகு தருமநாராயணன் செட்டியார் மகன் (தத்துப் பிள்ளை) தலைமையாசிரியரானார். அதன் பிறகு பள்ளியின் வரலாறு எனக்கு எட்டவில்லை. என் அரிய நண்பர் முனியாண்டி (ஓவிய ஆசிரியர்) மறைந்த செய்தி மட்டிலும் எனக்கு எட்டியது.

துறையூர் பக்கம் பஞ்சாயத்து அலுவலராக இருந்த கருப்பண்ணன் என்பவரை பி.டி. வகுப்பில் சேர்த்துக் கொள்ளுமாறு பரிந்துரைத்தார் துறையூர் வழக்குரைஞர் திரு. பா. அரங்கசாமி ரெட்டியார். இடம் வாங்கித் தந் தேன். பின்னர் பட்டமும் பெற்றார். இறையருளால் என் பரிந்துரை பலித்ததால் மாதிரி உயர் நிலைப் பள்ளியில் ஆசிரியருமானார். நான் திருப்பதி செல்லும் ஒன்றிரண்டு ஆண்டுகட்கு முன்னரே நான் ஏதோ உதவவில்லை என்று நினைத்துக் கொண்டு என்னிடம் பழகுவதை நிறுத்திக் கொண்டார். நான் திருப்பதியிலிருந்து ஆறாண்டு கள் காரைக்குடிக்கு வருவதும் போவதுமாக இருந்தேன். அப்போது நான் மிதி வண்டியில் போகும் போது அவரும் எதிரில் மிதி வண்டியில் வருவார். பாராமுகமாக ஒதுங்கிப்

போய்க் கொண்டிருந்தார். இப்படி ஒரு சிலரின் நட்பையும் இழந்தேன். இதுவும் இறையருள் போலும் என்று எண்ணி வாளா இருந்து விடுவேன். இதற்குமேல் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இதன் பிறகு கருப்பண்ணன் கொடுமுடியிலுள்ள ஓர் உயர்நிலைப் பள்ளியில் தலைமை யாசிரியராகச் சேர்ந்தார் என்ற செய்தி கேட்டு மகிழ்ந்தேன். இப்போது ஓய்வுப் பெற்றிருப்பார்.

2. அழகப்பர் தொடக்கநிலைப் பள்ளி: அழகப்பர் மாதிரி உயர்நிலைப் பள்ளி தொடங்கப் பெற்ற பிறகு இப்படி ஒரு தொடக்கநிலைப் பள்ளியின் அவசியத்தை உணர்ந்தது நிர்வாகம். அழகப்பர் நிறுவனங்களில் பணி யாற்றும் ஊழியர்களின் பிள்ளைகட்கும் அழகப்பர் கல்லூரி வளாகத்திற்கு அருகிலுள்ள சுப்பிரமணியபுரத்தில் வாழும் மக்களின் பிள்ளைகட்கும் வசதியாக ஒரு தொடக்கநிலைப் பள்ளி (1 முதல் 5 வகுப்பு வரை) தொடங்கப் பெற்றது. இதற்குத் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சரசுவதி என்ற பெயருடைய இடைநிலை பயிற்சி பெற்ற பெண்ணைத் தலைமை யாசிரியையாக நியமித்தது நிர்வாகம். இப் பெண் பணியைப் பரமன் அளித்தது என்று கருதிப் பணியாற்றிய தால் இவர் காலத்தில் பள்ளி பெரும் புகழ் பெற்றது. நான் திருப்பதி சென்று சில ஆண்டுகள் கழிந்த பின் இவர் திருமணம் செய்து கொண்டு திருநெல்வேலிக் கருகிலுள்ள சங்கர் சிமைக் காரைத் தொழிற்சாலைப் (Sankar Cement Factory) பள்ளியில் சாதாரண ஆசிரியையாகப் போய் சேர்ந்து விட்டதாக அறிந்தேன்.

3. அழகப்பர் முன்னேற்பாட்டுப் பள்ளி: (Preparatory School) புதிய புதிய கல்வி நிறுவனங்கள் தோன்றிக் கொண்டே இருந்தமையால் ஆசிரியர்களின் தொகையும் கணிசமாக உயர்ந்து கொண்டே போயிற்று. பல்வேறு பருவநிலைகளில் ஆசிரியர்கள் பிற ஊழியர்கள் இவர்கள்

பிள்ளைகளின் கல்வித் தேவையை அறிந்து முன்னேற் பாட்டுப்பள்ளி ஒன்று தொடங்கப் பெற்றது; இதற்கு முதன் முதலாக செல்வி நீலா என்ற இளங்கலைப் பட்டம் பெற்ற பெண்ணைத் தலைமையாசிரியையாக நியமனம் செய்தது நிர்வாகம். இவர் உளவியல் பேராசிரியர் V. N. சுப்பிரமணியத்தின் மைத்துனி (மனைவியின் தங்கை). இவர் அடுத்த ஆண்டு பயிற்சிக் கல்லூரியில் மாணவியாகச் சேர்ந்து பயிற்சிபெற்ற பின் ஒரு சில ஆண்டுகள் மாதிரிப் பள்ளியில் ஆசிரியையாகப் பணி யாற்றிய பின் கும்பகோணத்திலுள்ள ஓர் மகளிர் உயர் நிலைப்பள்ளியில் தலைமையாசிரியையாகப் பல ஆண்டு பணியாற்றி ஓய்வு பெறுவதற்குச் சில ஆண்டுகட்கு முன்னர் பணியிலிருந்து தன்னைக் கழற்றிக் கொண்டு சென்னை கஸ்தூர்பா நகரில் தம் மைத்துனர் வீட்டில் தன் தமக்கைக்குத் துணையாக வாழ்ந்து வருகின்றார். காரைக் குடியில் ஓய்வு பெற்ற பிறகு பேராசிரியர் சுப்பிரமணியம் கஸ்தூர்பா நகரிலுள்ள தன் சொந்த வீட்டில் வாழ்ந்து வந்தார். (தன் மகன் பொறியியல் வல்லுநர்; ஒரு கம்பெனி யில் பணியாற்றுபவர்; சிரீதர் என்ற பெயருடையவர்) நீலா திருமணமாகாதவர்—நான்கு ஆண்டுகட்கு முன்னர் (1985) பேராசிரியர் சுப்பிரமணியம் இறைவன் திருவடி நிழலை அடைந்து விட்டார். 1985-மார்ச்சு மாதம் அப்பக்கமாகப் போக நேர்ந்த போது சுப்பிரமணியத்தைப் பார்த்து வரலாம் என்று அவர் இல்லம் அடைந்த போது இந்த இறப்புச் செய்தியை அறிந்து துயருற்றேன். பத்தாண்டுகள் நெருங்கிப் பழகினோம் அல்லவா?

4. மாண்டிசாரிப் பள்ளி : இந்த அம்மையார் இத்தாலி நாட்டைச் சார்ந்தவர் (கி.பி. 1870-1952). இந்த அம்மையார் ஃபிராபெல் என்ற அறிஞரைப் போலவே, குழந்தைகளை வளரும் செடிகளாகவே கருதினார். குழந்தைகளின் புலன்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களைக் கூர்த்தமதியினராக்கலாம் என்று

கருதினார் இவர்; இக்கருத்தைச் செயல் முறையிலும் மெய்ப்பித்துக் காட்டிப் பெரும் புகழ் பெற்றார்; இன்று பல்வேறு இடங்கள் அம்மையார் கொள்கையைத் தழுவிப் பல குழந்தைக் கல்வி நிலையங்கள் தோன்றி நடைபெற்று வருவதைக் காண்கின்றோம். இத்தகைய பள்ளி ஒன்றைத் தான் காரைக்குடியில் வள்ளல் அழகப்பர் தோற்றுவித்தது. முன்னேற்பாட்டுப் பள்ளி தோற்றுவித்ததற்கு ஓராண்டு முன்னதாக என்பது நினைவு.

இந்தப் பள்ளியின் திறப்பு விழாவில் ஓய்வு பெற்ற தில்லி மேல் நிலை நீதிபதி (Federal Court Judge) திரு வரதாச்சாரி சிறப்பு விருந்தினராக இருந்து பள்ளியைத் திறந்து வைத்தார். அக்காலத்தில் இது காரைக் குடிப் பகுதியில் ஓர் அதிசயப் பள்ளியாக விளங்கியது, எங்கள் பி.டி, மாணவர்கட்கும் ஒரு சோதனைக் களமாக வும் அமைந்தது. என்னதான் மாண்டிசாரி முறையை விளக்கினாலும் பக்தியுடன் பணியாற்றும் ஆசிரியர்கள் கிடைக்காவிடில் இத்தகைய பள்ளிகள் சரியாகச் செயற் படா. இதனை டாக்டர் வள்ளல் விழாக் கூட்டத்தில் தெளிவாக விளக்கினார். நீதிபதி வரதாச்சாரியார் காரைக்குடிக்கு வரும்போது எழுபது வயதை எட்டு பவராக இருந்தார். இவரது இல்லம் (ங்கள்) மயிலாப்பூர் லஸ்ஸிலிருந்து கச்சேரி சாலையின் தொடக்கத்திற்கும், முண்டகக் கண்ணி அம்மன் சாலையின் தொடக்கத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் பக்கிங்காம் கால்வாயை ஒட்டி இருந்தது(ன). ஆல்போல் தளிர்த்து அருகு போல் வேரூன்றி வளர்ந்திருந்த இவர் குடும்பத்தைச் சார்ந்த மகன்கள், பேரர்கள், அவர்கள் மக்கள் என்றிப்படி ஒரே இடத்தில் வாழ்ந்து கொண்டிருந்தனர். ஆகவே பள்ளியைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் (ஆங்கிலத்தில் தான்), ''அன்பர்களே, குழந்தைகள் முதல் வளர்ந்தவர்கள் வரை எல்லா நிலைகளிலும் எல்லாவிதக் கல்வியையும் பெறும் வாய்ப்புடையது (மருத்துவக் கல்வியைத் தவிர) இந்தக்

கல்லூரி வளாகம். இங்குப் பணிபுரியும் ஆசிரியர்கள், ஏனைய ஊழியர்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். இவர்கள் குழந்தைகட்கு இங்குக் கல்வி பெறும் வாய்ப்பு கிட்டும். பல நிறுவனங்களில் ஒன்றாகிய மாண்டிசாரிப் பள்ளியைத் திறக்கும் பொறுப்பை வள்ளல் அவர்கள் எனக்கு அளித்தது வியப்பைத் தந்தது. ஏன் என்பதை யோசித்துப் பார்த்தேன். உண்மை விளங்கியது. நான் தற்சமயம் எந்தப் பதவியிலும் இல்லை; ஓய்வு பெற்றுப் பேரன் பேத்திமார்களிடையே மகிழ்ச்சியாகப் பொழுது போக்கி வருகின்றேன். பெரியவர்களும் சிறியவர்களுமாக அறுபது பேர்களிடையே அளவளாவுகின்றேன். இப்படிச் சொந்தப் பிள்ளைகளிடையே பொழுது போக்கும் கிழவன்தான் குழந்தைப் பள்ளியைத் திறப்பதற்குச் சரியான ஆசாமி'' என்று பலத்த கைதட்டல்களுக்கிடையே கூறி அனைவரையும் மகிழ்வித்தார்.

தொடக்க ஆண்டுகளில் இப்பள்ளி நன்கு செயற்பட்டு வந்தது. வரவர தரத்தில் குறைந்து விட்டதோ என்ற ஐயம் என்பால் உண்டு. பெரும்பாலும் மாண்டிசாரி அம்மையாரின் கல்விபற்றிய தத்துவங்களை மறந்து விட்டார்களோ என்ற எண்ணம் அடிக்கடி என்பால் எழுகின்றது. என்ற போதிலும் கல்லூரி வளாகத்தை நினைக்கும் போதெல்லாம்,

வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி;
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி;
தேடு கல்வியி லாததோர் ஊரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்[2]

2. பா.க;தோ.பா. வெள்ளைத் தாமரை-6.

என்ற பாடல் நினைவுக்கு வரும். தமிழ் இலக்கியத்தில் ஓரளவு நன்கு பழக்கமுள்ள வள்ளல் மனத்திலும் இப் பாடல் என்றாவது இடம் பெற்றிருத்தல் வேண்டும் என்று எனக்குத் தோன்றுகின்றது.

குமிழி—124

## 18. சென்னைப் பல்கலைக் கழகத் தொடர்பு

1950-51, 1951—52 இரண்டு ஆண்டுகள்தாம் ஐ. என். மேனன் பயிற்சிக் கல்லூரி முதல்வராக இருந்தார். அதன் பிறகு ஏனோ காரைக்குடி வாழ்வை விரும்பவில்லை. மதுரை தியாகராயர் கல்லூரியில் முதல்வர் பணியை ஏற்று அங்குச் சென்று விட்டார். பயிற்சிக் கல்லூரி முதல்வர் பதவிக்கு அண்மையில் கலைக் கல்லூரியில் பொருளியல் பேராசிரியராக இருந்த பேராசிரியர் எஸ். சீநிவாச அய்யரை நியமித்தார்கள். இவர் சென்னையில் உயர்நிலைப் பள்ளியில் அழகப்ப வள்ளல் படித்தபோது அவருக்குத் தனிப்பயிற்சி ஆசிரியராக இருந்தவர்; மதனபள்ளியில் (ஆந்திரம்) ஓர் இடை நிலைக் கல்லூரியில் விரிவுரையாளராகப் போய்ச் சேர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்தார். காரைக்குடியில் வள்ளல் 1948-இல் கல்லூரி தொடங்கின போது அவரை இங்குப் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் நியமித்தார். நான்கு ஆண்டுகளாகக் கலைக்கல்லூரியில் பேராசிரியராகப் பணிக் கொண்டிருந்தவரை ஐ. என். மேனன் விலகியதும் அந்த இடத்திற்கு இவரை முதல்வராக்கினார் வள்ளல். இவரிடம் எல். டி. பட்டம் இருந்ததுதான் இதற்குக் காரணமாக இருந்தது.

பேராசிரியர் எஸ். சீநிவாச அய்யர் இப்பதவியை விரும்பவில்லை. காரணம், எப்போதோ எல். டி. படித்தது. இனி, கல்வி பற்றிய நூல்களைப் படிக்க வேண்டும்; அவற்றில் புலமையை வளர்த்துக் கொள்ள வேண்டும், இஃதெல்லாம் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் எதற்கு என்று நினைத்தார் போலும். எனினும் வள்ளல் விருப்பத்தை எப்படி மறுப்பது? ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று. நல்லவர்; வல்லவருங்கூட. இரண்டாண்டு காலம் தள்ளினார். இந்தப் பதவிக்குப் பேராசிரியர் எஸ். திருவேங்கடாச்சாரி மிகவும் பொருத்தமானவராக இருந்தார். பதவியை அவாவியும் நின்றார். ஆனால் அப்பொழுது வள்ளல் மனத்தில் இவர் இடம் பெறவில்லை. ஓய்வுபெற்றவர்கள் தாம்—அல்லது ஐம்பது வயதைத் தாண்டினவர்கள்தாம்— முதல்வர் பதவிக்குப் பொருத்தமானவர் என்ற எண்ணம் இடம் பெற்றுவிட்டால், இவருக்கு எப்படி அப்பதவி கிடைக்கும்? இவர் தான் நாற்பது வயது கூட தாண்டவில்லையே. ஆனால் பேராசிரியர் சாரி பல பொறுப்புகளை மேற்கொண்டிருந்ததால் பேராசிரியர் சீநிவாச அய்யருக்கு தம் பொறுப்பு எளிதாக அமைந்து விட்டது. (அய்யர் என்று தன்னை அழைப்பதை இவர் விரும்பவில்லை; சீநிவாசன் என்று தான் இவர் அழைக்கப் பெற்றார்.) எப்படியோ இரண்டாண்டுகள் காலம் தள்ளி விட்டார். 1953-54, 1954-55 ஆண்டுகள் இப்பதவியிலிருந்தார்; அதன் பிறகு கலைக் கல்லூரிக்கே தாம் இருந்த இடத்திற்கே போய் விட்டார்.

கல்லூரியின் தொடக்கக் காலத்தில் கல்லூரியின் சார்பாக பேராசிரியர் எஸ். திருவேங்கடாச்சாரி, பேராசிரியர் வி. என். சுப்பிரமணியம் ஆகிய இருவருமே 1950-51, 1951-52, 1952-53 ஆகிய மூன்றாண்டுகள் சென்னைப் பல்கலைக்கழக கல்வி ஆலோசனைக் குழுவில் (Academic Council) உறுப்பினர்களாக இருந்து வந்தனர். தொடக்க காலத்தில் இவர்கள் இருவரும் ஆசிரியர்களால்

ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1953-54 முதல் மூன்றாண்டுகள் இருவர் தேர்ந்தெடுக்கப் பெறல் வேண்டும். நான் துறையூரில் தலைமையாசிரியராக இருந்த காலத்திலேயே தலைமையாசிரியர் தொகுதியிலிருந்து பேரவை உறுப்பினராக வருவதற்குத் தேர்தல் மூலம் முயன்றேன்; முடியவில்லை. இளமை காரணமாக வாக்குகள் அதிகம் கிடைக்காமையால் தோற்றேன். அடுத்து பதிவு பெற்ற பட்டதாரிகள் (Registered Graduates Constituency) தொகுதியில் இருமுறை நின்று தோற்றேன். இளமைதான் காரணம்; இந்நிலையில் நான் வாக்காளர்கள் மனத்தில் இடம் பெறவில்லை.

கல்வி ஆலோசனைக் குழுவிலோ, பேரவையிலோ உறுப்பினராக இருந்து நான் சாதிக்கப் போவது ஒன்றுமில்லை. யாரும் சாதிக்க முடியாது. யாரோ ஓரிருவர் தீர்மானம் கொண்டு வருதல், தீர்மானங்களை ஆதரித்தோ மறுத்தோ பேசுதல் போன்ற 'இரைச்சல்' போடலாம். காரியம் ஒன்றும் சாதிக்க முடியாது, விரல் விட்டு எண்ணக்கூடிய யாரோ ஐவர் அல்லது அறுவர் கருத்துப்படிதான் காரியங்கள் நடைபெறும்; இவர்களும் துணைவேந்தர் கருத்துக்குத் தாளம் போடுவர்; அல்லது ஒத்து ஊதுவர். அதுவும் உலகப் புகழ் பெற்ற (மருத்துவத்தில்) டாக்டர் ஏ. எல். முதலியார் துணைவேந்தராக இருக்கும் போது எவருடைய குரலும் எடுபடாது; பேச்சு வெறும் இரைச்சலாகத்தான் முடியும். ஒரு விதத்தில் இது நல்லதாகவே இருந்தது. உயர்தரக் கல்வியில் மிகவும் அக்கறை கொண்டு சனநாயக முறையில் அவை உறுப்பினர்களைத் தம் பக்கம் அணைத்துக் கொண்டு உயர்ந்த முறையில் துணைவேந்தர் செயற்படும் போது வீண் இரைச்சல் எதற்கு? என்றுதான் என்னால் நினைக்க முடிந்தது.

நான் இந்த அவைகளில் உறுப்பினராக முயன்றது உயர் மட்டக் கல்வி முறை எப்படிச் செயற்படுகின்றது

என்பதைக் காண்பதற்காகவே அன்றி ஒன்றையும் சாதிக்க முடியும் என்பதற்காக அன்று. இளமை முதலே இத் துடிப்பு என்னிடம் இயல்பாகவே இருந்து வருகின்றது. இரண்டு மூன்று முறை உயர்நிலைப்பள்ளியில் இருந்த போது தேர்தலில் தோற்ற அநுபவம் இப்போது கிளர்ந் தெழுந்தது. ஒரு ஏழெட்டு பேர்களுக்குள் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்க முடியாது போயினும் தேர்தலில் நின்றாவது பார்க்கலாம் என்ற ஆசை எழுவது இயல்புதானே. கல்வி ஆலோசனைக் குழுவில் இடம் பெற மூவர் ஆசைப் பட்டோம். இவர்களுள் நான் ஒருவன்; திரு எஸ். கிருஷ்ணய்யங்கார் (கணிதம்), திரு கே. நாராயண அய்யங்கார் (ஆங்கிலம்) ஆகிய இருவர் மற்றவர்கள். ஒரு குட்டித் தேர்தல் நடை பெற்றது; நானும் திரு. கிருஷ்ணய் யங்காரும் தேர்ந்தெடுக்கப் பெற்றோம். இந்தச் சிறு விஷயத்தில் கூட இறைவனது சங்கல்பம் இல்லாவிட்டால் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பது என் நம்பிக்கை. தொடக்கக் காலத்தில் மூன்று முறை தோற்ற என்னை இப்போது இறைவன் சங்கல்பம் இருந்தமையால் வெற்றி பெற முடிந்தது என்று நம்புகின்றேன்.

கல்வி ஆலோசனைக் குழுவில் தேர்ந்தெடுக்கப் பெற்ற தொடக்க காலத்திலேயே இன்னொரு தேர்தல் வந்தது. கல்வி ஆலோசனைக் குழுவிலிருந்து நால்வர் பேரவைக்கு (senate) வரலாம் தேர்தல் மூலம். கல்லூரிக்கு மூவர் வீதம் கல்வி ஆலோசனைக் குழுவில் கிட்டத்தட்ட இருநூறு பேர் இருந்தனர்; இவர்களுள் கல்லூரி முதல்வர்கள் பதவித் துறை சார்பாக (Ex-officer) உறுப்பினர்கள். கல்லூரிக்கு இருவர் வீதம் ஆசிரியர்கள், உறுப்பினர்கள். முதலில் பேரவைக்கு இரு உறுப்பினர் களின் இடங்கள் காலி என அறிவிக்கப் பெற்றன. நான் இதற்குப் போட்டியிட்டேன். அனைவருக்கும் ஒரு கடிதம் எழுதினேன். ஒவ்வொருவர் இரண்டு வாக்குகள் அளிக்க லாம். சிலர் இரண்டு வாக்குகளையும் பயன்படுத்துவர்;

சிலர் ஒரு வாக்கையே அளிப்பர். இத்தேர்தலில் ஒன்றிரண்டு வாக்குகள் இல்லாமையால் தோற்றேன். ஒன்றிரண்டு திங்களில் மீண்டும் இரண்டு இடங்கள் அறிவிக்கப்பெற்றன. இதற்கு நின்று மூன்று முறை அனைவருக்கும் கடிதங்கள் எழுதினேன். இம்முறை அதிக வாக்குகள் பெற்று முதலாவதாக வெற்றி அடைந்தேன். ஏதோ இளமையில் கண்ட கனவு இறையருளால் நனவாகியது.

இந்த மூன்றாண்டுகளிலும் (1953-54, 1954-55, 1955-56) ஒவ்வொரு அவையிலும் ஆண்டிற்கு இரண்டு கூட்டங்கள் நடைபெற்றன. ஒன்று தவறாமல் சென்று வந்தேன். நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் உன்னிப்பாகக் கவனித்து வந்தேன். டாக்டர் முதலியார் கூட்டங்களை நடத்திய முறையே என்னைக் கவர்ந்தது. ஐந்தாறு பேரு தான் எதையாவது பேசுவார்கள், மற்றப்படி தீர்மானங்கள் வேகமாக முடிக்கப் பெறும். இரண்டு மூன்று பேர் (பெயர்களைக் குறிப்பிட விரும்பவில்லை) நேராகப் பேச வேண்டிய பொருளுக்கு வராமல் மாடல மறையோன் செங்குட்டுவனை நோக்கி 'முகஸ்துதியுடன்' பேசுவதுபோல அடிக்கடித் துணை வேந்தரைப் புகழ்ந்து கொண்டே பேசுவார்கள். சில சமயம் இது பஜனை பாடுவது போலத் தென்படும்; பஜனையில் கோமாளி ஆடுவது போலவும் காட்சியளிக்கும். இதனால் அயர்ந்து தலையாட்டிக் கொண்டு தூங்குவோரும் விழித்துக் கொள்வர். தீவிர மாகப் பொருள்களில் ஈடுபடுவோருக்கும் இது புன்முறுவலை விளைவிக்கும். சிலர் இதனை நகைச் சுவையாகவே அநுபவிப்பர்.

ஒரு சமயம் பி.எட் வகுப்பில் விருப்பப் பாடங்களைப் பயிலும் ''பரீட்சார்த்தமாக'' தமிழில் கற்பிக்கலாம் என்ற தீர்மானத்தை ஓர் உறுப்பினர் கொணர்ந்தார். துணை வேந்தரும் இயல்பான தம்முடைய உறுதியான

போக்கிலிருந்து இந்தத் தீர்மானத்திற்கு வளைந்து கொடுத்தார். பலர் இந்தத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினர். பாட நூல்கள் தமிழில் இல்லை; கலைச் சொற்கள் இன்னும் உறுதி செய்யப் பெறவில்லை. இந்நிலையில் இத்திட்டம் வெற்றியுடன் செயற்படாது; செயற்படவும் முடியாது என்று காரணங்கள் கூறி எதிர்த்தனர். இறுதியாகத் துணைவேந்தரின் வளைந்து கொடுக்கும் தன்மையை அறிந்து வேண்டா வெறுப்பாகத் தீர்மானத்தை ஒருமனதாக ஏற்றனர்; தீர்மானமும் நிறைவேறியது.

இத்தீர்மானம் நிறைவேறியது 1956 பிப்பிரவரி, மார்ச்சுக் கூட்டங்களில் என்பதாக நினைவு. நாட்டு நடப்பையும் தாய்மொழி மூலம் கற்பிப்பதன் மெத்தனப் போக்கையும் நான் நன்கு அறிந்து கொள்ள இக்கூட்டங்கள் எனக்கு ஒரு வாய்ப்பளித்தன. காரைக்குடி திரும்பியதும் ‘அறிவியல் பயிற்றும் முறை’ ஓராண்டிற்குள் எழுதி வெளியிட வேண்டும் என்று உறுதி கொண்டு செயற்பட்டேன். நான் ஓர் அறிவியல் பட்டதாரி (வேதியியல், இயற்பியல், கணிதம்—பாடங்களைப் பட்டப் படிப்பில் படித்து முதல் வகுப்பில் பல்கலைக் கழகத்தில் மூன்றாவது நிலை பெற்றவன்). தவிர, ஒன்பதாண்டுகள் உயர்நிலைப் பள்ளியில் ஒன்று முதல் ஆறு படிவம் வரை (6 முதல் 11 வகுப்பு வரை) பொது அறிவியல் கற்பித்தல் அநுபவமும் எனக்கு இருந்தது. பயிற்சிக் கல்லூரியிலும் அறிவியல் கற்பிக்கும் முறைகளை நேரில் கண்டு கொண்டிருக்கும் வாய்ப்பும் இருந்தது. இந்நிலையில் மீனை நீரில் விட்டது போன்ற அநுபவமும் தோன்றியது. மிக உற்சாகமாகப் பணியில் இறங்கினேன். அறிவியல் கற்பிக்கும் முறைகள் பற்றிய ஆங்கில நூல்களையெல்லாம் ஆழ்ந்து கற்றேன். சில உளவியல் நூல்களையும் பயின்று கொண்டிருந்தேன்.

நூல் அமைய வேண்டிய முறையைத் தற்காலிகமாக வகுத்துக் கொண்டு திட்டம் இட்டேன். பதினைந்து இயல்களில் நூலை அமைத்தேன். பழநியப்ப சகோதரர் களை நெருங்கி நூலின் அவசியத்தையும் அது வெளிவர வேண்டிய அவசரத்தையும் எடுத்துக் கூறி வெளியிடுமாறு வேண்டினேன். அவர்களும் மனமுவந்து ஒப்புக் கொண்டு நூலை இரண்டே மாதத்தில் வெளியிட்டனர். நூல் 1957 ஏப்ரல் முதல் நாள் முதல் தமிழகத்தில் உலா வரச் செய்தனர். இஃது என்னுடைய மூன்றாவது வெளியீடு. இந்த நூலை எழுதி வருங்கால் வள்ளல் அழகப்பர் நோய் வாய்ப்பட்டிருந்தார். சென்னையில் தனியார் மருத்துவ மனையொன்றில் சேர்க்கப் பெற்றுச் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். நான் அவரைச் சென்று பார்த்து வந்ததாக நினைவு. அழகப்பா அறக்கட்டளையின் துணை மேலாளராக இருந்த திரு. பத்மநாபன் அவரைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவர் தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகிய இந் நூல்களிலிருந்து தேந்ர்தெடுத்த பாடல்களை இசையுடன் பாடித் தெய்வ விருந்து அளித்துக் கொண்டிருந்தார். வள்ளலும் தமிழில் மிக்க ஆர்வமுடையவர். அவருக்கும் பல தெய்வப் பாடல்கள் மனப்பாடம். திரு. பத்மநாபனும் தமிழ்ப்பற்றுடையவர். ராய. சொ.விடம் நெருங்கிய தொடர்புடையவர். இதனால் தெய்வப் பாடல்களை அதிகம் படிப்பவர்.

நூல் வெளிவருவதற்கு முன் வள்ளல் இருப்பாரா என்ற ஐயம் எனக்கு இருந்து வந்தது; நிலைமை மிக மோசமாக இருந்தது. இந்த நூலை வள்ளல் அழகப்பருக்கு அன்புப் படையலாக்க திட்டமிட்டிருந்தேன். நூல் அச்சாகும்போதே என்னுடைய நூல் முகமும் தயாரா யிற்று; இரண்டு திங்கட்கு முன்னர் அன்புப் படையலுக்கு உரிய பாடலும் தயாராகிவிட்டது. ராய். சொ.விடமும் சா. கணேசனிடமும் பாடலைக் காட்டினேன். அவர்கள்

நன்றாக இருப்பதாக அறிவித்தனர். இரண்டு திங்களுக்கு முன்னரே பாடலைப் திரு. பத்மநாபனுக்கு அனுப்பி 'அறிவியல் பயிற்று முறை' சென்னைப் பல்கலைக்கழக பேரவைத் (Senate) தீர்மானத்தின்படி எழுதப் பெற்ற முதல் நூல் என்றும், நான் பயிற்சிக் கல்லூரியில் பணி யேற்ற பிறகு அந்த அநுபவத்தின் அடிப்படையில் எழுதப் பெற்ற முதல் நூல் என்றும், அதனை வள்ளலுக்கு அன்புப் படையலாக்கப் பெறுகின்றது என்றும் தெரிவிக்குமாறும் அன்புப் படையல் பாடலை அனுப்பி அவருக்குப் பாடிக் காட்டுமாறும் கேட்டிருந்தேன். பாடல் இது:

நலங்கிளர் ஊக்கம் எனும்புனல் பெய்து
　　நாள்தொறும் அன்புற வளர்த்த
பொலங்கிளர் முயற்சிக் கொடியினில் பூத்த
　　பொருளெனும் நறுமலர் கொய்து
புலங்கிளர் தெய்வக் கலைமகள் அடிக்கே
　　பொற்புற அணிந்துளம் களிக்கும்
வலம்கிளர் டாக்டர் அழகப்ப வள்ளல்
　　மலரடிக் குரியதிந் நூலே.

என்பது. இந்தப் பாடலை திரு. பத்மநாபன் படித்து—இல்லை, பாடி—வள்ளலை மகிழ்வித்தார். அடிக்கடிப் பல நாட்கள் இதைப் பாடும்படிக் கேட்டு மகிழ்ந்திருந்தார் என்று திரு. பத்மநாபனும் எனக்கு எழுதியிருந்தார். இந்த நூல் கட்டமைக்கப் பெற்று அவர் கைக்குக் கிட்டும் முன்னர் அவர் முத்தராகி மீளா உலகம் சென்று அடைந்தார்.

கல்லூரிகள் நிறுவின வளாகத்திலேயேவேறு கலப்பின்றி சந்தனக் கட்டைகளையே அடுக்கி அவற்றின் மீது அவர் தெய்வத் திருமேனியைப் படுக்க வைத்து சந்தனக் கட்டை களாலேயே மூடி எரியூட்டினர். ஆசிரியப் பெருமக்களும் மாணவர்களும் உறவினர்களும் காரைக்குடி, கோட்டையூர், கண்டனூர்—புதுவயல், கானாடுகாத்தான் முதலிய பல ஊர்ப் பெருமக்களும் குளமான கண்களுடன் இக்

காட்சியைக் கண்டனர். இன்னும் ஒரு பத்தாண்டுகள் வாழ்ந்திருந்தால் அவர் காலத்திலேயே ஒரு பல்கலைக் கழகம் கண்ட பெருமையுடன் இவ்வுலகை நீத்திருப்பார். ஆயினும் என்? இறைவன் திருவுள்ளக் குறிப்பின்படி 28 ஆண்டுகள் கழித்து அழகப்பா பல்கலைக்கழகம் தோன்றியது; வள்ளலின் கனவும் நனவாகியது. முத்தி உலகினின்றும் வள்ளல் இதைக் கண்டுகளித்துக் கொண்டிருக்க வேண்டும்.

வள்ளல் மறைந்த ஒரு திங்களுக்குப் பிறகு கண்டனூர் சென்று அவர் அருமைத் திருமகளார் உமையாள் ஆச்சி— அவரது கணவர் இராமநாதன் இருவரிடமும் நூலின் ஒரு படியைத் தந்து மகிழ்ந்தேன் அவர்களும் நான் வள்ளல் பால் கொண்டிருந்த உள்ளன்பைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

குமிழி – 125

# 19. என் கல்விப் பணி

நான் பணியேற்ற முதலாண்டு எம்.ஏ. தேர்வுக்கு மும்முரமாகப் படித்து வந்ததால், முதலாண்டு வகுப்பு நடத்துவதற்குத் தேவையான அளவு பாடங்களைத் தயாரித்துக் கொண்டு காலத்தைக் கழித்தேன்.இரண்டாம் ஆண்டிலிருந்து மும்முரமாகப் பணியில் இறங்கினேன். 'தமிழ் பயிற்றல்' பற்றி ஒரு பெரிய நூல் எழுதவேண்டும் என்ற எண்ணம் பணியை ஒப்புக்கொண்ட அன்றே முகிழ்த்தது. ஒரு பெரிய நூல் எழுதுவதென்பது எளிய செயலன்று. அதுவும் தாய்மொழிப் பயிற்றல் பற்றியும், கல்வி உளவியல் பற்றியுமான எண்ணற்ற நூல்களில் பலவற்றைப் படித்தல் வேண்டும். கருத்துக்களை பல இயல்

களாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் உரியவற்றைக் கோவைப் படுத்தி வைத்துக் கொள்ளவேண்டும். பிறகு எழுதவேண்டும். 'உரோமாபுரி ஒரு நாளில் கட்டப்பட்ட தன்று' என்ற மேனாட்டுப் பழமொழி அடிக்கடி நினைவிற்கு வரும்.

ஒரு பெரிய நூல் எழுதுதல் பெரிய வீடு கட்டுவதைப் போன்றது. கட்டடம் எப்படி அமைதல் வேண்டும் என்பதை முன்னமேயே நன்கு சிந்தித்து ஒரு கரட்டு வரைப்படம் (Rough Plan) வரைந்து கொள்ள வேண்டும். ஒரு பொறியியல் வல்லுநரைக் கொண்டு சரியான படம் வரையச் செய்து அதற்கு ஆகும் உத்தேசச் செலவுகள் பற்றியும் திட்டம் வகுத்துக்கொண்டு செயற்படவேண்டும். வீட்டில் படுக்கை அறைகள் வசதிப்பட்டால் அவற்றுடன் இணைந்த கழிப்பறைகள், சமையல் அறை, சமையல் சாமான்கள் சேமித்து வைக்கும் அறை, உண்ணும் அறை, முன் மண்டபம் (Hall) வரவேற்பு அறை, பூசை அறை முகப்பில் உட்காருவதற்கேற்ற இட வசதி இவையெல்லாம் கிடைப்படத்தில் விவரமாகக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். கட்டடத்தின் அடிப்படை (Foundation) பலமாக இருக்கும் விவரமும் கிடைப்படத்தில் தெளிவாகக் காட்டப் பெற்றிருத்தல் வேண்டும்.

கட்டடத்திற்குத் தேவைப்படும் மணல், செங்கல், மரம், இரும்பு, பல்வேறு குழாய்கள், முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு அறையிலும் மூடிய பரண்கள், கண்ணாடி முகப்புள்ள அலமாரிகள் இவை அவசியம் இருத்தல் வேண்டும். இப்படி ஒரு வீடு கட்டிய அநுபவம் 1980 ஆண்டு இறுதியில் தொடங்கி 1983 ஆகஸ்டு வரை வீடு கட்டியதால் ஏற்பட்டது. நூல் எழுதுவதில் இந்த அநுபவம் 1951 முதல் 1956 வரை ஏற்பட்டது. அந்தக் காலத்தில் ஓரிரு தமிழாசிரியர்க்கு தான் பள்ளியிறுதித் தேர்வு வரை படித்த ஆங்கில அறிவு இருந்தது. அதன் பிறகு சில ஆண்டுகள் கழித்துதான்

பட்டப் படிப்புடன் தமிழாசிரியர்கள் தோன்றினார்கள். ஆதலால் மொழி பயிற்றும் ஆசிரியர்கள், குழந்தைப்பள்ளி முதல் கல்லூரிவரை பணியாற்றுவோர் அறியவேண்டிய செய்திகள் யாவை என்பது பற்றிய எண்ணம் மனத்தில் நெருடிக் கொண்டிருந்தன. ஆகவே இவற்றை மனத்தில் முதலில் அமைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. பயிற்றும் முறைகள் பற்றி எத்தனையோ ஆங்கில நூல்கள் தோன்றியுள்ளன. இவையும் நூலில் சுருக்கமாகவாவது இடம் பெறத் திட்டம் இட்டேன். இந்த நூலில் பத்து முறைகளைச் சுருக்கமாக இரண்டு இயல்களில் விளக்கியுள்ளேன்.

இம் மாதிரியான நூல்களை எழுதும்போது, இயல் இயலாக எழுத முடியாது. மேனாட்டு நூல்களைப் பயிலும் போது பல கருத்துகள் மனத்தில் எழுந்து கொண்டே இருக்கும். பல உளவியல் கொள்கைகள் தோன்றிய வண்ணம் இருக்கும். மாணாக்கர்கள் வகுப்பு நடத்தும் போதும் அநுபவம் மிக்க ஆசிரியர்கள் பல நிலைகளில் வகுப்புகளை நடத்தும் போதும் பல அநுபவ உண்மைகள் சேர்ந்து கொண்டே இருக்கும். இவை யாவும் நூலில் இடம் பெற வகை செய்தல் வேண்டும். இக்காரணத்தால் எல்லா இயல்களும் வளர்ந்த வண்ணம் இருக்கும். அந்தந்த இயல்களில் பொருத்தமானவற்றைப் பொருத்தமான இடத்தில் சேர்த்து நூலை வளப்படுத்தல் வேண்டும். அநுபவத்தையொட்டி நூல் அமைந்தால்தான் பயிற்சி பெறும் மாணவ-ஆசிரியர்கட்கும், —ஏன்? அநுபவம் மிக்க ஆசிரியர்கட்கும் கூடத்தான்-கல்வித் துறையில் ஆர்வம் மிக்க பொது மக்களுக்கும் இது நடை முறையில் பயன்படுவதாக அமையும்.

சிறந்த ஆசிரியர்களாகிய அரிஸ்டாட்டில் பெஸ்டலாஸ்ஸி, ரூஸோ, ஹெர்பார்ட், ஃபிராபெல், மாண்டிசாரி, ஜான்ட்யூயி, கீல்பாட்ரிக் போன்றவர்களின் கருத்துகள் யாவும் அநுபவக் களஞ்சியங்கள். கற்பிக்கும் துறையில்

பணியாற்றுபவர்கட்கு இவை என்றும் சிந்தனை விருந்தாக அமையும். எடுத்துக் காட்டாக விளையாட்டு முறைபற்றி ஷில்லர், ஹெர்பர்ட் ஸ்பென்சர், மேலிபிரான்சி, கார்ல்குரூஸ், ஸ்டாலின் ஹால், ஜேம்ஸ்ராஸ் (உளவியல் அறிஞர்) போன்றவர்களின் கருத்துகள் நம்மைச் சிந்திக்க வைக்கும். ஆண்டவனே 'அலகிலா விளையாட்டுடையராக' இருந்து உலகைப் படைத்தல் என்ற இலக்கியச் சான்று சுவை பயக்கும். இக் கருத்துக்களை விளக்கும் முறைகள் அநுபவத்தில் கண்ட கற்றல் அடிப்படையில் அமைந்த பல வித விளையாட்டுக்கள் இந்நூலில் இடம் பெறச் செய்துள்ளேன் எ-டு 'அந்நியனைக் கண்டுபிடி,' 'கரும்பலகை ஓட்டம்' 'பயணம் செய்தல்' போன்றவை சுவையானவை: இந்த நூலில் மாணவர்கள் தனியாகக் கற்கவும், குழுவாகக் கற்கவும், உள்ள கற்கும் (கற்பிக்கும்) முறைகள் பாகுபடுத்திக் காட்டப் பெற்றுள்ளன.

பயிற்றலில் மேற்கொள்ளும் உத்திகள் பல வகைப் படும். ஒவ்வோர் ஆசிரியரும் தத்தம் ஊகத்திற்கேற்பவும் பலவகை உத்தி முறைகளைக் கையாளுகின்றனர். இவற்றின் மூலம் தம் பயிற்றலுக்குச் சுவையும் கவர்ச்சியும் ஊட்டுவர், இவற்றை வாய்மொழி வினாக்கள், விளக்கம் தருதல், துணைக்கருவிகள், வீட்டுவேலை என்ற நான்கு தலைப்புகளில் காட்டியுள்ளேன். கற்பித்தலில் வாய்மொழி வினாக்கள் பல்வேறு விதமாகப் பயன்படுகின்றன. வினாக்களைத் தக்க முறையில் கையாளுதலில் இளம் ஆசிரியர்கள் நல்ல பயிற்சியைப் பெறுதல் வேண்டும். இந்த உத்திதான் ஆசிரியரையும் மாணாக்கர்களையும் மனநிலையில் ஒன்றாகப் பிணைக்கின்றது.[1] வினாக்களை விடுக்கும் திறன் கைவரப் பெற்ற ஆசிரியர்கள் ஓரளவு கற்பிப்பதில் வல்லுநராக இருப்பர் என்று கூறலாம். ஆனால், வினாக்

1. தமிழ் பயிற்றும் முறை : பக். 89, 90 (மூன்றாம் பதிப்பு) காண்க.

களைத் தக்க முறையில் விடுக்கத் தெரியாதவர் சிறந்த ஆசிரியராகத் திகழ முடியாது என்று துணிந்து கூறி விடலாம்.) வினவுதல் கற்பித்தலில் கைவரப்பெற்ற ஒரு முக்கிய திறனாகும். வினவுதலைக் குறித்து கிப்ளிங் என்ற கவிஞர்,

> தப்பிலாது எனக்குத் தொண்டைச்
> சால்புடன் இயற்று வோர்கள்
> ஒப்பிலார் அறுவர் உள்ளார்
> உவந்(து) எனது உள்ளத்(து) என்றும்
> இப்பெரு ஞானம் எல்லாம்
> இவர்தந்தார்; இவர்கள் நற்பேர்
> எப்படி? எப்போ(து) எங்கே?
> யார்?ஏன்? என்?என்ப வாகும்.[2]

என்று கூறுவர். என்ன? ஏன்? எப்பொழுது? எப்படி? எங்கே? யார்? என்ற அறுவகை வினாக்களும் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் துணையாக இருப்பதைப் பட்டறிவால் அறியலாம். ஈண்டு நன்னூலார்[3]கூறும் அறுவகை வினாவை ஒப்பிட்டுப் பார்த்தலும் இன்றியமையாதது.

கற்பிக்கும் நிலைகளையொட்டி ஆராய்ந்தால் வினாக் களை மூன்று விதமாக வகைப்படுத்தலாம். பாடத்தைத் தொடங்குவதற்கு முன் விடுக்கப்பெறும் மாணாக்கரின் முன்னறிவைச் சோதிக்கும் நோக்கத்தைக் கொண்டவை; முன்னறிவை அறிந்தால்தான் திசையறிந்து கலத்தைச்

---

2. I Keep six honest meen;
They taught me all I know.
Their names are What and Why and When
And How and Where and Who.
—Rndyard Kipling

3. அறிவறி யாமை ஐயுறல் கொளல் கொடை
ஏவல் தரும்வினா ஆறும் இழுக்கார்
—நன், நூற். 385

செலுத்தும் மீகாமனைப் போல, துறையறிந்து பாடத்தை நல்ல முறையில் கொண்டு செலுத்த முடியும். பாட வளர்ச்சியில் விடுக்கப்பெறும் வினாக்கள் மாணாக்கர் களைப் படிப்படியாகப் புதிய பொருள்களை அறியத் துணை செய்பவை. பாடத்தின் ஒவ்வொரு படியின் இறுதி யிலும் பாட முடிவிலும் விடுக்கப்பெறும் வினாக்கள் கற்பித்த பாடத்தை மாணாக்கர்கள் எந்த அளவில் புரிந்து கொண்டுள்ளனர் என்பதையும் எவற்றில் ஐயப்பாடுகள் உள்ளன? எவற்றைத் திரிபாக உணர்ந்தனர்? எவற்றைத் தவறாக உணர்ந்தனர்? என்பவற்றை அறியவும் எப்பகுதி களை இன்னும் நன்கு விளக்க வேண்டும் என்பதையும் தெரிந்து கொள்ளப் பயன்படுபவை. வினாக்களை அமைப் பதில் சிறந்த திறன் வேண்டும். சிந்தனையும் வேண்டும். அவற்றை விடுப்பதிலும் திறமும் சிந்தனையும் வேண்டும்.

வீட்டு-வேலையின் இன்றியமையாமையை எல்லோரும் அறிவர். பெரும்பான்மையான ஆசிரியர்கள் சிந்தனை யின்றியே ஒவ்வொரு பாடத்தின் ஈற்றில் காணப்பெறும் பயிற்சிகள் எல்லாவற்றையும் செய்து வரும்படி ஏவு கின்றனர். தம் பாடமே முக்கியம் என்று சில ஆசிரியர்கள் அளவுக்கு மீறிய வீட்டு-வேலையை மாணாக்கர்மீது சுமத்தி விடுகின்றனர். இவற்றைச் செய்வதற்கு எவ்வளவு காலம் வேண்டும் என்பதை எவருமே எண்ணிப் பார்ப்பது இல்லை. ஒருவித நோக்கமுமின்றி வீட்டு-வேலையைத் தருவதால் நற்பயன் ஒன்றும் விளையாது; அதற்கு மாறாகத் தீமைதான் விளையும். படிப்பிலும் வெறுப்புத் தட்டும்; இத்தகைய கருத்துகள் நூலில் விரிவாக இடம் பெற்றுள்ளன.

அறிவு வளர்ச்சி பெறுவது மூன்று விதமாக நடைபெறு கின்றது. பழைய பொருள்களுடன் புதிய பொருள் சேர்வ தாலும், இவ்வாறு பெறும் பொருள்கள்—செய்திகள்—அநுபவமாக மாறுவதாலும், புதிய செய்திகளை மேலும் மேலும் கண்டறிவதாலும் அறிவு வளர்ச்சியடைகின்றது

என்பது கல்வி இயலார் கண்ட உண்மை. அறிவு ஒரு மரம் வளர்வதைப் போல் வளர்கின்றதேயன்றி ஒரு கற்குவியல் போல் வளர்வதில்லை. எனவே, புதிதாகக் கற்பிக்கும் பொருள்கள் முன்னறிவுடன் நன்றாகப் பிணைக்கப் பெற்றுப் பட்டறிவாக மாற வேண்டும். இச்செயலில் ஆசிரியர் ஒரு தோட்டக்காரன் நிலையைத்தான் மேற் கொள்ள வேண்டும். செடிகள் வளர்வதற்குத் தோட்டக் காரன் எவ்வெச் செயல்களை மேற்கொள்கின்றானோ, அதைப் போலவே ஆசிரியரும் மாணாக்கர்களின் அறிவு வளர்ச்சி பெறுவதற்குச் சாதகமாக இருக்கும் செயல்களை மேற்கொள்ளல் வேண்டும். மாணாக்கர்களின் அக்கறையை எழுப்புதல், கற்பனவற்றை வாழ்க்கையில் பயன்படுத்தப் பள்ளி வாழ்க்கையில் வாய்ப்புகளைத் தருதல், சிந்தனைக்கு வாய்ப்புகளை நல்குதல், பல துணைக் கருவிகளால் புதிய பொருள்கட்கு விளக்கந்தருதல், கருத் தேற்றம் (Suggestion) தருதல் முதலியவை ஆசிரியர் செய்ய வேண்டியவையாகும். மாமல்லபுரம், சித்தன்ன வாசல், மதுரை, திருச்சி மலைக்கோட்டை முதலிய இடங் கட்குச் சுற்றுலா செல்லலை மேற்கொள்ளுதல், மிருகக் காட்சிச்சாலை, அரும்பொருள் காட்சியகம், பெரிய நூலகங்கள் இவற்றிற்கு மாணாக்கர்களை இட்டுச் செல்லுதல் ஆகியவற்றால் மாணாக்கர்களின் மனம் விரிவடைந்து மேலும் கற்பதற்கு ஆர்வம் கிளர்ந்தெழும்.

கல்வியியல் பற்றிய நூல்களில் சில வழிகாட்டும் உண்மைகள் உள்ளன. அவற்றை முறைவல்லார் சிறுசிறு சொற்றொடர்களாகக் கூறிச் சென்றுள்ளனர். அவை தெரிந்தவற்றிலிருந்து தெரியாதவற்றிற்குப் போதல், முழுதிலிருந்து பகுதிக்குப் போதல், காட்சி நிலையிலிருந்து கருத்து நிலைக்குச் செல்லல், சிறப்பிலிருந்து பொது விற்குப் போதல், எளிமையிலிருந்து அருமைக்குப் போதல், தெளிவிலிருந்து சிக்கலுக்குப் போதல், தெளிவற்ற நிலை யிலிருந்து தெளிவான நிலைக்குப்போதல் என்பவை.

இவற்றை ஆசிரியர்கள் நன்கு அறிதல் வேண்டும். இவை எடுத்துக் காட்டுகளுடன் நூலில் இடம் பெற்றுள்ளன. இவை யாவும் இயற்கையையொட்டியும், குழந்தைகளின் உளநிலையையொட்டியும் இருத்தல் வேண்டும். மன வளர்ச்சியை அனுசரித்தும் இருத்தல் வேண்டும். காரண காரிய முறைப்படி இருத்தல் வேண்டும் என்று எண்ணுதல் தவறு. கற்பித்தல் விதி வருமுறையை (Inductive method) யொட்டியும் இருத்தல் வேண்டும். ஆனால், சில இடங்களில் விதி விளக்கு முறையைப் (Deductive method) பயன்படுத்தவும் செய்யலாம். இவண் காட்டிய குறிப்புகள் யாவும் வளர்ச்சி பெறும் மனத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை; இவை குழந்தையின் மனப்பான்மையை யொட்டியும் கற்பிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துபவை. அன்றியும், இவை கற்றுத் துறைபோய ஆசிரியர் கற்பிக்கும் பாடத்தில் குழந்தைகட்குக் கற்பிக்க வேண்டியவற்றை ஒரு முறைப்படி ஒழுங்கு படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்துபவை. பகுக்க வேண்டிய இடத்தில் பகுத்தும், தொகுக்க வேண்டிய இடத்தில் தொகுத்தும் முறையை இடத்திற் கேற்ற வாறெல்லாம் மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதையும் நினைவூட்டுகின்றன. கற்பித்தல் துறையில் புதிதாகப் புகும் இளைஞர்கட்கு இவை நல்ல வழி காட்டிகளாக உதவும்.

நம் பண்டைய ஆசிரியர்கள் பயிற்றும் முறையைக் குறித்துக் கூறியுள்ள கருத்துகள் இக்கால முறைவல்லார் கூறும் கருத்துகளுடன் ஒப்பிட்டுக் காட்டப்பெற்றுள்ளன இந்நூலில். பயிற்றும் முறையைக் குறித்து நச்சினார்க்கினியர்,

> ஈதல் இயல்பே இயல்புறக் கிளப்பின்
> பொழிப்பே அகலம் நுட்பம் எச்சமெனப்
> பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
> புகழ்ந்த மதியிற் பொருந்தும் ஓரையில்

திகழ்ந்த அறிவினன் தெய்வம் வாழ்த்திக்
கொள்வோன் உணர்வகை அறிந்தவன்
கொள்வரக்
கொடுத்தல் மரபெனக் கூறினர் புலவர்.[4]

என்ற நூற்பாவைக் காட்டுவர். நன்னூலாசிரியரும் பாடம் சொல்லுவதைப் பற்றி,

ஈதல் இயல்பே இயம்பும் காலைக்
காலமும் இடமும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்கை அறிந்துஅவன்
உளங்கொளக்
கோட்டமில் மனத்தின்நூல் கொடுத்தல் என்ப.[5]

இவண் ஈதல் இயல்பு என்பது பயிற்றும் முறை (Teaching method). 'காலமும் இடமும்' என்பதைத்தான் இக்காலத்தார் 'தகுந்த சூழ்நிலை' (Proper environment) என்று கூறுவர். 'உரைக்கப்படும் பொருள் உள்ளத்தமைத்தல்' என்பது பாட ஆயத்தத்தைக் (Lesson planning) குறிப்பது. 'கொள்வோன் கொள்வகை அறிந்து' என்பது ஹெர்பார்ட் கூறும் 'மனத்தைத் தயாரித்தல்' (Preparation) என்ற படியில் அடங்கும். சிலர் இதைப் 'பாடம் தயாரித்தல்' என்று பொருள் கொள்வர். இது தவறு. இவ்விடத்தில் மேற்குறிப்பிட்ட இரண்டு நூற்பாக்களிலும் (6-வது அடியில்) முறையே உள்ள 'உணர்வகை', 'கொள்வகை' என்ற தொடர்களை ஊன்றி நோக்குதல் இன்றியமையாதது. 'மாணாக்கர் உணரும் வழி' அல்லது (ஏற்றுக்) கொள்ளும் வழியறிந்து அதற்கேற்ப ஆசிரியர்கள்

4. நச்சினார்க்கினியர் தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரையில் காட்டியது.

5. நன்னூல்—நூற்பா—36.

கற்பிக்க வேண்டும் என்பது இந்தத் தொடர்களின் பொருளாகும்.

இந்த நூலில் 'படிப்பு' (Reading) என்பது பற்றி விரிவாக விளக்கப் பெற்றுள்ளது. கல்வி கற்றலில் இஃது எல்லா நிலையிலும் இன்றியமையாத படியாதலால் இதுபற்றி மேனாட்டில் ஏராளமான நூல்கள் வெளி வந்துள்ளன. இவற்றையெல்லாம் கற்று இவற்றின் கருத்துகள் விரிவாக விளக்கப் பெற்றுள்ளன. படிப்பின் வகைகள், படிப்பு தொடங்க வேண்டிய நிலை, படிப்பில் ஊக்குவித்தல், படிப்பு பயிற்றும் முறைகள், படிப்பில் பயிற்சி தரவல்ல துணைக்கருவிகள், வாய்விட்டுப் படித்தல் (Oral Reading), வாய்க்குட்படித்தல் (Silent reading). கருத்துணரும் ஆற்றல், படிப்பில் வேகம், சொற்களஞ்சியப் பெருக்கம் என்ற தலைப்புகளில் இந்த விளக்கம் இடம் பெறுகின்றது.

இன்னும் மொழிப் பயிற்சிகள், கட்டுரைப் பயிற்சி, இலக்கியம் கற்பித்தல், இலக்கணம் கற்பித்தல், ஆசிரியரின் வேலைத் திட்டங்கள், மாதிரிப் பாடங்கள், பள்ளிக்குரிய நூல்கள், கல்வித்துறைச் சோதனைகள்- இவை இந்நூலில் விரிவான விளக்கம் பெறுகின்றன. தாய்மொழி ஆசிரியர்கள்பற்றி ஓர் இயல் மூன்றாம் பதிப்பில் சேர்க்கப் பெற்றுள்ளது. இந்தப் பெருநூல் எழுதி முடித்து அச்சு வடிவம் பெறுவதற்கு ஆறு ஆண்டுகள் ஆயின. பயிற்றிக் கொண்டே நூல் எழுதப்பெற்றமையால் நூல் அநுபவ நூலாக அமைந்துள்ளது. பலர் விரும்பிக் படிக்கின்றார்கள்; பாராட்டுகின்றனர். மூன்றாம் பதிப்பு 'பெரியார் எழுத்தில்' வெளி வந்தது; அதுவும் இப்போது கிடைக்காது.

நூல் முடிந்து 1957 பிப்பிரவரி வாக்கில் சா. கணேசனிடம் காட்டி இதை வெளியிடுவதற்கு நல்ல கம்பெனி ஒன்றிற்குப் பரிந்துரைக்குமாறு வேண்டினேன். அவர்

பரிந்துரையின் பேரில் எஸ். ஆர். சுப்பிரமணியபிள்ளை இதை மனமுவந்து ஏற்றுக்கொண்டு வெளியிட்டார். சா.கு வின் உதவி இல்லாவிடில் இந்தப் பெரிய நூல் வெளி வந்திருக்க முடியாது. இந்த நூலுக்கு முன்னாள் கல்வி அமைச்சர் திரு. தி.சு. அவினாசிலிங்கம் அணிந்துரை நல்கி யுள்ளார். இதைவாங்குவதற்குக் கோவை பெரிய நாய்க்கன் பாளையம் இராமகிருஷ்ண வித்தியாலயத்திற்கு முன்னறி விப்புடன் சென்றிருந்தேன். கோவையில் விடுதியொன்றில் குளியல் சிற்றுண்டி இவற்றை முடித்துக் கொண்டு வித்தியாலயம் சென்றேன். ஐயா அவர்களைச் சந்தித்து வணக்கம் செலுத்தினேன். எனக்கு விருந்தினர் இல்லத்தில் இடம் ஒதுக்கி வைத்திருப்பதாகவும் அங்குத் தங்கலாம் என்றும் கூறினார். நான் அனைத்தையும் கோவையிலேயே முடித்துக் கொண்டு விட்டதாகக் கூறினேன்.

பத்து மணித்துளிகளில் அணிந்துரை தருவதற்குத் தயாரானார், ''ரெட்டியார், நூலைப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது. பெரிதாக எழுதி விட்டீர்கள். ஒன்று செய்ய லாம். நீங்கள் என்னை உங்கள் மாணவனாக நினைத்துக் கொண்டு ஒவ்வொரு இயலாக எனக்கு விளக்குங்கள். ஒரு மணிநேரம் இது நடைபெறட்டும். அதன் பிறகு எழுதித் தருகின்றேன்'' என்றார். முற்பகல் $10\frac{1}{2}$ மணி தொடங்கி $11\frac{1}{2}$ மணிக்குள் விளக்கத்தை முடித்தேன். உடனே முக்கால் மணிநேரத்தில் விரைவாக நான்கு பக்கங்களில் எழுதி முடித்து, ''ரெட்டியார், எழுத்துப் பிழைகள், வாக்கியப் பிழைகள் இருப்பின் திருத்திப் போட்டுக் கொள்ளுங்கள்'' என்று கூறி அணிந்துரையை என்னிடம் தந்துவிட்டார்.

உணவு விடுதிக்கு ஓர் ஆள் மூலம் என்னை அனுப்பி உணவு கொள்ளச் செய்தார். திரும்பியதும் பயிற்சிக் கல்லூரி முதல்வர், உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர், ஆசிரியர் பயிற்சிப் பள்ளித் தலைமை ஆசிரியர் இவர்கள் தயாராக வந்திருந்தனர். ''அன்பர்களே, இன்று

'ரெட்டியார் நாள்'. பிற்பகல் வகுப்பு நடைபெறுவதை நிறுத்தி விட்டு உங்கள் பள்ளியில் முக்கால் மணிநேரக் கூட்டம் அமைத்து இவரைப் பேசச் செய்து மாலை 6 மணிக்கு வரும் இருப்பூர்தியில் ஏற்றிவிடுங்கள்'' என்று பணித்தார். மூன்று நிறுவனங்களிலும் அரைமணி நேரம் வீதம் பேசினேன்; மாலை ஆறு மணிக்குக் கோவை செல்லும் இருப்பூர்தியில் ஏறிக் கோவை வந்து, மதுரை செல்லும் இருப்பூர்தியில் ஏறி திண்டுக்கல்லில் இறங்கிப் பேருந்து மூலம் காரைக்குடிக்குத் திரும்பினேன் அணிந் துரையுடன். அன்றே நகல் எடுத்து சென்னைக்கு அனுப்பி னேன். நூல் அக்டோபர் 1-ம் தேதி (1957) வெளி வந்தது.

மூன்றாண்டுப் பருவத்திலேயே தந்தையை இழந்தவன், 'தந்தையொடு கல்விபோம்' என்று பெரியோர் கூறுவர். என்றாலும், பல இன்னல்கட்கிடையே சிறிதும் தளராது 'அம்மையாக' இருந்து அறுசுவை உண்டி ஊட்டி என்னை வளர்த்தும், 'அப்பனாக' இருந்து கல்வி பயிற்றுவித்தும் 'அம்மையும் அப்பனுமாக' இருந்து எனக்கு எல்லாவித நலன்களையும் அருளி என்னை ஆளாக்கின என் அருமை அன்னையின் பொன்னார் திருவடிகட்கு இந்நூலை,

நற்றவத் தாயே! வாழி!பல் லாண்டு
நலனுறப் பெற்றெனை வளர்த்துக்
கற்றவ னாக்கிப் பேணினை! உலகிற்
காணுறு பொருளெலாம் கொணர்ந்துன்
சிற்றடிப் புறத்தில் வைப்பினும் அவைநின்
சீரருட் கொப்பென லாமோ?
மற்றிதை உணர்வேன்! எனினுமிந் நூல்நின்
மலர்பதத் துரிமை செய்தனெனே.

என்ற பாடலால் அன்புப் படையலாக்கி மகிழ்கின்றேன். தாய்மொழியைச் சிறார்களிடம் வளமாக வளர்க்கும் வழியைக் கூறும் **'தமிழ் பயிற்றும் முறை'யாம் இந்நூலைத்**

தாய்க்குப் படைப்பது மிகவும் பொருத்தம் தானே. இஃது என்னுடைய நான்காவது வெளியீடு (அக்டோபர்—1957)

இதனைத் தொடர்ந்து இதுகாறும் எழுதி வைத்திருந்த கட்டுரைகள் காலமும் கவிஞர்களும், கவிதையும் கற்பனையும், இயற்கைக் கூத்து, பண்டைத் தமிழரின் அறிவியல் அறிவு, திராவிட நூலின் வரலாறு, வளரும் பயிர் (ஆறு கட்டுரைகள்), வானொலிப் பேச்சுகளாக அமைந்த திருவள்ளுவர் கண்ட நாடு, தமிழொடு ஆங்கில உறவு, சோழர் கால வாணிகம், புத்தர் காட்டிய நெறி (நான்கு கட்டுரைகள்), பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' (குமரி மலரில் வெளி வந்தது), பாவை நோன்பு (கலைமகளில் வெளி வந்தது) ஆகிய 12 கட்டுரைகளைத் தொகுத்துக் 'காலமும் கவிஞர்களும்' என்ற பெயரில் நூலாக வெளியிட்டேன் (சனவரி-1958). இஃது என் ஐந்தாவது வெளியீடு. இதற்கு ப. துரைக்கண்ணு முதலியார் (முதல்வர்) முன்னுரை வழங்கியுள்ளார்; நூல் தாளாளர் C. V. CT. V. வேங்கடாசலம் செட்டியார் அவர்கட்கு அன்புப் படையலாக்கப் பட்டது.

குமிழி—126

## 20. கம்பன் அடிப்பொடி
### சா. கணேசன்

காரைக்குடியில் மிகவும் பிரபலமானவர் சா. கணேசன். காந்திவழி நிற்பவர்; நாட்டுப்பற்று மிக்கவர். பலமுறை சிறைக்குச் சென்றவர். 1942-இல் தலைமறைவாக இருந்து நாடு விடுதலை பெறும் பொருட்டுச் செயற்கருஞ் செயல்களைச் செய்தவர்.

சட்டை போடாதவர்; கதரைத் தவிர, வேறு ஆடைகளை அணியாதவர். சுமார் நாற்பது ஆண்டுகட்குமேல் கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்பவர். காரைக்குடிக் கம்பன் திருநாள் இவர்தம் திருத்தொண்டு. கம்பனுக்கு ஒரு மணி மண்டபமும் தமிழன்னைக்கு ஒரு திருக்கோயிலும் கட்டி முடித்த திருத்தொண்டர். கம்பன்மேல் அளவற்ற ஈடுபாடு கொண்டு கம்பன்அடிப் பொடி ஆனவர். பல்லாண்டுகளாகக் 'கம்பன்அடிப் பொடி' என்ற பெயராலேயே வழங்கப்படுபவர். அடியேன் வாழ்வில் திசை திருப்பியவர். என்னுடைய உயர் நிலைப்பள்ளி வாழ்விலிருந்து கல்லூரி வாழ்வுக்கு இழுத்துக் கொண்டவர்.

காரைக்குடியில் வாழ்ந்த பத்தாண்டுக் காலத்தில் இவர் இல்லத்திற்குப் பின்புறமுள்ள தெருவில் வாழ்ந்தவனாதலால் அடிக்கடிக் கலந்து பழகும் வாய்ப்பு எளிதில் பெற முடிந்தது. என் எழுத்துப் பழக்கத்தில் உற்சாகம் ஊட்டி அது வளர்வதற்குக் காரணமாக இருந்தவர். காரைக்குடியிலிருந்தபோது, பெரிய ஏழு நூல்களை எழுதினேன். எல்லாவற்றின் கைப்படிகளிலும் இவர்தம் கை வண்ணத்தின் பங்கு உண்டு. பெரும் பகுதிகளைப் படித்துத் திருத்தங்களைக் கூறிச் செம்மைப் படுத்தியவர். தமிழோடு பலதுறை ஆர்வலர். இலக்கியம், கலை, கல்வெட்டு, நாட்டு மருத்துவம், அரசியல், இசை, நாடகம் போன்ற அனைத்திலும் ஆர்வம் காட்டுபவர். கல்லூரிக் கல்வியை எட்டிப் பிடிக்காதவர் கல்லூரிப் பேராசிரியர்களின் அறிவுக்குமேல் பெற்றுத் திகழ்ந்தவர். எல்லாத் துறை ஆசிரியர்களிடமும் துறையறிவு பெற்றவர்போல் உரையாடி அவர்களை வியப்பில் ஆழ்த்துபவர். டாக்டர் ஜான்சனின் சங்கம் பிரபலமானது என்பதை ஆங்கில இலக்கிய ஆர்வலர்கள் நன்கு அறிவர். பல்வேறு துறை அறிஞர்கள் இவர் சங்கத்திற்கு வந்து உரையாடி மகிழ்வர் என்பதைப் படித்ததுண்டு. அங்ஙனமே இவர் இல்லம்—'கற்பக நிலையம்'—பலதுறை அறிஞர்கள் வந்து கூடி

மகிழ்ந்து உரையாடிச் செல்லும் இடமாகத் திகழும். இவர்தம் உதவியால்—எல்லா நிலைகளிலும் உள்ளவர்கள்—மேல் நிலைக்கு வந்தவர்கள் எண்ணற்றவர்கள். வாழ்வு பெற்றவர்கள் பலர். சுருங்கக் கூறினால் மனத்தாலும், சொல்லாலும், எழுத்தாலும் பிறருக்குத் தொண்டு புரிவதில் இவருக்கு நிகர் இவரே. மறந்தும் பிறன் கேடு சூழாத மாபெரும் தெய்வம்.

ஆறு, ஏழு ஆண்டுகள் சிந்தித்து எழுதிய இரண்டு பெரிய நூல்கள் தமிழ் பயிற்றும் முறை, இல்லற நெறி என்பனவாகும். முன்னதன் கைப்படியை முற்றிலும் நோக்கியவர்; பின்னதன் கைப்படியை மேலோட்டமாகப் பார்த்தவர். இது 'வேலனுக்கு வேங்கடத்தான் கடிதங்கள்' என்று கடித உத்தியைக் கையாண்டு எழுதப் பெற்ற நூல். ஒரு பெண் வயதுக்கு வந்து, திருமணம் ஆகி, பிள்ளை பெறும் வரையிலும் நேரிடக் கூடிய விவரங்களையும் எதிர்பாராது நேரிடும் சிக்கல்களையும் தெளிவாக உணர்த்தும் முறையில் ஓட்டமான தீந்தமிழில் எழுதப் பெற்றது. இதற்கு 'மண மக்களுக்கு' என்று முதலில் பெயர் சூட்டியிருந்தேன். அது எனக்கு மன நிறைவு தரவில்லை. 'காம நூல்' என்று பெயர் பெற்று விடுமோ என்ற அச்சம் உள்ளூற இருந்து வந்தது. சா. கணேசன் இதன் கைப்படியை முற்றும் நோக்காவிடினும் அங்குமிங்குமாகவும், இதிலுள்ள ஐம்பதிற்கு மேற்பட்ட வரை படங்களை முற்றிலும் நோக்கி நூலின் போக்கையும் நோக்கையும் அறிந்து கொண்டவர். இதற்குச் சூட்ட வேண்டிய பல்வேறு பெயர்களைச் சிந்தித்தோம்; ஆராய்ந்தோம். இறுதியாக 'இல்லற நெறி' என்ற பெயரைச் சூட்டினோம். புதிதாகப் பிறந்த குழந்தையைப் பெரியவர்கள் தூக்கி ஆசி கூறுவதைப் போல், என் நூலின் கைப்படிகளைத் தொட்டு, படித்து, செப்பஞ் செய்யும் குறிப்புகளைத் தந்து வாழ்த்தியமையால் அவை இன்றும் புழக்கத்தில் இருந்து பெரும்

புகழுடன் திகழ்கின்றன என்பது என் நம்பிக்கை. நூல்களைப் பொறுத்தமட்டிலும் இவர்தம் திருக்கை இராசியான கை என்பது என் கணிப்பு. ஊரில் நடைபெறும் எல்லாத் திருவிழாக்களிலும் இவர் பங்கு உண்டு. சுவாமியின் திருமேனியை வாகனங்களில் ஏற்றி அலங்காரம் செய்வதில் அருகிலிருந்தே ஒவ்வொரு செயலையும் கவனித்துச் கலையுணர்ச்சியுடன் குறிப்புகளைத் தந்து செம்மைப்படுத்துபவர். சீவகனை நந்தட்டன் முதலிய எட்டு நண்பர்கள் சூழ்ந்து கொண்டிருப்பதுபோல, பல தன வைசிய இளைஞர்களும், பிற வகுப்பு இளைஞர்களும் இவரைச் சூழ்ந்த வண்ணம் இருப்பர்; ஏவல் கேட்டு நிற்பர். இவர்களும் இவர்களைப் போன்ற எண்ணற்றவர்கள் இவருடைய வீர வழிப்பாட்டுக்குரியவர்கள். மார்கழி மாத பஜனையில் முன்னின்று முக்கிய பங்கு கொள்வார். இத்தகைய பேரறிஞரை, பொதுவாழ்வுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவரை, வள்ளல் டாக்டர் அழகப்பர் தாம் ஏற்படுத்திய அறக்கட்டளையின் அறங்காவலர்களில் ஒருவராக நியமித்தார். கல்லூரிகளின் வளர்ச்சியில் சா. கணேசனின் பங்கு மகத்தானது என்பதை வள்ளலே நன்கு அறிந்தார். பொது மக்களும் ஆசிரியர்களும் மாணாக்கர்களும் நன்கு அறிந்திருந்தனர். இவர் கை காட்டிப் பிழைத்தவர்கள், மேன்மைக்கு வந்தவர்கள், முன்னேற்றப் பாதையில் நடைபோடுபவர்கள் இவரை நன்றியுடன் நினைத்துப் போற்றுவர். நடமாடும் கணேசப் பெருமான் என்றே புகழ் மாலைகள் சூட்டுவர்.

ஒருநாள் சனியன்று மாலையில் நான் இவருடன் உரையாடிக் கொண்டிருந்தபோது, "ரெட்டியார் அவர்களே, நாளை சிற்றுண்டிக்குப் பிறகு பிள்ளையார் பட்டிக்கு போவோம்; பிள்ளையாரை வழிபட்டு அவன் ஆசி பெறுவோம். தயாராக காலை எட்டு மணிக்கு வந்து விடுங்கள்" என்று திடீர் உத்தரவு போட்டார். நடமாடும் கணேசன் 'துப்புஆர் திருமேனி தும்பிக்கையான் பாதம்'

பணிவதற்கு அழைக்கின்றார் என்றே கருதினேன். அவர் கருத்துப்படி அவருடன் பிள்ளையார் பட்டிக்குப் போகத் தயாரானேன். என்னை வெளியிடங்களுக்கு இட்டுச் சென்று நற்பயன்கள் பெறச் செய்தவர்கள் இருவர். ஒருவர், சா. கணேசன்; மற்றொருவர் ராய. சொ. இந்த இரு பெரியார்களையும் இன்றும்—ஏன்? என்றும்—என் வாழ்நாள் உள்ளவரை நன்றியுடன் போற்றுவேன்.

காலை 8-30 மணிக்குப் பேருந்தில் சா.க.வும் நானும் பிள்ளையார் பட்டி புறப்பட்டோம். குன்றக்குடியைக் கடந்து திருப்புத்தூர் செல்லும் சாலையில் 'பிள்ளையார் பட்டி' என்ற அறிவிப்புப் பலகை காட்டும் இடத்தில் இறங்கி, 100 கெஜதூரம் நடந்து பிள்ளையார் பட்டி என்ற ஊரை அடைந்தோம். பிள்ளையார் பட்டி ஒரு சிறிய ஊர். ஊருக்கு நடுவில் கோயிலும் குளமும் உள்ளன. குளத்தைச் சுற்றி அகன்ற வீதிகள். என்னை அழைத்துக் கொண்டு கோயிலைச் சுற்றிக் காட்டி சா. க. சொன்னார்: ''நரசிம்மவர்மன் காலத்தில் உருவான குடைவரைக் கோயிலை மூலக்கோயிலாகக் கொண்டு இந்தக் கோயில் விரிந்து வளர்ந்துள்ளது. இப்படி விரிந்த கோயில்தான், இன்று மகா மண்டபம், இராச கோபுரம் முதலியவற்றுடன் பெருங் கோயிலாகத் திகழ்கின்றது. இக்கோயிலில் இடம் கொண்டிருப்பவர்தான் மருதங்குடி நாயனார்.[1] இத் திருக்கோயிலை விரிவாகவும் அழகாகவும் கட்டி முடித்தவர்கள் நாட்டுக் கோட்டை நகரத்தார். இத் திருக்கோயிலைக் கட்டியும், கோயிலுக்கு முன் ஒரு திருக் குளத்தை வெட்டியும், இவற்றைச் சுற்றிலும் நல்ல நல்ல விடுதிகளையும் அமைத்துத் தக்க முறையில் பாதுகாத்து

1. பிள்ளையார் பொறிக்கப்பெறுவதற்கு முன் இவ்வூர் ஈக்காட்டூர், மருதங்குடி, திருவீங்கைக்குடி என்று வழங்கப் பெற்றது. பிள்ளையார் வந்த பிறகு இவ்வூர் பிள்ளையார் பட்டி என்று வழங்கப் பெறுவதாயிற்று.

வருபவர்கள் பதினாறு காரியக்காரர்கள். இக்காரியக் காரர்தாம் பிள்ளையார்பட்டியான திருவேட்புடையார் என்ற கோத்திரத்தவர். இவர்களே கோயில் பூசை, படித்தரம் முதலியவை சிறப்பாக நடைபெறத் தங்கள் சமுதாய நிதியிலிருந்து கொடுத்து உதவுகின்றனர். கோயில் வருமானம் இவற்றிற்குப் போதாத நிலையில் உள்ளது.''

மேலும் சா. க. கூறியது: ''ரெட்டியார், இங்கு பிள்ளையார் தோன்றுவதற்கும் ஒரு வரலாறு உண்டு. பல்லவ மன்னன் மகேந்திரவர்மன், அவன் மகன் நரசிம்மவர்மன் இவர்கட்குச் சேனாதிபதி பரஞ்சோதி. இவர்தான் சிறுதொண்டர் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். நரசிம்மவர்மன் சளுக்கிய மன்னன் புலிகேசி மேல் எடுத்த படையெடுப்பில் வெற்றி கண்டு அகப்பட்ட வற்றையெல்லாம் சுருட்டிக் கொண்டு தம் நாட்டிற்குத் திரும்பும்போது அவன் தலைநகரான வாதாபியிலிருந்து கணபதித் திருமேனியைப் பெயர்த்தெடுத்து வந்து தம் சொந்த ஊரான திருச்செங்கட்டாங்குடியில் சிவாலயத்தில் பிரதிட்டை செய்தார் பரஞ்சோதி என்பது வரலாறு. கணபதியைப் பிரதிட்டை செய்ததால் திருக் கோயில் கணபதீச்சரம் என்ற பெயரும் பெற்றது. தம்மைப் போலவே யாரேனும் வாதாபி கணபதியைத் திருச்செங் காட்டங்குடியிலிருந்து பெயர்த்தெடுத்துப் போகக் கூடும் என்ற கவலை பரஞ்சோதியாருக்கு இருந்து வந்தது.''

இனி பிள்ளையார் பட்டிக்கு வருவோம் என்று கூறிய சா. க பின்னும் தொடர்கின்றார். ''பரஞ்சோதி யின் கவலையைப் போலவே நரசிம்மவர்மனுக்கும் இந்தக் கவலை உள்ளத்தில் இருந்துள்ளது. தென்னாடு திரும்பிய நரசிம்மவர்மன் தன் தந்தை மகேந்திரவர்மன் திருச்சி, சித்தன்னவாயில் முதலிய இடங்களில் கட்டிய

குடைவரைக் கோயில்களையும் தீட்டிய சித்திரங்களையும் காண ஒரு பயணத்தைத் தொடங்கினான். இவன் மருதங்குடி வந்தபோது அங்குள்ள குன்றில் ஒரு கணபதியைத் தம் சிற்பிகளைக் கொண்டு செதுக்கி வைத்தான். இப்படி உருவானதுதான் பிள்ளையார்ப் பட்டிப் பிள்ளையார். தமிழ்நாட்டில் குடைவரைக் கோயிலில் பிள்ளையார் திருஉருவம் அசைக்க முடியாத திரு உருவமாக அமைகின்ற வாய்ப்பு கிடைத்தது.''

இந்தப் பிள்ளையாரின் திருமேனி மற்றத் தமிழ் நாட்டுப் பிள்ளையார் திருமேனியினின்றும் வேறுபட்டிருப் பதைக் கண்டேன். பிள்ளையாரின் துதிக்கை வலஞ் சுழிந்து, வலம்புரி விநாயகராகக் காணப்படுகின்றார். இந்தப் பிள்ளையார் இரண்டே கைகளால் மண்ணை யும் விண்ணையும் ஆள்கின்றார். அங்குசமும் பாசமும் இன்றியே அடியவரை ஆட்கொள்ளும் ஆற்றல் உடையவ ராகத் திகழ்கின்றார். வயிற்றை ஆசனத்தில் பதிய விடாமல் அர்த்தபத்ம ஆசனத்தில் கால்களை மடித்த நிலையில் காணப்படுகின்றார். வலக்கரத்தில் மோதகத்தைத் தாங்கியும் இடக்கரத்தை இடையில் பொருத்திய நிலை யிலும் காட்சி தருகின்றார். இந்த நிலையை சா. க. எனக்குச் சொல்லாமலேயே நானே அவருக்குச் சுட்டிக் காட்டினேன். அவரும் என் உற்று நோக்கல் திறனைக் கண்டு மகிழ்ந்தார். இந்நிலையில் இத்திருக்கோயிலில் இருக்கும் சந்திரசேகரர் அவரது துணைவி இவர்களின் திருமேனிகள் செப்புச்சிலைகளாக இருப்பதைக் காட்டி இவை சோழர் காலத்துச் சிலைகள் என்பதை விளக் கினார் சா. க. இக்கலைச் சிற்பியின் வேலைப்பாடுகளைத் தூண்களில், விதானங்களில் இருப்பதையும் காட்டி விளக்கினார். இந்தத் திருக்கோயிலில் மார்கழித் திருவாதிரைத் திருநாளும், பத்து நாள் நடைபெறும் விநாயகச் சதுர்த்தி விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இங்குள்ள பிள்ளையாரின் பேரருளைக்

காரைக்குடிச் சொக்கலிங்க ஐயா அவர்கள் அற்புதமாகப் பாடியுள்ளார்.

பகல் உணவு 12-30க்குக் கோயில் விடுதியில் கொண்டோம். 3 அணா (20-காசு) விடுதிக்குத் தந்தார். கோயிலுக்கு உரிமை உள்ளவர்கள் உண்ணும்போது தர வேண்டிய கட்டணமாம் இது. அவர் கோயிலுக்குச் சம்பந்தமில்லாத ஒருவரைக் கூட்டி வந்தால் அதற்குத் தனியாகக் கட்டணம் தர வேண்டியதில்லையாம். இது விடுதியின் மரபு என்றார் சா. க. பிற்பகல் 2 மணி சுமாருக்குக் காரைக்குடி திரும்பினோம்.

பக்தி யுடையார் காரியத்தில்
பதறார்; மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்குந் தன்மைபோல்
மெல்லச் செய்து பயனடைவார்
சக்தி தொழிலே அனைத்துமெனில்
சார்ந்த நமக்குச் சஞ்சலமேன்?
வித்தைக் கிறைவா? கணநாதா?
மேன்மைத் தொழிலில் பணியெனையே[2]

என்ற பாடலைச் சிந்தித்த வண்ணம் இல்லம் வந்தடைந்தேன்.

குமிழி—127

## 21. பேராசிரியர் ஆ. முத்துசிவம்

காரைக்குடியில் நான் பணியாற்றிய போது பேராசிரியர் ஆ. முத்துசிவம் பொது மக்களிடையேயும் இலக்கியச் சுவைஞர்களிடையேயும் மிகவும் புகழுடன்

2. பா.க. வி. நா. மா. 27

திகழ்ந்தார். இவர் நாகர் கோயிலைச் சேர்ந்தவர். இடைநிலைக்கல்வி (Intermediate) கல்வி பெற்று மேற்படிப்பு தொடராமல் கண்டனூர் சிட்டாள் ஆச்சி உயர் நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். பர்மா நல்ல நிலையிலிருந்தபொழுது பெரும்பான்மையான தன வணிகப் பெருமக்கள் செல்வச்செழிப்புடன் திகழ்ந்தனர். இப்பகுதியில் பணப் புழக்கம் அதிகம் இருந்தது. பல பகுதிகளிலிருந்து தொடக்க நிலைப்பள்ளி ஆசிரியர்கள் இங்கு வந்து பணியாற்றினர். செட்டி நாட்டுப்பகுதிகளில் தொடக்க நிலைப்பள்ளிகளே உயர்நிலைப் பள்ளிகள்போல் சீருடனும் சிறப்புடனும் இயங்கி வந்தன. கண்டனூர் உயர் நிலைப்பள்ளி கல்லூரிபோல் இயங்கி வந்தது. பள்ளிக் கட்டடமே கல்லூரிக் கட்டடத்தை விட மிகச் சிறப்பாகத் திகழ்ந்தது. நான் காரைக்குடி சென்றபோது இப்பள்ளியில் எஸ். இராகவாச்சாரி என்பவர் தலைமையாசிரியராகப் பணியாற்றி வந்ததாகவும் அவர் பின்னர் கீழச்சீவல்பட்டி உயர்நிலைப் பள்ளிக்குப் போய் விட்டதாகவும்அறிந்தேன். பள்ளிக்கட்டடத்தின் மாடியின் முகப்பில் பெரிய எழுத்தில் ''தமிழ் வெல்க!'' என்று பொறிக்கப் பெற்றிருந்ததைக் கண்டேன். இதற்கும் இராகவாச்சாரி வெளியேறியதற்கும் தொடர்பு காட்டி விளக்கினர் சில ஆசிரியர்கள். தமிழுணர்ச்சி அப்பகுதியில் தலை தூக்கி நின்ற காலம். இதற்கு விரோதமாகச் செயல்பட்டவர்கள் நெருப்புடன் விளையாடுபவர்களானார்கள். தமிழுணர்ச்சி எழுச்சியாக எழுவதற்குக் காரணமாக இருந்தவர் ஒரு தமிழாசிரியர்; தன வைசிய இளைஞர். நான் காரைக்குடி சென்றபோது அவர் மலேயாவுக்குப் போய் விட்டதாகச் சொன்னார்கள். இப்பள்ளியில்தான் திரு ஆ. முத்துசிவம் பணியாற்றிப் பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்து தமிழ் பி. ஏ. (ஆனர்சு) பட்டம் பெற்று சா. கணேசன் ஆசியால் கல்லூரியில் பேராசிரியர் பதவியைப் பெற்றார். அக்காலத்தில் பி.ஏ.யில் சிறப்புத் தமிழ் இல்லாத காலம். அப்படி இருக்கும் கல்லூரியில்

தான் தமிழாசிரியர்கட்கு—துறைத் தலைவராக இருப்பவர் கட்கு—பேராசிரியருக்குரிய சம்பளம் அனுமதிக்கப் பெற்றிருந்தது. அழகப்பா கல்லூரியில் பி.ஏ. சிறப்புத்தமிழ் இல்லாமலேயே திரு ஆ. முத்துசிவம் பேராசிரியர் (Professor) நிலையில் இருந்தார்; அப்பதவிக்குரிய சம்பளமும் பெற்றுக் கொண்டிருந்தார். இது சா. கணேசனின் உதவியால்தான் நடைபெற்றது.

பேராசிரியர் ஆ. முத்துசிவம் மேடைப் பேச்சாளர். நன்கு பாடுவார். ரசிகமணி டி.கே.சி., கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான், ஜஸ்டிஸ் எஸ். மகராசன் போன்றவர்களின் தொடர்பும் நட்பும் இவருக்கிருந்தன. ஜஸ்டிஸ் எஸ். மகராசன் இவரை அமெரிக்காவுக்கு அனுப்பவும் திட்டம் போட்டிருந்தார். இறையருள் கூட்டி வைக்கவில்லை. அக்காலத்தில், இவருடைய 'கவிதை', 'அசோகவனம்' (கட்டுரைகள்), 'கலிங்கத்துப்பரணி விளக்கம்' மிக்க செல்வாக்குடன் புழக்கத்திலிருந்தன. அவை இப்போது அச்சிலேயே இல்லை. ஸ்டார் பிரசுரம் (71, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005) இவற்றை வெளியிட்டிருந்தது. பொது மக்களிடம் 'திறனாய்வு' பற்றிய கருத்துக்களை முதன் முதலாகப் பேசி வந்தவர். இவரைப் போலவே தமிழ் எம். ஏ வகுப்பிற்குக் கற்பிக்கும் வாய்ப்புகள் பெற்றிருந்த பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தமும், டாக்டர் மு. வ. வும், பேராசிரியர் பரமசிவானந்தமும் இக்கருத்துகளை சொற்பொழிவுகளாகவும் நூல்களை வெளியிட்டும் பரப்பி வந்தனர். இவர்கட்குப் பிறகு கவிதையநுபவம் என்னும் என் திறனாய்வு நூல் கழக வெளியீடாக வெளி வந்தது. தமிழ் எம்.ஏ. மாணாக்கர்களிடையே மிக்க செல்வாக்குடன் புழக்கத்தில் இருந்தது. கோவையிலிருந்த பிரபல வழக்கறிஞர் பாலகிருஷ்ண நாயுடு அவர்கள் இந்த நூலில் மிகவும் ஈடுபட்டுப் படித்துச் சுவைத்தார் என்று அவர் சம்பந்தி என்அரிய நண்பர் டாக்டர் ஜி.டி. கோபால

கிருஷ்ணநாயுடு அடிக்கடி சொல்லக் கேட்டதுண்டு. இதன் திருந்திய வெளியீடு (புதிய சேர்க்கைகளுடன்) ''பாட்டுத் திறன்'' என்ற புதிய திருநாமத்துடன்''ஸ்டார் பிரசுரம்'' வெளியிட்டுள்ளது (1988).

நான் காரைக்குடி சென்ற பிறகு பலமுறை திரு. முத்துசிவன் பேச்சைக் கேட்டிருக்கின்றேன். எப்பொழுது பேசினாலும் 'கவிதை' என்ற அவர் நூலிலிருந்தே பேசுவது போலத் தோன்றும். அதே எடுத்துக்காட்டுகள்; அதே வாக்கியங்கள். தலையில் வழுக்கை; அதை மறைக்க காந்திக் குல்லாய். அவரைப் பார்க்கும் போது யாரும் வழுக்கை மண்டையைப் பார்க்க முடியாது. வசீகரமான தோற்றம். எல்லோரிடமும் இனிமையாகப் பழகுவார். அதிகமாகப் புகைப்பார். இஃது ஒன்றுதான்அவரிடம் நான் கண்ட பெருங்குறை; இப்பழக்கம் அவருடைய உடல் நலத்தைப் பாதிக்கக்கூடுமோ என்று அடிக்கடி அஞ்சியதுண்டு. நான் காரைக்குடி சென்றபோது ஊருக்குள் குடியிருந்தவர் மறுஆண்டே கல்லூரி வளாகத்திலிருந்த பேராசிரியர்களின் குடியிருப்பில் ஓர் இல்லத்தில் குடியேறி விட்டார்.

கவிதையைப் பற்றி இவர் கூறி வரும் சில கருத்துக்கள் இவர்தம் உள்ளத்தைத் தெளிவாகக் காட்டும்; இவர்தம் ஆளுமையையும் புலப்படுத்தும். கவிதை கற்பனையோடு கலந்து வரும் என்ற கருத்தை இவ்வாறு கூறுவார்: ''இனி கற்பனையோடு கலந்து வரும் கவிதை ஒன்றைப் பார்ப்போம். தலைவனைக் காணாது தலைவி வருந்துகின்றாள். பகல் நேரத்தையாவது ஒரு வகையாகக் கழித்து விடலாம். ஆனால் இரவு நேரத்தைக் கழிக்கிறது என்பது தனிமையில் இருக்கிறவர்களுக்கு மிகவும் கஷ்டமான காரியம். தனிமையின் கொடுமை அப்பொழுதுதான் மிக அழுத்தமாக நெஞ்சைத் தாக்குகின்றது. தனிமைத் தீயில் அகப்பட்டு, பாவம், தலைவியினுடைய உள்ளம் வெந்து பொசுங்குகின்றது. ஆற்றும் மனவன்மை இல்லை. மனம்

அழுங்கி இயற்கையைப் பழிக்கின்றாள். எதார்த்தத்தைச் சொல்லுகிறதானால், இரவு சீக்கிரம் தொலையாதா, பகற்பொழுது வராதா, வந்தாலும், நாலுகாட்சிகளைப் பார்த்தாவது மனச்சாந்தி அடையலாமே என்று தான் சொல்ல வேண்டும். ஆனால் அதே உண்மையை இனிய கற்பனை மூலாம் பூசிக் காட்டுகிறதானால் அதற்குக் கிடைக்கின்ற வேகமும் வீரியமும் அழுத்தமும் ஒரு தனி ரகந்தான். 'பாம்புதான் இந்தச் சூரியனை விழுங்கி விட்டதா? அல்லது அவன் தேரிலுள்ள அச்சுமரம் ஒடிந்து குதிரைகளெல்லாம் கயிற்றைப் பறித்துக்கொண்டு ஓடி விட்டனவா? அல்லது சூரியனே செத்து மடிந்து விட்டானா? தோழி, எந்த விதமாகப் பொழுது விடியப் போகின்றது?' என்று இவ்வாறு சொல்லும் பொழுது உண்மையிலேயே மிக ரம்மியமாக இருக்கின்றது.

அரவம் கரந்ததோ அச்சுமரம் இற்றுப்
புரவி கயிருருவிப் போச்சோ—இரவிதான்
செத்தானோ வேறுவழிச் சென்றானோ தோழி
எத்தால் விடியும் இரா. யெனக்கு

ஒரே உண்மைதான். அதைப் பார்க்கின்ற முறையில் பார்த்தால் இலைத்தும் இருக்கின்றது. இதயத்தை அள்ளக்கூடியதாகவும் இருக்கின்றது; எல்லாம் அது புனைந்து கொள்ளும் ஆடையைப் பொறுத்தது.

''பலா மரத்தை நாம் எத்தனையோ முறை பார்த்திருக்கின்றோம். உண்பது நாழி 'உடுப்பது நான்கு முழம்' என்ற நியதிக்கு உள்ளான மக்கள் இனத்தார் எத்தனை பேரோ அதைப் பார்த்து மடிந்திருக்கின்றார்கள். ஒருவன் அதனுடைய இலட்சிய வடிவான அழகை மனமாரப் பருகியிருக்கின்றான். ஏனென்றால் அவன் கவிஞன். கவிஞனுக்கு நம்மைவிட எவ்வளவோ மேலான அறிவு உண்டு. உணருகின்ற ஆற்றலும் உண்டு. மற்றும் உணர்ந்ததை உணர்த்துகின்ற ஆற்றலும் உண்டு. இன்னும் ஓர் அருமைப்

பாடு என்னவென்றால் சங்கீத வித்துவானுடைய இசைத் திறமையில் மனதைப் பறிக்கொடுத்துக் கீர்த்தனாசிரியனை மறப்பது போன்று கவிஞனுடைய கலைத் திறமையில் லயித்து அவனையே கருத மறக்கின்றோம். அத்தோடு நாமும் அவனுக்கு நிகர் என்று எண்ணியும் விடுகின்றோம். ஏனென்றால் அத்தனை கவர்ச்சி பிறக்கின்றது. 'முன்னிக் கவிதை வெறிமூண்டு' நனவழிந்து விட்டால், அவனுடைய மேதையின் போக்கே தனி. வண்ணச் சிறகுதறும். மகத் தாகப் பறந்து வரும். விண்ணகத்தே ஏறும். மண்நோக்கித் தாழும். தண்ணமுதப் பாட்டிசைக்கும். தாரகையின் ஊடு செல்லும். காணாதன காட்டும். கருதாதன உணர்த்தும். கல்லைக் கனியாக்கும். கடு விஷத்தை அமுதாக்கும். கோடி வழங்குவிக்கும். கோபுரத்தைப் பொன் பூசும். அதன் சக்தியும் பெரிது. அதன் வளமும் பெரிது. எதனை யும் ஆழ உணரும், அகல விரிக்கும், அத்தகைய போக்கு அதன் போக்கு.''

''மேலே ஒரு பலா மரத்தைக் குறிப்பிட்டோம். அதை ஒரு கவிஞன் பார்க்கும்போது அந்தப் பார்வையினுடைய விசேஷமே ஒரு புது மோஸ்தரைப் பெற்றதாக இருக் கின்றது. பலாவின் கோப்பெல்லாம் சதுர் வேதம். பிஞ்செல்லாம் சிவலிங்கம். கனியெல்லாம் சிவலிங்கம். சுளையெல்லாம் சிவலிங்கம். வித்தும் சிவலிங்க சொரூபந் தான்.

(கேதார கௌளம் அல்லது பைரவி)

கிளைகளாய்க் கிளைத்தபல கோப்பெல்லாம்
சதுர்வேதம்; கிளைகள் ஈன்ற
களையெலாம் சிவலிங்கம்; கனியெலாம்
சிவலிங்கம்; கனிகள் ஈன்ற

சுளையெலாம் சிவலிங்கம்; வித்தெல்லாம்
சிவலிங்க சொரூப மாக
விளையுமொரு குறும்பலவின் முளைத்தெழுந்த
சிவக்கொழுந்தை வேண்டு வோமே.[1]

என்று வரும் பாடல் கவிஞர் கண்ட அழகின் ஆவேசமொழி பெயர்ப்பு.''

''எழுதுகின்ற கவிஞன் மகாமேதாவியாக இருந்தால் அவன் பெறக்கூடிய தத்துவ தரிசனங்களையெல்லாம் நன்றாக வடித்தெடுத்த சொற்களில் புனைந்து நமக்குத் தருவதோடு ஏதாவது ஒரு முறையான வாழ்க்கைத் தத்துவத்தையும் நமக்கு உணர்த்தி விடுவான். கவிஞனுடைய மதிப்பை நிதானிப்பதற்குரிய உரைகல் அவன் உருவாக்கும் மனப்பான்மையே (Poets are judged by the frame of mind they induce).

காயமே வெறும்பொய்யடா
காற்றடைத்த பையடா
மாயனார் குயவன் செய்த
மண்ணுபாண்டம் ஓடடா

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா

என்ற தத்துவத்தை மனத்தில் ஊட்டலாம், அல்லது 'மக்கள் யாக்கையா! அடபாவமே;]அதைத்தான் கண்மூடித் தனமாக உலகம் எப்படி மதிக்கிறது! மக்கள் யாக்கை,

'வினையின் வந்தது வினைக்குவிளை வாவது;
புனைவன நீங்கின் புலால்புறத் திடுவது;
மூத்துவிளி வுடையது; தீப்பிணி யிருக்கை;
பற்றின் பற்றிடம்; குற்றக் கொள்கலம்;
புற்றடங்கு அரவில் செற்றச் சேர்க்கை;

---

1. குற்றாலர் குறவஞ்சி—3 (தற்சிறப்புப் பாயிரம்)

அவலக் கவலை, கையாறு அழுங்கல்
தவலா உள்ளம் தன்பா லுடையது
மக்கள் யாக்கை'[2]

என்று மக்கள் உடம்பின் சிறப்பியல்புகளுக்கு இனிய பல்லாண்டு கூறும் தத்துவத்தை மனத்தில் ஊட்டலாம். பாரதியாரிடம் போய் இதைச் சொன்னால் அடிக்க வந்து விடுவார். 'குடும்பத்தில் இருப்போருக்கு இந்த வார்த்தை பொருந்துமா? அவச் சொல் அன்றோ? நமக்குத் தந்தை வைத்துவிட்டுப் போன வீடும் வயலும் பொய்யா? தங்கச் சிலைபோல் நிற்கின்றாள் மனைவி. நமது துயரத்துக் கெல்லாம் கண்ணீர் விட்டுக் கரைந்தாள்; நமது மகிழ்ச்சி யின் போதெல்லாம் உடல் பூரித்தாள்; நமது குழந்தை களை வளர்த்தாள்; அவள் பொய்யா? குழந்தைகளும் பொய்தானா? பெற்றவரிடம் கேட்கின்றேன். குழந்தைகள் பொய்யா? நமது வீட்டில் வைத்துக் கும்பிடும் குலதெய்வம் பொய்யா?'[3]......என்று முழங்கிவிடுவார். இவர் காட்டும் தத்துவம் இத்தகையது. இவர் உருவாக்கும் மனப்பான்மை இந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது.

இப்படியெல்லாம் கவிதையைப் பல்வேறு விதமாக விளக்குபவர். ''கவிதை என்பது ஒரு கலை. ஒரு சிருஷ்டி சாதனம். அது மக்களிடையே இயல்பாகவே நிலவி வருகிறது. அதை அழிக்கவே முடியாது'' என்று வெட் டொன்று, துண்டு இரண்டாகப் பேசுவார். பின்னர் கவிதையின் இன்றியமையாத கூறான வண்ணத்தைப் பற்றி (Rythm), —ஒலிநயம்—ஒருமைப்பாடு (Harmony) என்பதுபற்றி விளக்குவார். எண்ணற்ற எடுத்துக் காட்டுகள் தருவார். கவிதையில் காணப்படும் சொற் களுக்கு வெறும் சொற்பொருளேயன்றி தொனிப் பொருளும் உண்டு என்று இயம்பிப் பல எடுத்துக்காட்டு

2. மணிமேகலை—பளிக்கறை புக்ககாதை-வரி 113-120
3. பாரதியார்: கட்டுரைகள்

ஏளால் விளக்குவார். ''கவிதை என்பது ஓர் அபூர்வ இன்ப சாதனம். அதற்கென்று அமைந்த தனிமுறையில் அஃது இன்பத்தைச் சுரந்து கொண்டே இருக்கும். அதுவே அதனுடைய இலட்சியம். அதனுடைய பிறப்பு—மர்மமும் அதுவே. அதைக் கட்டுப்படுத்த முடியாது. எத்தனை இலக்கணத்தை அதன் முன் தட்டிக்கொடுத்து தலை விரித் தாடச் சொன்னாலும் அந்தப் பேயாட்டத்திற்கெல்லாம் அது மயங்கிவிடாது'' என்பார்.

கவிதையைப் பற்றி முத்தாய்ப்பாக...''அந்த ஒன்றின் பெருமையோ எண்ணவும் அரிது, இயம்பவும் அரிது. நமது ஊனினை உருக்குகின்றது. உள்ளொளி பெருக்குகின்றது, உலப்பிலா ஆனந்தத் தேனினைச் சொரிகின்றது, அது எது? அது தான் கவிதை. அது அழகுடையது. எனவே ஆனந்தம் நிறைந்தது, அது ஜீவனுடையது. எனவே சிரஞ்சீவித்தும் பெற்றது. கவிதை,

கொள்ளவும் இன்பம் கொடுக்கவும் இன்பம். பாடவும் இன்பம். பகரவும் இன்பம்.

வாடாநறுமலர். வற்றாப்பெருஞ்சுனை. நாடாரை நாடாது. நட்டாரை நீங்காது.

கல்லினும் இருக்கும். புல்லிலும் இருக்கும். காற்றிலும் இருக்கும். கனவிலும் இருக்கும்.

வாழ்க கவிதை. வாழ்க நிரந்தரம். வாழ்க அதன் புகழ். வாழ்ந்திடும் உலகு.

நல்லது பிறக்கவும், நானிலம் சிறக்கவும், அல்லது நீங்கவும், அமைந்தது நிலவவும்

கவிதையைப் போன்று துணைசெய்யும் சாதனம் எதுவும் இல்லை. அது,

உள்ளத்தைச் சுண்டி விடும்
உணர்வு தனைக் கிண்டிவிடும்;
கொள்ளை வளங்காட்டும்
கோபுரம்போல் நலம் காட்டும்;

காணும் கண்வழங்கும்
கருதும் மதி வழங்கும்;
பேணும் அறம்வளர
பெரிதாம் துணைவழங்கும்.

ஆம், அதற்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. இன்னும் சொல்வதென்றால் கவிதையானது,

இருளை ஓட்டும் இரவி;
எழிலை ஊட்டும் சுரபி;
அருளை இறைக்கும் மேகம்;
அகத்தை நிறைக்கும் போகம்;
துன்பம் கொல்லும் சுடர்வேல்;
இன்பம் நல்கும் ஏது;
தோண்டத் தோண்டச் சுரக்கும்;
சுவைக்கச் சுவைக்க இனிக்கும்.

அல்லாது போனால்,

போதெல்லாம் பாட்டு
    பொழுதெல்லாம் சங்கீதம்;
யாதுக்கும் அஞ்சோம்,
    அவனியெலாம் எம்உடைமை;
சூதுக்கும் வஞ்சனைக்கும்,
    சூழ்ச்சிக்கும் மாந்தர்செயும்
வாதுக்கும் மாமருந்து
    யாம்புகலும் வண்கவிதை

என்று நெஞ்சாரச் சொல்வாரா சீமான் ச. து. யோகியார் என்ற கவிஞர்?'' என்று கவிதை வேகத்தில் பேசுவார். ஆம், அவ்வாறுதான் பேசுவார். காரணம், அவரே ஒரு கவிஞர்.

1955—என்று நினைக்கின்றேன். முதல்வர் துரைக்கண்ணு முதலியார் வந்து பதவியேற்று ஒன்றிரண்டு வாரங்கள்தாம் ஆயின. காலையிலேயே ஓர் அன்பர்,

என் இல்லம் வந்து ''ஐயா, நம் முத்துசிவம் இயற்கை எய்தினார்'' என்ற செய்தியைக் கூறிவிட்டுச் சென்றார். கல்லூரி சென்றதும் நானும் முதல்வரும் சென்று மறைந்த பேராசிரியருக்குக் கல்லூரி சார்பாக ஒரு மலர் வளையம் வைத்துத் திரும்பினோம். நள்ளிரவில் மாரடைப்பால் மறைந்தார் என்று அறிந்தோம். ஓயாது புகைத்தலால் தான் இவ்விளைவு நேரிட்டிருக்கக் கூடுமோ? என்று நினைத்துக் கொண்டேன்.

நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு[4].

குமிழி—128

## 22. கல்லூரி வளாகத்தில் விழாக்கள்

கல்லூரிகளில் நடைபெறும் விழாக்கள் சமுதாய உணர்வை எழுப்பும். மாணாக்கர்களிடையே குறிக்கோள் தன்மையை வளர்க்கும். வள்ளலின் நீள்நோக்கு (Far sightedness), முன் நோக்கு (Fore-sightedness) யாவரையும் சிந்திக்க வைக்கும். நான் அங்குப் பணியாற்றும் போது நடைபெற்ற சில விழாக்களை இக்குமிழியில் நினைவு கூர்கின்றேன். மாதிரிப் பள்ளிதிறப்பதற்கு விழா ஒன்றும் அமையவில்லை. பயிற்சிக் கல்லூரி திறப்பதற்கு, கல்லூரி திறப்பதற்கு முதல் ஆண்டே (நான் பள்ளியில் சேர்வதற்கு முன்பே) ஏதாவது ஒரு விழா நடைபெற்றிருக்க வேண்டும்.

கல்லூரி வளாகத்தில் எந்த விழா எடுத்தாலும் அது கலைமகள் விழாவாகவே இருக்கும். பெரிய அலங்காரக்

4. குறள்—336 (நிலையாமை—6)

கொட்டகைகள் அமைத்தல், மேடை ஏற்பாடு, விருந்தினர்கள் வசதியாக அமர இருக்கை வசதிகள் இவை செவ்வனே ஏற்பாடாகியிருக்கும். பெரும்பாலும் விழாக்கள் மாலை நேரத்தில் நடைபெறுவதால் விளக்கு வசதிகள், அலங்கார வண்ண விளக்குகள் இவற்றிற்கும் ஏற்பாடாகி இருக்கும். அந்த ஊரில் இத்தகைய விழாக்களுக்குக் கூட்டம் அதிகமாகவே இருக்கும். எல்லாக் கல்லூரிகளின் ஆசிரியர்களே இரு நூறுக்கு மேற்பட்டவர்கள்; கார் வைத்திருக்கும் பெரு மக்கள் கூட்டம் வேறு. பெரும்பாலும் கூட்டம் முடிந்து அன்று அல்லது மறுநாள் இரவு விருந்தும் இருக்கும்.

பொறியியற் கல்லூரிக் கட்டடத்திற்கு அடிக்கல் போடும் விழாவிற்கு குடியரசுத் தலைவர் பாபு ராஜேந்திரப் பிரசாத்தும், கட்டடத் திறப்பு விழாவிற்குத் துணைத் தலைவர்டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணனும் வந்திருந்தார்கள் மேடையிலிருந்து கொண்டே மின்விசைப் பொத்தானை அழுத்தியதும் பெரிய கதவுகள் தாமாகத் திறக்கும் ஏற்பாடு வருகை புரிந்தோர் அனைவர் கவனத்தையும் கவர்ந்து வியப்பினைத் தந்தது. முற்பகல் திறப்பு விழா இருந்தால், மாலை 7,7½ மணிக்குத் தாமாகஎடுத்து உண்ணும் (Buffet) விருந்து தவறாமல் இருக்கும். பொறியியற் கல்லூரித் திறப்பு விழாவில் எல்லா நிலைக்கல்வியும் அமைந்த இந்தக் கல்லூரி வளாகத்தில் மருத்துவக் கல்விக்குத்தான் வசதி செய்யப் பெறவில்லை என்றும், அதற்கும் வழி செய்யப் பெற்றால் பல்கலைக்கழகமே ஏற்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்றும் துணைத்தலைவர் குறிப்பிட்டதாக நினைவு. டாக்டர் வள்ளல் விரைவாகச் செயலாற்றுவதைப்போல் செயலாற்றும் இன்னொருவரைக் காண்டல் அரிது.

டாக்டர் வள்ளல் ஒரு கர்ம வீரர்; கர்ம வீரர் என்று சொல்லுவதைவிடக் 'கர்மயோகி' என்று சொல்லுவதில் சிறப்பு உண்டு. வாழ்க்கையில் அமைத்த செயல்கள் அனைத்தையும் ஒருவித வேள்வியாகச் செய்கின்றவர்

கட்குத் தொடக்கத்திலும் துன்பம் இல்லை; இடையிலும் துன்பம் இல்லை; இறுதியிலும் துன்பம் இல்லை. "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை' என்ற பெரும்பேறு அமையப்பெற்றவர்கள் படைப்பின் உட்கருத்தை அறிந்தவர்கள். தங்களுக்கென்று தேடுபவர்க்குச் செல்வம் சேர்ந்து பிறகு தங்களை விட்டுச் சென்று விடுகின்றது. ஒன்றையும் எதிர்பாராது கொடுத்துக் கொண்டே இருப்பவர்கட்குக் கொடைக்கு வேண்டிய பொருள் தானே வந்தமைகின்றது. அத்தகைய மனநிலை அட்சய பாத்திரமாகின்றது. ஆகையால் அதில் துன்பம் இல்லை. இதுதான் படைப்பின் மேலான திட்டம். அநுட்டித்துப் பார்ப்பவர்கட்கு இவ்வுண்மை விளங்கும். வள்ளல் அழகப்பர் வாழ்க்கையை வேள்வியாக நடத்தி வந்தவர். இதனால் அவரிடம் ஆக்கமே அதிகரித்து வந்தது. வேள்வி சிறப்பீனும்; செல்வமும் ஈனும்; முக்தி ஈறாக அனைத்தையும் ஈனும். இதனை நன்கு அறிந்தவர் அழகப்பர். பகவத் கீதையின் தாத்பரியமும் இதுவே.

மண்ணுலகிலும் விண்ணுலகிலும் உள்ள மேலோர்கள் தேவர் என்று வழங்கப்பெறுவர். இவர்கள் உயர் செயல்களிலே அதிகமாக ஈடுபடுவர். இவர்களது நற்செயல்களில் ஒத்துழைப்பது யாகமாகின்றது. கைம்மாறு கருதாது சான்றோர்க்குத் துணை புரிகின்ற அளவு சான்றோர் அவர்கட்கு நன்மையே செய்வார்கள். ஒரு மனிதன் உலகத்தவர்க்கென்றே உயிர் வாழ்ந்திருக்கும்போது உலகம் முழுவதும் அவனது நன்மையில் கருத்துடையதாகின்றது. தெய்வத்தை யாண்டும் முழு மனத்துடன் ஆராதித்தால் அத்தெய்வத்தின் விபூதிகளெல்லாம் அம்மனிதனை வந்தடைகின்றன. பிறருக்கு மனிதன் எதை எடுத்து வழங்குகின்றானோ அதையே இயற்கையும் எடுத்துப் பன்மடங்கு அதிகமாக அவனுக்குவழங்குகின்றது. இப்படி ஒருவர்க்கொருவர் பேணுதல் என்ற யாகத்தால் எல்லோர்க்கும் நன்மை வந்தமைகின்றது.

கர்மத்தைச் சிறந்த முறையில் கையாளுமிடத்து அது வேள்வி என்று பெயர் பெறுகின்றது. வாழ்க்கை என்ற கர்மத்தைப் பண்புடன் செய்தால் அது யாகமாகின்றது. இங்ஙனம் உயிர்கள் அனைத்தும் வேள்வி செய்தால் தொகைவினை மயமாகவுள்ள இயற்கையே சிறப்புற்று விளங்குகின்றது. உயிர்கள் வேள்வியைப் பயன் கருதிச் செய்தால் ஆக்கத்தை அடைகின்றன. பயன் கருதாது—நிஷ்காமியமாகச்-செய்தால் ஆக்கத்தையும் அடைகின்றன; பெரும்பேறு ஆகிய முக்தியையும் அடைகின்றன. பலன் கருதியோ, பலன் கருதாதோ யாகம் செய்கின்ற அளவு இயற்கை தெய்வ சொரூபமாகத் திகழ்கின்றது. பூலோகத்தைத் துறக்க மயமாக ஆக்குதல் மனிதனுக்குச் சாத்தியமாகின்றது. ஒன்றுக்கும் உதவாத பாழ் நிலத்தைப்—பாலைவனம்போல் கிடந்த நிலத்தைப் பாங்குடன் திருத்தி கலைமகள் களிநடம் புரியும் திருக்கோயில்கள் செயற்படும் இடமாக்கினார் வள்ளல். இதனால் இவர் நர வேள்வி செய்தவராகின்றார். கல்வியைப் பெருக்குதல் நர வேள்வியில் அடங்கும் செயல்களில் ஒன்றாகும்.

பொறியியற் கல்லூரி செயற்படத் தொடங்கிய பிறகு மருத்துவக் கல்லூரியின் நினைவு டாக்டர் வள்ளலின் உள்ளத்தில் உதித்திருக்க வேண்டும். பயிற்சிக் கல்லூரிக்கு எதிர்ப் பக்கத்தில்—நெடுஞ்சாலைக்குத் தெற்குப் புறத்தில்—ஒரு பெரிய மருத்துவமனை ஒன்றைத் திட்டம் செய்தார். 500 அல்லது 1000 படுக்கை வசதியுள்ள மருத்துவமனை இல்லாமல் மருத்துவக் கல்லூரி இயங்க முடியாது. பயிற்சிக் கல்லூரிக்கு மாதிரி உயர்நிலைப் பள்ளி இன்றியமையாது என்று கருதி கல்லூரி தொடங்கப் பெற்ற அடுத்த ஆண்டே மாதிரி உயர் நிலைபள்ளியைத்தொடங்க ஏற்பாடு செய்த வள்ளல் தீர்க்க தரிசனம்—நீள் பார்வை—உடையவராதலால் மத்திய அரசின் நலவாழ்வு அமைச்ச

1. ஐம்பெரும் வேள்விகள்: தேவயக்ஞும் ரிஷியக்ஞும், பிதிர்யக்ஞும், நரயக்ஞும், பூத யக்ஞும் என்பவை.

ராக இருந்த இராஜ குமார் அமிர்த கௌர் என்பாரைக் கொண்டு பெரிய மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டு வித்தார். அடிக்கல் நாட்டு விழா சீரும் சிறப்புமாக நடை பெற்றது. ஆனால் இன்று வரை மருத்துவமனையே அமையவில்லை. வள்ளலைப் பற்றியிருந்த தொழு நோயின் வேகம் அதிகரித்து உடல் நிலையும் குன்றியதால் அவர் கண்ட கனவுகள் எல்லாம் தடைப்பட்டன. வள்ளலும் 5-4-1957-ல் திருநாடு அலங்கரிக்கவே, வளர்ச்சி நிலை நின்றது. இதுகாறும் தொடங்கப்பெற்ற நிறுவனங்கள் எல்லாம் செவ்வனே நடைபெற்றால் போதும் என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

மாணாக்கர்கள் தங்கிப் படிப்பதற்கு வசதிகள் செய்ய வேண்டும் என்று நினைத்தார் வள்ளல். முதலில் கலைக் கல்லூரிக்கு ஒரு விடுதி அமைத்தார். அதைத் தம் அன்னையார் பெயரை 'உமையாள் விடுதி' என்று பெயர் சூட்டினார். இஃது உலக அன்னைக்கும் பொருந்தும். மனிதன் பெற்றுள்ள உடல் வாழ்க்கையில் தன் முன்னோார் கட்குக் கடப்பாடு உடையவன் ஆகின்றான். அவர்கள் எவ்வுலகில் இருப்பினும் இன்புற்றிருப்பார்களாக என்று அவர்களை குறித்து நித்தமும் நல்லெண்ணம் எண்ணுதல் வேண்டும். இதுவே பிதிர் வேள்வி என்பது. திதி செய்வதும் இந்த அடிப்படையில் தான். உயிரோடிருக்கும் பெற்றோர் கட்கும் நாடோறும் பணிவிடை செய்வதும் பிதிர் வேள்வி யின் பிரிவினையாகும். அடுத்த ஆண்டிலேயே மற்றொரு விடுதியைக் கட்டி தனது தொழில் நண்பர் மங்கோம்பு ஆண்டி அய்யர் என்பாரின் நினைவாக 'மங்கோம்பு ஆண்டி அய்யர் விடுதி' என்ற திருநாமம் சூட்டினார். இது திறப்பதற்குப் பெரிய விழாவொன்று எடுத்ததாக நினைவு. ஆசிரியர்கள் தங்குவதற்கும் பல வீடுகள் கட்டுவித்தார்.

பொறியியல் கல்லூரி மாணவர்கட்கும் விடுதிக
அமைத்தார். பொறியியல் கல்லூரி தொடங்கப் பெற்
அடுத்த ஆண்டிலேயே பல் தொழில் பயிற்சி நிறுவன
(Politechnic) ஒன்று தொடங்கப் பெற்றது. இதி
பயிலும் மாணவர்க்கென விடுதியொன்று அமைத்தார்
இந்த விடுதி அரைவட்ட வடிவில் அமைந்தது. இதனை
திறப்பதற்கு எடுக்கப்பெற்ற விழா இன்றும் என் உள்ள
தில் பசுமையாக உள்ளது. இதன் திறப்பு விழாவுக்கு
தலைமை வகித்தவர் அக்காலத்தில் மத்திய அரசின்
நிதியமைச்சராக இருந்த சிந்தாமணி தேஷ்முக்; விடுதிை
யும் அவர்தாம் திறந்தார். இதற்குக் 'கே. என். மாணவ
விடுதி' என்று பெயர் சூட்டப் பெற்றது. இதன் திறப்
விழாவில் வள்ளல் அழகப்பர் பேசிய பேச்சு இன்னும் என்
மனத்தில்பசுமையாகவே உள்ளது. இந்த விடுதிக்குப் பெயா
வைத்தவரலாற்றைச்சுவையாக, கேட்போர் மனம் உருகும்
வண்ணம் அற்புதமாக, எடுத்துக் கூறினார் வள்ளல். ஒரு
சமயம் வள்ளல் அழகப்பர் பம்பாயில் தாஜ்மகால் விடுதி
யில் தங்கியிருந்தபோது கோயம்புத்தூர் தொழிலதிபர்
நாயுடு ஒருவரும் (பெயர் நினைவு இல்லை.) அதே விடுதி
யில் தங்கியிருந்தாராம், வள்ளலும் அவரும் இனிய
நண்பர்கள். இன்னும் வள்ளலின் பல நெருங்கிய தொழி
லதிப நண்பர்களும் அந்த விடுதியில் தங்கியிருந்தனராம்.
அச்சமயத்தில் வள்ளல் பங்குச் சந்தையில் (Share market)
அதிகமாக ஈடுபட்டிருந்தாராம். ஒரு நாள் பங்குகளின்
விலைகள் மிகவும் சரிந்து விட்டனவாம். பல இலட்ச
ரூபாய்கள் இழப்பு ஏற்பட்டதாம். வள்ளல் இனி தலை
தூக்க முடியாது என்று பலர் பேசிக் கொண்ட அளவுக்கு
நிலைமை மோசமாகி விட்டதாம். இம் மாதிரி ஒருவர்
நிலை மோசமாகி விட்டால், நெருங்கிப் பழகும் நண்பர்
களும் விலகிப் போவர் என்பது உலகியல். காரணம், உதவி
கேட்பார்கள் என்று ஒதுங்கிப் போவர். வள்ளல் தம்
அறையில் சோகத்துடன் இருந்த போது நாயுடு அவர்கள்

இவர் அறைக்கு வந்து, ''டாக்டர் செட்டியார், மனம் ஒடிந்துப் போக வேண்டாம். என்னால் இயன்ற வரை கை கொடுத்து உதவுவேன்'' என்றாராம். அவரிடம் உதவியொன்றும் பெறவில்லை. சில நாட்களில் மீண்டும் பங்குகள் அதிகவிலையேறியதால், வள்ளல் பழைய நிலைக்கே உயர்ந்தாராம். நண்பரின் நல்லெண்ணம், உதவி செய்யும் மனநிலை இவையே தம் உயர்ச்சிக்குக் காரணம் என்று கூறி இக்காரணத்தால்தான் இந்தப் புதிய விடுதிக்கு ''கே. என். மாணவர் விடுதி'' என்ற பெயர் வைத்ததாக விழாவில் கூறினார். அமர்ந்திருந்தவர்கள் உணர்ச்சி வயப் பட்டனர். சிலர் கண்களில் ஆனந்தக் கண்ணீரும் சொட்டியது.

இந்த விழாவுக்கு நாயுடு அவர்களின் குடும்பத்தி விருந்து பத்து பேர்கட்கு மேல் வந்திருந்தனர். இவர்கட் கெல்லாம் மேடையில் இடம் ஒதுக்கப்பெற்று நாற்காலியில் அமர்த்தப் பெற்றிருந்தனர். எல்லோரும் இவர்களைக் கண்டுகளித்தனர். விடுதியைத் திறந்து வைத்த சிந்தாமணி தேஷ்முக்கும் வள்ளலின் அபூர்வ நன்றியறிதலை மிகவும் பாராட்டிப் பேசினார். வள்ளலும் ''சிந்தாமணியே நமக்குக் கிடைத்திருப்பதால் நமக்கு இனி எந்தக் குறைவும் இராது'' என்று கூறி விருந்தினர்களின் பலத்த கை தட்டலைப் பெற்றார். இதுவிழாவுக்கு முத்தாய்ப்பாகவும் அமைந்தது.

வள்ளல் மனத்தில் கொடுக்கும் பண்புதான் முந்திரிக் கொட்டைபோல் முன் நிற்கும். காரைக்குடியில் மின்சார— வேதியியல் ஆய்வு நிலையம் (Electro Chemical Research Institute) நிறுவப்பெற்றதே வியப்பிற்குரிய வரலாற்று நிகழ்ச்சி. நாடு முழுவதும் பல்வேறு வித ஆய்வு நிலை யங்கள் மத்திய அரசால் நிறுவப்பெற்று வந்த சமயம். இத்தகைய விழாவொன்று டில்லியில் நடைபெற்ற பொழுது, காரைக்குடியில் ஆய்வு நிலையம் நிறுவுவதற்கு

அரசு முன் வந்தால் 300 ஏக்கர் நிலமும் 15 இலட்சம் பணமும் தருவதாக அறிவித்தார். பிரதமர் நேரு அந்தக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினர். வள்ளல் கூறியவுடன் வள்ளலின் விரிந்த மனநிலையைக்கண்டு வியப்பெய்தினார். காரைக்குடியில் ஆய்வு நிலையம் நிறுவ ஏற்பாடு செய்யப்படும் எனத் தானும் அறிவித்தார். செயல்கள் விரைவாக நடைபெற்றன. 1952 இல் ஆய்வு நிலையமும் தோன்றியது.

வள்ளல் எப்பொழுதும் கையிருப்பில் உள்ள செல்வத்தைக்கொண்டு இம்மாதிரிக் கொடையாக வழங்குவதில்லை. இல்லாத செல்வத்தைத்தான் இம்மாதிரி வழங்குவதாகச் சொல்வதுண்டு. சொன்னபிறகுதான் அதை ஈட்டி விரைவில் வழங்கிவிடுவார். இதற்கு ஆண்டவனும் அவருக்குத் துணை நிற்பான்.

'பிறக்கும்பொழுது கொடுவந்தது
இல்லை பிறந்துமண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவது
இல்லை இடைநடுவில்
குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்தது
என்று'[2]

நினைத்து அள்ளி அள்ளி வழங்குவார். திருமகளைக் கலைமகளுக்கு வழங்குவது தனிச்சிறப்பு. மருமகள் மாமியார் மீது கொண்டுள்ள பேரன்பு இவர்தம் செயலால் அறிய முடிகின்றது.

---

2. பட்டினத்துப்பிள்ளையார் பாடல்கள்—திரு ஏகம்பமாலை—7

# 23. நகை வணிகர்களின் தொடர்பு

நாடோறும் கல்லூரிப் பணி மாலை 4-15 க்கு நிறைவு பெறும். வேறு பணிகள் இல்லாவிடில் 4-45 க்கு இல்லம் வந்து சேர்வேன். மாலைக் கடன்களை முடித்துக்கொண்டு சிற்றுண்டி அருந்தியவுடன் குழந்தை இராமலிங்கத்தைத் தூக்கிக் கொண்டு கல்லுக்கட்டியைச் (குளத்தைச்சுற்றிலு முள்ள நான்கு பக்கங்கள்) சுற்றுவேன். குழந்தை வெளியில் போக வேண்டும் என்று துடிப்பான். வேடிக்கைக்காட்டிக் கொண்டே கடைத் தெருவைச் சுற்றுவேன். கண்ணில் பட்ட விளையாட்டுச் சாமான்களை வாங்கி வருவேன். இப்போது கிடைப்பது போல் அக்காலத்தில் (1950) அதிக மான பிளாஸ்டிக் சாமான்கள் கிடைப்பதில்லை. இப் போது சிற்றூர்களில் கூட விதவிதமான சாமான்கள்—கண்ணைக் கவரும் பல வண்ணச் சாமான்கள்—ஏராள மாகக் கிடைக்கின்றன. இப்பொழுது என் பேரப் பிள்ளைகள் அவற்றை அநுபவிக்கின்றனர் உடைபட்டு வீணாகின்ற சாமான்கள்தாம் அதிகம்.

காரைக்குடியில் இருந்த பத்தாண்டுக் காலத்தில் மூன்று, நான்கு முறைகள் நகைக்கடையில் வேலை வைத்துக்கொண்டேன். M.S. இராஜமாணிக்கம் செட்டி யார் முதலில் பழக்கமானார். எப்படிப் பழக்கமானார் என்று இப்போது நினைவுகூர முடியவில்லை. என் நண்பர் திரு. V. சொக்கலிங்கம்பிள்ளை (நகராண்மைக்கழக உயர் நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்—இவர் சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் 1940—41 ஒரு சாலை மாணாக்கர்) சில சமயம் அக்கடையில் மாலை நேரத்தில் வந்து உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பார். அவரால்தான்

இந்தக் கடைத் தொடர்பு ஏற்பட்டது. இவருடன் தொடர்பு ஏற்பட்டபிறகு இவர் நகைத் தொழில் படுத்து விட்டது. என்பதாக நினைவு. பெயருக்கு ஏதோ நடத்தி வந்தார்; அவ்வளவே என்று நினைக்கின்றேன். இத்தொடர்புக்குப் பின் கடைத் தெருவிற்கு வரும்பொழுதெல்லாம் இந்தக் கடையில் சிறிது நேரம் உட்கார்ந்து MSR இடம் பேசிப் போவது வழக்க மாகி விட்டது. செட்டியாரிடம் உரையாடுவதே ஒரு தனிச்சுவை. காரைக்குடியில் முன்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகளை யெல்லாம் சுவையாக நினைவிற்குக் கொணர்வார் இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள். இப் போது இவர் இல்லை.

ராய, சித (ராய. சொ. வின் இளவல்) சிவ. ராம தனுஷ்கோடி செட்டியாரிடம் அறிமுகம் செய்து வைத் தார். நிலம் விற்று வங்கியில் போட்டு வைத்திருந்த தொகைகளை எடுத்து இவரிடம் கொடுத்திருந்தேன் சொற்ப வட்டிக்கு. வங்கி வட்டியை விடச் சிறிது அதிகம்; அவ்வளவு தான். கொடுக்கல் வாங்கல் தொடர்பு ஏற்பட்ட பிறகு இவர் கடையும் சிறிது நேரம் உட்காருவ துண்டு. இவர் தொழிலில் ஊக்கமுடையவர். நகைக் கடையை மிகச்சிறப்பாக நடத்தி வந்தார். தங்கக் கட்டுப் பாடு ஏற்படுவதற்கு முன் கடைக்குப் பின்புறம் பத்துப் பன்னிரண்டு பொற்கொல்லர்கள் இவர் கடைக்குப் பல் வேறு நகைகளைச் செய்து வந்தனர். ஒரு வருடக் கடைக்குப்பையே பல்லாயிரத்திற்கு விற்கப்படும். அவ் வளவு மும்முரமாகத் தொழில் நடைபெற்று வந்தது.

பல்வேறு மூடப் பழக்கங்கள்: நகைக் கடை வணிகர் களிடம் பழகியதில் அப்பக்கத்துச் செல்வர்களிடம் பல்வேறு மூடப் பழக்கங்கள் நிலவிவருவதைக் கண்டேன்.

ஆண்களில் சிலர் நவரத்தின மோதிரங்களையும் பெண் களில் சிலர் நவரத்தின டாலர்களையும் அணிந்து வருவது வழக்கமாக இருந்தது. நகைக்கடைக்கு நாட்டுப்புறத்துப்

பக்கத்திலிருந்து வந்திருந்த ஒருவர் நவரத்தினத்தாலான ஒரு பெரிய மோதிரம் போட்டுக் கொண்டிருந்தார். கடைக்கு வந்திருந்த சிலர் அந்த மோதிரத்தை வாங்கிப் பார்த்துக் கொண்டிருந்தனர்; சிலர் அதனை மதிப்பிடவும் தொடங்கினர். அதில் தங்கம் இரண்டு சவரன் இருக்கும்; மீதி நவரத்தினங்கள். நவரத்தினங்களாவன; மாணிக்கம் (Ruby), பவளம் (Coral), வைரம் (Diamond), மரகதம், பச்சை (Emerald) வைடூரியம் (Lapis lafzull), முத்து (Pearl), நீலக்கல் (Sapphire), கோமேதகம் (Sardonyx), புஷ்பராகம் (Topaz). இவை ஒன்பதும் ஒன்பது கோள் கட்கும் குறியீடுகள். ஒவ்வொரு கோளுக்கும் இது இது என்ற கணக்கும் உண்டு. மோதிரத்தில் இவை, கோள்கள் கோவிலில் அமைந்திருப்பதைப்போல் அமையுமாறு கட்டப்பெற்றிருக்கும். இத்தகைய மோதிரத்தைத் தரித்துக் கொண்டிருப்பவர்கட்கு 'கிரக தோஷம்' இராது என்ற நம்பிக்கை மக்களிடையே இருந்து வருகின்றது. இப்படியே நவரத்தின டாலர் தரித்துக் கொண்டிருக்கும் மகளிருக்கும் 'கிரக தோஷம்' இராது என்று நம்பு கின்றனர்.

மோதிரத்தின் விலையை மதிப்பிட்டவர்களில் ஒருவர் மோதிரத்துக்குரியவரிடம் ''எவ்வளவு விலைக்கு வாங்கி னீர்கள்?'' என்று கேட்க அவர் ஐயாயிரத்திற்கு'' என்று கூறினார். இன்னொருவர்'' மலிவாக வாங்கி விட்டீர்கள்'' என்றார். எல்லோரும் சென்ற பிறகு செட்டியாரை ''அதன் விலை எவ்வளவு இருக்கும்?'' என்று கேட்டேன். ''இரண்டாயிரத்திற்கு நல்ல மோதிரம் செய்யலாம். ஆனால், இதிலுள்ள நம்பிக்கையின் காரண மாக ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து ஆயிரங்கள் வரை போகும்'' என்றார். ''விற்பவர்களின் நம்பிக்கை யூட்டும் பேச்சு சாதுர்யத்தாலும் வாங்குவோரின் செல்வச் செழிப்பு, அவர் அதன்மீது கொண்டுள்ள நம்பிக்கை இவற்றிற்கேற்பவும் அதன் விலைதீர்மானமாகும். நான் சில

சமயம் இத்தகைய நல்ல மோதிரங்களைத் தயார் செய்து அதிக விலைக்கு விற்பதுண்டு'' என்று மேலும் கூறினார். காரைக்குடியில் இருந்தவரை ஐந்தாறு முறை இத்தகைய மோதிரங்கள் கைமாறுவதைக் கண்டிருக்கின்றேன். இஃது எனக்கு ஒருவித வியப்பும் வேடிக்கையுமாக இருந்ததே யன்றி எனக்கு இதன்மீது கவர்ச்சி ஏற்படவில்லை. ஜமீன்தார்கள், சுகவாசிகள், பெரிய மிராசுதார்கள் இவர்கள்தாம் இதனைப் பெருமையாகத் தரித்துக் கொள்வார்கள்; தரித்துக் கொண்டிருப்பதையும் பார்த்திருக்கின்றேன்.

காரைக்குடிக்குச் சென்ற மறு ஆண்டில் இலக்கியப் பதிப்பகம் சோமய்யா அவர்களுடன் பேசிக் கொண்டிருந்த பொழுது திடீரென்று ஒரு செய்தி சொன்னார். ''பேராசிரியர் அவர்களே, ஓர் அற்புதமான சரக்கு என் கைக்கு வந்துள்ளது. அது உங்களிடம் இருப்பது நல்லது என்று நினைத்து ஒதுக்கி வைத்திருக்கின்றேன்'' என்றார். எனக்கு அதைப் பார்க்க ஆவல். ''என்ன சோமய்யா அது? அதனைப் பார்க்க வேண்டுமே'' என்றேன். அச்சமயத்தில் யாரும் அருகில் இல்லை. உள்ளே சென்றார். ஒரு பச்சைக் கல்லாலான (கண்ணாடி?) ஒரு சிறு பிள்ளையாரைக் கொணர்ந்து காட்டினார். ''விலை கூட அதிகம் இல்லை. ரூ 300/= தான். உங்களிடம் அது இருந்தால் உங்கள் உழைப்பு மேலும் மேலும் வளர்ந்து வெற்றிப் பாதைக்குக் கொண்டு செலுத்தும்'' என்று சொன்னார்.

நான் அதை வாங்கிப் பார்த்தேன். மிக அழகான பிள்ளையார்தான். அது கல்லால் ஆனது அன்று என்பது தெளிவாகக் காட்டிக் கொடுத்தது. கண்ணாடியால் ஆனது என்பதை உறுதியாகத் தெரிந்து கொண்டேன். கல்லால் ஆனதாக இருந்தால்தான் என்ன? இதை வாங்கி வீட்டில் வைத்துக் கொண்டால்தான் வெற்றி கிடைக்கும் என்று சோமய்யா கூறுவதில் நம்பிக்கை இல்லை. பிள்ளையாரைப் 'பருகுவன்ன அருகா நோக்கமொடு' நன்றாகத் திருப்பித்

திருப்பிப் பார்த்து விட்டு ''சோமய்யா, பிள்ளையார் நன்றாகத்தான் உள்ளது. எனக்கு வள்ளல் அழகப்பர் மாதந்தோறும் ரூ 250/= படி அளக்கின்றார். அதுவே எனக்குப் போதும். அதற்குமேல் யான் விரும்பினால் என் இதயகமலத்தில் நிலையாக வீற்றிருக்கும் பிள்ளையாரையே கேட்பேன். இந்தப் பிள்ளையார் உங்களிடமே இருக்கட்டும். இராசியான பிள்ளையார் என்கின்றீர்கள். உங்கட்கும் நிலைமை சரி இல்லை. இதனால் உங்கள் நிலைமை சரியாகட்டும்'' என்று கூறித் திருப்பித் தந்தேன் பிள்ளையாரை. சோமய்யா ''உங்களை எளிதில் சரிப்படுத்த முடியாது. உங்களிடம் இத்தகைய மோகம் இல்லை. நீங்கள் எதையும் நம்பி ஏமாற மாட்டீர்கள்'' என்று ஒரு போடு போட்டது இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளது.

M. S, இராசமாணிக்கம் செட்டியார் சொன்னது நினைவிற்கு வருகின்றது. ''காரைக்குடியில் எமகாதகத் தரகர் ஒருவர் உண்டு. அவர் உங்கள் சிவி. சிடி. வி.யையே மசிய வைத்து ஏமாற்றி விட்டார்'' என்றார். அவரே என்னிடம், ''M. S. R.. பாருங்கள். இன்று ஒரு பெரிய நபரை ஓர் அமுக்கு அமுக்கி விடுகின்றேன்'' என்று சொல்லி விட்டுக் கானாடுகாத்தான் (செட்டி நாட்டின் பெயர்) சென்றார். அவரிடம் 2½ அங்குல நீளம் 1½ அங்குல அகலம் ஓர் அங்குலகனம் உள்ள ஒரு பச்சைக்கல் இருந்தது. இதை அவர் சிவி. சிடி. வி.யின் தலையில் கட்டவே சென்றார். பொதுவாகத் தரகர்கள் சாதுர்யமாகப் பேசுபவர்கள். அவர்களுள்ளும் இந்தத் தரகர் எமகாதகர். இங்கிதம் அறிந்து செட்டியாரைப் பேட்டி கண்டு விட்டார். ''ஐயா, ஒரு பச்சை எனக்குக் கிடைத்தது. அதை வாங்கும் போதே உங்கள் நினைவுதான். உங்களிடம் அது இருந்தால் இராசி என்றுதான் கொண்டு வந்துள்ளேன்'' என்று சொல்லிய வண்ணம் பச்சை வண்ணத்தாளில் சுற்றி மேலும் ஒரு வெள்ளைத்தாளில் சுற்றி வைத்திருந்த

''பச்சையை'' மெதுவாக எடுத்து நீட்டினார். செட்டியாருக்கு இத்தகைய பொருள்மீது பற்றும், இது போன்ற பொருள் தன்னிடம் இருந்தால் இதன் இராசியால் தமது செல்வம், செல்வாக்கு எல்லாம் மேன்மேலும் பெருகும் என்ற அழுத்தமான நம்பிக்கையுடையவர் என்பதை நன்கு அறிந்தவர் தரகர். சரியான கொம்பைத் தான் பிடித்தார்.

செட்டியார் அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். அவர் முகபாவத்திலிருந்தே அவருக்குப் பச்சைமீது பற்றும் பாசமும் வளர்கின்றன என்பதைச் சரியாகக் கணிக்கின்றார் தரகர். ''சரியப்பா, சரக்கு எனக்குப் பிடித்திருக்கின்றது. என்ன விலை?'' என்று செட்டியார் கேட்க, ''அதிகம் இல்லை முதலாளி, ஒரு பத்தாயிரம் தான்'' என்று தரகர் சொல்ல, உடனே செட்டியார் உள்ளே சென்று பத்தாயிரமாக நூறு ரூபாய் நோட்டுகளைத் தந்து பச்சையைப் பெற்றுக் கொண்டார். பச்சையைப் பரிவுடன் பெற்றுக் கொண்ட செட்டியாரின் முகத்தில் பிரகாசத்தைக் கண்ட தரகர், ''முதலாளி, இந்த அற்புத வஸ்துவை எவரிடமும் காட்டாதீர்கள். தண்டவாளப் பெட்டியின் அடியில் போட்டு வையுங்கள்'' என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டார். இரண்டாண்டுகள் கழித்து செட்டியார் பம்பாய் செல்ல நேர்ந்தது. நினைவாகப் பச்சையை எடுத்து வைத்துக் கொண்டார். பம்பாயில் ஓர் இரத்தின வியாபாரியிடம் காட்டி மதிப்பு போடும் படி சொல்ல, அந்த வியாபாரி, ''யார் இதைத் தந்தது? வெறும் கண்ணாடித் துண்டு. ஐந்து ரூபாய் கூட இதற்கு விலை இல்லை'' என்று சொல்லி விட்டார். ''படுபாவி என்னையே ஏமாற்றி விட்டானே!'' என்று நினைத்துக் கொண்டார் செட்டியார்.

ஊர் திரும்பியதும் முதல் வேலையாகத் தரகரைச் சந்திக்க வேண்டும் என்று நினைத்து, ''டிரைவர், காரை

எடுத்துக் கொண்டு காரைக்குடி செல். அந்தத் தரகன் (பெயரைச் சொல்லி) கல்லுக் கட்டியில்தான் சுற்றிக் கொண்டு இருப்பான். எப்படியாவது அவனைக் கண்டு நான் சொன்னதாகக் கூட்டிவா'' என்று ஆணையிட்டார். டிரைவருக்கு ஒன்றும் புரியவில்லை. செட்டியார் எப்படியோ ஏமாந்து விட்டார் என்பது மட்டிலும் அவனுக்குப் புரிந்தது. காரைக்குடி வந்து தரகரைக் கண்டு அவரைக் காரில் கூட்டிக் கொண்டு சென்றார் டிரைவர். வண்டியில் போகும் போதே தரகரின் மூளை செயற்படத் தொடங்கியது. டிரைவரை ''என்ன விஷயமாக என்னைக் கூட்டி வருமாறு சொன்னார் செட்டியார்?'' என்று கேட்க அவர் ''எனக்குத் தெரியாது'' என்று சொல்லி விட்டார்.

விரைவில் கார் கானாடுகாத்தானை அடைந்தது. செட்டியாரைக் கண்ட தரகர் ஒரு கூழைக் கும்பிடு போட்டு நின்றார். ''டேய் படுபாவி, என்னையே ஏமாற்றி விட்டாயே'' என்று கோபத்துடன் கேட்டார். ''என்ன முதலாளி, பச்சையை யாரிடமாவது காட்டினீர்களா?'' என்று பதற்றத்துடன்கேட்க, அவரும்''பம்பாயில் ஓர் இரத்தின வியாபாரியிடம் காட்டினேன். அவர் ஓர் ஐந்து ரூபாய் கூட இதற்கு மதிப்பு இல்லை. இது வெறும் கண்ணாடி என்கின்றான்'' என்று சொல்ல, தரகர், ''என்ன முதலாளி, நான்தான் யாரிடமும் இதைக் காட்டாதீர்கள். இதை மதிக்க ஒருவருக்கும் தெரியாது என்றேனே. ஏன் முதலாளி காட்டினீர்கள்?'' என்று செல்லமாகக் கொஞ்சி, ''ஒன்றும் பேசாமல் பெட்டியின் அடியில் போடுங்கள்!'' என்று கூறினார். தொடர்ந்து, ''இது வந்த பின் உங்கள் செல்வாக்கையும் செல்வ வளர்ச்சியையும் கவனித்தீர்களா? உங்கட்கு என்ன குறை? கல்லூரிகட்குத் தாளாளராக இருக்கின்றீர்கள். எட்டுத் திக்கும் உங்கள் புகழ் டால் அடிக்கின்றது. கொடைக் கானல் தொழில் காமதேனுபோல் சுரந்து கொண்டிருக்கின்றது. இன்னும் பாருங்கள். நீங்கள் எவ்வளவோ

உயர்வீர்கள்'' என்று புகழ்ந்து பேசினார். ''அப்படித் தான் அந்த முட்டாள் இதைக் கண்ணாடி என்று சொல்லி விட்டாலும், இந்த ஏழை இந்தப் பெரிய முதலாளியிடம் ஒரு பத்தாயிரம் சாப்பிடக்கூடாதா?'' என்று சொல்ல. ''சரி சரி. போப்பா, நன்றாக இரு'' என்றுசொல்லிவிடை கொடுத்தார். பச்சைக் கண்ணாடியைப் 'பச்சைக்கல்' என்று பச்சையாகப் பொய் சொல்லி ஏமாற்றி விட்டதைத் தெரிந்தும், அந்தப் பச்சையைத் தண்டவாளப் பெட்டியின் அடியில் புகலிடம் தந்து வாளா இருந்து விட்டார். பச்சையின் மீதுள்ள நம்பிக்கை - மூடப்பழக்கம் — இன்னும் தளரவில்லை. ''ஏ பச்சையம்மா, நீதான் இத்தகைய ஏமாறும் பேர்வழிகளைக் காப்பாற்ற வேண்டும். பச்சையை விற்கும் தரகர்களையும் காப்பாற்றுவதும் நின் கடமைதான். அவர்கள் ஏழைகலல்லவா?'' இந்தச் செட்டியார் என்னிடம் மிக்க அன்புள்ளவர். பல நன்மை களை எனக்குச் செய்தவர். பதினைந்து இருபது ஆண்டு கட்கு முன்னரே இவர் திருநாடு அலங்கரித்து விட்டார்.

இத்துடன் இது நிற்க. என் மனைவிக்கு வைரத் தோடும் வைர மூக்குத்தியும் வாங்க வேண்டும் என்ற 'சபலம்' இருந்து கொண்டே இருந்து வந்தது. இந்த வைர வாணிகம் நடைபெற்று வருவதைக் கூர்ந்து கவனித்தேன், இராஜாஜி மதுவிலக்குத் திட்டம் நடைமுறைப்படுத்து வதால் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்டுவதற்கு விற்பனை வரியை நுழைத்தார். விற்பனையில் ரூபாய்க்கு ஒரு தம்படி (இப்போதுள்ள காசில் கிட்டத்தட்டப் பாதி) வீதம் வசூலிக்கலாம்; இந்தப் பணம் அரசுக்குச் சேரவேண்டியது என்ற சட்டமும வந்தது. பின்னர் வந்த அரசுகள் ஒவ்வொரு பொருள் விற்பனையிலும் விற்பனை வரியைப் பல்வேறு விதமாக உயர்த்தவே, வைர விற்பனையில் இருபது சதவிகிதத்திற்மேல் வரிவிதிக்கப் பெற்றது. இது பல்வேறு 'தில்லுமுல்லுகட்கு' இடம் கொடுத்து விட்டது. பில் (Bill) இல்லாது. விற்பனை வரி ஏய்ப்பு.

விற்பனையைக் கணக்கிற்குக் கொண்டுவராத முறை. இவற்றால் அரசு அதிகாரிகட்குக் கையூட்டு வழங்குதல் இப்படிப் பல தில்லுமுல்லுகள் நடைமுறைக்கு வந்துள்ளன.

வைரச் சாமான்கள் விற்பனை மிக இரகசியமாக நடைபெறும். இதை எப்படியும் தரகர்கள் தெரிந்து கொள்வார்கள். முதலில் வாங்குவோர் சாமானைச் சரிபார்த்துக் கொண்ட பிறகு, வாங்குவோரும் (தரகர் விற்போரும் (இவரும் ஒரு தரகரே) துணியால் தம் கைகளைப் போர்த்திக் கொண்டு விலையை விரல்களால் பேசி முடிப்பார். சாமானுக்கு உரியவருக்குக் கொடுக்கும் தொகை போக இலாபத்தை அங்குக் குழுமி இருக்கும் பிற தரகர்தளும் தரகு பெறுவார்கள், இந்த வாணிகத்தில் எந்தவித சம்பந்தமும் இல்லாத தரகர்கட்கும் தரகுத் தொகை கிடைப்பது அதிசயத்திலும் அதிசயமாக இருக்கின்றதல்லவா? வைர வாணிகத்தில் மட்டிலும் இந்த மரபு இன்றும் இருந்து வருகின்றது. நான் நேரில் இத்தகைய பல நிகழ்ச்சிகளைப் பார்த்திருக்கின்றேன்.

வைரத்தைச் சோதித்துப் பார்ப்பதே ஒரு கலை. இதற்கு மிக்க அநுபவம் வேண்டும். இதில் கரும் புள்ளிகள் இருக்குமாம். உருப்பெருக்கியில்தான் தென்படுமாம். அநுபவசாலிகள்தாம் இவற்றைக் கண்டறிய முடியும். சில நகரத்தார் பெரும் புள்ளிகளே இவற்றை நன்கு தெரிந்து வைத்திருக்கின்றனர். ராய, சித, அவர்கள் வைரங்களைச் சோதித்தறிவதில் வல்லுநர் என்று கடைத் தெருவில் பலர் பேசக் கேட்டுள்ளேன். ''அப்படித்தானா?'' என்று அவரைக் கேட்டதற்கு, ''ஏதோ தெரியும்; ஏமாறாத அளவுக்குத் தெரியும்'' என்று மிக அடக்கமாகச் சொன்னார். இப்படிப் பல விஷயங்களைத் தெரிந்து கொண்ட பிறகு, MSR. ''நீங்கள் இனி வைரச் சாமான் களே வாங்க மாட்டீர்கள். இதில் ஏமாந்து போவதற்கும்,

அதிக விலை தந்துவிடுவதற்கும் வாய்ப்புகள் உண்டு'' என்றார். இன்றுவரை வைரச்சாமான்களே வாங்க வில்லை. இன்று வைரச்சாமான்களின் விலை பன்மடங்கு ஏறிவிட்டது. ''அப்போதே கொஞ்சம் வாங்கி வைத்திருந் தால் பேத்திகட்கு உதவுமே'' என்று சபல புத்தி உணர்த்து கின்றது, அப்போதாவது சிறிதளவு பணம் இருந்தது; இப்போது அன்னக் காவடி! இதனால் வைரத்திற்கும் எனக்கும் ''ஸ்நாகப் பிராப்தி'' கூட இருக்காது என்பது உறுதியாய் விட்டது. பற்றுகளும் ஒவ்வொன்றாகக் கழன்று கொண்டே போகின்றன.

**நகைக்கடைக் குப்பை:** குப்பை என்றாலே செல்வம் என்பது பொருள். நம் வீட்டுக் குப்பை பயன்படாது. நகைக்கடைக் குப்பை விலையுயர்ந்தது. கோலார் தங்க வயல் மண்ணையொத்தது. ஒரு சமயம் என் நண்பர் சிவ. ராம. தனுஷ்கோடிச் செட்டியார் தமது கடையின் ஓராண்டுக் குப்பையை ஐந்தாயிரம் ரூபாய்க்கு விற்று விட்டார். குப்பையை வாங்கியவர் அக்குப்பையில் நாற்பதாயிரம் பெறுமான தங்கம் எடுத்ததை அறிந்தார். அடுத்த ஆண்டு முதல் குப்பையை விற்பதில்லை என்ற முடிவுக்கு வந்தார். தாமே அதைத் தூய்மை செய்து தங்கத்தைப் பிரித்தெடுப்பது என்று திட்டம் போட்டு அதைச் செயற்படுத்தினார்.

அவர் வீட்டில் கிணற்றில் தண்ணீர் இறைத்து ஊற்றினால் நேராக ஒரு குழியில் விழுமாறு சிறு கால்வாய் அமைத்தார், கால்வாயைச் சீமைக்காரையால் பூசினார். இந்தக் குழியினருகே வேறு இரண்டு குழிகள். இந்த மூன்று குழிகளையும் சீமைக்காரை (Cement) யால் பூசச் செய்தார். முதல் தொட்டியில் நீர் நிரம்பியதும் வழியும் நீர் அடுத்த தொட்டியில் விழும்; இத்தொட்டி நிரம்பிய -ம் இதிலிருந்து வழியும் நீர் அடுத்த தொட்டியில் விழும், இப்படி மூன்று தொட்டியில் நீர் ஒன்றிலிருந்து பிறிதொன்றிலும், இதிலிருந்து அடுத்த தொட்டிற்கும்

விழும். முதல் தொட்டியில் நான்கு தட்டு குப்பைகள் கொட்டப் பெற்று நன்றாகக் கிளறிக் கலக்கப்பெறும். கனமான பொருள்கள் அடியில் படியும். மிதக்கும் பொருள் அகற்றப்பெறும். முதல் தொட்டியின் அடியில் படிந்திருக்கும் பொருள் அடுத்த தொட்டிக்கு மாற்றி அதில் நன்குக் கிளறிக் கலக்கப்பெறும். இங்கும் மிதக்கும் பொருள் அகற்றப் பெற்று அடியில் படியும் பொருள் அடுத்த (மூன்றாவது) தொட்டிக்கு மாற்றப்பெறும். இங்கும் படிந்த பொருள் கலக்கப்பெறும். இங்குப் பெரும்பாலும் மிதக்கும் பொருள் இராது; ஏதாவது இருந்தால் அஃது அகற்றப் பெற்று, சேறே இல்லாத மண்டி கிடைக்கும். இரண்டு கூலியாள்களைக் கொண்டு இரண்டுமூன்று மாதங்கள் செய்யப்பெற்றாலும் கூலி ரூ 400க்கு மேற்படாது.

இந்த மண்டியிலிருந்துதான் பாதரசம் போன்ற பொருள்களைச் சேர்த்துத் தங்கம் பிரித்தெடுக்கப் பெறும். இப்போதுதான் செட்டியாருக்கு வேலை; ஒரு பொற்கொல்லர் இதற்குத் துணையாக இருப்பார். ஓராண்டு ஐம்பது சவரன் கிடைத்ததாகச் சொன்னார். இதனை அமிலத்தில் கரைத்துப் பத்தரை மாற்றுத் (24 காரட்) தங்கமாக மாற்றுவார். இதில் 2 காரட் அளவுக்கு செம்பு (தாமிரம்) சேர்த்துப் பணித்தங்கமாக (22 காரட்) மாற்றுவார், இப்படி மாற்றியதால் 55 சவரன் கிடைத்ததாம். இன்னோர் ஆண்டு 65 சவரன் கிடைத்ததாம். இந்த வருவாய் தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம் வருவதற்கு முன். 1965 முதல் வேலை குறைந்தது. இப்போது ஒரு பொற்கொல்லர் கூட அவர் கடையில் வேலை செய்யவில்லை.

**மெழுகின் துணை :** ஒவ்வொரு நகைக் கடையிலும் பெரிய சாத்துக்குடிப்பழம் அளவுக்கு இரண்டு அல்லது மூன்று மெழுகு உருண்டைகள் இருக்கும். இவை தவிர 'மச்சாணிக் கொத்து' ஒன்று காக்கித் துணியில் சுற்றி வைக்கப் பெற்றிருக்கும் இந்தக் கொத்தில் ஒரு சாண் நீளத்திற்கு 22, 21, ........6 காரட் மதிப்பில் தட்டை

வடிவில் 16 மச்சாணிகள் இருக்கும். ஒருவர் ஒரு தங்க நகையை விற்கக் கொண்டு வருகின்றார் என்று வைத்துக் கொள்வோம். அதை ஒரு கட்டளைக் கல்லில் உரைப்பார்; அதை உத்தேசமாக மதிப்பிட்டு (18 காரட்டு), 18 காரட்டு மச்சாணியை அதன் அருகில் உரைப்பார். இரண்டும் பொருந்தினால், அந்த இரண்டு உரையையும் மெழுகில் ஒற்றி எடுத்து மீண்டும் சரி பார்ப்பார். பொருந்தாவிடில் மீண்டும் நகையைக் கல்லில் உரைப்பார்; இப்போது அடுத்த கீழான மச்சமுடைய ஆணியை அதன் அருகில் உரைத்துச் சரி பார்ப்பார்; இவற்றை மெழுகில் ஒற்றி எடுத்து மீண்டும் சரிபார்ப்பார். இப்படிப் பலமுறை பார்த்த பிறகுதான் நகைத் தங்கத்தின் காரட் அறுதி யிடப்பெறும்; பின்னர் நகையின் விலையை அறுதியிட்டு வாங்குவார். இந்தச் செயல்களில் விற்கப் பெறும் நகையின் உரைப் பொடிகள், மச்சாணிகளின் உரைப் பொடிகள் மெழுகில் சேர்ந்து கொள்ளும்.

ஒரு சமயம், ஆண்டுப் புதுக்கணக்குப் போடும் நிகழ்ச்சிக்குப்போயிருந்தேன். புதியனவாக மூன்று மெழுகு உருண்டைகள் பூசைக்குரிய பொருள்களாக இருந்தன. ரூ 105/= ஐப் புதுக் கணக்கில் வரவு வைத்தேன். ஆயிரத்துப் பத்து இரண்டாயிரத்து இருபது என்று பல வணிகர்கள் வரவு வைத்தார்கள். அன்று மாலை, அல்லது மறுநாள் காலை ரூ5/ = ரூ10/ = ரூ20/ = மட்டிலும் வைத்துக் கொண்டு பெருந் தொகைகள் திருப்பித் தரப்பெறும். பூசை முடிந்த பிறகு எல்லோருக்கும், குளிர் பானம், காபி வழங்கப் பெற்றன. அப்போது என்னிடம் சொன்னார்: "தங்கள் போன்ற அன்பர்கள், பெரியோர்களின் ஆசியாலும், இறைவன் அருளாலும் வாணிகம் சுறுசுறுப்பாக நடைபெற்றால் இந்த மூன்று மெழுகு உருண்டைகளும், இந்த ஆண்டில் சேரும் குப்பைகளும் என் மகள் திருமணத்திற்குப் போதும்'' என்று கூறினார். காரைக்குடியிலிருந்த போது இவ்வாறு நகைக் கடைக்காரர்களின் தொடர்பால் சிறிது அநுபவம் ஏற்பட்டது.

இதன் பிறகு திருப்பதியில் ''நம்மாழ்வாரின் தத்துவம்'' பற்றி ஆய்ந்த போது பல வைணவ கிரந்தங்களைப் படிக்க நேரிட்டது. இவற்றில் ஒன்று பிள்ளை உலக ஆசிரியரின் ஸ்ரீ வசன பூஷணம். இதில் 'பகவந் நிர்ஹேதுக கிருபா பிரபாவம்'[1] என்ற ஐந்தாவது பிரகரணத்தில் (இயலில்) ஒரு சூத்திரம் (16); அதில் ஒரு பகுதி இது:

> .........''தனக்கேற்ற இடம் பெற்ற அளவிலே 'என்ஊரைச் சொன்னாய்;என் பேரைச் சொன்னாய்; என் அடியாரை நோக்கினாய்; அவர்கள் விடாயைத் தீர்த்தாய்; அவர்கட்கு ஒதுங்க நிழலைக் கொடுத் தாய்' என்றாப்போலே சிலவற்றை ஏறிட்டு, மடி மாங்காய் இட்டு, பொன்வாணிகன் பொன்னை உரை கல்லிலே உரைத்து மெழுகாலே எடுத்துக் கால் கழஞ்சு என்று திரட்டுமாப் போலே ஜன்ம பரம்பரைகள் தோறும் யாத்ருசிகம் பிராசங்கிகம், ஆநுஷங்கிகம் என்கின்ற சுகிருத விசேஷங்களைக் கற்பித்துக் கொண்டு தானே அவற்றை ஒன்று பத்தாக்கி நடத்திக் கொண்டு போரும்''[2]

இந்தச் சூத்திரத்தின் பொருள் மேற்கூறிய நகைக்சுவை அநுபவத்தினால்தான் தெளிவாயிற்று.

'தனக்கு ஏற்ற இடம் பெற்ற அளவில்' என்றது. இப்படி மீண்டாற் போல மீண்டு விடுகை அன்றிக்கே, இவர்களை

1. பகவந்—பகவானுடைய; நிர்ஹேதுக—காரண மின்றி; கிருபா—கருணை; பிரபாவம்—பெருமை.
2. யாத்ருச்சிகம்-யத்ருச்சாயாம்பவம்-யாத்ருச்சிகம்; யாரோ ஒருவனுடைய இச்சையில் உண்டாவது. பிராசங்கிகம்-புத்திக்கு விஷயமானவற்றை விட முடியாமலிருப்பது. இதற்கு இருவர் இருத்தல் வேண்டும். ஆநுசங்கம்-பின்னால் உண்டாகும் சம்பந்தம். இதற்கு மூவர் தேவை.

ஜீவிக்கையில் உண்டான ஆசையாலே பின்னையும் அங்கீ கரிக்கைக்கு இடம் பார்த்துத் திரியும் தனக்குத் தகுந்த இடம் பெற்ற அளவில் என்றபடி.

'என் ஊரைச் சொன்னாய்... நிழலைக் கொடுத்தாய்' என்றாற் போலே சிலவற்றை ஏறிட்டு என்றது, அவ்வூர் இவ்வூர் என்று இவன் பல ஊர்களையும் சொல்லா நிற்க. கோயில், திருமலை முதலாகத் தான் உகந்த ஊர்களிலே ஏதேனும் ஒன்றைச் சொன்னால், அதனையே பற்றாசாகக் கொண்டு 'என் ஊரைச் சொன்னாய்' என்றும்; அவர் இவர் என்பன போலே சொல்லா நிற்க, ஒருவன் பெயரைச் சொல்லுகிறதாக இறைவன் திருப்பெயர்களில் ஒன்றைச் சொன்னால் அவ்வளவைக் கொண்டு 'என் பெயரைச் சொன்னாய்' என்றும்; பாகவதர் சிலர் காட்டிலே செல்லா நிற்க, அவர்களை வருத்திக் கையில் உள்ளதைப் பறிப்ப தாக வழிப்பறிக்காரர் முயற்சி செய்த அளவில், தன் காரியமாசப் போகின்றான் சேவகன் ஒருவன் அவர்கள் பின்னே தோன்ற அவனை இவர்களைப் பாதுகாப்பதற் காக வருகின்றானாக நினைத்து, அவர்கள் அஞ்சிப் பறியாதொழிய, அது காரணமாக அந்தச் சேவகனை 'என் அடியாரை நோக்கினாய்' என்றும்; ஒருவன் வேனிற் காலத்திலே தன் வயல் தீயப்புக்கவாறே, நீர் உள்ளவிடத் தினின்றும் வயலுக்கு வரும்படி நெடுந்தூரத்திலே துலை யிட்டு இறையா நிற்க, 'மருபூமியிலே (பாலை நிலம்) நெடுந்தூரம் நடந்து, 'சிறிது தண்ணீர் பெறில் நம் உயிர் தரிக்கும்' என்னும்படி இணைத்து வரும் பாகவதர் சிலர் அவன் அறியாமல், அந்தத் தண்ணீரிலே தங்கள் திருவடி முதலானவற்றை விளக்கி இளைப்பாறிப் போனால் அது அடியாக 'என் அடியார் விடாயைத் தீர்த்தாய்' என்றும்; ஒருவன் தனக்குச் சூது சதுரங்கம் பொருகைக்கும் காற்றை விரும்பும்போது வந்து இருத்தற்கும் ஆகப் புறத்திண்ணை கட்டி வைக்க மழையிலே நனைந்தவர் களாய் 'எங்கே ஒதுங்குவோம்!' என்று வருகிற பாகவதர்

சிலர் அங்கே ஒதுங்கியிருந்து போக, அவ்வளவைக் கொண்டு, 'என் அடியார்க்கு ஒதுங்க நிழலைக் கொடுத்தாய்' என்றும் இப்படைகளிலே சிலவற்றை அவர்கள் அறியாதிருக்கத் தானே ஏறிட்டு என்றபடி.

'மடி மாங்காய் இட்டு'—மாங்காய் எடாமலே வாளா வழி போகின்றவன் மடியிலே, மாங்காயை மறைத்துக் கொண்டு சென்று இட்டு 'மாங்காய் களவு கண்டாய்' என்று கூறுதல் போன்று என்றபடி, இது வலிய ஏறிடுவதற்கு உவமை.

'பொன்வாணிகன்........போரும்' என்றது, பொன் வாணிகம் செய்வான் ஒருவன் எவரேனும் பரீட்சித்தற்குக் காட்டின பொன்னை உரைகல்லிலே உரைத்துப் பொன் சேராதபடி மெழுகாலே ஒத்தி எடுத்து நாளோட்டத்துடனே கால் பொன்னாயிற்று, கழஞ்சு பொன்னாயிற்று என்று திரட்டுமாறுபோலே, ஒரு பிறவி இருபிறவிகள் அளவன்றிக்கே மக்களுடைய ஜன்ம பரம்பரைகள் தோறும் 'விடாயைத் தீர்த்தாய், ஒதுங்க நிழலைக் கொடுத்தாய்' என்பன போலே உண்டாக்கும் யாத்ருச்சிகம், 'ஊரைச் சொன்னாய், பேரைச் சொன்னாய்' என்பனபோலே வரும் பிராசங்கிகம், 'அடியாரை நோக்கினாய்' என்பது போல உண்டாகும் ஆநுசங்கிகம் என்கின்ற புண்ணிய விசேஷங்கள், சாஸ்திரங்களாலே விதிக்கப்பெற்றனவும் மக்களாலே அறியப் பெற்றனவு மன்றியிருக்க, அவற்றைப் புண்ணியம் என்று தானே கல்பித்துக் கல்பிதமானவற்றை ஒன்றைப் பலஆக்கி நடத்திக் கொண்டு போதரும் என்றபடி.

நகைக்கடைச் செட்டியாரின் தொடர்பும், நகைக் கடையில் நடைபெறும் சில நிகழ்ச்சிகளும் இரகசிய கிரந்தங்களின் உண்மைப் பொருள்களை விளக்கிக்கொள்ள மிகவும் துணை புரிந்தன.

## 24. திரு. V. சொக்கலிங்கம் பிள்ளை

திரு. V. சொக்கலிங்கம்பிள்ளை சைதையில் (1940-41) நான் பயின்றபோது வகுப்புத் தோழர் என்று முன்னொரு குமிழியில் குறிப்பிட்டேன். நகராண்மைப் பள்ளி தொடங்கின நாள் தொட்டு தற்காலிகத் தலைமை யாசிரியராக இருந்தவரை முதல் உதவியாசிரியராக்கி அவர் இடத்திற்கு விளம்பரம் செய்து ஆரோக்கியசாமி என்பவரை நியமனம் செய்தது நகராண்மைக்கழகம். ஐந்தாண்டுகள் பணியாற்றி திரு. ஆரோக்கியசாமி ஓய்வு பெற்றபிறகு திரு. சொக்கலிங்கம்பிள்ளை நிரந்தரத் தலைமையாசிரியரானார். தொடக்ககாலத்திலிருந்தே சொக்கலிங்கம்பிள்ளை ஏழைபங்காளராகத் திகழ்ந்தார். பி.டி. மாணாக்கர்களை பள்ளிக்கு அழைத்துச் செல்லும் பொழுதெல்லாம் இவருடன் உரையாடித் திரும்புவதுண்டு. கணநாதன் என்ற மாணவன் சிறுவயதில் பர்மாவிலிருந்து நடையாக வந்தவன். மாமன் வீட்டில் வளர்ந்தவன். மாமன் ஆறுமுகம்பிள்ளை என்பவர் அழகப்பா பயிற்சிக் கல்லூரியில் உதவியாளராகப் பணியாற்றிவந்தார். இந்தச் சிறுவனை நகராண்மைப் பள்ளியில் சேர்ந்தார் ஆறுமுகம் பிள்ளை. சாதிச்சலுகை மூலம் சொக்கலிங்கம்பிள்ளை அவர்களின் உதவியால் அரைக்கட்டணச் சலுகை பெற முடிந்தது. அரைக்கட்டணத்தை நான் கட்டி உதவினேன். கணநாதனும் பள்ளியிறுதித்தேர்வில் வெற்றி பெற்றான்.

இஃது இவ்வாறு இருக்க, சொக்கலிங்கம்பிள்ளை தற்காலிகத் தலைமையாசிரியராக இருந்தபோது சிறப்புக் கட்டணநிதியிலிருந்து செவிப்புலக்கட்புலக் கருவிகள் வாங்கப்பட்டன. அந்நிதியைப் பயன்படுத்தும் அதிகாரம் தலைமையாசிரிக்கு உண்டு. சொக்கலிங்கம்பிள்ளை அவற்றைத் தன் இச்சையாக வாங்கவில்லை. ஒரு குறிப்

பிட்ட கம்பெனியில் உற்பத்தி செய்யப்பெற்றவை வாங்கப் பெறல் வேண்டும் என்பது கல்வி இயக்குநரின் சுற்றறிக் கைக் கடிதம். நகராண்மைக் கழக ஆணையர் அவர் இச்சைப்படி வேறோர் கம்பெனியாரால் உற்பத்திசெய்யப் பெற்றவைகளை வாங்கிவிட்டார்; அதிகாரம் அவருக்கு இல்லையானாலும் இத்'தகாத' காரியத்தைச் செய்து விட்டார். அவற்றின் விலையைக் கம்பெனிக்கு அனுப்பு மாறும் ஆணை பிறப்பித்து விட்டார். பாவம், சொக்கலிங்கம்பிள்ளை என்ன செய்வார்? வாய் பேசாமல், எதிர்ப்பு தெரிவிக்காமல், பணத்தையும் அனுப்பிவிட்டார்! தலைவரை எப்படி மீறமுடியும்? ஆணையருக்குக் கம்பெனி யார் ஏதாவது 'சன்மானம்' வழங்கியிருக்க வேண்டும். இச் செய்தி சங்கப்பாடல்களில் அடங்கிய 'இறைச்சிப்பொருள்' போல் இருந்தது என்பது சொல்லாமலே போதரும்.

அந்த ஆண்டு மாவட்டக் கல்வி அதிகாரி பள்ளித் தணிக்கையின்போது இதைக் கண்டறிந்தார். ஆய் வேட்டில் குறிப்பிட்டதோடன்றி தலைமையாசிரியர் சுற்றறிக்கையைக் கவனியாமலோ அல்லது வேண்டு மென்றோ வாங்கியமைக்காக அவர் தம் பொறுப்பில் பன்னிரெண்டாயிரம் ரூபாய் பள்ளிக்குக் கட்டவேண்டும் என்ற ஆணையையும் பிறப்பித்தார். இந்த ஆணையின் நகல்களைக் நகராண்மைக் கழக ஆணையர், கல்வி இயக்குநர், மண்டலக்கல்வி ஆய்வாளர் இவர்கட்கெல்லாம் அனுப்பி வைத்து விட்டார். சொக்கலிங்கம்பிள்ளை இருக்கும் இடத்தில் நான் இருந்திருந்தால், கம்பெனிக்குப் பணம் தருமாறு நகராண்மைக் கழக ஆணையர் எழுதிய கடிதத்திற்கு மறுமொழி தரும் வகையில், அரசு சுற்றறிக்கைக் கடிதத்திற்கு மாறாக வேறு கம்பெனியார் உற்பத்தி செய்ததை வாங்கியதும் தவறு என்றும், அவர் ஆணைப்படிக் கம்பெனிக்குப் பணம் அனுப்புவது தன் பொறுப்பல்ல என்றும், ஆணைக்குக் கீழ்ப்படிவது தன் பொறுப்பாதலால் பணம் அனுப்புவதாகவும், பின்னர்

தணிக்கையின்போது மாவட்டக்கல்வி அதிகாரி இந்தத் தவற்றைக் கண்டறிந்து தன்னைப் பொறுப்பாளியாக்கினால் அது தன்னைக்கட்டுப்படுத்தாது என்றும் சுட்டிக் காட்டி ஆணையருக்கு மரியாதை தவறாமல் கடிதம் எழுதியிருப்பேன். இதன் நகல்களை மாவட்டக் கல்வி அதிகாரி, மண்டலப்பள்ளிக்கல்வி ஆய்வாளர், கல்வி இயக்குநர் இவர்கட்கு அனுப்பிவைத்திருப்பேன். பின்னர் வரும் குற்றச்சாட்டிற்கு இக்கடிதம் தற்காப்பு அரணாகவும் அமையும். திரு, சொக்கலிங்கம்பிள்ளை ஒரு வெகுளி; துணிவு இல்லாதவர். ஆதலால் இவ்வாறு எழுதவில்லை.

மாவட்டக்கல்வி அதிகாரி 12 ஆயிரம் பள்ளிக்குச் செலுத்துமாறு எழுதிய கடிதத்தை எடுத்துக்கொண்டு என்னிடம் வந்தார். நான் மேற்குறிப்பிட்டவாறு கடிதம் எழுதியிருந்தால் அஃது இப்போது துணையாக இருக்குமே என்று சுட்டிக் காட்டினேன். சொக்கலிங்கம்பிள்ளை அவ்வாறு எழுதத் தனக்குத் தோன்றவில்லை என்பதையும் அப்படித் தோன்றினாலும் தனக்குத் துணிவு இல்லை என்பதையும் ஒப்புக்கொண்டார். எனக்கும் அச்சமயம் கழுவாய் ஒன்றும் தோன்றவில்லை; மனம் குழம்பியது. நான் துறையூரை விட்டுக் காரைக்குடிக்கு வந்த பிறகும் ஒரு சில ஆண்டுகள் பள்ளியின் நினைப்பும் இருந்தது. கல்வியதிகாரிகளின் மாற்றங்களைப் பற்றியும் நாளிதழ்களில் பார்த்துக்கொண்டும் இருந்தேன். இஃது பூர்வ வாசனையின் உறைப்பால் ஏற்பட்டதன் விளைவு. இப்பழக்கம் இப்போது சொக்கலிங்கம்பிள்ளை விஷயத்தில் துணை செய்வதாக அமைந்தது.

நான் துறையூரிலிருந்தபோது நெருங்கிப் பழகின மாவட்டக்கல்வி அதிகாரியின் நேர்முக அலுவலர் (Personal Assistant) திரு. எஸ். வீராசாமிப்பத்தர் மதுரை மாவட்டக்கல்வியதிகாரியாகப் பணியாற்றியதை அறிந்திருந்தேன். ஆகையால் சொக்கலிங்கம்பிள்ளையை அழைத்துக்கொண்டு ஒரு நாள் மாலை மதுரை சென்

றேன். கல்லூரி இல்லத்தில் (College House) தங்கினோம். இன்றிருப்பதுபோல் அஃது அன்றில்லை. முன்பக்கம் சிறிய அறைகள் இருந்தன. பின்பக்கம் காலியிடம்; அதனை யடுத்து ஒரு சிறு உணவு விடுதி, தங்கும் அறைக்கு இருவருக்கும் மூன்று ரூபாய் வாங்கினதாக நினைவு. அப்போது இட்டலி விலை மூன்று காசு; தோசை ஆறுகாசு; காஃபி ஒன்பது காசு என்பதாக நினைவு. அதிகாலையில் எழுந்து நீராடி மீனாட்சி-சொக்கலிங்கப் பெருமானைச் சேவித்தோம். வந்த காரியம் வெற்றியடைய வேண்டும் என்று அம்மையப்பரை வேண்டிக் கொண்டோம். தரிசனம் முடிந்து ஏழரை மணிக்கு திருக்கோவிலைவிட்டு வெளி வந்தோம். அறைக்கு வந்து உட்புறமாக இருக்கும் உணவுவிடுதியில் சிற்றுண்டி கொண்டோம். எல்லாம் சாவகாசமாக நடைபெற்றன, அறைக்கு வரும்போது மணி ஒன்பது.

மதுரைமாவட்டக் கல்வி அதிகாரியின் அலுவலகம் நகரப் பேருந்து நிலையத்திற்கு எதிரில் உட்புறமாக இருந்தது. காவலாளியை விசாரித்து அதிகாரி ஊரிலிருப்பதை அறிந்து கொண்டோம். இரண்டு சாத்துகுடி வாங்கிக் கையில் வைத்துக்கொண்டோம். சற்றேறக் குறைய பத்தரை மணிக்குத் திரு பத்தர் அலுவலகத்தில் நுழைவதைப் பார்த்தோம், பதினைந்து மணித் துளிகள் கழிந்த பிறகு இருவரும் பெயர்களை ஒரு தாளில் எழுதி உள்ளே அனுப்பினோம். அதிகாரி வருமாறு பணிக்கவே, இருவரும் அறையில் நுழைந்து வணக்கம் தெரிவித்தோம். சுமார் ஏழு ஆண்டுகளாக திரு. பத்தரைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பு இல்லாததால் மிக அன்புடன் உரையாடினோம். நான் துறையூரிலிருந்து காரைக்குடி வந்த போதும் அதற்கு இரண்டு மூன்று ஆண்டுகட்கு முன்னரேயும் திரு. பத்தர் தஞ்சைக்குப் போய் விட்டதால் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படவில்லை. நான் கல்லூரியில் பணியாற்றுவது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார் பத்தர்.

பின்னர் வந்த வேலையைக் குறித்துப் பேசினேன். திரு. சொக்கலிங்கம் பிள்ளையை அறிமுகப்படுத்தி வைத்தேன். நாங்கள் 1940-41 முதல் சைதையில் பயிற்சிக் கல்லூரியில் பயின்றநாள் முதல் நெருங்கிய நண்பர்கள் என்று குறிப்பிட்டுப் பேசினேன். எந்தத் தவறும் செய்யாமல் சிக்கல்ஏற்பட்டிருப்பது குறித்து விளக்கினேன். இதற்காக வருந்த வேண்டாம் என்றும், இம்மாதிரித் தொல்லைகள் நேரிடுவது சர்வ சாதாரணம் என்றும், இதனை எளிதாகச் சமாளிக்கலாம் என்றும், இதற்குரிய வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார். மாவட்டக் கல்வி அதிகாரிக்கு எழுதும் கடிதம் பற்றியும் குறிப்புகள் தந்தார். பிறகு விடைபெற்றுக் கொண்டு அறைக்குத் திரும்பினோம். அறையிலேயே கடிதத்தை நல்ல முறையில் தயாரித்தோம். மதுரையிலேயே அதனைத் தட்டச்சு செய்வித்துக் கையெழுத்திட்டு மதுரை மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அனுப்பினோம். இதன் நகல் மண்டலப் பள்ளி ஆய்வாளர், கல்வி இயக்குநர் இவர்கட்கு அனுப்பப் பெற்றது. காரைக்குடி திரும்பியதும் ஒரு நகல் நகராண்மைக் கழக ஆணையருக்கும் ஆள் மூலம் அனுப்பப் பெற்றது. இவ்வாறு செய்தது எங்கள் இருவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தது.

மூன்று திங்களில் கட்ட வேண்டிய 12 ஆயிரத்தில் 9 ஆயிரம் தள்ளுபடி செய்யப் பெற்றது. 3 ஆயிரம் (ஒலி பெருக்கி செட் வாங்கியது) கட்ட வேண்டும் என்றும் கடிதத்தில் குறிப்பிடப் பெற்றிருந்தது. ஒரு மாதம் ஆறப் போட்டு இக்கடிதத்திற்கும் சரியான மறுமொழி தரப் பெற்றது. பழைய பல்லவியே புதிய முறையில் சென்றது. மற்றும் மூன்று மாதத்தில் இத்தொகையும் தள்ளுபடி செய்யப் பெற்றது, சொக்கலிங்கம் பிள்ளையின் கவலை அழிந்தது. புதிய தெம்புடன் திகழ்ந்தார்.

இரண்டாண்டு கழிந்து (1956) ஆண்டு எனக் கருது கின்றேன்) மீண்டும் ஒரு புயல் எழுந்தது. இவர் வாழ்வில். பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்னர் இவரை விட்டுப் பிரிந்து சென்ற இவர் மனைவி ஒரு வக்கீல் நோட்டீஸ் அனுப்பியிருந்தாள். இவரது மனைவியின் தந்தையார் ஒரு செட்டி வீட்டுக் கணக்கப்பிள்ளை; நீதி மன்ற வழக்கு களை நன்கு அறிந்தவர். மருமகனிடம் சுரப்பு இருக்கின்ற தென்பதை நன்கு அறிந்து கொஞ்சம் கறந்து பார்க்கலாம் என்பது அவரது நினைப்பு. நோட்டீஸ் கண்டதும் இவர் நடு நடுங்கிப் போனார். தான் இவரை மணந்து கொண்ட போது கட்டில், மெத்தை, பீரோ, மேசை, நாற்காலி முதலியவை கொண்டு வந்ததாகவும் அவை இவர் பொறுப்பில் இருப்பதாகவும், முப்பது சவரன் மதிப்புள்ள நகை வகையறா இவர் வசத்திலிருப்பதாகவும், இவற்றைத் தம் வசம் ஒப்படைக்க வேண்டும் என்றும்; இவை தவிர மாதம் ஜீவனாம்சத்திற்கு ரூ 150/- தரவேண்டும் என்றும், தவறினால் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து இவற்றைப் பெற நடவடிக்கைகள் எடுக்கப் போவதாகவும் நோட்டீஸில் குறிப்பிடப்பெற்றிருந்தது. தம்பியின் இல்லத்தில் உணவு கொண்டு அமைதியாகப் பள்ளிப் பணியில் ஈடுபட்டு வாழ்ந்து வரும் தன் துறவு வாழ்க்கை யில் ஒரு புயல் எழுந்தது போன்ற அச்சம் கிளர்ந் தெழுந்தது இவரிடம். நோட்டீசை எடுத்துக் கொண்டு என்னிடம் வந்தார்; இதில் எப்படியாவது தனக்கு உதவ வேண்டும் என்று வேண்டினார்.

நான் யோசித்தேன். திருச்சி வக்கீல் பி. அரங்கசாமி ரெட்டியாரைக் கலந்து பேசி இதற்கு வழி வகைகளைக் காணலாம் என்று அவருக்குக் கடிதம் எழுதினேன். இந்த வக்கீல் நண்பர் சதா வெளியூர்ப் பயணத்தில் இருப்பதால், இவர் திருச்சியில் இருக்கும் நாள் குறிப்பிட்டு எழுதினால் நானும் சொக்கலிங்கம் பிள்ளையும் அந்த நாளில் வருவ தாக எழுதினேன். எங்கள் வருகை ஒரு ஜீவனாம்சம்

வழக்கு பற்றியது என்றும் குறிப்பிட்டு எழுதியிருந்தேன். திரு. அரங்கசாமி ரெட்டியார் ஒரு நாள் குறிப்பிட்டுத் தான் அந்த நாளில் புதுக்கோட்டை அருகிலுள்ள ஓர் ஊருக்கு ஒரு முக்கிய அலுவில் நிமித்தம் வருவதாகவும் (ஊர்ப் பெயர் இப்போது நினைவில் இல்லை) நாங்கள் அங்கு வந்து சந்தித்தால் உதவுவதாகவும் பதில் கடிதம் எழுதியிருந்தார்.

வக்கீல் குறிப்பிட்டிருந்தநாளில் அந்தஊருக்குச் சென்று அவரைச் சந்தித்தோம். சொக்கலிங்கம் பிள்ளை தன் கதையை வக்கிலிடம் ஆதியோடந்தமாக விவரித்து விளக்கி நோட்டீசையும் அவரிடம் தந்தார். உடனே வக்கீல் பதில் நோட்டீஸுக்குத் திட்டமிட்டு அதில் பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்னர்த் தன்னை நட்டாற்றில் விட்டதுபோல் கை விட்டுச் சென்றபோது தான் கொண்டு வந்த சாமான்களை எடுத்துப் போனதுமன்றி தான் இல்லாத போது தான் போட்ட நகை, தாலிக்கொடி இவற்றையும் (சுமார் நாற்பது சவரன் மதிப்பு), வேறு பல சமான்களையும் எடுத்துப் போய் விட்டதாகவும், தான் பல தடவை தன் இல்லத்திற்கு வந்து வாழுமாறும் நேரில் கேட்டும் கடிதம் எழுதியும் சில பெரியோர்களை அனுப்பி வருமாறு வேண்டியும் வராமல் அலட்சியம் செய்து விட்டபடியால், இனி முதுமைக் காலத்தில் தான் அவளுடன் வாழ விரும்பவில்லை என்றும், ஜீவனாம்சம் கோருவது நியாயம் இல்லையென்றும், அப்படி ஏதாவது வழக்கு தொடர்ந்தால் தக்க வக்கீலைக் கொண்டு எதிர்க்கப்படும் என்றும் குறிப்பிட்டு பதில் நோட்டீஸ் அனுப்பினார். இந்த நோட்டீஸ் கண்டதும் அடங்கிப் போனார்கள்" எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதன் பிறகு திரு.சொக்கலிங்கம் பிள்ளை தன்மனைவியுடன் தான்வாழ்ந்தபோது நேரிட்ட பல திடுக்கிடும் செய்திகளைச்சொன்னார். தன் மாமனார் தன் மகளைக்கொண்டு

வசிய மருந்து உண்ணச் செய்தாராம். மந்திரவாதியை கொண்டு பில்லி சூனியம் வைத்தாராம். இதனால் தன் உடல் நலம் மிகவும் சீரழிந்து பணி செய்யும் திறன் இல்லாதும் போயிற்றாம். உடனே தன் வீட்டார் வேறொரு மந்திரவாதியைக் கொண்டு இந்தச் சதியை அறிந்தார்களாம். அவரைக்கொண்டு மாவினால் ஒரு பதுமை செய்வித்து ஜபம் செய்து அதில் பல ஊசிகளைக் குத்தினார்களாம். ஒவ்வொரு ஊசி குத்தப்படும்போதும் இவர் வயிற்றிலிருந்த மருந்து சிறிது சிறிதாக வெளிப் பட்டதாம். இன்னும் என்ன என்னவோ செய்ததாகச் சொன்னார். அவற்றை இப்போது நினைவுக்கூர முடிய வில்லை. இரண்டு ஆண்டுகளில் உடல் நிலை சீர் அடைந்த தாம். இப்படியும் ஓர் அரக்கத்தன்மையுள்ள மாமனார் இருப்பாரா என்ற வியப்பும் திகைப்பும் எழுகின்றன.

நான் காரைக்குடிக்கு வந்ததும் அவரைக் காணும் போது அவரிடம் சிறிது மாற்றம் காணப்பட்டது. 1940-41 இல் சைதையில் அவரிடம் கண்ட உற்சாகம், சிரித்த முகத்துடன் பேசுவது போன்றவற்றில் சிறிது மாற்றம் காணப்பட்டது. சற்று வயது முதிர்ந்தமையால் இம்மாற்றம் இருக்குமோ என்று நினைத்து வாளா இருந்து விட்டேன். குடும்ப வாழ்க்கை சரியாக அமையாததற்குக் காரணம் வினவினேன். மனைவியுடன் மனம் ஒத்து வாழ முடியவில்லை என்று மட்டிலும்தான் சொன்னார். அதற்கு மேல் நானும் குடைந்து கேட்கவில்லை. இப்போது தான் உண்மைக் காரணம் புரிந்தது.

காரைக்குடியில் இலக்குமிபுர அகிரகாரத்தின் அருகில் தன் சொந்த வீட்டில் தன் தம்பியுடன் வாழ்ந்தார். இவர் தம்பி சினிமா கொட்டகையில் ஏதோ ஒரு சிறு வேலை; அங்குப் பெறும் ஊதியம் வாழ்க்கை நடத்துவதற்குப் போதாது. இவர் உதவியால்தான் தம்பியின் வாழ்க்கை நன்கு அமைந்திருந்தது. இவர் வீட்டுக்கருகில் அக்கிர

ஹாரத்தில் ஒரு வீடு வாங்கினேன் (1966). இதில் பெருவாரியான சாமான்களைப் போட்டுவிட்டுதான் திருப்பதி சென்றேன் சிறிதளவு சாமான்களுடன். கடைத் தெருவில் சிறிது கொடுக்கல்—வாங்கல் இருந்த தாலும் தேவகோட்டை சார் நீதிபதி (Sub-Court) மன்றத்தில் ஒரு வழக்கு இருந்ததாலும் சில சமயம் காரைக்குடி வர நேரும். ஆனால் சொக்கலிங்கம் பிள்ளை வீடு இருக்கும் இடம் தெரியாது. ஒரு சமயம் நானும் ஆறுமுகம் பிள்ளையும் (பயிற்சிக் கல்லூரி உதவி ஆள்) வீட்டைத் திறந்து பார்த்து வீட்டின் நிலையைத் தெரிந்து கொண்டு திரும்பும்போது வழியில் சொக்கலிங்கம் பிள்ளை வீட்டைக் காட்டினார் ஆறுமுகம் பிள்ளை. அப்போது சொக்கலிங்கம் பிள்ளை ஓய்வு பெற்று இருப்ப தாகவும் தெரிவித்தார் ஆறுமுகம் பிள்ளை. அப்போது காலை 10 மணி இருக்கும். வண்டியில் ஒருவர் ஆப்பிள் விற்றுக் கொண்டிருந்தார். ஓர் ஆறு பழம் வாங்கிக் கொண்டு அவரைப் பார்க்கச் சென்றேன். தளர்ந்த நிலை யில் இருந்தார். உடல் நிலையும் குன்றி இருந்தது. மலம் கழிக்க முடியவில்லை—இதுதான் பெருங்குறை என்றார். எனினும் சோகம் முகத்தில் தாண்டவமாடியது. சிரமப் பட்டுப் புன்முறுவலை ஏறிட்டுக் கொண்டு பேசியதால் இது புலனாயிற்று. 15 மணித் துளிகள் உரையாடித் திரும்பி னேன். ஆறு மாதம் கழித்து அடுத்தமுறை காரைக்குடி சென்றபோது இவர் திருநாடு அலங்கரித்த செய்தியை அறிந்தேன்.

> நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
> பெருமை உடைத்துஇவ் வுலகு[1]

> உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
> விழிப்பது போலும் பிறப்பு.[2]

---

1. குறள்—336
2. ஷை—339.

என்றக் குறள்கள் நினைவுக்கு வர நிலையாமை உணர்வால் சிறிது நேரம் தம்பித்துப் போனேன். இறக்கின்றவர்கள் யாவரும் 'க்யு' வரிசையில் நின்று கொண்டு இருப்பது போன்ற காட்சி மனத்தில் தோன்றியது. ஆனால் நான் நிற்கும் இடம் இன்னும் புலனாகவில்லை.

'இதுவென வரைந்து வாழுநாள் உணர்ந்தோர்
முதுநீர் உலகில் முழுவதும் இல்லை'

என்று பாடல் மறையோன் செங்குட்டுவனுக்கு உணர்த்திய அறவுரையுடன் இக் குமிழி அடங்குகின்றது.

குமிழி—132

## 25. கடனில் சிக்கிய நண்பரைக் காத்தல்

துறையூரில் நான் பயின்றபோது என்னுடன் வகுப்புத் தோழர்களாகப் பயின்றவர் T. V. வாசுதேவன்; இவர் ஜனோபகார அச்சகத்தின் மேலாளர். இப்போது (1989) அந்த அச்சகம் இல்லை: மூடப்பட்டுவிட்டது. வேங்கடாசலம் என்ற மற்றொரு நண்பர் 8-வதுடன் படிப்பை முடித்துக் கொண்டு ஆசிரியப் பயிற்சி பெற்று ஆசிரியராகப் பணியாற்றி இப்போது ஓய்வு பெற்றுள்ளார். இப்போது ஏதோ ஒரு கடையில் கணக்கராகப் பணியாற்றுகின்றார். நடேசன், கருப்பண்ணன் என்ற பள்ளித் தோழர்கள் வக்கீல் அலுவலகத்தில் எழுத்தர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

கோபால கிருஷ்ணன் என்பாரும் அவர் தம்பியும் துணிக்கடை வைத்துக் கொண்டிருந்தனர். நான் துறையூரில் பணியாற்றியபோது இரண்டாயிரம் ரூபாய் என் மனைவியிடம் கடனாகப் பெற்றிருந்தார். முக்கால் ரூபாய் வட்டி (9%). ஆண்டுதோறும் வட்டி தவறாது கொடுத்து வந்தார். நான் துறையூரை விட்டுக் காரைக்குடி சென்ற பிறகுதான் தான் வாணிகத்தில் நொடித்துப்

போய் விட்டதாகவும், என்னை நேரில் வந்து உதவும் படியும் கடிதம் எழுதியிருந்தார். நானும் நண்பருக்கு உதவ வேண்டும் என்ற நல்லெண்ணத்தால் உந்தப்பெற்றுத் துறையூர் சென்றேன் (4 நாள் விடுமுறையில்).

நான் சென்ற போது தொழிலை நிறுத்திவிட்டு திருச்சி செ ் று ஏதோ ஒரு கடையில் சம்பளத்திற்காக அமர்வது என்று முடிவு செய்திருந்தார். கடைத் தெரு பக்கத்தில் சொந்தமாக ஒரு வீடு இருந்தது. பத்தாயிர ரூபாய்க்கு என்னை வாங்கிக் கொள்ளச் சொன்னார். ஊரை விட்டுப் போன பிறகு எனக்கு வீடு வாங்க விருப்ப மில்லை என்று சொல்லி விட்டேன். நான் கடைக்குச் சென்ற போது பத்துப் பதினைந்து பேர் கூடிவிட்டார்கள், கோபாலகிருஷ்ணன் என்னைத் தனியாக உள்ளே அழைத்துச் சென்று, ''இவர்கள் யாவரும் நல்லெண்ணம் இல்லாதவர்கள்; என்மீது பொறாமை கொள்பவர்கள். இந்தக் கடையிலுள்ள சாமான்கள் அனைத்தையும் ஸ்டாண்டுகள் உட்பட ரூ. 750/= கேட்கின்றார்கள் பாவிகள்!'' என்று அழாத குறையாகச் சொன்னார். நான் என் நண்பரின் நிலையையும், அக்கம்பக்கத்துச் சூழ்நிலையையும் புரிந்து கொண்டேன். நான் சென்ற நேரம் மாலை 4 மணி.

கூடியிருந்த கடைத்தெருப் பெருமக்களிடம் ''நாளை காலை 9 மணிக்கு கடையிலுள்ள சாமான்களை ஏலம் போடப் போகின்றேன். தேவையானவர்கள் உடனே ரொக்கம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்'' என்று கூறினேன். அவர்கள் கடையினுள் நுழைந்து சாமான் களைப் பரிசோதித்து மதிப்பிட்டுக் கொண்டார்கள். இரவு எட்டு மணிக்கு உணவினை முடித்துக் கொண்டு கடைக்குள் நானும் நண்பரும் நுழைந்து சாமான்களை மதிப்பிட்டுக் கொண்டோம், ரூ. 5000/= தந்து யாராவது கேட்டால் அப்படியே கொடுத்துவிடலாம் என்றும், அப்படி யாரும் முன் வராவிட்டால் பொருள்களைத்

தனித்தனியாக ஏலம் போடலாம் என்றும் நான் கூறிய யோசனையை ஒப்புக் கொண்டார் என் நண்பர் கோபாலகிருஷ்ணன்.

மறுநாள் காலை 9 மணிக்குக் கடையைத் திறந்து உட்கார்ந்தோம். முதல் நாள் கூடின கடைவீதி நண்பர்கள் யாவரும் வந்து சேர்ந்தனர். நான், ''துணி மட்டிலும் வாங்கின விலையில் முக்கால் விலை போட்டால் ரூ. 3000க்கு உள்ளது. இதை ஏலம் போடவில்லை. யாராவது விரும்பினால் ரூ. 3000/= செலுத்தி எடுத்துக் கொள்ளலாம்'' என்றேன். ஓரன்பர் துணிகளைத் தனித் தனியாகச் சோதித்தார்; திருப்தியடைந்தார். எடுத்துக் கொள்வதற்கு ஒப்புக் கொண்டு, பணம் கட்டி எடுத்துக் கொண்டார். துணிகளை அடுக்கி வைக்கும் மரச்சட்ட நிலைகள் 1750/= விலை வைத்து ஏலத்திற்கு விடப் பட்டன. இவை ரூ. 2500/=ப் போயின; ஓரன்பர் பணம் செலுத்தி எடுத்துக் கொண்டார். பின்னர் சுவர்க் கடிகாரம், தேக்காலான ஸ்டூல்கள், அழகான சாய்வு மேசை, தண்டவாளப் பெட்டி முதலியவை ரூ. 1800/=ப் போயின. ரொக்கம் கட்டி சாமான்களை எடுத்துச் சென்றனர்; கோபாலகிருஷ்ணனுக்குக் கடன் தந்தவர்கள் மாலை 4-30க்கு வந்தால் கணக்குத் தீர்க்கப்படும் என அறிவித்தேன். மூன்று நான்கு பேர்கள் புரோ நோட்டுகளுடன் வந்து சேர்ந்தனர். நானும் புரோ நோட்டுகளுடன் சென்றிருந்தேன். மொத்தம் ரூ. 8000/= கடன் (அசல் மட்டும்) இருந்தது.

பணம் தந்தவர்கள், நண்பர்கள் முதலியவர்கள் பத்துப் பேர் இருந்தனர். இனிப்பு, காரம், காஃபி அருகி லிருந்த சிற்றுண்டி சாலையிலிருந்து தருவித்தேன். எல்லோரும் உண்டனர். அப்போது நான், ''கோபால கிருஷ்ணன் குடும்பம் நல்ல குடும்பம். 40 ஆண்டுகளாக நன்றாக வாழ்ந்தவர்கள். கிரகபலன் சரியில்லாமல்

நொடித்து விட்டார். இப்போது ரூ. 8300/= தேறியுள்ளது. நாம் எல்லோரும் சேர்ந்து ரூ. 3300/= ஐ அவருக்கு வழங்குவோம்; வெறுங்கையாக அனுப்புவது சரி இல்லை. உங்கள் கருத்தென்ன?'' என்று கேட்டேன். மனமிரங்கி ''தலைமையாசிரியர் (நான்) சொற்படியே செய்வோம்'' என்று அனைவரும் ஒரு மனதாக ஒப்புக் கொண்டனர். ''வட்டியைத் தள்ளி விட்டால் அசல் மட்டிலும் ரூ 8000/= வருகிறது. இதை நாம் பிரித்துக் கொண்டால் 0 = 10 = 0 வீதம் வருகிறது. அப்படிச் செய்து கொள்ளலமா?'' என்று கேட்டேன். அனைவரும் ஒப்புக் கொண்டனர். ஒவ்வொருவரும் ''இந்தப் புரோ நோட்டின் அசல் வட்டி பாக்கியின்றிச் செல்லாகி விட்டது'' என்று எழுதிக் கையெழுத்திட்டுத் தருமாறு வேண்ட அவர்களும் அவ்வாறு செய்தனர். புரோநோட்டு களை வாங்கி நண்பரிடம் தந்து அவரவர்கட்கு உரிய தொகையை அவரவர்களிடம் தந்து விட்டேன்.

இந்த ஏற்பாட்டினால் அனைவருக்கும் மகிழ்ச்சி. ஒருவர் ''நம் தலைமையாசிரியர் மிக நல்லவர். பழைய நட்பை மறந்து விடாமல் காரைக்குடியிலிருந்து வந்து இரண்டு மூன்று நாட்கள் தங்கி ஒரு நல்ல காரியத்தைச் செய்தார். அவர் நன்றாக இருக்க வேண்டும்'' என்று வாழ்த்தினார். எல்லோரும் ஒரு குரலாக அதை ஆமோதித்தனர். ''நண்பர்களே, உங்கள் வாழ்த்தின் பலத்தால் நான் தலைமையாசிரியர் பதவியிலிருந்து விலகி காரைக்குடிக் கல்லூரியில் பேராசிரியர் பதவியில் பணி யாற்றுகின்றேன்'' என்று நான் கூற அனைவருமே மகிழ்ந் தனர். ''உங்கள் நல்லெண்ணத்திற்கு இறைவன் மேலும் மேலும் நல்ல பதவிகளைத் தருவான்'' என்று கூறி விடை பெற்றனர்.

நண்பர் கோபாலகிருஷ்ணன் திருச்சியில் ஒரு வேலை யில் அமர்வதாகவும், தம் தம்பி திண்டுக்கல்லில் ஒரு

வேலையில் அமர்வதாகவும் வீட்டை விரைவில் விற்கப் போவதாகவும் கூறினார். நானும் ரூ1250/= உடன் அவரிடம் விடை பெற்றுக் கொண்டேன். அன்றிரவே திருச்சி வந்து இராமேஸ்வரம் பாசஞ்சர் வண்டியைப் பிடித்துக் காரைக்குடி வந்து சேர்ந்தேன். நண்பருக்கு உதவியது எனக்கு முழுமன நிறைவினைத் தந்தது. சில ஆண்டுகள் கழித்து திருச்சியில் கோபால கிருஷ்ணனைச் சந்தித்தபோது தான் திருச்சியில் ஒரு பெரிய கடையில் மாதச்சம்சளம் 300/=க்கு வேலை பார்ப்பதாகவும் தன் தம்பி தற்கொலை செய்து கொண்டதாகவும் தெரிவித்தார். மிகவும் வருந்தினேன்.

குமிழி—133

## 26. என் மாமனார் பரமபதித்தல்

இது 1955-இல் நிகழ்ந்தது என்பதாக நினைவு. பரமபதித்த செய்தி கடிதம் மூலம் அறிந்தேன். 1944-முதல் என் மாமியார் மகள் ஆதரவில் என்னோடு வாழ்ந்தார். ஒரு சமயம் வயிற்றுப் போக்கினால் தொல்லைப் பட்டார். முடிந்து விடுவார் என்று நினைத்தேன்; தப்பித்துக் கொண்டார். காரைக்குடியில் இரண்டாண்டு தங்கியிருந்த பொழுதும் ஒருமுறை அதே வயிற்றுப் போக்கால் தொல்லைப்பட்டார். இப்பொழுதும் தப்பித்துக் கொண்டார். 'மகனுடன் இருக்க வேண்டும்' என்று எண்ணுகின்றார் என்பதைக் குறிப்பினால் அறிந்து கொண்டேன். நான் என் மனைவியைக்கலந்து கொண்டு ஆலத்துடையாம் பட்டியில் என் மனைவியின் அத்தை மகன் கிருஷ்ணசாமி ரெட்டியார் இல்லத்தில் கொண்டு போய் விட்டுத் திரும்பி

னேன். என் மாமனார் வீட்டுச் சொத்து—நஞ்சை நிலங்கள்—அந்த ஊரில்தான் இருந்தது. என் மைத்துனர் அதைப் பார்க்க வந்திருந்தார். ''இராமசாமி, நீ உன் அன்னையாரை ஒப்புக்குக் கூப்பிட்டாலும் உன்னோடு வரத் தயாராக உள்ளார்'' என்று கிருஷ்ணசாமி ரெட்டியார் சொல்ல என் மைத்துனரும் அங்ஙனமே அழைக்க என் மாமியாரும் மகனுடன் செல்ல ஒப்புக்கொண்டு பொட்டணம் சென்று விட்டார். 1944 முதல் 1954 முடிய நீதிமன்ற ஆணைப்படி இவருக்குக் கணவனும் மகனுமாக ரூ360/= (ஆண்டொன்றுக்கு) ஜீவனாம்சம் தந்து கொண்டு வந்தனர்; இஃது இனி தரவேண்டியதில்லை என்று கருதித்தான் அன்னையாரைக் கூட்டிக் கொண்டு போயிருக்க வேண்டும் என்பது என் கருத்து. அன்பும் பாசமும் நிறைந்த என் மைத்துனரின் தூய்மையான உள்ளம் அவரது இரண்டாவது திருமணத்திற்குப் பிறகு இரக்கம் என்ற ஒன்று இல்லாது அரக்க மனமாக மாறி விட்டதை அப்பக்கத்துப் பெருமக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

மாமனார் மறைந்த செய்தி எங்களை எட்டியதும் கருமாதிக்குப் போவதாகத் திட்டம் இட்டோம். என் அன்னையார் இப்போது காரைக்குடியிலிருந்தமையால் இரண்டாம் வகுப்பு படிக்கும் இராமலிங்கத்தை வீட்டில் விட்டு விட்டு நான், என் மனைவி, மூன்று வயது கூட நிரம்பப் பெறாத என் இளைய மகன் இராமகிருஷ்ணன் இவர்களுடன் கருமாதிக்கு முதல் நாள் இரவு நாமக்கல் வந்து சேர்ந்தோம். எட்டு கெஜம் மல் சேலை ஒன்று (வெண்மை நிறம்) எடுத்துக் கொண்டு வந்திருந்தோம். நாமக்கல்லில் பேட்டைப் பகுதியில் குடியிருந்த பாபு ரெட்டியார் (இப்போது அவர் பல பேருந்துகளின் உரிமையாளர்) இல்லத்தில் தங்கியிருந்தோம். அதிகாலையில் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு குழந்தைக்குப் பாலூட்டிக் குதிரை வண்டி ஒன்று அமர்த்திக் கொண்டு

(திரும்புவதற்கும் பேசிக் கொண்டு) புறப்பட்டோம். காலை எட்டு மணிக்குப் பொட்டணம் வந்து சேர்ந்தோம்; எங்களைப் பார்த்தவுடன் என மாமியார் ஒரு குரல் அழுதார்கள்; பேரனைத் தூக்கி உச்சி முகர்ந்தார்கள்.

9-மணி ஆகி விட்டது. குழந்தைக்குப் பசி. இப்போது பசும்பால் வந்தது. என் மைத்துனரின் மகனுக்கும் (அவனுக்கும் மூன்று வயதுதான்) என் மகனுக்கும் நானே பால் ஊட்டினேன். 11-மணிக்குச் சடங்குகள் தொடங்கின; நான் மாமியாருக்கு முதலில் கோடிச் சேலை கொடுத்தேன். தாலி நீக்கப்பெற்றதும் பொன் சரடுடன் கூடிய தாலி, தங்க வளையல்கள் ஆறு (எல்லாம் 15 சவரன் இருக்கும்) இவற்றைத் தன் மகளிடம் தந்து விட்டார்கள்; மகளுக்கும் போவதுதான் சரி என்று அருகிலிருந்தவர்களும் ஆமோதித்தனர். மைத்துனர் வீட்டில் யாரும் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. குளியலுக்கும் உணவிற்கும் நாமக்கல் வந்து விடலாம் என்று புறப்பட ஆயத்தமானோம். சில பெரியோர்கள் தடுத்து நிறுத்தினர். என் மைத்துனரும் 'உண்டபின் போகலாம்' என்று எங்களைக் கேட்டுக் கொண்டார். அதனால் தங்கி விட்டோம்.

உணவிற்குப் பிறகு பிற்பகல் 2 மணிக்குக் கிளம்பி நாமக்கல் வந்தோம் வந்த குதிரை வண்டியிலேயே. அங்கிருந்து எருமைப்பட்டி வந்தோம். என் மைத்துனரின் முதல் மனைவியின் சிறிய தாயார் மகளின் திருமணம் கூடியதால் மேலும் நான்கு நாட்கள் தங்க வேண்டியதாயிற்று. குழந்தை இராமகிருஷ்ணன் முடி இறக்கிய தலையுடன் இருந்தான்; முடியும் நன்கு வளர்ந்து விட்டது. அதனால் எருமைப்பட்டியிலேயே 'கிராப்'' செய்வித்தேன். எனக்கும் உடல்நிலை சரி இல்லை. தொடை எல்லாம் சிறு சிறு சூட்டுக் கொப்புளங்கள். மிகவும் சங்கடத்துடன்தான் தங்கி இருந்தேன். என்ன செய்வது? தொலைவில் அலுவல் பணியில் அமர்ந்திருப்பவரின் மனநிலைவேறு; சிற்றூரில் 'சுக

சீவனம்' செய்துகொண்டிருக்கும்மக்களின் மனநிலை, வேறு முன்னவரின் மனநிலையையும், பொறுப்புகளையும் பின்னவர்களால் புரிந்து கொள்ள முடியாது. எருமைப்பட்டிக்கு வந்ததே பிசகு என்பதை உணரலானேன். என் அன்னை யாருக்கும் கடிதம் எழுதினேன் நான்கு நாள் தாமதித்து வருவதாக; முதல்வருக்கும் விடுப்பை நான்கு நாள் நீட்டிக் கும்படிக் கடிதம் எழுதினேன்.

ஊரக்கரை என்ற ஊரில் திருமணம் நடைபெற்றது. ஆறு ஏழு மைல் மாட்டு வண்டியில் செல்ல வேண்டும். திருமணம் முடிந்ததும் விருந்துண்டு எருமைப்பட்டி திரும்பினோம்—அதே வண்டியில், மறுநாள் காலை சிற்றுண்டியை முடித்துக் கொண்டு நாமக்கல் வந்தோம். அங்கிருந்து திருச்சிக்குப் பேருந்தில் வந்தோம். பகல் 1-30க்கு புறப்படும் இருப்பூர்தி ஏறி மாலை 5-மணிக்கு வீடு வந்து சேர்ந்தோம்.

குமிழி-134

## 27. ஓர் ஏழைக்கு உதவியது

எம்பெருமான் என்னை ஏழைப் பக்கமே வைத்திருக்கின்றான். எனக்கு ஏழைக்கு உதவும் பண்பைத் தந்துள்ளான். 'யார்வைணவர்?' என்ற வினாவுக்கு விடை தருகின்றார் பராசர பட்டர். துன்பத்தால் வருந்துகின்ற ஒருவரைக் காணும்போது எவர் ஒருவர் உண்மையாக "ஐயோ, பாவம்!" என்று இரக்கம் கொள்ளுகின்றாரோ அவரே உண்மையான வைணவர் என்று கூறியுள்ளதை நம்பிள்ளை ஈட்டில், கண்டேன். கிட்டத்தட்ட என் இயல்பு அதற்கு ஒத்துவருவதால் அந்த இயல்பை

என்னிடம் உருவாக்கின அந்த எம்பெருமானைப் போற்றி மகிழ்கின்றேன்.

ஆறுமுகம் பிள்ளையின் மைத்துனன் கணநாதன் என்பவனுக்கு மூன்றாண்டு (மேல் படிவங்கள்) சம்பளம் கட்டி உதவினேன். அவன் 1953இல் பள்ளியிறுதித் தேர்வில் தேறி வேலை இல்லாது இருந்தான். எங்கும் வேலை கிடைக்கவில்லை. இச்சமயம் பயிற்சிக் கல்லூரி அறிவியல் துறையில் ஆய்வகத்தில் உதவியாளாக இருந்த பையன் (பள்ளியிறுதித் தேர்வில் தேறியவன்; தட்டச்சு பழகிக்கொண்டிருந்தவன்) மின்சார வேதியியல் ஆய்வு நிலையத்தில் வேலை கிடைத்து அங்குப் போய்ச் சேர்ந்து விட்டான். பயிற்சிக் கல்லூரியில் மாதச் சம்பளம் ரூ. 28/. ஆய்வு நிலையத்தில் மாதச் சம்பளம் ரூ. 100/-க்கு மேல்; பையனும் சுறுசுறுப்பாகப் பணியாற்றுபவன். அவனது பணியை எவரும் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த இடத்திற்குத் திரை மறைவில் ஒரு பையனுக்கு முயற்சி நடை பெற்றது. இதற்கு முயன்ற பையன் பிராமணச் சிறுவன். எட்டாவது வரைதான் படித்திருந்தான், இருப்பூர்தி நிலையத்தருகிலுள்ள ஒரு சிறிய சிற்றுண்டி விடுதியில் உதவியாளாக இருந்து கொண்டிருந்தான். அச்சிறுவனுடைய தந்தையோ, தாய் மாமனோ இங்கு வேலை காலியிருப்பதை அறிந்து விண்ணப்பம் அனுப்பச் செய்து முதல்வர் பேராசிரியர் எஸ். சீனிவாசனையும் நேரில் பார்த்து வேண்டிக் கொண்டதாகச் செய்தி தெரிந்தது.

முதல்வர் இந்த விண்ணப்பத்தை அறிவியல் பேராசிரியர் அய்யாதுரை ஜேசுதாசனுக்கு அனுப்பி வைத்து, அவரையும் நேரில் கூப்பிட்டு, ''மிஸ்டர் ஜேசுதாசன், மனு உங்கட்கு அனுப்பி வைத்துள்ளேன். ''பள்ளியிறுதித் தேர்வில் தேறினவர்கள் இந்த வேலைக்குத் தேவை இல்லை; அப்படிப் போட்டால் வேறு

வேலை கிடைத்தால் போய்விடுகின்றனர். இந்த வேலைக்கு எட்டாவது படித்தவர்களே போதும். இந்த விண்ணப்பதாரர் எட்டாவதுதான் படித்துள்ளார், இவரை நியமனம் செய்யலாம் என்று பரிந்துரையுங்கள்'' என்று கூறிவிட்டார். ஜேசுதாசன் சங்கடப்பட்டார். ''11-வது படித்தவனுக்கும் 8-வது படித்தவனுக்கும் நிறைந்த வேறுபாடு உண்டு. முன்னவன் போய்விடு கின்றானே என்று தகுதியற்ற பின்னவனைப் போடுவது முறையல்லவே'' என்று கருதினார் ஜேசுதாசன். பொது வாக எல்லா ஆசிரியர்களும் அலுவலக ஊழியர்களும் என் நல்லியல்பைக் கண்டு என்னிடம் உள்ளன்புடன் பழகு வார்கள். அங்ஙனமே ஜேசுதாசன் என்னைக் கலந்து ''என்ன செய்வது என்று தெரியவில்லையே' என்று மயங்கினார். இவர் என்னுடன் கலந்து பேசியதால்தான் வேலை காலியிருப்பதே எனக்குத் தெரிந்தது; திரை மறைவில் நடைபெறுவதையும் அறிந்து கொள்ள முடிந்தது. ''மிஸ்டர் ஜேசுதாசன், நீங்களோ சமயப் பற்று மிக்கவர்கள். முதல்வர் கருத்திற்கிணங்க நடந்து கொள்வதே முறை. எழுதுவதை நான்கு நாள் தள்ளிப் போடுங்கள். அதற்குள் இறைவன் வழிகாட்டுவான்'' என்று சொல்லியனுப்பி விட்டேன்.

பிற்பகல் சுமார் $3\frac{1}{2}$ அல்லது $3\frac{3}{4}$ மணிக்கு வீடு திரும்பும் நிலையிலுள்ளவர்களில் சிலர் என் அறைக்கு வந்து உரை யாடிக்கொண்டிருப்பார்கள். அன்று திரு P.V. சீனிவாசன், திரு எஸ். கிருஷ்ண அய்யங்கார், குமாரி எப். மெய்யப்பா ஆகிய மூவர் என் அறைக்கு வந்து பேசிக் கொண்டிருந் தார்கள். இச்சமயத்தில் ஆறுமுகம் பிள்ளை ஓடி வந்து ''அறிவியல் ஆய்வகத்தில் உதவியாள் வேலை காலி யிருப்பதை இப்போதுதான் அறிந்தேன். நம் கண நாதனுக்கு அந்த வேலை கிடைத்தால் உதவியாக இருக்கும்'' என்றார். உடனே நான், ''ஆறுமுகம், அந்த வேலை கணநாதனுக்குந் கிடைக்காது. யார்யாரோ

முயல்வதாகத் தெரிகின்றது. உன் முயற்சி அதில் வேண்டா என்று சொல்லி, ''ஐந்தரை மணிக்கு என் வீட்டுக்கு வா, ஒரு முக்கியமான வேலை உள்ளது. அஃது உன்னால்தான் முடியும், தவறாமல் வா'' என்று மேலும் கூறினேன்.

மாலை ஆறு மணிக்கு என் வீடு வந்தார் ஆறுமுகம் பிள்ளை. ''உணவு விடுதிப் பையன் முயல்வதற்கு முன்பே முதல்வரைப் பார்த்துக் கேட்டிருந்தால் அவ்வேலை எளி தாகக் கிட்டுவதற்கு வாய்ப்புண்டு முதல்வரும் உனக்காக உதவுவார். நானும் பரிந்துரைப்பேன். இப்போது முயல்வது நம் ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. சா. க. தலையிட்டால் நடை பெறும். நீ முயலும் போது அவர் மனநிலை (Mood) சரியாக இருக்கவேண்டும். சரியில்லாத நிலையில் இருந்து நீ உதவும்படி கேட்டால் ''என்னப்பா, ஆறுமுகம், நின் குடும்பம் முழுவதற்கும் நீ உதவும்படி கேட்கின்றாயா? என்று சீறவும் கூடும். இந்த வேலை காலியிருப்பதே அவருக்குத் தெரியாது. இதனால் அவர் யாருக்கும் பரிந்துரைக்கவில்லை என்பது தெளிவு, இப் போது நீ முயலும்போது மேற்கூறியவாறு சீறிவிட்டு வேறுயாராவது ஒருவருக்குத் தரும்படியும் செய்யலாம்'' என்று கூறி ''அவரை நேராக அணுகாதே'' என்றும் அறிவுரை கூறினேன்.

அடுத்து, ''நடராஜா சினிமா கொட்டகையருகில் முடி அலங்காரம் செய்யும் கடைவைத்திருக்கும் நாவிதரை (பெயர் நினைவில்லை) நீ அறிவாய். உன் வீட்டுக்குப் பக்கத்தில்தானே இருக்கின்றார்? அவர் காங்கிரஸ் தியாகி, சா. க. வுக்கு மிகவும் வேண்டியவர். அவர் மூலம் முயலுக, அவர் போகும்போது நீ கூடப் போகாதே, அவர் தனியாக முயலட்டும்.'' என்று அறிவுரை கூறினேன். மேலும் அவர் முயலும்போது,''பையன் மிகவும் நல்லவன். பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெற்றவன். என் கடையருகில் அவன் இருப்பதால் அவனைப் பற்றி நான்

அறிவேன். இரண்டாம் உலகப் போரின் போது பர்மாவி லிருந்து நடந்தே வந்து சேர்ந்தவன். அப்போது அவனுக்கு ஆறுவயது கூட நிரம்பவில்லை. யாருடனோ நடந்து வந்து சேர்ந்து விட்டான். நகராண்மைக் கழக உயர் நிலைப் பள்ளியில் சேர்ந்து அரைக்கட்டண உதவியால் படித்தான். யாரோ ஒரு கல்லூரி ஆசிரியர் மீதி அரைக்கட்டணம் உதவினார். மாதம் ரூ. 28/- சம்பளம் உள்ள வேலைதான். 'தாங்கள் உதவினால் உங்கட்குப் பெரும் புண்ணியமாக இருக்கும்' என்று சொல்லுமாறு செய்க'' என்றும் அறிவுரை கூறினேன். அந்த ஆசாமியும் மறுநாள் காலை 9-மணிக்குமேல் சா.க.வைப் பார்த்து வேண்டினார்.

மணி பத்தரை. கணேசப் பெருமான் தொலைபேசியை எடுத்து முதல்வரிடம் பேசினார். ''ஐயா, பர்மாவிலிருந்து அகதிபோல் வந்த சிறுவன், பள்ளியிறுதி தேர்வில் வெற்றி பெற்றவனுக்கு, ஆய்வக உதவி ஆள் வேலை தந்து உதவுங்கள். மிகவும் ஏழை. உங்கட்கும் புண்ணியம். பையனை விண்ணப்பத்துடன் உங்களைக் காணுமாறு பணித்திருக்கின்றேன்'' என்று தகவல் தந்தார். உடனே முதல்வர் திரு. ஜேசுதாசனை வரச் செய்து, ''நான் சொன்னவாறு அந்த விண்ணப்பத்தில் எழுதிப் பரிந்துரைக்க வேண்டா. சா. க. தொலைபேசிமூலம் பேசினார்; ஒரு பையனை விண்ணப்பத்துடன் அனுப்பு வதாகச் சொன்னார். அவனைத்தான் நியமிக்க வேண்டும்'' என்று சொல்லிவிட்டார்.

பகல் பன்னிரண்டு மணிக்குக் கணநாதன் கல்லூரிக்கு வந்து சேர்ந்தான் சான்றிதழ்களுடன். நான் விண்ணப்பம் ஒன்று தயார் செய்து ஆறுமுகத்திடம் தந்து தட்டச்சு செய்து வருமாறு ஏவினேன். அவரும் கல்லூரித் தட்டச்சர் H. நாராயனனைக் கேட்டுத் தட்டச்சு செய்து கொண்டு வந்தார். கணநாதனை அதில் கையெழுத்திடச் செய்து பகல் 1½ மணிக்கு முதல்வரைப் பார்க்க ஏற்பாடு

செய்தேன். பையனைப் பார்த்தவுடன் திரு ஜேசுதாசனைக் கூப்பிட்டனுப்பி விண்ணப்பத்தை அவரிடம் தந்து பரிந்துரைக்கச் செய்து அன்று மாலையே ஆணையையும் பிறப்பித்தார். கணநாதனும் மறுநாள் காலையே வந்து பணியை ஒப்புக் கொண்டு விட்டான்.

ஆறுமுகத்தையும் கணநாதனையும் என் அறைக்கு வரச் செய்து, ''கணநாதா, ரூ. 20/= ஐ உன் மாமனிடம் கொடு. வருகிற மாதம் முதல் தேதியன்று தட்டச்சு நிலையத்தில் சேர்ந்து பயிற்சி பெறு. காலை 7-8 மணிக்குப் பயிற்சிக்குப் போவதாக ஏற்பாடு செய்து கொள்க. இதுதான் உனக்குச் சரியான நேரம். ரூ. 8/= ஐ செலவுக்கு வைத்துக் கொள்க'' என்று அறிவுரை கூறிப் பையனை அனுப்பி விட்டேன். தனியே ஆறுமுகத்திடம், ''நாராயணன் பலஇடங்கட்குத் தனியாக முயல்கின்றான். இருப்பூர்தித் துறைக்கு விண்ணப்பங்கள் அனுப்பிக் கொண்டிருக்கின்றான். எப்படியும் அவனுக்குக் கிடைத்து விடும். கணநாதன் தட்டச்சுத் தேர்வில் வெற்றி பெற்றுத் தன்னை தகுதியாக்கிக் கொண்டால் நாராயணன் இடத் திற்குத் தாவலாம்'' என்று சொல்லி விடுத்தேன்.

ஒரே ஆண்டில் இரண்டு தட்டச்சுத் தேர்வுகளிலும் வெற்றி பெற்றான் கணநாதன். இச்சமயத்தில் நாராயண னுக்கும் இருப்பூர்தித்துறையில் வேலை கிடைத்துவிட்டது. விடுதலை கோரி விண்ணப்பமும் வைத்தான். அந்த இடத்தைத் தனக்கு வழங்குமாறு விண்ணப்பம் அனுப்பு மாறு கணநாதனைப் பணித்தேன். அவனும் அவ்வாறே செய்தான். இப்போது முதல்வராகத் திரு ப. துரைக்கண்ணு முதலியார் வந்து சேர்ந்துவிட்டார். இப்போதுள்ள வேலை சற்றுப் பெரியது. மாதச் சம்பளம் ரூ. 100/= ஐத் தாண்டியிருக்கும். இதற்குப் பலர் முயல்வார்கள். சா. க., அறக்கட்டளை மேலாளர், வேறு செட்டியார்கள் —யாரையாவது பரிந்துரைக்கக் கூடும். இதனால்

முயற்சியை வேறு திசையில் திருப்பி விடவேண்டும் என்று என் மனம் எண்ணியது. ஆறுமுகத்திடம் இவற்றை யெல்லாம் கூறி விளக்கினேன். அவரும் இதை ஆமோதித் தார்.

காரைக்குடியில் ஏ.வீ.எம் மெய்யப்பச் செட்டியாரின் மகன் (ஆச்சிக்கு பிறந்தவர்) கல்லுக்கட்டி வடகரையில் ஒரு கடை வைத்திருந்தார். இவரிடம் கணநாதன் நெருங்கிப் பழகி வருவதை நான் அறிந்திருந்தேன். செட்டியார் ஏவும் பணிகளை உவப்புடனும் விருப்புடனும் செய்து வந்தான் கணநாதன். இவர் கண்டனூரில் பெண் எடுத்துத் திருமணம் செய்து கொண்டவர். அதாவது, வள்ளல் அழகப்பர் தன் மகள் உமையாளை கண்டனூரில் தன் சகோதரி மகன் இராமநாதனுக்குத் திருமணம் செய்து கொடுத்திருந்தார். அந்த இராமநாதனின் சகோதரியைத்தான் ஏ.வி.எம். மெய்யப்பச் செட்டி யாரின் மகன் திருமணம் செய்து கொண்டிருந்தார். ஆகவே, இரண்டு குடும்பத்திற்கும் நெருக்கமான உறவு இருந்தது. எனவே, மெய்யப்பரின் மகன் தன் மைத்துனர் இராமநாதனுக்குத் தொலைபேசி மூலம் செய்தி அனுப்பி னால், அவர் தன் மனைவி உமையாள் மூலம் (வள்ளலின் ஒரே மகள்) இதை நிறைவேற்றுவார் என்று நினைத்தேன். ஆறுமுகத்திடம் இதை விளக்கினேன். அவர் என் யோசனையைக் கண்டு வியப்பில் ஆழ்ந்து போனார். கல்லூரிக்குத் தந்த விண்ணப்பத்தின் நகல் ஒன்றை உமையாள் இராமநாதனுக்கு அனுப்பச் செய்து மற்றொன்றை ஏ.வி எம். மகனிடமும் சேர்க்கச் செய்தேன். கணநாதனுக்கு நல்லூழ் இருந்ததனால், உமையாள் இராமநாதன் முதல்வருக்கும் அறக்கட்டளை மேலாளர் T. V. S. மணிக்கும் போன் செய்யவே, காரியம் வெற்றியாயிற்று. என்னைக் கருவியாகக் கொண்டு இறைவன் நடத்திய நாடகம் பயனை விளை

வித்தது. அந்த இறைவனை இன்றளவும் மனமார வாழ்த்தி வணங்குகின்றேன்.

1953-54 இல் கல்லூரிப் பணியில் சேர்ந்த நாள் தொட்டு மிக நன்றாகப் பணியாற்றி நற்பெயர் எடுத்தான் கணநாதன். ஊரிலும் நல்ல பெயர் வாங்கினான். காரைக்குடியில் புதிதாகத் தோற்றுவித்த துளுவ வேளாளர் சங்கத்தின் செயலாளராகவும் பணியாற்றினான். சங்கத்தின் தலைவர் தங்கபஸ்பம் ஆறுமுகம்பிள்ளையின் மகன் திரு R. மாரிமுத்து என்பவர் கணநாதனுக்கு ஆறு ஏழு பிள்ளைகள். ஒரு பெண்ணை சென்னையில் ஒரு நல்ல இடத்தில் வாழ்க்கைப் படுத்தினான். நான்கூட கே. கே. நகரில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன் (மூன்று ஆண்டுகட்கு முன்). கணநாதன் இப்போது இல்லை. 1985-ஆம் ஆண்டின் இறுதியில் குருதிப் புற்று நோயால் தாக்கப் பெற்று, சுமார் 30 ஆண்டுகட்கு மேல் நற்பணியாற்றி, நற்பெயர் எடுத்து, இறைவன் திருவடி நிழலை அடைந்த செய்தியை மே மாதம் நான் புதுச்சேரிக்குச் சென்றிருந்தபோது கேள்வியுற்றேன். காரைக்குடி நண்பர் திரு. பூ. அமிர்தலிங்கத்தின் திருவளர் செல்வன் டாக்டர் அறிவு நம்பிதான் இச் செய்தியைச் சொன்னார், புதுச்சேரிக் கம்பன் கழகச் செயலர் திரு. அ. அருணகிரி இல்லத்தில். காரைக்குடியிலிருந்து தகவல் இல்லை. ஆறுமுகத்திற்கு இரங்கல் தெரிவித்துக் கடிதம் மே மாதம் எழுதியும் இதுகாறும் (செப்டம்பர்-89) மறுமொழி இல்லை.

'இருப்பூர்தி நிலையத்திற்கு அருகிலுள்ள சிற்றுண்டி விடுதியில் பணியாற்றும் பையனுக்குக் கிடைப்பதாக இருந்த வேலை கல்லூரியில் பணியாற்றும் ஆறுமுகம் பிள்ளையின் மைத்துனனுக்குக் கிடைக்குமாறு தாங்கள் முயன்ற முறை சரிதானா?' இப்படி ஓர் அன்பர் வினவுகின்றார். இதற்கு என் மனச்சான்று விடை அளிக்கின்றது.

(1) முதல்வர் பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெற்ற பையனை வேண்டா; எட்டாவது வரை படித்த பையனே போதும் என்று அறிவியல் பேராசிரியரைப் பரிந்துரைக்குமாறு கேட்டது நியாயந்தானா? ஒரு பிராமண ~~ரல்லாத~~ பையன் இப்பதவிக்கு மனுப் போட்டிருந்தால் இப்படிப் பரிந்துரைக்குமாறு கூறுவாரா?—இவற்றிற்கு விடை தேடுங்கள்.

(2) எட்டாவது வரை படித்த பையனாக இராமல் 11-வது தேர்ச்சி பெற்ற ஒரு பிராமணப் பையனாக இருப்பின் அவனை வேண்டா என்று சொல்லி எட்டாவது வரை படித்த பையனைத் தேடுவாரா முதல்வர்?—இதற்கும் விடை தேடுங்கள்.

(3) சிற்றுண்டிசாலைப் பையன் முயலாததற்கு முன்பே கணநாதனுக்காக ஆறுமுகம் முதல்வரிடம் கேட்டிருந்தால் நிச்சயம் கணநாதனுக்கு அந்த வேலை கிட்டும். முதல்வர் மிகவும் நல்லவர். சாதி வேறுபாடு பாராமல் அவனை நியமனம் செய்திருப்பார் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை.

அறிவியல் பேராசிரியர் அய்யாதுரை ஜேசுதாசனே எட்டாவது வரை படித்த பையன் பொருத்தமற்றவன் என்று நினைத்ததால் முதல்வர் பரிந்துரைக்குமாறு கேட்டதால் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திண்டாடிப்போனார். இதனால் அவர் மனம் வருந்தியதை நான் அறிவேன்.

நிற்க, எனக்கு சாதிப்பற்றும் இல்லை, சாதி வெறியும் இல்லை என்பதை என்னுடன் பழகியவர்கள் அனைவரும் நன்கு அறிவர். கணநாதன் என் சாதியைச் சேர்ந்தவனும் அல்லன்.

(1) நான் உதவி செய்த பையன் பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெற்றவன். அகதிபோல் பர்மா

விலிருந்து நடையாக வந்தவன். அவனுக்குத் தாயும் இல்லை. தந்தையும் இல்லை. மாமன் அரவணைப்பில் இருப்பவன்.

(2) கணநாதன் ஆய்வக உதவியாளுக்குரிய தகுதியுள்ளவன் என்பதை என் மனச்சான்று உணர்த்தியது. அறிவியல் பேராசிரியரும் இக்கருத்தினராகவே இருந்தார். இதனால் அவனுக்காக முயன்றது தவறல்ல என்பதை என் மனச்சான்று அரணாக அமைகின்றது.

(3) சற்று முன்னர் ஆறுமுகம் முயன்றிருந்தால் முதல்வர் கணநாதனை நியமனம் செய்வதில் தடையாக இரார் என்பதை நான் நன்கு அறிவேன். சந்தர்ப்பச் சூழ்நிலையாலும், ஏழைப் பையன் என்பதாலும் அவர் மனம் இரங்கி இப்படிச் செயற்பட்டார் என்று கொள்ளலே பொருந்தும். அவர் மேற்கொண்ட நடவடிக்கைக்கு மாசு கற்பிப்பது அநியாயம்.

சா. க.வை நன்கு அறிந்தவனாதலால் நான் அவரைச் சம்பந்தப்படுத்த விரும்பவில்லை. அவர் மதில் மேல் பூனையாகி விட்டால் என்று அஞ்சியதால் வேறு முறையைக் கையாள யோசனை கூறினேன். இதனால் இருப்பூர்தி நிலையச் சிற்றுண்டி விடுதிப் பையனுக்கு நான் மனத்தாலும் தீங்கு செய்ய நினைக்கவில்லை. தகுதி இல்லாதவனுக்குத் தகாத முறையில் கிடைக்கும் படியான வேலை தகுதியுள்ளவனுக்குப் போய்ச் சேர்ந்தது என்பதை இறைவனது திருவுள்ளக் குறிப்பாகக் கொண்டால் என் மீதும் மாசு இல்லை என்பது தெளிவாகும்.

## 28. தினமணித் தொடர்பு

இந்து மதாபிமான சங்கத்துடன் அதிகமான தொடர்பு எனக்கிருந்தது. விழாக்கள் ஏற்பாடுகளில் கூட அதிகமாக ஈடுபட்டிருந்தேன். ஒரு சமயம் என்னை அண்ணாமலை நகருக்கு அனுப்பி டாக்டர் ஏ. சி. செட்டியாரை எப்படியும் அழைத்துக் கொண்டு வர வேண்டும் என்பது ராய.சொ.வின் ஆணை, அங்ஙனமே சென்று அவரை விழாவில் கலந்து கொள்வதற்கு ஒப்புக் கொள்ளுமாறு செய்தேன்; ஒரு வழி பயணப்படியும் தந்து திரும்பினேன். ஒரு சமயம் ஏதோ ஒரு விழாவிற்குத் தினமணி உதவி ஆசிரியர் (சுடர் பொறுப்பிலிருந்தவர்)திரு. வேங்கடாச்சாரி விழாவிற்கு வந்திருந்தார். ராய. சொ. என்னை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள். அவரும் என்னைக் 'கலிங்கத்துப்பரணி' பற்றி ஓர் ஆறு கட்டுரைகள் 'சுடருக்கு' எழுதுமாறு கேட்டுக் கொண்டார். நானும் தென்தமிழ் தெய்வப்பரணி, கடைதிறப்பு, பேய்கள் உலகம், வரலாற்றுக் கருவூலம், கற்பனை ஊற்று, சுவைகளின் களஞ்சியம் என்ற ஆறு தலைப்புக்களில் எழுதித் தந்தேன்; அவை வெளி வந்தன. இவற்றால் நான் தமிழகமெங்கும் அறிமுகமானேன். இதன்பிறகு தினமணிக் கதிருக்கு எழுதுமாறு அழைப்பு வந்தது. பத்துக் கட்டுரை கட்குமேல் எழுதியதாக நினைவு. இவற்றால் என் அறிமுகம் மேலும் அதிகமாயிற்று.

இதே காலத்தில் மதுரையிலிருந்து வெளிவந்த 'தமிழ் நாடு' என்ற நாளேட்டின் 'ஞாயிறு மலருக்கு'ச் சங்க இலக்கியத்தைத் தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்து

வைக்குமாறு அதன் துணை ஆசிரியர் எம்.எஸ்.சண்முகம் எழுதியிருந்தார். சுமார் முப்பது கட்டுரைகட்கு மேல் எழுதியதாக நினைவு. இக்கட்டுரைகளால் நான் தமிழக மெங்கும் 'நாடறிந்த பார்ப்பானானேன்'!

தினமணியில் வெளியான ஆறு கட்டுரைகளையும் மேலும் எழுதிச் சேர்த்த கருணாகரத் தொண்டைமான் குலோத்துங்கன், சயங் கொண்டார் என்ன மூன்று கட்டுரைகளையும் சேர்த்து காரைக்குடி செல்விப் பதிப்பகம் 'கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி' என்ற தலைப்பில் வெளியிட்டது (மார்ச்சு 57). இது எனது இரண்டாவது வெளியீடு.

இந்த நூலுக்கு ராய. சொ. அவர்கள் ஓர் அறிமுகம் தந்து வாழ்த்தினார்கள். அறிமுகத்தில்,

> ''கலிங்கத்துப்பரணி' என்ற அரிய நூலுக்குத் திறவு கோலாக அமைந்திருப்பது 'கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி' என்னும் இந்நூல். இத் திறனாய்வு நூலை எழுதியவர் என் அரிய நண்பரும் நன்கு கற்றவரும் வள்ளல் அழகப்பனாரின் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவருமாகிய அன்பர் ந. சுப்புரெட்டியார் அவர்கள். அன்னார் கலிங்கத்துப் பரணியை நன்கு ஆராய்ந்து ஆங்காங்குள்ள நயங் களையெல்லாம் இந்நூலில் அழகுபட எடுத்துக் காட்டியிருக்கின்றார். கலிங்கத்துப் பரணி கற்பாருக்கு இந்நூல் பேருதவி செய்ய வல்லது.''
>
> ''கடை திறப்பின் உட்பொருள்' என்ற பகுதியில் திரு. ரெட்டியார் காட்டியிருக்கும் கருத்தே கொள்ளத் தக்கது. தமிழ் மக்கள் இந் நூலையும் இதற்கு மூல மாகிய கலிங்கத்துப் பரணி நூலின் சிறந்த பாடல் களையும் படித்து உணர்ந்து இன்புற்று உயரத் தமிழ்த் தாய் அருள்வாளாக. வணக்கம்.''

என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த நூலுக்கு காரைக்குடி இலக்கியச் சுவைஞர் வி. ஆர். எம். செட்டியார் அவர்கள் Appreciation என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஒரு பாராட்டுரை எழுதிச் சிறப்பித்துள்ளார். காரைக்குடி நண்பர்களில் இவரும் ஒரு முக்கியமானவர். டி. கே. சிக்கும் அவருடைய சீடர்களுக்கும் நன்கு அறிமுகமாகி அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்.

இந்தச் சிறிய நூலை கம்பனடிப் பொடி சா. க. அவர்கட்கு,

தீந்தமிழ் அன்னைக்கு இனியநற் புதல்வன்;
செம்மையில் பிறழ்ந்திடா உளத்தன்;
காந்திஎம் பெருமான் நெறிவழி நிற்போன்
கல்சொலும் கதையுணர் அறிஞன்;
சாந்தமார் முப்பால் வாசகம் சுவைப்போன்;
தண்டமிழ்க் கம்பனுக்கு அடியான்;
மாந்தருள் சிறந்தோன் கணேசனாம் எங்கள்
வள்ளலுக் குரியதிந் நூலே.

என்று அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன். அன்றியும் நூல் முகத்திலும் ''திரு, கணேசன் அவர்கள் புலவர்கட்குப் புலவர்; தலைவர்கட்குத் தலைவர்; தொண்டர்கட்குத் தொண்டர். அவர் 'அலாதி' மனிதர். அனைத்தையும் அப்பர் பெருமானுக்கே அர்ப்பணம் செய்து வாழ்வைத் தூய்மையாக்கிக் கொண்டு வாழ்ந்த—பெரிய புராணத் தொண்டர்—அப்பூதியடிகளைப் போலவே, அனைத்தையும் கம்பனுக்கென்றே உரிமையாக்கித் தம் வாழ்வைத் தூய்மையாக்கிக்கொண்டு வாழ்பவர் திரு. கணேசன். கம்பன் காவியத்தைத் துணை கொண்டு பாமர மக்கள் மீதும் இலக்கியவானத்தைக் கவியச் செய்து கொண்டு வருபவர்'' என்று பதிவு செய்துள்ளேன்.

# 29. தமிழ்க்கடல் ராய. சொ.

மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குச் சொக்கலிங்கப் பெருமான் தலைவராக இருந்ததுபோல் காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்திற்கு ராய. சொக்கலிங்கம் தலைவராக இருந்து வந்தார்கள், துணைவியார் சிவப்பேறு அடைந்த பிறகு ராய. சொ, இ. ம. சங்கத்திலேயே நிலையாகத் தங்கியிருந்தார்கள். இந்தக் காலத்தில் அவர் வாழ்க்கையில் நேரிட்ட சில நிகழ்ச்சிகள் இக்குமிழியில் எழுகின்றன.

(1) சங்கத்தின் ஆட்சிக் குழுவில் ராய. சொ. விற்கு 'தமிழ்க்கடல்' என்ற விருது அளிக்க வேண்டும் என ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. அதே சமயத்தில் அவருடைய மணி விழாவையும் கொண்டாடவேண்டும் என்றும் முடிவு செய்தது. பெரிய ஏற்பாடுகள் நடைபெற்றன. மீனாட்சி-சுந்தரேசுவரர் மகளிர் பள்ளியில் இந்த விழாக்கள் நடைபெற்றன. ஒருநாள் அவருடன் உரையாடிக்கொண்டிருந்த பொழுது' தமிழ்க்கடல்' என்ற விருது முதன் முதலாகத் தமிழகத்தில் தமக்குத்தான் வழங்கப்பட்டது என்ற கருத்தைத்தெரிவித்தார். ''இல்லையே. ஏற்கெனவே இந்தவிருது மறைமலையடிகட்கும் வழங்கப்பெற்றுள்ளது'' என்றேன்' ஞானசாகரம் என்ற திங்கள் இதழ் மறைமலையடிகளால் நடத்தப் பெற்று வந்தது- இதுவே பிற்காலத்தில் அடிகளால் பெயர் மாற்றப்பெற்று அறிவுக்கடல் என்ற பெயரில் வெளி வந்தது 'வேதாசலம்' என்ற தம் திருநாமத்தையும் 'மறைமலைஅடிகள்' என்று தமிழாக்கிக் கொண்டார்கள். இதன் பழைய தொகுதிகள் கட்டமைக்கப்பெற்று இ.ம.ச. நூலகத்

தில் இருந்தன. அந்தத் தொகுதியொன்றில் 'செய்திகள்', என்ற தலைப்பில் அடிகளாருக்குத் 'தமிழ்க்கடல்' என்ற விருது வழங்கப்பட்ட செய்தியை எடுத்துக் காட்டினேன்; வியந்து போனார் ராய. சொ. உடனே அவர், ''நீங்கள் ஆய்வுத் துறையில் சிறந்து விளங்குவீர்கள்; ஆண்டவன் அதற்குத் துணை புரிவானாக'' என்று வாழ்த்தினார். 1960-இல் திருப்பதியில் பணியேற்றதற்கும் இவர் வாக்கு ஓரளவு பலித்திருக்க வேண்டும் என்று நம்புகின்றேன்.

(2) ராய. சொ. வேறு சில நண்பர்களுடன் சிவ தீக்கை பெற்றுச் சிவபூசை எடுத்துக் கொண்டார். பழநி ஈசான சிவாச்சாரியார் செய்து வைத்தார். உயிரனைய நன்னெறியினை மேற்கொண்டு ஒழுகி உய்தற்குக் கை கொள்ள வேண்டிய ஒழுங்குகளுள் தலையாயதுசிவ தீக்கை. தீக்கை என்னும் சொல் தீ+கை என்னும் இருசொற்களின் முதனிலைகள் சேர்ந்து தோன்றும் ஒரு சொல். தீ என்பது தீயச் செய்தல். கை,செலுத்துதல். எனவே மலம், மாயை, கன்மங்களின் ஆற்றலைப் பயன் பெறாத வண்ணம் தீய்த்து அன்பர் மனத்தை அருள் நினைவால் செந்நெறிக் கண் செலுத்துவது தீக்கையாகும். ஆளுடைய பிள்ளையார், தம் திருமணத்தில் வந்தாரனைவர்க்கும் திருமுறை வழிச் சிவதீக்கை செய்தருளினதும் அதனால் அவர்கள் சிவனடிகளாகும் சிறப்பு எய்தியதும் 'காதலாகி' (3.49) என்ற சம்பந்தரின் தேவாரத் திருப்பதிகத்தால் உணரப் பெறுபவை.

இத்தீக்கை காண்டல், கருதல், தீண்டல், கட்டுரைத்தல் என நான்கு வகைப்படும். காண்டல்-(நோக்கம்) பார்வை; கருதல்-பாவனை; தீண்டல்-தொடுதல். கட்டுரைத்தல்-உபதேசம். நம்பியாரூரருக்குக் காண்டலும், கருதலும், தீண்டலும் முறையே தடுத்தாட்கொண்டது முதல் தொடர்ந்து நிகழ்ந்துள்ளன. இவை முறையே திருவெண்ணெய் நல்லூர், திருத்துறையூர், திருவதிகை வீரட்டானப் புறம்பணைச் சித்தவடமடம் என்ற திருப்பதி

களில் முறையே நடைபெற்றன. அப்பர் சுவாமி கட்குத் திருவடி சூட்டியருளிய திருநல்லூரிலும், சம்பந்தருக்குத் திருப்பிரமபுரத்தும், மணிவாசகப்பெருமானுக்குத் திருப்பெருந்துறையிலும், கண்ணப்பருக்குத் திருக்காளத்தியிலும் சிவபெருமானே முன்னின்று தீக்கை செய்தருளினார் என்பது வரலாறு.

திருமுறை அன்பும் சிவனெறிப் பண்பும் நல்லொழுக்கமும் வாய்ந்தவராய்க் காலத்தானும் சீலத்தானும் முதியவராய் உள்ள ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் இச்சிவதீக்கை செய்து வைக்கும் தன்மையராவர். பிள்ளையார், நெல்நிறைநாழி, நீர்க்கலயம், திருவிளக்கு ஆகிய நான்கு திருவுருவங்களை முறையே வழிபட்டும் வழிபடச் செய்தும் தீக்கை செய்து வைத்தல் வேண்டும் என்பவை செய்முறையாகும். சிவதீக்கைப் பேருடையாரே சிவலிங்கம் முதலிய திருவுருவங்களைப் பூசையிடத்து அமைத்து வழிபடுவதற்கும் அதனால் பெரும் பயன் எய்துவதற்கும் உரியவராவர். தீக்கை பெற்றது முதல் ராய. சொ. திருநீறணிந்து சிவப்பழம்போல் பொலிவதைக் காணும்போது சிவபெருமானைக் காண்பது போலவே இருக்கும். இவ்விடத்தில் வில்லிபாரதத்திற்கு விளக்கம் நல்கிய ராய. சொ. சொன்ன பாடல் ஒன்று குமிழியிடுகின்றது.

ஆசினான் மறைப்படியும் எண்ணில் கோடி
ஆகமத்தின் படியும்எழுத்து ஐந்தும் கூறிப்
பூசினான் வடிவமெலாம் விபூதி யால்அப்
பூதியினைப் புரிந்தசடைப் புறத்தே சேர்த்தான்
தேசினால்அப்பொருப்பின் சிகர மேவும்
சிவன்இவனே போலும்எனத் தேவ ரெல்லாம்
பேசினார் பெருஞ்சிலைக்கை விசயன் பூண்ட
பெருந்தவத்தின் நிலைசிலர்க்குப் பேசலாமோ...?[1]

1. வி. பா. அருச்சுனன் தவநிலை-37.

என்ற பாசுரத்தில் பார்த்தனின் சிவவேடம் காட்டப் பெறுகின்றது. தவநிலையில் இருக்கும் அருச்சுனன் என் மனத்தின்கண் நிற்கின்றான். பலமுறை ராய. சொ. சிவபூசைசெய்து வந்ததை நேரில் பார்த்து வியந்ததுண்டு.

ஒருமுறை தேவகோட்டை சேவுகன் செட்டியார் என்பவர் இ. ம. சங்கத்தில் இரண்டு மூன்று நாள் தங்கியிருந்தார். இவர் பெரிய செல்வர். ராய. சொ. சிவதீக்கை பெறுவதற்கு முன் வந்திருந்ததாக நினைவு. அவர் கையில் வலம்புரிச் சங்கு ஒன்றிருந்தது. அதன் விலை 7500/- என்றார். கோயில் மாதிரி அமைத்து அதில் இலிங்கத்தை எழுந்தருளச் செய்தார். அதற்குத் திரு-முழுக்கு முதலியவை வலம்புரிச் சங்கு கொண்டு நடைபெற்றது. பூசை தொடங்கும் முன் ஒரு சிறு பாத்திரத்தில் அரிசி, வெல்லம் முதலியவை அளவாகப் போட்டுச் சாராய விளக்கு ஏற்றி வைத்தார். பூசை காரியங்கள் சுமார் $1\frac{1}{2}$ மணி நேரம் நடைபெறும். அதற்குள் திருவமுது தயாராகிவிடும்; அதை வைத்து நைவேத்தியம் செய்தார். சேவுகன் செட்டியார் ஈகைக் குணமுடைய வள்ளல். அவர் இப்போது சிவப்பேறு அடைந்துவிட்டார். அதன் பிறகு ராய. சொ. சிவபூசை சுருக்கமாகச் செய்வதைப் பார்த்திருக்கிறேன். இவர் பூசையில் திருமுறைப்பாடல்கள் அருச்சனையாகப் பயன்படுவதைப் பார்த்து மகிழ்ந்ததுண்டு.

(3) ஒரு சமயம் ராய. சொ. வை மாரடைப்பு நோய் இலேசாகத்தாக்கியது; தப்பித்துக்கொண்டார். இவருடைய நெருங்கிய நண்பர் டாக்டர் வர்க்கீஸ் என்ற பல்மருத்துவர் மிக்க கவலைப்பட்டார். அவர் ஒரு நாள் ராய. சொ. விடம் வந்து சொன்னது: ''ராய. சொ., உங்கள் பற்களையெல்லாம் (சில ஆட்டங் கண்டவை; ஒரு சில விழுந்துவிட்டன) அகற்றி விடவேண்டும். பல் சீழ் நோய்க்காக (Pyorrhoea) ஊசி போட்டுக்கொள்ளவேண்டும். நான் என் செலவில் அழகாகப் பல் கட்டித் தந்துவிடுகின்றேன்.

அதன் பிறகு நான் சொல்லும் உணவை மட்டிலும்தான் சாப்பிடவேண்டும். இப்படிப் பத்தியம் அநுட்டித்தால் 75 அகவைக்கு மேலும் வாழ்வீர்கள்: இதய நோய்க்குரிய மாத்திரைகளைக் காலை ஒன்றும் மாலை ஒன்றுமாக எடுத்துக் கொள்ளலாம்'' என்று.

இவர் இப்படிச் சொன்னது அவரது மணி விழா முடிந்து ஒன்றிரண்டு மாதங்களில். ராய. சொ. கண்டபடி தின்பவரல்லர். பல்வேறு உணவு வகைகளையும் தின்பண்டங்களையும் சுவைத்துச் சுவைத்து சாப்பிடுவார். தேன் குழலை ஜாங்கிரி பதத்தில் எடுத்து அதைச் சாப்பிடு வதில் அதிக ஆசை. இப்பழக்கத்தையெல்லாம் அவரோடு நெருங்கிப் பழகிய டாக்டர் வர்க்கீஸ் நன்கு அறிந்தவராத லால் இவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தார். இவர் செய்த செயல் எனக்கு,

> மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
> ஊறுபா டில்லை உயிர்க்கு.[2]

என்ற திருக்குறளை நினைவு கூரச் செய்கின்றது. எண்ணெயாலான பொருள்களே கூடாது என்று 144 சட்டம் போட்டார். இச்சட்டத்தை நன்கு பின்பற்றிய தால் இதய நோய் தாக்குதலுக்குப் பிறகும் 15 ஆண்டு களுக்கு மேல் வாழ்ந்தார். ராய். சொ. இதன் பிறகுதான் இவர் வெளியூர்களில் அதிகமான இலக்கியக் கூட்டங்களி லும்கலந்து கொண்டு பேசினார். எப்பொழுதும் உற்சாகத் துடன் காணப்பட்டார். 1960-ஆகஸ்டில் நான் திருப் பதிக்குப் போய் விட்டாலும்; 1966-வரை மே முடிய என் குடும்பம் காரைக்குடியில் இருந்தபடியால், விடுமுறைக் காலங்களில் காரைக்குடியில்தான் இருப்பேன்; இவருடன் கலந்து பழகுவேன். 1966-க்குப் பிறகும் கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட வழக்குகள் பொருட்டுக் காரைக்குடி

---

2. குறள்-945 (மருந்து)

வரும் பொழுதெல்லாம் இவரைச் சந்தித்துப் பேசுவதில் தவறுவதில்லை. இந்தக் காலப்பகுதியில் இ.ம. சங்கத்தில் ஆயுள் உறுப்பினரானேன்.

(4) டாக்டர் வர்க்கீஸ் யோசனையைப் பின்பற்றிய தால் தமிழ்கடலுக்கு வயது திரும்பி விட்டது. சிவன் கோயில், பெருமாள் கோயில் சிறப்பு நிகழ்ச்சிகளில் அதிக அக்கறையுடன் ஈடுபட்டார். ஒரு டிசம்பர்-ஜனவரி விடு முறையில் காரைக்குடி சென்றிருந்த பொழுது பெருமாள் கோயிலில் நடைபெற்ற 'சொர்க்கவாசல் திறப்பு' நிகழ்ச்சி யில் கலந்து கொண்டேன். சில தனவைசிய இளைஞர் களின் துணையால் ராய. சொ. வின் ஈடுபாட்டைக் கண் குளிரக் கண்டு மகிழ்ந்தேன். இன்னொரு சமயம் செப்டம்பர் விடுமுறைக்குச் சென்றிருந்தபொழுது நவராத்திரி விழா நடந்து கொண்டிருந்தது. விசயதசமி யன்று மகர்நோன்பு பொட்டலில் (காந்தி சதுக்கம் என்பது புதிய பெயர்) ஐந்து சுவாமிகள் (கோயிலூர், காரைக்குடியில் சிவன் கோயில், பெருமாள் கோயில், கொப்புடையம்மன் கோயில், கிருட்டிணன் கோயில்) பொட்டலில் வந்து அம்புபோடும். விசயதசமி அன்று சற்று மேகம் மூட்டம் காணப்பட்டது, மழை பெய்யும் என்ற அச்சுறுத்தல் காணப்பட்டது. சுவாமிகள் நனையக் கூடாது என்பதற்கு ராய. சொ. தார்பாய்க்காக அலைந்தது இன்றும் (1989 செப்டம்பர்) என் நினைவில் பசுமையாக உள்ளது.

அப்போது நான் ரெங்கூன் ஹாலில் உட்கார்ந்திருந் தேன். ராய. சொ. வும் வேறு இரண்டு இளைஞர்களும் கடைக்குள் நுழைந்து அக்கடை முதலாளி சுப்பிரமணிய முதலியாரிடம் தர்ப்பாயைப்பற்றி விசாரித்தனர். எப் பொழுதும் அரைக்கை கதர் சட்டை, நாலு முழக்கதர் வேட்டியுடன் காணப்படும் ராய. சொ. அன்று வெள்ள பட்டு அணிந்திருந்தார்; வெண்பட்டு ஜிப்பா அவர் திரு

மேனியை அலங்கரித்தது. கழுத்தில் தங்கத்தால் கட்டப் பட்ட சிறிய அக்கமணிமாலை திகழ்ந்தது. என்றுமில்லாத முகப்பொலிவுடனும் கவர்ச்சியுடனும் அன்று காணப் பட்டார். உடனே எனக்கு மதுரைச் சங்கத் தலைவர் சொக்கலிங்கப் பெருமான் நினைவிற்கு வந்தார். அதை வாய்திறந்து சொல்லியே விட்டேன். "இன்று தான் நம் தமிழ்க் கடல் ராய. சொ. மதுரைச் சொக்க லிங்கப் பெருமான் போல் காட்சியளிக்கின்றார்" என்று சொன்னபோது அனைவருமே மகிழ்ந்தனர். ராய. சொ. வின் 'குமிழ்சிரிப்பு' அவர் கொண்ட புதிய கோலத் திருமேனிக்கு மேலும் பொலிவை நல்கியது. எல்லோருமே என்னையும் பாராட்டினர்.

(5) காரைக்குடி அழகப்பரின் அறம் இவரை அழகப்பா கல்லூரியில் தமிழ்த் துறையில் ஓர் ஆய்வுத்துறையும் உண்டாக்கி அதில் மூன்றாண்டுகள் இயக்குநர் பதவியும் தந்தது. அவர் தங்குவதற்கு கல்லூரி வளாகத்திலேயே ஒரு நல்ல வீடும் தந்தது. மூன்றாண்டுகள் ஒரு சமையல் காரனை நியமித்துக் கொண்டு மிகவும் சௌகரியமாக வாழ்ந்து வந்தார். முதுமைக் காலத்தில் ராய. சொ. வுக்குத் தாளாளர் CV.C.T.V. வேங்கடாசலம் செட்டியார் இந்தப் பொறுப்பை நல்கிப் பாராட்டியது பொன் எழுத்துகளால் பொறிக்கப்பெற வேண்டிய தொன்று. இவர் கல்லூரியில் வளாகத்தில் வாழ்ந்து வந்தபோது காலையில் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு இவரைப் பார்க்கச் சென்றிருந்தேன். சிவபூசையில் ஈடு பட்டிருந்ததைக் கண்டு மகிழ்ந்திருந்தேன். இவர் லிங்கத் திற்கு அருச்சனை செய்த மஞ்சள் நிறமுள்ள மலர்களைச் சமையல் ஆள் பொறுக்கிச் சேர்த்து சிறிது எண்ணெய் விட்டுப் பொறித்துச் சிற்றுண்டியோடு பரிமாறினான். இம்மலர் இதய நோயைத் தீர்க்கும் என்று சொன்னார் ராய. சொ. மலரின் பெயர் கூடச் சொன்னார். அதை இப்போது நினைவு கூர முடியவில்லை. இந்தச் சமயத்தில்

இவர் இல்லத்திற்குப் பின்புறம் குடியிருந்த இரா. பதும நாபன் (அழகப்பர் பொறியியற் கல்லூரி முதல்வரின் தனி அலுவலர்) வந்து சேர்ந்தார்; இவர் ராய. சொ வுடன் நெருங்கிப் பழகுபவர்; தமிழ் ஆர்வலர். கவிதை இயற்றும் திறமையுடையவர். இவருடனும் சிறிது நேரம் உரையாடினேன். பின்னர் அடுத்த தெருவில் குடியிருந்த க.தேசிகன்(கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்) என்பாரையும் சந்தித்து உரையாடி விட்டு பதினொரு மணி சுமாருக்கு இல்லம் திரும்பினேன். தேசிகன் வைணவ இலக்கியங்களில் ஆழங்கால் பட்டவர். சிறந்த கவிஞர். நான் காரைக் குடியில் பணியாற்றிய போது நெருங்கிப் பழகியதுண்டு.

(6) 1966—சனவரியில் என் அரிய நண்பர் கி. சீநிவாசவரதன் (திருவேங்கடவன் பல்கலைக்கழகம் கீழ்த்திசை ஆராய்ச்சித் துறையில் பணியாற்றினவர்) அவர்களின் துணை கொண்டு காஞ்சியிலுள்ள பதிநான்கு திவ்விய தேசங்கள், அந்நகரிலிருந்து 7 கல் தொலைவி லுள்ள திருப்புட்குழி, மாமல்லைத் தலசயனம், திருவிட எந்தை, திருநீர்மலை ஆகிய 18 திவ்விய தேசங்களைச் சேவித்தேன். காஞ்சியில் அட்டபுயகரத்து எம் பெருமானைச் சேவித்துக்கொண்டு திருக்கோவிலை விட்டு வெளிவரும் போது ராய. சொ., CV. C T. V. வேங்கடாசலம் செட்டியார் ஆகிய இருவரையும் வேறு ஒன்றிரண்டு நண்பர்களையும் சந்தித்தேன். இருவரும் எல்லா வசதிகளும் கொண்ட ஒரு சிற்றுந்தில் (Van) தமிழ கத்தின் சிவ, திருமால் ஆலயங்களைச் சேவித்து வருவ தாகச் சொன்னார்கள். நாங்கள் சென்றபோது, அட்ட புயகரத்தில் 'பகல்பத்து—இராப்பத்து' உற்சவம் நடை பெற்ற காலமாக இருந்தது. பெரும்பாலான தலங்களைச் சேவித்த பிறகு ராய. சொ. 'திருத்தலப் பயணம்' என்ற தலைப்பில் நூலொன்றை CV. C T. V. வேங்கடாசலம் செட்டியாரின் மணிவிழா மலராக வெளியிட்டுள்ளார். அந்த நூலைப் பாரிநிலையத்தில் எப்போதோ ஒரு முறை

பார்த்ததாக நினைவுண்டு. சுருக்கமாகத் தாங்கள் சேவித்த நாள், இறைவன்—இறைவி பெயர்கள், அத்தலம் இருக்கும் இடம், பதிகத்தின் ஒரு முக்கியமான பாசுரம் இவற்றைக் கொண்டிருந்ததாக நினைவு. 1971—இல் வெளி வந்த 'மலை நாட்டுத் திருப்பதிகள்' என்ற நூலை மட்டிலும் ராய. சொ. அவர்கட்குத் தந்ததாக நினைவு. அதன் பின்னர் வெளி வந்த ஐந்து நூல்களையும் அவர் கட்குத் தரவில்லை. நான் திருப்பதியிலிருந்த பொழுதே ராய. சொ. வும். CV. CT. V. வேங்கடாசலம் செட்டியாரும் திருநாடு அலங்கரித்து விட்டார்கள். இனி அவர்களை வைகுந்தத்திலோ, கைலாயத்திலோ சந்திக்கும் பேறு கிடைக்கும் எனக் கருதுகின்றேன்.

(7) ராய. சொ. 'பெருங்கவிஞர்.' காந்தி பிள்ளைத் தமிழ், காந்தி கலித்துறை அந்தாதிகளையும், காதல் பாட்டு (தொகுப்பு) என்ற கவிதை நூல்களையும் குற்றாலவளம் என்ற உரை நடை நூலையும் (கட்டுரைத் தொகுப்பு) இயற்றியுள்ளார்கள். இந்த நினைவுக் குமிழி வெளிவரும்போது 'காதல் பாட்டு' 'குற்றாலவளம்' என்ற இரண்டு நூல்கள் மட்டிலும் என்னிடம் இருந்தன. காதல் பாட்டு அகப்பொருள் இலக்கியத்தில் பல துறைகளை விளக்குவதாக அமைந்துள்ளது. இதில் தாம் இயற்றிய காந்தி கலித்துறை அந்தாதியிலுள்ள பல பாடல்களையும் சேர்த்துள்ளார். 'பிரிவு ஆற்றாமை'த் துறையில் ஒரு பாடல் :

> பெண்ணரசே! என் பிரிவுக்கு
> இரங்கல் பெருமையல;
> கண்ணொளியே! உயர் காந்தி
> களத்தில் கலந்திடவே
> எண்ணிஉ ளேன்; நான் வரும்வரை
> நீ, நம் இனித்ததமிழ்
> நண்ணும் இலக்கியத் தேன்குடித்து
> ஆறுக நாயகியே!

இதில் காந்தியடிகள் மீது ராய. சொ. கொண்ட பக்தியும், தமிழை ஆராஅமுதம் போல் பருகும் தமிழ்ப் பற்றும், காதல் இலக்கியத் தெளிவும் புலனாகின்றன.

இத்தகைய பெருமகனை நான் திருப்பதிக்கு வரவழைக்க எண்ணி இருந்தேன். கம்பராமாயணக் கருத்தரங்கிற்கு சா. க. மட்டிலும்தான் வந்தார்; ராய. சொ. அப்போது சிவப்பேறு அடைந்து விட்டார். வில்லி பாரத விளக்கத்தில் சில நிகழ்ச்சிகளை அடுத்து வரும் சில குமிழிகளில் வெளிப்படுத்துவேன்.

குமிழி—136

## 30. கன்னன் கண்ட கண்ணன்

இந்து மதாபிமான சங்கத்தில் ராய. சொ. வில்லி பாரதத்தை உருக்கமாகச் சொல்லி வந்தபோது பசுமையாக என் மனத்தில் நிற்கும் ஒரு காட்சியை இக்குமிழியில் வெளியிடுகின்றேன். 17-ஆம் நாள் நடைபெற்ற போரில் 'ஈகையால் எதிர் இலாக் கன்னன்' அருச்சுனன் கணையால் மடியப் போகின்றான். உடல் முழுதும் குருதி பொங்கி வழியும் நிலை. மகுடமும் கவச குண்டலங்களும் உருக்குலைந்த நிலையிலும் விற்குனிப்பும் கடுங்கணை தொடுத்திடும் கணக்கும் அவன் கை மறந்தது இல்லை. ஆதவன் அத்த வெற்பில் சாய்தற்கு இன்னும் இரண்டு விற்கிடை தூரம்தான் உள்ளது. போரை நிறுத்துமாறு பார்த்தனுக்குக்கூறி, பார்த்தசாரதி மெய்த்தவ வேதியன்போல் உருக்கொண்டு வெயிலவன் புதல்வனை அடைகின்றான். ''ஐயா, இத்தரணியில் தளர்ந்தவர்க்கு வேண்டுவன

தருகின்றாய் எனக் கேள்விப் பட்டேன். மேருவில் தவம் புரியும் அடியேன் வறுமையால் பெருந்துயர் உறு கின்றேன். இயைந்தது ஒன்றை இக்கணத்து அளிப்பாய்'' என்று கன்னனை வேண்டுகின்றான் முத்தருக்கெல்லாம் மூலமாய் நிற்கும் முகுந்தன்.

அருக்கன் குமரன் செவியில் அந்தணன் வேண்டுகோள் அமுதுபோல் இனிக்கின்றது. விசயனின் வெங்கணை யால் மெய்தளர்ந்து தேர்மீது விழும் நிலையில், ''நன்று; தரத்தகு பொருள் நீ நவில்க!'' என்று கேட்க, மறைய வனும் ''ஒன்றியபடி நின் புண்ணியம் அனைத்தும் உதவுக!'' என்று வேண்டுகின்றான். சூதன்மா மகனும்.

'ஆவியோ நிலையின் கலங்கியது; யாக்கை
அகத்ததோ? புறத்ததோ? அறியேன்;
பாவியேன் வேண்டும் பொருள்எலாம் நயக்கும்
பக்குவம் தன்னில்வந் திலையால்;
ஓய்விலாது யான்செய் புண்ணியம் அனைத்தும்
உதவினேன்; கொள்க நீ! உனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகர்அலன் என்றால்
புண்ணியன் இதனினும் பெரிதோ?'[1]

என மொழித்து அந்தணனை இருகரத்தால் இறைஞ்சு கின்றான். இக்காட்சியை திருநாவுக்கரசு செட்டியார் இசையுடன் கொண்டு நிறுத்தும்போது கேட்போர் கண்கள் குளமாகின்றன. ராய. சொ. கண்கலங்கிய நிலையில் பாடலை விளக்கும்போது கேட்போர் கண் களினின்றும் நீர்வழியத் தொடங்குகின்றது.

கண்ணனோ சாதாரணக் கண்ணன் அல்லன்; மாயக் கண்ணன். 'முன்னம் ஓர் அவுணன் செங்கை நீர் ஏற்று மூவுலகமும் உடன் கவர்ந்தவன்'. உடனே இறைஞ்சலர்க்கு

1. 17ம் போர்—240

எழிலி (மேகம்) ஏறு அனையான் கன்னனை உவகைக் கருத்தினால் நோக்கி'

'கைப்புனலுடன் தருக!'

என வேண்டுகின்றான். 'தாரை வார்த்துக் கொடுக்கத் தண்ணீர் வேண்டுமே; கன்னன் சுற்றும் முற்றும் நோக்கு கின்றான்; தண்ணீர் இல்லை. பார்த்தன் செலுத்திய அம்பொன்று இதயத்தில் பாய்ந்து நிற்பதைக் காண் கின்றான்; மகிழ்ச்சி பொங்குகின்றது. அந்த அம்பைப் பிடுங்கவே குழாய் நீர் கொட்டுவது போல் குருதி பொங்கி வழிகின்றது. அந்தக் குருதியால் தாரை வார்த்துத் தரு கின்றான்' என்று ராய. சொ. விளக்கும்போது கேட் போர் கண்களிலும் நீர் தாரைதாரையாக வழிந்தோடு கின்றது.

தேர்த்தட்டில் மயங்கும் நிலையில் இருக்கும் கன்னனை நோக்கி, 'வள்ளலே, 'நீ வேண்டிய வரங்கள்' சொல்லுக; உனக்குத் தருதும்!' என்று முனிவன் உரைக்க, ஈத்து வக்கும் இன்பத்தில் திளைக்கும் பகலவன் மைந்தன்,

'அல்லல்வெவ் வினையால் இன்னம்உற் பவம்உண்
டாயினும் ஏழ்எழு பிறப்பும்
'இல்லை' என்று இரப்போர்க்கு இல்லைஎன்று உரையா
இதயம் நீ அளித்தருள்!'[2]

என்று வேண்டுகின்றான்.

இங்கு 'மைத்துனன் உரைத்த வாய்மை கேட்டு' என்று 'மைத்துனன்'[3] என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார் கவிஞர். இதுகாறும் ஒருவருக்கொருவர் பரம விரோத மனப்பான்மையுடன் இருந்த கன்னனும் கண்ணனும் குருதி உறவால் நெருங்குகின்றனர் என்பது இதனால் தெரி

2. 17 - ஆம் போர் — 242
3. ஷை — 243

கின்றது. வேதியனும் கன்னனைக் கைத்தலமலரால் மார்புறப் புல்லிக் கண்மலர்க் கருணைநீரால் நீராட்டு கின்றான்; சொல்கின்றார் கவிஞர்:

'எத்தனை பிறவி எடுக்கினும், அவற்றுள்
ஈகையும் செல்வமும் எய்தி
முத்தியும் பெறுதி முடிவில் என்றுஉரைத்தான்
மூவரும் ஒருவனாம் மூர்த்தி'[4]

என்ற வரமும் அருள்கின்றான்.

வேதியனாக வந்த பரந்தாமனும் அடுத்து மூல உருவைக் காட்டுகின்றான். எப்படி? கடலில் மூழ்கி எழுந்த காளமேகத்தின் நிறத்தையுடைய வடிவுடன் திருவாழி திருச்சங்கு கதை வாள் வில் என்ற பஞ்சாயுதங்களுடன் தோன்றுகின்றான். இதனை வில்லிபுத்தூரார்,

கூற்றுறழ் கராவின் வாயின்நின்று அழைத்த
குஞ்சர ராசன்முன் அன்று
தோற்றிய படியே தோற்றினான் — முடிவும்
தோற்றமும் இலாதபைந் துளவோன்.[5]

என்று காட்டுகின்றார். 'கசேந்திராழ்வானு'க்கு தந்த காட்சியையே இன்று கன்னனுக்கும் நல்குகின்றான் ஆதியும் அந்தமும் இலாத துளவ மணி மார்பன். தேவர்களும் தேவலோக வாசிகளும் தேவேந்திரனும், நான்முகனும், முனிவர் பெருமக்களும் இந்தக் காட்சியைக் கண்டுகளிக் கின்றனர்; கனக நாள்மலர் கொண்டு பணிகின்றனர். கன்னனோ 'போர்முனையில் பார்த்தன் கணையால் உயிர் விடவும், அமல நாரணனைக் காணவும் பேறு பெற்றேன்' என்று கூறி உள்ளம் பூரிக்கின்றான்.

---

4. 17-ஆம் போர்—243

5. ஷை — 244

மேலும் பேசுகின்றான்: 'அருந்தழல் வளர்த்து மாமகங்கள் புரிந்தும், கங்கை முதலிய புனித தீர்த்தலங்களில் நீராடியும், வாயுவை அடக்கிச் செய்யும் யோகத்தில் ஆழ்ந்திருந்தும், தூமலர் தூவிப் பூசை நேர்ந்தும் அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் இருக்கும் உன்னை என் இதயத்துள்ளே நிலைபெற்றிருப்பதைக் கண்டும் போகங்களை எல்லாம் துறந்து அரிய பெரிய தவங்கள் இயற்றியும் பெறுதற்கரிய பெரும் பயனை நின் திருவருளால் அடைய முடிந்தது' என்கின்றான். அடுத்து, அவன் கண்ட காட்சியையும் கூறுகின்றான். வில்லிபுத்தூரார் வாக்கில் இதனைக் காண்போம்.

நீலநெடுங் கிரியும்மழை முகிலும் பவ்வ
நெடுநீரும் காயாவும் நிகர்க்கும் இந்தக்
கோலமும்வெங் கதைவாளும் சங்கு நேமி
கோதண்டம் எனும்படையும் குழையும் காதும்
மாலைநறுந் துழாய்மார்பும் திரண்ட தோளும்
மணிக்கழுத்தும் செவ்விதழும் பாரி சாதக்
காலைமலர் எனமலர்ந்த முகமும் சோதிக்
கதிர்முடியும் இம்மையிலே கண்ணுற் றேனே[6]

இந்தப் பாடலை திருநாவுக்கரசு செட்டியார் உருக்கமாகப் பாடியவுடன் கசேந்திராழ்வான், கருடாழ்வான்மீது பெரிய பிராட்டியார் பூமிப்பிராட்டியாருடன் வரும் பரவாசுதேவனைக் கண்ட காட்சியையே அனைவரும் கண்டது போல் தலைக்குமேல் இரு கரங்களையும் கூப்பி வணங்கத் தலைப்பட்டு விடுகின்றனர்.

ராய. சொ. வின் விளக்கம் : ''திருமாலின் திருமேனி லமலைபோல் காட்சி அளிக்கின்றது; கடல் புகுந்து கருக்கொண்டு மழை பொழியும் காள மேகத்தினை நிகர்த்துக் காணப் பெறுகின்றது; கடல்

6. 17-ஆம் போர் — 247.

வண்ணத்தையும் காயாம் பூ நிறத்தையும் ஒத்துள்ளது. இத் திருமேனியையுடையவன் கௌமோதகி என்னும் கதையையும், நாந்தகம் என்னும் வாளையும், திருவாழி திருச்சங்குகளையும், சார்ங்கம் என்னும் வில்லையும் தாங்கிய வண்ணம் தோற்றம் அளிக்கின்றான். மகரக் குழைகள் காதுகளில் ஆடுகின்றன. திருமார்பில் திருத் துழாய் மாலை புரண்டு திகழ்கின்றது. 'மல்லாண்ட திண்டோளும்' மணிக்கழுத்தும் கொவ்வைச் செவ்வாயும், காலையில் மலர்ந்த பாரிசாதம் போன்ற முகமும், சோதி அலை எறிந்து தள்ளும் திருவபிடேகமும் கூடிய நின்னை இந்தப் பிறப்பில் காணும்பேறுபெற்றேனே என்கின்றான்'' என்று விளக்கும்போது பாட்டின் கருத்தை உடனே புரிந்து கொள்ள முடியாதவர்கள் புரிந்து கொண்டு மகிழ்ந்ததை நேரில் கண்டேன்; களி கொண்டேன். எல்லோருமே கன்னனாகவே மாறி ஒட்ட உணரும் உணர்ச்சியை (Empathetic reaction) பெற்றதைக் காண முடிந்தது.

இந்தக் காட்சியில் திளைத்த கண்ணன் மேலும் பேசுவது கூடியிருந்த அனைவரையும் உணர்ச்சியின் கொடுமுடிக்கு இட்டுச் சென்று விட்டதையும் காண முடிந்தது. மன நிறைவு கொண்ட கன்னனின் பேச்சு இது. இதையும் வில்லிபுத்தூரார் வாக்கிலேயே கண்டு மகிழ்வோம்.

தருமன்மகன் முதலான அரிய காதல்
தம்பியரோ டெதிர்மலைந்து தறுகண் ஆண்மைச்
செறுவில்என துயிர்அனைய தோழற் காகச்
செஞ்சோற்றுக் கடன்கழித்தேன்; தேவர்கோவுக்கு
உரைபெறுநல் கவசமும் குண்டலமும் ஈந்தேன்
உற்றபெரு நல்வினைப்பேறு உனக்கே தந்தேன்!
மருதுஇடைமுன் தவழ்ந்தருளும் செங்கண் மாலே!
மாதவத்தால் ஒருதமியன் வாழ்ந்த வாறே![7]

7. 17—ம் போர் 248

வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன்;
மதிபெற்ற திருவுளத்தால் மதிக்கப் பெற்றேன்;
தேன்பெற்ற துழாய்அலங்கல் களப மார்பும்
திருப்புயமும் தைவந்து தீண்டப் பெற்றேன்;
ஊன் பெற்ற பகழியினால் அழிந்து வீழ்ந்தும்
உணர்வுடன்நின் திருநாமம் உரைக்கப்
பெற்றேன்;
யான்பெற்ற பெருந்தவப்பேறு என்னை அன்றி
இருநிலத்தில் பிறந்தோரில் யார்பெற் றாரே,[8]

இந்தப் பாடல்களைத் திருநாவுக்கரசு செட்டியார் இசையுடன் பாடியதும் கன்னனுடைய பெருமித உணர்வு—மன நிறைவு—தெற்றென உணர்ந்து கொள்ள முடிந்தது.

ராய. சொ. வின் விளக்கம்: ''தருமன் முதல் ஐந்து தம்பியருடன் போர்முகத்தில் சந்தித்து என்னுடைய அஞ்சாத ஆண்மையை நிலைநிறுத்திக் காட்டினேன். மாபாரதப் போரில் என் உயிருக்கு ஈடாக இருந்த துரியோதனாதியர்க்காக என் ஒப்பற்ற உயிரை ஈந்து அவர்களின் செஞ்சோற்றுக் கடனைத் தீர்த்துக் கொண்டேன். இந்திரனுக்கு என் கவசத்தையும் குண்டலத்தையும் ஈந்தேன். (குண்டலம் காதோடு ஒட்டிக் கொண்டு இருக்கும், அதை வாளினால் வெட்டிக் கொடுத்தான்) நான் இதுகாறும் செய்த நல்வினைப் பயனை எல்லாம் உனக்குத் தாரை வார்த்துத் தந்து விட்டேன்'' என்று சொல்லும்போது கண்ணன் சிறுவனாக இருந்தபோது இரட்டை மருத மரங்களிடையே பொத்த உரலுடன் புகுந்து அம்மரங்களை வீழ்த்தி நளகூபர மணிக்ரீவர்களின் சாபம் தீர்த்த நிகழ்ச்சி நினைவிற்கு வருகின்றது. அதை நினைந்து, ''மருதிடை முன் தவழ்ந்தருளும் செங்கண்மாலே!'' என்று விளித்து ''மாதவத்தால் அடியேன் வாழ்ந்த வாழ்க்கையே

8. 17ம் போர்—249

வாழ்க்கை; முழு நிறைவு பெற்ற வாழ்க்கை!'' என்று பெருமித உணர்வுடன் பேசுகின்றான்—என்று கூறி ராய. சொ. விளக்கும்போது கன்னனின் பெருமித உணர்வு வெளிப்படுகின்றது. கண்ணனின் சிறு குறும்பு களையும் நினைக்கச் செய்கின்றது.

''நின் திரிவிக்கிரமாவதார காலத்திலே நின்திருவடி சத்தியலோகத்தையும் தாண்டிச் சென்றது. அதை நான் முகன் தன் கமண்டல நீரால் கழுவி பூசித்தான். (இந்த நீரே கங்கையாகப் பெருகி தேவலோகத்தில் பாய்ந்தது; சகரபுத்திரர்களின் சாபம் நீங்குவதற்குப் பகீரதன் சிவபெருமானை நோக்கித் தவம் இயற்றிப் பூலோகத் திற்குக் கொணர்ந்தான்). இத்தகைய திருவடியை வணங்கும் பேறுகிடைத்தது; இதனால் என் உள்ளமும் தூய்மையாயிற்று. தவிர, திருத்துழாய் மாலை புரளும் நின்திருமார்பையும் திருப்புயத்தையும் தழுவும் பேறும் கிடைத்தது. அர்ச்சுனன் கணையால் உயிர் போகும் நிலையில் வீழ்ந்த போதும் நின் திருநாமத்தை நாவினால் நவிற்றும் சந்தர்ப்பமும் கிடைத்தது. இந்த உலகில் பிறந்த அனைவரிலும் என்னைத் தவிர இந்தப் பேற்றை—கிடைத்தற்கரிய பெரும் பேற்றை—யார் பெற்றார்கள் என்று கூறுகின்றான் கண்ணன்'' என்று விளக்கும்போது எல்லோரும் கன்னன் இருந்த காலத்திற்கே சென்று விட்டோம். கதை கேட்ட அனைவருமே குருட்சேத்திரப் போர்க்களத்தில் இருந்த உணர்வை அடைந்தோம். இந்துமதாபிமான சங்கமண்டபம் குருட்சேத்திர பூமியாக மாறியதையும் உணர முடிந்தது. இப்படி உணரமுடியா தவர்கள் என். டி. இராமாராவ் நடித்த 'கர்ணன்' படக்காட்சியையாவது நினைத்து மகிழலாம். இதில் இராமாராவ் கண்ணனாக நடித்திருப்பது அற்புதம்; மகாஅற்புதம்! சிவாஜிகணேசன் கன்னன் கோலத்தில் வந்த காட்சியும் ராமாராவ் நடிப்பிற்கு நிகராக நின்று திகழ்கின்றது.

# 31. அழுத அன்னையும் ஐவரின் மனக்கலக்கமும்

இந்து மதாபிமான சங்கத்தில் வில்லி பாரத விருந்து நடை பெறும் போது மனம் உருக்கும் இன்னொரு காட்சி மனத்தில் பசுமையாகவே உள்ளது. அஃது இந்தக் குமிழியில் வெளிப்படுகின்றது. இந்தக் காட்சி வில்லி பாரதத்தில் 17-ஆம் போரில் உள்ளதாகும்.

கண்ணனின் 'திருமாலின் தரிசனம்' பெற்று கன்னன் இன்புற்றிருக்கையில் கன்று கொண்டு விள வெறிந்த கண்ணன் கன்னனிடம் தெரிவித்தவை: ''எல்லி மைந்தா, கடவுள் நாதனை உன்னிடம் அனுப்பி நின் கவச குண்டலங்களைப் பெறச் செய்தவனும் நான்; குந்தி தேவியை அனுப்பி அரவவாளியை ஒருதடவைக்கு மேல் பார்த்தன்மீது செலுத்தாதிருக்க நின்னிடம் வரம் பெறச் செய்தவனும் நான்; உன்னுடைய பிறப்பை உனக்கு உணர்வித்தவனும் நான்; தக்கன் மகனான உரகவாளி தனஞ்செயனைச் சதியாமல் விரகு செய்வித்தோனும் நான்; இஃதெல்லாம் நின்மீது நான் கொண்ட கருணையின் பொருட்டேயாகும்'' என்று தெரிவித்து விட்டு மீண்டும் விசயனுக்குத் தேர்வலவன் ஆகின்றான். இப்படி எல்லாம் அறிவித்த கண்ணனைக் கவிஞர்,

> எக்கடலும் எக்கிரியும் எல்லா மண்ணும்
> இமையோரும் மானுடரும் எல்லா மாகி
> மைக்கண்இளங் கோவியர் நுண் துகிலும்
> வரிவளையும் மடநெஞ்சும் வாங்கும் மாலே![1]

1. வி. பா: 17ஆம் போர்—251

என்று நமக்குக் காட்டி இறையநுபவத்தில் ஆழங்கால் படுகின்றார்; நம்மையும் ஆழங்கால் படச் செய்து விடு கின்றார். கண்ணபிரான் தன் அவதார காலத்தில் செய்த சேட்டைகளுள் மைபூசிய கண்ணையுடைய இளங்கோவியர்தம் துகில் வரிவளை, மடநெஞ்சு என் பவற்றை மட்டிலும் களவாடியதை ஈண்டுக் குறிப்பிட்டு வைணவ தத்துவமாகிய சரீர சரீரி பாவனையைத் தெளிய வைக்கின்றார். சித்தாகிய உயிரும் அசித்தாகிய புவனங் களும் எம்பெருமானின் உடலாக இருப்பது என்பதுதான் இத்தத்துவம். இந்தத் தத்துவத்தை ராய. சொ. குறிப் பிடவில்லை. அக்காலத்தில் இத்தத்துவம் எனக்குத் தெரியாது. ராய. சொ. வுக்கும் தத்துவ நோக்கில் அவாவும் அக்கறையும் அதிகம் இல்லை என்பதை அவருடன் மிகவும் நெருங்கிப் பழகியதால் நான் அறிவேன்.

பார்த்தன் தேரை அடைந்ததும் பார்த்தசாரதி 'பகலவன்தன் மதலையை நீ பகலோன் மேல்பால் பவ்வத் தில் படுவதன்முன் படுத்தி' என்று பக்குவமாகக் கூற பார்த்தனும் 'அஞ்சரீகம்' என்ற கணையை கன்னனின் இதயத்தை இலக்காக வைத்து எய்கின்றான். கன்னனும் தேர்த்தட்டின்மீது சாய்ந்து விடுகின்றான். இந்தக் காட்சியை வில்லிபுத்தூராழ்வார்.

கருடனது திருத்தோளில் கண்ட கோலம்
கண்ணினும்நெஞ் சினும்நிற்க கருணை ஆதி
புருடனது திருநாமம் தனது நாவில்
போகாமல் நனிவிளங்க புதைந்து வாளி
வருடம் உடல் குளிப்பிக்க செம்பொன் தேர்மேல்
மன்னர்எலாம் புடைசூழ வையம் காக்கும்
குருடன்மகன் அருகிருந்து சோகம் கூர
குற்றுயிரின் உடன்கிடந்தான் கொடையால்
மிக்கோன்[2]

2. வி. பா: 17 ஆம் போர்— 253

என்று காட்டுவார். இந்தப்பாடலைத் திருநாவுக்கரசு செட்டியார் உள்ளம் உருகப் பாடும்போது கூடியிருந்தோர் அனைவரும் கேதம் விசாரிக்கக் குருட்சேத்திரத்திற்குப் போனதுபோல் உணர்ச்சி வயத்தராய் விட்டதாய்க் கண்டேன்.

இதற்கு ராய, சொ. தரும் விளக்கம் அற்புதமாக இருக்கும். ''பாரதத்தைத் துய்க்கும் நமது மனக்கண் முன்னிலும் கருடனது திருத்தோளில் கண்ட பரந்தாமனின் திருக்கோலம் நிற்கின்றது; நெஞ்சிலும் நிலைக்கின்றது. கன்னனது நாவில் 'ஓம் நமோ நாராயணாய' என்ற ஆதி புருடனது திருநாமம் தாண்டவமாடுகின்றது. இதயத்தில் புகுந்த வாளி குருதியால் அவனது உடலை நீராட்டு கின்றது. தேரைச் சுற்றிலும் மன்னரெல்லாம் குழுமி நிற்கின்றனர், வையம் காக்கும் குருடன் மகன்—துரி யோதனன் — அருகில் இருந்து கொண்டு சோகத்தில் ஆழ்ந்து கிடக்கின்றான். இந்தச் சூழ்நிலையில்தான் தேர்த்தட்டின்மீது அங்கர் கோமான் — கொடையால் சிறப்புற்ற கன்னன் — பாண்டவர்களில் மூத்தவன்—குற்று யிருடன் கிடக்கின்றான்'' இந்நிலையில் அசரீரி, ''கன்னனும் விசயனும் எதிர் நின்று பொருத போரில், பின்னவன் தொடுத்த வாளியால் முன்னவன் வீழ்ந்து விட்டான், இவன் யார்? பாண்டவர் ஐவருக்கும் முற்பிறந் தவன்; குந்தி ஈன்ற கோமகன். அந்திபடுவதற்குமுன் ஆவி உடலினின்று பிரியும்'' என்று அசரீரி எடுத்துரைக்கின்றது.

17-ஆம் நாள் போரில் பார்த்தன் கணையால் பகலவன் மைந்தன் இறந்து படுவான் என்பதை அறிவாள் குந்திதேவி; இந்தச் செய்தியை எதிர்நோக்கிக் கொண்டு தான் இருந்தாள். அசரீரியின் வாக்கு செவியில் பட்டதும், இவள் உளம் உருக, கண்ணீர் சோர, குழல் சரிய, 'கோ, கோ' என்று வந்து, இருகைகளையும் தலையில் புடைத் துக் கொண்டு, தலை நாள் ஈன்ற மகவின்மீது வீழ்ந்து

கதறிக் கதறி அழுகின்றாள். குந்திதேவியின் அழுகையைக் கவிஞர்,

என்றேஎன் தாதையுழைக் கன்னி மாடத்து
எழில்இரவி திருவருளால் ஈன்றேன், ஈன்ற
அன்றேபொற் பெட்டகத்தில் கங்கை ஆற்றில்
ஆம்முறையால் உனைவிடுத்தேன், அருள்இ
லாதேன்;
வென்றேமண் கவர்தருமன் மதலைக்கு ஆவிகேட்டு
மித்திரன்ஆ னதுகேட்டு உன்வீரம்
நன்றேஎன் தவப்பயன்என்று உன்னி வாழ்ந்தேன்;
நாகமும்நீ அரசாள நடக்கின் றாயோ?

ஓர்அஞ்சு பேர்உளரால் அறம்த வாத
உதிட்டிரன்ஆ தியர், உரகக் கொடியோன் ஆதி
ஈர்அஞ்சு பதின்மர்உளர் தம்பி மார்கள்
இங்கிதங்கள் அறிந்துஅடைவே ஏவல் செய்ய;
பார்அஞ்சும் ஒருகுடைக்கீழ் நீயே ஆளும்
பதம்அடைந்தும் விதிவலியால் பயன்பெறாமல்
கார்அஞ்சு கரதலத்தாய்! அந்தோ! அந்தோ!
கடவுளர்தம் மாயையினால் கழிவுற் றாயே![3]

[இங்கிதங்கள்—எண்ணக் குறிப்புகள்]

என்று காட்டுவார். திருநாவுக்கரசு செட்டியார் இப் பாடல்களை கண்களில் நீர்மல்க அழுது கொண்டே இசையுடன் படிக்கும்போது ராய. சொ. உட்பட அனைவர் கண்களிலும் நீர் வடிவதைக் கண்டேன்.

ராய. சொ. வின் விளக்கம்: சோக உணர்ச்சியில் ஆழ்ந்து கிடந்த ராய. சொ. வும் விக்கி விக்கி விளக்கம் தந்ததை நினைவு கூர்கின்றேன். குருநாடன் திருத்தேவி கூறுகின்றாள்; ''எனக்குத் திருமணம்

3. 17-ஆம் போர் — 255, 256

ஆவதற்கு முன் கன்னி மாடத்தில் இருந்தபோது முனிவர் அருளிய ஆறு மந்திரங்களுள் ஆதவனுக்கு உரிய மந்தி ரத்தைச் சோதித்தேன். இரவி தோன்றி அவன் அருளால் நின்னைப் பெற்றேன். மீண்டும் கன்னி நிலையை அடைந் தேன். அவன் அருளால் பெற்ற அன்றே நின்னைப் பொற் பெட்டகத்தில் பாதுகாப்பாக வைத்து மூடி கங்கை ஆற்றில் விடுத்தேன். அருளே இல்லாத இந்தப் பாவியாகிய யான், துரியோதனை நினக்கு உயிர்த்தோழன் ஆனதையும், நின் வீரச்செயல்களையும் கேட்டு 'நன்றே என் தவப்பயன்' என்று நினைந்து உயிர் வாழ்ந்தேன், இப்போது வீட்டு லகத்தை அரசாளச் செல்கின்றாயோ?

"நினக்கு அறத்தில் வழுவாத உதிட்டிரன் முதலிய ஐவரும், உரகக் கொடியோன் முதலிய நூற்றுவரும் தம்பி மார்கள் உளர். அவர்கள் நின் எண்ணக் குறிப்புகளை அறிந்து ஏவல் செய்வார்கள். ஒரு குடைக்கீழ் இந்த உலகத்தை ஆளும் பேறும் கிடைத்தது. ஆனால் நின்விதி வேறோர் முறையில் செயற்பட்டது. மேகமும் நாணும் படியான வள்ளலே! கடவுளர்தம் மாயையினால் எல்லாம் அழிந்து நீயும் பயன் பெறாமல் தள்ளப் பெற்றாய்" என்று புலம்பிய வண்ணம் கன்னன் இருந்த தேர் நோக்கி வரு கின்றாள்.

அமர்க்களத்தில் இருந்த வேந்தர்கள் யாவரும் வியக்கும் படியாக ஏங்கி ஏங்கி கன்னனை அன்போடு எடுத் தணைத்து முலைக்கண் ஊறல் அமுதூட்டுகிறதையும், இறந்த கன்றினை இணைந்து இணைந்து அருகில் நிற்கும் பசுவைப்போல் துன்பப்பட்டாள் குருநாடன் திருத்தேவி குந்திதேவி. அன்னையின் மடியிலும் கரத்திலும் கன்னன் உடல் கிடக்கும் நிலையில் ஆவி பிரிந்து செல்லுகின்றது. துரியோதனன்,

இணையாரும் இலாஅரசே யாரைக் கொண்டு
அரசுஆள இருக்கின் றேனே.[4]

---

4. வி. பா. 17—ம் போர்-260

என்று புலம்புகின்றான். பொழுதும் சாய்ந்து இரவும் வருகின்றது.

தம்மை ஈன்றதாயின் கண்புனல் சொரிய அழுகின்ற குரலைக் கேட்டு உசாவி உண்மை நிலையினை அறிந்து 'உரும் ஏறு உண்ட கூர் எயிற்று நாகம் போல் தம்முனைப் போய்க் குறுகினார்கள்' ஐவரும். ஐவர் அழுகையையும் கவிஞர் அற்புதமாகக் காட்டுகின்றார். பார்த்தன் அழுகையை ஈண்டுக் காட்டுவேன்.

ஊன்தொடுத்த வயவாளி எத்தனை ஆ
யிரம்தொடுத்தேன் உரகத் தால்நீ
தான்தொடுத்த கடுங்கணைக்குத் தம்பினேன்
எனமகிழ்ந்தேன் சஞ்ச ரீகத்
தேன்தொடுத்த மலர்அலங்கல் தினநாதன்
சேயே! நின் திருமார் பத்தில்
யான்தொடுத்த நெடும்பகழி எனைக்கெடுப்பது
அறிந்திலேன் எனசெய் தேனே! [5]

என்று அழுகின்றான் வில்விசயன். சகாதேவன் அழுகை இது:

''ஆடகனைப் புதல்வனைக்கொண்டு அழிப்பித்தாய்;
இலங்கைநகர்க்கு அரசை அன்று,
வீடணனைப் பகையாக்கிக் கிளையுடனே
வீழ்வித்தாய்; வேலை சூழ்ந்த
நாடுஅழியப் புகுந்துஎமக்கு நாயகமாய்
கன்னனையும் நரன்கை அம்பால்
ஈடுஅழியப் பொருவித்தாய்; இமையோர்கள்
வல்லவிரகு யார்வல் லாரே? [6]

பொருள் ஆழம் மிக்க இதனை ராய. சொ. அற்புதமாக விளக்குவார். ''கண்ணா, இரணியனை அவன் மகன்

5. வி. பா 17—ஆம் போர் – 266
6. வி. பா. ஷை. 268

பிரகலாதனைக் கொண்டு அழியச் செய்தாய்; வீடணனைப் பகை ஆக்கி இராவணனைப் பொன்றுவித்தாய், நாடுமுழுதும் அறியுமாறு எமக்குத் தலைவனாகிய கன்னனையும் நரன்கை அம்பால் நாசமாகச் செய்தாய். தேவர்களின் விரகினை யார் அறிய முடியும்'' என்று தமக்கே உரிய அழுத்தமான குரலில் விளக்கம் தருவார். அன்று கூடியிருப்போர் இத்துடன் கலைந்து போவர்.

குமிழி—138

## 32. தருமன் உண்மையில் தருமனே

சேய பங்கயச் சிறுவிரல்
அங்கையில் திரட்டிய நறுவெண்ணெய்
ஆயர் மங்கையர் இட இட,
அமுதுசெய்து ஆடிய திருக்கூத்தும்,
தேய மும்குறு முறுவலும்
புரிந்துபார்த் தருளிய நெடுகண்ணும்
மாய வன்திரு வடிவமும்
அழகும்,என் மனத்தைவிட் டகலாவே[1].

என்று கண்ணனைத் துதித்த வண்ணம் இக்குமிழி வெளி வருகின்றது. இந்து மதாபிமான சங்கத்தில் சனிக்கிழமை தோறும் நடைபெறும் விளக்கத்தில் ஒருநாள் நடைபெற்ற நிகழ்ச்சி இது. இந்தப்பாடலைத் திருநாவுக்கரசு செட்டியார் இசையுடன் படித்ததும், ராய. சொ. உட்பட அனைவரும் கண்ணன் வாழ்ந்த காலத்திற்குச் சென்று

1. வி. பா : நச்சுப்பொய்கை — காப்பு

கண்ணனை நேரில் தரிசித்தது போன்ற ஒருவித மயக்கத்தை அடைகின்றனர்.

ஆரணிய பருவம் — நச்சுப் பொய்கைச் சருக்கத்தில் வரும் நிகழ்ச்சி யொன்றினை விளக்கும் நிலை. வனவாசத்தின்போது ஒரு சமயம் விண்டு சிந்தன் என்ற முனிவர் வாழும் காட்டையடைந்து பாண்டவர்கள் இனிது இருக்கின்றனர். இந்நிலையில் பாண்டவர்களை அழிக்கக் கருதுகின்றான் துரியோதனன். கொலை செய்யும் எண்ணமே அவன் தியானமாகின்றது. காளமாமுனிவனை அழைப்பித்து வேள்வி ஒன்று இயற்றி அதினின்று கிளம்பும் பூதத்தால் பாண்டவர்களை அழிக்கத் திட்டம் போடுகின்றான். முனிவனும் அதற்கு இசைகின்றான்; ஆனால்,

'தொடங்கி யான்புரி தீவினை
என்னையே சுடுவதல்லது, கொற்ற
மடங்கல் போல்வர் தங்கள்மேல்
செல்லுமோ? மாயவன்இருக் கின்றான்'[2]

என்று கருதித்தான் செயலில் இறங்குகின்றான். தான் இறப்பது மெய் என்ற உறுதியும் அவன் மனத்தில் எழுகின்றது.

முனிவனும் மலைச்சாரலில் ஒரு வேள்வி இயற்ற, ஒரு மாபெரும் பூதம் எழுகின்றது. அஃது இளம் பிறை போன்ற கோரைப் பற்களும், கண்களில் தீப்பொறி பறக்கவும் ஒரு கரு நிறக் குன்றுபோல் பொலிந்து எழுந்தது. இதைக் கண்டு முனிவனே அஞ்சி மெய்குலைந்திடுகின்றான்.

'தருமம் தலைகாக்கும்' என்பது உலக வசனம் அன்றோ? அது பொய்யாகுமா? பாண்டவர்களைத் தப்புவிக்க அறக்கடவுள் ஓர் அந்தணச்சிறுவனாக வருகின்றான். ''ஐயன்மீர், அடியேனின் மான் தோலை ஒரு மான்

2. நச்சுப் பொய்கை—10.

கௌவிக் கொண்டு ஓடுகின்றது. அதனை மீட்டுத்தாருங்கள்'' என வேண்டுகின்றான். பாண்டவர்கள் ஐவரும் அதனைத் தொடர்ந்து ஓடுகின்றனர். அந்த மானின் செயலை,

அகப்பட் டதுபோல் முன்நிற்கும்;
அருகுஎய்தலும் கூர்ஆ சுகம்போல்
மிகப்பட்(டு) ஓடும்; தோன்றாமல்
வெளிக்கே ஒளிக்கும்; விளி இணைக்கு
முகப்பட் டிடும்;ஈண்டு ஐவரும்
தம்முரண்தோள் வன்மை தளர்வுஅளவும்
தகைப்பட்டு ஒழிந்தார்அதில் ஆசை
ஒழிந்தார் இந்திர சாலம் எனா.[3]

என்று காட்டுவர் கவிஞர். பின்னர் அஃது இந்திரசாலம் என அயிர்த்து அதனைக் கைவிட்டனர். அந்த மான் கன்று இவரை இளைப்பித்த செயலைச் சொல்லின் 'ஒரு நாவுக்கு அடங்காது; இன்னும் ஆயிரம் உண்டானால் அதற்கும் அடங்காதே!' என்கின்றார்.

''ஐவருக்கும் இக்கானம் தலை தெரியாது; மனக் குழப்பம் அடைந்து குடி நீருக்குத் தவிப்பர்'' என்று கருதி அறக் கடவுள் ஒரு நச்சுப் பொய்கையாயும் அதைச் சூழ நிற்கும் ஓர் ஆலமரமாயும் நிற்கின்றான், 'யான் நீ அவன்' என்று மாறுபாடு கருதாத அறக்கடவுள். தருமனும் தம்பிமாரும் நாவறண்டு நீர்விடாய் தணித்தற்கு நீர் இன்றி அந்த வெப்பம்மிக்க கானகத்தில் தவிக்கின்றனர். தருமன் தாகத்திற்கு நீர் கொணருமாறு பணிக்க, சகாதேவன் அடவிமுழுதும் தேடி எங்கணும் நீர் காணாமல் ஒருகுன்றின் மீது ஏறிச் செல்லும் போது சுனையொன்றைக் காண்கின்றான். வேகமாக ஓடி நீர் பருகுகின்றான்; நீர் வயிற்றை அடையும் முன் அவனதுஆவி பிரிகின்றது. பின்னர் நகுலன், அருச்சுனன், பீமன் இவர்கள்

3. ஷெ - ஷெ — 19.

ஒருவர் பின் ஒருவராகச் சென்று அந்த நச்சுப் பொய்கையின் நீர் பருகி இறந்து படுகின்றனர். இறுதியாகச் சென்ற பீமன் பொய்கையின் நீர் 'ஆலம் போலும்' என்று தெரிந்து கொள்ளுகின்றான். பிணங்களாய்க் கிடந்த தம்பியரை நோக்கிச் சோகத்தால் தளர்வுறுகின்றான். விசயனை நோக்கி இவன் புலம்பும் மொழிகள் கல் நெஞ்சத்தையும் கரைக்கும்.

குசையுடைப் புரவி திண்தேர்க்
குரக்குவெம் பதாகை யானை
அசைவுஇல் பொன்சயிலம் அன்ன
ஆண்தகை மனத்தி னானை
திசைஅனைத் தினும்தன் நாமம்
தீட்டிய சிலையின் வெம்போர்
விசையனை, தன்கண் நீரால்
மெய்குளிப் பாட்டி னானே.[4]

அநுமக் கொடியையுடையவன் அருச்சுனன். பொன் மலைமேல் வீழ்ந்து கிடக்கின்றான். ஆண்மையினால் நிறைந்த மனமுடையவன். இவனுடைய வில்லின் புகழ் எட்டுத் திசைகளிலும் பரவியுள்ளது. இத்திருத் தம்பியின் அருகில் அமர்ந்து தன் கண் நீரால் குளிப்பாட்டிய வண்ணம் புலம்புகின்றான். அடுத்து நகுலனை நோக்கி, ''அந்தோ! என் துணை இழந்தேன்; என் செய்வது இனி நான்!'' என்று சொல்லி அழுகின்றான். 'என் அண்ணனும் அவ்வெய்ய கானில் இறந்து படுவான். நானும் மரித்தால் இச்செய்தியை யார் அவருக்குத் தெரிவிப்பர்? ஒரு வேளை அண்ணன் இங்கு வந்தால் இந்த நச்சு நீரைப் பருகவும் கூடும்' என்று கருதி விவரத்தை மணலில் எழுதி வைத்து விட்டுத் தானும் அந்நீரைப் பருகுகின்றான். இந்த இடத்தில் கவிக் கூற்றாக வரும் பாடல்.

4. ஷை ஷை-28

பொருப்பினும் வலியக் கொற்றப்
புயமுடை பீமன் என்றால்
அருப்புடை அறலின் நெஞ்சம்
அஞ்சுமோ? ஆலம் என்னும்
உருப்பினை அறிந்தும், வாரி
உண்டுதன் உயிரும் வீந்தான்;
நெருப்பினும், சொல்லின் நாவேம்;
நினைப்பினும் நெஞ்சம் வேமால்.[5]

[அருப்பம்—அருமை; அருப்பு என நின்றது; அறல்-நீர்; ஆலம்—விடம்; உருப்பு—வெம்மை]

இந்தப் பாடலில் கவிஞரே துன்பப்படுவதைக் காணலாம் ராய. சொ. இதை விளக்கும் அற்புதத்தை நேரில் கண்ட வர்கள்தாம் நன்கு அறிவர். தண்ணீர் கொணர்வதற்காகப் போன தம்பியர் நால்வரும் திரும்பி வாராதது கண்டு சோகமும் தாகமும் விஞ்ச தருமன் மயங்கி விழுகின்றான் ஐந்து பேருடன் பிறந்த தருமன் தனியனாகின்றான் என கவிஞரும் வருந்துகின்றார் (Poetic sympathy).

இந்நிலையில் ஓமத் தீயில் எழுந்த பூதம் முனிவனை நோக்கி ''பாங்குடன் புரியும் ஏவல் பணித்தருள்'' என்று கேட்கின்றது. ''பூதமே, பாண்டவர்கள் ஐவரும் வதியும் சூழலை அடைந்துஅவர்கள் அனைவரையும்கொன்று வா' என்று கட்டளையிடுகின்றான். பூதமும் ''பாண்டவர்கள் என் கண்ணுக்கு இலக்கு அல்லர் ஆகில், ஐயனே நின்னையே கொல்லுவேன்'' என்று கூறிச் சென்றது பாண்டவர்கள் நிலையை அறிந்த பூதம் முனிவனிடம் திரும்பி வந்து, ''மதி இலாதாய்! மாண்டவர் பின்னும் பின்னும் மாள்வரோ?'' என்று கூறி அவனை மூவிலைச் சூலத்தால் கொன்று விடுகின்றது; இதனைக் கவிஞர்,

5. ஷை ஷை—31

'நீஇதற்கு இலக்கம் ஆகி
நின்றனை!' என்று, கோபத்
தீஎழப் பொடிக்கும் கண்ணும்
சிரிப்பெழும் எயிறும் ஆகி
மூஇலைச் சூலம் தன்னால்
முனிதலை துணிந்து வீழ
ஏவலில் பழுதில் பூதம்
இவனையே எறிந்தது அன்றே![6]

என்று காட்டுவர். இப்பாடலை உணர்ச்சிவசப்பட்டு ராய. சொ. விளக்கும்போது இன்னொரு முறை கேட்க வேண்டும் என்பது போலிருக்கும்.

தம்பியரைத் தேடிய தருமன் அவர்தம் சேவடிச் சுவட்டினை அடையாளமாகக் கொண்டு அவர்கள் மடிந்த இடத்திற்கு வந்து சேர்கின்றான்.

அண்ட கோளகை அனையதுஓர்
ஆதபத் திரத்தால்
மண்ட லங்கள்ஈர் ஒன்பதும்
புரந்திட வல்லான்
சண்ட மாருதி எழுதிய
தாழ்மணல் எழுத்தைக்
கண்டு 'நஞ்சம்,இக் கயத்தறல்
என்பது கண்டான்.'[7]

[கோளகை—வட்டம்; ஆதபத்திரம்—குடை; மாருதி—பீமன்; அறல்—நீர்]

என்று தம்பியர் மாண்ட விவரத்தை அறிகின்றான். தானும் நெஞ்சினை நனைக்கும் கருத்தன் ஆகி அக்கயத்திடைச் சென்று அங்கையால் நீரை அள்ளிப் பருக முயலும் போது அசரீரி,

6. டிை. டிை-44
7. டிை டிை-50

'கருந்த டம்புனல் நஞ்சு;
இதுநுகர்வது கருதேல்'[8]

என்று தடுத்து நிறுத்தி, ''நான் உன்னைக் கேட்கும் வினாக்கட்கு விடையளித்தபின் நீரை நுகரலாம்'' என்று உரைக்கின்றது.

அறக்கடவுள் அருவமாய் உரைத்த சொற்களை உளத்தினில் கொண்டு கையிலிருந்த நீரை வீழ்த்தி 'நீ வினவுக' என்கின்றான். வினாவும் விடையும் வருமாறு :

தருமதேவதை : சொல்லும் நூல்களில் பெரியது எது?
தருமன் : அரிய மெய்ச் சுருதி.
த.தே : இல்லறத்திற்கு உரியது எது?
தரு : யோசனை நிறைந்த இல்லாள்.
த.தே : மல்ல மாலையில் மணம் உளது எது?
தரு : வண் சாதி.
த.தே : நல்ல மாதவம் எது?
தரு : தம் குலம் புரி நடை.
த.தே : முனி குலம் தொழும் கடவுள் யார்?
தரு : மொய்துழாய் முகுந்தன்.
த.தே : நனை மணம் கமழ் குழலினர்க்கு இயற்கை யாது?
தரு : உயர் நாண்.
த.தே : தனம் மிகுந்தவர்க்கு ஏது அரண்?
தரு : தகை பெறு தானம்.
த.தே : இரு செவிக்கு இனியது எது?
தரு : இளங்குதலையர் சொல்.
த.தே : நிலையாக நிற்பது எது?
தரு : நீடு இசை ஒன்றுமே.

8. ஷை ஷை-53

த.தே : கற்பது எது?

தரு : கசடறக் கற்பதே கல்வி.

த.தே : அனைத்தினும் அற்பம் ஆவது எது?

தரு : அயல்கரத்து ஏற்றல்.

இங்ஙனம் அறக்கடவுள் வினாக்கட்கு அற்புதமாக விடை தருகின்றான் தருமன். உடனே அறக்கடவுள் அவன் கண்களுக்கு இலக்கு ஆகி பொன்மலை என்றல் போல் அவனை அடைந்து மெய்தழுவி வெய்யவனிடம் செய்த மாரண வேள்வியாகிய உபாயத்தை விளக்கினன்.

இதுகாறும் தன்னை வினவியவர் அறப் பெருங்கடவுள் என்பதை அறிந்து தாதையின் சேவடி தன் முடி சேர்த்து வணங்கினன். அறக்கடவுள் மிகவும் மகிழ்ந்து 'நின் தம்பியர் இறப்பினை ஒழிப்பதற்கு ஏது உண்டு' என்று கூறி 'நீ விரும்பும் ஒருவனை எழுப்பிக் கொள்ளலாம்' என்று மந்திரம் ஒன்றை இயம்புகின்றான். தருமனும் தாதை கூறிய மறையைக் கொண்டே சகாதேவன் என்ற இளைய தம்பியை எழுப்புகின்றான். இந்த நிகழ்ச்சியில் உள்ளத்தைப்பறிகொடுத்த கவிஞரும் தருமனை "வேதமும் நிகர் இலா விரத வாய்மையான்"[9] என்று போற்று கின்றார். அறக் கடவுள் வாயு புத்திரனாகிய திண்திறல் வீமனையும், வில்வலான் விசயனையும் தவிர்த்து 'சகாதேவனை அழைத்ததன் காரணம் என்ன?' என்று வினவ, விடையாக, "வஞ்சனை இல்லாத குந்திக்கு யான் ஒரு மகன் இருப்பதைப் புரிந்து கொண்டாய்; என் சிற்றன்னை மாத்திரிக்கு ஒரு மகன் வேண்டுமல்லவா? அதனால்தான் சகாதேவனை எழுப்பினேன்." என்கின் றான். அறக் கடவுள் வைத்த சோதனையில் தருமன் தேறி விடுகின்றான்; அகமகிழ்கின்றான். நாமும் 'தருமன் உண்மையில் தருமனே!' என்று உள்ளம் பூரிக்கின்றோம். பின்னர் அறக்கடவுள் மைந்தனுக்கு அமர் வென்றிடுமறை

9—வில்லி—வில்லி.61

களும், வில்லொடு கணைகள் வேல் என்ற படைகளும் யாவும் நல்கி, 'கானில் வாழ் நாள் கழிந்தது; கரந்துறை வாழ்க்கையைத் தொடங்குவீர்' என்று சொல்லி மறைகின்றான். இந்த நாள் நடைபெற்ற நிகழ்ச்சியினை ராய. சொ. விளக்கின பாங்கு அனைவரையும் மெய் சிலிர்க்கவைத்தது; உள்ளமும் பூரிக்கச் செய்தது.

குமிழி—139

## 33. சேயும் தாயும் சந்திப்பு

ராய. சொ. அவர்கள் ஒரு நாள் வில்லிபாரதத்தில் விளக்கின ஒரு நிகழ்ச்சி இந்தக் குமிழியில் வெளிவருகின்றது. பாண்டவர்களின் தூதனாக வந்த கண்ணன் விதுரன் திருமாளிகையில் தங்குகின்றான். தூதுச் செய்தியை உரைத்தபின் அது துரியோதனனிடம் பயன் படாதது கண்டு மீண்டும் விதுரன் திருமாளிகைக்கே திரும்புகின்றான். கண்ணனிடம் தான் தன்வில்லை முறித்த காரணத்தையும் விளக்குகின்றான் விதுரன்.[1] பின்னர் கண்ணன் குந்திதேவியின் திருமாளிகைக்கு வருகின்றான்.

> கன்னனைப் பயந்த காதல்
> கன்னிதன் கோயில் புக்கான்.[2]

என்று இதனைக் காட்டுகின்றார் வில்லிபுத்தூர் ஆழ்வார். குந்திக்குத் திருமணம் ஆகாத நிலையில் இருந்த செய்தி நினைவுக்கு வரவே, கவிஞர் குந்திதேவியை 'காதல் கன்னி' என்கின்றார். கதிரவனைக் காதலித்தவள் அவர் நினைவுக்கு வருகின்றாள்.

1. வில்லிபாரதம்—கிருட்டிணன் தூது-140-142.
2. ஷை. ஷை— 145.

மருகனை எதிர் சென்று வரவேற்கும் குந்தியைக் கவிஞர்,

> வெண்திரை மகர வேலை
> விரிபுனல் முகந்து தோன்றும்
> கொண்டலை மகிழ்ந்து காணும்
> குளிர்பசுந் தோகை போன்றாள்.[3]

கார்முகில் வண்ணனாகிய கண்ணனை 'வெண்திரை மகரவேலை விரிபுனல் முகந்து தோன்றும் கொண்டல்' என்று வருணிக்கும் அழகே அழகு! முகிலைக் கண்டு ஆடுவது மயில். முகில் வண்ணனை வரவேற்கும் குந்தியைக் 'குளிர் பசுந்தோகை' (மயில்) என்று காட்டுவது அற்புதம்; வரவேற்ற தேவி,

> 'யான்உறை இல்லில் வந்தது
> என்னமா தவம்!'[4]

என்று எண்ணுகின்றாள். கவிஞர் தன் வைணவ சம்பிரதாயத்தைக் குந்தியிடம் இருப்பதாகக் காட்டுவது நயமாக உள்ளது. பின்னர் இந்திரன் ஒரு கிழமுனிவன் வடிவங்கொண்டு கன்னனின் கவச குண்டலங்களைப் பெறுவதற்காக வந்தபோது கன்னன்,

> 'என்ன மாதவம் புரிந்தனன், பரிந்துநீ
> ஈண்டுஎழுந் தருளுதற்கு!'[5]

என்று கூறிக் கிழவேதியனை வரவேற்றதிலும் இந்த சம்பிரதாயத்தைக் கவிஞர் வெளியிடுவதைக் கண்டு மகிழலாம், முன்னொரு குமிழியில் கண்ணனை விதுரன் வரவேற்கும் போது இந்தச் சம்பிரதாயம் காட்டப் பெற்றது. இது வைணவர்கள் வாழ்க்கையில் நடைமுறையில் உள்ளது.

---

3. வி. பா : கிருட். தூது—146.
4. ஷை ஷை 147.
5. ஷை. ஷை—237

குந்தியின் திருமாளிகைக்குவந்த கண்ணன் அவளுடைய ஆதிவரலாற்றைச் சுட்டி, கன்னன் அவளுடைய மகன் என்பதை விளக்குகின்றான். கன்னனைப் பாண்டவர்கள் பக்கம் கூட்டுவிக்க வேண்டுமாறும், அவன் மறுத்தால், காண்டவவன தகனத்தின்போது தப்பிப்போன தக்கன் மகனாகிய அசுவசேனன் கன்னனிடம் அரவக்கணையாக இருப்பதை எடுத்துக் காட்டி, கன்னனும் பார்த்தனும் ஒருவரோடு ஒருவர் மலையும் போது மறுகணைதொடுக்கா வண்ணம் ஒரு வரமும், ஏனைய நால்வரைக்கொல்லா வண்ணம் மற்றொரு வரமும் பெற்று வருமாறு ஏவுகின்றான். குருநாடன் திருத்தேவிக்கு இப்போது தருமசங்கடம் (Dilemma) நேரிடுகின்றது. அரவக் கணையை மறுமுறை தொடுக்காது விலக்கினால் புரவித்தேரோன் மகன் படும்; அப்படிச் செய்யாமல் இருந்தால் மகவான் மைந்தன் களத்தில் மடியும் என்று கருதி இரங்கி வீழ்கின்றாள். கண்ணன் ஓர் அரசியல் ஞானி அல்லவா? கூறுகின்றான்.

''பைவரும் தலைகள் ஐந்து
  படைத்தபன் னகமே போல
ஐவரும் படுதல் நன்றோ?
  அங்கர்கோன் படுதல் நன்றோ?[6]

''இதை நன்றாக யோசி. ஐவரில் ஒருவர் ஆவிபோனாலும் ஏனைய நால்வர் உய்யார்'' என்று எடுத்துக் காட்டி 'நைவரும் துயரம் மாறி நடப்பதே நன்மை' என்று அவள் செயற்படவேண்டிய முறையையும் கூறுகின்றான். இவ்வாறு கூறி விதுரன் திருமாளிகைக்குத் திரும்புகின்றான் மாயோன்.

கண்ணன் தூது வந்த சமயத்தில் ஐந்து காரியங்களை முடிக்கின்றான். அவன் எல்லாம் அறிந்தவன் ஆதலால் போர் அவசியம் நடைபெறத்தான் போகின்றது என்பதை

6. வி. பா. கிருட். தூது—159

யும் அறிகின்றான். பாண்டவர்களின் வெற்றிக்கான செயல்களை நிறைவேற்றத் தொடங்குகின்றான்.

1. 'ஈ இருக்கும் இடம் எனினும் இப்புவியியல் யான் அவர்க்கு அரசு இனிக்கொடேன்'[7] என்று துரியோதனன் கூறவே போர் உறுதியாகின்றது: 'வெஞ்சமர் விளைக்கவே கைவழங்குக'[8] என்று கேட்டு விடுகின்றான்.

2. கண்ணனை விருந்தினனாக ஏற்றதைக் கடிந்து துரியோதனன் பேசவே, 'சொல் இரண்டு புகலேன்; இனி சமரில் நின்று வெங்கண தொடேன்' என்று தன் வில்லை முறித்து வீடு திரும்புகின்றான் எண்இலாத தவம் இயற்றிய விதுரன்.

3. இந்திரனை ஏவி கன்னனிடமிருந்து கவச குண்டலங்களைப் பெறச்செய்து விடுகின்றான்.

4. அசுவத்தாமனை சேனாதிபதி ஆக மறுக்குமாறு கேட்டு, வேறோர் விரகினால் துரியோதனன் இவனை ஐயுறுமாறும் செய்து விடுகின்றான்.

5. குந்தியை ஏவி இரண்டு வரங்கள் பெறச் செய்து விடுகின்றான்.

குந்திதேவி கன்னனின் திருமாளிகைக்கு எழுந்தருள் கின்றாள். கன்னன் அவளை அன்புடன் வரவேற்று முறைமையால் ஆசனத்து இருத்தி 'அன்னை வந்தது என் அருந் தவப் பயன்!' என்று கூறி, 'என்னை வந்தவாறு?' என்று வினவ, அவளும், 'ஈன்ற தாய் யான் உனக்கு' என்றுகூறி அவனுக்குத் தன் ஆதி வரலாற்றை விரித்துரைக்கின்றாள். எனினும், அவளுடைய மொழியைத் தேறாமல், 'இது

7. வி.பா: கிருட். தூது—112
8. ஷை ஷை —118

மாயனார் விரகு' என மதித்து ஒரு துகிலைத் தந்து உடுத்துமாறு செய்து தேறுகின்றான். தன் தாய் யார் எனத் தவிக்கும் கன்னனிடம் எத்தனையோ பெண்டிர் வந்து 'தாம் அவன் தாய்' என்று கூறி அத்துகிலை உடுத்த தனால் அவர்களை என்புருவாகச் செய்த துகில் இது. குந்திதேவி உண்மைத் தாய் ஆதலால் அதனை உடுத்து மாற்றம் அடையாமல்இருக்கின்றாள்.கன்னனை மார்புறத் தழுவி அவன் உச்சி மோக்கின்றாள். தான் அவனை வளர்க்கும் பேறு பெறாததற்கு வருந்துகின்றாள்.

பின்னர், 'இளைஞர் ஐவருடன் வந்து நீயேஅரசாள வேண்டும்' என்ற குந்தியின் வேண்டுகோளைக் கவிஞர்:

'வருகஎன் மதலாய்! இளைஞர்ஐ வரும்நின்
மலர்அடி அன்பினால் வணங்கி
உரிமையால் மனம்ஒத்து ஏவலே புரிய
ஒருதனிச் செய்யகோல் ஓச்சி
அரசெலாம் வந்துஉன் கடைத்தலை வணங்க
ஆண்மையும் செல்வமும் விளங்கி
குருகுலா திபர்க்கும் குரிசிலாய் வாழ்வு
கூர்வதே கடன்'எனக் குறித்தாள்[9]

என்று காட்டுவர். இதற்குக் கன்னன் தந்த மறுமொழி யையும்,

பெற்றநீர் மகவு இலாமையோ? அன்றி
பெரும்பழி நாணியோ? விடுத்தீர்;
அற்றைநாள் தொடங்கி என்னைஇன்று அளவும்
ஆர்உயிர்த் துணைஎனக் கருதி
கொற்றமா மகுடம் புனைந்துஅரசு அளித்து
கூடஉண்டு உரிய தம்பியரும்

9. வி. பா. கிருட். தூது—250

சுற்றம்ஆ னவரும் என்அடி வணங்க
தோற்றமும் ஏற்றமும் அளித்தான்[10]

மடந்தை பொன்திரு மேகலை மணிஉகவே
மாசுஅறத் திகழும்ஏ காந்த
இடம்தனில் புரிந்தே நான்அயர்ந்து இருப்ப
'எடுக்கவோ? கோக்கவோ?' என்றான்;
திடம்படுத் திடுவேல் இராசரா சனுக்குச்
செருமுனைச் சென்று,செஞ் சோற்றுக்
கடன்கழிப் பதுவே எனக்குஇனிப் புகழும்
கருமமும் தருமமும்!' என்றான்.[11]

என்று காட்டுவர். இந்தப் பாடல்கட்கு ராய. சொ உருக்க மாக அவருக்கே உரிய முறையில் விளக்கம் தரும்போது கூடியிருப்போரின் கண்கள் குளமாவதையும், சிலரது கண் களில் நீர்தாரை தாரையாக வடிவதையும், வடியும் கண்ணோடு நானும் கண்டு மகிழ்ந்திருக்கின்றேன்.

'மடந்தைபொன்' என்ற பாடலில் வரும் செய்தி; துரியோதனனும் கன்னனும் இணைபிரியாத நண்பர்கள். துரியோதனனின் அந்தப்புரம் வரையிலும் சென்று பழகும் உரிமை பெற்றிருந்தான் கன்னன். ஒருசமயம் துரியோதனன் இல்லாதபோது அவனுடைய அந்தப்புரம் சென்றான் துரியோதனனின் மனைவியுடன்சொக்கட்டான் ஆடிக்கொண்டு இருக்கின்றான். இந்தச்சமயத்தில் வெளியில் சென்றிருந்த துரியோதனன் வரவே, அதனைக் கண்ட அவன் மனைவி எழுந்து ஓடுகின்றாள். ஆனால், கன்னன் அவனைக் காணவில்லை. ஆதலால் ஓடினவளின் சேலை யைப் பற்றி இழுக்க, அவளது மேகலையின் மணிகள் கயிறு அறுந்து தரையில் சிதறுகின்றன. இதனைக் கண்ட துரியோதனன் கன்னனிடம் 'இவற்றை எடுக்கவோ?

---

10. ௸ ௸ —251
11. ௸ ௸—252

கோக்கவோ?' என்கின்றான். இதனால் 'தான் வேறு; அவன் வேறு' என்று வேறுபாடு அற்ற முறையில் பழகும் நட்புக்கு இஃதோர் எடுத்துக்காட்டு. ஆதலால்தான் 'செரு முனையில் செஞ்சோற்றுக் கடன் கழிப்பதுவே தனக்குப் புகழும், கருமமும், தருமமும்' என்று கூறுகின்றான்.

இருவரும் பல விஷயங்களைப் பேசுகின்றனர். பின்னர் அன்னையிடம், 'இப்போது பேசிப் பயன் இல்லை. போர் நடப்பது உறுதியாகிவிட்டது. இந்த நிலையில் நீர் இங்கு வந்தது என் கருதி?கரவாது உண்மையை உரைத்திடுமின்!' என்று வினவுகின்றான். இதைக் கேட்டதும், பிறந்த அன்று பிள்ளையைத் துறந்தபோது நேரிட்ட துக்கத்தைவிட இப்போது அதிக துக்கம் வந்து நெஞ்சை அடைக்கின்றது; இரு கண்களிலும் நீர் தாரைதாரையாகப் பாய அழுகின்றாள். வாயும் குழறுகின்றது. அன்புமிக்க மகனும் அன்னையின் கண்களைத் துடைத்து, அவளைப் பல்வேறு முறையில் தேற்றுகின்றான். பின்னர், ''எல்லாம் வினையினால் வருமேயன்றி முயற்சியினால் வருவது ஒன்றுமில்லை. தாங்கள் வேண்டுவன அனைத்துமே தருவேன். கேளுங்கள்'' என்று கூற, அவளும், இரண்டு வரங்களைத் தருமாறு வேண்டுகின்றாள். இதனைக் கவிஞர்,

'பார்த்தன்வெஞ் சமரில் நின்னுடன் மலைந்தால்
    பகைப்பெரும் பாந்தள்அம் பகழி
கோத்தலும் பிழைத்தால், மறித்தும்,நீ விடுத்துக்
    கோறல்!'என்று ஒருவரம் குறித்தாள்;
'வாய்த்தமற் றவர்கள் இளைஞர்என்று அவரை
    மலையல்!' என்று ஒருவரம் குறித்தாள்;
மூத்தவன். காதல் இளைஞர்தம் பொருட்டால்
    மொழிந்தமை கேட்டுஇவை மொழிவான்[12]

12. ஷை ஷை—255

தெறுகணை ஒன்று தொடுக்கவும், முனைந்து
செருச்செய்வோன் சென்னியோடு இருந்தால்
மறுகணை தொடுப்பது ஆண்மையோ? வலியோ?
மானமோ? மன்னர்க்கு அறமோ?
உறுகணை ஒன்றே பார்த்தன் மேல் தொடுப்பன்
ஒழிந்துளோர் உய்வர்' என்று உரைத்தான்—
தறுகணர் அலர்க்கும் தறுகண் ஆனவர்க்கும்
தண்ணளி நிறைந்தசெங் கண்ணான்[14]

'தறுகணர்...கண்ணான்'—பகைவர் என்றோ, நண்பர் என்றோ தாரதம்மியம் பாராது வரையாது வழங்கும் வள்ளல் என்று பேசி மகிழ்கின்றார் கவிஞர். இங்கு வரையாது வழங்கும் வள்ளலிடம் அறிவு செயற்படாது அன்னை கேட்டவற்றையெல்லாம் வழங்கும் செயலைக் கண்டு வியக்கின்றோம். அமரர்கோன் விஷயத்திலும் இந் நிலைதான் நமக்கு ஏற்பட்டது.

இப்போது கன்னனின் அறிவு செயற்படுகின்றது. தந்த வரங்கள் மாறுபாடான விளைவுகளை உண்டாக்கி விடுமோ என்று அஞ்சுகின்றான். தான் பார்த்தன் கணையால் மாள்வது உறுதி என்பதை ஓர்கின்றான். அன்னையிடம் தனயனும் இரண்டு வரங்களைப் பெறுகின்றான். கவிஞர் இதனைக் கூறுவார்:

பெருவரம் இரண்டும் பெற்றபின், தன்னைப்
பெற்ற தாயினைக் கரம்குவித்து,
'தருவரம் எனக்கும் இரண்டுள; உலகில்
சராசரங் களுக்கெலாம் தாயீர்!
வெருவரும் அமரில் பார்த்தனால் அடியேன்
வீழ்ந்தபோது, அவனிபர் அறிய,
மருவரும் முலைப்பால் எனக்குஅளித்து, உம்தம்
மகன்எனும் வாய்மையும் உரைப்பீர்.'

14. ஷை ஷை—256

உய்வுஅருந் திறல்வெம் போர்முடிப்பு அளவும்
உமக்குநான் மகன்எனும் தன்மை
ஐவரும் அறியா வண்ணம்நீர் காப்பீர்;
அல்லது, அங்குஅவர் சிறிதுஅறியின்,
மைவரும் கடற்பார் அனைத்தையும் எனக்கே
வழங்குவர்; வழங்கினால், யான்என்
கைவரும் துணைவன் தனக்குஅலால் வழங்கேன்;
கடைப்பிடி, கருமம்ஈது' என்றான்.[15]

என்பதாக. வரங்களின் 'பண்டமாற்று' சரியாய்ப் போயிற்று; தராசுத் தட்டுகள் சமநிலையில் நிற்கின்றன. இந்தப் பாடல்களைத் திருநாவுக்கரசு செட்டியார் படிக்கும் போதும் ராய. சொ. அவர்கள் விளக்கும்போதும் கேட்டிருந்தவர்கள் அனைவரும் உணர்ச்சிப் பெருக்கால் தம்மை மறந்த நிலை எய்தினர்; கன்னனின் திருமாளிகை சங்கத்திற்கே வந்தது போன்ற மயக்கம்.

குருநாடன் தேவி இந்த இரண்டு வரங்களையும் ஈந்து, மகனை நோக்கி, 'இனி வன்துயர்கள் மேன்மேலும் வளராதிருக்குமாக; யான் தளர்ச்சியடையாவண்ணம் உயிர் உனக்குமுன் பெயர்வதாகுக' என்று சொல்லி கண்கள் நீர் சொரிய இணைந்து, நைந்து அழுது அழுது இரங்குகின்றாள் தன் அருமை மகனைத் தழுவி, அவனை அகத்தே நிறுத்தித் தான் யாதவன் இருக்கும் இடம் ஏகுகின்றாள்.

15. வி. பா: கிருட். தூது—257, 258

## 34. நோயால் தாக்குண்டது

1955-56 இல் என நினைக்கின்றேன். எனக்குச் சிறிது சிறிதாகப் பசி குறைந்து கொண்டே வந்தது. ஓர் இட்டலிகூட செரிமானம் ஆகாத நிலைக்கு வந்தது; பால், போன்வைட்டா, ஹார்லிக்ஸ், வலிமை தரும் மருந்து—இவற்றைக் கொண்டே ஆறு திங்கள் கழிந்தன. இந்த நிலையில்தான் செட்டிகுளம் (பெரம்பலூருக்கு அருகிலுள்ளது) முருகனுக்குப் பிரார்த்தனைசெலுத்துவதற்காகச் சென்று வந்தேன், இதை ஒரு குமிழியில் விளக்குவேன். கல்லூரித் தலைமை எழுத்தர்-திருபழ. நாச்சியப்பன் ஆயுள் காப்பு நிறுவனத்தின் (Oriental Insurance Company) ஏஜண்டாகவும் பணிபுரிந்து வந்தார். இச் சமயம் நானே அவரிடம் சென்று ரூ 2000/-க்கு காப்புறுதியாளராகச் சேர்ந்தேன். அதற்கு என் உடல் நிலையைக் குறித்து மருத்துவர் ஒருவர் சான்றிதழ் வழங்க வேண்டும். அந்த நிறுவனத்திற்காகச் சான்றிதழ் வழங்கும் பொறுப்பாளராக இருந்தார் புதுநகர் (New Town) என்ற பகுதியில் குடியிருந்த டாக்டர் சுப்பிரமணிய அய்யர் என்ற மருத்துவர். பழ. நாச்சியப்பன் அவரிடம் என்னை இட்டுச் சென்றார். நான் அவரிடம் என் உடல் நிலையை விளக்கி பசி வருவதற்கு மருந்து சொல்லுமாறு கேட்டேன். அவரும் உடலை நன்கு சோதித்து 'பெரிபெரி' என்ற நோயால் பீடிக்கப் பெற்றிருப்பதாகவும், இஃது உயிருக்கு ஆபத்து இல்லையாயினும், உடலில் தளர்ச்சி இருக்கும் என்றும் கூறினார். மருந்து எழுதித் தருமாறு கேட்டேன். அவர் மருந்து ஒன்றும் தேவை இல்லை என்றும், புழுங்கல்

அரிசித் தவிட்டை உணவுடன் சேர்த்து ஓர் ஆண்டுக்கு உண்டால் உடல் சரிப்பட்டு விடும் என்றும் கூறினார். இந்த நோய் நரம்புபற்றியதாதலால் மெதுவாகத்தான் குணப்படும் என்றும் சொன்னார்.

புழுங்கல் அரிசித் தவிட்டுக்கு எங்குப் போவது? அத்துடன் நெய் சேர்த்து உண்ண வேண்டும் என்றும் கூறிய தால், செயலாற்ற முடியாத நிலை. கைக்குத்தல் அரிசியும் கிடைக்காது. எங்கும் அரிசி ஆலைகள் இருக்கும் காலத்தில் கைக்குத்தல் அரிசிக்கு எங்குப் போவது? நெல்லைக் கை எந்திரத்தில் சுற்றித் தயாரிக்கப் பெறும் அரிசியைப் பயன் படுத்தி இருக்கலாம். அஃது என் நினைவிற்கு வரவில்லை. சைதையில் ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரி உணவு விடுதியில் (1940-41) சுமார் பத்து மாதக் காலத்தில் இந்த அரிசிச் சோறுதான் வழக்கமாக உண்டேன். திருப்பராய்த்துறை விவேகானந்தர் மாணவர் விடுதியில் இந்த அரிசிதான் பயன்படுத்தப் பெறுகின்றது என்பதும் தெரியும். ஓர் எந்திரத்தை வாங்கி நாமே தயாரித்துக் கொள்ளலாம். இந்தப் போக்கில் என் மனம் செயற்படவில்லை. உறுதி யாக இருந்த உடம்பு பஞ்சு போல்—மெல்லியலார் உடம்பு போல்—ஆகிவிட்டது. மிதிவண்டியில் கல்லூரிக்குப் போவது சிரமப் பட்டது. சில நாட்கள் குதிரை வண்டியிலும் சில நாட்கள் சிறிது தொலைவு பேருந்திலும், சிறிது தொலைவு நடந்தும் சென்று வரும் நிலை ஏற்பட்டது. என் இல்லத் திற்கும் கல்லூரிக்கும் சுமார் 3 கி.மீ. தொலைவு இருக்கும்.

இந்த நிலையில் என் மைத்துனரும் அவருடைய அருமை மாமனாரும் சோதிடர்களைக் கொண்டு என் மனைவிக்குக் குழந்தையே இருக்காது என்றும், எனக்கு 38 வயது தான் ஆயுள் என்றும் சொல்லி வந்தது நினை விற்கு வந்தது. என் மனைவிக்குக் குழந்தை இராது என்று சோதிடர் சொன்ன—இல்லை, சொல்லும்படி செய்த—

வாக்கு பலிக்கவில்லை. இறையருளால் 1949-இல் இராமலிங்கமும் (துறையூர்), 1953-இல் இராமகிருஷ்ண னும் (காரைக்குடி) பிறந்ததால் இந்த வாக்கு பொய்த்துப் போயிற்று. எனக்கு அற்ப ஆயுள் என்று சொன்ன வாக்கு சிறிது அச்சத்தை விளைவித்தது. மனம் குழம்பிய நிலையும் ஏற்பட்டது. எப்பொழுது இறப்பு நேரிடும் என்பதை யாராலும் கணித்துச் சொல்ல முடியாது என்பதை இலக்கியங்களில் படித்திருக்கின்றேன். மறக்கள வேள்வி செய்து வந்த செங்குட்டுவனை அறக்கள வேள்வி செய்ய ஆற்றுப்படுத்தும் மாடலனின்,

'வானவர் போற்றும் வழிநினக்கு அளிக்கும்
நான்மறை மருங்கின் வேள்விப் பார்ப்பான்
அருமறை மருங்கின் அரசர்க்கு ஓங்கிய
பெருநல் வேள்வி நீசெயல் வேண்டும்;
'நாளைச் செய்குவம் அறம்' எனின் இன்றே
கேள்வி நல்உயிர் நீங்கினும் நீங்கும்.
இதுஎன வரைந்து வாழுநாள் உணர்ந்தோர்
முதுநீர் உலகில் முழுவதும் இல்லை'[1]

என்ற கூற்றில் இந்த உண்மையைக் காணலாம். வள்ளுவப் பெருந்தகையும்,

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.[2]

என்ற குறளிலும் இக்கருத்து வேறொரு விதமாகக் கூறப் பெற்றிருத்தலைக் காணலாம். சமண முனிவரும்,

புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை—இன்இனியே
நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேள் அலற
சென்றான் எனப்படு லால்[3].

1. சிலம்பு—நடுகல்காதை வரி 175—182
2. குறள்—335 (நிலையாமை-5)
3. நாலடி—29 (யாக்கை நிலையாமை-9)

(இன்னினியே—இப்பொழுதே, இப்பொழுதே; சென் றான்—இறந்தான்; கேள்—சுற்றத்தார்)

என்று நிலையாமையை உணர்த்தி விரைந்து அறம் செய்யுமாறு அறிவுரை கூறுவதிலும் இக்கருத்து வேறு வகையாக நிழலிடுவதைக் காணலாம்.

என்னதான் நூலறிவு மிகுந்தாலும் நுண்ணறிவு செய்ப்பட்டாலும் உயிர் மனிதனுக்கு வெல்லம் போன்றது. மானிட சட்டை இருக்கும் வரையிலும் 'மெய்யுணர்தல்' என்ற கருத்து நூறு சதவிகிதம் நம்மிடம் தோன்றி நடை முறைக்கு வராது. சென்னையில் ஒரு கோடீஸ்வரன் (மகப்பேறு இல்லாதவர்) தன் கணக்கப் பிள்ளையுடன் நஞ்சுண்டு இறந்தார் என்றால் அவர் யாக்கை நிலை யாமையை உணர்ந்துதான் உயிரைப் போக்கிக் கொண் டார் என்று சொல்ல முடியாது. ஏதோ ஒருசூழ்நிலையைத் தாங்க முடியாது, திண்ணிய மனம் இல்லாது, தம் வாழ் நாளை முடித்துக் கொண்டனர் என்றுதான் கருத வேண்டும். எத்தனையோ தொழுநோயாளர்கள், கால் விரல்கள் வீழ்ந்த பிறகும் முகம் சகிக்க முடியாத விகார நிலையை அடைந்த பிறகும் இருப்பூர்த்தி பாதையில் வீழ்ந்து மாய்த்துக் கொள்ளாமல் பிச்சை எடுத்துப் பிழைக் கின்றனர் என்றால், அவர்கள் தம் உயிரை வெல்லம்போல் மதிக்கின்றனர் என்று தானே பொருள்? இன்னும் படித்த வர்கள், ஆய்வாளர்கள் இவர்களும் தற்கொலை வழியில் செல்லுவதைச் செய்தித்தாள்கள் வழி அறிகின்றோம்.

இப்போது கூட, என் எழுபத்து நான்காவது அகவை யில், மரணத்திற்கு அஞ்சவில்லை. ஆனால் நூறு வயது வரை வாழவேண்டும் என்ற ஆசை இருந்து கொண்டுதான் உள்ளது. 100 நூல்கட்குமேல் எழுதி இலக்கியத் தொண்டு சமயத் தொண்டு ஆற்றவேண்டும் என்பதுதான் என் "பேராசை'. பாரதியார் கேட்கவில்லையா?

எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி!
மனத்திற் சலனம் இல்லாமல்,
மதியில் இருளே தோன்றாமல்,
நினைக்கும் பொழுது நின்மவுன,
நிலைவந் திடவே நீ செயல்வேண்டும்,
கனக்கும் செல்வம், நூறுவயது
இவையும் தரநீ கடவாயே[4]

என்ற பாடலில். இதைப் பின்பற்றியே, பிறிதோர் இடத்தில்,

மேன்மைப் படுவாய் மனமே!கேள்
விண்ணின் இடிமுன் விழுந்தாலும்
பான்மை தவறி நடுங்காதே
பயத்தால் ஏதும் பயனில்லை;
யாமுன் உரைத்தேன் கோடிமுறை,
இன்னும் கோடி முறைசொல்வேன்,
ஆன்மா வான கணபதியின்
அருளுண்டு அச்சம் இல்லையே.[5]

என்ற பாடலில் துணிவு வந்து விடுகின்றது. 'யாம் இருக்க பயமேன்?' என்று கணபதியின் இளவல் முருகனும் கை கொடுத்துதவத் தயாராக இருக்கின்றான்.

சுப்பிரமணியம் விடுத்த கரடியால் அவர்தம் முதல் வாக்கு எங்கட்கு ஏற்பட்ட மக்கட்பேற்றால் நீங்கிவிட்டாலும், அவரது இரண்டாம் வாக்கு அன்று திகிலை ஊட்டத் தான் செய்தது. என் அறியாமை அகலவில்லை. இடையில் இறக்கும்படி நேர்ந்தாலும், இறுதிவரை உடலைப்போற்ற வேண்டுமல்லவா? அக்காலத்தில் புதுக்கோட்டையில் இராமச்சந்திரன்பிள்ளை என்பவர் மருத்துவத் துறையில்

4. பா.க : தோ.பா.விநா. நான்மணி. மாலை-7
5. ௸.௸.௸-23.

சிறந்த மருத்துவர் என்று நாடறிந்த புகழுடன் விளங்கினார். ஏற்கெனவே நான் அவருக்கு அறிமுக மானவன். உடலைச் சோதனை செய்துதக்க மருந்துண்ண வேண்டும் என்ற ஆவலால் உந்தப்பெற்றுப் புதுக்கோட்டை சென்று உடலைப் பரிசோதனைக்குட்படுத்தினேன். எல்லாவித சோதனைகளும் மேற்கொள்ளப் பெற்றன. X-ray Screening கூட செய்தார். எல்லாம் முடிந்தபின் முடிவு "உங்கட்கு நோய் ஒன்றும் இல்லை" என்பது. காரைக்குடி மருத்துவர் 'பெரிபெரி' நோய் என்று முடிவுக்கு வந்தார்; இவர் 'ஒன்றுமே இல்லை' என்கின்றார். நான் டாக்டரிடம், "ஐயா, எனக்கு ஆறு மாதமாகப் பசி இல்லை; ஓர் இட்டலி கூட செரிமானம் ஆவதில்லை. பால், ஹார்லிக்ஸ், போர்ன்வைட்டாவில் தான் வாழ்கின்றேன். மதிய உணவில் 'ரசம்சாதம்' கூட ஏறவில்லையே. ஒன்றுமில்லாமல் நான் எதற்கு வந்தேன்? என் கஷ்டம் எனக்குத் தெரிகின்றது; டாக்டருக்குத் தெரியவில்லை." என்று வருந்தினேன். பிறகு அவரிடம் "உங்கள் கருவிகள், முதலியவற்றால் கண்டறிய முடிய வில்லை என்றாலும், உங்கள் மூளையைப் பயன்படுத்திச் சிந்தித்து உதவுங்கள்; வழிகாணுங்கள்" என்றேன். "எல்லாம் பார்த்தாய் விட்டது; ஒன்றும் புலனாக வில்லையே!" என்றார். சென்னை வந்திருந்தால் படாடோபமான சூழ்நிலையில் ஆயிரத்திற்கு மேல் செலவாகியிருக்கும். தவறான வழியில் சிகிச்சை நடந்து கொண்டிருக்கும். "எண்ணெய் செலவழிகிறதுதான் மிச்சம்; பிள்ளை பிழைத்த பாடில்லை" என்ற கதை யாகத்தான் முடிந்திருக்கும். இறையருள் என்னைச் சென்னைக்கு அனுப்பாமல் காத்தது.

"நான் டாக்டரிடம், "ஐயா, நான் ஒன்று சொல்லட்டுமா? தவறாக எடுத்துக் கொண்டு கோபித்துக் கொள்ள மாட்டீர்களே!" என்றேன். அவரும், "துணிவாகச் சொல்லுங்கள்; ஒன்றையும் மறைக்காதீர்

கள்.'' என்றார். நானும் ''பசி இல்லை என்பதால் கல்லீரல் சரியாகச் செயற்படவில்லை என்பது பொருள். அடியேன் எடித் ஸ்ப்ரௌல் எழுதியுள்ள The Science Book of Human Body என்ற நூலை மொழி பெயர்த்தேன். இதற்கு முன்னரே உடலைப் பற்றி ஓரளவு தெரியும்; இந்த மொழி பெயர்ப்புப் பணியினால் இன்னும் சற்றுத் தெளிவு ஏற்பட்டுள்ளது. கல்லீரல் சாரத்துடன் (Liver extract) விட்டமின் பி. கலந்த பகுதிகள் (Vitamin B-Complex) அடங்கிய திரவத்தையும் கலந்து ஊசி மூலம் குத்திப் பார்க்கலாமா?'' என்று சொன்னேன். அவரும் ''பேஷாகப் போட்டுப் பார்க்கலாம். அவை வேதியியல் மருந்து அல்ல! சத்து மருந்துகள். தவறான விளைவுகளை உண்டாக்கா. போட்டுக் கொள்ளுங்கள்'' என்று கூறினார். 10 முறை குத்திப் புகுத்தும் அளவுக்கு மருந்து எழுதி வாங்கிக் கொண்டு காரைக்குடி திரும்பினேன். ''விளைவுகளைப் பற்றி ஒரு வாரத்தில் கடிதம் எழுதுங்கள்'' என்று கூறி விடை கொடுத்தனுப்பினார்.

அன்று மாலையே புதுக்கோட்டையிலிருந்து புறப் பட்டுக் காரைக்குடி வந்து சேர்ந்தேன். அப்போது மாலை மணி 6.30. நேராக மருந்துக் கடை சென்று பத்து ஊசி களுக்குரிய மருந்துகளை வாங்கிக் கொண்டு V.S. மணி என்ற ஓமியோபதி டாக்டரிடம் சென்று விவரங்களை எடுத்துரைத்து ஒரு நாள் விட்டு ஒருநாளாக 10 ஊசிகள் போட வேண்டினேன். இவர் நகராண்மைக் கழகம் மூலம் தேர்ந்தெடுக்கப் பெற்று சென்னைப் பல்கலைக் கழகப் பேரவையின் (Senate) உறுப்பினரானவர். நாங்கள் இருவரும் பேரவைக் கூட்டத்திற்குச் சேர்ந்து தான் போவோம்; சேர்ந்தே திரும்புவோம். தவிர, டாக்டர் பொது நலத்தொண்டு மனப்பான்மையுடன் திகழ்ந்தவராதலால் முன்னரே நட்புக் கொண்டிருந்தேன். இவருடைய துணைவியார் தானு அம்மாள் நகராண்மைக்

கழக உயர் நிலைப்பள்ளியில் தமிழாசிரியர்; அடிக்கடிக் கூட்டங்களில் பேசுபவர் இதனாலும் டாக்டர் உறவு நெருக்கமாயிற்று. இருவருமே நாகர் கோவிலைச் சேர்ந்தவர்கள். டாக்டர் காங்கிரஸ்காரர். 'வலி இல்லாமல் ஊசி போடுபவர்' என்ற பெயரும் வாங்கியிருந்தார் பொது மக்களிடம்.

மாலை 7.மணி ஓர் ஊசி போட்டுக் கொண்டு வீடு திரும்பினேன். ஏதோ சிறிதளவு உணவு கொண்டேன்; பால்பருகி நன்றாகத் தூங்கினேன். காலையில் எழுந்ததும் வழக்கத்திற்கு மாறாக பசி தோன்றியது. காலைக் கடன்களையும் நீராட்டத்தையும் முடித்துக்கொண்டு சிற்றுண்டி கொண்டேன். முதல் நாள் ஓர் இட்டலி இறங்காத நிலையிலிருந்தேன். அன்று ஐந்து இட்டலி அருந்த முடிந்தது. பகலுணவின்போதும் பசி இருந்தது. நன்றாக உணவு கொண்டேன். பத்து ஊசிகளும் போட்ட பிறகு உடல் நிலையில் பெரிய மாற்றம் கண்டேன். ஆறு திங்கள் உணவு செல்லாத நிலையிலிருந்து விடுபட்டேன். பஞ்சுபோல் இருந்த உடல் மீண்டும் கெட்டியாயிற்று. இப்போது எண்ணுகின்றேன் 'மருத்துவனாக நின்று என் மூளையைச் செயற்படச் செய்தவன் அந்தர்யாமியாக என் இதய கமலத்தில் வீற்றிருக்கும் எம்பெருமான் ஏழுமலையான்' என்பதாக.

சுப்பிரமணியம் சோதிடர்களைச் சொல்ல வைத்த வாக்குகள் இரண்டும் பொய்த்தன. 38 வயதில் விண்ணாடு புகுவேன் என்ற வாக்கு பொய்த்து மேலும் 36 ஆண்டுகள் (1989) வாழ்ந்திருக்கின்றேன். என்னுடைய பிராரர்த்த கருமம் (நுகர்வினை) தீரும் அளவும் இவ்வுலகில் வாழ்வேன் என்ற உண்மை இப்போது தெளிவாகின்றது. அதன் அளவு அந்த ஆண்டவனே அறிவான். ஆனால் நம்போலியர் அதனைக் கணக்கிட்டு அறிந்து கொள்ள இயலாது.

'இதுஎன வரைந்து வாழுநாள் உணர்ந்தோர்
முதுநீர் உலகில் முழுவதும் இல்லை.'

இந்த உலகில் வாழும் அளவும் பிறருக்குப் பயன்படும் வழியில் நாளைக் கழிக்க வேண்டும் என்பது என் விழைவு. இதை ஆண்டவன் முற்றுவிக்க வேண்டும் என்பது என் பிரார்த்தனை.

குமிழி—142

## 35. பன்மொழிப் புலவர் தெ. பொ. மீ

**1957**-ஆம் ஆண்டு என்பதாக நினைவு. திரு. அலெக்ஸாண்டர் ஞானமுத்து அழகப்பா கல்லூரியின் முதல்வராகப் பணியேற்ற ஆண்டு. அப்போது சென்னை மாநிலக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர் பன்மொழிப் புலவர் தெ. பொ. மீ. அவர்கள். ஒரு ஆகஸ்டு திங்களில் இவை அழகப்பா கல்லூரி மாணவர் யூனியன் தொடக்க விழாவுக்கு அழைத்திருந்தார். தெ. பொ. மீ. விளையாட்டரங்கில் உள்ள விருந்தினர் அறையில் தங்கியிருந்தார். எனக்கு இவரை என் கல்லூரி யிலும் வரவழைத்துப் பேச வைக்க வேண்டும் என்பது ஆசை. இதை முதல்வர் முதலியாரிடம் தெரிவித்தேன். தெ. பொ. மீ. முதலியாருக்கு மிகவும் வேண்டியவராத லால் அவரை அழைக்குமாறு வேண்டினேன். அவர் சொன் னார்: ''ரெட்டியார், தெ. பொ. மீ. எனக்கு வேண்டி யவர் என்பது உண்மையே. நான் சென்று அழைத்தால் அலெக்ஸாண்டர் ஞானமுத்து 'நம் கல்லூரிக்கு வந்த விருந்தினரை பயிற்சிக் கல்லூரிக்கு அழைப்பதா?'' என்று கோபங் கொள்வார். வேண்டுமானால் நீங்கள் சென்று

அழையுங்கள்'' என்று கூறிவிட்டார். இப்படித்தான் முதலியார் ஒரு சிறு நிகழ்ச்சிக்கும் துணிவு இல்லாமல் துவண்டு போவார்.

அன்று காலை ஒன்பதரை மணிக்கே கல்லூரிக்கு வந்து விட்டேன். நேராகத் தெ, பொ. மீ. தங்கியிருக்கும் இடம் சென்று அவரை வருமாறு அழைத்தேன்; அவரும் வந்து பேசுவதற்கு இசைந்தார். உடனே சுற்றறிக்கை அனுப்பப் பெற்றது. கூட்டம் பதினொரு மணிக்குத் தொடங்கி 12-30க்கு முடிந்தது. பொதுவாகத் தமிழைப் பற்றிப் பல செய்திகளைப் பேசினார். அப்போது I A S தேர்வு விடைத்தாள்களை மதிப்பிடும் பணியை ஏற்றுக் கொண் டிருந்தார் போலும். அதில் ஒரு வினா நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் பற்றி சிறு குறிப்பு எழுதுமாறு கேட்கப் பற்றிருந்தது போலும். அதற்கு விடையளித்த ஒருவர் இரண்டு பக்கங்கள் எழுதியிருந்தாராம். அதில் ஆழ்வார் பெயரையும் குறிப்பிடாமல், பிரபந்தத்தின் பெயரையும் காட்டாமல், அந்நூல் எது பற்றி நுவல்கிறது என்றும் சொல்லாமல் வெறும் சொற்களைக்கொண்டே வாக்கியங்களாக இரண்டு பக்கங்கள் நிரப்பியிருந்தார் என்று குறிப்பீட்டது இன்றும் (அக்டோபர்—1989) என் நினைவில் பசுமையாக உள்ளது.

பிற்பகல் இரண்டு மணிக்கு தெ. பொ. மீ. யிடம் உரையாடி வரலாம் என்று விளையாட்டரங்கு அறைக்குச் சென்றிருந்தேன். அப்போது 'தமிழ் பயிற்றும் முறை' (அக்-1957) என்னும் நூலில் ஒரு படி எடுத்துச் சென்று அவருக்கு அன்பளிப்பாகத் தந்தேன். அது பெரிதானது; தமிழ் பயிற்றும் முறைகளை விரிவாக விளக்குவது. அச் சமயத்தில் கலைக் கல்லூரியிலிருந்து நான்கைந்து தமிழ்ப் பேராசிரியர்களும் வந்திருந்தனர். அவர்களுள் ஒருவர் என் அரிய நண்பர் க. தேசிகன். தேசிகன் என்னிடம் மிகவும்

நெருங்கிப் பழகுபவர்; அன்பாகப் பேசுவார். அவர் என் நூலை முன்னரே பார்த்திருந்தார்; இப்போதும் பார்த்தார். அவர் என்னை நோக்கிக் (கிண்டலாக?) கேட்டார். ''எப்பொழுது மீண்டும் யானை குட்டி போடுகிறது?'' என்று. இதன் பொருள் ''எப்பொழுது பெரிய நூல் வெளிவரப் போகின்றது?'' என்பது இதன் தொனிப் பொருள். அதற்கு நான் 'பன்றிகள் ஒரு சமயம் பல குட்டிகள் போடும். குஞ்சரம் அடிக்கடி போடாது; எப்பொழுதாவது ஒன்று போடும்'' என்று சொன்னேன். என் மதிநுட்பமான விடையைக் கண்டு அருகிலிருந்த து. மா. பரிமணம், உ. பால சுப்பிரமணியம், வ. சுப. மாணிக்கம் முதலிய தமிழ்ப் பேராசிரியர்கள் 'நன்று, நன்று' என்று கூறி நகைத்தனர்.

இப்போது தெ. பொ. மீ. சொன்னார். ''ரெட்டியார் எப்போதும் இப்படித்தான். அவசரமாகப் பெரிய நூலை எழுதுவார். பதிப்பிக்கிறதற்கு ஆள் இருக்கின்றது என்று உடனேயும் வெளியிட்டு விடுவார்'' என்று கூற, அருகிலிருந்த ஓரிருவர் நகைத்தனர்; மற்றவர்கள் வாளா இருந்தனர். இதிலிருந்து வாளா இருந்தவர்கள் என் பணியைப் பாராட்டினர் என்றும், நகைத்தவர்கள் சிறிது பொறாமைப்பட்டனர் என்றும் புரிந்து கொண்டேன். நானும் ஓரளவு உள நூல்களைப் படித்தவன்; வாழ்க்கையிலும் பலரையும் கூர்ந்து நோக்கியவன். ''இரண்டு வரிகளுக்கிடையிலும் படித்து உண்மை காணல்'' (Reading between the lines) என்ற ஆங்கிலப் பழமொழியும் என் நினைவிற்கு வந்தது.

நான் தெ. பொ. மீ. அவர்களைக் கேட்டேன்; ''நூல் எழுதி வெளியிடுவதில் உங்கள் அறிவுரைதான் என்ன?'' என்று, அவர் சொன்னார்: ''நூலை எழுதி முடிக்க வேண்டும். பிறகு அந் நூலின் கைப்படியைக் கட்டி வைத்து

விடவேண்டும் ஓராண்டு கழித்து அதை மீளவும் நோக்குதல் வேண்டும்; திருத்தங்கள் தோன்றும். திருத் தங்கள் போட்டு மீண்டும் கட்டி வைத்து விடவேண்டும். அடுத்த ஆண்டு கைப்படியை எடுத்து மீண்டும் படித்துப் பார்த்துத் தோன்றுங் திருத்தங்களைச்செய்தல் வேண்டும்; கட்டி வைத்து விடல் வேண்டும். இப்படியே சில ஆண்டுகள் செய்த பின்னர் நூல் செம்மையாக அமையும். பிறகுதான் வெளியிட வேண்டும்'' என்பதாக.

என் மனத்திற்கு இந்த அறவுரை கவைக்குதவாதது என்று பட்டது. இந்த அறவுரையைக் கைக்கொண்டால் எந்த நூலும் வெளி வர முடியாது; எப்பொழுது பார்த் தாலும் ஏதாவது திருத்தங்கள் தோன்றிக்கொண்டுதான் இருக்கும். காரணம், நாமும் கற்றலால் மேலும் நம் அறிவு வளர்கின்றது. ஆண்டுகள் செல்லச் செல்ல நம் அநுபவமும் மிகுகின்றது. திருத்தங்கள் தோன்றத்தான் செய்யும். இதனால் திருத்தங்கள் நடைபெற்ற வண்ணம் இருக்குமேயன்றி நூல் வெளிவருவதற்கே வாய்ப்பே இராது போய்விடும். இந்த உண்மை ஓர் அசமர்ந்தத் திற்கும் புலப்படாமல் போகாது என்று நினைத்தேன்; அதைச் சொல்லியும் விட்டேன். ''ஐயா, நீங்கள் சொல்லும் அறவுரையை மேற்கொண்டால் நூல்கள் வெளி வருவதற்கேற்கே வாய்ப்பே இராது. நான் ஆறாண்டுகள் பல நூல்களைப் படித்ததாலும், மாணாக்கர்கட்குக் கற்பித்த அநுபவத்தாலும் உருவாகி வெளிவந்தது இந்த நூல். இதில் பெரும்பாலும் ஆங்கிலத்தில் படித்த கருத்துகள் தமிழ் வடிவம் பெற்றன; இடைஇடையே என் அநுபவமும் கலந்து வருகின்றன.''

''மேல் நாட்டில் கீட்ஸ், ஷெல்லி, வொர்ட்ஸ் வொர்த்த என்ற கவிஞர்கள் இளமையிலும் எழுதி னார்கள். வளரும் நிலையில் படிப்படியாகப் பல நூல் களைஎழுதியும் வெளியிட்டனர். அவர்கள் எழுதிய

கவிதைகளைத் திறனாய்ந்தவர்கள் வயதிற்கேற்றவாறு வருணனை, உணர்ச்சி, கருத்து முதிர்ச்சி, வாழ்க்கையில் அவர்கள் கண்ட நோக்கம் முதலியவை வேறுபடுகின்றன என்று கூறியுள்ளனர். ஆனால் நான் எழுதிய இந்த நூலில் உள்ள கருத்துகள் பெரும்பாலும் முறைவல்லார்கள் எழுதியுள்ள ஆங்கில நூல்கள், கல்வி உளவியலிலுள்ள கருத்துகள், என் அநுபவங்கள் இவைதாம் தமிழ் வடிவம் பெறுகின்றன. இவற்றை யார் எழுதினாலும் எழுது வோரின் அநுபவங்களைத் தவிர ஏனைய கருத்துகள் மாறாதவை. பழக்கத்திற்குத் தகுந்தாற்போல் நடையிலும் வேறுபாடுகள் தென்படும். தாங்கள் சொல்வதைப் பின்பற்றினால் நூல் எப்பொழுதுமே வெளிவராது. இப்போது வெளி வந்திருக்கும் நூல் இரண்டாவது பதிப்பின்போது கலைச் சொற்களிலும் மொழி நடையிலும் மாறலாம். தாங்கள் கூறும் யோசனை கவைக்குதவாதது, நடைமுறைக்கு ஒவ்வாதது. இப்படிச் சொல்வதற்கு மன்னித்தருள்க'' என்று சொல்லி முடித்தேன்.

உடனே தெ.பொ.மீ. ''ரெட்டியார் உங்கள் துணிவையும் சிந்தனையையும் போற்றுகின்றேன். பெரும் பாலும் என்னைத் தமிழாசிரியர்களும் பிற ஆசிரியர்களும் சூழ்ந்து கொண்டே இருப்பர். நான் எதைச் சொன்னாலும் 'ஆமாம் சாமி' போடுவர். நானும் நான் சொல்வதெல்லாம் சரி என்றே நினைத்துக் கொள்வேன். சுற்றியிருப்பவர்களின் 'முகஸ்துதி' ஒருவித போதையைத் தந்து என் சுய சிந்தனையைக் கெடுத்துவிடும். இம் முறையையே இன்றும் உங்களிடம் கூறினேன். நீங்கள் சுய சிந்தனையுடன் உங்கள் கண்ணையும் திறந்து காட்டினீர்கள்; என் சிந்தனையையும் கிளறி விட்டீர்கள்: நீங்கள் சொல்வதுதான் சரி; அப்படியே செய்யுங்கள். நிறைய எழுதுங்கள். உங்கள் எழுத்துப் பணி சிறக்கட்டும்'' என்று வாழ்த்தினார். கூடியிருந்த ஆசிரியர்கள் வாய் மூடி மௌனிகளாயினர்.

4-30 மணி கலைக் கல்லூரியில் மாணவர் யூனியன் தொடக்க விழா தொடங்கியது. நானும் அதில் பார்வை யாளராகப் பங்கு கொண்டேன். கூட்டம் முடிந்ததும் மாலை ஆறு மணிக்கு இல்லம் திரும்பினேன்.

குமிழி-143

## 36. மீனாட்சி சுந்தரம்

நான் திருப்பதியில் பணியாற்றியபொழுது ஒரு சமயம் நெல்லூருக்கு ஓர் அலுவல் நிமித்தம் சென்றிருந் தேன். அது ஜூன் மாதம். ஆந்திர நண்பர் ஒரு பழ விருந்து அளித்தார். விருந்து சாமானியமானதுதான். இரண்டு வெள்ளித் தட்டுகளில் தட்டுக்கொன்றாக இரண்டு மாங்கனிகளைச் சமையற்காரன் ஒருவன் எங்கள் முன்னிலையில் உள்ள சிறு நாற்காலிகளின் (Tea poys) மீது வைத்தான். நண்பர் பழத்தைக் கையில் எடுத்துக் கொண்டு அதைத் தடவிக் கொண்டே நெருடினார். என்னை நோக்கித் 'தினண்டி' (தின்னுங்கள்) என்றார். நான் கத்தி ஒன்று வரும் என்று எதிர்பார்த்துக் கொண் டிருந்தேன். அதற்குள் நண்பர் பழத்தின் அடிப் புறத்தி லிருந்து காம்பை நீக்கித் தொளையிட்டுப் பழத்தை அப்படியே உறிஞ்சிக் குடித்தார். பழ ரசத்தைப் பருகின விதம் என்னை வியக்க வைத்தது. பின்னர் எங்கள் முன் இருக்கும் பழம் ரஸ வர்க்கத்தைச் சேர்ந்தது என்றும், இந்த வகைப் பழத்தை இப்படித்தான் உண்ண வேண்டும் என்றும் விளக்கினார். பின்னர் நானும் அவ் விதமே பழத்தை நெருடி அதன் சாற்றை அவர் பருகின் முறையிலேயே உறிஞ்சிப் பருகினேன். அற்புதமான 'பழ அநுபவம்' பெற்றேன். அப்போது டி.கே.சி. யின்

நினைவுதான் வந்தது. டி.கே.சி. ஒரு பாடலைப் பலமுறை படித்து—இல்லை, பாடி—இறுதியில் மிகக் கம்பீரமாகப் பாடி கேட்போரைப் பாட்டநுபவத்தின் கொடுமுடிக்கு இட்டுச் செல்வதை நினைத்துக் கொண்டேன். மாம்பழச் சாறும் டி.கே.சி. தரும் கவிதை ரசமும் ஒன்றுபோல் இருந்து இன்றும் என்னை மனத்தால் சுவைக்க வைக்கின்றது.

கவிதை பயிற்றும் ஆசிரியர்கள் பாடல்களை வாய் விட்டுப் படிக்கும் பழக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். மனக்கண் என்று ஒன்றிருப்பது போலவே மனக்காதும் (Mind's ear) நம்மிடம் அமைந்து கிடக்கின்றது. சொற்களுக்கு இரண்டு குணங்கள் உண்டு. ஒன்று, ஒலி; மற்றொன்று, பொருள். அச்சிட்ட நூல்களில் காணப்படும் சொற்கள் அரை உயிரோடுதான் உள்ளன.[1] நாம் ஊட்டுகின்ற ஓசையின் மூலம்தான் எஞ்சிய அரையுயிரும் முற்றுப் பெறுகின்றது. ஆகவே, ஓசையை ஊட்டித் தான் பாடல்களைப் படிக்க வேண்டும். இடத்திற்கேற்றவாறு ஓசையூட்டிப் படித்தால்தான் பாக்களில் அடக்கி வைக்கப் பெற்றுள்ள உணர்ச்சி வெள்ளம் பீறிட்டுக் கொண்டு வெளிவரும். சொற்களின் பொருளுடன் அவற்றின் தொனிப் பொருளும் கட்டவிழ்த்துக்கொண்டு புறப்படும். தொல்காப்பியத்திற்கு உரை கண்ட பேராசிரியர், ''பா என்பது, சேட்புலத்திலிருந்த காலத்தும் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடம் ஓதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணர்தற்கேதுவாகிப் பரந்து பட்டுச் சொல்வதோர் ஓசை'' என்று குறிப்பிடுவர். இதனால் பா என்பது இசை மயமாக இருப்பதொன்று என்பது பெறப்படுகின்ற தன்றோ?

1. ''Words are but half alive when they appear on printed pages''—Prof. Garrod.

மேலை நாட்டு நூல்களிலிருந்தும் நம் நாட்டு நூல்களிலிருந்தும் பல கருத்துகளைத் தெரிந்து கொண்டு கவிதை பயிற்றும் முறையைப் பற்றி பலவாறு சிந்திக்கும் வாய்ப்புகள் பெற நேர்ந்தது. இக் கருத்துகளை முதன் முதலாகக் காரைக்குடியில் பி.டி. மாணாக்கர்களுக்குக் கற்பித்தேன்; சிறிய வகுப்பாதலால் கலந்து யோசிக்கும் சந்தர்ப்பங்களும் இருந்தன. பல நல்ல மாணாக்கர்கட்குக் கற்பிக்கும் பேறும் கிடைத்தது. பல நல்ல மாணாக்கர்கள் இருப்பினும் ஒருவரை மட்டிலும் இக் குமிழியில் நினைவு கூர்கின்றேன். இவர் பெயர் மீனாட்சி சுந்தரம்; மதுரை மாவட்டம் அருப்புக் கோட்டையைச் சேர்ந்தவர். இளங்கலைப் பட்டம் பெற்றவர். சென்னைத் தலைமைச் செயலகத்தில் பத்தாண்டுகட்கு மேல் பணியாற்றி பகுதி அலுவலர் (Section Officer) பதவி தம் மன நிலைக்கு ஒவ்வாமையால் தம்மை அதிலிருந்து விடுவித்துக் கொண்டு பி.டி. வகுப்பில் சேர்ந்தவர். நிட்டைப் பயிற்சியுடையவர் தாம் அடிக்கடி இறைமைக் காட்சிகளை அநுபவித்ததாகக் கூறுவார். குழந்தை மனமுடையவர். வகுப்பில் நன்றாகக் கவனித்துக் குறிப்புகளை எழுதிக் கொள்வார். நூலகத்தில் அதிகமான நூல்களைப் படிப்பார்; மிகச் சிறந்த ஆசிரியராகத் திகழும் அரிய கூறுகளை இவரிடம் கண்டேன். மாதிரிப் பள்ளியில் ஒருநாள் குமரகுருபரரின் மீனாட்சியம்மைக் குறத்திலுள்ள ஒரு பாடலை ஐந்தாம் படிவ மாணவர்க்கு நடத்தியதைக் கண்டேன்; முதல்வர் திரு. P. துரைக்கண்ணு முதலியாரையும் இப்பாடத்தைக் கவனிக்குமாறு செய்தேன். தமிழ் வகுப்பு ஆசிரிய மாணாக்கர்களையும் இப்பாடத்தைக் கவனிக்க ஏற்பாடு செய்தேன். பாடல் இது:

கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக்
 கிழங்குகல்லி எடுப்போம்;
 குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக்
 கொடியில்வைத்துத் தொடுப்போம்;

பழம்பிழந்த கொழுஞ்சாறும்
தேறலும்வாய் மடுப்போம்;
பசுந்தழையும் மரவுரியும்;
இசைந்திடவே உடுப்போம்;

செழுந்தினையும் நறுந்தேனும்
விருந்தருந்தக் கொடுப்போம்;
சினவேங்கைப் புலித்தோலின்
பாயலின்கண் படுப்போம்

எழுந்துகயற் கணிகாவில்
விழுந்துவினை கெடுப்போம்;
எங்கள்குறக் குடிக்கடுத்த
இயம்பிதுகாண் அம்மே.

பாடக் குறிப்பில் ஆசிரியர் 'கருத்துணர்ந்து கவிதை இன்பத்தை நுகருமாறு செய்தல் என்பதைப் பாட நோக்கமாகக் குறிப்பிட்டிருந்தார்.

மாணக்கர்களைப் பாடத்தின்மீது ஊக்குவிக்க வேண்டும் என்பது பயிற்சிக் கல்லூரியில் சொல்லப் பெற்ற விதி. இதனை ஆசிரியர்கள் பல்வேறு வகையில் கையாள லாம். இஃது அவர்தம் யுக்திக்கும் சிந்தனைக்கும் ஏற்ற வாறு அமையலாம். பாடினவரின் வரலாறு கூறுதல் ஊக்கு வித்தல் ஆகாது' என்பது மற்றொரு விதி. இதைச் சொல்லுதல் தேர்வில் கேட்கப்படும் வினாவுக்கு விடை தருதல் போல் அமைவதேயன்றி ஊக்குவித்தல் ஆகாது. மீனாட்சி சுந்தரம் கையாண்ட முறை இது. ''குறத்தி ஒருத்தி மதுரை மீனாட்சி அம்மைக்குக் குறி சொல்லுவ தாகக் கற்பனை செய்து குமரகுருபரர் பாடியது 'மீனாட்சி அம்மை குறம்' என்னும் பிரபந்தம்'' என்று நூலைப் பற்றிச் சுருக்கமாகக் கூறினார். அடுத்து பாடலைப் புரிந்து கொள்வதற்கு முன்னுரையாகப் பாடலின் பின்னணியைக் கூறினார். ''பாட்டுடைத் தலைவி மீனாட்சி அம்மை

சொக்கலிங்கப் பெருமான் மீது காதல் கொள்ளுகின்றாள்; கருத்திழக்கின்றாள்; தோள் மெலிகின்றது; வளை நெகிழ்கின்றது; மெய் பசக்கின்றது; முகமும் வாடுகின்றது. கருத்தில் நின்ற காதலனை அடைவது எப்பொழுது? என எண்ணி எண்ணி ஏங்குகின்றாள். இந்நிலையில் பொதியமலையில் வாழும் குறத்தியொருத்தி மதுரையை நோக்கி வருகின்றாள். காதல் நோயால் மெலிந்து வாடி அமர்ந்திருக்கும் மீனாட்சி அம்மையைக் காண்கின்றாள். அம்மை தன் கரத்தை நீட்ட, குறத்தி குறி சொல்லுகின்றாள். முதலில் தன் குலப்பெருமையைக் கூறுகின்றாள்'' இது மீனாட்சி சுந்தரம் கூறிய பாட்டின் பின்னணி.

பாடத்தை எப்படி வளர்ப்பது என்பது பயிற்சிக் கல்லூரியில் கற்ற முறையைப் பயன்படுத்தினார். ''குறத்தி கூறும் குலப்பெருமையை இதோ கேளுங்கள்'' என்று கூறிப் பாடலை இசையோடும் தாளத்தோடும் தெளிவாக ஒன்றிரண்டு முறை பாடினார். மாணாக்கர் சுவைக்கும் அளவு பாடினார்; முதல் தடவை பாடும் போதே பாடலில் அடிதோறும் உள்ள 'கல்லி', 'தேறல்', 'வாய் மடுத்தல்', 'பாயல்', 'கண்படுத்தல்', 'கயற் கண்ணி' வினை கெடுத்தல்' என்ற அருஞ்சொற்களையும் சொற்றொடர்களையும் விளக்கினார். இதனால் பாடலை இரண்டாம்முறை மூன்றாம்முறைப் பாடும்போது, குளோப் ஜாமுனை, அல்லது கல்கத்தா ரஸகுல்லாவை வாயில் இட்டு, பல்லினால் சிறிது மென்று நாவினால் துழாவிச் சுவைப்பது போன்ற ஒரு நிலையை ஏற்படுத்தினார். மாணாக்கர் முகத்தில் பாட்டின் சுவையை அவர்கள் அநுபவித்தது தெளிவாகப் புலனாயிற்று. அவர்களின் கண்களில் காணும் ஒளி, உதட்டில் காணும் புன்முறுவல், உடம்பு முழுவதும் காணப்படும் கிளர்ச்சி இவற்றால் இவை தெளிவாகத் தெரிந்தன.

பிறகு பாடலை அரை அரை அடியாகப் பாடி மாணாக்கர்களைக் குழுவாகத் தம்மைத் தொடர்ந்து பாடுமாறு செய்தார். பின்னர் பரவலாக ஒருசில மாணக்கர்களைத் தனித்தனியாகவும் பாடச்செய்தார். இதனால் பாட வளர்ச்சியில் மாணக்கர்களின் பங்கு எவ்வளவு என்பதை அறுதியிட்டுக் காட்டினார்.

தொடர்ந்து, குறத்தியின் இயற்கையோடொட்டிய வாழ்வு ஓவியம்போல் பாடலில் தீட்டப் பெற்றிருப்பதை மாணாக்கர்கள் உணர்ந்து அநுபவிக்குமாறு விளக்கமும் தந்தார். விருந்தோம்பிய பிறகுதான் குறத்தி உறங்கச் செல்கின்றாள் என்பதை உள்ளத்தில் நன்கு பதியச் செய்தார். தமிழகத்தின் தலையாய பண்பு குறமகளிடம் காணப்பெறும் சிறப்பைப் பாராட்டிப் பேசினார். படிப்பறிவு இல்லாத குறத்தியாயினும் அவள் உண்டு உயிர்த்து உறங்குவது, இனம் பெருக்குவது வாழ்வென்று அமையாது கயற்கண்ணியம்மையைத் தொழுது வாழும் இறையன்பினை மேற்கொண்டமையையும் பாராட்டிப் பேசினார்.

பாட முடிவாக, மீண்டும் பாடலை இசையுடன் பாடி அடியிற் கண்ட வினாக்களை விடுத்துப் பாடத்தைத் தலைக் கட்டினார். 1. குறமகளின் தொழில்கள் யாவை? 2. அவர்கள் பருகும் பானங்களைக் கூறு 3. அவர்கள் எவற்றை உடுப்பர்? 4. அவர்கள் எவ்வாறு விருந்தோம்புவர்? 5. அவர்கள் எதன்மீது உறங்குவர்? 6. அவர்களுடைய இறை வழிபாடு எவ்வாறு கூறப் பெற்றுள்ளது?

சாதாரணமாகத் தமிழாசிரியர்களில் பெரும்பாலோர் கரும்பலகையைப் பயன் படுத்துவதில்லை. இலக்கணப் பாடத்திலும் கூட 'வாய்ப்பந்தல்' போட்டே காலத்தைப் போக்கி விடுவர். மீனாட்சி சுந்தரம் பாடத் தொடக்கத்தில் கரும்பலகையில் 'மீனாட்சியம்மை குறம்' என்று எழுதினார். பாடத்தின் இறுதியில் தாம் விடுத்த வினாக்கட்கு

மாணாக்கர் கூறும் விடைகளைக் கரும்பலகையில் எழுதி னார்; மாணாக்கர்களையும் தம் குறிப்பேட்டில் எழுதிக் கொள்ளச் செய்தார். இப்பாடலில் உள்ள அருஞ்சொற் களுக்கும் பொருள் எழுதிக் காட்டினார். இறுதியாக, பாடலை ஒருமுறை இசையேற்றிப் பாடி மாணாக்கர் களைக் கவிதைச் சுவையின் கொடு முடிக்குக் கொண்டு செலுத்தினார். முதல்வர் முதலியார் ''பாடம் நடத்தியது மிக நன்று'' என்று மீனாட்சி சுந்தரத்தைக் கைகுலுக் கினார்.

மற்றொரு நாள் சமூக இயலில் ஒரு பாடம் எடுக்க ஏற்பாடு செய்தேன். அதுவும் இதே வகுப்பில்தான். இப்போது சமூக இயல் பேராசியர் திருவேங்கடாச்சாரி யாரையும் முதல்வர் துரைக்கண்ணு முதலியாரையும், திரு. P. V. சிநிவாசனையும் பாடத்தைக் கவனிக்க ஏற்பாடு செய்தேன். இப்போது எடுத்த பாடம் 'கிருஷ்ண தேவராயரின் ஆட்சி' என்பது. சமூக இயல் பாட ஆசிரிய-மாணாக்கர்களும் இங்கு வந்திருந்தனர். இந்தப் பாடத்தை யும் அற்புதமாக நடத்தினார். மாணாக்கர்களை மானசீக மாகக் கிருட்டிண தேவராயர் காலத்துக்கே கொண்டு சென்றுவிட்டார். அவர் கொலுமண்டபத்தில் நவமணிகள் போல் ஒன்பது அமைச்சர்கள் வீற்றிருந்த காட்சி, அவர் ஆட்சியில் நடைபெற்ற நற்செயல்கள் முதலியவற்றை அற்புதமாகக் காட்டி அனைவரையும் மெய் மறக்கச் செய்தார். முதல்வரும் பேராசிரியப் பெருமக்களும் மீனாட்சி சுந்தரத்தின் திறமையைப் போற்றிக் கை குலுக்கினர். எல்லோருமே செய்முறைத் தேர்வில் இவருக்கு முதல் வகுப்பு கிடைக்கும் என்று மதிப்பிட்டனர்.

அடுத்து, அரையாண்டுத் தேர்வு (எழுத்து முறை) நடைபெற்றுக் கொண்டிருந்தது. நான் தேர்வு மண்ட பத்தின் மேற்பார்வையாளராக இருக்கும் வாய்ப்பு கிடைத்தது. சுற்றி வருங்கால் பலருடைய எழுத்துக்

களைப் பார்த்தேன். மீனாட்சி சுந்தரம் அருகிலும் நின்று கொண்டு சில நிமிட நேரம் அவர் எழுதும் விடையை நோக்கினேன். எழுத்து மணிமணியாக முத்துக்கோத்தாற் போல இருந்தது. நடையே ஆங்கிலப் பேராசிரியர்களின் நடையையும் தோற்கடிக்கும் முறையில் இருந்தது. தேர்வு மண்டபத்தில் விரைவாக எழுதும் போதே மூன்று மணி நேர இறுதிவரையும் எழுதிய விடைகள் அற்புதமாக அமைந்திருந்தன. முதல்வர் முதலியாரையும் திரு வேங்கடாச்சாரியாரையும் இவருடைய ஐந்து விடை ஏடு களையும் ஒருமுறை நோக்கிய பிறகு மதிப்பீடு செய்பவர் கட்கு அனுப்பலாம் என்றேன். அவர்கள் அவற்றை மேலோட்டமாகவே நோக்கி வியந்து போயினர். இவருக்கு எழுத்துத் தேர்விலும் முதல் வகுப்பு கிடைப்பது உறுதி என்பதாக அறுதியிட்டனர்.

இறையருளால் இவருக்கு எழுத்துத் தேர்விலும் செய் முறைத் தேர்விலும் முதல் வகுப்புகள் கிடைத்தன. காரைக்குடியில் நான் பணியாற்றிய பத்தாண்டுக் காலத் திலும் இவர் ஒருவரே (பல்கலைக்கழகத்திலேயே) இரண்டி லும் முதல்வகுப்பில் தேறியவராகக் காணப்பட்டார். எழுத்துத்தேர்வில் அக்காலத்தில் முதல் வகுப்பில் தேறின வர் இவர் ஒருவரே என்பது என் நினைவு. இவர் அருப்புக் கோட்டையில் தேவாங்கர் உயர் நிலைப் பள்ளியில் போய்ச் சேர்ந்தார். ஒரு முறை விரிவுப் பணித்துறை ஆதரவில் நான், திரு வேங்கடாச்சாரி, முதல்வர் அருப்புக் கோட்டை உயர் நிலைப் பள்ளிக்குச் சென்றிருந்தபோது இவரைச் சந்தித்து மகிழ்ந்தோம்.

இவர் நிட்டைப் பயிற்சியுடையவர் என்று முன்னரே குறிப்பிட்டேன். அருப்புக் கோட்டையில் இது மிகவும் தீவிரமடைந்தது போலும். 1966 முடிய என் குடும்பம் காரைக்குடியிலேயே இருந்து வந்தமையால் விடுமுறைக் காலங்களில் காரைக்குடியிலிருப்பேன். அப்போதெல்லாம்

இவரைப்பற்றி விசாரிக்கத்தவறேன்; ஏழெட்டாண்டுகள் இவர் அருப்புக் கோட்டையில் பணியாற்றினார் என்று கேள்விப்பட்டேன். இறுதிக் காலத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், ஊர்ப்பெருமக்கள் இவரைப் 'பைத்தியம்' என்றே அறுதியிட்டனராம். இவரும் ஓரிரு திங்கள் நோய்வாய்ப்பட்டிருந்து இறைவன் திருவடி நிழலை அடைந்தார் என்று கேள்வியுற்று வருந்தினேன். ஆனால் ஒருபாவமும் அறியாத இவர் ஆன்மா வீட்டுலகில் இன்ப மாக இருக்கும் என்பது என் கணிப்பு.

குமிழி—144

## 37. ஆண்டு விழாக்கள்

பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றிய பத்தாண்டுக் காலத்தில் பல ஆண்டு விழாக்கள் நடைபெற்றன. மிகச் சிறப்பாக நடைபெற்றன. நான் அதிகமாகப் பங்கு எடுத்துக் கொண்ட விழாவை மட்டிலும் நினைவுகூர்கின்றேன். பேராசிரியர் எஸ். சீநிவாசன் முதல்வராகப் பணியாற்றிய காலம் (1952-54). பேராசிரியர் பணியாற்றிய முதலாண்டே ஆண்டு விழா நடத்துவது பற்றிய பேராசிரியர்கள் கூட்டம் (Staff Meeting) நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக யாரை அழைப்பது என்ற வினா எழுந்தது. ஒவ்வொருவரும் ஒவ்வொருவர் பெயரைக் குறிப்பிட்டனர். அவர்கள் யாவரும் பேரும் புகழும் பெற்ற பேரறிஞர்கள்தாம். கல்வியைப் பற்றிய உயர்கருத்துகளைக் கொண்டவர்கள். அடியேன் தவத்திரு. சித்பவாநந்த அடிகளின் பெயரைக் குறிப்பிட்டேன். அவர் அனைத்துச் செயல்களிலும் என் வீர வழிபாட்டுக்குரியவராக இருந்த

போதிலும், கல்வி கற்பிப்பது பற்றி எல்லோர் கொண்டுள்ள உயர் கருத்துகளையும், ஆசிரியர்கள் எப்படியிருக்க வேண்டும்? எத்தகைய மாணவர்கள் அவர்களால் உருவாக்கப் பெறல் வேண்டும்? ஆசிரியர்கள் சில குறிக்கோள் நிலைகளை (Ideal Level) தம் மனத்தில் கொண்டு பணியாற்றினால் நல்ல மாணாக்கர்களை உருவாக்கலாம் என்பன போன்ற சிறப்பான கருத்துகளை உடையவர்கள் என்பதை அவர்களுடன் பழகின நாள் முதல் அறிவேனாதலால் அவர் பெயர் குறிப்பிடுவதற்குக் காரணமாக இருந்தது. எல்லாப் பேராசிரியர்களும் தவத்திரு. அடிகளாரை அழைப்பதை ஒருமனதாக ஒப்புக் கொண்டனர். மார்ச்சுமாதம் முதல், இரண்டாம் வாரங்களில் நடத்தி முடித்துவிட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பெற்றது.

திருப்பராய்த்துறை அண்மையிலிருப்பதால் கடிதம் எழுதி இசைவு பெறுவதைவிட நேரிலேயே அவரைப் பார்த்துப் பேசி நாள்பற்றிய முடிவையும் அவர்தம் இசைவையும் பெறலாம் என்றும், இதற்கு என்னையே அனுப்பி இவற்றைத் தெரிந்து கொள்ளலாம் என்றும் ஒருமனதாக முடிவு செய்தனர். ஒரு நாள் நான் திருப்பராய்த்துறை சென்று தவத்திரு அடிகளாரைக் கண்டு பேசி அவர் வருகையைப்பற்றி முடிவு செய்தேன். தபோவனத்திலிருந்து தவத்திரு அடிகளாரை அழைத்து வருவதற்கும், திரும்பவும் அவரை தபோவனத்தில் கொண்டு விடுவதற்கும் கார் வசதி செய்யப்பெறும் என்றும் கூறி அவரிடமிருந்து விடைபெற்றுத்திரும்பினேன். அந்தக் காலத்தில் எனக்கு இரு பெரியார்களைக் காண்பதில், கண்டு உரையாடுவதில் பெருமகிழ்ச்சி இருந்தது. ஒருவர், தவத்திரு அடிகளார்; இவரிடம் பழகும் போது கல்வி பற்றிய குறிக்கோளும் ஆன்மிக விருந்தும் கிடைக்கும். **1943** முதல் இவற்றை இந்த முனிவரிடம் பெற்று

வந்தேன். மற்றொருவர், மயிலை முனிவர் பன்மொழிப் புலவர் திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார். இவரிடம் பழகும் போது இலக்கணக் குறிப்புகள், இலக்கிய நயங்கள், வைணவம் பற்றிய தத்துவக் கருத்துகள் இவை எனக்குக் கிடைக்கும்.

ஆண்டு விழாக்களில் சில கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பெறும். இவற்றைப் பெரும்பாலும் நானும் பேராசிரியர் எஸ். திரு வேங்கடாச்சாரியாருமே கவனித்து வந்தோம். நாடகங்களுக்கு நாங்கள்தான் ஒத்திகை பார்ப்போம். சில சமயம் வேறு பேராசிரியர்களும் வந்து அமர்ந்து கவனிப்பதும் உண்டு. முதல்வர் சீநிவாசனும் அடிக்கடி வந்து பார்த்துப் போவார். சீநிவாசன் இருந்த காலத்தில் பிரதான கட்டடம் தயாராக வில்லை. இடநெருக்கடி இருந்து கொண்டிருந்தது.

விழாவன்று நான் தவத்திருஅடிகளாரை அழைத்துவர சிற்றுந்தில் திருப்பராய்த்துறை சென்றேன். பகலுணவு கொண்டு 12-30 மணிக்குப் புறப்படலாம் என்று சொன்னார்கள். அப்படியே புறப்பட்டு பிற்பகல் 3 மணிக்கு காரைக்குடி வந்து சேர்ந்தோம். அடிகளாரை விளையாட்டு அரங்கத்தி (Stadium)லுள்ள ஓர் அறையில் ஓய்வு எடுக்கச் சொல்லிவிட்டு நான் விழா ஏற்பாடுகளைக் கவனிக்கக் கல்லூரி வந்து விட்டேன். அடிகளார் காட்சி யரங்கத்திற்கு வந்ததும் முதல்வர், திரு. வேங்கடாச்சாரி, வேறு பேராசிரியர்கள். அடிகளாரைச் சந்தித்து அளவளாவிப் போனார்கள். விழா மாலை ஐந்துமணிக்குத் தொடங்கியது.

விழாவில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவற்றை யெல்லாம் இப்போது நினைவுகூர முடியவில்லை. அடிகளார் பேச்சு மட்டிலும் இன்றும் என் மனத்தில் பசுமையாக உள்ளது. அடிகளார் அநுமனை எடுத்துக்

காட்டாகக் கொண்டு அவன் மாதிரி அறிவோடும் வீரத்தோடும் திகழவேண்டும் என்று விளங்கினார். பகலவனைத் தொடர்ந்து சென்று அநுமன் கல்விகற்றதைப்போல நாமும் கற்க வேண்டும் என்றார். அநுமனைப்பற்றி இராமன் இலக்குவனிடம் சொல்லும்போது, 'ஆற்றலும் நிறைவும் கல்வி அமைதியும் அறிவும்' உடையவன் என்று எண்ணுகின்றான். தம்பியிடம்,

இல்லாத உலகத் தெங்கும்
ஈங்குஇவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக்
கடலுமே என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே
யார்கொல்இச் சொல்லின் செல்வன்.[1]

என்று சொல்லுகின்றான். "சகலவேத ஆகம சாத்திரங்களையெல்லாம் கரைகண்டவன்; சகலசாத்திரங்களையும் அநந்த வேதங்களையும் கற்றுத் தேர்ந்து புகழ்பெற்ற மகா ஞானி என்னும் தன்மை இவனுடைய பேச்சாலே வெளிப்படுகின்றது அன்றோ?" என்று கூறி இவனுடைய வாக்கு நயம், நளினம் இவற்றால் "சொல்லின் செல்வன்" என்ற விருதையும் நல்குகின்றான். மேலும் கூறும்போது,

மாணியாம் படிவம் அன்று
மற்றுஇவன் வடிவம் மைந்த!
ஆணிஇவ் வுலகுக் கெல்லாம்
என்னலாம் ஆற்றற் கேற்ற
சேணுயர் பெருமை தன்னைச்
சிக்கறத் தெளிந்தேன்.[2]

1. கம்ப. கிட்கிந்தை—அநுமப்படலம்—20
2. ஷை ஷை—21

என்று கூறுவான். ''இவனைச் சாதாரணமாக பிரமச்சாரி என்று மட்டும் கருதாதே. 'உருவு கண்டு எள்ளாமை வேண்டும்; உருள் பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து' என்றாற்போல, பெரிய தேருக்குச் சக்கரம் கோத்த மாத்திரத்தில் அச்சக்கரம் கழன்று விழாமல், கடையிற் செருகுகின்ற ஆணி வடிவால் சிறிதாயிருந்தே பெரிய பாரங்களையெல்லாம் கொண்டு செலுத்துகின்ற வலிமையுடையதாயிருத்தல் போல் இவனுருவம் வடிவால் சிறிதாக இருந்தே பெரிய செயல்களையெல்லாம் செய்து முடிக்கும் வலிமையுடையது; ஆதலால் இவன் உருவத்தை நோக்கி இகழ்ச்சி செய்யலாகாது; இத்தன்மைத்தான பெருமை, மகிமை, ஆற்றல் என்றால் காலம் வரும்போது வெளிப்படும்'' என்கின்றான்.

இன்னும் கூறுவான்: ''இப்பூவுலகிலுள்ள முனிவர் களுள்ளும், மேலுலகிலுள்ள வானவர்களுள்ளும் இத் தகைய திறமையுடையவர் யார் இருக்கின்றார்கள்? வேதங் களையெல்லாம்முற்றும் அறிந்த இந்தப்பிரம்மச்சாரியினது மொழிக்கு எதிரில், யாவர்க்கும் முதல்வரான தன்மை யுடையவர்களாகின்ற மும்மூர்த்திக்கேயாயினும் மிக்க வல்லமையுடையது'' என்பதாக. கம்பநாடனும் அநுமனை 'ஆண்டகை (ஆண் + தகை)' என்கின்றான்; ஆண்மைக் குணமுடையவன் என்பது இதன் பொருள்.

இத்தகைய அநுமனை நாம் (ஆசிரியர்களும் மாணாக்கர்களும்) குறிக்கோளாகக் கொண்டு அறிவையும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறும்போது, அருகிலிருந்த திரு. கிருஷ்ணய்யங்கார், ''என்ன ரெட்டியார், நம்மையெல்லாம் குரங்குகளாக்கி விட்டார், சாமியார்?'' என்று கிண்டலாகவும் வெறுப் பாகவும் கேட்டார். சாமியார் குரங்குகள் என்று சொல்லி யிருந்தால் தான் குரங்குகள் என்று கருத வேண்டும். அவர் அப்படிச் சொல்லவில்லையே. 'அநுமன்' என்றுதானே

சொன்னார்? அநுமன் எப்பது ஒரு 'கருத்து' (Coneept). அறிவுக்கும் ஆற்றலுக்கும் குறியீடு. உளவியல் கற்ற நமக்கு விளங்கும் என்ற கருத்தில்தான் அடிகள் அந்தச் சொல்லைப் பயன்படுத்தினார், காவியத்தில் வரும் பாத்திரங்கள் யாவும் ஒரு கருத்துக்கு அடையாளமாகக் கவிஞர்கள் படைத்துள்ளனர். இராமாயணத்தில் வீடணன், இராவணன், கும்பகருணன் இம்மூவரும் சத்துவம், இராசசம், தாமசம் என்ற குணங்களின் குறி யீடுகள், அவர்தம் செயல்களும் இக் குணங்களின் பரிணாமங்களாக இருப்பதைச் சிந்தனையுடன் இராமா யணத்தைப்படிப்பவர்களே அறிய முடியும். சாதாரண மக்களுக்கு அது கதைபோல்தான் இருக்கும். இலக்கிய ஆர்வலருக்கு அது காவியச் சுவை பயக்கும்.

''இவற்றையெல்லாம் நன்கு உணர்ந்த வடமொழி வாணர்கள் தலைவன் ஏவலாளர்க்குக் கூறுதல் போன்றவை அறநூல்கள் என்றும், நண்பர் ஒருவருக் கொருவர் கூறும் முறையில் அமைந்தவை புராணங்கள் என்றும், கணவனுக்கு மனைவி உரைப்பது போன்றவை காவியங்கள் என்றும் ஒரு வகைப் பாகுபாடு செய்துள் ளனர். இல்வாழ்க்கையில் சொற்களைவிட உள்ளத்து உணர்ச்சிகளே ஆற்றல் மிக்கவை என்பதும் சொற்களால் உணர்த்துவதைவிடக் குறிப்பால் உணர்த்துவதே மிகுதி என்பதும் நாம் அறிந்தவைதாமே. இக்காரணத்தால் ஒரு சில வரிகளாலான அகத்துறைச் சங்கப் பாடல்கள் உணர்ச்சியைக் கொட்டி நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. இத்தகைய உணர்ச்சிதான் காவியங் களிலும் அமைந்து கிடக்கின்றன. ஒழுக்கம் அறம் முதலிய வற்றை அதிகமாகச் சொற்களால் கூறி வற்புறுத்தாமல் கற்பனையநுபத்தின் வாயிலாக அப்பாடல்கள் உள்ளத்தில் தாமே சென்று பதியும் முறையில் அமைந்து விடுகின்றன. வேதாந்ததேசிகரின் 'சங்கல்ப சூரியோதயம்' என்ற

தொடர் உருவக நாடகத்தைப்பற்றிக் கேள்வியுற்றிருப் பீர்கள். இதில் விவேகத்திற்கும் மகா மோகத்திற்கும் இடையே நேரிடும் போரால் சீவன் படும் தொல்லைகள் விரித்துரைக்கப் பெறுகின்றன. காமம், குரோதம் போன்ற உணர்வுகளால் சீவன் தொல்லைப்படுகின்றான். விருப்பு (ராகம்), வெறுப்பு (துவேஷம்) கள் என்றவற்றால் எழும் கேடுகளை விவேகம் அடக்கியாள்கின்றது, விஷ்ணு பக்தி யால் நடத்தப்பெறும் வைராக்கியமும், தத்துவஞானமும் விவேகத்திற்கு வலிவூட்டுகின்றன. இந்த நாடகத்தில் விவேகம் கதாநாயகன்; சுமதி கதாநாயகி. நாடகம் முழுவதும் கருத்துகளால் (Concepts) நடைபெறுகின்றது.

அடிகளார் கூறிய 'அநுமன்' என்ற கருத்திற்கு வரு வோம். கம்பன் கூறும் அநுமன் துதி இது.

அஞ்சிலே ஒன்று பெற்றான்
    அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றுஆ றாக
    ஆரியற் காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற
    அணங்குகண்(டு) அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்
    அவன்எம்மை அளித்துக் காப்பான்[3]

இதில் ''அஞ்சிலே ஒன்று[1] என்பது, பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய வாயுதேவன்; பெற்றான்-பெறப்பட்டவன் அநுமன். வாயுவின் மகன் அநுமன் என்பதை உணர்த்திய வாறு. அஞ்சிலே ஒன்று (1) என்பது ஆகாயம்; ஆக—வழி யாக; ஆகாயத்தின் வழியாக அநுமன் சென்றதைக் குறிப் பிட்டவாறு. அஞ்சிலே ஒன்று (2)என்பது, பஞ்சபூதங்களில் ஒன்றாகிய நீர் (கடல்). தாவி—கடந்து. இது கடலைத் தாண்டியதைக் குறிப்பிடுகின்றது. ஆரியன்—இராமன். இராமன்பொருட்டு கடந்து சென்ற நிகழ்ச்சி இதனால்

3. கம்ப. காப்பு முதலியன—2

குறிப்பிடப் பெறுகின்றது. அஞ்சிலே ஒன்று (4) என்பது பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய பூமி. பெற்ற—பெறுவதற்குக் காரணமான. சீதாபிராட்டி பூமிதேவியின் மகள் என் பதைக் காட்டுவது. அணங்கு கண்டு—பெண்ணைக் (பிராட்டியைக்) சேவித்து, அநுமன் சீதாபிராட்டியைக் கண்ட வரலாற்றைக் குறிப்பிடுவது. அயலார் ஊர்—இலங்கை. அஞ்சிலே ஒன்று (5) என்பது நெருப்பு; இது பஞ்ச பூதங்களுள் ஒன்று. வைத்தான்—இட்டான். இலங்கைக்கு அநுமன் தீயிட்ட வரலாற்றைச்சுட்டியவாறு. அவன்—அப்படிப்பட்ட மேன்மையையுடைய அநுமன். அளித்து—தண்ணளி (கருணை) செய்து. காப்பான்—பாது காப்பான். யாம் தொடங்கிய நூலுக்கு இடையூறு வராத படிப் பாதுகாப்பான். ஆதலால், அப்பெருமானை வணங்கு வோம் என்பது. இப்பாடலில் நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், பூமி என்ற ஐந்து பூதங்களும் கருத்தாக நின்று செயற்படுவதைக் கண்டு மகிழலாம்.'' இவ்வாறு கூறி என் நண்பரை சாமியார் கருத்திற்கு இணங்க வைத்தது 'போதும் போதும்' என்றாகி விட்டது.

பேராசிரியர் சீநிவாசன் ஆட்சிக்காலத்தில் நடை பெற்ற ஆண்டு விழாவின்போது மாணவர்களைக் கொண்டு தமிழ் நாடகம் எழுதச் சொன்னார். அந்த ஆண்டு மாணவ ராக இருந்த கறுப்பண்ணன் என்பவர் ''எத்தன் ஏழுமலை'' என்ற ஒரு நாடகம் எழுதி வந்தார். 'தலைப்பு நன்றாக இல்லை' என்று சொல்லி அதை நிராகரித்தார். முதல்வர். பிறகுநானும் அந்தஆண்டுமாணவராக இருந்தசு, செல்லப்ப னும் (இப்போது தமிழ் வளர்ச்சி இயக்கத்தின் இயக்குநராக இருக்கும் டாக்டர் சிலம்பொலி செல்லப்பன்) சேர்ந்து நன்கு யோசித்து '' இன்றைய உலகம்'' என்று தலைப்பை மாற்றிப் புதுநாடகம் என்று சொல்லி முதல்வரிடம் இசைவு பெற்றோம். இதில் செல்லப்பன் தமிழ்ப் புலவராக நடித்ததாக நினைவு. நாடகம் பல்லோர் புகழும்படியாக்

அமைந்தது. திரு. துரைக்கண்ணு முதலியார் முதல்வ ராக வந்த பிறகு மற்றோர் ஆண்டு ஆண்டுவிழாவில் வெ. சாமிநாதசர்மா எழுதிய 'வீரஅபிமன்யூ' என்ற நாடகம் நடிக்கப்பட்டதாக நினைவு. சா. கணேசன் இந்த நாடகத்திற்குரிய புத்தகம் தந்து உதவினார். இந்த நாடகங்கள் அரங்கேறுவதில் மாணவர்களே பெரும் பாலான பணிகளை மேற்கொண்டனர். கைத்தொழில் ஆசிரியர் குறுப்பால் என்பவர் ஒப்பனைகளிலும், அரங்கை அமைப்பதிலும் உதவுவார். நானும் திரு. வேங்கடாச்சாரி யும்தான் ஒத்திகை போட்டு அரங்கேற்றம் வரையிலும் பொறுப்பை ஏற்போம்.

சு. செல்லப்பன் பயின்ற ஆண்டு நாமக்கல் பக்கத்தி லிருந்து பரமசிவம், முதலிய நான்கு பேர் வந்திருந்தனர். இவர்கள் ஊரிலிருந்து சமையற்காரப் பையனைக் கூட்டி வந்து கண்டனூரில் வீடு எடுத்து அதில் தங்கியிருந்தனர். கண்டனூரிலிருந்தே பேருந்து மூலம் கல்லூரிக்கு வந்து திரும்புவர். இந்த ஆண்டு கல்லூரித் தமிழ்ச் சங்கம் மிகச் சிறப்பாக இயங்கியது. தமிழ்ச்சங்க ஆண்டு இறுதிக்கூட்டத் திற்கு வள்ளல் அழகப்பரே சிறப்பு விருந்தினராக வரும் பேறுபெற்றோம். வள்ளலின் தமிழ்ப்பேச்சை அன்றுதான் கேட்கும் வாய்ப்பு எங்கட்குக் கிடைத்தது. மிக அற்புதமாக நல்ல தமிழில் பேசி எங்களை மகிழ்வித்தார். சங்கத்தின் செயலாளராக இருந்த சு. செல்லப்பன் நன்றி கூறும் சிறிய மொழியினால் மிகவும் ஈர்க்கப் பெற்றார். வள்ளல், அன்று தான்மாலை இந்து மதாபிமானசங்கத்தின்ஆண்டுவிழாவும் நடைபெற்றது. வள்ளல் தலைமையில் 'சமயவானில் துருவ நட்சத்திரம்' என்ற தலைப்பில் இராமகிருஷ்ணபரமஹம் சரைப் பற்றிப் பேசினேன். அப்போதுதான் செல்லப்பன் ஊர், படிப்பு முதலியவை பற்றி என்னை உசாவினார். அன்று செல்லப்பன் தமிழ் எம். ஏ. பட்டம் மட்டிலும் பெற்றிருந்தாரேயானால் அழகப்பா கல்லூரியில் தமிழ்ப்

பேராசிரியராகப் பணி ஏற்றிருப்பார். இவரைப் பெற கல்லூரிக்கும் ஊழ் இல்லை; இவருக்கும் கல்லூரியில் பணியாற்ற ஊழ் இல்லாமல் போய்விட்டது. அடுத்தடுத்த ஆண்டுகளில் எத்தனையோ பேர் தமிழை விருப்பபாடமாக எடுத்துப் பயின்றனர். ஆனால் செல்லப்பன் அளவுக்குத் தரமுள்ளவர் வந்து சேரவில்லை. நான் காரைக்குடியை விட்டு வந்த ஆண்டில் கிட்டதட்ட செல்லப்பனையொட்டித் திறமை வாய்ந்த ரெ. சிங்காரவேலன்(பள்ளத்தூர்) சவகர்லால், கண்ணப்பன் (காரைக்குடி) என்ற மூவர் வந்து சேர்த்து தமிழ் வகுப்பிற்கு நற்பெயர் ஈட்டித் தந்த னர். சிலமணியில் வழியனுப்புவதற்காகப் பாடல்கள் எழுதி, மாலைக்குள் அச்சிட்டு விழா எடுத்து என்னை வழி யனுப்பி வைத்தனர். முதல்வர் ப. துரைக்கண்ணு முதலியார் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். நான் விட்ட ஆண்டு என் இடத்திற்கு யாரையும் நியமிக்க வில்லை. முதல்வரே என் பணியை நிறைவேற்றினார். அடுத்த ஆண்டு ரெ. சிங்காரவேலு தமிழ்விரைவுரையாள ராக நியமனம் பெற்றார். இவரும் இரண்டு ஆண்டுகள் பணியாற்றிய பிறகு அழகப்பா கல்லூரிக்கு மாற்றப் பெற்று ஒன்றிரண்டு ஆண்டுகள் பணியாற்றித் தேவ கோட்டையிலுள்ள கல்லூரியில் தமிழ்த்துறைத்தலைவ ராகப் பணியாற்றி வருகின்றார். இப்போது பிஎச். டியும் பெற்று விட்டார். திரு. சிங்காரவேலனை அடுத்து தமிழ்ப் பணியை ஏற்றவர் திரு. கண்ணப்பன். இவர் பேராசிரியர் நிலைக்கு உயர்த்தப் பெற்று இன்றும் பணிபுரிந்து வரு கின்றார்; அண்மையில் இவரும் தம் பணியினின்றும் விலகிக் கொண்டார் என்ற தகவல் கிடைத்தது.

# 38. குடிமைப் பயிற்சி முகாம்கள்

அன்றைய உயர்நிலைப்பள்ளிக் கல்வித் திட்டத்தில் மாணாக்கர்கட்குக் குடிமைப் பயிற்சி அளிக்க வேண்டும் என்றிருந்தது. ஆகவே, அதைப் பயிற்சிக் கல்லூரியிலேயே பயிற்சி பெறும் பி.டி. மாணாக்கர்கட்கு அளிக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. ஆண்டு தோறும் கல்லூரிக்கு வெளியே (வெளியூர்களில்) 10 நாட்கள் இந்தப் பயிற்சி அளிக்கப்பெற்று வந்தது. இளையாத்தங்குடி, பிள்ளையார்பட்டி, மாற்றூர், இராமேச்சுரம், சூரைக்குடி என்ற இடங்கள்தாம் முகாம் அமைக்கவும், பயிற்சிக் களனாக அமையவும் பயன்பட்டன. இங்கெல்லாம் செட்டியார்கள் விசேட காலங்களில் தங்குவதற்கு பெரிய பெரிய விடுதிகள் கட்டிப் போட்டிருந்தமையால் அவை நாங்கள் தங்குவதற்கும், வகுப்புகள் நடத்துவதற்கும், உணவு தயாரித்து உண்பதற்கும் வசதியாக இருந்தன. ஓராண்டு திருப்பாராய்த்துறை இராமகிருஷ்ண தபோ வனத்தில் முகாம் அமைத்து பயிற்சி நடைபெற்றது.

இளையாற்றங்குடி : இந்தவூர் கீழச்சீவல்பட்டியி லிருந்து 2 கல் தொலைவு. காரைக்குடியிலிருந்து குன்றக்குடி வந்து திருப்பத்தூர் செல்லும் சாலையைத் தவிர்த்து வேறொரு கிளைசாலை வழியாகக் கீழைச் சீவல்பட்டி செல்ல வேண்டும். அங்கிருந்து இளையாற்றங் குடி செல்ல வேண்டும். நல்ல அமைதியான ஊர். ஒரு சமயம் காஞ்சி பெரிய சுவாமிகள் தாம் இறைவன் திருவடிப் பேறு அடையும் போது இந்த ஊரில்தான் தம்மை அடக்கம் செய்ய வேண்டும் என்று இந்த ஊரைத் தேர்ந்தெடுத்ததாகச் செய்தித் தாள்களில் படித்ததாக

நினைவு. மூன்று நான்கு ஆண்டுகள் இந்த ஊரில்தான் குடிமைப் பயிற்சி முகாம் நடைபெற்றதாக நினைவு. நல்ல நல்ல நகரத்தார் விடுதிகள் இங்கு உள்ளன. பெரிய தெப்பகுளம். அதற்கு எதிரில் உள்ள ஒக்கூரார் விடுதி மிகவும் பேர் போனது; பெரிய விசாலமான கட்டடம் நூற்றுக்கணக்கானவர்கள் தங்க வசதி உண்டு. இதில்தான் மாணவர்கள் தங்க ஏற்பாடு செய்தோம். இதற்கு நேர் மேற்கில், தெப்பகுளத்தை அடுத்து ஓர் பிள்ளையார் கோயில். இதனை அடுத்துள்ள பெரிய விடுதியில்தான் உணவுக்கு ஏற்பாடு செய்தோம்; ஆசிரியர்கள் தங்குவதும் இந்த இடத்தில்தான்.

"பெரும்பாலும் செட்டியார்கள் விடுதிகளையொட்டி பிள்ளையார் கோயிலும் அதனையொட்டி ஒரு பெரிய தெப்பகுளமும் இருக்கும். யானை நீர் இருக்கும் இடத்தில் தான் இருக்கப் பிரியப்படுமாதலால் கோயிலுக்கருகே குளத்தை அமைத்தனர் போலும்." இராமநாதபுரம் மாவட்டம் (இப்போது அது பசும் பொன் முத்துராம லிங்க தேவர் மாவட்டமாயுள்ளது) வறண்ட பிரதேச மாதலால் இக்குளங்களில் பெரும்பாலும் நீர் பெருகி இருப்பதில்லை.' பெரும்பாலும் செட்டியார்கள் வசமுள்ள இளையாற்றங்குடி, மாற்றூர், வைரவன்பட்டி, இரணியூர் பிள்ளையார் பட்டி, நேமம், இலுப்பைக்குடி, சூரைக்குடி, வேலங்குடி என்ற ஒன்பது ஊர்களிலும் பிள்ளையார் கோயில்களே பிரதானமாக அமைந்திருப்பது என்னைச் சிந்திக்க வைக்கின்றது.

என் சிந்தனை இப்படி ஓடுகின்றது. இந்தியாவில் தோன்றியுள்ள சமயங்கள் அனைத்திற்கும் பொதுவாய் எழுந்தருளியிருக்கும் தெய்வம் கணபதி. இத்தெய்வத்தின் துணை கொண்டுதான் மக்கள் தத்தம் தெய்வத்தை வணங்குகின்றனர். தெய்வ வழிபாட்டிற்கு இடந்தராத புத்தசமயத்திலும் கணநாதனுக்கு இடம்உண்டு. பௌத்தத் திருக்கோயில்களில் சென்று பார்த்தால் இவ்வுண்மை

விளங்கும். புத்தருடைய திருமேனிகள் பல்வேறு பாங்கு களில் அமைக்கப் பெற்றுள்ளன. அவற்றிற் கிடையில் ஏதேனும் ஓர் இடத்தில் கணபதியின் திருமேனியைக் காணலாம். சமணர்கள் கணபதியை இன்னும் சிறப்பாகப் போற்றுவர். விஷ்ணு கோயில்களிலும் கணபதிக்கு இடம் உண்டு. கருவறைக்கு அண்மையில் உள்ள திருச்சுற்றில் தென்மேற்கு மூலையில் தும்பிக்கையான் (தும்பிக்கை யாழ்வார்) வீற்றிருப்பதைக் காணலாம். பிறகு சைவ சமயத்திலும் சக்தி சமயத்திலும் கணபதிக்குச் சிறப்புண்டு. சிவபெருமானுக்கு யானை முகத்தவன் மூத்த மகனாகின் றான். இளையவன் குமரக் கடவுளோ கௌமார மதத் துக்கு முதல்வன். அவனுடைய வழிபாட்டிலும் கணபதி பூசையே முன்னிற்கின்றது. இவனை வழுத்திய பின்பே மற்ற வழிபாடுகள் தொடங்குகின்றன. இமயம் முதல் குமரி வரை இந்த ஐதிகம் வேரூன்றி இருப்பதைக் காண லாம்.

எல்லாத் திருக்கோயில்களிலும் ஆனைமுகக் கடவு ளுக்கு இடம் உண்டு. அதற்குமேல் தனியாக அவனுக் கென்றே அமைந்துள்ள கோயில்களோ எண்ணிக்கையில் அடங்கா. ஊர்தோறும் ஏனைய கோயில்கள் அமையாத விடத்தும் கணபதி கோயில் இருப்பதைக் காணலாம். புது வீடு புகும்போது ஒரு நொடிப் பொழுதில் அது கணபதி கோயில் ஆகின்றது. பிறகுதான் மக்களின் குடியிருப்பு வீடு ஆகின்றது. அவனுடைய வழிபாட்டிற்கு விதி யொன்றும் இல்லை. அவரவருக்கு உகந்த முறையில் இவனை வேண்டியவாறு வழுத்தலாம்.

இளையாற்றங்குடியில் நடைபெற்ற ஒரு முகாமில் அப் போது சென்னை மாநிலத்தில் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த திரு. B. கோபாலரெட்டியும் அவரது துணைவியும் முகாமைப் பார்வை இட்டனர். எதிர் பாராமல் நடைபெற்ற வருகை இது. திரு வேங்கடாச்சாரி

(முகாம் அலுவலர்) அமைச்சருக்கு முகாம் பற்றி விளக்கினார்; சுற்றிக் காட்டினார். ஆசிரியர்களை அமைச்சருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். ஏற்கெனவே அமைச்சரை நன்கு அறிந்தவர் திருவேங்கடாச்சாரி. பிறிதொரு சமயம் இங்கேயே நடைபெற்ற முகாமில் திருச்சி வழக்கறிஞர் திரு. P. அரங்கசாமி ரெட்டியார் பங்கு கொண்டு சட்டசபையில் சட்டமுன் வடிவு சட்டமாவதை விளக்கினார். மாதிரிக்கு ஒரு மசோதாவை நிறைவேற்றியும் காட்டினார். மற்றொரு நாள் நெல்லை மாவட்ட நீதிபதி எஸ், அரங்கராசன் வருகை புரிந்தார்; இவர் எங்கள் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் திரு. நாராயண அய்யங்காருக்கு உறவினர்; முகாமைப் பார்வையிட்டுச் சென்றார். இந்த முகாமில் கவியரங்கம் ஒன்று நடைபெற்றதாக நினைவு. இங்கிருந்து இரணியூர் ஒரு கல் தொலைவிலுள்ளது. ஒரு நாள் மாலை மாணவர்கள் அனைவரையும் கூட்டிக்கொண்டுசென்று திருக்கோயிலைப் பார்வையிட்டோம். அரிய சிற்பங்கள் நிறைந்த கோயில்.

சூரைக்குடி : காரைக்குடியிலிருந்து இராமவிலாஸ் சினிமா கொட்டகையுள்ள சாலை வழியாக கானாடு காத்தானுக்குள்ள நேர் வழியில் உள்ளது இவ்வூர். சாலையொட்டியே உள்ளது. முகாம் நடத்துவதற்கு இங்கும் வசதிகள் இருந்தன. இங்கு முகாம் நடைபெற்ற போதுதான் காரைக்குடியிலிருந்து அபிசீனியா பழ. நாச்சியப்பன் வந்து பேசினார். இவர் பர்மாவில் நேதாஜி படையில் (I.N.A.—Indian National Army) பணியாற்றியவர். நேதாஜி சுபாஸ்சந்திரபோஸ் மீது பற்றும் பாசமும் மிகுதியாக உடையவர். மிகவும் உணர்ச்சி வசப்பட்டுப் பேசி எல்லோரையும் உணர்ச்சிக் கடலில் ஆழ்த்தினார் என்பது இன்றும் (அக்டோபர்—89) என் மனத்தில் பசுமையாக உள்ளது.

மாற்றூர் : காரைக்குடி இருப்பூர்தி குடியிருப்பி லிருந்து சுமார் 4 கல் தொலைவிலுள்ளது இந்தச் சிற்றூர்.

டாக்டர் வள்ளலுக்கு இங்குள்ள கோயில் குடும்ப வழி பாட்டுக்கு உரியது. இங்கு முகாம் நடைபெற்ற போது திரு. எஸ். சங்கரராஜு நாயுடு அவர் துணைவியாருடன் இருப்பூர்தி சந்திப்பில் இருப்பதாகக் கேள்விப்பட்டு நான் சிற்றுந்தில் (Van) வந்து அவரையும் அவர் துணைவியாரை யும் (புதுமணத் தம்பதிகளாகக் காணப்பட்டனர்) முகா மிற்கு அழைத்து வந்தேன். அவர் துணைவியார் தேசியக் கொடி ஏற்றினார்: நாயுடு 10 நிமிடம் மாணவர்கட்கு உரையாற்றினார். இஃது இன்றும் என் மனத்தில் பசுமை யாகவே உள்ளது.

இராமேச்சுரம் : ஓராண்டு இங்கு முகாம் நடை பெற்றது. உணவிற்கு ஓர் உணவு விடுதி மூலம் ஏற்பாடு செய்தோம். ஒருநாள் உணவுமுறைகள் சரியாக இருந்தன. வர வர தேய்பிறைகள் போல் குறைந்து விட்டன. குத்தகை பேசிய அய்யர் ஏமாற்றி விட்டார். நடுவில் எங்களால் மாற்று ஏற்பாடு செய்ய முடியவில்லை. அப் போது கண்டனூரார் விடுதியில் தங்கியிருந்தோம்.

பிள்ளையார் பட்டி : காரைக்குடியிலிருந்து குன்றக்குடி வழியாக திருப்புத்தூர் செல்லும் சாலையின் மீது உள்ளது. 100 கெ.தூரம் நடந்து ஊருக்குள் செல்ல வேண்டும். சா. கணேசன் இக்கோயிலில் உரிமையாளர் களுள் ஒருவர். இவர் பரிந்துரைத்தபடி ஓராண்டு இங்கு முகாம் இட்டோம், முதல்வர் துரைக்கண்ணு முதலியார் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற முகாம் இது. மாண்புமிகு கல்விஅமைச்சர் திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் காலத்தில் குடிமைப் பயிற்சித்திட்டம் உருவாகியது. இதன் தந்தை திரு. T. V. நீலகண்டன்; நெல்லையில் ஓர் உயர்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியராக இருந்த என் நண்பர் திரு. T. V. ஆறுமுகம்பிள்ளையின் திருத் தமையனார். பத்துநாட்கள் திரு நீலகண்டம் பிள்ளை அவர்களின் தலைமையில்தான் நிகழ்ச்சிகள் நடை பெற்றன.முதல்வர் முதலியார் இவரைச் சிறப்பு விருந்தின

ராக அழைத்திருந்தார். திரு பிள்ளையவர்களின் பங்கு எங்களுக்கெல்லாம் உற்சாகத்தை அளித்தது. முதுமைநிலையிலும் இளைஞர்போல் செயலாற்றியது எங்கட்குப் பெரு வியப்பைத் தந்தது. ஒரு நாள் சா. கணேசனையும் விருந்தினராக அழைத்திருந்தோம். அவரும் மனமுவந்து வந்து எங்களுடன் இருந்தார். பிள்ளையார்பட்டிக்குநேர்வடக்கில் ½ கல் தொலைவிலுள்ள வயிரவன்பட்டிக் கோயிலுக்கும் எங்களை இட்டுச் சென்று காட்டினார். மாணவர் கூட்டத்திலும் ஒரு மணி நேரம் பேசி அவர்கட்கு ஊக்கம் ஊட்டினார். ஒரு நாள் (சனிக்கிழமை) காரைக்குடி சென்று மறு நாள் காலை வீட்டை விட்டு எங்கும் நகராத என்மனைவி, முதல் மகன் இராமலிங்கம் (வயது-7) இராமகிருஷ்ணன் (வயது-3) இவர்களைக் கூட்டி வந்தேன். கோயிலைச் சுற்றிக் காட்டினேன். மாலையில் தனியாகப் பேருந்தில் அனுப்பி வைத்தேன். ஒரு நாள் இரவு மாணவர்கள் நிகழ்த்திய கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களித்து விட்டுப் படுக்கைக்குப் போனோம். என் அருகில்தான் திரு. T. V. நீலகண்டன் படுக்கையை விரித்திருந்தார். நான் படுத்ததும் 2 நிமிடத்தில் தூங்கிவிட்டேன். மறுநாள் திரு. நீலகண்டன், ''என்ன ரெட்டியார், மின்னல் வேகத்தில் தூங்கி விட்டீர்கள். எனக்குத் தூக்கம் வருவதற்கு அரைமணி நேரத்திற்கு மேலாகின்றது'' என்றார். நான் ''மனத்தில் தீய எண்ணங்கள் இல்லை. குடும்பக் கவலையும் இல்லை. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்றாற்போல மனநிறைவு உடையவன். அதனால் உடனே தூங்கி விடுகின்றேன்'' என்றேன். ''ஆம்; உண்மை, உண்மை'' என்று ஆமோதித்தார் அந்தப் பெரியவர்.

குடிமைப்பயிற்சி என்றால் என்ன? விடுதலை பெற்ற நாட்டில் வாழும் குடிமகன் ஒழுங்காக இருத்தல், செய்வன திருந்தச் செய்தல், எத்தொழிலைச் செய்யும் பொறுப்பு வகித்தாலும் கடமைகளைத் தவறாது செய்தல்,

காலத்தை வீணாக்காதிருத்தல், நாட்டுப்பற்று, உடல் நலத்தைப் பேணல், உள்ளத்தைத் தூய்மையாக வைத் திருத்தல் போன்ற நற்குணங்களையும் நற்பழக்கங்களை யும் உடையவனாக இருந்து வாழ்தல் என்பது குறிக் கோள். கட்டுப்பாடுடனும் ஒற்றுமையுடனும் வாழ்தல், பிறர் கருத்துக்கு மதிப்பு தருதல், தன் கருத்தை வலிந்து ஒருவர்மேல் திணிக்காதிருத்தல், சமத்துவம், சகோரத் துவம் போன்றவைகளும் குறிக்கோளாகக் கொள்ளத் தகும். இதற்கேற்ற பயிற்சி பள்ளியிலேயே (ஆறாண்டுக் காலம்) தரவேண்டும் என்பது புதிய கல்விக் கொள்கை யாக இருந்தது. இதைச் செயற்படுத்துவதற்குப் பள்ளி களில் பணியாற்றப் போகும் ஆசிரியர்கள் பயிற்சி பெற் றிருத்தல் வேண்டும் என்பதை நோக்கமாகக்கொண்டு பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறும் ஆசிரியர்கள் குடிமைப் பயிற்சியும் பெறவேண்டும் என்ற கல்வித்திட்டத்தின்படி பயிற்சிக் கல்லூரிகள் இதில் பயிற்சி அளித்துவந்தன. பத்து நாட்கள் கல்லூரிக்கு வெளியே இப் பயிற்சி நடை பெறல்வேண்டும் என்பது விதி.

இத்திட்டம் செயற்பட்ட முறையை விளக்க நினைக் கின்றேன். அழகப்பா பயிற்சிக் கல்லூரியில் முதலில் 100 ஆண்கட்குத்தான் இடம் இருந்தது. இரண்டு ஆண்டு கட்குப் பிறகு 30 பெண்கட்கும் பயிற்சி பெற இடம் ஒதுக்கப் பெற்றது. தக்க இடங்கள் தேர்ந்தெடுக்கப் பெற்று உண்டி, உறையுள் இவற்றிற்கு ஏற்பாடு செய்து அந்த இடத்தில் பயிற்சி தொடங்கும் முதல்நாள் மாலையே அணி வகுக்கப் பெறும். பெண்கள் வந்த பிறகு ஐந்து அணி களாகப் பிரித்தனர். ஒவ்வொரு அணிக்கும் ஓர் அணித் தலைவர், அணித்துணைத்தலைவர் என்று தேர்ந்தெடுக்கப் பெறுவர். பெண்களின் அணியைப்பற்றிப் பிரச்சினைகள் இரா. ஆண்கள் நான்கு அணிகளாகப் பிரிவர், 1, 2, 3, 4......100 வரை எண்கள் தரப்பெற்று 5, 6, 7, 8; 9, 10, 11, 12;....என்ற முறையில் பிரிந்து 4 அணிகளாகுவர்.

பிறகு அவர்கள் அணிகளுக்குள்ளேயே தலைவர், துணைத் தலைவர் என்று தேர்ந்தெடுத்துக் கொள்வர், 130பேரும் சேர்ந்து ஒரு பொதுத்தலைவரைத் தேர்ந்தெடுப்பார். பொதுத்தலைவர் School Pupil Leader (SPL) என்றும் அணித்தலைவர் Squad Pupil Leader (CPL) என்றும் வழங்கப் பெறுவர். அணித்தலைவர் அணியின் ஒழுங்கு முறையையும், பொதுத் தலைவர் எல்லா அணிகளின் ஒழுங்கையும் கவனித்துக் கொள்வார்.

ஒவ்வொரு அணிக்கும் இருக்கை வசதிகள் பிரித்து அளிக்கப்பெறும். மகளிருக்குத் தனி இடம் ஒதுக்கித் தரப்பெறும். இவர்களுடைய வசதிகளைக்குமாரி மெய்யப்பா என்னும் பேராசிரியை பார்த்துக் கொள்வார். பெண்கள் கழிப்பிடங்களைப் பயன்படுத்துவர்; ஆண்கள் விருப்பப்படி செய்து கொள்வர்; கழிப்பிடங்களையும் பயன்படுத்துவர்; வெளியிலும் செல்வர். விடுதிகளில் மறைவாகக் குளிப்பதற்கு குளிப்பறைகள் இருந்தன. முகாம் அமைப்பதற்கு முன்னர் முதல்வர், திருவேங்கடாச்சாரி, நான் அந்தந்த இடங்களைப் பார்வையிட்டு இவ் வசதிகளையெல்லாம் சோதித்து அறிந்த பிறகு அந்த இடம் தேர்ந்தெடுக்கப் படும். செட்டி நாட்டுப் பகுதியில் பணியாற்றிய எங்கட்கு இவ்வசதிகள் இயல்பாகவே அமைந்திருந்தது எங்கள் பேறு என்றே கருதுகின்றோம்.

நாடோறும் அதிகாலை 5-45க்கே பள்ளித் தலைவர் (SPL) சீழ்க்கை (Whistle) ஒலியால் அணித் தலைவர்களை எழுப்ப அவர்கள் அணியிலுள்ளவர்களை எழுப்பி விடுவார். 5-45 முதல் 6-00க்குள் காலை காஃபி பானம் முடிந்து விடும். 6-6-30 வரை உடற்பயிற்சிப் பேராசிரியர் உடற்பயிற்சி தருவார். இதன் பிறகு குளியல் முதலியவை நடைபெறும். 7-45 மணிக்குள் குளியல் வேலை, வசிக்கும் இடங்களைத் துப்புரவு செய்து தத்தமக்குரிய பொருள்களை ஒழுங்காக வைத்தல், தாம் ஒழுங்காக ஆடைகள்

அணிகள் முதலியவற்றை முடித்துக் கொண்டு தயாராகி விட வேண்டும். பள்ளித் தலைவர் (SPL) இவற்றை யெல்லாம் சரி பார்த்துப் பிறகு முகாம் தலைவரிடம் வந்து (திருவேங்கடாச்சாரிதான் பெரும்பாலும் முகாம் தலைவ ராக இயங்குவார்) ''நாங்கள் தயார்'' என்று அறிவிப்பார். முகாம் தலைவர் மூன்று பேராசிரியர்களை இட்டுக் கொண்டு சென்று மாணவர்கள் வசிக்கும் இடங் களைப் பார்வை இடுவார். மூன்று பேராசிரியர்களும் தனித்தனியாக அணிகட்கு மதிப்பெண்கள் வழங்குவர். இவற்றைக் கூட்டி அதிகமாகப் பெற்ற முதல், இரண்டு, மூன்று அணிகளின் பெயர்கள் கொடியேற்றும் நிகழ்ச்சிக்குப் பிறகு மதிப்பெண்கள் வழங்கிய ஆசிரியர் ஒருவரால் அறிவிக்கப் பெறும்.

எட்டு மணிக்குப் பேரவை கொடிக் கம்பத்தருகே வந்து பகர வடிவில் கூடும். ஒவ்வொரு அணித் தலைவரும் அவரவர் அணிகளைத் தங்கும் இடங்களிலிருந்து அணி அணியாகப் படையணிச் செலவு போல் நடத்திக் கொண்டு வந்து நிறுத்துவார். பள்ளித் தலைவர் ''எல்லாம் தயார்'' என்று அன்றைய கொடியேற்றும் பொறுப்பி லிருப்பவரிடம் கூற அவர் கொடியேற்றுவார். எல்லோரும் ஒழுங்காக நின்று கொடி வணக்கம் செய்வர். 8-30 முதல் 9-30க்குள் சிற்றுண்டி, காஃபி வழங்கப்பெறும். இவற்றை முடித்துக் கொண்டு 10 மணிக்கு வகுப்பிற்கு வந்து தயாராக இருப்பர். 10-12 வரை பாடத் திட்டத்தையொட்டிச் சொற்பொழிவுகள் நடைபெறும்; இருவர் வகுப்பை ஏற்பர்.

பகல் 12-15க்கு நண்பகல் உணவு. ஒரு மணிக்கு இது முடியும். 1 மணி முதல், 2 மணி வரை ஓய்வு. 2-4 மணி வரை மீண்டும் வகுப்புகள் தொடரும். சில நாட்கள் (2,3 நாட்கள்) பிற்பகல் நாடாளுமன்றம் நடைபெறும் முறைகள் விளக்கப்பெறும். இது போலி நாடாளு

மன்றம் (Mock Parliament) என்று வழங்கப்பெறும். ஏதாவது மூன்று சட்ட வாசகம் (Clause) கொண்ட சட்டமுன் வடிவு தயாரிக்கப் பெற்று அது சட்டமாக நிறை வேறும் முறை விளக்கப்பெறும்.

4-15 முதல் 4-45 வரை மாலைச் சிற்றுண்டி, காஃபி. அதன்பிறகு 7-30 வரை பணிகளிலிருந்து விடுதலை. வெளியில் சுற்றிப் பார்க்கலாம். 7-30 மணிக்கு இரவு உணவு. 8-15 முதல் 10 மணி வரை கலை நிகழ்ச்சிகள். இதில் மெல்லிசை, சிறு நாடகங்கள், நகைச்சுவை நிகழ்ச்சிகள் இடம்பெறும். ஒவ்வொரு அணியும் போட்டி யாக நிகழ்ச்சிகளை வழங்கும். முகாமில் கலந்து கொண்டுள்ள மாணாக்கர்கட்கும் பேராசிரியர்கட்கும் கண்ணுக்கும் காதிற்கும் இவை நல்விருந்தாக அமையும். இங்குத்தான் மாணாக்கர்களின் தனித் திறமை, தனிப் பண்பு, சமூகப்பழக்கம் முதலியவற்றை அறிந்து கொள்ளும் வாய்ப்புகள் கிடைக்கும்.

திருப்பாராய்த்துறை: பேராசிரியர் சீநிவாசன் முதல்வராக இருந்த காலத்தில் இங்கு முகாம் அமைக்கும் பேறு கிடைத்தது. சித்பவாநந்த அடிகள் மனமுவந்து முகாம் அமைக்க இசைவு தந்தார். நானும் திருவேங்கடாச்சாரியும் இங்கு வந்து இட வசதிகளைச் சரி பார்த்ததாக நினைவு. எங்கள் தேவைகளை நாங்கள் அடிகளாரிடம் தெரிவிக்க, அடிகளார் ராமுடு (அலுவலக மேலாளர்), பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. இராமகிருஷ்ணன் இவர்களைக் கொண்டு எங்கள் தேவைகளை நிறைவு செய்தார்.

பிற இடங்களில் எல்லாம் உணவு வசதிகட்கு நாங்களே எங்கள் கல்லூரி சமையல்காரர்களையும், வேறு சில ஆட்களையும் கொண்டு ஏற்பாடுகள் செய்து கொண்டோம். இராமேச்சுரத்தில் உணவு விடுதி அய்யரிடம் ஒப்பந்தம் செய்து கொண்டு ஏமாந்ததைத்

தவிர, பிற இடங்களில் நாங்களே ஏற்பாடு செய்து கொண்டதால் மாணாக்கர் நன்கு உண்டு மகிழ்ந்தனர். உணவு பரிமாறும் பொறுப்பும் நாளொன்றுக்குச் சிலராகப் பொறுப்பு தரப் பெற்றது. அவர்களும் தட்டுத் தடுமாறிப் பயின்றபோது உண்பவர்கள் குறைகளையெல்லாம் நிறைகளாகக் கொண்டு மகிழ்ந்தது எங்கட்குப் பெரு மகிழ்ச்சியைத் தந்தது.

திருப்பாராய்த் துறையில் ஆள் ஒன்றுக்கு நாள் கட்டணம் இவ்வளவு தொகை என்று கணக்கிட்டு உணவுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதால் எங்கட்கு உணவு பற்றிய சங்கடங்கள் ஏற்பாடு செய்வதில் தொல்லைகள் இவை இல்லாமல் போயின. தவிர பி.டி. மாணவர்கட்கு விடுதியில் உணவு தயாரிக்கும் முறை (கஞ்சி வடிக்காது தயாரிக்கும் முறை), காய்கறிகள் செய்யும் வகைகள், மாவு அரைக்கும் முறைகள், பாலுக்கு ஏற்பாடு செய்யப் பெற்றிருக்கும் வழி வகைகள் (மாடு பராமரிப்பு முதலியவை),இவை எல்லாவற்றையும்விட மாணாக்கர்கள் திறமையாக உணவு, சாம்பார், ரசம், மோர் முதலிய வற்றைப் பரிமாறும் லாவகம், காஃபிக்குப் பதில் மால்ட் கொள்ளல், மாணாக்கர்கள் உண்ணும்முன் மந்திரம் சொல்லுதல், உண்டு முடித்த பின் அநுமனுக்கு விண்ணை இடிக்கும் முறையில் சேர்ந்து முழங்கும் மரியாதை முழக்கம், தட்டுகளைத் தாங்களே கழுவி வரிசையாக வைக்கும் ஒழுங்கு முறைகள், மாணாக்கர்கள் ஆசிரியர் களுடனும், பெரியவர்களுடனும், புதியவர்களுடனும் பணிவாகப் பழகும் முறைகள் இவற்றையெல்லாம் கவனிக்கும் வாய்ப்புகள் கிடைத்தன. புதியவர்களாகப் பணியாற்றப் போகும் ஆசிரியர்கள் இவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா?

இவை தவிர, மாணாக்கர்கள் கழிப்பிடங்களைப் பயன்படுத்திய பிறகு அவற்றை எளிதாகத் தூய்மை செய்வதற்கேற்ற அமைப்பு, நீச்சல் குளத்தைப் பயன்

படுத்தும் முறை, காலையில் பெறும் உடற்பயிற்சி, ஆற்றில் நீராடும் முறைகள், எல்லா இடங்களிலும் எல்லாச் செயல் களிலும் ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடித்தல் போன்ற வற்றை அறியவும்; படுக்கையில் வகுப்பறை, இருக்கை வசதிகள் அமைப்பு, ஆசிரியர்கள் அமைதியாகக் கற்பிக்கும் முறைகள் இவற்றைக் கவனிக்கவும் வாய்ப்புகள் கிடைத்தன.

இத்தனைக்கும் மேலாக அடிகளார் சில நாள் தங்கட்குக் கற்பித்தலால் தாம் பெற்ற பேறு கிடைத்தற் கரியது என்பதை உணர வாய்ப்பு ஏற்பட்டது. ஒரு துறவி சமூகத் தொண்டில் ஈடுபாட்டுடன் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட முறை அனைவர் கவனத்தையும் கருத்தையும் ஈர்த்திருக்க வேண்டும். ஒரு சில ஆசிரியர்களையாவது இத்தகைய குறிக்கோள்களைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கத் தூண்டியிருக்கவேண்டும்.

இந்த முகாம் நடைபெறும் நாட்களில் வள்ளல் அவர்கள் திருச்சியில் இருக்கும் சந்தர்ப்பம் இருந்தது. இது தெரிந்து முகாமிற்கு வருகை புரியுமாறு எழுதியிருந்தார் முதல்வர். வள்ளலும் வருகை தர ஒப்புக் கொண்டிருந் தார். அந்தக் குறிப்பிட்ட நாளில் அவரை இட்டு வர நான் அதிகாலையில் திருச்சி சென்றேன். வள்ளல் திருச்சி இருப்பூர்தி நிலையத்திலுள்ள அறையொன்றில் தங்கியிருந் தார். வள்ளல் வருகையையொட்டி அவருக்காகச் சிறப் பான முறையில் சிற்றுண்டி தயாரிக்கப் பெற்றிருந்தது. சிற்றுண்டிக்குப் பிறகு மாணவர்கட்கு அறிவுரை வழங்க வும், பகலுணவு எல்லோருடனும் கலந்து உண்ணும் வாய்ப்பு தருவதற்கும் ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருந் தன. ஆனால் ஏதோ எதிர்பாராத நிகழ்ச்சியால் தம்மால் வர முடியாத நிலையை வருத்தத்துடன் தெரிவித்தார். நான் ஏமாற்றத்துடன் வாளா திரும்பினேன். என் ஏமாற்றம் தொற்று போல் அனைவரையும் பற்ற,

அனைவரும் ஏமாற்றமடைந்தனர். அவர் வருகை புரிந் திருந்தால் முகாமிற்கு ஒரு களை தட்டியிருக்கும். அடிகளாரின் ஆசியும் அவருக்குக் கிடைத்திருக்கும்.

குமிழி—146

## 39. என் பதவி உயர்வு

நான் துறையூரிலிருந்து காரைக்குடிக்கு வந்து பணி யேற்ற போது பேராசிரியர் நிலையிலேயே பணி கிடைத் திருக்க வேண்டும். அதற்கு வேண்டிய ஊழ் இன்மையால் கிடைக்கவில்லை. விளம்பரத்தைப் பார்க்கவே ஊழ் இல்லை. எல்லோருக்கும் நியமன ஆணை பிறப்பித்த பிறகுதான் தமிழ்த் துறை பற்றிய சிந்தனையே எழுந்தது. காரணம், தமிழ்த்துறைக்கு ஒரு விண்ணப்பம் கூட வரவில்லை. ஏதோ மறைந்து கிடந்த 'பழவினை' செயற் பட்டது சா. க. மூலம். விரிவுரையாளர் (இப்போதுள்ள துணைப் பேராசிரியர் பதவி) பதவி கிடைத்தது. இது வினையின் பயன் என்றே கொள்ளுதல் வேண்டும். 'ஊழ்' என்ற சொல்லுக்கு 'இருவினைப் பயனும் செய்தவனையே சென்றடைவதற்கேதுவான நியதி' எனப் பொருள் உரைப்பர் பரிமேலழகர்.[1] இதன் வலிமையை சமண முனிவர்,

பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையும் அன்னதகைத்தே; தற்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு.[2]

என்ற பாடலால் விளக்குவர்.

1. 'ஊழ்' அதிகாரம் காண்க.
2. நாலடி—101 (பழவினை)

இயற்கையிலேயே என்னை சுறுசுறுப்புடையவனாகப் படைத்தான் இறைவன். எந்தச் சமயத்திலும் நான் சுறுசுறுப்பின்றி சோம்பலுடையவனாக இருந்ததில்லை. காரைக்குடி விளம்பரத்தைப் பார்க்கச் சந்தர்ப்பமின்றிச் செய்ததும், அதற்கு விண்ணப்பிக்கச் செய்யாதவாறு செய்ததும் இறைவன் திருவுள்ளமே என்பது என் கருத்து. என்னை வேறு திசையில் சுறுசுறுப்புடையவனாகச் செய்து காரைக்குடி நடவடிக்கைகளையே நான் கவனிக்காது செய்து விட்டான். இஃது என் தீவினையின் பயனாகும். ஐந்தாறு ஆண்டுகள் காரைக்குடியில் மிகத் தீவிரமாக எழுத்துப்பணியில் என் கருத்தினைச் செலுத்தி அதில் ஆழங்கால் பட்டவனாக இருந்தேன். நூல்களின் எல்லாக் கைப்படிகளையும் சா. க. விடம் காட்டுவதுண்டு. அவர் எப்படியோ என் திறமையை அளந்து கொண்டு விட்டார். என்னை இப்பணியில் மேலும் மேலும் ஊக்கிக் கொண்டே இருந்தார். ஒரு நூலை வெளியிடுவதற்கும் 'வாய்ச் சொல்' அருளி உதவினார். 'தமிழ் பயிற்றும் முறை' என்ற பெரு நூலும் வெளிவந்தது. அஃது எனக்குப் பெரும் புகழை ஈட்டியது.

பேராசிரியர் திருவேங்கடாச்சாரி ஒரு சமயம் படிப்புதவி பெற்று ஆறு திங்கள் அமெரிக்கா சென்றிருந்தார். அதன் பிறகு தம் விடுப்பை நீட்டிக் கொண்டு மேலும் மூன்று திங்கள் தங்கி விட்டார். அங்குக் கல்வியில் (Education) ஒரு எம்.ஏ பட்டமும், போதிப்பதில் (Teaching) ஒரு எம். எட் பட்டமும் பெற்றுத் திரும்பினார். அப்போது அவர் இருந்த பதவிக்கு (Professorship) நான் முயன்றேன். அப்பொழுது பயிற்சிக் கல்லூரியில் உள்ள இரண்டு ஆசிரியர்கள் பேராசிரியர் நிலையில் இருக்க வேண்டும் என்பது பல்கலைக் கழக விதி. திரு ஆச்சாரி அமெரிக்கா சென்று விட்டார். ஒரு பேராசிரியர்தான் ஆசிரியர்க் குழுவில் இருந்தார். என்னைப் பேராசிரியர் நிலைக்குத் தற்காலிகமாக உயர்த்துமாறு நிர்வாகத்திற்கு

விண்ணப்பித்தேன். குறைந்த காலமாகிய ஓராண்டிற்கு அப்பதவியை எனக்குத் தர நிர்வாகம் விரும்பவில்லை என்பதை நான் அறிந்து கொண்டேன்.

டாக்டர் வள்ளல் இருக்கும்போதே டாக்டர் மணவாளராமானுசம் அவர்கள் (முன்னாள் துணைவேந்தர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) அழகப்பா பயிற்சிக் கல்லூரி நிர்வாகக் குழுவில், சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் உறுப்பினராக இருந்தார். அவர் காரைக்குடி வரும் போதெல்லாம் அவரைச் சந்தித்து என் பதவி உயர்வில் துணைபுரியுமாறு வேண்டினேன்; அவரும் உடன் பாட்டில் பதில் தந்தார். அவருக்குப் பிறகு திரு. மு.ரா. பெருமாள் முதலியார் அவரிடத்தைப் பெற்றார். அவர் உதவியையும் நாடினேன்; அவரும் மகிழ்ச்சியுடன் உதவுவ தாகத் தெரிவித்தார். ஆனால் இவர்கள் இருவரும் உதவும் வாய்ப்பு நேரிடவில்லை. டாக்டர் வள்ளல் இருந்தபோதே (மறைவு 5-4-1957, பிறப்பு 6-4-1909) அவருடைய ஒன்று விட்ட சகோதரர் K.V.AL.M. இராமநாதன் செட்டியார் கல்லூரியின் தாளாளர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார்—ஏதோ கருத்து வேறு பாட்டினால். அந்தப் பொறுப்பை C. V. CT. V. வேங்கடாசலம் செட்டியார் ஏற்றார். இவரும் என்பால் மிகவும் அன்பு கொண்டிருந் தார். இவர் காலத்தில் தான் என் பதவி உயர்வுக்குரிய சந்தர்ப்பமும் எழுந்தது. இதற்கு முன்னர் வள்ளல் அழகப்பரும் திருநாடு அலங்கரித்து விட்டார். டாக்டர் வள்ளலுக்குப் பிறகு டாக்டர் அழகப்பச் செட்டியார் கல்வி அறக்கட்டளைக்கு (Dr Alagappa Chettiar Education Trust) அக்காலத்தில் சென்னை மாநில நிதிகல்வி அமைச்சராக இருந்து சீரும் சிறப்புமாகப் பணியாற்றி வந்த சி. சுப்பிரமணியம் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். என் பதவி உயர்வு பற்றி இவரையும் சந்தித்து வேண்டுகோள் விடுத்தேன்; ஆவன செய்வதாக அன்புடன் தெரிவித்தார். இக்காலத்தில்தான் அணுவின்

ஆக்கம் என்ற நூலுக்கு திரு. சி. சுப்பிரமணியம் அணிந்துரை நல்கினார்; நூலும் முன்னாள் கல்வி அமைச்சர் திரு. தி. சு. அவினாசிலிங்கம் அவர்கட்கு அன்புப் படையலாக்கப் பெற்று வெளி வந்தது.

அமெரிக்காவிலிருந்து திரும்பிய பேராசிரியர் திரு. வேங்கடாச்சாரி நடுவண் அரசு பொறுப்பில் கல்லூரியுடன் இணைக்கப் பெற்ற விரிவுத்துறைப் பணியில் (Extension Services) இணைப்பு அதிகாரி ஆனார். இப்பதவி பல ஆண்டுகள் நீடிக்கும் எனத் தெரிந்ததால், பேராசிரியர் பதவிக்கு முயன்றேன்; நிர்வாகத்திற்கு விண்ணப்பமும் வைத்தேன். இப்பொழுது அழகப்பர் கலைக் கல்லூரிக்கு திருநெல்வேலி இந்து கல்லூரி முதல்வராக இருந்த அலெக்ஸாண்டர் ஞானமுத்து முதல்வராகப் பொறுப் பேற்றிருந்தார். இவர் பயிற்சிக் கல்லூரியின் நிர்வாகக் குழுவிலும் உறுப்பினரானார். C.V.CT.V. வேங்கடாசலம் செட்டியார் தாளாளர் பொறுப்பேற்ற பிறகு அவருக்கும் சா. க. வுக்கும் கருத்து வேறுபாடு இருந்தமையால் சா. க. நிர்வாகத்தில் அதிகமாக ஈடுபாடு காட்டாமல் சற்று ஒதுங்கியே இருந்தார். அதனால் என்விஷயத்தில் தலையிட விரும்பவில்லை. முன்னாள் தாளாளர் திரு. K.V.AL.M. இராமநாதன் செட்டியாரைப் பார்த்துப் பேசுமாறு யோசனை கூறினார். நானும் அவ்வாறே செய்தேன். (அவர் அறக்கட்டளையில் உறுப்பினர் பதவியைத் துறக்க வில்லை).

"வாழ்க்கையில் எத்தனையோ பிரச்சினைகள் எழு கின்றன. பெரியவர்களின் ஆசியும் உதவியும் சிலருக்கு எளிதில் பின்னணியாக அமைந்து விடுகின்றன. அவர்கள் உதவி இயல்பாக அமைந்துவிடுகிறது; அவர்களும் மிகவும் ஈடுபாட்டுடன் நுழைந்து செயலாற்றுகின்றனர். சிலருக்கு அவ்வாறு அமைவதில்லை; ஓரேர் உழவன்போல் எல்லாச் செயல்களையும் அவர்களே ஆற்ற நேரிடுகின்றது.

பேராசிரியர் பதவிக்கு எங்கள் கல்லூரியில் மூவர் பெயர்கள் அடிபட்டன. அதில் அடியேன் ஒருவர் துணையும் இல்லாத நிலையில் விண்ணப்பம் வைத்து நேரில் முயன்றேன். எனக்காக நிர்வாகத்திற்குப் பரிந்துரைப்பதற்கு யாரும் இல்லாததால் நானே எல்லா நிலைகளிலும் உரியவர்களைப் பார்ப்பதில் தீவிரமாக ஈடுபட்டேன். 'திக்கற்றவருக்குத் தெய்வமே துணை' என்ற வாக்கின்படி 'அவன்' உதவுவான் என்ற நம்பிக்கையில் முயன்று வந்தேன். இது எல்லோருக்கும் தெரிந்துவிட்டது.

என் நண்பர், வகுப்புத் தோழர், திரு K. நாராயண அய்யங்கார் நெல்லை மாவட்ட நீதிபதி எஸ். அரங்கராசன் மூலம் இரகசியமாக முயன்று வருகின்றார் என்பது எனக்குத் தெரிய வந்தது. இருவரும் உறவினர்கள். திரு. அரங்கராசன் என் வக்கீலாக இருந்தவர்; என்னுடன் நெருங்கிப் பழகியவர். திரு. அரங்கராசன் அரியக்குடியைச் சார்ந்த திரு அரிகிருட்டிணன் செட்டியாரிடம் சொல்லித் தாளாளருக்குப் பரிந்துரைக்குமாறு ஏற்பாடு செய்தார். திரு C. V. CT. V. வேங்கடாசலம் செட்டியாரும் திரு அரிகிருட்டிணன் செட்டியாரும் உறவினர்கள்; நெருங்கிய நண்பர்களும்கூட. இந்தச் செய்தியையும் நான் அறிந்து கொண்டேன்; நான் முயலாமல் இச் செய்தி எனக்கு எட்டியது. இதுதவிர, அழகப்பா கல்லூரி முதல்வர் திரு அலெக்ஸாண்டர் ஞானமுத்து எங்கள் கல்லூரியில் என்னுடன் பணியாற்றிய திரு. அய்யாதுரை ஜேசுதாசனை உயர்த்தத் திருவுள்ளங்கொண்டு செயற்பட்டார் என்பதைப் பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றால் அறிந்து கொண்டேன். திரு ஜேசுதாசன் இப்பதவிக்கு முயன்றாரா? அல்லது ஞானமுத்துவே இவர் முயலாமலே செயற்பட்டாரா என்பது எனக்குத் தெரியாது. இன்றைய உலகில் பல மட்டங்களில் சாதியும் சமயமும், திறமையுடையவர்கட்குத் தடைக்கற்களாக இருந்து அவர்களது முன்னேற்றத்தைக்

குலைத்து வருவதை 'அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிலைப் பெற்றிருப்பதைக் காணும்போது உலகம் எங்குப் போய்க் கொண்டிருக்கிறது? என்று அறிஞர்கள் சிந்திகின்றனர்; மனம் குமுறுகின்றனர்.

எங்கள் முதல்வர் துரைக்கண்ணு முதலியாரின் மகள் திருமணம் விழுப்புரத்தில் நடைபெற்றது. அதையொட்டிக் காரைக்குடியில் எங்கள் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஒரு விருந்து அளித்தார். அதற்குத் தாளாளர் செட்டியாரும், அறக்கட்டளை மேலாளர் திரு T.V.S. மணியனும் வந்திருந்தனர். விருந்து பகல் பன்னிரண்டரை மணிக்கு நிறைவு பெற்றது. முதல்வர் வீட்டிற்கு முன்னால் போடப் பெற்றிருந்த ஒரு கொட்டகையில் எல்லோரும் உட்கார்ந்திருந்தோம். அப்போது எல்லோரும் எதிர்பாரா வகையில் ஒரு திடீர் நிகழ்ச்சி நடைபெற்றது. அனைவரும் அதிர்ந்து போயினர். நானும் வியந்து போனேன். தாளாளர் செட்டியார் மணியனை நோக்கி, ''மணியன், ரெட்டியாரின் பதவி உயர்வு வீணாக இரண்டாண்டுகளாக இழுபறியாகிவிட்டது. K. V. AL. M. இராமநாதன் செட்டியார் இச்சமயம் மலேயாவுக்குக் குடும்பத்துடன் செல்கின்றார்; கப்பலில் போவதாகச் சொன்னார். பயணம் சொல்லிக் கொள்ள என் இல்லத்திற்கு வந்த போது, 'ரெட்டியாரின் பதவி உயர்வு இரண்டாண்டுகளாக இழுபறியாகக் கிடக்கின்றது. உடனே பதவி உயர்வுக்கு ஆணை பிறப்பித்து, அந்த ஆணையின் நகல் ஒன்றை AIR MAIL தபாலில் எனக்கு அனுப்ப வேண்டியது. கப்பலில் செல்லும் நான் என் இல்லத்தில் புகும்போது ரெட்டியாரின் பதவி உயர்வு ஆணையின் நகல் என் மேசையின் மீது காத்திருக்க வேண்டும். அது இல்லாவிட்டால் நான் அறக்கட்டளை உறுப்பினர் பதவியை இதையே காரணம் காட்டி ராஜினாமா செய்து CABLE மூலம் தெரிவித்து விடுவேன்'' என்று சொல்லிப் போனார்.

அதனால் ''நீ இப்போது உடனே உன் கையாலேயே ஆணையைத் தட்டச்சு செய்து 4 படிகள் எடு. முதல் வேலையாக ஒரு நகலை மலேயாவுக்கு அனுப்பிவிடு.'' என்று கூறியவர் என் பக்கம் திரும்பி, ''மிஸ்டர் ரெட்டியார், பிற்பகல் எத்தனை மணிக்கு வகுப்புக்குப் போகின்றீர்?'' என்று கேட்டார்; நான் ''பிற்பகல் 2-15க்கு'' என்றேன். மீண்டும் மணியனை நோக்கி, ''இன்று முற்பகலில் சேர்ந்ததாக ஆணையைத் தயார் செய்து, அவர் வகுப்பிற்குப் போவதற்கு முன்னர் அவர் கைக்குக் கிடைக்கச் செய்க'' என்று கூறி முதல்வரைப் பார்த்து, ''முதலியார், இதற்கு முன்னுரிமை தந்து கவனிக்கவும்'' என்று கேட்டுக் கொண்டார். இப்படி நாடகப் பாங்கில் என் பதவி உயர்வு வந்தது. 'என் உள்ளத்தில் அந்தர்யாமியாக இருக்கும் ஏழுமலையப்பனே இவ்வாறு செய்வித்தான்' என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை.

எனக்கு விரோதமாகச் சதி செய்த என் நண்பர் ஒருவர், இப்பதவி எனக்குக் கிடைக்காமலிருக்க தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் பாங்கில் முயன்ற செயலும், அலெக்ஸாண்டர் ஞானமுத்துவின் சாணக்கியமும், சாணக்கியத்திற்குப் பொருளாக இருந்த என் நண்பரின் மனமும், ஏனைய தோழ ஆசிரியர்களின் மனநிலையும், என்னை எலியைப் பிடித்துக் கொல்லுவதைப்போல் என்னைப் பலி கிடாவாக்க முயன்றவரின் மனமும், இதற்குப் பொறியாகச் செயற்பட்ட முதல்வரின் உள்ளமும் எப்படி எப்படியெல்லாம் சிந்தித்து மகிழ்ந்து (அல்லது துக்கித்து) இருக்க வேண்டும் என்பதை வாசகர்கள் எண்ணிப் பார்ப்பார்களாக. சதியை விவரமாக எழுத என் கை மறுக்கின்றது; மனம் கூசுகின்றது.

மனத்தாலும் சொல்லாலும் செயலாலும் ஒருவருக்கும் தீங்கு செய்யாத அடியேனைத் துன்பத்துக்குள்ளாக்க முயன்றவர்கட்கு ஆண்டவன் நல்வழி காட்டுவானாக

என்று அவனை வேண்டுகிறேன். பாரதப் போர் முடிந்தது போன்ற நிலை இது. நான் இனி விழிப்பாக இருக்க வேண்டும் என்பது எனக்கு இறைவன் புகட்டிய பாடம். பாரதப் போர் முடிந்ததும் இன்னும் ஏதாவது பாண்டவர் கட்குத் தீங்கு நேரிடக் கூடும் என்று கண்ணன் விழிப்பாக இருந்து ஐவரையும் பாஞ்சாலியையும் ஒருவரும் காணா விடத்து மறைத்தான். அப்படியே திருவருளைத் துணை யாகக் கொண்டு விழிப்பாகவே இருந்தேன். காரைக்குடியி லிருந்த வரை ஒன்றும் நேரிடவில்லை. திருப்பதி சென்ற பிறகு தீங்கொன்று நேரிட்டது. பாரதப் போரில் துரோணருடைய மகன் அசுவத்தாமன் எய்த அபாண்ட அத்திரத்தால் அபிமன்யுவின் மனைவி உத்தரையின் கருப்பத்தில் வெந்து கரியான குழந்தையைக்கண்ணபிரான் பரீட்சித்து என்னும் அழகிய அரச புத்திரனாக்கிய வரலாற்றை நாம் அறிவோம். இது போன்ற நிகழ்ச்சி யொன்று என் வாழ்வில் நான் திருப்பதிக்குச் சென்ற பிறகு நிகழ்ந்தது. அஃது அடுத்து வரும் குமிழியொன்றில் வெளிப்படும்.

குமிழி—147

# 40. என் பதவி உயர்வில் ஏற்பட்ட தடைகள்

'தகுதியானவைதாம் பிழைத்து வாழும்' என்பது டார்வின் என்ற அறிவியலறிஞர் கண்ட விதி. இந்த விதியை வைத்துக் கொண்டு சீவராசிகளின் வாழ்க்கைச் சரிதத்தை விளக்குவர் அந்த அறிவியலறிஞர். இவையெல் லாம் இயற்பியல் சூழ்நிலைக்கு (Physical envrionment) பொருந்தும். காட்டுமிராண்டிகளாக வாழ்ந்து வந்த

மனிதனுக்கும் பொருந்தும். ஆறறிவு படைத்த மனிதன் படிப்படியாக வளர்ந்து நாகரிக ஏணியில் உயர்ந்த நிலையை அடைந்த பிறகும் இந்த விதி வேறொரு வகையில் செயற்படுகின்றது; விரும்பத் தகாத வகையிலும் செயற்படுகின்றது. இந்நிலையில் அறிஞர்கள் தோன்றி நீதி நூல்களை வகுத்து நல்லனவற்றைக் கடைப்பிடிக்கவும் அல்லனவற்றைப் புறக்கணிக்கவும் வழி செய்திருக்கின்றனர். கடவுள், சமயம், நம்பிக்கைகள், பிறப்பு—இறப்பு பற்றிய கொள்கைகள், இவ்வுலகம், உம்பர் உலகம், இறை உலகம்—என்பவை பற்றியெல்லாம் நிறைய நூல்களை எழுதி மன்பதை உய்வதற்கு வழி செய்துள்ளனர். ஆயின், இவையெல்லாம் பெரும்பாலோருக்குப் பொருந்துவதில்லை. ஒருவன் பாய்க்குள் புகுந்தால், மற்றொருவன் கோலத்திற்குள் புகுகின்றான். இத்தகையவர்களை நன்னெறியில் உய்க்க வேண்டுமாயின் அந்த இறைவன் தான் காப்பாற்ற வேண்டும்.

மனிதன் கண்ட தத்துவங்கள் எல்லாம் 'யோசிக்கும் வேளையில் பசி தீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்' என்று சொல்லும் கொள்கைதான் தலை நிமிர்ந்து செயற்படுகின்றது. இந்தக் கொள்கையும் விநோதமாகச் செயல்படுகின்றது. வல்லரசுகள் மெல்லரசுகள் முதலியவையெல்லாம் கூட இந்தக் கொள்கையின் பரிணாம விநோதங்கள் தாம்.) இந்த உயர்ந்த சிந்தனையை விட்டுக் குறுகிய வாழ்க்கை வட்டத்திற்கு வருவோம். சாதாரண பணி வகையில் கூட விதிகள் வகுக்கப்பெற்று அவை நடை முறைப்படுத்தப் பெறுகின்றன. இந்நிலையிலும் போட்டி, பொறாமை, வயிற்றிலடித்தல், சீட்டு கிழித்தல், தண்டனை முறைகள் எல்லாம் தாமாக எழுகின்றன; உள்ளிருந்து பின்னணியாக இயங்கும் மனிதன் இவை தாமாக எழுவன போல் காட்டுகின்றான்; இவற்றை வைத்துக் கொண்டு இந்திர ஜாலங்கள் எல்லாம் புரிந்து வருகின்றான்.

ஒரு பேராசிரியர் பதவி நிரப்பப் பெற வேண்டும் என்ற நிலையைக் கண்டபோது பலர் போட்டியிடுவது என்பது இயல்பு. திரு. K. நாராயண அய்யங்கார் தலையைச் சுற்றி மூக்கைப் பிடிப்பது போல் எஸ். அரங்கராசன்—அரிகிருஷ்ணன் செட்டியார்—தாளாளர் என்ற முறையில் தான் முயல்வது பிறருக்குத் தெரியாதவாறு நடந்து கொண்டார். திரு அய்யாதுரை ஜேசுதாசனுக்காக—அவர் அறிந்தோ அறியாமலோ—திரு. அலெக்ஸாண்டர் ஞான முத்து முயன்றார்; அவர் ஆட்சிக் குழு (Coverning body) உறுப்பினரும் கூட. நான் ஒருவனே விண்ணம் தந்து முயன்றவன்; என் முயற்சியை அனைவரும் அறிந்தனர். சிலர் எனக்குக் கிடைப்பது கூட உறுதி என்றும் நம்பினர். எனக்குப் பதவியை நல்க வேண்டும் என்ற கருத்துக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று சுற்றறிக்கை மூலம் ஆட்சிக் குழுவினரைக் கேட்கப்பட்டது. ஆட்சிக் குழுவில் எங்கள் முதல்வர் உறுப்பினராதலால் அவரை நோக்கி வந்த கோப்பு தலைமை எழுத்தர் மேசையின் மீது கிடந்தது. அவர் இருக்கையில் இல்லை; முதல்வரும் வகுப்பிற்குப் போயிருந்தார். வேறு பேராசிரியர்களும் அவரவர் அறையில் இருந்தனர். ஏதோ ஒரு கடிதம் தட்டச்சு செய்வதற்கென்று நான் அலுவலகத்திற்குச் சென்ற போது திறந்த மேனியாகக் கிடந்த கோப்பு என் கண்ணில் பட்டது. C. V. CT. V. வேங்கடாசலம் செட்டியார் (தாளாளர்) கூட ஒப்புதல் அளித்திருந்தார். எங்கள் முதல்வரின் ஒப்புதலுக்காகக் கோப்பு வந்திருக்க வேண்டும் என நினைத்தேன். ஆனால் அலெக்ஸாண்டர் ஞான முத்து மட்டிலும், ஒருவரைப் பதவி உயர்த்தும் போது (1) அவருடைய மூப்புடைமை (Seniority) (2) உயர்த்த வேண்டிய இன்றியமையாமை, (3) அவருடைய தகுதி, திறமைகள், (4) நிர்வாகத்திற்கு நேரிடும் நிதிப் பொறுப்பு இவை அறுதியிட்ட பின்னரே பதவி உயர்வு செய்ய வேண்டும் என்று எழுதி கையெழுத்திட்டிருந்தார். நிர்வாகத்தினருக்கு உரிய குறிப்பு போல் காணப்பெற்

றாலும், அதில் ஓர் உள் நோக்கம் இருப்பதாக என் மூளை யில் உதயமாயிற்று. அதை அறிய முடியாவிடினும், பதவி உயர்வைத் தள்ளிப் போட்டு விட்டால், பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்ற கருத்தை நோக்கமாகக் கொண் டிருந்தல் வேண்டும் என்பது வெள்ளிடை விலங்கலாகத் தெரிந்தது. இஃதெல்லாம் பதவி உயர்வு கோரி அனுப்பப் பெற்ற விண்ணப்பத்தின் விளைவு என்பதை அறிந்தேன். இஃது என் பதவி உயர்வு விஷயத்தில் போடப் பெற்ற முதல் தடை.

என்ன செய்யவேண்டும் என்பதுபற்றி என் மூளை சிந்திக்கத் தொடங்கியது. மறுநாள் விடுப்பு எடுத்துக் கொண்டு திருச்சியில் மாவட்ட நீதிபதியின் அலுவலகத்தில் சிரஸ்தாரராகப் பணியாற்றி வந்த என் அரிய நண்பர் M.கிருஷ்ணசாமி செட்டியாரைக் கலந்து யோசிப்பதற்காகச் சென்றேன். நிலைமையை எடுத்துக் கூறினேன். மூப்புடைமைபற்றி யோசித்தோம்; ஒரு முடிவுக்கு வந்தோம். சுற்றறிக்கையைக் கண்டு கொள்ளாமல் முன் எழுதிய விண்ணப்பத்தைத் தொடர்ந்து எழுதுவது போல் ஒரு கடிதம் தயாரித்தோம். (1) எல்லா ஆசிரியர்களும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் சேர்ந்தமையால் அவர் களுடைய மூப்புடைமையை நிர்வாகம் அறுதியிட்டிருக்க வேண்டும். அது செய்யப்படாமையால் இப்போது நிர்வாகம் தன் விருப்பப்படி செய்யக் கூடாது. ஆகவே இப்பதவி உயர்வு மட்டிலும் அதை விட்டொழித்து ஏனைய தகுதிகளைக் கருத்தில் கொள்ளவேண்டும். (2) பல்கலைக் கழக விதிப்படி ஆசிரியர் குழுவில் பேராசிரியர் நிலையில் இருவர் இருத்தல் வேண்டும். திரு வேங்கடாச்சாரி கல்லூரியிலேயே வேறு துறையில் பணியாற்றிக் கொண்டு அங்கேயே ஊதியமும் பெறுவதால் அவர் ஆசிரியர் குழுவில் இல்லாததாகக் கருதப்பெறுதல் வேண்டும். இப்படிக் கருதினால் பேராசிரியர் பதவியின் இன்றியமையாமை எழுகின்றது. 'எங்கும் தமிழ், எல்லாம்

தமிழ்' என்ற கொள்கை நடைமுறையில் இருக்கும் இக்காலத்தில் தமிழ்துறைக்கு முன்னுரிமை (Priority) அளித்து பதவி உயர்வு செய்வது நிர்வாகத்திற்குப் பெருமை.

3. விரிவுரையாளர் நிலையில் இருக்கும் நால்வரில் (அ) K. நாராயண அய்யங்கார் (ஆங்கிலம்) வரலாற்றில் எம்.ஏ (இரண்டாம் வகுப்பு) பட்டம் பெற்றவர்; பி.ஏ (ஆங்கிலம்) பட்டத்தில் இரண்டாம் வகுப்பு; எல்.டி பட்டம் உண்டு. (ஆ) எஸ். கிருஷ்ணய்யங்கார் (கணிதம் எம்.ஏ (கணிதம்) மூன்றாம் வகுப்பு; எல்.டி யில் முதல் வகுப்பு; முதல் நிலை. தாம் கற்பிக்கும் பாடத்தில் எம் ஏ. இரண்டாம் வகுப்பு, பி.ஏ. முதல் வகுப்பு இருந்தால் போதும்; இதனால் இருவருக்கும் பல்கலைக் கழகத்தில் விதிவிலக்கு பெறவேண்டி வந்தது. (இ) எனக்கு பி.எஸ் சி முதல் வகுப்பு, மூன்றாம் நிலை; பி.ஏ.யில் முதல் வகுப்பு, முதல் நிலை; தவிர, வித்துவான் பட்டம். எல்.டி பட்டம் இருந்தது. வேலையில் சேர்ந்த அன்று எனக்குதான் எல்லாத்தகுதிகளும் இருந்தன; விதிவிலக்கு பெறவேண்டிய நிலை இல்லை. பணியை ஒப்புக் கொண்ட ஓராண்டிற்குள் தமிழ் எம்.ஏ இரண்டாம் வகுப்பு, இரண்டாம் நிலை பெற்றேன். பணியின் ஏழாண்டுக் காலத்தில் தமிழ் பயிற்றும் முறை (விரிவான பெரிய நூல்), அறிவியல் பயிற்றும் முறை (இதுவே இத்துறையில் முதல் நூல்) என்ற இரண்டு நூல்களை வெளியிட்டிருந்தேன். (ஈ) அய்யாத் துரை ஜேசுதாசன் (அறிவியல்) பி.ஏ அறிவியலில் இரண்டாம் வகுப்பு; எம்.எட் பட்டம் பெற்றவர். எல்லோரும் பணி ஒப்புக் கொண்ட ஒரு திங்களுக்கு பிறகு வந்து சேர்ந்தவர். கற்பிக்கும் பாடத்தில் எம்.ஏ. பட்டம் இல்லை. இவற்றால் எல்லாத் தகுதிகளும், சிறப்புத் தகுதிகளும் எனக்கு உண்டு என்று எடுத்துக் காட்டி விளக்கப் பெற்றது.

4 விரிவுரையாளர் ஊதியத்திட்டம் 150-15-300; இதில் நான் ரூ 240/- அடிப்படைச் சம்பளமாக வாங்கிக் கொண்டிருந்தேன். பேராசிரியர் ஊதியத்திட்டம் 250-500 என்பது. பதவி உயர்வு அளித்தால் நிர்வாகத்தின் முதலாண்டுப் பொறுப்பு ரூ 120/-. இது வள்ளல் அழகப்பர் நிர்வாகத்திற்குக் கணக்கிற்கு எடுத்துக் கொள்ள முடியாத மிகச் சிறிய தொகை. இவற்றையெல்லாம் விவரமாகக் காட்டி மீண்டும் ஒரு கடிதம் அனுப்பினேன். கிடைக்கும் போல் இருந்து. இந்நிலையில் புதுக் கரடி "அவதூறு செய்தியாக" விடப்பட்டது. இது மீண்டும் சில மாதங்கள் நடவடிக்கையை நிறுத்தி வைத்தது. இஃது இரண்டாவது பெரியதடையாக நின்றது. இச்செய்தியை நினைக்கும் போதே மனம் கூசுகின்றது; கை எழுத மறுக்கின்றது. இதைக் கிளப்பி விட்ட 'புண்ணியாத்மாக்கள்' எப்படி தான் திட்டம் போட்டார்களோ என்பது அந்த விநாயகப் பெருமானுக்கே வெளிச்சம்.

ஒருநாள் T.V.S மணியன் சா.கவிடம் வந்தார். இந்த "அவதூறு செய்தி"யைஅவரிடம் சொல்லி, "பாருங்கள். இந்த அவதூறு செய்தியை ரெட்டியார் சொன்னாராம். கல்லூரிகளை நிறுவியவரின் பெயரை இப்படிக் கறைப் படித்தலாமா?" என்றார். அதற்கு சா.க. "ரெட்டியார் அப்படிப்பட்ட ஆள் அல்லவே; அவர் அப்படிச் சொல்லி யிருக்கமாட்டார். அவருக்காக நான் சத்தியம் வேண்டு மானாலும் செய்து தருவேன். அவருடைய பதவி உயர்வைக் கெடுப்பதற்காகத்தோழஆசிரியர்களில் யாரோ ஒருவர் இத்தகைய 'பூதிச் செய்தியைக்' கிளப்பி விட்டிருக் கின்றார். அதனை நீ உண்மை என நம்பி வீண் தொல்லைக் குள்ளாகின்றாய். ரெட்டியார் அடிக்கடி வந்து தலை காட்டுவார். இரண்டு வாரமாக வரவில்லை. ஏதாவது எழுத்து வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றார் போலும. அவர் இங்கு வரும் போது இதைச் சொல்லி விசாரிக்கின்றேன். நீ இதைக் கருத்தில் கொள்ளாதே.'

என்று சொல்லி அனுப்பிவிட்டாராம். விக்கினங்களைத் தடுக்கும் விநாயகப் பெருமானே சா.க. வடிவில் நின்று எனக்குத் துணையாக நின்றார் போலும் என்று நினைத்துக் கொண்டேன்.

கணபதி ராயன்—அவனிரு
காலைப் பிடித்திடுவோம்;
குணமுயர்ந் திடவே—விடுதலை
கூடி மகிழ்ந்திடவே.[1]

என்ற பாடல் நினைவிற்கு வந்தது; அவன் திருவருள் என்னை மெய் மறக்கச் செய்தது.

மற்றொரு நாள் நான் சா. க. இல்லத்திற்கு நான் எழுதிய 'இல்லற நெறி' என்ற நூலின் படியைக் காட்டச் சென்றிருந்த போது. சா. க. இதைச் சொன்னார். இஃது என்னைத் திடுக்கிடச் செய்தது. நான் அவரை, "தாங்கள் இதைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? அவரிடம் என்ன சொன்னீர்கள்?" என்று வினவ, அவர் "ரெட்டியார் இங்கு வந்து ஏழாண்டுகள் ஆகின்றன. 'தான் உண்டு தன் வேலை உண்டு' என்றிருப்பவர். உழைப்பின் உருவம். அவருக்கு ஊரில் நல்ல பெயர். உனக்கும் அவருக்கும் சம்பந்தம் இல்லை. இருவரும் ஒருவருக்கொருவர் விரோதிகளும் அல்லவே. நீ அதை மறந்து விடு" என்று சொல்லி அனுப்பி விட்டேன் என்றார். நான் "இப்போது தொலைபேசியில் கூப்பிடுங்கள். நான் அவரிடம் பேசுகின்றேன்," என்று சொல்ல, அவரும் அவ்வாறு செய்தார். தொ. பே. பேச்சில் அவர் மிகவும் கோபப்படுகின்றார் என்பதை அறிந்தேன். உடனே, "தொ. பே. யில் அதிகம் பேச வேண்டாம். நானே உங்கள் இல்லத்திற்கு நேரில் வருகின்றேன்" என்று சொல்லி விட்டு நேராக அவர் இல்லம் சென்றேன்.

1. பா.க : தோ. பா. ஆறு துணை-1

இல்லத்தில் அவரைச் சந்திக்கும்போது அவர் மிகக் கோபமாக இருந்தார்; கோபத்துடனும் பேசினார். "சா. க. விவரமாகச் சொன்னார்; தாங்கள் இதை நம்புகின்றீர்களா?" என்றேன். அவர் "உங்கள் தோழ ஆசிரியர்கள் அனைவருமே இங்கு வந்து என்னிடம் சொன்னார்கள்" என்றார். "ஒவ்வொருவராக வந்து சொன்னார்களா? கும்பலாக வந்தார்களா? இதை மெய்ப் பிக்க முடியுமா?" என்றேன். "முடியும்" என்று அடித்துச் சொன்னார். "மிஸ்டர் மணி, ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். என்னுடைய பெருமை மானம் போகும் வண்ணம் கட்டி விட்ட கரடியை என் முழு மூச்சு கொண்டு எதிர்ப்பேன்; நீதிமன்றம் வரையில் இழுப்பேன்" என்றேன். "இப்பொழுதே புறப்படுங்கள். இரகசிய விசாரணை, நேருக்கு நேர் விசாரணை எதை வேண்டு மானாலும் மேற் கொள்ளலாம். நீங்கள் கோபமாகப் பேசு கின்றீர்கள்; நான் அடங்கிப் பேசுகின்றேன். நானும் கொதித்தெழுந்தால், உண்மை தெளிவாகாது. புறப்படுங் கள்!" என்று சொல்லி விட்டு மிதி வண்டியில் திரும்பி விட்டேன்.

நான் கல்லூரி வாசலுக்கு வந்த போது மாணவர் கூட்டம் கொடியேற்று விழா நடந்து கொண்டிருந்தது. இது குடிமைப் பயிற்சிக்கு ஒருவித ஒத்திகை. முதல்வர் தொலைபேசியில் பேசிவிட்டு கூட்டத்திற்கு வந்ததை அறிந்தேன்; நேரிலேயே பார்த்தேன். அப்போது புதிய கட்டடத்திற்கு மாறியிருந்தோம். தொலைபேசி இடம் மாற்றம் செய்யப் பெறாத நிலை. இதனால் முதல்வர் தொ. பே. க்குப் போய் வந்ததைக் காட்டிக் கொடுத்து விட்டது.

உடனே புறப்பட்டு வருவதாகச் சொன்ன மணியன் வரவில்லை. "விசாரணை பயன்படாது. உங்கட்கு விரோத மாகத் திரும்பி விடுதலும் கூடும். உங்களிடம் வந்து

சொன்னவர் ரெட்டியாரை நேரில் பார்க்கவே அஞ்சுவார். இருவரும் ஆப்த நண்பர்கள்போல் பழகி வருகின்றனர். வேண்டா, விசாரணை!, என்று சொல்லியிருக்க வேண்டும்'' என்பது என் ஊகம். இது பற்றி முதல்வர் என்னிடம் பேசவில்லை. நானும் அவரை ஒன்றும் கேட்க வில்லை. இப்படி ஒரு வாரம் கடந்து சென்றது. இந்தக் காலத்தில் பிரச்சினையை வேறு திசையில் திருப்ப சதி நடந்திருக்க வேண்டும் என்பதைப் பின்னர் நடந்த நிகழ்ச்சி யால் அறிய முடிந்தது.

ஒரு நாள் முதல்வர் என்னைச் சந்தித்தார். ''மிஸ்டர் ரெட்டியார், நிர்வாகத்துடன் (மணியன்?) உங்கள் விஷயம் பற்றிக் கலந்தேன். 'வாய்தவறி எங்காவது இந்த அவதூறுச் செய்தியைச் சொல்லியிருப்பேன்; அதற்காக மிகவும் வருந்துகின்றேன் என்று ஒரு கடிதம் கொடுத்தால் உடனே பதவி உயர்வு தருவதாகச் சொல்லுகின்றனர். இதனால் தொந்தரவு ஒன்று இராது; கடிதம் கொடுக்க லாம்' என்றார். எலிக்கூண்டில் மசால்வடையை வைத்து எலியைப் பிடித்தல்; மாட்டிக் கொண்ட எலியைக் கோணி யுள் போட்டு அடித்துக் கொல்லுதல் போன்ற ஒரு சதி இது என்பது எனக்கு அங்கை நெல்லியாகத் தெரிந்தது. உதட்டில் வெல்லமும் உள்ளத்தில் கள்ளமும் கொண்ட மனிதர்கள் உலகில் இருக்கும்போது முதல்வரை அவர் களில் ஒருவராக ஏன் கருதக் கூடாது? என்று என் உள்ளம் எண்ணியது. நான் முதல்வரிடம், ''நீங்கள் என் அண்ணன் மாதிரி. நீங்களே இன்று நன்கு சிந்தித்து எழுதித் தட்டச்சு செய்து கொண்டு வாருங்கள்; நான் கையெழுத்துப் போட்டுத் தந்து விடுகின்றேன்'' என்று சொல்ல, அவரும் ஒப்புக் கொண்டு அவ்வாறே செய்வதாகக் கூறினார்.

அன்று மாலையே என் தோன்றாத் துணையாக இருக்கும் கணேசப் பெருமானை நினைந்து தோன்றும் துணையாக இருக்கும் சா.க.வைச் சந்தித்து முதல்வருடன் நடந்த பேச்சு விவரத்தைச் சொன்னேன். அவர்

திடுக்கிட்டுப் போனார், ''மணியன் வந்து சொன்ன போது ஏதோ சூது இருப்பதாக ஐயுற்றேன்; மிஸ்டர் ரெட்டியார், அஃது இப்போது உறுதியாயிற்று. உங்களை மாட்டவைக்கும் சதி உருவாகின்றது என்பதை உணர்கின்றேன்'' என்றார். இந்நிலையில் நான் என்ன செய்யலாம்,'' என்று வினவினேன். அதற்கு அவர் ''இப்படி இயங்கும் கபட நாடகக்காரர்களை இலேசில் விடக் கூடாது, பாடம் கற்பிக்க வேண்டும் அவர்கட்கு'' என்றார். ''ஏதோ காற்றில் வந்த செய்திக்கு உருவங் கொடுக்க நினைக்கின்றீர்கள். அதற்கு நான் தயாராக இல்லை, இதற்கு ஒரு விசாரணை வைத்து குற்றப் பத்திரிகை தாருங்கள். அதற்கு மறுமொழி தருகின்றேன். அதற்கு மேல் சட்டப்படி நடவடிக்கை எடுங்கள்'' என்ற முறையில் எழுதிக் கையில் வைத்துக் கொள்ளுங்கள். முதலியார் கொண்டு வரும் கடிதத்தை வாங்கி விடுங்கள்; கையெழுத்துப்போட்டுத் தராதீர்கள், இந்நிலையில் உங்கள் கடிதத்தைக் காட்டுங்கள். அதை அவர் வாங்கிக் கொள்ள மாட்டார். பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்று அறிவுரை கூறினார்.

மறுநாள் மாலை அந்திக்காலம் வரையில் என் அறையில் இருக்குமாறு கூறினார் முதல்வர். எல்லோரும் போன பிறகு 6-மணிக்கு என் அறைக்கு வந்தார். தாம் தயாரித்த நகலைக் காட்டினார். நான் படித்துப் பார்க்கும் போது கோபம் பொங்கி எழுந்தது; அடக்கிக் கொண்டு ''ஐயா, நீங்கள் சிந்தாதிரிப் பேட்டையிலிருந்து பிழைக்கவந்தீர்கள்; நான் துறையூரிலிருந்து பிழைக்க வந்தவன். நமக்குப் பணம்; நிர்வாகத்திற்கு நம் உழைப்பு. இதற்கு மேல் பிடிப்பு வைத்துக் கொள்ளக் கூடாது. நீங்கள் மணியனோடு தோழமை கொண்டு அடாதசெயலில் இறங்கி விட்டீர்கள். மாரியம்மன் கோயிலுக்கு ஆட்டுப்பலி தருவதாக வேண்டிக் கொண்ட அய்யருக்காக நம்மவர் ஒருவர் கொடுவாளைத் தாங்கிக் கொண்டு வெட்டுவதற்கு

தயாராக இருப்பது போல நரபலியை நாடும் மணியனுக்காகப் பேனாவை வைத்துக் கொண்டு என் சீட்டுக்கிழிக்கும் பணியில் பரிந்துரைப்பதற்குத் தயாராகி விட்டார்கள். நிர்வாகத்திற்கு என்னை வீட்டுக்கு அனுப்ப இரண்டு மூன்று வழிகள் உண்டு. (1) விசாரணை வைத்து, குற்றப் பத்திரிகை தந்து, என் மறுமொழியை எழுத்து மூலம் வாங்கிக் கொண்டு ஆணை பிறப்பிப்பது; (2)பேருக்கு விசாரணை வைப்பது போல் போக்குக் காட்டி மூன்று மாத ஊதியம் நல்கி அனுப்புவது, (3) மூன்றாவது வழியில் நான் வேலையை விட்டுவிடுவது. இதற்கு நான் தயாராக இல்லை. பலப் பரீட்சைக்குத்தயாராகி விட்டேன். 'இதோ என் கடிதம்' என்று கடிதத்தை அவருக்குக் காட்டினேன். படித்துப்பார்த்து அசந்து போனார்; கடிதத்தை வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டார்; அதில் நான் கையெழுத்தும் இடவில்லை.

உடனே சுதி இறங்கிவிட்டது. அழாத குறையாக, "ரெட்டியார், நீங்கள் எனக்கு உடன் பிறவாத் தம்பி போல. நான் உங்களைக் கெடுக்க நினைத்திருந்தால் என் குடும்பம் விளங்காது; நான் பிள்ளைக்குட்டிக்காரன்" என்று சொன்னார். உடனே அவர் இசைவு பெற்று இரண்டு கடிதங்களையும் சிறு சிறு துண்டுகளாகக் கிழித்துக் காற்றில் பறக்கவிட்டோம். "நிர்வாகம் என்பது மணியன் அல்ல. அது C.V.CT.V. வேங்கடாசலம் செட்டியார் (தாளாளர்-அறக்கட்டளையின் செயலர்);அவரும் குழுவின் முடிவுப் படி நடக்க வேண்டியவர். நீங்கள் மணியனை நம்பி எதிலும் மாட்டிக் கொள்ளாதீர்கள்" என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டேன். இல்லத்திற்கு வந்து, மாலைக்கடன்களை முடித்துக் கொண்டு காஃபி அருந்தி கொப்புடையம்மன், திருமால் கோயில்கட்குச் சென்று வழிபட்டேன். சூழ்ச்சிக்காரர்கட்கு நல்லறிவு வழங்குமாறு வேண்டினேன்.

மறுநாள் காலையில் சா. காவைப் பார்த்து நடைபெற்றதைச் சொன்னேன். "ரெட்டியார், கவலைப்படா

தீர்கள். ஆண்டவன் இருக்கின்றான். தாளாளருக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு இருப்பதால் நான் உள் நுழைந்து செயற்பட விரும்பவில்லை. அப்படிச் செய்தால் எதிர் விளைவுகள் ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஒன்று செய்யுங்கள். K. V. AL. M. இராமநாதன் செட்டியார் (முன்னாள் தாளாளர்) இன்னும் இருபது நாட்களில் குடும்பத்துடன் மலேயா போகிறார்கள்; கப்பலில் போகிற தாகச் சொன்னார்கள். முதலில் அவரைப் பார்த்து நடந்த வற்றை விவரமாக எடுத்துரையுங்கள். நானும் அவருக்குத் தங்கள் வருகை பற்றியும் வரும் காரணம் பற்றியும் தொ. பே. மூலம் தெரிவித்துவிடுகின்றேன். இதனால் நல் விளைவு நேரிடும் என்பது என் நம்பிக்கை'' என்று கூறி அனுப்பினார்.

ஒருவாரம் கழித்துக் கோட்டையூர் சென்று முன்னாள் தாளாளரைப் பார்த்து நடந்தவற்றை விவரமாக எடுத்துச் சொன்னேன். அவர் ஒரு நல்ல நாள் பார்த்துப் பயணம் தொடங்கிக் கப்பல் புறப்படும் நாள்வரை பொது விடுதி யில் தங்கியிருந்தார். இந்தக் காலத்தில் தான் முக்கியமான வர்களைப் பார்த்துப் பயணம் சொல்லிக் கொண்டிருந் தார். நான் அவரைப் பார்த்தது பொதுவிடுதியில் தான். ''மணியன் வேலைதான் இது'' என்று கண்டு கொண் டார். மணியன் நடவடிக்கை பிடிக்காமல்தான் தாளாளர் பதவியை விட்டதாகவும் சொன்னார். நான் இவரைப் பார்த்த பிறகுதான் C. V. CT. V. வேங்கடாசலம் செட்டியாரைப் பார்த்துப் பயணம் சொல்லிக்கொள்ளப் போயிருப்பார் என்பது என் ஊகம். ''கவலைப்படாதீர்கள், ரெட்டியார், ஆண்டவன் இருக்கின்றான். அவன் வழி காட்டுவான்'' என்று சொல்லி விடைகொடுத்தார்.

இந்தக் காலகட்டத்தில் தான் C. V. CT. V. வேங்கடா சலம் செட்டியார் என்னைக் கானாடுகாத்தானிலுள்ள தன் இல்லத்தில் சந்திக்குமாறு சொல்லியனுப்பினார். நான் என்னிடம் வந்து சொன்னவர்களிடம் எல்லாம்

“என் மீது செட்டியார் மிகவும் அன்புள்ளவர்; என் திறமையையும் அளந்து அறிந்தவர். பதவி உயர்வு வருவது உறுதி. நான் பார்ப்பதால் அவர் காலத்தை வீணடிக்க விரும்பவில்லை.” என்று சொலியனுப்பி விட்டேன். இதைப்பற்றிச் சா. க. விடம் யோசனை கேட்டேன். பார்ப்பதில் தவறு இல்லை. காரைக்குடிவரும்போது அவரை விளையாட்டரங்கிலுள்ள விருந்தினர் இல்லத்தில் பாருங்கள். கானாடுகாத்தான் போகவேண்டாம் (சிலவற்றைச் சொல்லி எச்சரித்தார். அவற்றை வெளியிட விரும்பவில்லை)” என்று அறிவுறுத்தினார்.

ஒரு நாள் ராய. சொ. என்னைச் சங்கத்துக்கு வருமாறு ஆள் அனுப்பியிருந்தார். அங்குச் சென்று அவரைப் பார்த்தேன். “ரெட்டியார், C.V.CT.V. உங்களைக் கானாடு காத்தான் வந்து தன்னைச் சந்திக்குமாறு சொல்லியனுப்பியிருந்தார். எல்லாம் நல்லதாகவே முடியும். போய்ப் பாருங்கள்.” என்றார். நான் சா. க. கூறியவற்றைக் கூறிப் போவதற்கு தயங்கியதை எடுத்துரைத்தேன். “அப்படி ஒன்றும்நடைபெறாது. துணிவாகப் போகலாம். தங்கட்குத் தீங்கு நேரிட்டால் நான் பொறுப்பு. அப்படி ஏதாவது தீங்கு விளைவித்தால், அவர் இந்த ஊரில் வாழ முடியுமா? அவர் என்னிடம் சொல்லியதைப் பார்த்தால் ஏதோ விஷயம் உங்களிடம் சொல்லப் போவதாகத் தெரிகின்றது.” என்றார்.

ஒரு நாள் கானாடுகாத்தான் போவதாகத் தீர்மானித்தேன். ஒரு மணிநேரம் தாமதித்துக் கல்லூரி வருவதற்கு முதல்வரிடம் இசைவு பெற்றேன். மறுநாள் காலை 7 மணிக்கே சிற்றுண்டியை முடித்துக் கொண்டு திருச்சி போகும் பேருந்தில் ஏறிக் காலை 8—மணி சுமாருக்குக் கானாடுகாத்தான் சென்று செட்டியார் வீட்டை விசாரித்துக் கொண்டு அவர் இல்லத்தை அடைந்தேன். வீட்டிலுள்ள வேலையாள் செட்டியார் நீராடுவதாகத் தெரிவித்தான். நான் தாழ்வாரத்தில் ஒரு பக்கமாக

ஒதுங்கி நின்றேன். செட்டியார் நீராடி முடித்த பிறகு என்னைக் கீழ்ப்பார்வையால் கண்டு கொண்டார். காணா தவர் போல் சென்று அரை மணி நேரத்தில் பூசையை முடித்துக்கொண்டு வீட்டின் உள்முகப்பில் அமர்ந்து கொண்டு வேலையாளிடம் "பேராசிரியர் ரெட்டியார் காத்துக்கொண்டிருக்கின்றார்; உள்ளே வரச்சொல்" என்று சொல்லியனுப்பினார். நானும் உள்ளே சென்று வணக்கம் தெரிவித்து நின்றேன்; அமருமாறு பணித்தார்; அமர்ந்தேன். செட்டி வீட்டில் மேசை நாற்காலி முதலியவை இராது. நல்ல விரிப்பு போடப் பெற்றிருக்கும் உள்கட்டிலும் வெளிக்கட்டிலும். உள்கட்டில்தான் நாங்கள் உட்கார்ந்தோம். சமையல்காரனிடம் "இரண்டு தட்டுகள் கொணர்க" என்று சொல்ல, அவனும் இரண்டு தட்டுகள் கொணர்ந்து வைத்தான். நான் சிற்றுண்டியை முடித்துதான் வந்ததாகச் சொன்னேன். "பத்துக் கல் தொலைவு வந்தபிறகு அது வயிற்றில் இராது. இங்கும் கொள்ளலாம்" என்றார்.

விருந்தோம்பலுக்குப் பேர் போனவர்கள் நகரத்தார் பெருமக்கள். தாளாளர் செட்டியார் அவர்கள் சிற்றுண்டி விருந்தில் மிக நன்றாகக் கவனித்தார்கள். பேசிக் கொண்டே சிற்றுண்டி, காஃபி கொண்டேன். பேச்சு வாக்கில் "ரெட்டியார், உங்களுக்குக் கல்லூரி வளாகத்தில் மூன்று விரோதிகள் உள்ளனர்" என்றார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது, "இந்த அளவுக்குக் கூர்ந்து கவனித்து என்னைக் காக்கும் நிர்வாகத்தின்கீழ், தங்கள் சீரிய தலைமையின்கீழ்ப் பணியாற்றுவது என் தவப் பயன்" என்றேன். "தாங்கள் மாவட்ட வாரியத் தலைவ ராக இருந்தபோதும், இந்தியன் வங்கியின் இயக்குநராக இருந்தபோதும் தாங்கள் தக்கவர்கட்கு ஆற்றிய தொண்டைப்பற்றி நிறையக் கேள்வியுற்றிருக்கின்றேன்" என்று மேலும் கூறி "அத்தகைய உயர் பண்பை இப் போது தங்களிடம் நேரில் காண்கின்றேன்" என்றேன்.

''முக் கரணங்களாலும் பிறருக்குத் தீங்கு செய்யாத அடியேனுக்கு எப்படிப் பகைவர்கள் உண்டானாரோ அறியேன்; இஃது என் ஊழால் வந்ததோ?'' என்று வருத்தத்துடன் கூறினேன். ''மூவரில் உங்கள் தோழ ஆசிரியர்களில் ஒருவர்; மற்றவர் மாதிரிப்பள்ளித் தலைமை யாசிரியர்; மூன்றாமவர் மணியன். இந்த மூவருந்தான் 'அவதூறு செய்தியின்' தந்தையர்கள். உங்கள் தோழ ஆசிரியர்மூலம் இச்செய்தி மாதிரி உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்—அவர் மனைவி—மணியன் மனைவி—மணியன் என்றவர்கள்மூலம் கடத்தப்பெற்று என் காதிற்கு எட்டச் செய்து, நடவடிக்கை எடுக்குமாறு மணியன் தொந்தரவு செய்கின்றான்.'' என்றார்; மேலும், ''அப்பா மணியன், இஃது ரெட்டியார்மீது சுமத்தப்படும் அபாண்டப் பழி;இஃது இறைவனுக்கே அடுக்காது'' என்று கூறியதாகக் கூறினார். எங்கள் செட்டியார்கள் மூலம் வேறொருவருக்குப் பேராசிரியர் பதவிதருமாறு பரிந்துரை வருகின்றது.அலெக்ஸாண்டர்ஞானமுத்துஒருகிறித்தவரை மனத்தில்வைத்துக்கொண்டு ஏதேதோ செய்கின்றார். நீங் கள் ஒருவர்தான் உங்கள் காலில் நின்று, உங்கள் பல்வேறு நற்பணிகளைக் கூறி என்னை நேரில் அணுகுகின்றீர்கள். இறைவனும் எனக்கு மனிதர்களை அளவிடும் திறமையை அளித்திருக்கின்றான். உங்கள் முதல்வரோ முதுகெலும்பே இல்லாத புழு. அஞ்சாமல் உங்கள் கடமையைச் செய்து வாருங்கள். தக்க சமயத்தில் பதவி உயர்வு உங்கட்கு வரும்'' என்று கூறி உற்சாக மூட்டினார்; ''போய் வாருங்கள்; இவற்றைத் தெளிவு படுத்தவே ராய. சொ. மூலமும் பிறர் வாயிலாகவும் சொல்லியனுப்பினேன்.'' என்று கூறி வழி யனுப்பினார். ஒன்றுக்கும் பற்றாத அடியேனின்மீது பாயும் இறைவனின் கருணை வெள்ளத்தை நினைத்த வண்ணம் கல்லூரிக்குப் பகல் பதினொரு மணிக்கு வந்து சேர்ந்தேன். முதலியார் வீட்டு விருந்தில் தான் ''இந்தத் தக்க சமயம்'' வந்தது போலும் என்று எண்ணி எண்ணி இறும்பூது அடைகின்றேன்.

# 41. அறிவியலைத் தமிழில் பயிற்றல்-கருத்தரங்கம்

1958-ஏப்ரல் திங்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து P.U.C.வகுப்பிற்குத் தமிழில் அறிவியல் பாடங்களைப் பயிற்றுவிப்பது பற்றியஆறுவாரக் கருத்தரங் கினை முன்னின்று நடத்தும்படி ஓர் அழைப்பு வந்தது. என்னுடைய அறிவியல் நூல்களைக் கண்ட துணைவேந்தர் T. M. நாராயணசாமி பிள்ளை எனக்கு இந்தப் பொறுப் பினை நல்கினார் போலும்.இதற்கு ஊதியமாகவோ சன் மானமாகவோ ஒன்றும் இல்லை. ஆறு வாரம் பல்கலைக் கழக விருந்தினன் என்ற கௌரவம் ஒன்று தான். 'பணியே பரமன் வழிபாடு' என்ற கொள்கையையுடைய அடியேன் இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டேன். அக்காலத்தில் சோமலெ பொதுமக்கள் தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றி வந்ததால் எனக்கு என் பழக்க வழக்கத்தை யொட்டி எல்லா வசதிகளையும் செய்து தந்தார். அதிகாலை 6 மணிக்கு ஓவல்டின் கலந்த பால் பருகுவது பழக்கம்; பாலுக்கு ஏற்பாடு செய்து ஓவல்டின் டப்பா வையே வாங்கித் தந்து விட்டார். 8 மணியளவில் சிற்றுண்டி பால்; மதியம் உணவு; மாலை 4மணிக்கு காஃபி மட்டும்; இரவு 7-39 மணிக்கு சிற்றுண்டி பால்—இவை என் பழக்கங்கள். இவற்றையெல்லாம் சின்னசாமி என்ற பணியாள் கவனித்துக் கொள்ளுமாறு சோமலெயின் கட்டளை.

அறிவியல் துறைகளில் துறைக்கு இரண்டு அல்லதுமூன்று ஆசிரியர்கள் வீதம் தேர்ந்தெடுக்கப்பெற்று நாடோறும்

முற்பகல் 10 மணிக்கு அறிவியல் அறையொன்றில் கூடினர். நாடோறும் அறிவியல் பலதுறைகளிலும் கலைச் சொற்கள் உருவாக்கம் பற்றி விரிவாகக் கலந்தாயப்பெற்றது. ஒவ்வொரு துறையிலும் மாதிரிப் பாடங்கள் நடத்திக் காட்டப் பெற்றன. இயற்பியலில் டாக்டர் சிரீராமனும் தாவர இயலில் திரு K. அரங்கசாமி அய்யங்காரும் சிறப்புடன் திகழ்ந்தனர். அந்தக் காலத்தில் எல்லாத் துறைகளிலும் டாக்டர் பட்டம் (Ph.D) பெற்றவர்கள் அதிகமாக இல்லை. அஃது இல்லாமலேயே பல துறைகளில் ரீடர், பேராசிரியர்கள் கூட இருந்தனர். இயற்பியல் துறையில் ரீடராகப் பணியாற்றிய R. K. விசுவநாதனுக்கு டாக்டர் பட்டம் இல்லை. துறைகளிலும் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் அதிகம் இல்லாததால் வழி காட்டிகளும் அருகி இருந்தனர். இதனாலும், வேறு காரணங்களாலும் பலர் இப்பட்டம் பெற முடியாத நிலையிலிருந்தனர்.

மாதிரிப் பாடங்கள் எடுத்தவர்களில் தலை சிறந்து விளங்கியவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர் திரு. K. அரங்கசாமி அய்யங்கார். இவர் எடுத்த பாடம் மிகவும் அற்புதமாக அமைந்திருந்தது. 20 ஆண்டுகட்கு மேல் பணியாற்றிய இவர் அன்று வரை விரிவுரையாளராகவே இருந்தார் என்பது வருந்தத்தக்கதாக இருந்தது. நாடோறும் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு துணைவேந்தர் இல்லத்திற்கு வந்து பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்பது அவர் கட்டளை. அவரும் 10 மணிக்குப் புறப்படுவார். தாம் அலுவலகத்தில் இறங்கிக் கொண்டு என்னைக் கருத்தரங்கு நடைபெறும் இடத்தில் இறக்கி விடச் சொல்வார். இவ்வாறு போய் வந்து கொண்டிருந்த பொழுது அரங்கசாமி அய்யங்கார் தமிழில் கற்பித்ததன் சிறப்பைத் துணைவேந்தரின் கவனத்திற்குக் கொணர்ந்தேன். ஒரு நாளாவது அவர் தமிழில் கற்பிப்பதைத் துணைவேந்தர் நேரில் காண வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன். அவரும் ஒப்புக் கொண்டார்.

திரு. அரங்கசாமி அய்யங்காரிடமும் துணைவேந்தர் ஒரு நாள் அவர் தமிழில் கற்பிப்பதை நேரில் பார்க்க விழை கின்றார் என்பதைத் தெரிவித்தேன்; அவரும் தயார் நிலை யிலேயே இருந்து வந்தார். ஒருநாள் துணைவேந்தர் எழுந் தருளி அவர் தமிழில்கற்பிப்பதைக்கண்டு வியந்துபோனார். பிறகு ஒருநாள் அரங்கசாமி அய்யங்கார் ரீடர் பதவிக்குத் தகுதியானவர் என்று கூறினேன்; வேறு துறைகளில் டாக்டர் பட்டம் இல்லாதவர்களும் ரீடராக உள்ளனர் என்பதையும் எடுத்துக் காட்டினேன். அவருக்கு நல்லூழ் (ஆகூழ்) இருந்தமையால் ஒரு சில மாதங்களில் ரீடராக உயர்த்தப் பெற்றார். இப்பதவி உயர்வு அவருக்கு உற்சாகத்தை அளிக்கவே, ஒன்றிரண்டு ஆண்டுகளில் டாக்டர் பட்டமும் பெற்றார்; பின்னர் ஒன்றிரண்டு ஆண்டுகளில் பேராசிரியர் பதவியும் அவருக்கு வந்தது. விரிவுரையாளராக இருந்தவர் ரீடராக உயர்ந்தது 'காகதாளிக நியாயத்தால்' என்பது என் கருத்து—காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போன்றது என்பது இதன் பொருள். என்னைக் காக்கை நிலையில் வைத்து நிகழ்ச்சி யைச் சிந்தித்தால் இது தெளிவாகும். ஆனால் இன்றளவும் நான் காக்கையாகச் செயற்பட்டதை அவர் அறியார். ஓய்வு பெற்று விட்டார் இப்போது.

கருத்தரங்கு தொடர்ந்து ஆறு வாரம் பயனுள்ள வகையில் நடை பெற்றுக் கொண்டு வந்தது. நானும் துணைவேந்தர் இல்லத்திற்குச் செல்வதும் அவர் என்னைக் கருத்தரங்கு நடை பெறும் இடத்தில் என்னை இறக்கி விடச் செய்வதும் தொடர்ந்து நடை பெற்று வந்தன. இந்தக் காலத்தில் பெருவள நல்லூர் கிருஷ்ணசாமி ரெட்டியார் துணைவேந்தர் இல்லத்தில் சில மாதங்கள் தங்கியிருந்தார். கிருட்டிணசாமி ரெட்டியாரின் குடும்பத் திற்குப் பிள்ளையவர்கள் மிகவும் கடமைப் பட்டவர். திருச்சி புனித சூசையப்பர் கல்லூரிப் பொருளியல் பேராசிரியர் திரு. இருதயசாமி ரெட்டியாரும் அடிக்கடி

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வருவதும் துணைவேந்தர் இல்லத்தில் தங்குவதும் வழக்கமாக நடைபெற்று வந்தன. திரு ரெட்டியார் என்னை நன்கு அறிவார். துணைவேந்தர் செயல் 'வழவழ' என்று விளக்கெண்ணையை ஒத்தது என்பதும் அவருக்குத் தெரியும்.

ஒருநாள் காலை துணைவேந்தரைச் சந்தித்த போது, இருதயசாமி ரெட்டியாரும் அவருடன் உரையாடிக் கொண்டிருந்தார். துணைவேந்தர் 1930 முதல் (நான் முசிறியில் 4-வது படிவம் படித்துக் கொண்டிருந்தது முதல்)என்மீது தந்தையைப்போல் பாசமும் அன்புமுடையவர்; 1958 வரை என் உழைப்பையும் வளர்ச்சியையும் நன்கு அறிந்தவர். அதனால் அவரிடம் பலவித உணர்ச்சிகளுடன் பேசினாலும் என்னைத் தவறாகக் கருத மாட்டார்; சினமும் கொள்ள மாட்டார். இதனையறிந்த நான் அவரிடம் தந்தையிடம் பேசுவதைப் போன்ற உரிமையுடையவனாக இருந்தேன். இருதயசாமி ரெட்டியார் என்னை நன்கு அறிந்தவராதலால், அவர் முன்னதாகவே துணைவேந்தரிடம் பேசினேன். "ஐயா, நான் பிஎச். டி பட்டத்திற்கு ஆய்வு செய்ய விழைகின்றேன். காரைக்குடியில் அந்த வாய்ப்பில்லை;பலமுறை முயன்றும் சென்னைப் பல்கலைக் கழக விதிகளும் என்னை அநுமதிக்காமல் தடுத்து நிறுத்துகின்றன. ஓர் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் இங்கு எனக்குத் துணைப் பேராசிரியர் வேலை நல்கினால், விடுப்பில் வந்து பணியாற்றிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டு திரும்பி விடுகின்றேன். காரைக்குடி வேலையைத் துறக்க விரும்பவில்லை" என்றேன்.

உடனே துணை வேந்தர், உடன்பாட்டில் விடையளிக்காமல் சுற்றி வளைத்துப் பேசத்தொடங்கினார். "நான் கூட ரூ 2000/-வாங்குகின்றேன். அதற்கும் இதற்கும் என்று செலவு செய்த பிறகு ஒன்றும் மிஞ்சவில்லை. நீங்கள் இருக்கும் இடத்திலேயே இருங்கள். பிறகு வாய்ப்பு வரும்

போது கவனிக்கிறேன்'' என்றார். உடனே பழைய நினைவுகள் படலம் படலமாக நினைவுக்கு வரத் தொடங்கின. ''நான் 1949 இல் தாங்கள் பொதுப் பணித் துறை ஆணையத்தின் தலைவராக இருந்தபோது (Chairman Madras Public Service Commission) பச்சையப்பன் கல்லூரியில் ஒரு Tutor வேலை வாங்கித் தருமாறு கேட்டேன். தாங்கள் நன்கு அறிந்த என் ஆசிரியப் பெருந்தகை திரு. K.இராமச்சந்திர அய்ய ருடன் தாங்கள் குடியிருந்த இல்லத்தில்தான் (ஆர்மஸ் சாலை, கீழ்ப்பாக்கம்) கேட்டேன். எம்.ஏ.படிக்கவும், பிஎச்.டி.க்கு ஆய்வு செய்யவும் கொண்ட ஆசையால் தான் கேட்டேன். தந்தையின் பாசமுடன், ''இப்போது உணவு பங்கீட்டு முறை உள்ள காலம். வாங்கும் சம்பளம் போதாது. வீடும் சரியான இடத்தில் கிடைக்காது. இப்போது துறையூரில் பசுமாடுவைத்துக்கொண்டு சுகமாக இருக்கின்றீர்கள். சம்பளம் குறைவாக இருந்தாலும், உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியராகப் பெரும் புகழுடன் கௌரவமாக இருந்து கொண்டிருக்கின்றீர்கள். நாட்டுப்புற வாழ்க்கை உணவுப் பஞ்சத்தைப் பார்க்காத நிலை. இப்பொழுது இங்கு முயலவேண்டாம். அதற்குள் எம்.ஏ.யையும் முடித்து விடுங்கள்'' என்று அறிவுரை பகர்ந்தார்.

அதன்பிறகு—எம்.ஏ.யை முடித்துக் கொண்ட பிறகு—1953 என்று நினைக்கின்றேன்—திரு. நாராயணசாமி பிள்ளையின் உதவியை நாடினேன். அப்போது ''நீங்கள் எம்.ஏ.படித்து விட்டால் மட்டிலும் போதாது. ஏதாவது ஒன்றிரண்டு ஆய்வு நூல்களை வெளியிட்ட அநுபவம் பெற்றிருந்தால் நலம். கிடைப்பது எளிதாக இருக்கும்'' என்று அறிவுரை பகர்ந்தார். இதன் பிறகு நானும் திரு.வேங்கடாச்சாரியும் 1956-இல் பிஎச்.டிக்குப் பதிவு செய்து கொள்ள விண்ணப்பம் அனுப்பினோம். கல்வி சம்பந்தமான தலைப்புகள் ஆய்வுப் பொருளாக்க்

குறிப்பிட்டிருந்தோம். இதற்கு M.Ed படித்தவர்கள்தாம் அனுமதிக்கப்படுவார்கள் என்றும், எனக்கு M.Ed பட்டம் இல்லாததால் மறுக்கப்பட்டது என்றும் கூறி பதிவிற்காக அனுப்பப்பெற்றிருந்த ரூ 50/- திருப்பி அனுப்பிவிட்டார்கள். திரு வேங்கடாச்சாரிக்கு மட்டிலும் அனுமதி வழங்கப் பெற்றது, அவர் M.Ed பட்டம் பெற்றிருந்தமையால். இப்படிப் பல ஏமாற்றங்களைக் கூறி துணை வேந்தரை மீண்டும் தற்காலிக ஏற்பாடு மூன்று ஆண்டுகட்குத் தருமாறு வேண்டினேன். ''ஐயா, பணத்தாசையாலோ பதவியாசையாலோ நான் தங்களைக் கேட்கவில்லை. இப்போது கூட (1) அறிவியல் பயிற்றும் முறை (2) தமிழ் பயிற்றும் முறை (3) கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி. (4) அணுவின் ஆக்கம் (5) காலமும் கவிஞர்களும் (6) மானிட உடல் (தமிழாக்க நூல்) எழுதி வெளியிட்டுள்ளேன். பல்கலைக் கழகத்தில் வேலை காலியிருந்தால் நிரந்தரமாக நியமித்துக் கொள்ளவும் சிந்திக்கலாம்'' என்று தெரிவித்தேன்.

மீண்டும் துணைவேந்தர் பழைய பல்லவியையே பாடினார். நானும் உணர்ச்சி வசப்பட்டேன். ''ஐயா, எனக்கென்று ஒரு பின்னணியும் இல்லை—பரிந்துரைக்க; முன்னணியும் இல்லை. நானேதான் அலையவேண்டியுள்ளது—எம்பெருமான் என்னைக் கிட்டத்தட்ட அநாதையாக வைத்துள்ளான். இப்பொழுது கூட சிலர் 'காடு வா என்கின்றது; வீடு போ என்கின்றது' என்ற நிலையிலும் கூட பதவியிலிருக்க ஆசைப்படுகின்றனர். எனக்குப் படிப்பதற்குக் கூட வாய்ப்பு அளிக்க யோசனை செய்கின்றனர். ஐயா, என்னுடைய வயதில் (41) தங்கட்கு எவ்வளவு அபிலாசைகள் இருந்திருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பாருங்கள். துடிப்பே இல்லாத சடமாக இருந்தால் ஒரு படி கூட முன்னேற முடியாது'' என்று சொல்லி என் உணர்ச்சியை வெளிப்படுத்தினேன்.

''மிஸ்டர் ரெட்டியார், இருங்கள். நான் அலுவலகத்திற்குப்போக ஆடையை மாற்றிக் கொண்டு வருகின்றேன். தங்களையும் கருத்தரங்கு நடைபெறும் இடத்தில் விட்டு விடுகின்றேன்'' என்று சொல்லி மாடிக்குப் போனார். இப்போது கீழே என்னுடன் இருந்த திரு. இருதயசாமி ரெட்டியார் (திரு பிள்ளையவர்களின் நெருங்கிய நண்பர்) என்னை நோக்கி, ''நன்றாகச் சொன்னீர்கள்; உணர்ச்சி வசப்பட்டு உணர்த்தினீர்கள். நடுத்தர வயதுடைய ஒருவரின் உணர்ச்சி எப்படியிருக்கும் என்பதை உணர்த்தினீர்கள். ஆனால் இந்த முண்டத்திற்கு (செல்லமாகச் சொன்னது!) எங்கு ஏறப்போகின்றது? நல்லவர்தான்; துணிவே இல்லாதவர். ஒவ்வொரு நிலையிலும் நல்லதற்குக்கூட செயலாற்ற அஞ்சுபவர்...'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது ஒரு வேலையாள் (சிறுவன்) வேகமாக ஓடி வந்து ''தங்களை ஐயா அழைக்கின்றார்கள்'' என்று கூறினான்; 'நானும் ஏதோ பலன் காணப் போகின்றேன்' என்று நினைத்துக் கொண்டு வேகமாக மாடிக்குச் சென்றேன்.

நிலைக் கண்ணாடி முன் நின்று கொண்டு ஆடைகளை உடுத்திக் கொண்டிருந்தார். கழுத்துப் பட்டைத் தொங்கலைக் (Tie) கட்டிக் கொண்டிருந்த சமயம். என்னைப் பார்த்ததும் ''மிஸ்டர் ரெட்டியார், காரைக்குடியில் என்ன ஊதியம் கிடைக்கின்றது?'' என்று கேட்டார். ''அங்கு ரூ 350/- கிடைக்கின்றது'' என்றேன். ''நலமாக இருங்கள். வாய்ப்பு வரும்போது கவனிக்கின்றேன்'' என்று பதிலிறுத்தார். ஏதோ உதவவேண்டும் என்பது தான் அவர் எண்ணம். என்ன செய்வது? பிஎச்.டி. பட்டம் பெறுவதற்கு இன்னும் ஊழ் வரவில்லை. இறைவனது திருவுள்ளம் வேறுவிதமாக இருக்கும்போது எனக்கு எப்படிக் கிடைக்கும்?

என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே[2]

என்ற மூலன் மறைமொழியை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. திருப்பதில் நிலவிய தமிழை—பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலின் திருவடி வாரத்திலேயே—வேரில் வெந்நீரை விட்டு அழித்த மாதிரி மொழி வெறியர்கள் கெட்டொழித்தனர். அதை என்னைக் கொண்டு தமிழை இறைவன் அங்கு மீண்டும் வளர்க்க நினைத்ததை யார் அறிவார்? தெய்விகத் திட்டத்தை (Divine design) மனிதன் புரிந்து கொள்ள முடியுமா? இதனால் துணைவேந்தர் பிள்ளை அவர்களின் எண்ணத்தை நிறைவேறாமல் செய்தான். தடுத்தாட் கொள்வதில் இறைவனைத் தவிர யாரால் முடியும்? சிறிது நேரத்தில் துணைவேந்தர் கீழிறங்கி அலுவலகத்திற்குப் புறப்பட்டார். வழக்கம்போல் தாம் அலுவலகத்தில் இறங்கிக் கொண்டு என்னைக் கருத்தரங்கு நடைபெறும் இடத்தில்கொண்டுபோய் இறக்கச் சொன்னார்.

பிறிதொரு சமயத்தில் ஒரு நாள் திரு. வீ. உலக ஊழியனாரைப்பற்றி எங்கள் பேச்சில் எழுந்தது. நான் துறையூரில் இருந்தபோதும் காரைக்குடிக்குச் சென்ற பிறகும் அவரை எப்படியெல்லாம் பயன்படுத்திக்கொண் டேன் என்பதை விளக்கினேன். அப்போது அவர் சேலம் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இருந்தால் அவரும் சிறப்பார்; பல்கலைக் கழகத்தின் ஒளியும் நன்கு பிரகாசிக்கும் என்றேன். சில மாதங்களில் ஊழியனார் பல்கலைக் கழகத்திற்கு வந்து விட்டார்.

2. திருமந்திரம்—பாயிரம்-81 (திருமூலர் வரலாறு)

தில்லைப் பதியுடையான் சிற்றம்பலந் தன்னில்
அல்லும் பகலும்நின் றாடுகின்றான்—எல்லைக்கண்
அண்ணா மலைமன் அமைத்த கலைக்கழகம்
கண்ணாரக் கண்டு களித்து.[3]

என்பது கவிமணியின் வாக்கு. இத்தகைய பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் உலக ஊழியர் போன்ற தமிழ்ச் செல்வர்களின் நாவில் பயிலும் தமிழையும் அவன் கேட்டநுபவிக்க வேண்டுமல்லவா?

நான் பல்கலைக் கழகத்தில் தங்கியிருந்தபோது வேறொரு நிகழ்ச்சியும் நடைபெற்றது. விருந்தினர் இல்லத்தில் உணவு விடுதியின் உணவு உண்டு காலம் கழிக்கும் ஒருநாள் விருந்தினர் இல்லத்திலேயே சிற்றுண்டி அருந்த அழைத்தனர். ''தெ.பொ. மீ. அவர்கள் வந்திருக்கின்றார். இன்று அவரோடு சிற்றுண்டியும், பகல் உணவும் இரவு உணவும் கொள்ளவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டனர். தெ.பொ.மீ. அப்போது சென்னைமாநிலக் கல்லூரியில் தலைமைத் தமிழ் பேராசிரியராக இருந்தார். தெ. பொ. மீ.யை உணவு உண்ணும் மேசையின் அருகே சந்தித்தேன். ஏதோ தேர்வு விஷயமாக வந்திருக்க வேண்டும் என நினைத்தேன். ஆனால் அவருடைய பேச்சில் துணைவேந்தர் தனிப்பட்ட முறையில் எழுதிய கடிதப்படி வந்துள்ளதாக அறிந்தேன். டாக்டர் ஏ.சி. செட்டியார் விலகிக் கொண்டதால் அந்த இடத்தில் நியமித்தற்கெனவே இந்த அழைப்பு இருக்க வேண்டும் என ஊகித்தேன். என் ஊகம் சரியாகப் போயிற்று. ஒருசில மாதங்களில் தெ. பொ. மீ. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியேற்றதை அறிந்து கொண்டேன்.

3. மலரும் மாலையும்—993 (அண்ணாமலை மன்னர்).

யான் பல்கலைக் கழக வளாகத்தில் தங்கியிருந்த ஆறு வார காலத்தில் உணவு விடுதி உணவு சரிப்பட்டு வரவில்லை. சுவை இருக்கட்டும்; வீட்டுணவுமீது ஆராக் காதல் கொண்டேன். மூன்று அன்பர்கள் ஒரு வேளை விருந்து அளித்தனர். முதலில் என் அரிய நண்பர் சோமலெ ஒருநாள் இரவு உணவுக்கு அழைத்திருந்தார். பிறிதொரு நாள் ஞாயிறன்று பதிவாளர் T. D. மீனாட்சி சுந்தரம் பகல் உணவுக்கு அழைத்திருந்தார். இவர் எனக்கு திருச்சியில் ஒரு சாலை மாணாக்கர். முதல் மனைவி ஏதோநோய் வாய்ப்பட்டுத் திருமணம் புரிந்த இரண்டுமூன்றாண்டுகளில் திருநாடு அலங்கரித்து விட்டார் (30-12-1943). அப்போது அவர் அடைந்த சொல்லொணாத் துக்கத்தை நான் அறிவேன். இந்தப் பெரும் பிரிவுபற்றிக் கவிமணி அவர்கள் கூட ஓர் இரங்கற்பா பாடியுள்ளார்.

மண்ணில் இனிய வாழ்வினுக்கு
 வாய்த்த நல்ல துணையென்ன
எண்ணி யிருந்த மணவாளன்
 ஏங்கி ஏங்கி உளம்வருந்தக்
கண்ணிற் காணா விண்ணுலகம்
 கடந்து சென்ற தேன்?அம்மா
வண்ணக் கிளியே! மடமயிலே!
 மாதர் மணியே! சகுந்தலையே!

என்பது பாடல். ஓய்வு பெற்ற பிறகு பன்றிமலை சுவாமிகளிடம் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். இப்போது (1989) இவர் இல்லை; பல ஆண்டுகட்கு முன்னரே சிவப்பேறு அடைந்துவிட்டார். சோமலெயும் இவரும் கீரியும் பாம்பும் போல அவ்வளவு ஒற்றுமை! நான் பல்கலைக் கழக வளாகத்தில் இருந்தபோதே சோமலெ வேலையை விட்டு விலகிக் கொண்டார். ஒரே நாளில்

வீட்டைக் காலி செய்து விட்டுச் சிதம்பரத்தில் குடியேறி விட்டார் இவரும் இப்போது இல்லை. இரண்டாண்டு கட்கு முன்னர் சென்னையில் மாரடைப்பால் காலமானார். மூன்றாவதாக ஒரு ஞாயிறன்று தாவர இயல் பேராசிரியர் சீநிவாசன் பகல் விருந்து அளித்தார். இவர் வள்ளல் இராமலிங்க அடிகளின் திருமுறைகளில் உள்ளத் தைப் பறிகொடுத்தவர். கருத்தரங்கும் ஒருவாறு சிறப்பாக நிறைவேறியது.

இந்தக் கருத்தரங்கு முடிந்த அன்று பல்கலைக் கழகத் தில் ஏதோ ஒரு பெரிய நிகழ்ச்சி நடைபெற்றது. இப் போது அது நினைவில் இல்லை. சென்னை மாநிலக் கல்வி-நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் வந்திருந்தார். இந்த நிகழ்ச்சிக்குப் பெருவளநல்லூர் இராஜா சிதம்பரமும் வந்திருந்தார். துணைவேந்தர் அமைச்சருக்குப் பகல் விருந்து அளித்தார். நானும் விருந்தில் கலந்து கொண் டேன். அப்போது காரைக்குடியில் என் பதவி உயர்வு இழுபறியாகக் கிடந்தது. இதனை இராஜாசிதம்பரம் அவர்களிடம் சொன்னேன். சி. சுப்பிரமணியம் அப்போது அழகப்பர் அறத்தின் தலைவர். விருந்து முடிந்தவுடன் இராஜா சிதம்பரம் என்னை சி. சுப்பிரமணியம் தங்கி யிருந்த அறைக்கு இட்டுச்சென்று என்னைக் கவனித்துக் கொள்ளுமாறு வேண்டினார். திரு. சுப்பிரமணியம் ''ரெட்டியாரை நான் நன்கு அறிவேன். அவருடைய பிரச்னையையும் நான் அறிவேன். கவலைப்பட வேண் டாம்; நான் கட்டாயம் இதைக் கவனிப்பேன்'' என்று அன்புடன் கூறினார். எப்படியோஎனக்குப் பதவி உயர்வும் கிடைத்தது.

இரவு 7-30 மணிக்குப் பல்கலைக் கழகமும் திரு. சி. சுப்பிரமணியத்திற்கு ஒரு விருந்து அளித்தது. அதிலும் நான் கலந்து கொண்டு, அவசர அவசரமாகப் பெட்டி யுடன் இருப்பூர்தி நிலையத்திற்கு வந்தேன். வண்டி பத்து மணிக்கு என்பதாக அறிந்திருந்தேன். வண்டி கிளம்பு

வதற்கு முன்னே மாணவர்கள் புயல்போல் கிளம்பிக் கலகம் விளைவித்ததையும் மேசை நாற்காலிகளையெல்லாம் உடைத்தெறிந்ததையும் கேள்வியுற்றேன். காரணம் தெரியவில்லை. இதற்குள் வண்டியும் கிளம்பிவிட்டது. நானும் மறுநாள் காலையில் காரைக்குடி வந்தடைந்தேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கலகத்தைப் பற்றிய செய்தியும் வெளியாகி இருந்தது; விவரமாகத் தெரிவிக்கப் பெற்றும் இருந்தது. இப்போது (1989) அதை நினைவுகூர முடியவில்லை.

குமிழி—149

## 42. பல்கலைக் கழகத்தில் நுழைய முயற்சி

**1958**-இல் ஒரு சமயம் அழகப்பா கல்லூரி முதல்வர் அலெக்ஸாண்டர் ஞானமுத்துவிடம் உரையாடிக் கொண்டிருந்தபோது ''உங்கள் படிப்புக்கும் திறமைக்கும் தகுந்த முன்னேற்றம் அடைய வேண்டுமானால், நீங்கள் கலைக் கல்லூரி (முதுகலை பயிற்றப்படும் கல்லூரி) அல்லது பல்கலைக் கழகம் இவற்றில் நுழைய முயல வேண்டும்'' என்று அறிவுரை கூறினார். நானும் பதவி உயர்வு பெற்றதிலிருந்து பல இடங்களுக்கு முயன்றேன்; கிடைக்கும் ஊழ் நேரிடவில்லை. பின்னால் தன் திருவடி வாரத்தில் உள்ள பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் பணி கொள்ளலாம் என்று அந்த ஏழுமலையானே திருவுள்ளம் கொண்டிருத்தல் வேண்டும் என்று இப்போது நினைக்கத் தோன்றுகின்றது.

முதலில் மதுரைத் தியாகராசர் கல்லூரிக்கு விண்ணப்பம் அனுப்பினேன். திரு. ராய. சொ. அவர்கள் பரிந்துரையையும் பெற்று அனுப்பினேன். பலன் இல்லை.

அடுத்து, பழநியில் புதிதாகத் தொடங்கப்பெற்ற பழநி யாண்டவர் பண்பாட்டுக் கல்லூரி முதல்வர் பணிக்கும் விண்ணப்பம் போட்டேன். என்குல தெய்வமாக இருக்கும் முருகப் பெருமானே அருள் பாலிக்கவில்லை. நான் திருச்சியில் பயின்றபோது தங்கும் விடுதியில் தோழராக நெருங்கிப் பழகின R. சக்திவேல் (தேரோடும் வீதி, பழநி) என்பவருக்கு நிலைமை தெரிந்து எழுதுமாறு கேட்டு இருந்தேன். அவர் தந்தையார் பக்தர்களுக்குத் தரிசனம் செய்து வைக்கும் இறைபணியில் ஈடுபட்டிருந் ததால் அவர் குடும்பம் செல்வாக்குடன் திகழ்ந்தது. R. சக்திவேல் உள்புகுந்து உயர்மட்டத்தில் விசாரித்து, "ஐயா, வந்திருக்கும் மனுக்களில் உங்கள் மனுவே தலை யாயது; எல்லாத் தகுதி, அநுபவம் பெற்றுள்ளீர்கள். இந்த ஆண்டு அப்பதவியை நிரப்பப் போவதில்லையாம். அடுத்த ஆண்டு சைதையில் பயிற்சிக் கல்லூரியில் பணி யாற்றும் திரு. எஸ். ஆறுமுக முதலியாரை நியமிக்கப் போகிறார்களாம். அமைச்சர் (திரு. பக்தவத்சலம்) பரிந்துரைத்திருக்கிறாராம்" என்று விவரமான பதில் தந்தார். "கிட்டதாயினும் வெட்டென மற" என்ற பாட்டியின் வாக்கை நினைந்து வாளா இருந்து விட்டேன்.

இச்சமயத்தில் கோலாலம்பூரிலுள்ள (மலேயா) பல்கலைக் கழகத்தின் விளம்பரம் கண்டு அதற்கு விண்ணப்பித்தேன். விண்ணப்பப் படிவங்கள் எட்டு அநுப்பப் பெறவேண்டும். இதற்காக நன்முறையில் விண்ணப்பம் தயார் செய்தேன். இதையும், சான்றிதழ் கள், அத்தேதியில் வெளியிட்டிருந்த ஐந்து நூல்களைப் பற்றிய பத்திரிகை மதிப்புரைகள் இவற்றையெல்லாம் அச்சிட்டு (AIR MAIL தாளில்) கட்டமைத்து அனுப்பி னேன். மனுக்களைப் பரிசீலித்து இலண்டனில் தயாரிக்கப் பெற்ற குழுப்பட்டியில் (Panel) என் பெயர் முதலில் இருப்பதாகவும், கிடைப்பது உறுதி என்றும் விசாரித்து எழுதியிருந்தார்கள் K.V.AL.M. இராமநாதன் செட்டியார்,

ஆனால் அந்தக் குழுப்பட்டியிலிருந்து ஒருவரை எடுக்கும் பொறுப்பு துறைத்தலைவரின் கையில் இருந்தது. அப்போது துறைத் தலைவராக இருந்தவர் மு. இராசாக் கண்ணனார்; அவர் தம் சாதியைச் சேர்ந்த உ.பழநி என்பவரை (அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) தேர்ந்தெடுத்துக் கொண்டதாகவும் மீண்டும் செட்டியார் தெரிவித்திருந்தார்கள். இந்நிலையில் என் குடும்பத்தில் எல்லோருக்கும் செல் சீட்டுகள் (Pass ports) வாங்கி வைத் திருந்தேன். திரைகடலோடி அலைகடலுக்கப்பால் தமிழ்ப் பணிபுரியும் வாய்ப்பை இறைவன் தரவில்லை. இதுவும் ஏழுமலையான் போட்ட தடைக்கல் என்றே கருதுகின் றேன். திருப்பதிப் பணியில் அமர்த்த வேண்டுமல்லவா?

**சென்னைப் பல்கலைக் கழகம் :** சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம்—தமிழ்ப்பேரகராதிப் பணி தொடங்கப்பட இருந்தது. தலைமைப் பதிப்பாசிரியர், துணைப் பதிப்பாசிரியர் பதவிகட்கு விளம்பரம் வந்தது. இரண்டிற்கும் விண்ணப்பங்கள் அனுப்பியிருந்தேன். பேட்டியும் வந்தது. அப்பொழுது டாக்டர் A.C. செட்டியார், கா. அப்பாதுரைப் பிள்ளை ஒய்வு பெற்ற கல்வித்துறை இயக்குனர் T.P. சந்தானகிருஷ்ணநாயுடு என்பவர்கள் பேட்டிக்கு வந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் கள். இவர்களுள் அறிவியல் (இயற்பியல், வேதியியல்), கணிதம், கல்வி, உளவியல் இத்துறைகளில் நூல்கள் எழுதி ஆயிரக்கணக்கான கலைச் சொற்களைச் சிந்தித்தவன் நான் ஒருவனே. மனிதாபிமான அடிப்படையில் சிந்தித் தால், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றிச் சட்டமன்ற மேலவைக்கு ஆசிரியர் தொகுதியில் தேர்தலுக்கு நிற்கும் விஷயமாகக் கருத்து வேறுபாட்டி னால் பதவியைத் துறந்து நிற்கும் டாக்டர் A.C. செட்டியாரைத் தலைமைப் பதிப்பாசிரியராகவும், சரியான வேலையின்றி அல்லல்படும் என் அரிய நண்பர் கா. அப்பா

துரைப் பிள்ளையைத் துணைப் பதிப்பாசிரியராகவும் நியமித்தமை சரி என்று என் மனம் அமைதியடைகின்றது. எனக்குக் கிடைக்காததுபற்றி வருத்தப்படவில்லை. பல்வேறு முயற்சிகளில் வெற்றி காணாதது இறைவன் எனக்குப் பரிந்துரைக்கச் சரியான பின்னணி இல்லாது செய்து விட்டான் என்பதுதான் நான் அநுபவத்தில் கண்ட உண்மை. இந்த நியமனங்கள்பற்றி நான் கொண்ட கருத்தையே பேராசிரியர் அ. சீநிவாச ராகவன் அவர்களும் (பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினர்) என்னிடம் தெரிவித்து ஆறுதல் கூறினார்கள்.

அகராதித்துறை பற்றிய பேட்டிக்கு வல்லுநர் குழுவில் தனிநாயகம் அடிகள், டாக்டர் மு. வரதராசன் வந்திருந் தார்கள். இன்னும் சிலரும் வந்திருந்தனர். அவர்கள் பெயர்களை நினைவுகூரமுடியவில்லை. தனிநாயக அடிகள் மட்டிலும் கேட்ட இரண்டு வினாக்களையும் அவற்றிற்கு நான் அளித்த விடைகளையும் நினைவுகூர முடிகின்றது. வேறு ஒருவரும் கேட்கவில்லை.

த.அ: Acclimatise—க்குத் தமிழில் பொருள் சொல்ல முடியுமா?

நான்: "திடீரென்று கேட்டால் சொல்ல முடியாது. யோசித்தால் சொல்லலாம். அதுவும் சரியாக அமையும் என்று சொல்லமுடியாது."

த.அ: கலைச் சொற்களை எப்படி உண்டாக்குகின்றீர்கள்?

நான்: "வாழ்க்கையில் பல துறையில் பணியாற்று வோர்களிடம் பழகி அவர்கள்மூலம் ஏதாவது கிடைக்குமோ என்று பார்க்க வேண்டும். முடியும்வரை முயல வேண்டும். வேதியியல் போன்றவற்றிலுள்ள சொற்களை அப்படியே வைத்துக்கொள்வது முறை. சிறிது நேரம் கொடுத்தால் என் அநுபவத்தில் கண்ட சிலவற்றைச் சொல்லுவேன்." (நேரம் கொடுக்கப் பெற்றது).

உடலியல் : ஓர் உடற்கூற்றியல் ஆங்கில நூலைத் தமிழ்ப்படுத்தும்போது பெற்ற அநுபவத்தைக் கூறுவேன். சாதாரணமாகப் Pennis என்றசொல்லுக்கு 'ஆண்குறி' என்று சொல்லுவர். பல பகுதிகள் அடங்கிய தொகுப்பிற்கே 'ஆண்குறி' என்று வழங்கலாம். ஒருநாள் ஒரு நாட்டு மருந்து கடைக்குப் போயிருந்தேன். ஒருவர் நிறைய மருந்துச் சரக்குகள் வாங்கினார். 'எதற்கு?' என்று நான் கேட்க, அவர் 'லிங்கபுற்றுக்கு' (Cancer in the Pennis) என்று சொன்னார். Pennis என்பதற்கு 'இலிங்கம்' என்று வைத்துக் கொள்ளலாம். 'வடமொழி' யாக இருப்பினும் இடக்கரடக்கலாயிருப்பதால் இதையே வைத்துக் கொண்டேன். 'Clitoris' என்ற சொல்லுக்கு என்ன வைப்பது என்று தெரியவில்லை. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆறு வாரகாலம் தங்க வேண்டி வந்தது. அப்போது இலத்தின் அகராதியைப் பார்தேன். அதில் இச்சொல்லுக்கு Prototype of male organ என்று இருப்பதைக் கண்டேன். பெண்குறியின் வெளிப் பகுதிக்கு 'யோனி' என்ற பெயர் வழக்கை அறிந்த நான் உடனே இதற்கு 'யோனி லிங்கம்' என்ற பெயரைக் கொண்டேன். இதுவும் இடக்கர் அடக்காக அமைந்து விட்டது. Menopanse என்ற சொல்லுக்கும் பெயர் வழக்கை யொட்டியே தமிழ்ச் சொல்லைக் கொண்டேன்; பெண்களின் மாதவிடாய் ஒழுக்குக்கு 'சூதகம்' என்ற பெயர் வழங்கி வருகின்றது. எனவே இச்சொல்லுக்கு 'சூதக ஓய்வு' என்று கொண்டேன்.''

அணுவியல் : ''அணுவில் Electron, Proton, Neutron, Mason, Positron என்ற துகள்கள் உண்டு. இவை ஒரு குடும்பமாக உள்ளன. மின்னலில்உள்ள ஒரு துகளுக்கு 'மின்னி' என்ற பெயரைக் கொண்டேன். Electron—எதிர் மின்னி, Proton—நேர் இயல் மின்னி, Neutron—பொது இயல் மின்னி, Positron—நேர்

மின்னி, Mason—எதிரியல் மின்னி—என்ற பெயர்களைச் சூட்டினேன். இஃது என்னுடைய ஒருவித முயற்சியேயன்றி முடிவானதன்று.'' என்று சொன்னேன். வல்லுநர் குழு என் முயற்சியைப் பாராட்டியது. ஆனால் அகராதித்துறையில் பணி வாய்ப்புதான் கிடைக்கவில்லை! இதுவும் இறைவன் திருவுள்ளம் போலும் என்று நினைத்து அமைதி கொண்டேன்.

இதைத் தவிர மூன்று முறை சென்னைப் பல்கலைக் கழகத்தில் நுழைய முயன்றேன். மூன்று முறையும் கிடைக்கவில்லை. ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரணத்தால் கிடைக்காத நிலை ஏற்பட்டது. பரிந்துரைக்கும் பின்னணி இல்லாமையே காரணம் என்பது தெளிவு. பதவியில் அமர்ந்தவர்கட்கெல்லாம் பின்னணி இருந்தது.

திருவேங்கடவன் பல்கலைக்கழக விளம்பரம் வந்தது—தமிழ் விரிவுரையாளர் பதவிக்கென்று. விண்ணப்பித்தேன். பேட்டி அப்பல்கலைக் கழகத்துணைவேந்தர் எஸ். கோவிந்தராஜுலு நாயுடுவின் சென்னை இல்லத்தில் (ஆர்மஸ் சாலை, கீழ்ப்பாக்கம்) நடைபெற்றது. பேட்டி வல்லுநர் குழுவில் திரு T.M. நாராயணசாமி பிள்ளையும் டாக்டர் கு.மா.அ. துரை அரங்கசாமியும் அமர்ந்திருந்தனர். திரு ரா.பி. சேதுபிள்ளை வருவதாக இருந்து, அவர் உடல் நலம் சரியில்லாமையால் அவருக்குப் பதிலாக துரை அரங்கசாமி வந்திருப்பதாக அறிந்தேன். பதினெண்மர்கள் பேட்டிக்கு வந்திருந்தனர். எல்லோரும் 30 அகவைக்குக் கீழானவர்கள்; நான் ஒருவனே 40 வயதைத் தாண்டியவன். என்னைதான் இறுதியில் அழைத்தனர். 18 பேர்களில் மூவரை நினைவு கூர முடிகின்றது. K.குமாரசாமிராஜா (அப்போது ஆந்திரபல்கலைக் கழகத்தில் ஆய்வுமாணவர்), P. பாலசுப்பிரமணியம் (அப்போது அறிவியல்மாதப் பத்திரிகையான 'அணுக்கதிர்' என்பதன் ஆசிரியர்) சி. பால சுப்பிரமணியம் (பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் Tutor).

என்னைத்தான் இறுதியில் பேட்டிக்கு அழைத்தனர். என் பேட்டியில் அதிக நேரம் எடுத்துக் கொண்டனர். பல வினாக்கள் விடுக்கப்பெற்றன. முப்பத்தோரு ஆண்டுகட்கு முன் நடைபெற்ற பேட்டியாதலின் இப்போது (1989) நினைவுகூர முடியவில்லை. நாராயணசாமிப் பிள்ளை மட்டிலும், கேட்டது நினைவில் உள்ளது. அவர் ''கம்பனின் புகழுக்குக் காரணம் என்னவாயிருக்கும் என்று தாங்கள் கருதுகின்றீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு நான் ''கம்பனுக்குப் புகழ் வந்தது அவன் இயற்றிய இராமாயணம் என்ற காவியத்தால்தான். தேர்ந்தெடுத்த பொருள் பரம்பொருளே இராமனாக வந்தான் என்று கொண்டமை. பக்தி இயக்கத்தின் விளைவாக எழுந்த ஆழ்வார்களின் பாசுரக் கருத்துகளை மேற்கொண்டமை, ஆங்காங்கே இலைமறை காய்கள் போல வைணவ தத்துவக் கருத்துகளைப் பெற வைத்தமை போன்றவையே அவன் புகழுக்குப் பின்னணியாக அமைந்தவை என்று கருதலாம். இது பற்றி வையாபுரிப் பிள்ளை 'காவிய காலம்' என்ற நூலில் விரிவாக எழுதியுள்ளார்'' என்றேன்.

உடனே டாக்டர் துரைஅரங்கசாமி ''மிஸ்டர் ரெட்டியார், வையாபுரிப்பிள்ளையின் கருத்துகட்கெல்லாம் தாங்கள் உடன் படுகின்றீர்களா?'' என்று வினவினார். ''ஆராய்ச்சி விருப்பு வெறுப்பற்ற முறையில் இருக்க வேண்டும். அத்தகைய முறையைக் கையாண்டு ஆய்வு முடிவுகளைக் கூறுபவர்கள் நம் நாட்டில் இல்லை. வையாபுரிப் பிள்ளை அவர்களும் இதற்கு விலக்கு இல்லை. ஆனால் அவர் சிறந்த ஆராய்ச்சியாளராக இருப்பினும், சில கருத்துகள் அறிஞர்களால் ஒப்புக் கொள்வனவாக இல்லை. பெரும்பாலானவை நல்ல முடிவுகளே. இவ்வாறு ஒப்புக் கொள்வதால் என் விருப்பு வெறுப்புகளும் கலந்து விட்டனவா என்ற ஐயமும் என்பால் உண்டு. ஒருகால் தாங்கள் சிலவற்றிற்கு உடன்படாவிடில், தங்கள் விருப்பு

வெறுப்புகளும் கலந்து விடலாமல்லவா? எனவே, ஆராய்ச்சி முடிவற்ற பிரவாகம் என்பது என் தாழ்மை யான கருத்து.'' என்று கூறி முடித்தேன்.

பேட்டி முடிந்தது. என்னை இருக்கச் சொன்னார்கள். நாராயணசாமி பிள்ளை பேசினார் : (என்னைக் காட்டி) ''இவரை நீங்கள் நியமித்துக் கொண்டால் கிடைத்தற் கரிய ஒருவரைப் போட்டுக் கொண்ட மன நிறைவு அடை வீர்கள்; கடுமையான உழைப்பாளி. 'தாம் உண்டு, தம் வேலை யுண்டு' என்று இருப்பவர். துறையை நன்கு வளர்ப்பார்; துறைக்கு நல்ல பேர் ஈட்டித் தருவார்.'' என்று சொன்னார். ''நானும் சில செய்திகளைத் தெரிந்து கொள்ள விழைகின்றேன். இசைவு தந்தால், என் ஐயத்தைத் தீர்த்துக் கொள்வேன்'' என்றேன். துணை வேந்தர் ''கேளுங்கள்'' என்றார். நான், ''துறைவளர்ச் சிக்கு வாய்ப்பு தருவீர்களா? அதுவரையில் நான் தனித்து இயங்குவேனா? ஏதாவது ஒரு துறையுடன் இணைத்து வைப்பீர்களா? வீடு தருவீர்களா? P. F. உண்டா?'' என்றெல்லாம் கேட்டேன். அவரும் ''துறை வளர்ச்சிக்கு வாய்ப்புண்டு; தனியாகத்தான் வைக்கப் பெறுவீர்கள்'' என்று சொல்லி ''ஏனையவை எல்லாம் எல்லோருக்கும் பொதுதானே?'' என்று சொல்லி முடித்தார். நானும் ''மிகு புகழ் வாய்ந்த ஒரு பெரிய கல்லூரியில் பேராசிரியர் (Professor) பொறுப்பை விட்டு வருகிறேன். இருக்கும் இடத்தில் எனக்கு எந்தவித குறையும் இல்லை. கவலைப் பட்டு இப்படியெல்லாம் கேட்டேன். மன்னித்தருள்க'' என்று கேட்டுக் கொண்டு வெளியே வந்தேன்.

எல்லோரும் போய்விட்டார்கள். K. குமாரசாமி ராஜா வும், P. பாலசுப்பிரமணியனும் எனக்காகக் காத்திருந்தார் கள். இந்த இருவரும் எனக்குதான் கிடைக்க வாய்ப்பிருக் கின்றது என்று சொன்னார்கள். நான் திருப்பதி சென்ற பிறகு எங்கள் மூவர் பெயர்களும் குழுப்பட்டியலில் (Panel) இருந்ததையும் என் பெயர் முதலில் இருந்ததையும் அறிந் தேன். நாங்கள் மூவரும் வீட்டில் தெலுங்கு பேசுபவர்கள்.

இவர்கள் யாராவது ஒருவரைப் போட்டால் சூழ்நிலையில் எளிதாகப் பிடிப்பு ஏற்படும் என்று துணைவேந்தர் கருதியிருக்கக்கூடும். நாங்கள் மூவரும் மெதுவாக நடந்து கொண்டே தாசப்பிரகாஷ் சிற்றுண்டி விடுதிக்கு (பூவிருந்தவல்லி சாலையில் உள்ளது) வந்து சிற்றுண்டி காஃபி கொண்டு பிரியா விடையுடன் பிரிந்து சென்றோம். இப்போது (1989) K.குமாரசாமி ராஜா டாக்டர் பட்டம் பெற்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையில் பேராசிரியராகவும், P. பாலசுப்பிரமணியம் தில்லி பல்கலைக் கழகத்தில் ரீடராகவும் பணியாற்றி வருகின்றனர். இரண்டு திங்களுக்கு முன்னர் (அக்டோபர் 89) டாக்டர் K. குமாரசாமி ராஜா எங்கோ மறைந்து விட்டார்; தேடி வருகின்றனர். டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் (மொழி) தலைவராகவும் பேராசிரியராகவும் இருந்து வருகின்றார். நான் பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்னர் அக்டோபர் (1978) ஓய்வு பெற்று ஓய்வு ஊதியம் இன்றி அண்ணா நகரில் குடியேறி சொந்த இல்லத்தில் என் மூத்த மகனுடன் வாழ்ந்து வருகின்றேன். தமிழ்ப் பணியிலும் சமயப் பணியிலும் நூல் எழுதி வெளியிடுவது மூலமாக என்னை ஈடுபடுத்திக் கொண்டு அமைதியாக வாழ்கின்றேன்.

குமிழி—150

## 43. நினைவுச் சிதறல்கள்

பல்லாண்டுகள் கழித்து நினைவுகூரும் போது எத்தனையோ நிகழ்ச்சிகள், செய்திகள் மறந்து போகின்றன. நினைவிலிரும் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடுவேன்.

□ □ □

இக்காலத்தில் ஆண்கள்—பெண்கள் சேர்ந்து படிக்கும் வாய்ப்புகள் உள்ளன; பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், ஆய்வுக் கூடங்கள் இங்கெல்லாம் இவ்வாய்ப்புகளைக் காணலாம். அலுவலகங்களில் இவர்கள் சேர்ந்து பணியாற்றுகின்றனர். ஆபாசப் படக் காட்சிகளை இவர்கள் காண நேரிடுகின்றது. பேருந்துகள், இருப்பூர்திகள்—இங்கெல்லாம் சேர்ந்து பயணம் செய்கின்றனர். சுவரொட்டிகள், ஆபாச விளம்பரங்கள், ஆபாசக் காதற் கதைகள் இவர்கள் கண்ணில் படுகின்றன; படித்து மகிழ்கின்றனர்; சுருக்க மாகக் கூறினால் எங்கும் காதலுணர்வைத் தூண்டும் சூழ்நிலைகள் நிலவுகின்றன. வரதட்சிணைக் கொடுமை யினால் முப்பது வயது வரைகூட சில பெண்கள் திருமணம் இன்றி 'முதுகன்னியராக' வாழ்கின்றனர். அதுவும் அலுவல் பார்க்கும் பெண்களாக இருந்து, முதுமை நிலையில் வேறு வருமானமின்றித் தவிக்கும் பெற்றோர்கள் தம் பெண்கள் திருமண விஷயத்தில் அதிக அக்கறை காட்டுவதில்லை. முதல் தாரத்துப் பெண் பிள்ளைகள் சிற்றன்னையின் கொடுமைக்கு உள்ளாகின்றனர். இந்தச் சூழ்நிலைகளில் தான் காதல் மணம், கலப்பு மணம், உடன்போக்கு முதலியவைகள் நடைபெறுகின்றன. 'மணமகன், மணமகள் தேவை' என்ற விளம்பரங்களைப் பார்த்தே பல பெண்கள் தம் திருமணத்தை முடித்துக் கொள் கின்றனர். முதியோர்கள் தம் பொறுப்பை மறந்த குற்றத்தைச் சிந்தியாது, இத்தகைய திருமணம் புரிந்து கொண்டவர்கள்மீது சீறுகின்றனர்; சினக்கின்றனர்.

காரைக்குடியில் எஸ். இரத்தினம் என்ற ஆசிரியர் அழகப்பா மாதிரி உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றி வந்தார். இவர் உயர்நிலைப் பள்ளியில் என் மாணாக்கர். திருச்சிக் கல்லூரியொன்றில் பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு சைதையில் பயிற்சிக் கல்லூரியில் பயின்று பி.டி. பட்டம் (இப்போது பி.எட்.) பெற்றவர். இந்தப் பள்ளியில்

பள்ளியிறுதி வகுப்பில் ஒரு பெண்; பிராமண குலத்தவள்; ஆசிரியர் வேளாளர் வகுப்பைச் சார்ந்தவர். பழைய மாணவராதலால் அடிக்கடி என்னிடம் நெருங்கிப் பழகுவார். இவர் திருமணத்தை உறுதி செய்து கொண்டு தாலிக் கொடி செய்வதில் என் உதவியை நாடினார். எனக்குத் தெரிந்த நகைக் கடையொன்றில் இதைச் செய்து கொள்ள ஏற்பாடு செய்தேன். திருச்சியில் தந்தை பெரியார் தலைமையில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு நான் போகும் வாய்ப்பும் ஏதோ முக்கிய அலுவலால் இல்லாது போயிற்று. நான் இந்த ஆசிரியருக்குப் பொருளுதவி செய்ததாகத் தாளாளர் C. V. CT. V. வேங்கடாசலம் செட்டியார் காதுக்கும் எட்டச் செய்தனர், என் 'ஆப்த நண்பர்கள்'; இது நடைபெற்றது, என் பதவி உயர்வு நடைபெற்ற காலத்தில். தாளாளரே ஒரு சமயம் "என்ன ரெட்டியார், நீங்கள் கலப்பு மணத்திற்கு உதவின தாகக் கேள்விப்பட்டேனே" என்று என்னிடம் கேட்டே விட்டார். "தாலிக் கொடி செய்யும் விஷயத்தில் வாய்ச் சொல் உதவிதான்" என்று சமாதானம் சொன்னேன். இதையும் ஒரு கருவியாகக் கொண்டு என் நண்பர்கள் என் பதவி உயர்வை நிறுத்த முயன்றிருக்க வேண்டும் என்பது என் ஊகம்.

பிராமணர்கள் இல்லாததையும் பொல்லாததையும் தாளாளரிடம் சொல்லி, எஸ். இரத்தினத்தை வேலை நீக்கம் செய்வதில் கொண்டு செலுத்தினர். அவர் கல்வித் துறைக்கு முறையீடு செய்து சில மாதங்களில் விட்டுப் போன சம்பளத்துடன் திரும்பவும் பணியில் சேர்ந்து கொண்டார். இதில் நிர்வாகம் தலையிட்டது சிந்தனை யற்ற செயல் என்பதைத் தாளாளர் பின்னர் உணர்ந் திருக்க வேண்டும். இப்போது,

காதலினால் மானுடர்க்குக் கலவி யுண்டாம்;
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்;
காதலினால் மானுடர்க்குக் கவிதை யுண்டாம்;
கானமுண்டாம் சிற்பமுதல் கலைகள் உண்டாம்;

ஆதலினால் காதல்செய்வீர்; உலகத் தீரே!
அஃதன்றோ இவ்வுலகத் தலைமை இன்பம்;
காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்;
கவலைபோம்; அதனாலே மரணம் பொய்யாம்,

... ... ... ... ... ...

நாடகத்தில் காவியத்தில் காதல் என்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றாம் என்பர்;
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோ ரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்;
பாடைகட்டி அதைக்கொல்ல வழிசெய் கின்றார்;
பாரினிலே காதல்என்னும் பயிரை மாய்க்க
மூடரெலாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறைதவறி இடரெய்திக் கெடுகின் றாரே.[1]

என்ற பாரதியாரின் பாடல்களை நினைத்துக் கொண்டேன். எஸ். இரத்தினம் காரைக்குடியிலிருந்த போதே தமிழ் எம்.ஏ., வரலாறு எம்.ஏ. பட்டங்கள் பெற்று அரசினர் கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரிய ராகத் திருச்சியில் பணி புரிவதாகக் கேள்விப்பட்டேன். அதன் பிறகு திருச்சியில் ஓரிருமுறைசந்திப்பும் நேர்ந்தது.

□ □ □

மேலே குறிப்பிட்டது 'கலப்பு மணம்'; சாதியை விட்டுச் சாதியில் செய்து கொண்ட திருமணம். இப்போது குறிப்பிடப் போவது காதல் திருமணம்; ஒரே சாதியினர் செய்து கொண்ட திருமணம். குளத்து என்ற பி.டி. மாணவர் ஒருவர்; இவர் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த தூத்துக்குடி என்ற ஊரர். மாதிரிப் பள்ளியில் ஓர் இடைநிலை ஆசிரியை; இவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்பது தெரியாது; பெயரும் தெரியாது. பி.டி. மாணவர்கள் மாதிரிப் பள்ளியில் வகுப்பு எடுக்கச் செல்வார்கள்; அநுபவம் மிக்க ஆசிரியர்கள் பாடம்

1. பா.க; சுயசரிதை—49, 52.

கற்பிக்கும்போது அதனைக் கவனிக்கவும் செல்வார்கள். இத்தகைய வாய்ப்புகளில் எப்படியோ ஒருவரையொருவர் நேசிக்கத் தொடங்கினர். தனிமையாகச் சந்தித்துப் பேசியும் இருக்கலாம். குளத்துவின் வகுப்புத் தோழர்கள் இதைக் கவனித்துமிருக்கலாம். இவற்றிலெல்லாம் தோழர்கட்குச் சுவை இல்லை. நாடோறும் பகல் 1—2 மணியின்போது பகல் உணவு கொண்டு கை அலும்பும் போது நடைபெறும் நிகழ்ச்சியைத்தான் மாணவ மணிகள் அநுபவிப்பார்கள். கீழ்க்கோடியில் பகரவடிவில் அமைந் திருப்பன கல்லூரி கட்டடங்கள். சிறிது இடைவெளி விட்டு மேல்கோடியில் பகர வடிவில் அமைந்திருப்பன மாதிரிப் பள்ளிக் கட்டடங்கள். கல்லூரியில் தென்புறக் கட்டடத்தின்முன்னர் ஒரு தண்ணீர்க் குழாய்இருக்கின்றது; கல்லூரி மாணவர்கள் சிற்றுண்டி உண்டு நீர்ப் பருகுவதும் கை அலம்புவதும் இந்தக் குழாயில்தான். இங்ஙனமே மாதிரி உயர்நிலைப் பள்ளியின் வடபுறக் கட்டடத்தின் முன்னர் ஒரு தண்ணீர்க் குழாய் உண்டு. பள்ளி ஆசிரியர்கள் சிற்றுண்டி உண்டு கை அலம்புவதும் இந்தக் குழாயில்தான். சில சமயம் இடைநிலை ஆசிரியைக் கை அலம்புவதைக் குளத்து பார்க்க நேரிடும்; அதே சமயத்தில் குளத்து கை அலும்புவதை ஆசிரியையும் பார்க்கநேரிடும். இருவரும் கை அலம்பும்போது ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே கை அலம்புகையில் தம் கையை மறந்து 'காதல் உணர்வில்' ஆழங்கால் படும்போது குழாய் நீர் இருவர் பக்கத்திலும் கையில் படாது கீழே பாயும். ஒன்றிரண்டு நிமிடங்கள் கூட நீர் வீணாவது உண்டு. இக்காட்சிகளைக் கண்டு களிக்கும் பி.டி. மாணவர்கள் பேரொலிகளை எழுப்பி மகிழ்வர். கல்லூரி ஆசிரியர்கள் இவ்வொலிகளைக் கேட்டு என்ன என்று பார்த்து மாணவர்களை வினவும் போது குளத்துவின் கதையைச் சொல்லி மகிழ்வார்கள்.

அகத்துறையில் காதல் இன்பத்தைத் துய்ப்பதில் களவு, கற்பு என்ற இருவேறு நிலைகள் உள்ளன. முன்பின்

அறியாத காதலர்களைச் சேர்த்து வைப்பது 'பால்வரைத் தெய்வம்' என்று தொல்காப்பியர் கூறும் ஊழ் என்பது தமிழர்களின் கொள்கை. காதலர்கள் களவுக் காலத்தில் கொள்ளும் உடல் துடிப்பு கற்புக் காலத்தில் இருப்ப தில்லை. களவுவழிக் காதல் கங்கைப் பிரவாகம் போன்றது;கற்பு வழித் துய்க்கும் காதல் இன்பம் யமுனைப் பிரவாகத்தையொக்கும் என்று சொல்லி வைக்கலாம். காதல் உணர்வு வேறு; காதல் சுவை வேறு. சுவை இலக்கணத்தை ஆழ்ந்து கற்போர் இவ்வேறுபாட்டை நன்கு அறிவர். குளத்தும் ஆசிரியையும் அநுபவிப்பது காதல் உணர்வு; குளத்துவின் தோழர்களாகிய பி டி. மாணாக்கர்கள் அநுபவிப்பது காதல் (உவகைச்) சுவை. குளத்து கல்லூரி வாழ்வில் களவு முறையிலேயே இன்பத்தை அநுபவித்தார்; கல்லூரி வாழ்வு முடிந்ததும் இரு வழியிலும் உள்ள பெற்றோர்கள் தலையிட்டு இருவரையும் கற்பு வழிப்படுத்தினர் என்ற செய்தியும் எப்படியோ கல்லூரிக்கும் எட்டியது. கலப்பு மணத்தினால் எழுந்த அலர், கூக்குரல், குற்றச்சாட்டு முதலியவை காதல் மணத்தினால் எழவில்லை. இருவரும் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்களாதலால் முரண்பாடுகள் எழவே வாய்ப்பில்லை.

பி. டி. வகுப்பில் மாணவிகளும் சேர்ந்து படிக்கும் காலத்தில் கலப்பு மணமோ காதல் மணமோ எழவில்லை. எல்லோரும் நன்கு கலந்துதான் பழகினர். இரசாபாசங்கள் ஏழாமல் காத்துக் கொண்டனர். 'பால்வரைத் தெய்வம்' இவர்கட்குத் துணை நிற்கவில்லை போலும். ஆனால் அண்ணாமலைப் பல்கலைக் கழகவளாகத்தில் இத்தகைய திருமண நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் தவறாமல் நடை பெறும் என்று கேள்விப்பட்டதுண்டு. இத்தகைய திருமணங்கட்கு வைத்தீஸ்வரன் கோயிலிலுள்ள முருகனே சாட்சியாக இருப்பான் என்றும் பேசிக் கொள்வதும் என் காதில் விழுந்தது.

□ □ □

சா.க.விடம் நெருங்கிய தொடர்புஏற்பட்டபிறகு அவர் இல்லத்திற்கு எத்தனையோ அறிஞர்கள், அரசியல் தலைவர்கள், இலக்கியச் சுவைஞர்கள் முதலியோர் வந்துவந்து போவார்கள். அவர்களிடம் எல்லாம் என்னை அறிமுகப் படுத்தி வைப்பார் கம்பன் அடிப்பொடி. இப்படி அறிமுகமானவர்களை எல்லாம் இப்போது நினைவு கூர முடியவில்லை. இப்படி அறிமுகமானவர்களில் முக்கியமானவர் ப. ஜீவாநந்தம். 'ஜீவா' என்றே பொதுமக்களிடம் வழங்கப் படுவர். கம்பனைப் பொதுவுடைமைப் போக்கில் அற்புதமாகப் பேசுபவர். நாட்டுப் படலத்திலுள்ள சில பாடல்களை வைத்துக் கொண்டு பொதுவுடைமைக் கொள்கைகளை விளக்கினது இன்னும் என் மனத்தில் பசுமையாகவே உள்ளது. தவிர, ஜீவா தம் முதுமைக் காலத்தில் நரம்புத் தளர்ச்சி நோயால் தாக்குண்டு மிகச் சிரமப்பட்டார். சா. க. ஆதரவில் காரைக்குடி—முத்துப்பட்டணத்தில்—தங்கிப் பிள்ளையார் பட்டி வைத்தியரிடம் ஆயுர் வேத முறையில் சிகிச்சை பெற்று வந்தார். அப்போது அடிக்கடி அவர் இல்லம் சென்று உடல் நலத்தைப் பற்றி விசாரித்து வருவதுண்டு. 'ஜீவா' என் கல்லூரி வாழ்க்கையின் போதிருந்து என் வீர வழிபாட்டுக்குரியவர். அவர் தூத்துக்குடியிலிருந்து நடத்தி வந்த 'அன்பு' என்ற வார(?) ஏட்டை ஈடுபாட்டுடன் படித்து வந்தவன். ஒரு சமயம் அவரை அவர் இல்லத்தில் சந்தித்தபோது திருச்சி தேசிய கல்லூரியில் (நான் அப்போது புனித சூசையப்பர் கல்லூரியில்—இடை நிலை வகுப்பு மாணவன்) நீலாவதி அம்மையாரின் தலைமையில் பேசியதை நினைவுகூர்ந்தேன். அப்போது பேராசிரியர் சாரநாதன் கல்லூரி முதல்வர்; அப்போது கல்லூரி தெப்பகுளம்—ஆண்டார் தெருவின் அருகிலிருந்தது. பேராசிரியர் சாரநாதன் வைதிக—வைணவக் குடும்பத்தில் பிறந்தவராயினும், காந்தி நெறியைப் பின்பற்றுபவராயினும் சாதி, சமய, அரசியல் கொள்கைகட்கு அப்பாற்பட்டவர்; விரிந்த மனமுடையவர். இதனால்தான் ஜீவா பேச்சுக்குக் கல்லூரியில் இடம்

தந்தார். அக்காலத்தில் ஐரோப்பாவில் ஹிட்லர், முஸ்ஸோலினி ஆகியவர்கள் சிம்மசொப்பனமாக இருந்தவர்கள். அப்போது (1935-36) ஜீவா சொன்ன வாசகத்தை அவரிடம் இப்போது (1958-59) நினைவு கூர்ந்தேன். "இத்தாலி நாட்டு மக்களின் மார்பைப் பிளந்து இதயத்தை நோக்கினால் 'இத்தாலி—சுதந்திரம்' என்றிருப்பதைக் காணலாம்; ஆனால் நம் தென்னிந்தியப் பார்ப்பனர்களின் சட்டையை விலகிப் பார்த்தாலே 'டவாலி, (பூணூல்)யைக் காணலாம்' என்று கூறியது இன்னும் என் மனத்தில் பசுமையாக உள்ளது" என்று கூறியபோது 'ஜீவா' மனம் நெகிழ்ந்து போனார். என்னுடைய நினைவாற்றலைப் பாராட்டினார். அக்காலத்தில் ஜீவாவும் நீலாவதி அம்மையாரும் பெரியார் தலைமையில் இயங்கிய சுயமரியாதைக் கட்சியைச் சேர்ந்தவர்கள். இந்தக் கூட்டத்தில் முதல்வர் சாரநாதனே நன்றி கூறி சுயமரியாதைக் கொள்கைகளைப் பாராட்டிப் பேசின போது அவரது பரந்த நோக்கம் பளிச்சிட்டதைக் கண்டு மகிழ முடிந்தது.

□ □ □

1952 முதல் அமிர்தவல்லி உணவு விடுதிக்கு முதல்வர் சீநிவாசன் அவர்கள் என்னைத் துணைப் பாதுகாவலராக (Deputy warden) நியமனம் செய்தார். துரைக்கண்ணு முதலியார் காலத்தில் 1957 வரை இப்பொறுப்பு என்னிடம் இருந்தது. இந்த விடுதி கல்லூரி வளாகத்தில் உடற்பயிற்சிக் கல்லூரி உணவு விடுதிக் கட்டடத்திற்கு மாற்றப்பட்ட பிறகு நான் இந்தப் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டேன். அதன் பிறகு உடற் பயிற்சி ஆசிரியர் திரு. ஓவன் பொறுப்பில் அது நடை பெற்றது. இதற்கு மாதம் ஒன்றுக்கு இருபது ரூபாய் மதிப்பூதியமாகத் (Honorarium) தந்ததாக நினைவு. இப்பொறுப்பினால் 40 மாணாக்கர்களுடன் நெருங்கிப் பழக வாய்ப்பு ஏற்பட்டது. அவர்களுடைய விருப்பு—வெறுப்புகள், உணர்ச்சிகள்,

ஆசைகள், தனித் திறன்கள் இவற்றை மதிப்பிடும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன.

வைத்திநாதய்யர் (வயது—51) என்ற ஒருவர் மாணவராக வந்து சேர்ந்தார். இவர் சட்டக் கல்வி கற்று பட்டம் பெற்றவர். திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவர் இரவில் உண்பதில்லை. அப்படி உண்டால் உணவு செரிமானம் ஆவதில்லை. மாணவர்கள் கூட்டம் போட்டு அவர்கள் அனுமதியின் பேரில் 40 விழுக்காடு கட்டணத்தில் சலுகை தந்ததாக நினைவு. இரண்டு காவல் துறை உதவி ஆய்வாளர்கள் கூடத் தம் பதவியைத் துறந்து ஆசிரியப்பயிற்சியில் வந்துசேர்ந்திருந்தனர். ஒருவர் ஒன்றிரண்டு ஆண்டுகள் அநுபவத்துடன் பதவியை விட்டு விலகினவர். ஏன்? என்று கேட்டதற்கு தமக்கு மேல் உள்ள அதிகாரிகள் முகாம்வரும்போதெல்லாம்பெருஞ்செலவு ஏற்பட்டதென்றும், அப்படிச்செய்தால் பணி ஊதியம் போதாதென்றும், இதனால் தாம் கையூட்டு முதலியவற்றில் ஈடுபட நேரும் என்றும், தாம் அதை விரும்பவில்லை என்றும் கூறினார். நடராசன் என்பது இவர் திருநாமம். பயிற்சிக் காலத்தில் சிறந்த ஆசிரியராகத் திகழும் கூறுகள் இவரிடம் காணப்பட்டன. பயிற்சி முடிந்த பிறகு இராமநாதபுரம் அரசர் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்து விட்டார். அப்போது அப்பள்ளியில் புகழ் பெற்ற தலைமையாசிரியராக இருந்தவர் இராஜா அய்யர்; இவர் ஓர் ஆறாண்டுகள் ஆசிரியர் தொகுதியிலிருந்து சட்டமன்ற மேலவை உறுப்பினராகப் பணியாற்றினார். இன்னொரு மாணவர் இராசு என்ற பெயரினர். பத்தாண்டுகட்கு மேல் காவல்துறையில் உதவிஆய்வாளராகப் பணியாற்றிப் பதவியிலிருந்து விலகியவர்; பதவி நீக்கம் செய்யப்பெற்றதாக மாணவர்கள் கிசுகிசுத்தனர். இவரிடமும் சிறந்த ஆசிரியராகத் திகழும் கூறுகள் காணப் பெற்றன.

இன்னொரு மாணவர் இராஜகோபாலய்யர் என்ற பெயரினர்; பல்லாண்டுகள் துணிக்கடையில் பணியாற்றி

விட்டுத் தம் 45-வது வயதில் பயிற்சிக் கல்லூரியில் வந்து சேர்ந்தார். இவர் பெரிய குடும்பி என்பதை இவர் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளால் அறிய முடிந்தது. இவர் பயிற்சி பெற்று ஒன்பது மாதங்களுக்குள் இவருடைய பெண் மக்களுள் ஒருத்தி முதல் பிரவசத்திற்குக்காரைக்குடி வந்திருந்தாள்; மற்றொரு பெண்ணுக்கு இவர் இல்லத்தில் சீமந்தம் நடைபெற்றது; மூன்றாவது பெண்ணுக்கு திருமண நிச்சிதார்த்தம் நடைபெற்றது. ஆனால் பிற துறைகளைக் கைவிட்டு வந்தவர்களில் நடராசன், இராசு, இராசகோபாலய்யர் சிறந்த ஆசிரியர்களாகத் திகழ்ந்தனர். இராசகோபாலய்யர் பயிற்சிக்குப் பிறகு திருச்சி உருமு தனலட்சுமி உயர்நிலைப் பள்ளியில் சிறந்த ஆசிரியராகப் (கணிதம்) பணியாற்றி நற்பெயர் ஈட்டினார் என்பதை அறிந்து மகிழ்ந்தேன். மனமொத்து வாழமுடியாமல் முதல்மனைவியைக் கைவிட்டு இரண்டாவதாக ஒருத்தியை மணந்து கொண்டு சிறப்பாக வாழவில்லையா? அது போல.

□ □ □

இன்னொரு மாணவர் (வயது—48; பெயர் நினைவு இல்லை) பி.டி. பட்டத்தேர்வில் தேறவில்லை; நான் காரைக் குடியிலிருந்தபோதே மார்ச்சு செப்டம்பர் மாதத்தில் நடைபெறும் தேர்வுகளில் பத்து முறைகளுக்குக் குறையாமல் தேர்வுகள் எழுதியும் தேறவில்லை. நான் கேட்டேன்: ''நன்றாகத் தயாரித்துக் கொண்டு எழுதுவது தானே?'' என்று. அவர் சொன்னார்: ''எனக்கு நினைவு ஆற்றல் குறைந்து போயிற்று. ஒவ்வொரு தாளிலும் (ஐந்து தாள்கள்) ஐந்து வினாக்கட்கு விடைதெரியும். அவற்றையே ஒவ்வொரு தடவையும் விடைத்தாளில் வினா எண் போடாது எழுதி வருகின்றேன், பத்து முறையும் இப்படித்தான் செய்து வருகின்றேன், ஆனால் தேர்ச்சி பெற முடியவில்லையே!'' என்று சொல்லி வருந்தினார், ''உங்களை ஆண்டவன் தான் காக்க வேண்டும்'' என்று

வாழ்த்தினேன். இன்னொருவர் சைதையில் என் வகுப்புத் தோழர்—பெயர் நாராயணசாமி நாயுடு—1956வரை பல முறை பி.டி. தேர்வு எழுதி 'காயம்பட்ட போர்வீரர்' (Wounder Soldier) நிலையில் இருந்தார். இவரும் பல முறை எழுதித் தோல்வியுற்று தேர்வு எழுதுவதையே கை விட்டவராக இருந்தார். இவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. நான் கோனாப்பட்டுக்குப் போனபோதெல்லாம் இவரைத்தூண்டி எழுத வைத்தேன். இம்முறை இவர் வெற்றியடைந்தார்—பதினேழு முறை படையெடுத்த யாரோ ஓர் முகம்மதிய மன்னர் பதினேழாவது முறை வெற்றியடைந்தது போல! இவர்கள் யாவரும் காரைக்குடியைத் தேர்வு மையமாகத் (Examination Centre) தேர்ந்தெடுத்துக் கொண்டு தேர்வு எழுதினமையால் இவற்றை அறிய முடிந்தது.

□ □ □

இன்னொரு மாணவி மீனவர் வகுப்பைச் சேர்ந்த கிறித்தவப் பெண்; தூத்துக்குடியைச் சேர்ந்தவள்; இவளது சமயப்படிச் சனிக்கிழமைதோறும் சிறப்புத் தொழுகையை மேற்கொள்ள வேண்டுமாம். அந்த நாளில் வேறு எதையும் மேற்கொள்ளக் கூடாதாம். பி.டி. தேர்வுகளில் 5 வினாத் தாள்கட்கு விடைகள் எழுத வேண்டும். அந்தக் காலத்தில் மார்ச்சு ஆயினும் செப்டம்பர் ஆயினும், தேர்வு செவ்வாயன்றுதான் தொடங்கும்; இதனால் சனிக்கிழமை தாள் எழுதுவதில்லை. எப்படித் தேற முடியும்? அப்போது எல்லாத் தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்றால்தான் தேர்வு பெற்றதாகக் கருதப்பெறும். இந்தப் பெண்ணைக் கேட்டேன்: ''ஏனம்மா, உனக்குதான் செவ்வாயன்றுதான் தேர்வுகள் தொடங்குகின்றன என்பது தெரியுமே. இந்த ஏற்பாட்டினால் சனிக்கிழமையும் தேர்வு இருக்கும் என்று தெரிந்தும் ஏன் திரும்பத் திரும்ப வருகின்றாய்?'' என்று. அந்த மாணவி சொன்னாள்: ''ஐயா, தேர்வுக்குப் பணம்

செலுத்தும் அன்று தேர்வுகள் நடைபெறும் நாட்கள் குறிக்கப் பெறுவதில்லை. இறையருளால் திங்களன்று தொடங்கும் வாய்ப்பு இருக்கும் என்று சமய நம்பிக்கை போன்ற ஒரு வித நம்பிக்கையால் தேர்வுகள் எழுதி வரு கிறேன். தேர்வுகள் நடைபெறும் நாட்கள் தெரிந்த பிறகு சனிக்கிழமையும் தேர்வு உண்டு என்று தெரிந்தும் தேர்வுகள் எழுதுவதைத் தவிர்க்காமல் எழுதி வருகின் றேன். தேர்வுகள் எழுதுவதிலாவது நல்ல பயிற்சி ஏற்படு மல்லவா?'' என்றாள். ''அம்மா, உன் நம்பிக்கையைப் பாராட்டி ஆண்டவன்தான் உன்னைக் காப்பாற்ற வேண்டும்?'' என்று வாழ்த்தினேன். இப்படி பி. டி. மாணவர்களில் பல ரகம். அதன்பிறகு திங்களன்று பி. டி. தேர்வுதொடங்கப் பெறுகின்றதா என்பதை அறிந்து கொள்ள முயலவில்லை — திருப்பதிக்குப் போய்விட்ட தால்! பயிற்சிக் கல்லூரி வாழ்வில் என்னைவிடப் பதினைந்து ஆண்டு மூத்தவர்கட்கும் ஆசிரியராக இருக்கும் பேறு பேற்றேன்.

□ □ □

1954-என்று நினைக்கின்றேன்; மாதம் நினைவு இல்லை. என் மகன் இராமலிங்கத்திற்கு வயது ஐந்து நடைபெறுகிறது. இந்த வயதில் நல்லாசிரியரைக்கொண்டு கல்வி தொடங்க எண்ணினேன். வேங்கடசாமி நாட் டாரின் தலையாய மாணாக்கர் வீ. உலக ஊழியனாரைக் கொண்டுதான் தொடங்க வேண்டும் என்று உறுதி செய் தேன். திரு ஊழியனார் சிறந்த புலவர்; வாக்கு வன்மை படைத்தவர்; ஒழுக்க சீலர். அப்போது அவர் சேலம் கல்லூரியில் தமிழ்விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவரை என் மகனுக்குக் கல்வி தொடங்குமாறு கேட்டேன். ஒப்புக்கொண்டார். எட்டு முழத்தில் ஒரு வெண் பட்டும் ஓர் அங்க வஸ்திரமும் (பட்டு) வாங்கி வருமாறு எழுதினேன். குறிப்பிட்ட நாளில் அவரும் வந்து சேர்ந்தார். கல்வி தொடங்கும் நாளில் ஒரு முப்பது

பேருக்கு ஒரு நல்ல விருந்து அளிக்கவும் ஏற்பாடு செய்திருந்தேன். ராய. சொ., சா. க., சொ. முரு. தம்பதிகள், எங்கள் கல்லூரி முதல்வர் எஸ். சீநிவாசன், தோழ ஆசிரியர்கள், அலுவலக சிப்பந்திகள் இவர்கட்கு மட்டிலும் விருந்திற்கும் கல்வி தொடங்கும் நிகழ்ச்சிக்கும் அழைப்பு தந்திருந்தேன். ஓவிய ஆசிரியர் முனியாண்டியையும் அழைத்திருந்தேன். முற்பகல் 10-30க்குக் கல்வி தொடங்கியது. பிள்ளையாருக்கும் முருகனுக்கும் ஒருசிறு வழிபாடு நடத்திக் கல்வியைத் 'தொடங்கினார்.'

*அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு.* (1)

*கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழா ரெனின்* (2)

*மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடு வாழ்வார்* (3)

என்று மூன்றுகுறள்களையும் சொல் சொல்லாகச்சொல்லச் செய்து பையனை வாழ்த்தினார், வந்திருந்த பெரியோர்களும் வாழ்த்தினர். ஊழியனாருக்கு வெண்பட்டாடைகளைஒரு வெள்ளித்தட்டில்வைத்தும் தாம்பூலத்தில் ரூ50/- வைத்தும் இராமலிங்கம் தந்து வணங்கினான்; பெரியோர்களையும் வணங்கினான். பதினொன்றரை மணிக்கு விருந்து தொடங்கியது. 12-30 மணிக்கு எல்லோரும் கலைந்து சென்றனர். மறுநாள் காலை சிற்றுண்டிக்குப் பிறகு ஊழியனாரையும் வழியனுப்பி வைத்தேன்.

□ □ □

இந்து மதாபிமானச் சங்கத் தொடர்பு எனக்கு அதிகமாக இருந்தது. ஆண்டு விழா ஏற்பாடுகளில் அதிகமாகக் கலந்து கொள்வேன். ஒரு சமயம் ஒரு சிறப்புக் கூட்டத்திற்கு தவத்திரு சித்பவாநந்த அடிகள் வந்திருந்தார்கள். அவர் புதியனவாக வாங்கப்பெற்ற நடையன்களுடன்

(Foot wear) வந்திருந்தார். சங்கத்திற்குள் எழுந்தருளியதும் ''முதலில் நடையன்களைப் பத்திரப்படுத்த வேண்டும்.'' என்றார். அங்கிருந்தவர்கள் ''அவற்றை ஒருவரும்எடுக்கார்; பாதுகாப்பாகஇருக்கும்'' என்றார்கள். அடிகள் ''இதில் எனக்கு மிக்க அநுபவம் உண்டு. பத்திரப் படுத்தா விட்டால் எனக்குப் பேச்சே ஓடாது'' என்று சொன்னவுடன் அவை பத்திரப்படுத்தப் பெற்றன. அப்பொழுது எனக்கு அடிகளாரின் கருத்து புலப் படவில்லை.

அதன் பிறகு இரண்டு முறை திருமண நிகழ்ச்சிகட்குப் போனபோது புதியனவாக இருந்த நடையன்களை இழந்தேன். விருந்துண்டு வெளியில் கிளம்பும்போது இவற்றைக் காணாமல் தவித்தேன். யாரோ மறந்து மாட்டிக் கொண்டு போய் விட்டார் போலும் என்று நினைத்துக் கொண்டு வாளா இருந்துவிட்டேன். அடுத்த முறை இன்னொரு திருமணத்தில் இதே அநுபவம் ஏற் பட்டது. நான் அவற்றைத் தேடிக் கொண்டிருந்தபோது அருகிலிருந்த செட்டியார் நண்பர் ஒருவர் ''நடையன்கள் புதியனவா?'' என்று கேட்டார், ''ஆம்'' என்றேன். உடனே அவர், ''ஓசிச் சோறு உண்டு விட்டு நடையன் களைக் களவாடி விற்பதற்காகவே சில களவாணிப் பயல்கள் வருகின்றார்கள்; புதிய நடையன்கள்மீது அவர்கள் கவனம் இருக்கும், இன்று அல்லது நாளை கல்லுக்கட்டிப் பக்கம் போனால் செருப்பு தைத்துக் கொண்டிருக்கும் ஒரு சக்கிலியிடம் பணம் கொடுத்து வாங்கிக் கொள்ளலாம். இனி கூட்டங்களில் கலந்து கொள்ளப்போகும் போது புதிய நடையன்களுடன் வாராதீர்கள். கூட்டத்திற்குப் போவதற்கென்றே ஒரு சோடி பழைய நடையன்களை வைத்துக் கொள்ளுங்கள். செட்டி நாட்டில் இஃது ஒன்றே பெருங்குறை'' என்றார். அவர் சொன்னபடியே, மறு நாள் கல்லுக்கட்டிக்குப் போகும் போது, என்னே அதிசயம்! முதல் நாள் இழந்த

நடையன்கள் பழுதுபார்க்கும் சக்கிலி முன்னால் காட்சி யளித்தன. அவனை விவரம் கேட்ட போது, ''யாரோ ஒரு தரித்திரம் இவற்றை என்னிடம் தந்து ரூ 2/-வாங்கிக் கொண்டு போனார். 'உங்களுடையனவா?' என்று கேட்டு, ''ஒரு ரூபாய் இலாபம் கொடுத்து எடுத்துப் போகலாம்'' என்றான். அங்ஙனமே செய்தேன். அடி களாரின் அநுபவம் இப்போதுதான் எனக்குப் படிப்பினை யாயிற்று.

□ □ □

1958 என்று நினைக்கின்றேன். அணு ஆய்வில் நான் மும்முரமாக ஈடுபட்டிருந்த காலம். ஹெய்சன்பெர்க் எழுதியுள்ள Nuclear Physics என்ற நூலைத் தமிழாக்கம் செய்தும் 'அணுவின் ஆக்கம்' (Atom for peaceful uses) என்ற நூலை வெளியிட்டும் புகழ் பெற்றிருந்த சமயம். தேவ கோட்டை சுழல் கழகத்தின் (Rotary club) மாதக் கூட்டம் ஒன்றில் பேராசிரியர் S. திருவேங்கடாச்சாரி உரை நிகழ்த்தி வந்தபோது அடுத்த கூட்டத்தில் அணு பற்றிப் பேச அழைக்குமாறு சொல்லி வந்தார். ஒரு வாரத் தில் வழக்கறிஞர் சிவசுப்பிரமணிய அய்யர் மூலம் அழைப்பு வந்தது. கூட்டத்தன்று மாலை மூன்று மணிக்கே தேவ கோட்டை விரிவுப்பகுதியில் (Extension) உள்ள அவர் வீட்டை அடைந்தேன். சிற்றுண்டிக்குப் பின் 4-30 மணிக்குக் கூட்டம் நடைபெறும் இடத்திற்கும் தம் காரில் அழைத்துச் சென்றார். அவருடைய துணைவியாரும் (மாதர் சங்கத் தலைவி, சமூகத்தொண்டு ஆற்றிவந்தவர்) கூட்டத்திற்கு வந்ததாக நினைவு. வழக்கறிஞர் காங்கிரஸ் காரர், கூட்டத்திற்கு முன்னர் அங்கும் சிற்றுண்டி, தேநீர் வழங்கப் பெற்றன. உடனே அவர்களே தயாரித்த 'திடீர் தேங்காய் பருப்பி'யும் தேநீரும் என்னை வியக்க வைத்தன; சிக்கன முறை என் உள்ளத்தைக் கவர்ந்தது.

கூட்டத்திற்கு அவ்வூர் நீதி மன்ற நீதிபதி திரு எஸ். சூரியமூர்த்தி வந்திருந்தார். இவர் என் கல்லூரித்

தோழர். இவர்தான் கூட்டத்திற்குத் தலைமை வகித்த தாக நினைவு. நான் கூட்டத்தில்.

முக்கணான் முதலி னோரை
உலகொரு மூன்றி னோடும்
புக்கபோர் எல்லாம் வென்று
நின்றஎன் புதல்வன் போலாம்
மக்களில் ஒருவன் கொல்ல
மாள்பவன்? வான மேரு
உக்கிட அணுஒன்று ஓடி
உதைத்தது போலும் அம்மா![3]

என்ற கம்பராமாயணப் பாடலில் தொடங்கி, அணுவின் அமைப்பு, கதிரியக்கம், கதிரியக்க ஐசோடோபுகள், அவை உயிரியல், மருத்துவம், உழவுத்தொழில், தொழில் துறை, எதிர் காலத்தில் அணுவாற்றல் பயன்படும்முறைகள் இவற்றை விளக்கித் தாருகவனத்து முனிவர்கள் இயற்றிய அபிசார யாகம், அதினின்றும் வெளிவந்த தீய சக்திகளை சிவபெருமான் பயனுள்ள வகைகளில் பயன்படுத்திய முறை—இவற்றோடு பேச்சை முடித்தேன். அன்றைய பேச்சு பயனுள்ள முறையில் அமைந்ததாக அனைவரும் ஒருமுகமாகப் பாராட்டினர். மாலை (இரவு) 8-மணிக்கு இல்லம் வந்து சேர்ந்தேன்,

□ □ □

சொ. முருகப்பா ஒரு சிறந்த இலக்கியச் சுவைஞர். பலதடவை அவரை மகளிர்இல்லத்தில் (அமராவதி புதூர்) சந்தித்திருக்கின்றேன். ஏதோ பொது விஷயங்களைப் பேசி னாலும் அவர் பேச்சு இலக்கியத்திற்கு இழுத்துச் சென்று விடும். பல சமயங்களில் பல பாடல்களைச் சொல்லி விளக்கியுள்ளார்கள். அவற்றுள் ஒரு பாடல் அழகர் கலம் பகத்தில் உள்ளது.

3. கம்ப. யுத்தகா. இராவணன்சோகப் —52

மணங்கமழ் பூவையும் மயிலும், தமாலக்காடும்
வண்கிளியும், நீலவெற்பும் மடமான் கன்றும்
இணங்குகட லுந்துகிரும், காரும் மின்னும்,
யமுனையெனும் திருநதியும் எகினப் பேடும்,
கணங்குழைய கோசலைதே வகிய சோதை
கண்மணியும் பாவையும்போல் கமல வீட்டின்
அணங்கரசி யுடன்குலவி ஆடீர் ஊசல்!
அலங்கார மாயவரே ஆடீர் ஊசல்!![4]

இந்தப் பாடலைப் பாடி என்னை அநுபவிக்கச் செய்தது இன்னும் என் நினைவில் பசுமையாகவே உள்ளது. இதை சொ. முரு. இசையுடன் பாடின பொழுதே அதன் பொதுப் பொருள் ஒருவாறு என் மனத்திற்குப் பட்டது. இதன் பிறகு பாட்டில் இணை இணையாக வரும் காட்சிகளை,

'மணங்கமழ் பூவையும் மயிலும்'
'தமாலக்காடும் வண்கிளியும்'
'நீலவெற்பும் மடமான்கன்றும்'
'இணங்குகடலும் துகிரும்'
'காரும் மின்னும்'
'யமுனையெனும் திருநதியும் எகினப்பேடும்'
'கணங்குழைய கோசலை தேவகி யசோதை
'கண்மணியும் பாவையும் போல்'

என்ற தொடர்களில் தனித்தனி அழுத்தம் கொடுத்துச் சொற்களை நன்றாகப் பிரித்துக் காட்டினார். காயாம் பூமரம்—மயில், பச்சைக் காடு—கிளி, நீலவெற்பு—மடமான் கன்று, கடல்—பவளக்கொடி, மேகம்—மின்னல், யமுனை—அன்னப்பேடு—என்ற படிமக் காட்சிகள் என் மனத்தில் தோன்றின. கோசலை—இராமன், தேவகி—கண்ணன், யசோதை—கண்ணன் இவை கண்மணியும் பாவையும்போல் இணைந்த காட்சிகளையும் உணரச்

4. அழகர் கலம்பகம்—45

செய்தார்.[5] இப்படி இவர் பாடலை விளக்கினபோது ரசிகமணி டி. கே. சி, என் அரிய நண்பர் வீ. உலக ஊழியனார், லால்குடிப் புலவர் நடேச முதலியார் இவர்கள் தரும் விளக்கங்கள் நினைவிற்கு வருகின்றன.

□ □ □

டாக்டர் சுப்பிரமணியம் சிறந்த மருத்துவ வல்லுநர் என்பது செட்டிநாட்டு வட்டாரங்களில் அனைவரும் அறிவர். ஒரு நாள் மாலை அவரிடம் உரையாடிக் கொண்டிருந்தபோது மண்வேலை செய்து வாழ்க்கை நடத்தும் ஓர் ஓட்டன் தன் ஆறுவயது சிறுவன் ஒருவனைக் கூட்டிக் கொண்டு வந்தான். பையன் காலணாவை (பழைய மூன்று காசு) வாயில் போட்டு விளையாடிக் கொண்டிருந்தபோது அது தொண்டையில் சிக்கிக்கொண்டது என்றும், அதனால் அவன் இரண்டு நாட்களாக தண்ணீர் கூட விழுங்க முடியாமல் தவிக்கின்றான் என்றும் கூறினான் அந்த மண் ஓட்டன். டாக்டர் தொண்டை, மார்பு இவற்றைக் கையினால் தடவிப் பார்த்து காசு மார்பருகில் செங்குத்தாக இருக்கவேண்டும் என்று உறுதி செய்து கொண்டார். ஒரு சிறிய உலோக இடுக்கியைத் தொண்டைக்குள் செலுத்தி லாவகமாக அந்த நாணயத்தைப் பற்றிக் கொண்டார். பையன் டாக்டர் கையை நன்றாகக் கடித்ததையும் பொருட்படுத்தாத நிலை; உடலைக் கிள்ளி வலியுண்டாக்கி வாயைத் திறக்கச் செய்து கையை விடுவித்துக் கொண்டு காசையும் விடுவித்தார். உடனே பையன் தண்ணீர் குடித்தான்; 'பன்' உண்டான். ஏதோ பணம் கொடுக்க சுருக்குப் பையைத் திறந்து பணம் எடுத்தான். டாக்டர் ''பீஸ் கொடுக்கின்றாயா? நீயே வைத்துக்

---

5. இந்தப் பாடலை எடுத்துக்கொண்டு திறனாய்வுப் பாடத்தில் படிமங்கள் (Imagery) பாடலில் அமைந்திருக்கும் பாங்கைக் காட்டி விளக்கினேன். (திருப்பதியில்).

கொள்'' என்று சொல்லி அதை வாங்கவில்லை. டாக்டரின் திறமையையும் இரக்கக் குணத்தையும் கண்டு என் வாய் அவரை வாழ்த்தியது.

குமிழி—151

## 44. என் ஜபல்பூர் பயணம்

1958-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் என்பதாக நினைவு. இந்திய அரசு கல்வித்துறையின் ஆதரவில் ஜபல்பூரில் அக்டோபர் 1958இல் நடைபெறவிருக்கும் இந்தியமொழிகள் பயிற்றல் பற்றிய கருத்தரங்கில் பங்கு கொள்ளுமாறு அழைப்பு வந்தது. இருவழிப் பயணச் செலவு. உண்டி, உறையுள் அரசின் பொறுப்பு என்றும் அந்த அழைப்பில் குறிப்பிடப் பெற்றிருந்தது. கல்லூரி நிர்வாகம் முதல்வர் திரு ப. துரைக்கண்ணுமுதலியார் பெய ரையும் என் பெயரையும் பரிந்துரைத்தது. ஒவ்வொரு பயிற்சிக் கல்லூரியிலிருந்தும் மொழி கற்பிக்கும் துறையில் பணியாற்றும் பேராசிரியரைப் பேராளராகப் பங்கு கொள்ள வேண்டும் என்பது இந்திய அரசின் விருப்பம்.

அழைப்பு வந்த நாள் முதல் (ஜூலை) பயணத்திற்கு ஆயத்தம் செய்யத் தொடங்கினேன். ஜபல்பூர் குளிர் தேசப் பகுதியிலுள்ளதால் வெப்ப ஆடைகள் தேவைப் படும் என்று சொன்னார்கள். ஆகஸ்டு மாதம் திருச்சி சென்று கால் சட்டை, மேலங்கி (Coat), அவற்றிற்குப் பொருத்தமான பருத்தித் துணியாலான உள்சட்டை இவற்றைத் தயார் செய்தேன். ஆகஸ்டு இறுதியில் அவை என் கைக்குக் கிடைத்தன. அப்போது என் அன்னை என்னுடன் வாழ்ந்தமையால் என் மனைவிக்குத் துணை

யாக இருந்தார்கள். சிறுவர்களையும் துணைவியையும் விட்டுப் பிரியத் துணிவு வந்தது. சென்னைக்கு அப்பால் வடபுலங்களைக் காணாத எனக்கு இஃது ஒரு புதிய அநுபவமாகவும் இருக்கும் என்று கருதினேன்; அது நான் நினைத்தது போலவே இருந்தது. பயணத்தைப் பயன் பெறச் செய்து கொண்டேன்.

பன்மொழிப் புலவர் வே. வேங்கட ராஜுலு ரெட்டியாருக்கு எழுதி இரண்டு பயணச் சீட்டுகளை (முதல்வருக்கும் சேர்த்து) வாங்கச் செய்து உறங்க வசதி உள்ள இருப்பூர்தி வண்டியில் இட ஒதுக்கீடு செய்து கொண்டேன். பயணத் தேதியன்று நானும் முதல்வரும் சென்ட்ரல் இருப்பூர்தி நிலையத்திற்கு வந்தோம். நிலையத்தில் சைதை ஆசிரியர்க் கல்லூரியிலிருந்து தமிழ்ப் பேராசிரியர் பொன்னப்பன், மதுரை தியாகராசர் பயிற்சிக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், சங்கரநாராயணன், காட்டுப்பாடி அரசினர் பயிற்சிக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வன்மீகநாதன், புதுக் கோட்டை அரசினர் பயிற்சிக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் குமாரசாமி, சென்னை லேடிவெல்லிங்க்டன் பயிற்சிக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியை E. T. பதுமாவதி அம்மையார் ஆகியோர் வந்திருந்ததைக் கண்டோம்; உரையாடி அளவளாவினோம். வன்மீகநாதன், பதுமாவதி அம்மையார், குமாரசாமி இவர்கள் முதல் வகுப்பில் பயணம் செய்தனர். நான், முதல்வர் முதலியார், பொன்னப்பன், சங்கர நாராயணன் ஆகிய நால்வரும் உறங்கும் பெட்டியில் சேர்ந்து பயணம் செய்தோம்.

வண்டி நள்ளிரவில் இட்டார்சி என்ற நிலையத்தை அடைந்தது. வழியில் எத்தனையோ சுரங்கப்பாதைகளைக் கடந்தது; மலையுச்சியில் கடந்து சென்றதையும் கண்டோம். இட்டார்சியில் இறங்கித் தொடர் வண்டியைப் பிடித்து அதில் ஏறிக் கொண்டோம். இந்தப் பாதையில் தான் வாரணாசிக்கும் வண்டி செல்லுகின்றது என்பதை அறிந்தோம். வழியில் ஏதோ ஒரு நிலையத்தில் வண்டி

ஜபல்பூரை நோக்கித் திரும்புகின்றது என்பதையும் தெரிந்து கொண்டோம். ஜபல்பூரில் இறங்கியதும் டோங்காவை அமர்த்திக் கொண்டு பயிற்சிக் கல்லூரி மாணவர் விடுதியை அடைந்தோம். இதுதான் நாங்கள் தங்குவதற்கும் உணவு கொள்வதற்கும் ஏற்பாடு செய்யப் பெற்ற இடம். வரவேற்பாளரிடம் நாங்கள் எங்கள் பெயர் களைப் பதிவு செய்து கொண்டதும், எங்கட்குத் தனித்தனி அறைகள் தரப் பெற்றன. அவ்விடங்களில் எங்கள் சாமான் களுடன் தங்கிக் கொண்டோம்.

ஐந்து நாட்கள் கருத்தரங்கு நடைபெற்றதாக நினைவு. இத்தகைய கருத்தரங்குகள் பலவற்றில் பிற் காலத்தில் திருப்பதியில் பணியேற்ற பிறகு பங்கு கொள் ளும் வாய்ப்புகள் இருந்தன. கருத்தரங்குகளில் ஏதோ சில புதிய கருத்துகள் பெற்றோம்- பழைய கருத்துகட்குப் புதிய ஒளியும் தெரிந்தது. இப்பலனை விட புதிய இடத்தில் புதியவர்களுடன் உறவு, அவர்கள் பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொள்ளுதல், நூலகங்களின் பாங்கு, மாணவர் விடுதிகளின் அமைப்பு முறை, அவர்கட்கு விடுதிகளில் அமைந்துள்ள பல்வேறு வசதிகள், அவ்வூரிலுள்ள அரும் பொருட்காட்சியகங்களைப் பார்த்தல், ஊருக்குள் அமைந் துள்ள அங்காடிவீதிகள், காய்கறி விற்பனை நிலையங்கள், பொதுவாக நகரிலுள்ள சுகாதார வசதிகள் இவை அமைந் திருப்பதையெல்லாம் தெரிந்து கொள்ள முடிந்தது. நகரத் தின் சுகாதார வசதிகள் மன நிறைவு தருவனவாக அமைய வில்லை.

முற்பகல், பிற்பகல்களில் இரண்டு அமர்வுகள் இருந் தன. மொழி பயிற்றலில் பல்வேறு கருத்துகள் தனித்தனி யாக ஆராயப் பெற்றன. பெரும்பாலும் முற்பகல் அமர்வு களில் மொழி அறிஞர்களின் சொற் பொழிவுகளும் பிற்பகல் அமர்வுகளில் கலந்தாய்தல்களுமாக(Discussions) அமைந்திருந்தன. இந்த ஏற்பாடுகள் மனநிறைவு தருவன

வாக இருந்தன. தாய்மொழி மூலம் கல்வி தருவதில்தான் கருத்து வேறுபாடுகள் நிறைந்திருந்தன. ஒளியைக் காண் பதை விட வெப்பத்தைத்தான் அதிகமாக உணர்ந்தோம். ஆங்கிலத்தை பயிற்று மொழியாகப் கொள்வதை விட இந்தி மொழியைப் பயிற்று மொழியாகக் கொள்வதே சிறப்பு என்ற போக்கில்தான் பொழிவுகள் அமைந்திருப் பதைக் கண்டோம். ஆங்கில வெறுப்பும் இந்தி வெறியும் தெளிவாகத் தெரிந்தன. இரண்டு நாட்கள் மாலை 2மணி முதல் பேருந்துகள் மூலம் பல இடங்களுக்கு எங்களை இட்டுச் சென்று காட்டினர். நர்மதைநதியும் பளிங்குப் பாறைகளும் (Marble rocks) என் உள்ளத்தைக் கவர்ந்தன. ஜபல்பூர் மத்தியப் பிரதேசத்தில் உள்ளது. மாநிலங்கள் அமையும்போது ஜபல்பூரைத் தலைநகராக்க முயற்சி நடைபெற்றதாகவும், இந்த ஊரை விட போபால் சிறந்ததாக இருப்பதைக் கண்டு அதையே தலை நகராக அமைத்ததையும் கேள்விப்பட்டோம்.

மாலை நிகழ்ச்சிகட்குப் பிறகு அங்காடித் தெருவில் சுற்றினோம். திறமையான வணிகர்களைக் காணும் வாய்ப்புகள் கிடைத்தன. சாமான்களை வாங்குவோரின் தலையில் கட்டுவதற்கான சாமர்த்தியப் பேச்சு, அடிக்கடி தேநீர் வழங்கும் பாங்கு இவற்றையெல்லாம் கண்டோம். கம்பளி ஆடைகளின் அங்காடிகள்தாம் அதிகமாக இருந் தன. அவரவர்கட்குத் தேவையான பொருள்களை வாங்கினர். என் சிறுவர்கட்குச் சில சாமான்கள், என் அன்னையாருக்கு 6 கெஜம் வெண்பட்டு, என் துணைவிக்கு ஒரு சேலை, எனக்கு ஒரு 'நேரு கோட்' (கம்பளியில்) வாங்கிக் கொண்டேன். பயணச் செலவுகட்கு வேண்டிய பணத்திற்கு மேல் ரூ500/= அதிகமாகக் கொண்டு சென்ற தால் இவற்றையெல்லாம் வாங்க முடிந்தது. திரும்பு வதற்கு இருப்பூர்தியில் அவர்களே இடஒதுக்கீடு செய்வதில் உதவினர்.

திரு. சங்கர நாராயணன், திரு. பொன்னப்பன், திரு. வன்மீக நாதன், திரு. குமாரசாமி (நாகர்கோவிலைச் சார்ந்தவர்), குமாரி பதுமாவதி அம்மையார், நான், எங்கள் முதல்வர் திரு ப. துரைக்கண்ணு முதலியார் ஆகிய நாங்கள் நன்கு கலந்து பழகினோம். ஆந்திராவிலிருந்து ஓர் இளம் கதோலிக்கக் கன்னித் துறவி வந்திருந்தார். அவர் இரவில் கன்னித் துறவிகள் வாழும் இடத்தில் தங்கியிருந்தார். பகலில் மதிய ஓய்வு நேரத்தில் பதுமாவதி அம்மையார் அறையில் தங்கியிருப்பார். அவரும் எங்களுடன் நன்கு கலந்து பழகுவார். அவர் தெலுங்கு மொழி பயிற்றும் பேராசிரியையாகப் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றுபவர். பதுமாவதி அம்மையார் அறைக்கு நாங்கள் யாரேனும் போக நேர்ந்தால் (மாலை நேரங்களில்) இனிப்பும் காரமும் வழங்குவார். ஏதோ மாதக் கணக்கில் தங்குவதுபோல பெரிய பெரிய தகரக் கலன்களில் இனிப்புப் பொருள்களையும் காரவகைகளையும் மிக அதிகமாகக் கொண்டு வந்திருந்தார்.

எங்களுள்ளும் பொன்னப்பன், சங்கர நாராயணன், நான் ஆகிய மூவரும் மிகவும் நெருங்கிப் பழகுவோம். சங்கர நாராயணன் நல்ல கவிஞர்; விரைந்து பாடல்கள் இயற்றும் வேந்து. திரு. பொன்னப்பன் உணர்ச்சிமிக்கவர். (இன்று அவர் இல்லை; சிவப்பேறு அடைந்து விட்டார்). இவர் காலஞ் சென்ற பொ. திரிகூட சுந்தரம் பிள்ளையின் நெருங்கிய உறவினர். ஒரு நாள் மாலை இருட்டு வரும் வரையிலும் இருந்து பொன்னப்பனும் சங்கர நாராயணனும் புகைத்துக் கொண்டு இருப்பூர்தி நிலையத்தில் தண்டவாளங்கள் அதிகமாக இருக்கும் பகுதியில் காலம் கழித்து வருகையில் இரண்டு வண்டித் தொடர்கள் சேர்க்கும் செயல் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் (கும்மிருட்டில்) இரண்டு தொடர்களுக்கும் இடையில் அமர்ந்திருந்தனர்; வண்டித் தொடர்கள் இணைவது தெரியவில்லை. தெய்வாதீனமாக இறுதி நொடியில்

தெரிந்து கொண்டு குதித்து விலகிக் கொண்டனர். ஒரு நொடி தாமதித்திருந்தால் இருவரும் பஜ்ஜி போல் நசுங்கி மாண்டிருப்பர். உடன் இறைவனின் திருவருளை நினைந்து ஓர் அற்புதமான விருத்தம் பாடி இறைவனின் கருணையைப் பாராட்டினார் சங்கர நாராயணன். பாடல் உள்ளத்தை உருக்கும் பாங்கில் அமைந்திருந்தது. இப்போது இதை எழுதும் போது அந்தப் பாடல் நினைவில் இல்லை.

கருத்தரங்கு முடிந்ததும் ஊர் திரும்பும்போது குறுகிய வழி (Narrow gauge) இருப்பூர்தி வண்டியில்தான் (இட்டார்சி வரை) இடம் கிடைத்தது. மாலை 4 மணிக்குத் திரும்பியதாக நினைவு. பெட்டி படுக்கையுடன் வண்டியில் உட்கார்வது கூடச் சிரமமாக இருந்தது. இரவு ஒன்பது மணிக்கு இட்டார்சி வந்து தில்லியிலிருந்து வரும் வண்டியைப் பிடித்தோம்; அதில் ஒதுக்கிடம் வசதியாகக் கிடைத்தது. சிரமமின்றிச் சென்னை வந்தடைந்தோம். அன்றிரவே, எழும்பூர் வந்து இராமேசுவரம் விரைவு வண்டியில் ஏறி மறுநாள் காலை 9-மணிக்குக் காரைக்குடி வந்து சேர்ந்தோம். சங்கர நாராயணன் மதுரை வண்டியில் ஏறிக் கொண்டார். ஏனைய அன்பர்கள் சென்னை வாசிகள். சிறுவர்கள் என்னைக் குதூகலமாக வரவேற்றனர். அன்று ஓய்வு எடுத்துக் கொண்டு மறுநாள் கல்லூரிக்கு வருவதாக முதல்வரிடம் கூறிவிட்டேன். இப்போது பயணத்தினால் அயர்ச்சி ஏற்படுவதுபோல் அப்பொழுது ஏற்படாவிடினும் பயணத்தினால் ஓரளவு அசதி ஏற்பட்டதை உணர்ந்தேன். ஆனால் போய் வெற்றியுடன் உடல்நிலை கெடாமல் திரும்பிய உற்சாகம் அசதியை மறக்கச் செய்துவிட்டது.

## 45. என் நெல்லை நிகழ்ச்சிகள்

1959-மார்ச்சு மாதம் என்பதாக நினைவு. நெல்லையில் பல பதிப்பகங்கள் ஒன்று சேர்ந்து ஓர் அமைப்பினை ஏற்படுத்தி அவரவர்களின் நூல்களை மூன்று நாள் விழா எடுத்து காலையிலும் மாலையிலுமாக நூல் வெளியீடுகளைச் சிறப்பாக வெளியிட்டு வந்தனர். எஸ். ஆர். சுப்பிரமணியபிள்ளை 'வாழ்வில் விஞ்ஞானம்' என்ற தலைப்பில் நூலொன்றை வெளியிட்டார். அதில் இரண்டு பகுதிகள்; ஒரு பகுதி உயிரியலைப் பற்றியது; அதை ஒருவர் எழுதினார்; மற்றொரு பகுதி இயற்பியலில் (Physics) அணுவாற்றலின் பயன் பற்றியது. இதை நான் எழுதினேன். ஒவ்வொரு நூலையும்பற்றி அதை எழுதிய ஆசிரியர்களே அறிமுகம் செய்து வெளியிட வேண்டும் என்பது ஏற்பாடு. அவரவர்கட்கு உண்டி உறையுள் அளிப்பது பொது அமைப்பின் செலவு. ஆசிரியர்கட்குப் பயணப் படியாக அந்தந்த நூலை வெளியிட்டவர் தர வேண்டியது என்பது திட்டம். ஒருநாள் மாலை பிற்பகல் 'வாழ்வில் விஞ்ஞானம்' என்ற நூலை அறிமுகம் செய்த பேச்சைத் தொடங்கும்போது,

அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்,
பொறிகளின் மீது தனியர சாணை,
பொழுதெல்லாம் நினதுபே ரருளின்
நெறியிலே நாட்டம், கருமயோ கத்தில்
நிலைத்திடல் என்றிவை அருளாய்
குறிகுண மேதும் இல்லதாய் அனைத்தாய்க்
குலவிடு தனிப்பரம் பொருளே.[1]

1. பா. க; சுயசரிதை-49.

என்ற பாடலைக் கொண்டு இறைவனை வழிபட்டு என் பேச்சைத் தொடங்கினேன். அன்று என்னை அறியாத நிலையில் நானே இந்தப் பாட்டில் என்னை மறந்தேன். பிறகு அணுவைப் பற்றி ஒரு சிறு விளக்கம் தந்து அது மருத்துவத்தில், பயிர்த் தொழிலில், தொழில் துறையில் அஃது ஐசடோப் வடிவில் பயன்படும் முறையில் விளக்கி எதிர் காலத்தில் அது நிறைவேற்றப் போகும் அற்புதத்தையும் சுருக்கமாக எடுத்துக் காட்டினேன். இந்தப் பேச்சு மாதிரி இது வரையிலும் நான் பேசினதில்லை என்பதை நினைவு கூர்கின்றேன். இதற்கு ராவ் சாகிப் கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள் வந்திருந்தார்கள்; முன் வரிசையிலோ மேடையிலோ வீற்றிருந்தார்கள். கடவுள் வணக்கப் பாடல் முடிந்ததும் ''சபாஷ்'' என்ற ஒலியை எழுப்பினார்கள். எல்லாப் பேச்சுகளையும்விட— இஃது இலக்கிய மணம் கமழும் அறிவியல் பேச்சாக இருந்ததால் எல்லோருடைய கவனமும் இதில் ஈர்க்கப் பெற்றது. ஏதோ ஓர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றியிருக்கும் திரு T.V. ஆறுமுகம் பிள்ளை கூட்டத்திற்கு வந்திருந்தார்; பேச்சைக் கேட்டு நல்வாழ்த்தைக் கூறினார்; மதுரை திரவியம் தாயுமானவர் இந்து கல்லூரி உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றி வந்த திரு அ. க. நவநீதக் கிருட்டிணன் பிள்ளை இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார். இவர் என்னை முன்பின் அறியாதவர். இவரும் கூட்டத் திறுதியில் என்னை வந்து சந்தித்து வாழ்த்தும் மகிழ்ச்சியும் தெரிவித்தார். ராவ் சாகிப் கை குலுக்கி வாழ்த்து கூறினார்கள். முன்னமேயே பல ஆண்டுகளாகக் காரைக்குடி வரும்போதெல்லாம் நெஞ்சு நெகிழ அன்பாகப் பழகியவர்கள். திரு S. R. சுப்பிரமணியப்பிள்ளைப் பதிப்பகத்தின் அதிபர் திரு S·R·S. கூத்தநயினார். அவர் பயணப் படியை ஒரு காகித உறையில் போட்டுத் தந்து மகிழ்ச்சி கூறி விடை பெற்றுச் சென்றார். நானும் இரவு

உணவை முடித்துக் கொண்டு அன்றிரவே இருப்பூர்தி வண்டியில் ஏறிக் காரைக்குடி திரும்பினேன்.

1960-மார்ச்சு முதல் வாரத்தில் மீண்டும் ஒருமுறை நெல்லை மாநகருக்கு வரும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்போது 1959-இல் பழக்கமான திரு. அ.க. நவநீத கிருட்டிணன் தங்கள் பள்ளி ஆண்டு விழாவில் பேச வேண்டும் என்று எழுதியிருந்தார்; இதற்காக நெல்லை சென்றேன். ஓர் உணவு விடுதியையொட்டிய தங்கும் விடுதியில் தங்க ஏற்பாடு செய்திருந்தார். S. R. சுப்பிரமணிய பிள்ளை பதிப்பகத்திற்கும் என் வருகையைக் குறிப்பிட்டு எழுதியிருந்தேன். நெல்லைக்கு வந்த அன்று மதியத்தில் S.R.S. பதிப்பகத்தின் உரிமையாளர் திரு செங்கையாபிள்ளை தம் வீட்டில் ஒரு விருந்து அளித்தார். விருந்துண்ட பிறகு மறுநாள் செந்திலாண்டவனைத் தரிசித்து வருவதற்குக் கார் வேண்டும் என்றேன். தருவதாக ஒப்புக் கொண்டார். பள்ளியில் ஆண்டு விழா பேச்சினை முடித்துக் கொண்டு உணவு விடுதி அறைக்குக் கூட்டி வந்தார் திரு. நவநீதகிருஷ்ணன். அப்போது கவிதையனுபவம் (படங்களுடன்) என்ற என் நூலின் கைப் படியைக் கொண்டு வந்திருந்தேன். சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தின் உரிமையாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை நவநீத கிருட்டிணன் உறவினராதலால் அவருக்கு இந்த நூலை வெளியிடப் பரிந்துரைக்குமாறு வேண்டி னேன். நூலின் சில முக்கியமான பகுதிகளை அவருக்கு படித்துக் காட்டினேன். அவரும், "இது நல்ல நூல், கழகம் வெளியிட்டால் அவர்கட்கும் நல்லது; உங்கள் புகழும் பெருகும். நாளை ஊர் செல்லுவதற்கு முன் கைப்படியைப் பெற்றுக் கொள்ளுகின்றேன்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது திரு. செங்கய்யா பிள்ளை விடுதிக்கு வந்தார். வந்தவர், "சிரீவைகுண்டத்தில் ஓர் உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழாவில் திரு தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் பேசுகின்றார். பேராசிரியர்

அ. சீநிவாசராகவன் (அப்போது தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியின் முதல்வர்) தலைமை வகிக்கின்றார். தொண்டைமான் அவர்கட்கும் கார் தருவதாக ஒப்புக் கொண்டுள்ளேன். திரு. தொண்டைமானையும் பேராசிரியர் கவுண்டர் அய்யாவையும் சீர்வைகுண்டத்தில் இறக்கி விட்டு நீங்கள் திருச்செந்தூர் சென்று செந்தில் ஆண்டவனைத் தரிசனம் செய்து கொண்டு திரும்பும்போது தொண்டைமானையும் கவுண்டர் அய்யா அவர்களையும் கூட்டிக் கொண்டு வந்துவிடலாம்'' என்று கூறி ''காலை சரியாக 8-30 மணிக்குக் கார் வரும்; தயாராக இருங்கள்'' என்று கூறிச் சென்றார்.

சிரீவைகுண்டம் உயர்நிலைப் பள்ளித் தலைமை யாசிரியராக இருந்தவர் என் அரிய நண்பர் (எல்.டி. வகுப்பில் என் வகுப்புத் தோழர்) ஆதிநாதன். அப்பள்ளி யின் தலைமையாசிரியராக இருப்பவரைப் பார்க்க இஃது ஒரு சந்தர்ப்பமாயிற்று என்பதை நினைத்துக்கொண்டேன். சரியாகக் காலை எட்டரை மணிக்கு திரு.தொண்டைமான் திரு. கவுண்டர் அய்யா இவர்களை ஏற்றிக்கொண்டு நான் இருக்கும் விடுதிக்குக் கார் வந்தது. நானும் காரிலேயே கவிதையநுபவக் கைப்படியில் சில முக்கியமான பகுதி களையும் படங்களையும் காட்டலாம் என்று அவற்றை எடுத்து வைத்துக் கொண்டேன். காரில் செல்லும்போதே திரு. தொண்டைமானுக்குச் சில பகுதிகளைப் படித்துக் காட்டினேன்; படங்களையும் காட்டி விளக்கினேன்.

திரு. தொண்டைமான் சொன்னார்: ''என்ன ரெட்டியார், கவிதையநுபவத்தை அறிவியலாக்கி விட்டீர் களே. இதைப் படிக்கும் போதே கவிதையநுபவமே காற்றில் பறந்து போய் விடும் போலிருக்கின்றதே?'' என்று கூற, அருகிலிருந்த கவுண்டர் அய்யாவும், ''ஆமா, ஆமா, நம் ரெட்டியார் எப்போதும் அறிவியலையே பேசுவார், எதையும் அறிவியல் பார்வையில் காண முயல்வார். கவிதையிலும் அறிவியல் நோக்கைக் காட்டுகின்றார்.

கவிதையே பறந்து ஓடி விடும் போலிருக்கின்றது'' என்று கூறி ஒத்து ஊதினார்; ஆதிதாளமும் போட்டார். ஆதிதாளம் என்பது, சங்கீதத் துறையில் ஒருவகையாகத் தாளங்களைத் தட்டுவது. இஃது எல்லாப் பாட்டுக்கும் பொருந்தும் என்று என் சங்கீத நண்பர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன்.

இப்படியாக இரு பெரியார்களும் என் நூலைப் பற்றித் திறனாயவே, பல்லாண்டுகள் முயன்று, சிந்தித்து, ஒரு வகையாக முடிவுக்கு வந்த முடிவைத் தகர்க்கின்றனரே என்று உணர்ச்சிவயமானேன். மெதுவாக, நாசூக்காக, இருவர் உள்ளத்திலும் படட்டுமே என்று பேசத் தொடங்கினேன்.

''ஐயன்மீர், நான் சொல்வதைச் சற்றுச் செவி சாய்த்துக் கேளுங்கள். ஓவல்டின் என்ற பானத்தைப் படித்தவர்கள், படிக்காதவர்கள், அறிவியல் அறிஞர்கள், உணவு நிபுணர்கள் இவர்கள் யாவரும் மகிழ்ந்து பருகுகின்றனர். அதன் சுவையில் ஆழங்கால் படுகின்றனர். உணவு நிபுணர்கட்கு அதில் கோக்கோ, மால்ட், விட்டமின்கள் முதலிய சத்துகள் அடங்கியிருப்பது நன்கு தெரியும். இவர்களுள் சிலர் ஓவல்டின்னைப் பற்றிப் பகுப்பாய்வில் நோக்கிச் சுவைக்கின்றனர். நாம்போலியர் எதையும் சிந்தியாமல் சுவைக்கின்றோம். இவர்கள் இருசாராரின் சுவையிலும் வேறுபாடுகள் காண முடியுமா?

(2) சிற்றின்பத்திற்கு வருவோம். மருத்துவர்கள், உடலியல் வல்லுநர்கள், சாதாரணமானவர்கள் எல்லோருமே 'அறிதோறும் அறியாமை கண்டற்றால் போல்' இன்பச்சுவையில் ஆழங்கால் படுகின்றனர். இன்னும் சில பெருங்குடியர்களும் இச்சுவையுடன் ஈடுபடுகின்றனர். உடலியல் வல்லுநர்களும் இச்சுவையில் பங்கு கொள்ளும் உடலுறுப்புகள், இதில் சுரக்கும் நீர்வகைகள் முதலியவற்றையும் உடலுறுப்புகள் செயற்படும் முறை அறிந்து

தம்மை மெய்மறந்து சுவையின் உச்ச நிலைக்குப் போதல் போன்ற அநுபவத்தைப் பெறுகின்றனர். இவை ஒன்றுமே அறியாமல் இருப்பவர்கட்குக் கூட சுவையின் உச்ச நிலை தட்டுப்படாமற்போகாது. ஆதலால் உடலியல் பற்றி அறிவுள்ளவர்கள் இச்சுவையை அறியார்கள் என்று கூறுவது அறிவுடைமை அன்று.

(3) கவிதை அநுபவத்திற்கு வருவோம். 'திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின், மெய்மயிர்சிலிர்ப்ப விதிர் விதிர்ப்பு எய்தி' என்ற அநுபவம் அறிவியலறிவு பெறாதவர்க்கும் உண்டு. அந்த அறிவு பெற்றவர்க்கும் உண்டு. இந்த அநுபவம் ஏற்படும் போது உடலில் நேரிடும் இந்தச் செயல்களை காரணகாரிய முறையில் அறியார்கள் முன்னவர்கள்; பின்னவர்கள் அவற்றை நன்கு அறிந்தவர்கள். ஆனால் இரு சாராருக்கும் அநுபவத்தில் வேறுபாடு இராது. அறிந்தவற்றில் தான் வேறுபாடு இருக்கும்.

(4) தேவார முதலிகள் மூவரும் தலங்கள் தோறும் சென்று அவ்வவ்விடங்களில் கோயில் கொண்டுள்ள மூர்த்திகளின் மீது பாடல்களைப் பாடியிருக்கின்றனர். பாடல்கள் கல் மனத்தையும் உருக்குபவை. நமது தொண்டைமான் அவர்களும் 'வேங்கடம் முதல் குமரி வரை' உள்ள பல தலங்களுக்குச் சென்று பல மூர்த்திகளை வழிபட்டு அவர்கள் மீதுள்ள பாடல்களில் தம் உள்ளத்தைப் பறி கொடுத்திருக்கின்றார். மேலும் அக்கோயில்களிலுள்ள மூர்த்திகளின் சிற்ப அழகு, கல்வெட்டுகளில் உள்ள செய்திகள் இவற்றில் மிகவும் ஈடு பட்டுப் பேசுகின்றார். வரலாற்றுக் கண் கொண்டு நோக்கு கின்றார். இதனால் தொண்டைமானின் பக்தி ஏதாவது குறையுமா? மூவர் முதலிகளின் பார்வை பக்தியை மட்டிலும் எழுப்புகின்றது; புராணக் கதைகளில் அவர் தம் மனம் ஈடுபடுகின்றது. ஆனால் தொண்டைமானின் பார்வை பக்தியிலும் செல்லுகின்றது; சிற்ப அழகிலும் ஈடு

படுகின்றது. இந்த ஈடுபாடு அவர் பக்தியைக் குறைக்குமா? குறைக்காதன்றோ? அது போலவே ரெட்டியாரின் அறிவியல் நோக்கு கவிதை அநுபவத்தைக் குறைக்காது என்று கொள்ளலாமன்றோ?'—என்று கூறினேன்.

திரு தொண்டைமான் என் பேச்சை நன்கு கவனித்தார்; கவுண்டர் அய்யா அவர்களும் இதில் ஈடுபட்டார். உடனே சொன்னார்: ''நான் வருவாய்த்துறை ஆய்வாளராக இருந்த காலத்திலிருந்து மாவட்ட ஆட்சியாளராக வந்த வரையில் என்னைச் சுற்றிலும் ஒரு சிறு கூட்டம்; இலக்கியரசிகர்களின் கூட்டம். நான் சொல்லுவதற்கெல்லாம் 'ஆமாம்' போட்டு 'வீரவழிபாடு' நடத்துவார்கள். தாங்கள் சொல்லுவதுபோல் ஆதிதாளம் கொட்டுவார்கள். இதில் எனக்கு ஒருவித மயக்கம்; போதை. இப்போது நீங்கள் என் கண்களைத் திறந்து விட்டீர்கள். சிற்ப நோக்கு பக்தியைக் குறைக்காததுபோல் அறிவியல் நோக்கும் கவிதை அநுபவத்தைக் குலைக்காது என்பதை உணர்கின்றேன்'' என்றார். அருகிலிருந்த கவுண்டர் அய்யா அவர்களும் தம் தாளத்தை மாற்றிக் கொள்ளுகின்றார். ''ஆமா, ஆமா, நம் ரெட்டியாரின் அறிவியலறிவால் அவருடைய கவிதையநுபவம் குறையவில்லை; மிகுகின்றது'' என்று கூறினார்.

(5) எனக்கும் மீண்டும் ஒரு யுக்தி தோன்றியது. சொன்னேன் : ''மருத்துவர் ஒருவர் தம் துணைவிக்கு அறுவை சிகிச்சைமூலம் பிரசவம் செய்து குழந்தையையும் தாயையும் பிழைக்க வைக்கின்றார். இது காரணம் பற்றி அவர் தம் துணைவியார்மீது கொண்டுள்ள காதல் உணர்வு குறையுமா?'' என்று முத்தாய்ப்பாகக் கூறி இருவரையும் என் வசத்திற்குக் கொணர்ந்தேன்.

இதற்குள் கார் சிரீவைகுண்டத்தை அடைந்தது; பள்ளியின் முன்னால் கார் வந்து நின்றதும் திரு ஆதிநாதன் எங்களை வரவேற்றார். என்னைப் பார்த்து ''நீங்கள்

வந்தது பெருமகிழ்ச்சி. மேலே அறைக்குப் போகலாம்'' என்றார். ''நான் செந்தில் நாதனின் வழிபாட்டுக்குப் போகின்றேன்'' என்று கூறி என்னுடன் வந்த இரு பெரியார்களையும் மாடி அறைக்கு அனுப்பி விட்டு நான் காரில் அலைவாய் சென்றேன். திரு. கூத்த நயினார் குறிப்பிட்ட குருக்களைக் கண்டு பேசினேன். அவர் S.R.S. காரைக் கண்டதும் மிகவும் அன்புடன் வரவேற்று நன்றாகச் சுவாமி தரிசனம் செய்து வைத்தார். சந்தனம், விபூதி, குங்குமம் முதலிய பிரசாதங்களை வழங்கினார். செந்தில் குமரன் தரிசனம் அருணகிரியாரின் கந்தரலங்காரத்தை நினைக்கச் செய்தது. பல பாடல்கள் என் சிந்தையில் எழுந்தன. மனமுருகிப் பாடினேன். பல பாடல்களில்,

நாளென் செயும்;வினை தானென்
செயும்;எனை நாடிவந்த
கோளென் செயும்;கொடுங் கூற்றென்
செயும்;கும ரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்
னேவந்து தோன்றிடினே.[1]

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள்; மெய்ம்மைகுன் றா
மொழிக்குத் துணைமுரு காவெனும்
நாமம்;கண் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும்செங்
கோடன் மயூரமுமே.[2]

இப்படிப் பல பாடல்களைப் பாடிய பின்,

1. கந்தரலங்காரம்—38
2. ஷை—70

முன்னம் நின்அன்னை அமுதூட்டி
மையிட்டு முத்தம்இட்டுக்
கன்னமும் கிள்ளிய நாளலவே
என்னைக் காத்தளிக்க
அன்னமும் மஞ்ஞையும் போல்இரு
பெண்கொண்ட ஆண்பிள்ளை, நீ!
இன்னமும் சின்னவன் தானோ!
செந்தூரில் இருப்பவனே!

என்ற படிக்காசுப் புலவரின் பாடலை சண்முகநாதன் சந்நிதி முன் மனமுருகப் பாடி உள்ளம் உருகினேன்.

அதன் பின்னர் குருக்களிடம் விடைபெற்றுக் கொண்டு சிரீவைகுண்டம் வந்து சேர்ந்தேன். நேரம் பகல் 12-30, கூட்டம் முடியும் நேரம்; நன்றியுரை நடைபெற்றுக் கொண்டிருந்தது. கூட்டத்தின் பின்புறமாக உட்கார்ந்தேன். கூட்டம் கலைந்தது. ஆதிநாதன் விருந்தினர்களை இட்டுக் கொண்டு தம் வீட்டிற்குச் சென்றார். நானும் அவருக்கு 'விருந்தினன். ஐந்தாண்டுகட்கு முன்னர் காரைக் குடி வந்திருந்தார்; என் அண்டைவீட்டு கே. நாராயணனின் விருந்தினர். அதன் பிறகு இப்பொழுதுதான் பார்த்து அளவளாவும் வாய்ப்பு கிடைத்தது. அன்று விருந்து பலம். உணவு வகைகளைப் பரிமாறும் போது நெளியமுது (சாம்பார்) சாத்தமுது(ரசம்), திருக்க(ண் அமுது)ன்னல் அமுது இப்படியெல்லாம் உணவுப் பொருள்களின் சம்பிரதாயப் பெயர்கள் அடிபட்டன. அப்போது அச் சம்பிரதாயப் பெயர்களை நான் அறியாத நிலை.

அப்பக்கத்தில் கம்பராமாயணத்தைக் கரைத்துக் குடித்தவரும் ஆழ்வார் பாசுரங்களில் நன்கு ஆழங்கால் பட்டவருமான வைணவப் பெரியார் ஒருவர் வந்திருந்தார். அவரை எனக்கும் என்னை அவருக்கும் அறிமுகப் படுத்தி வைத்திருந்தார் ஆதிநாதன் முன்னரே. அந்தப் புதியவருக்கு வயது 75 இருக்கும்; எனக்கு அப்போது

வயது 41. பந்தியில் எதிர் எதிராக உட்கார்ந்து சாப்பிட்டோம். நான் எப்போதும் குறைவாக-அளவாகஉண்பவன். அந்தப் பெரியவர், ''என்ன ரெட்டியார், சிறு பிள்ளை மாதிரி மிகக் குறைவாகச் சாப்பிடுகின்றீர்கள். எப்படி வேலை செய்ய முடியும்? சக்தி வேண்டாமா?'' என்று செல்லமாகக் குழைந்து பேசினார். ''ஐயா இது தான் அளவு'' என்று சொன்னேன்.

விருந்து முடிந்தது. பத்து நிமிடத்திற்குள் நான், தொண்டைமான், கவுண்டர் அய்யா—நெல்லைக்குத் திரும்பினோம். அப்போது மாலை மணி 3-50. திரு. நவநீத கிருஷ்ணன் என் அறைக்கு வந்திருந்தார். பல்வேறு விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தோம். 'கவிதையநுபவம்' நூலின் கைப்படியைப் பார்த்தார்; அதிலுள்ள படங்களையும் பார்த்தார். நானும் நூலைப் பற்றி விளக்கினேன். கழகவாயிலாக வெளிவர ஏற்பாடு செய்யுமாறு கேட்டேன். அவரும் கைப்படியை வாங்கிக் கொண்டு ஆவன செய்வதாக வாக்குறுதி தந்தார். கழகம் மறு ஆண்டே (1961) நூலை வெளியிட்டு விட்டது. நூல் வெளி வந்து சில ஆண்டுகளில் நவநீத கிருஷ்ணன் சிவப்பேறு அடைந்தார்; ஓய்வு பெறுவதற்கு முன்னரே காலகதி அடைந்தார். ஏறக்குறைய என் வயதையுடையவரே (41). அடுத்து சில ஆண்டுகளில் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமானும் பரமபதித்து விட்டார். இச்செய்திகள் தாமதமாகத்தான் எனக்கு எட்டின. மிகவும் வருந்தினேன்.

## 46. என் அன்னையின் சிவப்பேறு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பெரகம்பியில் (இலால் குடி வட்டம்—திருச்சி மாவட்டம்) பண்ணையார் வீட்டில் பிறந்த காமாட்சி அம்மாள்அருமை யாகவளர்க்கப்பெற்று கோட்டாத்தூரில் (முசிறி வட்டம், திருச்சிமாவட்டம்) ஞானியார் குடும்பத்தில் ஒரே மகனான நல்லப்பரெட்டியாரை மணந்துஅந்த வீட்டுமருமகளானார். மூன்றாண்டுகள் கூட முடியாத நிலையில் மூன்றாண்டுப் பருவம் நிரம்பாத ஒரு செல்வனை (அடியேனை) விட்டு கணவன் இறைவன் திருவடி நிழலை அடையவே, பங்காளி களிடம் நீதிமன்ற வழங்குகளில் ஈடுபடுத்தப் பெற்றுச் சொல்லொணாத் துன்பமுற்றார் என் அன்னையார்.எட்டு வயது வரையில் நான் பாட்டி வீட்டில் வளர்ந்து வரவே, என் அன்னையார் கோட்டாத்தூரிலும் பெரகம்பியிலுமாக இருந்து வந்தார்.என் மாமன் (அம்மான்) இரண்டாவது திருமணம் செய்து கொண்ட பிறகு குடும்பத்தில்ஏற்பட்ட பூசல்களால்நானும் என் அன்னையும் கோட்டாத்தூர் வர நேர்ந்தது.எனக்குஎப்படியாகினும்ஆங்கிலக்கல்வி அளிக்கப் பெறல்வேண்டும் என்று வெறியாக நின்று பல்வேறு தொல்லைகளுக்கிடையில்வெளியூர் அனுப்பினார். இறைய ருளால் என் கல்விமுட்டின்று B. Sc., L. T. வரை முடிந்து துறையூர் உயர்நிலைப் பள்ளியில் (என்னால் தொடங்கப் பெற்றது) முதல் தலைமையாசிரியனாகி 9 ஆண்டுகள் பணியாற்றி நற்பெயருடன், காரைக்குடி வள்ளல் அழகப்பர் தொடங்கிய பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியன் ஆனேன். 1930 முதல் 1953 வரை சொந்தத் தில் பண்ணை வைத்து அதிகப் பொருளிழப்பில் பண்ணை வேலையை நிறுத்தி நிலங்களை விற்று விட்டு என்னுடன்

வந்து விட்டார் என் அன்னையார். நான்கு ஐந்தாண்டுகள் தாம் அவரது வாழ்க்கையில் மன அமைதியுடன் வாழ்ந்த காலம். இரண்டு பேரன்மார்களுடன் இனிமையாகப் பொழுது போக்கினகாலம்.

1958 அக்டோபர் இறுதியில் அனைத்திந்திய மொழிகள் பயிற்றும் கருத்தரங்கில் (இந்திய அரசு நடத்தியது) 10 நாட்கள் பங்கு கொண்டு திரும்பிய சில நாட்களில் நோய் வாய்ப் பட்டார் என்அன்னையார். ஒன்றிரண்டுவாரங்கள் உணவு சரியாக உட்கொள்ள வில்லை; டாக்டர் சுப்பிரமணிய அய்யரும் டாக்டர் P.K. நாராயண அய்யரும் நன்கு கவனித்துச் சிகிச்சை செய்தனர். பலன் காண முடியவில்லை. உட்கொள்ளும் தண்ணீர் கூட வயிற்றில் தங்குவதில்லை; வாந்தியாக வெளிப்பட்டு விடும். ஒருநாள் முழுவதும் (காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை) பேரியம் (Barium meal) உணவு கொண்டு புதிர்க்கதிர் (X-ray) சோதனைக்கு உட்படுத்தப் பெற்றார். ஒரு மணிக்கொரு முறை படம் எடுக்கப் பெற்றது. இச்சோதனையால் வயிறு இரண்டு மூன்று பகுதிகளாகப் (பலூனில் ஏற்படுவது போல) பிரிந்திருந்ததைக் கண்டார்கள். 'வயிற்றில் புற்றுநோய்' (Stomach cancer) என்பது முடிவு. சிகிச்சையால் குணமாவது ஐயம் என்றும், சென்னை சென்று ஆழ்ந்த புதிர்க்கதிர் (Deep X-ray) சோதனைக்குட்படுத்தப் பெற்று அறுவை சிகிச்சை மூலம் குணமாகலாம் என்றும், அப்படிக் குணமானால் ஆயுள் முழுவதும் பால் போன்ற நீராகாரம் (Liquid diet) தான் கொள்ள முடியும் என்றும் கருத்து தெரிவித்தார்கள்.

என்மனம் குழம்பியது; ஆழ்ந்து சிந்தித்தேன். டாக்டர் சுப்பிரமணிய அய்யர் அநுபவத்தில் பழுத்த திறமைசாலி; நுட்பமான தொழில் திறனுடன் திகழ்ந்தவர். சிகிச்சை விடாமல் தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஒரு நாள் டாக்டரைச் சந்தித்து, ''இந்த மாதிரி நிலைமை உங்கள்

அன்னையாருக்கு நேரிட்டால் நீங்கள் என்ன முடிவு எடுப் பீர்கள்? அறுவை சிகிச்சையை மேற்கொள்ளுவீர்களா?'' என்று வினவினேன். என் வினாவைக் கேட்டு வியப்பெய்தி னார் டாக்டர். ''மிஸ்டர் ரெட்டியார், நன்றாகக் கேட்டீர்கள். இந்த நிலை என் அன்னையாருக்கு ஏற்பட் டால், வயது நிலையைக் கருதி அப்படியே விட்டு விடு வேன்; அறுவை சிகிச்சைக்கு உட்படுத்த மாட்டேன். இறைவன் திருவருளுக்கு விட்டு விடுவேன்'' என்றார். ''இதையேதான் நானும் நினைத்தேன். தள்ளாத வயதில் சென்னைக்குக் கொண்டுபோய் இறந்த பின் செய்யும் ஆய்வு (Postmortem)போல் செய்து, கூறு போட்டு அடக்கத்திற்குக் காரைக்குடி கொண்டு வர விரும்ப வில்லை. எவ்வளவு செலவு? எவ்வளவு முயற்சி? எல்லாம் வீண் வேலையாக முடியும் என்று தெரிந்தும், இச்செயலில் இறங்க விரும்பவில்லை.'' என்று மறுமொழி பகர்ந்தேன். டாக்டரும் என் முடிவை ஆமோதித்தார்.

சில நாட்கள் உருண்டோடின. நான் விடுப்பு எடுத்துக் கொண்டு வீட்டிலேயே தங்கினேன், என் ஒன்று விட்ட தம்பி கணபதியையும் ஒரு வாரம் விடுப்பு எடுத்துக் கொண்டு வருமாறு பணித்தேன். இதற்கு முன்னர் இரண்டு மூன்று பெண் உறவினர்கள் வந்து ஒன்றிரண்டு நாட்கள் இருந்து திரும்பினர். செட்டியார் நண்பர் ஒருவரைக் கொண்டு ஓதுவார் ஒருவ ருக்கு ஏற்பாடுசெய்தேன். அவர் 10 நாட்கள் காலையிலும் மாலையிலும் வந்து தேவாரம் ஓதினார்; திருவாசகம் பாடினார். இடையில் என் தம்பி கணபதியும் தேவாரப் பாடல்கள் பாடினான். இறுதிநாள் வரை என் அன்னையார் நன்றாகப் பேசிக்கொண்டுதான் இருந்தார். நான் ஜபல்பூர் சென்றிருந்தபொழுது ஆறுகெஜம் வெண் பட்டு வாங்கி வந்து அணிந்து கொள்ளுமாறு கொடுத்திருந்தேன். அதை ஒரு நாள் கூட அணிந்து கொள்ளவில்லை. ஒருநாள் என்னை அழைத்து.

"நான் இறந்த பிறகு வெண்பட்டை என் உடலில் போர்த்தி விடு. சுடுகாடு போகும் போது வேறு பருத்தியாலான கோடியைக்கொண்டு போர்த்தி பட்டாடையை எடுத்துவிடு. உனக்கும் சிறுவர்கட்கும் சட்டை தைத்துப் போட்டுக் கொள்க" என்று பணித்தார். எனக்கு இரண்டு ஜிப்பாக்களும் சிறுவர்கட்கு ஆளுக்கொரு ஜிப்பாவுமாகத் தைத்துக் கொண்டேன்.

இதற்கிடையில் இறப்பதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக பொட்டணத்திலிருந்து என் மனைவியின் தாயாரும், எருமைப்பட்டியிலிருந்து என் மனைவியின் அண்ணன் முதல் மனைவியும், ஆலத்துடையாம்பட்டியிலிருந்து என் மனைவியின் அத்தை மகன்மு.கிருஷ்ணசாமிரெட்டியாரும் வந்து சேர்ந்தார்கள். அவர்களிடம் ஒரு நாள்தான் பேசினார்கள். அதன் பிறகு மயக்கம் (Coma) உண்டாகி விட்டது. பேச்சும் நின்றது. இப்படியே ஒன்றிரண்டு நாட்கள் சென்று இறுதியில் ஆவியும் நின்றது. முப்பதாண்டுகள் செய்து வந்த சிவ பூசையும் நாவினால் இடைவிடாது நவிற்றிய ஐந்தெழுத்து மந்திரமும் அவர்களைச் சிவப்பேறு அடையச் செய்திருக்கும் என்பது என் நம்பிக்கை.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே

—தேவாரம் 3.49:1

என்ற சம்பந்தரின் திருவாக்கும் நினைவுக்கு வருகின்றது.

பூதவுடல் வீட்டிலிருந்து சுடுகாடு போகும் வரையிலும் அங்கு எரியூட்டும் வரையிலும் தக்க ஆட்களைக்கொண்டு மிகவும் அன்புடன் உதவினார் திரு K. சுப்பிரமணிய முதலியார் (ரெங்கூன் ஹால் துணிக்கடை அதிபர்). இவர் உதவியிராவிடில் புதிய, உறவினர்கள் இல்லாத இடத்தில்,

என்னால் ஒன்றுமே செய்ய இயலாது. சுடுகாடும் 2 பர்லாங் தொலைவில் இருந்ததால் எல்லாச் செயல்களும் இனிதாக நிறைவேறின. தங்கத்தாலாகிய சில அரிசிகளை சாதாரண அரிசியுடன் கலந்து வாய்க்கரிசி போட்டு குமாரர்கள் இருவரும் பார்த்துக்கொண்டிருக்க, சுதைக்குத் தீ மூட்டினேன். அப்போது பட்டினத்தார் அன்னையாருக்கு இறுதிக் கடன் இயற்றும்பொழுது பாடிய பாடல்கள் நினைவிற்கு வந்தன.

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாள்சுமந்தே
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத்—தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்.

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகில்இட்டுத் தீமூட்டு வேன்.

அரிசியோ நான் இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசைஇட்டுப் பார்த்து மகிழாமல்—உருசிஉள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு

அள்ளிஇடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்—மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனஅழைத்த வாய்க்கு[1]

தாயின் பிரிவைத் தாங்கமாட்டாமல் முற்றும் துறந்த முனிவரே இவ்வாறு புலம்பி அழும்போது உலக வாழ்வில் தோய்ந்து கிடக்கும் எனக்கு உண்டான துக்கம் எவ்வளவு என்பதை எடுத்துக்கூறத்தேவை இல்லை.

காலையிலேயே ஒரு பத்து பேருக்கு பகலுணவு தேவைப்படும் என்று ஆனந்தபவன் விடுதியில் ஆள் மூலம்

1. பட்டினத்தார் பாடல்கள்—390, 391, 393, 394

சொல்லி இருந்தேன். சுடுகாட்டிலிருந்து திரும்பின முக்கிய மான உறவினர்களை இல்லத்தில் நீராடச்செய்து ஆனந்த பவனில் உணவு கொள்ளச் செய்து, ஊருக்கு அனுப்பி வைத்தேன். பெண்களுக்கு மட்டிலும் இல்லத்திலேயே உணவு தயாராகியது; உண்டு விடை பெற்றனர். மறுநாள் பால் தெளித்து சூடாற்றி எலும்புகளைப் பொறுக்கி மொந்தையில் வைத்து வீட்டின் புறத்தே பாதுகாப்பான இடத்தில் வைத்தேன். பத்தாம் நாள் கருமாதி. பலருக்குக் கடிதம் மூலம் தெரிவித்திருந்தேன்; சிலரே வந்திருந்தனர். பெரகம்பியிலிருந்து என் அம்மானும் தம் துணைவி யாருடன் வந்திருந்தார். என் மைத்துனர் முதல் மனைவி யும் வந்திருந்தாள். எதிர்பார்த்த பலர் வரவில்லை. அன்றே தீட்டு கழியவும் திதி வைக்கவும் ஏற்பாடு செய்து அனைத்தையும் முடித்தேன். திதி முடிந்து இரண்டு நாள் கழித்து நானும் என் அண்ணார் மு. கிருஷ்ணசாமி ரெட்டியாரும் (ஆலத்துடையாம்பட்டி) திருஅரங்கம் சென்று எலும்பைக்காவிரிவெள்ளப் பெருக்கில் கரைத்துத் திரும்பினோம்.

காசி யாத்திரைக்கு என்அன்னையாரைஅனுப்பலாம் என்றுதிட்டம்இட்டிருந்தேன். எதிர்பாராத நோயால் அது தடைப்பட்டது. அன்னையாருக்கு அப்பேறு இல்லை. என்செய்வது? மூன்றாண்டுப் பருவத்தில் தந்தையை இழந்தவன் யான். 'தந்தையொடு கல்விபோம்' என்று பெரியோர் கூறுவர். இந்நிலையில் பல இன்னல்கட்கு இடையே சிறிதும் தளராது 'அம்மையாக' இருந்து என்னை வளர்த்தும், 'அம்மையும் அப்பனுமாக' இருந்து எனக்கு எல்லா நலன்களை அருளியும் 42 வயது வரை என் வாழ்க்கையைக் கண்டு மகிழ்ந்திருந்த என் அன்னையின் பிரிவு இரு மடங்கு துக்கத்தைத் தந்தது.

நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.[2]

2. குறள்—336 (நிலையாமை)

என்ற குறளை நினைந்து துக்கத்தை மறக்க முடியு மென்றாலும் மறக்க முடியுமா? கால வெள்ளத்தில் தானாகக் கரைய வேண்டியதல்லவா இது?

மைஆடு கண்ணியும் மைந்தரும்
வாழ்வும் மனையும் செந்நீ
ஐயாநின் மாயை உருவெளித்
தோற்றம்; அகிலத்து உள்ளே
மெய்யாய் இருந்தது நாள்செல
நாள்செல வெட்டவெறும்
பொய்யாய் பழங்கதை யாய்க்கன
வாய்மெல்லப் போனதுவே.[3]

என்ற பாடல் இன்றளவும் மனத்தை நெருடிக் கொண்டே உள்ளது; மனத்திற்கு ஆறுதலும் தருகின்றது.

குமிழி—154

## 47. என் அம்மானின் மறைவு

1959-ஜூலை—ஆகஸ்டு என்பதாக நினைவு. பெரகம்பி சி. அரங்கராஜு (என் ஒன்றுவிட்ட சிற்றப்பா வின் மூன்றாவது மகன்) திருச்சியிலிருந்து தொலைபேசி மூலம் என் அம்மான் மறைந்துவிட்ட செய்தியை அறிவித்து உடனே புறப்பட்டு வருமாறு வேண்டிக் கொண்டான். என் அன்னையார் மறைந்த பிறகு ஒருவித அமைதி என்னிடம் குடி கொண்டுவிட்டது. மலை கலங் கினும் நிலை கலங்காத நிலை அமைந்தது. இதனால் அதிர்ச்சியடைந்து பெரகம்பிக்கு ஓடவில்லை.

3. பட்டினத்துப் பிள்ளையார் பாடல்—348.

இப்போது பழைய நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாக என் மனத்தில் எழத் தொடங்கின. சிறுவனாக இருந்த போது நான் பெரகம்பியில் என் அம்மான் வீட்டில் வளர்ந்த வரலாறுவெளிப்பட்டது. மூன்றாண்டுப் பருவத் திலேயே என் தந்தையை இழந்த எனக்கு என்அம்மான் வீடேபுகலிடம். அப்போது அவர் ஒரு மகவுடன் தன் முதல் மனைவியைத் தள்ளி வைத்திருந்த நிலை. என் அன்னையார் கோட்டாத்தூரிலும் பெரகம்பியிலும் இருந்து கொண்டிருந்த நிலை. நிலம் குத்தகைக்கு விடப் பெற்றிருந்தது புன்செய் நிலம் சொந்தப் பண்ணையாக இருந்தது. இரண்டாவது திருமணத்திற்கு முன்பு (1925) என்னைத் தன் மகன்போல் கவனித்து வந்தார் என்று சொல்வதைவிடத் தன் மகனாகவேகொண்டு வளர்த்தார். அளவுக்கு மீறிய செல்லம் தந்தார்கள். இரண்டு மா மரங்களின் பழத்தை விருப்பப்படி தின்னும் வாய்ப்பு; செட்டிக் குளத்திலிருந்து ஒரு மாது பிஸ்கட்டுகள் கொண்டு வந்து விற்பாள்; கொய்யாப் பழம், அன்னாசிப் பழம் ஆரஞ்சுப் பழம் கொண்டு வருவாள், இவற்றையெல்லாம் என் பொருட்டே வாங்கித் தள்ளுவார்கள். இவை யெல்லாம் என் பாட்டியின் அன்பு வெள்ளமாக என்மீது பாயும்.

வீட்டில் இரண்டு பசு மாடுகள்; ஒன்று வெள்ளைப் பசு; மற்றொன்று காராம் பசு. காலை 7-30க்கு என் அம்மான்தான் இரண்டு மாடுகளிலும் பால் கறப்பார். என் பாட்டி ஒரு டம்ளரில் சீனி சருக்கரைஅல்லது நாட்டுச் சருக்கரை சிறிதளவு போட்டு அதை என் கையில் தருவார். என் அம்மான் அதை என்னிடமிருந்து வாங்கி அந்த டம்ளரிலேயே பால் பீச்சி என்னிடம் பருகத் தருவார்; பால் இளஞ்சூட்டுடன் இனிக்கும். இரவிலும் பாட்டி பால் தருவார்கள்.

என் அம்மானின் இரண்டாந் திருமணத்திற்குப் பிறகு என் பாட்டி தம் இரண்டாம் மருமகளுடன் வாழ விரும்ப

வில்லை. ஆதலால் அவரும் நானும் கோட்டாத்தூர் வந்து விட்டோம். அப்போதுகூட என் அம்மான் துறையூருக்கு வரும் போதெல்லாம் (நடைதான்; வேறு வாகன வசதி அக்காலத்தில் இல்லை) கோட்டாத்தூர் வழியாகத் தான் திரும்புவார். அக்காலத்தில் துறையூரில் சுவைக்கும் தூய்மைக்கும் பேர்போன கோதுமையாலான வெண்ணெய் பிஸ்கட் வாங்கிக் கொண்டு வருவார். தம் மனைவிக்குத் தாம் கோட்டாத்தூர் வந்து தம் தாயாரையும் என்னையும் பார்த்துப் போனதை தெரிவிப்பதில்லை; அவ்வளவு பயம். முதல் மனைவி என் பாட்டியுடனும் கணவனுடனும் வாழ விரும்பாமல் தம் தாய் வீடு போனதும், இரண்டாம் மருமகளுடன் வாழ விரும்பாமல் என் பாட்டி கோட்டாத் தூர் வந்ததும் என்னால் புரிந்து கொள்ள முடியாத புதிராகவே உள்ளது. என் பாட்டி முதல் மருமகளை விரட்டி விட்டாரா? இரண்டாவது மருமகள் என் பாட்டியை விரட்டி விட்டாளா? மாமியார்-மருமகள் முதல் போராட்டத்தில் மாமியார் வென்றார்; இரண்டாவது போராட்டத்தில் மருமகள் வென்றார்; உலகப் போக்கு மனிதருக்கு மனிதர் மாறுபடுகின்றது.

தம் தங்கை மறைவுக்குக் காரைக்குடி வந்து சென்ற அண்ணன் ஆறு திங்களில் மறைந்து விட்டார். இப்போது தந்தையின் மறைவை உணர முடியாத எனக்கு அம்மானின் பிரிவு தந்தையின் பிரிவையொத்த துக்கத்தை விளைவித்தது. ஒரே ஆண்டில் தாயின் பிரிவும் அம்மானின் பிரிவும் எனக்குத் தாங்க முடியாத துக்கத்தை விளைவித்ததை நினைவு கூர்கின்றேன். அம்மான் இறந்த செய்தி எட்டியதும் உடனே புறப்பட இயலவில்லை; அப்படிப் புறப்பட்டு வந்தாலும் பிணத்தைத்தானே பார்க்க முடியும்? ஆதலால் மறுநாள் பால் தெளிப்புக்கு மட்டிலும் வந்து போனேன்; 16 ஆம் நாள் கருமாதிக்கும் வந்து திரும்பினேன். அம்மான் மறைவுக்குப் பின்னர், அக்குடும்பத்துடன் பந்தபாசம் அற்றது. அண்மையில் (1986) என்

அம்மானின் இரண்டாம் மனைவியும் இயற்கை எய்தினார். இறந்த செய்தி இரண்டு திங்களுக்குப் பிறகு என்னை எட்டியது. என் அம்மானின் மகள் வயிற்றுப் பேரன் A. இர்ராசகோபாலன் இப்போது எண்ணூரில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் பணியாற்றுகின்றவன் வந்து போகின்றான். நான்கூட அவன் திருமணத்திற்குப் போக முடியவில்லை. திருமணம் முடிந்து எண்ணூரில் நிகழ்ந்த வரவேற்பு நிகழ்ச்சிக்குத்தான் போய் வர முடிந்தது. இப்போது என் போக்கு வரவு குறைந்து கொண்டே வருகின்றது. இறுதியாக மேற்கொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத பெரும் பயணத்திற்கு முன்னர் நடமாட்டம் குறையத்தானே வேண்டும்?

பெரகம்பியில் என் நண்பர்கள், வகுப்புத் தோழர்கள், உறவினர்கள் இவர்களில் பெரும்பாலோர் திருநாடு அலங்கரித்து விட்டனர். வாழ்ந்து வரும் ஒரு சிலரைப் பார்க்கும் ஆசை 'ஒரு தலைக்காதல்' போல் அவ்வப்போது தோன்றுகின்றது. இந்த ஆசை இப்பிறவியில் நிறைவேறு வதாகத் தோன்றவில்லை.

குமிழி—155

## 48. என் கோபிப் பயணம்

என் அன்னையார் மறைந்து நான்கு திங்கள்தான் நிறைவெய்தின. இந்தத் துக்கம் என்பால் இன்னும் நீங்க வில்லை. "ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தீர்"[1] என்ற ஔவைப் பாட்டியின் வாக்கு சிறிது சிறிதாக என் துக்கத்தைக்

1. நல்வழி

கரைத்துக் கொண்டே வந்தது. ஆனால் என் மனைவியின் துக்கம் குறையவில்லை. மாமியார்-மருமகள் ஒற்றுமை பிறருக்கு எடுத்துக் காட்டாக இருந்தது என்று சொல்லலாம்; பிறர் பொறாமைப்படக் கூடியதாகவும் இருந்தது. அதனால் என்னை ஒருநாள்கூட பிரிந்திருக்க என் மனைவி அனுமதிப்பதில்லை- மாலை நேரத்தில் 7-30க்கு மேல் தாமதமானால் கூட கண்டிப்பு இருந்தது.

இந்த நிலையில் 4 நாட்கள் கோபிச்செட்டிபாளையத்தில் அறிஞர்கள் கூடி கம்பராமாயணத்தில் ஓர் ஆய்வு நடத்தத் தீர்மானித்தனர். மர்ரே கம்பெனி எஸ். ராஜம் அங்குச் சில அறிஞர்களுடன் வருவதாகக் கூறி, முருகப்பா கம்பராமாயண ஆராய்ச்சியில் இரண்டாண்டுகட்கு மேல் பங்கு கொண்ட என்னையும் பூ. அமிர்தலிங்கத்தையும் க. தேசிகனையும் வருமாறு பணித்தார் கம்பனடிப்பொடி. ஏதோ காரணத்தால் தேசிகன் வரவில்லை. பூ. அமிர்தலிங்கம் மட்டிலும் வந்தார். நான் என் மனைவியைச் சமாதானம் செய்து கிளம்புவது போதும் போதும் என்றாய் விட்டது. அழவே ஆரம்பித்து விட்டாள். சா. க; வுக்காக அவசியம் போக வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லிவிட்டுக் கிளம்பினேன். ஒரு நாள் நாங்கள் மூவரும் திருச்சி சென்று அங்கிருந்து ஈரோடு வண்டியைப் பிடித்து அதிகாலை ஐந்து மணிக்கு ஈரோட்டை அடைந்தோம். மர்ரே ராஜம் தம் சகாக்களுடன் வந்து சேர்ந்தார். திரு.கு.அருணாசலக் கவுண்டர் இரண்டு கார்களுடன் இருப்பூர்தி நிலையத்திற்கு வந்து எங்கட்காகக் காத்துக் கொண்டிருந்தார்.

காலை 7-மணிக்கு எங்களைக் கார்களில் கோபிச் செட்டிப்பாளையம் கொண்டு போய்ச் சேர்த்தார். கோபிச் செட்டிப்பாளையத்தில் சுப்பிரமணியக் கவுண்டர் இல்லத்தில் நாங்கள் அனைவரும் விருந்தினர்களாகத் தங்கி இருந்தோம். நல்ல இடம்; சுமார் நான்கு ஏக்கர் நிலட்

பரப்பில் வீடு அமைந்திருந்தது. சமையல் கட்டடம் தனி; கெட்டிவீடு தனி. இவை தவிர ஐந்தாறு இடங்களில் கூரை களாலான குடிசை போன்ற அமைப்புகள். ஒவ்வோர் குடிசையிலும் இரண்டு கயிற்றுக் கட்டில்கள்; அவற்றின் மீது மென்மையான இலவம் பஞ்சாலான மெத்தைகள் இரண்டு தலையணைகளுடன்; போர்த்திக் கொள்ள மெல்லிய துப்பட்டிகள், நாங்கள் சென்றது கோடைக்கால மாதலால் (மே-1959) மின் விசிறியின்றி இயற்கைக் காற்றோட்ட வசதியுடன் இரவில் நல்ல உறக்கம் கொண் டோம். உணவிற்குப் பிறகு ஆய்வு கெட்டிக் கட்டடத்தில்; இங்கு மின் விசிறி அமைப்புகளுடன், நல்ல காற்றோட்ட வசதி. குளியலறைகளும் கழிப்பறைகளும் அகன்ற இடத்தில் தனி வரிசையில் அமைந்து இருந்தன. பொது வாகச் சிற்றூர்ச் சூழ்நிலையும் நகரச் சூழ்நிலையும் கலந்த நல்ல இடம் கவுண்டரின் திருமாளிகை.

அகன்ற இடத்தில் கறவை மாடுகள் ஒருபுறம்; அவற்றிற்கு உணவாக வைக்கோல் போர், கேழ்வரகு தட்டைப் போர் மற்றோர் புறம், இவர்களது கழனிகளும் பழத்தோட்டங்களும் சற்றுத் தொலைவில் இருந்திருக்க வேண்டும். நல்ல நல்ல உயர்ந்த மாம்பழ வகைகள் உணவுடன் பரிமாறப் பெற்றதிலிருந்து இதனை அறிய முடிந்தது. இவ்வளவு செல்வச் செழிப்பு இருந்த குடும்பத் தில் ஈகைப் பண்பும் விருந்தோம்பல் பண்பும் அன்புடைமை யும் இயல்பாகவே அமைந்திருந்தன. இங்கு விருந்ினனாக இருந்தபொழுது,

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு[2]

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றார் எய்தும் சிறப்பு[3]

2. குறள்— 86 (விருந்தோம்பல்)
3. குறள்—75 (அன்புடைமை)

இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள[4]

என்ற வள்ளுவர் வாக்குகள் என் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் இருந்தன.

சமையலுக்கும் பரிமாறுவதற்கும் ஆட்களிருந்தனர். உண்பதற்கு வசதியாக மேசை நாற்காலிகள் இல்லை. உட்கார்வதற்கு விரிப்புகளுடன் அமைந்த தரைதான். இந்திய ஆடைகளணியும் நமக்கு இந்த ஏற்பாடுதான் சிறந்தது. இக்காலத்தில் திருமணக் கூடங்களில் கூட மேசை நாற்காலிகளுடன் கூடிய வசதிகள். நவீன வாழ்க்கை படாடோபமாகப் போய்க் கொண்டுள்ளது. தேவைகளைப் பெருக்கிக் கொண்டு 'அது வேண்டும் இது வேண்டும்' என்ற கவலையுடன் வாழ்கின்றான் நவீன மனிதன். 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற ஔவைப் பாட்டியின் வாக்கை ஆடிக் காற்றில் பறக்கும் இலவம் பஞ்சாகக் கொண்டு வந்து விட்டான். இந்த இல்லத்தில் விருந்தினர்கட்கு உணவு பரிமாறும் பொறுப்பை இல்லத்தரசியரும் இளம் பெண்களும் இளைஞர்களுமே மேற்கொண்டிருந்த பண்பையும் பெரியவர்கள் பந்தி விசாரணை செய்யும் பொறுப்பிலிருந்ததையும் கண்டு மகிழ்ந்தேன். அதிகாலையில் தரும் காஃபி பானம் மட்டிலும் சமையல் ஆட்கள் அவரவர் படுத்திருந்த இடத்திற்கே ஆட்கள் மூலம் வந்து விடும். காலைச் சிற்றுண்டி, பகலுணவு, மாலைச் சிற்றுண்டி, இரவு உணவு, (இக்காலத்தில் பெரும்பாலும் சிற்றுண்டியே) உண்ணும் மண்டபத்திலேயே நடைபெற்றன. விதவிதமான பொரியல்கள், கூட்டுகள், பச்சடி வகையறாக்கள், மாம்பழம், கதலி, பலாப்பழங்களில் ஏதோ ஒன்று ஒவ்வொரு வேளையும் பரிமாறப் பெற்றது. வெவ்வேறு வகை வடகங்கள், அப்பளம்,

4. குறள்—223 (ஈகை)

வறுகல்கள் வந்த வண்ணம் இருந்தன. வேப்பம் பூ வடகம் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தது. வேப்பம் பூவை மெல்லிய காம்புடன் கூழில் அமுக்கிச் செய்யப் பெற்றது இது என்பதை அறிந்தேன். கட்டித் தயிர் எல்லோருக்கும் கிடைத்தது.

இங்கு விருந்து உண்ணும் போது

முந்துமுக் கனியின் நாளா
முதிரையின் முழுத்த நெய்யில்
செந்தயிர்க் கண்டம் கண்டம்
இடையிடை செறிந்த சோற்றின்
அந்தமில விருந்து தாமும்
விருந்தொடும் தமரி னோடும்
அந்தணர் அமுத ருத்தி
அயிலுறும் அமலைத் தெங்கும்[5]

(முக்கனி—மா, பலா, வாழைக் கனிகள்; முதிரை—பருப்பு வகை; செந்தயிர்க் கண்டம்—செந்நிற முள்ள தயிர்க்கட்டி; கண்டம்—கண்ட சருக்கரை; தமர்—உறவினர்; அருத்தி—உண்ணச் செய்து; அயிலுறும்—உண்கின்ற)

என்ற பாடல் நினைவிற்கு வந்தது, இந்தப் பாடலில் 'அந்தணர்' என்பதற்குப் பதிலாக 'வேளாளர்' என்று போட்டுக் கொண்டால் சிறக்கும். ஏனையோர் உழைப்பை அந்தணர் மட்டிலும் உண்டனர் என்ற கருத்து பொருந்தாது என்று கொண்டு இப்பாடலைச் செருகு கவிகளில் ஒன்றாக்கி விட்டார் சொ. முருகப்பர். இதன் விளக்கத்தைப் பிறிதொரு குமிழியில் கண்டு மகிலாம்.

இங்குக் கம்பராமாயணப் பதிப்பு முறைபற்றி பல் வேறு பிரச்சினைகள் ஆராயப்பெற்றன. செருகு

5. கம்ப. பாலகா. நாட்டுப்-22

கவிகள், மிகைப் பாடல்கள், அவை புதிய பதிப்பில் இடம் பெறவேண்டிய பாடல்களைப் பதம் சீர் பிரித்துப் போடு வதா, பாட வேற்றுமைகள், இதற்குக் காரணங்கள், போன்ற பல்வேறு கருத்துகள் ஆயப்பெற்றன. அவற்றை யெல்லாம் இக்குமிழியில் எழுப்ப விருப்பம் இல்லை. இக் கருத்துகள் எப்பொழுதும் இடையறாது அறிஞர்கள் சிந்தனையில் இருப்பவையே. முடிந்த முடிவாக எதையும் கொள்வதற்கு முடியாத நிலை. நான்கு நாட்கள் 'அடையா நெடுங்கதவுள்ள' சுப்பிரமணியக் கவுண்டர் இல்லத்தில் கம்பராமாயண ஆய்வுநடைபெற்றது. ஐந்தாம் நாள்காலையில் திருவாளர் கவுண்டரிடம் விடை பெற்றுக் கொண்டோம்.இந்த இல்லத்தில் நான்சிறப்பாகக் கண்டது ஒன்று உண்டு. எத்தனையோ வேலையாட்கள் இருந்தும் சற்றுத் தொலைவிலுள்ள வாயிலில் சாணம் தெளித்துப் பெருக்கிக் கோலம் போடும் பணியை வீட்டிலுள்ள பெண் மணிகளே செய்து வருவதை அறிந்து மகிழ்ந்தேன். நாங்கள் சென்றிருந்தபோது 3-வதுஆண்டுஎம்.பி.,பி.எஸ். பயிலும் பெண்மணி (விடுமுறைக்கு வந்திருந்தவள்) செய்து வந்ததைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தேன். இதுவல்லவா உழைப்பின் மதிப்பு (Dignity of labour)க்கு எடுத்துக் காட்டு?இலக்குமிகடாட்சமும் உண்டு என்பதும் நம்பிக்கை.

ஐந்தாம் நாள் கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்க்கும் க. கு. கோதண்டராமன் தங்கள் ஊர் நஞ்சைப் புளியம்பட்டிக்கு இட்டுச் சென்று எங்கட்கு விருந்தளித் தார். இந்தச் சற்பாத்திரம் இன்றும் வாழ்ந்திருப்பதைக் கண்டு நமக்குப் பெருமை அளிக்கின்றது. கம்பன் விழா நடைபெறும் பல இடங்கட்கும் சென்று சொல் விருந்து அளித்து வருகின்றார் இப்பெருமகனார்.திரு ராஜம் முதலி யோர் விடைபெற்றுச் சென்னை திரும்பினர். கம்பன் அடிப்பொடி அவர்கள் திருச்செங்கோட்டு மலையேறிப் பார்க்க வேண்டும் என்ற தம் விருப்பம் தெரிவித்தார்கள். அங்ஙனமே திருச்செங்கோடு செல்வதற்கும், மீண்டும்

சங்ககிரி இருப்பூர்தி நிலையத்தில் எங்களை விடுவதற்கும் கார் ஏற்பாடு செய்தார் திரு கோதண்டராமன். நாங்கள் திருச்செங்கோடு வந்தபோது அந்த ஊரில் மாரியம்மன் திருவிழா நடைபெற்றுக்கொண்டிருந்தது. எங்குப் பார்த்தாலும் பெருங்கூட்டம். கோடைக்காலத்தில் சேலம் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பல ஊர்களில் மாரியம்மன் திருவிழா வழக்கமாக நடைபெற்று வருகின்றது. வானம் பார்த்த பூமிக்குரிய வேளாண்மைப் பெருங்குடி மக்கள் மாரியம்மனை மழைக் கடவுளாகக் கருதி வழிபடுகின்றனர் என்பது அறியத் தக்கது.

திருச்செங்கோட்டு மலை சற்றுச் செங்குத்தானது ஏறுவது கடினம். முழங்கால், இடுப்பு வலி தாங்க முடியாது. எனக்கு மூச்சு வாங்கிற்று; மிகவும் களைத்துப் போனேன். அமிர்தலிங்கம் ஒருவாறு சமாளித்துக்கொண்டார். இளைஞரல்லவா? கம்பன் அடிப்பொடி சளைக்காமல் ஏறினாலும் அவருக்கு மேல் மூச்சு-கீழ்மூச்சு வாங்கத்தான் செய்தது. நான் தான் நொண்டிமாடுபோல் பின் தங்கினவனாக வந்தேன். படிகளும் சரியாக இல்லை. ஒரு வழியாக மலை உச்சியை அடைந்து விட்டோம். சிவபெருமானையும் முருகனையும் சேவித்தோம். முருகனைச் சேவித்த போது,

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
 பாதங்கள்; மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனும்
 நாமம்கண் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
 தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
 கோடன் மயூரமுமே.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
 வெற்பனைச் செஞ்சுடர்வேல்

வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே[7]

என்ற பாடல்கள் சிந்தையில் குமிழியிட்டன.

சேவை முடிந்த பிறகு கம்பன் அடிப்பொடி கல்வெட்டுகள் இங்கு உள்ளனவா என்று தேடத்தொடங்கி விட்டார். 'கல் சொல்லும் கதை'யை எழுதுகின்றவரல்லவா? மாலை ஐந்தரை மணிக்குக் கீழே வந்து விட்டோம். காஃபி அருந்தக்கூட நேரமின்றி உடனே கார்மூலம் சங்ககிரி நிலையம் வந்து இருப்பூர்தி வண்டி மூலம் ஈரோடு வந்து சேர்ந்தோம். நிலையத்திலேயே சிற்றுண்டி கொண்டு திருச்சி போகும் வண்டியிலேறிக் கொண்டோம். வண்டி நள்ளிரவில் திருச்சி வந்தடைந்தது. திருச்சியிலிருந்து வண்டியேறிக் காலையில் காரைக்குடி வந்தடைந்தோம். கம்பனடிப் பொடியுடன் பயணம் செய்வதில் ஒரு தனி மகிழ்ச்சி. சதா இலக்கிய விருந்து அளித்துக் கொண்டே இருப்பார். இத்தகைய பெருமகனார் இன்று நம்மிடையே இல்லை; ஐந்தாண்டுகட்கு முன்பே (28-7-1982) திருநாடு அலங்கரித்து விட்டார்.[8] நாட்டுப் பற்று, காந்தி நெறி, தமிழ்ப் பற்று, கம்பனிடத்து எல்லையற்ற ஈடுபாடு இவையெல்லாம் கலந்த ஒரு தனி மனிதர்; இவர் ஓர் அற்புதப் பிறவி என்றே கருத வேண்டும். இந்தப் பெருமகனார் என் உள்ளத்தில் நீங்காது வாழ்கின்றான்.

---

7. கந்தர் அலங்காரம்—70, 72
8. பிறந்த நாள் 6-6-1908

## 49. காரைக்குடியில் பதவி விலகல்

1960-ஜூலை 3-ஆம் நாள் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் நியமனம் பெற்றதாகத் தந்தி வந்தது; மறுநாள் நியமன ஆணையே வந்து விட்டது. முன்னமேயே எதிர்பார்த்திருந்ததால் என் மகிழ்ச்சி பெருகவில்லை. 5-ஆம் நாள் இரண்டாண்டுகள் விடுமுறையும் தொடர்புரிமை (Lien) யும் தருமாறு விண்ணப்பித்தேன் நிர்வாகத்திற்கு. தாளாளரையும் கண்டு பேசினேன். அவரிடம் ''நான் திருப்பதி போவது பிஎச். டி. பட்டம் பெறுவதற்காக; தமிழகத்தில், பல்கலைக் கழகத்தில் என்னை அப்பட்டத்திற்குப் பதிவு செய்ய மறுத்து விட்டனர்; விதிகளை வைத்துக் கொண்டு விளையாடுகின்றனர். அது என் தலைவிதியாகி இந்நிலைக்குத் தள்ளப் பெற்றுள்ளேன். தயவு செய்து என் வேண்டுகோளை நல்க வேண்டும். ஜூலை 31-ஆம் நாள் புறப்படுமாறு என்னைப் பொறுப்பிலிருந்து கழற்றிவிட வேண்டும்.'' என்று கேட்டேன். அவரும் என் வேண்டுகோளை ஒப்புக் கொண்டு அவ்வாறே செய்வதாக வாக்களித்தார். காரைக்குடியில்பேராசிரியர்சம்பளத்திட்டம்215-300-15-20-500; திருப்பதியில் நான் ஏற்றுக் கொள்ளப் போகும் பணியின் சம்பளத் திட்டம் (Lecturer scale) 250—25—500. திருப்பதி செல்வது ஊதியத்தைக் கருதி அல்ல. (1) பிஎச். டி. பட்டம் பெறுதல் (2) தமிழக அரசின் பிறமாநிலங்களில் தமிழை வளர்க்க மானியம் வழங்குதல் என்ற கொள்கையின் அடிப்படையில் மானியம் பெற்று தமிழ் முதுகலை, பிஎச். டி பட்டங்கள் பெறும் வாய்ப்புகளை ஏற்படுத்துதல்—என்ற இரு நோக்கங்களே என் மனத்திலிருந்தன. 'பைந்தமிழ்ப் பின் சென்ற பசுங்கொண்டலின்'

திருவருள் இதற்கு உதவும் என்ற நம்பிக்கையே எனக்கு ஒருவித உந்துவிசையை நல்கியது.

ஒரு சமயம் சிறந்த வழக்கறிஞரும் வடமொழி அறிஞரும் பேராசிரியர் திருவேங்கடாசாரியாரின் திருத் தந்தையாருமான திரு. சுந்தராச்சாரியார் காரைக் குடிக்கு வருகை புரிந்து சில நாட்கள் தங்கியிருந்தார். இரண்டு மூன்று தடவை அவரைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருந்தேன். இந்தச் சந்திப்புகளில் அவர் என் திறமை, நோக்கம், ஆய்வு மனப்பான்மை, ஆய்வில் பேரவா—இவற்றையெல்லாம் அளந்து விட்டார். ஒரு நாள் சொன்னார்; "நீங்கள் பல்கலைக் கழக வாழ்க்கையை விரும்புகின்றீர்கள்; என் மகன் கல்லூரியில் முதல்வராக வர விரும்புகின்றான். வேங்கடவன் அருளால் உங்கள் விருப் பங்கள் நிறைவேறும்" என்றார். இந்த வாழ்த்து உபநிடத முனிவர் வாக்கியம்போல் பலன் அளித்தது. நான் 1960-ஆகஸ்டு முதல் திருப்பதிப் பல்கலைக் கழகத்தில் பணியில் அமர்ந்தேன். திருவேங்கடாச்சாரி 1967-முதல் காரைக் குடியிலேயே முதல்வராக உயர்ந்தார். நாங்கள் இருவரும் மானிடர் எவர் உதவியுமின்றி இறையருளின் துணை கொண்டு எங்கள் உழைப்பினால் உயர்ந்தோம். ஆனால் என் உயர்வில் ஏழுமலையான் என்னைக் கசக்கிப் பிழிந்ததை யார் அறிவார்?

எனக்குப் பதவி வந்ததைக் கண்டு அதிகமாக மகிழ்ந்தவர் திருவேங்கடாச்சாரிதான். ஆணை வந்த அன்று அப்படியே என்னைக் கட்டித் தழுவிக் கொண்டார். ஏனைய ஆசிரியர்கள் கைகுலுக்கினதோடு சரி. முதல்வர் முதலியாரும் உண்மையான மகிழ்ச்சி தெரிவித்தார். என் மாணாகர்கள் பெருமகிழ்வு எய்தினர். சென்னை மயிலை மாமுனிவர் பன்மொழிப் புலவர் வே. வேங்கடராஜுலு ரெட்டியாரிடமிருந்து வாழ்த்துச் செய்தி வந்தது. சா.க. வுக்கு நான் காரைக் குடியை விட்டுப் போதல் விருப்பம் இல்லை. பிஎச்.டி. பட்டம் பெறுவதில் என் பேரவாவைக்

கண்டு என் பிரிவை வாழ்த்தினார். இவர் ஒருவரிடமிருந்து பெற்ற ஆசிதான் 100க்கு 100விழுக்காடு உண்மையானது என்பதை அறிவேன் தமிழ்க்கடல் ராய.சொ.வும் உள்ளன்புடன் வாழ்த்தினார்கள்.

என் அன்னையார் மறைந்து ஓராண்டுக்கு மேல் (1 ஆண்டு 7 திங்கள்) ஆகின்றது. என் மனைவிக்கு வீட்டில் யாரும் பெண் துணையாக அமையவில்லை. நான் திருப்பதிப் பணியை ஏற்றல் அவளுக்குச் சிறிதும் உடன்பாடு இல்லை. முதல் மகன் இராமலிங்கம் 6-ஆம் வகுப்பிலும் (முதல் படிவம்), இரண்டாவது மகன் இரண்டாம் வகுப்பிலும் படித்து வந்தனர். இந்த வகுப்புகளில் திருப்பதியில் படிக்க வாய்ப்பு இல்லை. ஊதியத்திலோ ஏற்றம் இல்லை. செலவோ இரட்டிப்பு. எனக்கும் ஒருவித மயக்கம் உண்டாகிவிட்டது; மனக் குழப்பம், மனத்தடுமாற்றம். திருப்பதி அழைப்பு ஏழுமலையானின் அழைப்பாகவே கருதினேன். எப்படியும் என் மனைவியைச் சரிபடுத்த வேண்டுமே. என்ன செய்வது? அழைப்பை விடுத்த ஏழுமலையான்தான் எனக்கு வழியும் காட்ட வேண்டும்.

பன்மொழிப் புலவர் வேங்கடராஜுலு ரெட்டியாருக்கு நிலையை விளக்கி எழுதினேன். திருப்பதியில் எப்படியும் போய்ச் சேர்ந்து விடவேண்டும். பல்கலைக் கழக வேலை கிடைத்தற்கரிய பேறு என்று எனக்கு உருக்கமானமுறையில் ஒரு கடிதம் எழுதுமாறு கேட்டேன். அவரும் அவ்வாறே கடிதம் எழுதினார். அதை என் மனைவிக்குக் காட்டிப் படிக்கச் செய்தேன், எனக்குச் செட்டிநாட்டுப் பகுதிகளில் பலரைத் தெரியுமாயினும், இந்த விஷயத்திற்கு அவர்கள் பயன்படார். வாணிகத் துறையில் ரெங்கூன்ஹால் முதலியார் சகோதரர்கள், நகைக்கடை தனுஷ்கோடி செட்டியார் இவர்கள் என் குடும்பத்திற்கு மிகவும் வேண்டியவர்களாயினும் இதில் தலையிட்டு ஏதாவது சமாதானம் செய்வார்கள் என்பதிலும்

நம்பிக்கை இல்லை. நல்ல சோதிடர் ஒருவரை அணுகிப் பலன் கேட்கலாம் என்று எனக்குத் தோன்றியது. நகைக்கடை M. S. இராசமாணிக்கம் செட்டியார் மூலம் ஏற்பாடு செய்தேன். முத்துப்பட்டினத்திலுள்ள அவர் வீட்டுக்குச் சென்றோம்; சோதிடர் அங்கு வந்தார். நன்றாக ஆய்ந்து சொன்னார். திருப்பதிப் பணியை ஒப்புக் கொள்வது சிறந்தது. எதிர்கால வாழ்க்கை பிரகாசமாக அமையும். சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் அந்த இடம் சிறப்பாக இருக்கும். தவிர, புண்ணிய க்ஷேத்திரத்தில் வாழ்வதே ஒரு சிறந்த பேறு என்றெல்லாம் பலன் சொன்னார். என் மனைவியின் மனம் ஒருவழியாகச் சரிப்பட்டுவிடும் என்ற குறிப்பு அவள் முகத்தில் தெரிந்தது. இல்லத்திற்குத் திரும்பியதும் அவள் மனம் இரங்கியது. இராமலிங்கம் எஸ். எஸ். எல். சி தாண்டும்வரைக்காரைக்குடியிலேயேகுடும்பம்இருக்கட்டும். அதன்பிறகு இறைவனே வழிகாட்டுவான் என்ற முடிவுக்கு வந்தோம். நானும் செப்டம்பர் (15 நாட்கள்), டிசம்பர்-சனவரி (15 நாட்கள்), ஏப்ரல்-மே-ஜூன் (2½ மாதம்) காரைக் குடியில்தான் இருப்பேன் என்ற நிலையையும் அவளுக்கு எடுத்துச் சொன்னேன். ஒருவிதமாக ஒப்புக் கொண்டாள்.

பழ. கோ. நாகப்பச் செட்டியார் கடையில் மாதந்தோறும் என் மகன் கொண்டு வரும் சீட்டுப்படிமளிகை சாமான்கள் அனுப்புமாறும், இவை தவிர ரூ. 250/-மாதந்தோறும் தருமாறும், மளிகைச் சாமான்கள் அனுப்பிய கணக்கு மாதாமாதம் தீர்க்கப்பெறும் என்றும் சொல்லி ஏற்பாடு செய்து கொண்டேன். ரெங்கூன் ஹால் கே. சுப்பிரமணிய முதலியாரிடமும் தேவைப்பட்டால் பண உதவி செய்யுமாறும், M. S. இராசமாணிக்கம் செட்டியாரிடமும் ஏதாவது உதவி தேவைப்பட்டால் செய்யுமாறும் கேட்டுக்கொண்டேன். நாடோறும் பிள்ளைகளின் தனிப்பயிற்சிக்காக இல்லத்திற்குவரும் A. இராமசாமி

அய்யரிடமும் என் குடும்பத்தைக் கவனிக்குமாறு சொன்னேன். இவை எல்லாம் நான் இல்லாவிட்டாலும் சரியாக நடைபெறும். குடும்பத்தில் நான் இல்லாத குறை ஒன்றைத் தவிர, ஏனையவை தவறாது நடைபெறும் என்பதற்குச் சிறிதும் ஐயம் இல்லை.

இதற்கிடையில் திருவேங்கடாச்சாரி ஓரிரவு பிரிவுபசார விருந்து அளித்தார். எங்கள் கல்லூரித் தோழப் பேராசிரியர்களில் இவர் ஒருவரே நன்கு படித்த பேராசிரியர்; நாலும் தெரிந்தவர். ஆய்வில் பெருவிருப்பம் உடையவர்; அறிவு வேட்கை இவர்தம் துடிப்பு. என்னுடைய இயல்பும் இதுவே. இதற்கு அடுத்து ஓரளவு அறிவு நாட்டம் உள்ளவர் திரு V. N. சுப்பிரமணியம் அவர்கள்; சதா ஆராய்ச்சி ஆராய்ச்சி என்று பேசிக் கொண்டிருப்பாரேயன்றி உருப்படியாக ஒன்றும் செய்வதில்லை. ஏனைய ஆசிரியர்கள் வகுப்பில் பாடங் கற்பிப்பதற்கு வேண்டியவற்றை மட்டிலும்தான் சிந்திப்பவர்கள். அதற்குமேல் இவர்கள் அறிவு நாட்டம் உயர்வதில்லை. திருவேங்கடாச்சாரி பல்லாண்டுகள், சென்னை தியாகராய நகர் இராம கிருஷ்ணர் உயர்நிலைப்பள்ளியில் வரலாற்று ஆசிரியராகப் பணியாற்றியவர். ஆனால், உண்மையில் ஒரு வரலாற்றுப் பேராசிரியரே. முதன்முதலில் 'வரலாறு, புவியியல்' இந்த இரண்டு பாடங்களுக்குப் பதிலாக 'சமூகஇயல்' என்ற புதிய பாடம் உயர்நிலைப் பள்ளிப் பாடத் திட்டத்தில் இடம்பெற்ற காலத்தில் ஒன்று முதல் ஆறு பாரங்களுக்கு சமூக இயல் பாடநூல்களை எழுதிப் பெரும் புகழ் பெற்றவர். முதன்முதலாக இப் புதிய பாடம் பாடத் திட்டத்தில் இடம்பெற்ற காலத்தில் இது வாதத்திற்கு இடம் தந்தது. பல பேரறிஞர்கள் இது தேவை இல்லாத, கவைக்குதவாத பாடம் என்று வாதித்தனர்; எதிர்த்தனர்; கண்டனம் தெரிவித்தனர். கல்கிஆசிரியர்ரா. கிருஷ்ணமூர்த்தி நகைச்சுவைதருமாறு கிண்டலாக எழுதியது (1945-46) இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளது. அவர் எழுதியது: மீன்பிடிக்கும்

தொழில் நடைபெறும் இடங்கள்; சென்னை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, இராமேசுவரம்—இது வரலாறு. சென்னை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, இராமேசுவரம் — இந்த இடங்களில் மீன் பிடிக்கும் தொழில் நடைபெறுகின்றது. —இது சமூக இயல்.

அந்தக் காலத்தில் வரலாற்றுப் பாடம் அரச பரம்பரையைப் பற்றிய பாடமாகவே அமைந்திருந்தது. ஆட்சியில்ஏற்பட்ட நன்மைகள் என்பதுபற்றி ஒரு சிறு பத்தியேஇருக்கும். நாட்டில் ஏற்பட்ட கலைவளர்ச்சி, கல்வி வளர்ச்சி, சமயங்கள் வளர்ந்த வகை, பக்தி இயக்கத்தால் ஏற்பட்ட புரட்சி, தனித்தமிழ் இயக்கம், தமிழிசை வளர்ச்சி போன்ற செயல்கள் வரலாற்றுப் பாடத்தில் இடம் பெறவில்லை. விளைபொருள், கைத்தொழில்கள், ஆலைகள்—முதலிய விவரங்களும் இடம் பெறவில்லை. இவை யாவும் இணைந்து ஒருவாறு முழுமையாக்கப்பெற்ற பாடத்திட்டமே சமூக இயல் பற்றிய பாடத்திட்டம். பெரும்பான்மையான ஆசிரியர்கட்கு பொருளறிவு இல்லாததால், அவர்கட்கும் பயன்படும் வகையில் இவ்வரிசை நூல்களைச் சற்று விரிவாகவே எழுதி வெளியிட்டு அரிய கல்விப்பணியினை ஆற்றினார் திருவேங்கடாச்சாரி. நான் துறையூர் உயர்நிலைப்பள்ளி யில் பணியாற்றியபொழுது சமூக இயலைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இவர் நூல்களையே விரும்பியதால் இவையே பல்லாண்டுகள் பாடநூல்களாக வைத்திருந்தோம்.

காரைக்குடியில் பணியாற்றிய காலத்தில் நான் எழுத்துப் பணியில் மும்முரமாக இறங்கிய காலத்தில் என் கைப்படியைக் கவனிப்பார். சில இடங்களில் திருத்தம் செய்வார்; நகாஸ் வேலைபோல் அது அமையும். ஓய்வு நேரங்களில் எல்லாம் கல்வி பற்றியே உரையாடுவோம். அறிஞர்கள் கல்வி பற்றிக் கூறியுள்ள கருத்துக்களைச் சிந்திப் போம். அவை வகுப்பறையில் பயன்படும் முறையைப் பற்றிச் சிந்திப்போம். கல்வி உளவியல் பற்றி எழுதும் போது திரு V. N. சுப்பிரமணியமும் உதவுவார். நான்

பல ஆங்கில நூலாசிரியர்கள் தம் நூல்களில் தெரிவித்த உயர் கருத்துகளைத் தமிழில் அமைத்துக் காட்டும்போதும், நான் ஆங்கில நூல்களிலிருந்து திரட்டிய அறிவைப் பொருத்தமான இடத்தில் அமைத்துக் காட்டும்போதும் இருவருமே என் திறனைக் கண்டு மகிழ்ச்சியுடன் பாராட்டு வார்கள். ''நீங்கள் பல்கலைக் கழகத்தில் இருக்கும் சூழ்நிலை ஏற்பட்டால் சிறப்புடன் திகழ வழியமையும்'' என்று அடிக்கடிச்சொல்வார்கள். இறையருளால் திருப்பதி யில் அந்த வாய்ப்பு ஏற்பட்டது. நான்காண்டுக்கு முன்னர் (1985) திரு V. N. சுப்பிரமணியம் இறைவன் திருவடி சேர்ந்தார்.

நான் காரைக்குடிப்பணியைத் துறத்தல் உறுதியா யிற்று. ஒரு மாதப் பழக்கந்தான். தமிழ்த்துறை மாணாக் கர்கள் முதல்வர் தலைமையில் ஒரு சிறு விழா அமைத்து அதில் வழியனுப்புப் பாடல்கள் பாடித் தம் மகிழ்ச்சியைப் புலப்படுத்திக் கொண்டார்கள். அந்த ஆண்டு மாணவராக இருந்த ரெ. சிங்கார வேலன் ஒரு சிறந்த கவிஞர்; விரைந்து கவி இயற்றும் வேந்து.

ஜூலை 30தேதி முற்பகல் 11-மணிக்கு இவ்விழா நடை பெற்றது. பிற்பகல் எல்லோரிடமும் பிரியாவிடை பெற்றேன். இல்லத்தில் பெட்டி, படுக்கைகளை இரண்டு நாட்கள் முன்னதாகவே தயாரில் வைத்திருந்தேன். இங்கிருந்தே சான்றிதழ்களின் நகல்கள் (அசல்களுடன்) சேரும் கடிதம் முதலியவற்றைத் தயாரித்து வைத்திருந் தேன். இறைவன் திருவருளை நினைந்த வண்ணம் ஒரு குதிரைவண்டி அமர்த்திக் கொண்டு இருப்பூர்தி நிலையம் வந்து சேர்ந்தேன். இராமேஸ்வரம் விரைவு வண்டியில் ஏறி விழுப்புரம் வந்து அடைந்தேன். அதிகாலையில் புறப்படும் வண்டி புறப்பட்டு விட்டதால் 10-மணிவண்டியில் புறப்பட வேண்டியதாயிற்று. அங்கிருந்து விழுப்புரம்-காட்டுப்பாடி பாசஞ்சரில் ஏறி இரவு காட்டுப்பாடியை அடைந்தேன். அங்கிருந்து வண்டி மாறி அதிகாலை 2-30 மணி சுமாருக் குத் திருப்பதி வந்தடைந்தேன்.

# பின்னிணைப்பு—1

## குமிழியில் எழுந்த தமிழ் நூல்கள்


அருணகிரிநாதர் : கந்தர் அலங்காரம் (கழகம்)

ஆழ்வார்கள் : நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் (கி. வேங்கடசாமி ரெட்டியார் பதிப்பு)

கம்பர் : கம்பராமாயணம் உரை (வை. மு. கோ. பதிப்பு)

கவிமணி : மலரும் மாலையும் (புதுமைப் பதிப்பகம், காரைக்குடி)

சமண முனிவர்கள் : நாலடியார் (வை. மு. கோ. உரை பதிப்பு)

சுப்புரெட்டியார், ந : தமிழ் பயிற்றும் முறை-மூன்றாம் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

சுப்புரெட்டியார், ந : அறிவியல் பயிற்றும் முறை மூன்றாம் பதிப்பு—பழநியப்பா பிரதர்ஸ், சென்னை-14.

சுப்புரெட்டியார், ந : கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி (செல்விப் பதிப்பகம், காரைக்குடி)

திருவள்ளுவர் : திருக்குறள்—பரிமேலழகர் உரை (கழகம்)

முருகப்பா, சொ : கம்பர் காவியம்—அதன் நிலை விளக்கம் (ஆசிரியரே வெளியிட்டது)

திருமூலர் : திருமந்திரம் (ஸ்ரீ குமரகுருபரன், சங்கம், ஸ்ரீவைகுண்டம்)

தொல்காப்பியர் : தொல்காப்பியம்— எழுத்ததிகாரம்— நச்சினார்க்கினியர் உரை (கழகம்)

பட்டினத்தடிகள் : பட்டினத்துப் பிள்ளையார் பாடல்கள் (மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்)

பவணந்தி முனிவர் : நன்னூல் காண்டிகை உரை (ஆறுமுக நாவலர் பதிப்பு)

பாரதிதாசன் : பாரதிதாசன் கவிதைகள் முதற்தொகுதி (செந்தமிழ் நிலையம், இராமச்சந்திரபுரம்)

பாரதியார் : பாரதியார் கவிதைகள் (S. R. சுப்பிரமணியபிள்ளை, 6, பிலிப்ஸ் தெரு, சென்னை-1)

பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் : அஷ்டப் பிரபந்தம் (வை. மு. கோ. பதிப்பு)

முத்துசிவம், ஆ : கவிதை

முத்துசிவம், ஆ : குற்றாலக்குறவஞ்சி (பதிப்பு)

வில்லிபுத்தூரார் : வில்லிபாரதம் (மர்ரே ராஜம் பதிப்பு)

## ஆங்கில நூல்கள்

Nilakanta sastri K. A : The Early South Indian History

Srinivasachari C. S : Indian History

பின்னிணைப்பு—2

# பொருட்குறிப்பு அடைவு

(எண், பக்கஎண்)


அ

அகத்துறைச் சங்கப் பாடல்கள் 301

அங்கதன் 86

அங்கர் கோமான் 254

அசமந்தம் 286

அசரீரி 254, 263

அசுவசேனன் 268

அசுவத்தாமன் 269, 325

அஞ்சரீகம் 253

அணுவியல் 355

அணுவின் ஆக்கம் 140

அண்ணா 126, 127

அண்ணாதுரை 122, 125

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 7, 340, 347

அண்ணாமலைப்பல்கலைக் கழக வளாகம் 364

அநுமக்கொடி 261

அநுமன் 300

அபாண்ட அத்திரம் 325

அபிசீனியா பழ. நாச்சியப்பன் 309

அபிமன்யூ 325

அப்பாதுரைப் பிள்ளை, கா 353

அப்பர்சுவாமி 235

அமலை 95, 96

அமரர் கோமான் 273

அமிர்தலிங்கம், பூ 17,58, 229, 403

அமிர்தவல்லி உணவு விடுதி 366

அம்பறாத் தூணி 91

அய்யாத்துரை ஜேசுதாசன் 6, 223, 322, 327

அரங்கசாமி அய்யங்கார், K. 341, 342

அரங்கசாமி ரெட்டியார், P. (வக்கீல்) 54, 55, 141, 209, 211

அரங்கராசன், சி. 399

அரங்கராசன், S (நீதிபதி) 309, 322, 327

அரிகிருட்டிணன் செட்டியார் 322, 327

அரிஸ்டாட்டில் 156

அருக்கன் குமரன் 245

அருச்சுனன் 200, 261
அருணகிரி, அ. 229
அருணகிரியார் 390
அருணாசலக்கவுண்டர், கு. 384, 403
அருப்புக்கோட்டை 295
அரும் பொருள் காட்சி யகம் 160
அருள் நெறித் திருக் கூட்டம் 130
அருள் நெறித் திரு (ட்டு)க் கூட்டம் 131
அரை உயிர் 289
அலெக்ஸாண்டர் ஞான முத்து 283, 322, 327, 339, 351
அவதூறு செய்தி 330
அவினாசிலிங்கம் செட்டி யார் 164, 310, 311
அழகப்பா கல்லூரி 304
அழகப்பர், டாக்டர் 169
அழகப்பர், வள்ளல் 7, 8, 30, 107, 138, 144, 185
அழகப்பர் ஆசிரியர் கல்லூரி 6
அழகப்பர் தொடக்க நிலைப்பள்ளி 142
அழகப்பா பல்கலைக் கழகம் 154
அழகப்பர் மாண்டிச் சாரிப் பள்ளி 143
அழகப்பர் மாதிரி உயர் நிலைப்பள்ளி 139
அழகப்பர் முன்னேற் பாட்டுப் பள்ளி 142
அழகர் கலம்பகம் 374
அறக்கடவுள் 260, 264, 265
அறக்கட்டளை மேலாளர் 227
அறக்களவேள்வி 277
அறப்பெருங் கடவுள் 265
அறிவுக்கடல் 235, 260
அறிவியல் பயிற்றும் முறை 151, 153, 329

ஆ

ஆண்குறி 355
ஆண்டியப்பப் பிள்ளை 75
ஆதிநாதன் 386, 369, 391
ஆதினப்புலவர் 129
ஆநுசங்கிகம் 203, 205
ஆரோக்கியசாமி 208
ஆலத்துடையாம் பட்டி 219
ஆழ்வார் அமுது 116
ஆறுமுகம் பிள்ளை 206, 214, 223
ஆறுமுகம் பிள்ளை, தங்கபஸ்பம் 229
ஆறுமுகம் பிள்ளை, T-V- 310, 384

ஆறுமுக முதலியார், S 352
ஆனந்தபவன் 4
ஆஷாடபூதிகள் 131

இ

இத்தாலிசுதந்திரம் 366
இந்திரன் 269
இந்திர ஜாலங்கள் 327
இந்திரஜித்து 65, 89
இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு 127
இந்து மதாபிமான சங்கம் 105, 108, 235, 244, 252, 304
இரணியூர் 07
இரண்டாம் உலகப் போர் 226
இரத்தினம் S. 350, 361
இராகவாச்சாரி, S. 140, 174
இராசமாணிக்கம் செட்டியார், MS 95, 413
இராச கோபால அய்யர் 368
இராசகோபாலன், C 8
இராமகாதை 59, 60, 63
இராமகிருஷ்ணன், டாக்டர் 47, 221, 277, 311
இராமகிருஷ்ணன் 103, 105, 136
இராமகிருஷ்ண தபோவனம் 306
இராமச்சந்திர அய்யர், K. 344
இராமச்சந்திரம் பிள்ளை 279
இராமசாமி அய்யர், A104, 105
இராமசாமி ரெட்டியார் ஓ. பி 22
இராமாராவ் என். டி. 251
இராகசு 367
இராதாகிருஷ்ணன் எஸ். டாக்டர் 184
இராமன் திருக்கதை 63
இராமகிருஷ்ண பரமஹம்சர் 304
இராமாநுசரின் மறுபிறப்பு 67
இராமேச்சுரம்306, 310, 315
இராஜகுமார் அமிர்தகௌர் 187
இராஜேந்திரப் பிரசாத் பாபு 184
இராமநாதன் 154, 228
இராமநாதபுரம் மாவட்டம் 307
இராமநாதன் செட்டியார் 112
இராமநாதன் செட்டியார் K. V. AL. M 320, 323, 336, 352

இராமலிங்கம், குழந்தை 21, 191, 277
இராமலிங்கம் 45, 99, 105, 135, 220, 311
இராமாயணம் 59
இராமாவதாரம் 60, 61
இராவணன் 65, 301
இராஜா சிதம்பரம் 350
இராஜேசுவரி ஈ. தெ. 107
இலக்கிய சங்கம் 81
இலக்கியப் பதிப்பகம் 17
இலக்குவன் 88, 89
இலங்கைக் காண்டம் 64
இலத்தீன் அகராதி 355
இலிங்கப்புற்று 355
இலுப்பைக்குடி 307
இல்லற நெறி 140, 332
இளையாத்தங்குடி 306, 307

ஈ

ஈசான சிவாச்சாரியார் 236
ஈ. வே. ரா. பெரியார் 97

உ

உச்சிப் பிள்ளையார் கோயில் 47
உதிட்டிரன் 256
உத்தரை 325
உமா மகேசுவர ரெட்டி குடியிருப்பு 43
உமையாள் ஆச்சி 111, 154
உமையாள் இராமநாதன் 228
உமையாள் விடுதி 187
உரகக்கொடியோன் 256
உருமுதனலட்சுமி உயர் நிலைப் பள்ளி 368
உலக ஊழியனார், வீ 140, 310, 347

ஊ

ஊரக்கரை 222

எ

எது மலைப் பயணம் 43
எத்தன் ஏழுமலை 303
எலிக் கூண்டு 333
எழுத்துத் தேர்வு 295

ஏ

ஏகம்பர நாதன் K. 8
ஏழுமலையான் 351

ஒ

ஒக்கூரார் விடுதி 307
ஒண்டவந்த பிடாரிகள் 78

ஓ

ஓந்தி எண்ணெய் 102
ஓமத் தீ 262
ஓவன் 366

ஔ

ஔவை மூதாட்டி 76

க

கச்சியப்பர் 138
கணநாதன் 207, 223, 227, 228, 229
கணபதி 307, 395

கணபதீச்சரம் 171
கணபதியின் இளவல் 279
கணபதி கோயில் 308
கணேசன், சா. 3, 4, 16, 40, 41. 105,107, 118, 129, 166, 234, 304, 310
கணேசப் பெருமான் 123, 169, 226, 333
கண்ணப்பன் 305
கண்ணன் 37, 258, 268
கண்ணன் என் சேவகன் 14
கண்டனூர் 228, 304,
கண்டனூரரார் விடுதி 310
கதிரேசச் செட்டியார், மு (பண்டிதமணி) 56, 107, 129
கந்த புராணப் பாடல் 134
கந்தியார் பிணிப்பு 79
கம்பராமாயணம் 58, 59, 63
கம்பன் அடிப்பொடி 124, 127, 167. 234, 408
கம்பர் பாடல் 95
கம்பர் பெருமான் 59
கம்பன் மணிமண்டபம் 126
கரந்துறை வாழ்க்கை 266
கரன் 65
கருணாகர மேனன், டாக்டர் 8
கருப்பண்ணன் 141
கருப்பையா பிள்ளை 45
கரும் புள்ளிகள் 199
கர்ணன் 251
கர்மயோகி 184
கர்மவீரர் 184
கலப்பு மணம் 362
கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி 233
கலை நிகழ்ச்சிகள் 315
கல்வீரல் 28
கல்கத்தாரசகுல்லா 292
கல்லூரி இல்லம் 209
கல்லூரித் தமிழ்ச்சங்கம் 304
கல்லூரி வளாகம் 116
கவிதையனுபவம் 140, 385
கவிமணி 348
கறுப்பண்ணன் 215,303
கற்பக நிலையம் 126,167
கன்னன் 256,273
கஜேந்திராழ்வான்,247

கா

காகதாளிகநியாயம் 342
காங்கிரஸ் தியாகி 225
காசியாத்திரை 398
காஞ்சிபெரியசுவாமிகள் 306
காடப்பச் செட்டியார்.கா. 111,129
காண்டங்கள் 64
காதல் பாட்டு 243
காதுக்கோளாறு 99,103

காத்தவராய சுவாமியின் கதை, 45
காந்தி கலித்துறை அந்தாதி 243
காந்தி நெறி 49
காந்தி பிள்ளைத்தமிழ் 243,
காந்தி மாளிகை 7
காம நூல் 168
காமம் 302
காமாட்சி அம்மாள் 393
கார்ல் குரூக்ஸ் 157
கால்டுவெல் 26
காளமாமுனிவன் 259
கானாடு காத்தான் 337
கானில் வாழ்நாள் 266

கி

கிப்ளிங் 158
கிரகதோஷம் 193
கிருட்டிணன் ஆலயம் 3
கிருஷ்ண அய்யங்கார் S, 132, 149, 224, 300, 329
கிருஷ்ணசாமி ரெட்டியார் M. 328
கிருஷ்ணசாமி ரெட்டியார் 219, 220
கிருஷ்ணசாமி ரெட்டியார் மு. 396
கிருஷ்ணப்பச் செட்டியார், சு. ராம 11
கிருஷ்ண தேவராயர் 294
கிருஷ்ணன், K.G. 8
கிறிஸ்டோபர் பயிற்சிக் கல்லூரி 6

கீ

கீட்ஸ் 286
கீல்பாட்ரிக 156
கீழ்ப்பார்வை 338
கீற்றுக் கொட்டகைக் கல்லூரி 36

கு

குடிமைப் பயிற்சி 311
குடில் 36
குந்தி 268, 269
குந்திதேவி 266, 269
குப்புசாமி ரெட்டியார் 46
குமரகுருபரர் 290
குமரன் இதழ் 48
குமாரசாமி 378, 381
குமாரசாமி ராஜா, K. 356, 358, 359
குமிழ் சிரிப்பு 241
கும்பகருணன் 65, 301
குருசாமி ரெட்டியார் 30,
குரு—சீடர் உறவு 130
குருட்சேத்திரப் போர் 51
குருதிப்புற்றுநோய் 229
குரு நாடன்தேவி 274
குரோதம் 302
குலோப்ஜாமுன் 83, 292
குழந்தையன் செட்டியார் 116
குழந்தை மருத்துவர்கள் 97

குறள் 277
குறிக்கோள் நிலை 297
குறுப்பால் 304
குளத்து 362, 363
குன்றக்குடி 306
குன்றக்குடி அடிகளார்
128

**கூ**

கூத்த நயினார் S.R.S 384

**கே**

கே.என். மாணவர் விடுதி
188, 189

**கை**

கைகேயி 73

**கொ**

கொப்புடைய நாயகி 4
கொப்புடையம்மன் 335
கொப்புடையம்மன்
கோயில் 335

**கோ**

கோட்டாத்தூர் 293
கோதண்டராமன், க.கு.
407
கோபால கிருஷ்ணய்யர்
98, 100
கோபால கிருஷ்ண
நாயுடு, ஜி.டி. 176
கோபால கிருஷ்ணன் 215,
216, 218, 219
கோபால ரெட்டி, B. 308
கோபி செட்டிப் பாளையம்
403
கோவிந்தசாமி பிள்ளை
129, 130
கோவிந்த ராஜுலு
நாயுடு, S. 356

**கௌ**

கௌமோதகி 249

**ச**

சகாதேவன் 257, 260,
265
சக்தி செட்டியார்,
புதுக்கோட்டை 116
சங்கத்துச் சான்றோர்கள்
111
சங்கர நாராயணன் 378,
381
சங்கர நாராயண சாஸ்திரி
139
சங்கர ராஜு நாயுடு,
எஸ். 310
சங்கல்பசூரியோதயம் 301
சடாயு 65
சட்ட முன் வடிவு 309,
310
சண்முகம், எம்.எஸ் 131
சதானந்தர் 80
சந்தான கிருஷ்ண
நாயுடு, T.P. 353
சமண முனிவர் 318
சமயவானில் துருவ
நட்சத்திரம் 304
சம்பிரதாயம் 267
சம்பந்தப்பெருமானின்
மறுபிறப்பு 131

சரசுவதி 142
சரீர— சரீரி பாவனை 253
சரோஜினி அம்மையார் 133
சனகன் 71
சன்மானம் 207

சா

சா. க. 22, 23, 24, 57, 101, 107, 119, 226, 227, 231, 234, 335, 337, 371, 411
சாமிநாதசர்மா, வெ. 304
சாரநாதன் 365, 366
சார்ங்கம் 249

சிங்கார வேலன் ரெ. 305
சிதம்பரம், இராம 17
சிதம்பரம், மெ. ந. 113
சிதம்பரம் செட்டியார், ராய. 115
சித்தன்னவாசல், 160, 171
சித்பவாநந்த அடிகள் 297, 315, 371
சித்பவாநந்தர், சுவாமி 107
சிந்தாமணிதேஷ்முக் 188, 189
சிவசுப்பிரமணிய அய்யர், 373
சிவதீக்கை 236
சிவாஜிகணேசன் 251
சிறுத்தொண்டர் 171
சின்னசாமி 341
சின்னவீடு 55

சீதாபிராட்டி 303
சீநிவாசன், S, பேராசிரியர் 223, 303
சீநிவாசன், P. V. 224, 294
சீநிவாசன், எஸ். 147
சீநிவாச அய்யர் S 146, 147
சீநிவாசராகவன், அ. 354, 386
சீநிவாசவரதன். கி. 242
சீனிவாச அய்யர், K. R. 9,10
சீனிவாச அய்யங்கார் K. 12
சீனிவாசாச்சாரியார், C. S. 26

'சுடர்' 232
சுந்தராச்சாரியார் 411
சுந்தர ராஜன் 54
சுப்பிரமணியம், சி. 320, 321, 350
சுப்பிரமணியம், சி. பா. 282

சுப்பிரமணியம், V. N. 5, 35, 143, 414, 415, 416
சுப்பிரமணியம் V. V. 4
சுப்பிரமணிய அய்யர், டாக்டர், 99, 376, 394
சுப்பிரமணிய அய்யர் டாக்டர் (புது நகர்) 275
சுப்பிரமணிய கவுண்டர், 403
சுப்பிரமணிய பாரதியார் 105
சுப்பிரமணிய பிள்ளை S R. 384, 385
சுப்பிரமணியமுதலியார், 240, 396
சுப்புரெட்டியார் ந. 233
சுப்பையா பிள்ளை வ. 385
சுவாமி நாதன் 19

சூ

சூதக ஓய்வு 355
சூதகம் 355
சூரிய நாராயணா தென்னட்டி 8
சூரிய மூர்த்தி 373
சூரைக்குடி 306, 307, 309

செ

செங்கையா பிள்ளை-385
செட்டியார் ஏ. சி, டாக்டர் 107, 232, 348
செட்டியார், ஏ. கே. 42
செட்டியார் வி. ஆர். எம். 234
செருகுகவிகள் 63

சே

சேது பிள்ளை, ரா. பி. 357

ஞா

ஞானசம்பந்தம், அ. ச. 175
ஞான சாகரம் 235
ஞானியார் குடும்பம் 393

ட

டவாலி 366
டாக்டர் வள்ளல் 310, 320
டார்வின் 325
டி. கே. சி. 68, 70, 73, 80, 81, 234
டி. கே. சியின் மருத்துவம் 76

த

தகுந்த சூழ்நிலை 162
தங்கம் 19
தந்தை பெரியார் 50, 129, 361
தபோவனம் 297
தமிழன்னைத் திருக் கோவில் 126,
தமிழ்நாடு 232
தமிழ்க்கடல் ராய. சொ. 234, 412
தமிழ் பயிற்றும்முறை 16, 284, 329
தம்பி, ஏ. என் 39, 40
தருமசங்கடம் 268

தருமபுர ஆதீனம் 128
தருமன் 265
தனிநாயக அடிகள் 354
தனுஷ்கோடி செட்டியார், சிவ. ராம 192, 200, 412

**தா**

தாடகை 65
'தாடியில்லாத் தாகூர்' 68
தாணு அம்மாள் 281
தாரை 107
தாளாளர் செட்டியார் 323
தாஜ்மகால் விடுதி 188

**தி**

தியாகராசர் கல்லூரி 146
தியாகராசச் செட்டியார், தொழிலதிபர் 107
திரிவிக்கிரமாவதாரம் 251
திருக்கடல் மல்லை 132
திருச்செங்காட்டங்குடி 171
திருச்செங்கோட்டுமலை 408
திருத் தருமபுரம் 237
திரு நல்லூர் 237
திருநாவுக்கரசு செட்டியார் 114, 245, 248, 250, 254, 255, 274
திருப்பதி செட்டியார் 115
திருப்பத்தூர் 306
திருப்பாராய்த்துறை 276, 297, 298, 306, 305
திருப்பூர் நாராயணன் 112
திருப்பெருந்துறை 237
'திருமாளிகை' 36
திருவண்ணாமலை ஆதினம் 127
திருவாழி—திருச்சங்கு 247
திரு.வி. க. 48, 106
திருவெஃகா 132
திருவேட்புடையார் 171
தினமணிக்கதிர் 232

**து**

தும்பிக்கையான் 308
தும்பிக்கையாழ்வார் 308
துரை அரங்கசாமி, மொ.அ. 356
துரைக்கண்ணு முதலியார் P. 132, 227, 290, 294, 305, 310, 323, 377
துரைசாமி ரெட்டியார் 47
துரோணன் 37

**தூ**

தூத்துக்குடி 369

**தெ**

தெ. பொ. மீ. 283, 348
தெய்விகத்திட்டம் 347
தென்கலையார் 131

**தே**

தேசிகன், க. 17, 242, 284

தேசிகவிநாயகம் பிள்ளை, கவிமணி 175

தேவகோட்டை 97

தேவராயன் செட்டியார் 116

**தொ**

தொல்காப்பியம் 289

தொழுநோயாளர்கள் 278

**ந**

நகராண்மைக் கழக ஆணையர் 207

நகுலன் 260, 261

நகைக்கடைக் குப்பை 200

நச்சினார்க்கினியர் 2, 161

நச்சுப் பொய்கை 260

நடமாடும் கணேசப் பெருமான் 124

நடராசன் 367, 368

நடராசன். அ. லெ. 18

நடராசன், B, டாக்டர். 129

நடேசன் 215

நம்மாழ்வாரின் தத்துவம் 203

நரவேள்வி 186

நல்லப்பரெட்டியார், குணம் 46, 136

நல்லுசாமி செட்டியார் 11, 12

நவசக்தி இதழ் 48

நவநீதகிருட்டிணன், அ.க. 384, 385, 392

நவரத்தினங்கள் 193

நன்னூலார் 158

நன்னூல் 2, 162

**நா**

நாகப்பச்செட்டியார் பழ.கோ. 413

நாச்சியப்பன், பழ 275

நாடாளுமன்றம் 314

நாராயண அய்யர், P.K (டாக்டர்) 99, 101, 384

நாராயணஅய்யங்கார், K. 309, 229

நாராயணசாமி பிள்ளை, T.M. 123, 340, 341, 356, 357, 358

நாராயணசாமி நாயுடு 369

நாராயண தம்பி, ஏ—8

நாராயணமேனன், ஐ.8

நாராயணன், H 226

நாராயணன் K 132, 149

நாராயணன் P,K (டாக்டர்) 99

நாராயணன், சொ. 115

நாலடியார் 10, 36

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் 284

நாவிதர் 225

நீ

நீச்சல்குளம் 317
நீலகண்ட சாஸ்திரி, K.A. 26
நீலகண்டன் T.V. 310, 311
நீலா 143
நீலாவதி அம்மையார் 365

நு

நுகர்வினை 282

நூ

நூற்பு வேள்வி 22

நே

நேதாஜி படை (INO), 112, 309
நேதாஜிசுபாஸ் சந்திரபோஸ் 309
நேமம் 37

ப

பகலவன் மைந்தன் 254
பக்தவத்சலம் 352
பங்கு சந்தை 188
பசும் பொன்முத்து ராமலிங்க தேவர் மாவட்டம் 307
பஞ்சாயுதங்கள் 247
படலங்கள் 64
படிப்பு 163
பட்டினத்தார் 397
பண்ணையார் வீடு 393
பண்டமாற்று 274
பத்மநாபன் 152, 153
பதுமநாபன், இரா 242
பதுமாவதி E.T 378
பத்தர் 209
பயிற்சிக் கல்லூரிகள் 312
பயிற்சிக்கல்லூரி ஆசிரியர்கள் 34
பயிற்சிக்கல்லூரி நூலகம் 31
பயிற்சிக்கல்லூரியின் பொறுப்பு 34
பரந்தாமன் 24
பரஞானம் 132, 133
பரஞ்சோதி 171
பரபக்தி 132, 133
பரமசிவானந்தம், அ. மு. 175
பரமபக்தி 133
பரவாசுதேவன் 248
பராசரபட்டர் 222
பரிமணம் து. மா. 285
பரீட்சித்து 325
பவணந்தி முனிவர் 2
பழநியப்ப சகோதரர்கள். 152
பழநியப்பன், சாமி 42
பழவினை 318
பளிங்குப் பாறைகள் 380, 381
பஜனையில் கோமாளி 150
பன்றிமலை சுவாமிகள் 349

**பா**

பாடல்கள் 66
பாட ஆயத்தம் 162
பாடரூப பேதங்கள் 68
பாட வேற்றுமைகள் 68
பாபு ரெட்டியார் 220
பாரதி 138
பாரதியார் 180
பார்த்தன் கணை 254
பார்த்தசாரதி 253
பார்த்தன் தேர் 253
பாலகிருஷ்ணன் R. 46
பாலகிருஷ்ண நாயுடு175
பால சுப்பிரமணியம் 285
பால சுப்பிரமணியம், சி. 352, 358, 359
பாலசுப்பிரமணியம் P. 353, 358
பால்வரைத் தெய்வம் 364
பாஸகவி 59
பாஸ்கரத் தொண்டைமான், தொ. மு. 175, 385
பாவேந்தர் 32

**பி**

பிதிர் வேள்வி 187
பிரதி மாநாடகம் 59
பிராசங்கிகம் 203, 205
பிராரத்த கருமம் 382
ஃபிராபெல் 156
பிள்ளையார் பட்டி 170, 306, 307, 310
பிள்ளையார் பட்டிக்காரர் 124
பிள்ளையார்பட்டி வைத்தியர் 365

**பீ**

பீமன் 260

**பு**

புண்ணியாத்மாக்கள் 330
புதிய-கெட்டிக் கட்டடம் 33
புதிய கல்விக் கொள்கை 312
புதுநகர் 17
புத்தருடைய திருமேனிகள் 308
புரவித்தேரோன் 259
புலிகேசி 17
புழுங்கல் அரிசித்தவிடு 296
புனிதசூசையப்பர் கல்லூரி 48

**பூ**

பூதத்தாழ்வார் 132
பூதிச் செய்தி 330
பூனையார் வீட்டுத்தம்பு 44

**பெ**

பெரகம்பி 125, 135, 393
பெரியார் 125

பெஸ்டலாஸ்ஸி 156

**பே**

பேச்சுக்கலை 129
பேயாழ்வார் 133
பேராசிரியர் 289

**பொ**

பொய்கையார் 132
பொன்வாணிகன் 203
பொன்னப்பன் 378, 381

**போ**

போலி நாடாளுமன்றம் 315

**ம**

மகராசன் எஸ், ஜஸ்டிஸ் 175
மகவான் மைந்தன் 265
மகளிர் இல்லம் 49, 51
மகாகணபதி அய்யர் 141
மகாமோகம் 302
மகேந்திரவர்மன் 171
மங்கோம்பு ஆண்டி அய்யர் விடுதி 187
மசால்வடை 333
மச்சாணிக்கொத்து 201
மடிமாங்காய் 205
மணவாளன் 12, 13
மணவாள மாமுனிகள் 131
மணவாள ராமாநுஜம், டாக்டர் 320
மணி V.S. 281
மணியன் T.V.S. 228, 323, 330
மணியன் நடவடிக்கை 336
மண்ணாங்கட்டி 92
மதுரைத் தமிழ்ச்சங்கம் 235
மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவர் 241
மதுரை தியாகராசர் கல்லூரி 351
மதுரை மாவட்ட கல்வி அதிகாரி 209
மரகதவல்லி அம்மையார் 49, 50, 55
மருதங்குடி நாயனார் 170
மர்ரேகம்பெனி ராஜம் 68, 403
மலக்கோட்டை 47
மறக்கள வேள்வி 277
மறைமலை அடிகள் 235
மனக்கண் 289
மனத்தைத் தயாரித்தல் 162

**மா**

மாடல மறையோன் 215
மாணிக்கம், வ.சுப. 285
மாணிக்கவாசகம்பிள்ளை 8
மாண்டிசாரி 157
மாண்டிசாரி அம்மையார் 145
மாண்டிசாரிப்பள்ளி 145
மாதுர்பூதம், P. 12
மாமல்லபுரம் 133

மாமியார்-மருமகள் ஒற்றுமை 403
மாயனார்விரகு 270
மாரி முத்துA,.229
மாவட்டக் கல்வி அதிகாரி 207
மானிட உடல் 18
மானிடச் சட்டை 278
மி
மிருணாளினி 45
மீ
மீனாட்சி அம்மை 291
மீனாட்சி அம்மை குறம் 290
மீனாட்சி சுந்தரம், 288, 299
மீனாட்சி சுந்தரம் T.D 349
மீனாட்சி சுந்தரம் பிள்ளை தெ.பொ. 107
மு
முகஸ்துதி 360
முகாம் தலைவர் 314
முகுந்தன் 245
முதலாழ்வார்கள் 131
முதலியார் ஏ.எல் 148, 150
முதுகன்னியர் 360
முத்திநாதன் 131
முத்தி நாதர்கள் 131
முத்து கணேசன், ரெ. 18
முத்துசாமி 12, 14
முத்து சிவன், ஆ.8, 16, 173
முத்துவேல்பிள்ளை 13,69
முத்துராமன், மெ.செ.மெ 13
முருகப்பனார் 60, 65, 67, 97
முருகப்பர், சொ. 15, 48, 105, 374
மு.வ. 107, 175
முனியாண்டி, வீ.140,371
முறைவல்லார்கள் 287
முஸ்ஸோலினி 366
மூ
மூன்று விரோதிகள் 338
மெ
மெய்யப்பச் செட்டியார், எ.வி. 228
மெய்யப்பா, எப். குமாரி 224, 313
மெய்யுணர்தல் 278
மெய்ப் பொருள்நாயனார் 130
மெழுகின் துணை 201
மே
மேலிபிரான்சி 157
மேனன், ஐ.என்.39, 139, 146
மை
மைசூர்பாகு 92
யா
யாத்ருசிகம் 293

ர
ரசிகமணி டி.கே.சி. 59, 60
ராமச்சந்திரமானஸ் 59
ராமாயணம் 59, 60
ராமுடு 315
ராய. சித. 199
ராய. சொ. 52, 53, 56, 82, 107, 170, 236, 237, 239, 242, 244, 245, 254, 257, 262, 263, 266, 274, 337, 339, 351, 371
ராய. சொ. விளக்கம் 248, 250, 255
ராய. சொ. உமையாள் மண்டபம் 211

ரூஸோ 156

ரெங்கூன் ஹால் 240
ரெட்டியார் நாள் 165

வ
வடகலையார் 131
வட்டத் தொட்டி 75, 81
வயிரவன் பட்டி 311
வரதராசன் மு 354
வரதாச்சாரியார், நீதிபதி 144
வர்க்கீஸ், டாக்டர் 240
வலம்புரி விநாயகர் 172
வள்ளல், அழகப்பர் 195, 228, 304
வள்ளல், டாக்டர் 144
வன்மீக நாதன் 378
வா
வாசு தேவன், T.M. 215
வாதாபி 171
வாய்ப்பந்தல் 293
வாலி 65, 75
வான்மீகி முனிவர் 59
வான்மீகி ராமாயணம் 60
வாழ்வில் விஞ்ஞானம் 383
வி
விசுவ நாதன், R.K. 341
விசுவாமித்திரன் 71
விசுவாமித்திரர் 80
விண்டுசித்தன் 259
விதுரன் 24, 37, 268
விநாயகப்பெருமான் 330, 331
விலைமாதர்கள் 76
வில்லிபாரதவிருந்து 253
வில்லிபுத்தூரார் 248, 249
வில்லிபுத்தூராழ்வார் 266
வில்விசயன் 257
விவேகம் 302
விவேகாநந்தர் மாணவர்
விடுதி 276
விடுமன் 37
வீ
வீடணன் 301
வீர அபிமன்யூ 304

வீர பாண்டியன் 56
வீராசாமிபத்தர், எஸ் 208

**வெ**

வெண்பட்டுஜிப்பா 240
வெள்ளிப் பாடல்கள் 79
வெள்ளியம்பலத்தம்பிரான் 79

**வே**

வேங்கடசாமி நாட்டார் 370
வேங்கடராஜுலு ரெட்டியார், வே. 30, 298, 378, 412
வேங்கடாசலம் 215
வேங்கடாசலம் செட்டியார் C.V.CT 120, 241, 242, 243, 320, 335, 336, 339, 360, 361
வேங்கடாச்சாரி 232
வேங்கடேசன் 45, 47
வேதாசலம் 235
வேலங்குடி 307

**வை**

வைணவ சம்பிரதாயம் 37
வையாபுரிபிள்ளை, எஸ். 56, 107
வைத்திநாதய்யர் 237
வை.மு.கோ. 69
வை.மு.கோ. கம்பராமாயணம் 68
வை.மு.கோ. பதிப்பு 73, 80
வைரவன்பட்டி 307
வைராக்கியம் 302

**வொ**

வொர்ட்ஸ் வொர்த் 286

**வடமொழி**

ஜபல்பூர் 377
ஜீவானந்தம், ப 365
ஜீவா 365
ஜேசுதாசன் 224, 226, 322
ஜேம்ஸ்ராஸ் 157
ஷில்லர் 157
ஷெல்லி 286
ஸ்டாலின் ஹால் 157
ஹிட்லர் 366
ஹெய்சன்பர்க் 373
ஹெர்பர்ட் 157
ஹெர்பார்ட் 157
ஸ்ரீவசனபூஷணம் 203

# பேராசிரியர்
# டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் நூல்கள்

**ஆசிரியம் :**

1. தமிழ் பயிற்றும் முறை
2. கவிதை பயிற்றும் முறை
3. அறிவியல் பயிற்றும் முறை
4. கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனஸ்கோ : அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்

**இலக்கியம் :**

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
11. பரணிப் பொழிவுகள்
12. அறிவியல் தமிழ்
13. திருக்குறள் கருத்தரங்கு மலர்—1974(பதிப்பு)
14. கம்பனில் மக்கள் குரல்
15. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
16. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
17. தமிழ் இலக்கியத்தில்—அறம், நீதி முறைமை
18. புதுவை(மை)க் கவி சுப்பிரமணிய பாரதியார்—ஒரு கண்ணோட்டம்.

சமயம் தத்துவம் :

(அ) விளக்க நூல்கள் :

19. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
20. சிலநோக்கில் நாலாயிரம்
21. வைணவமும் தமிழும்
22. சைவசமய விளக்கு
23. ஆன்மிகமும் அறிவியலும்
24. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
25. கலியன் குரல்
26. கீதைக் குறள் (பதிப்பு)
27. கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில் (பதிப்பு)
28. கண்ணன் துதி
29. இராமர் தோத்திரம்
30. கீதைப் பொழிவுகள்
31. ஆண்டாள் பாவையும் அழகுதமிழும் (பதிப்பு)

(ஆ) திருத்தலப் பயண நூல்கள் :

32. மலைநாட்டுத் திருப்பதிகள்
33. தொண்டைநாட்டுத் திருப்பதிகள்
34. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
35. வடநாட்டுத் திருப்பதிகள்
36. சோழநாட்டுத் திருப்பதிகள்-முதற்பகுதி (த. அ. ப. பெற்றது)
37. சோழநாட்டுத் திருப்பதிகள்-இரண்டாம் பகுதி (ஷை)
38. தம்பிரான் சோழர்

39. நாவுக்கரசர்
40. ஞானசம்பந்தர்
41. மாணிக்கவாசகர்

திறனாய்வு :

42. கவிதை யநுபவம்
43. பாட்டுத் திறன்
44. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்
45. அகத்திணைக் கொள்கைகள்
46. புதுக்கவிதை - போக்கும் நோக்கும்
47. கண்ணன் பாட்டுத் திறன்
48. பாஞ்சாலிசபதம் - ஒரு நோக்கு
49. பாரதீயம் (த. அ. ப. பெற்றது)
50. குயில் பாட்டு - ஒரு மதிப்பீடு
51. உயிர் தந்த உத்தமன் (பதிப்பு)
52. ஆழ்வார்கள் ஆரா அமுது
53. விட்டுசித்தன் விரித்த தமிழ்
54. சடகோபன் செந்தமிழ்
55. பரகாலன் பைந்தமிழ்

வரலாறு தன்வரலாறு :

56. நினைவுக் குமிழிகள்-முதற்பகுதி
57. நினைவுக் குமிழிகள் - இரண்டாம் பகுதி
58. நினைவுக் குமிழிகள் - மூன்றாம் பகுதி
59. நினைவுக் குமிழிகள் - நான்காம் பகுதி
60. நினைவுக் குமிழிகள் - ஐந்தாம் பகுதி
61. மலரும் நினைவுகள்
62. வேமனர்


63. குரஜாட
64. சி. ஆர். ரெட்டி
65. தாயுமான அடிகள்
66. பட்டினத்தடிகள்
67. வடலூர் வள்ளல்
68. பிரதிவாதி பயங்கரம்

அறிவியல் :


69. மானிட உடல்
70. அணுவின் ஆக்கம்
71. இளைஞர் வானொலி
72. இளைஞர் தொலைகாட்சி
73. அதிசய மின்னணு
74. தமது உடல் (த. அ. ப. பெற்றது)
75. இராக்கெட்டுகள் (த. அ. ப. பெற்றது)
76. அம்புலிப்பயணம்
77. தொலை உலகச் செலவு
78. அணுக்கரு பௌதிகம் (செ. பல்கலைக் கழகப் பரிசு பெற்றது)
79. இல்லற நெறி
80. வாழையடி வாழை
81. அறிவியல் விருந்து (தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றது)
82. வானமண்டலக் காட்சி

**ஆராய்ச்சி :**

83. வடவேங்கடமும் திருவேங்கடமும்
84. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி
85. Religion and Philosophy of Nalayiram with Special Reference to Nammalvar
86. Studies in Arts and Science: (61st Birth Day Commemoration Volume)
87. Collected papers.




வேங்கடம் வெளியீடுகள்
AD-13 (PLOT. 3354)
அண்ணா நகர் - சென்னை-600 040




VENKATAM PUBLICATIONS
AD-13 (PLOT. 3354)
ANNA NAGAR - MADRAS-600 040.

## இந்நூலாசிரியரைப் பற்றி....



பிறப்பு : 27-8-1916

73-அகவையைக் கடக்கும் இந்த நூலாசிரியர் பி.எஸ்சி., எல்.டி., வித்துவான், பி. ஏ., எம்.ஏ., பிஎச்.டி., பட்டங்கள் பெற்றவர். ஒன்பதாண்டுகள் துறையூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகவும், (1941-1950)- பத்து ஆண்டுகள் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் (1950-60), பதினேழு ஆண்டுகள் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகவும், பேராசிரியராகவும் (1960—77) பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1978 - இல் சென்னையில் குடியேறி பதினைந்து மாதங்கள் (1978-பிப்ரவரி - 1979 - ஜுன்) கலைக் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவத்தை ஆராய்ந்து டாக்டர் (பிஎச்.டி) பட்டம் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டவர். பெரும்பாலும் இவை நூல்வடிவம் பெற்றன; பெற்றும் வருகின்றன. தவிர ஆசிரியம் (5), இலக்கியம் (12), சமயம் (25), திறனாய்வு (12), அறிவியல் (14), ஆராய்ச்சி (5), வாழ்க்கை வரலாறு (14)-என்று 87 நூல்களின் ஆசிரியர். இவர்தம் அறிவியல் நூல்களில் இரண்டும், சமய நூல்களில் மூன்றும், திறனாய்வு நூல்களில் ஒன்றும் தமிழக அரசு பரிசுகளும்; அறிவியல் நூல்களில் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகப் பரிசும், ஒன்று தமிழ் வளர்ச்சிக்கழகப் பரிசும் - ஆக எட்டு நூல்கள் பரிசுகள் பெற்றவை. இவர்தம் அறிவியல் பணியைப் பாராட்டி குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினம் 'அருங்கலைக்கோன்' என்ற விருதையும் பண்ணுருட்டி வைணவ சபை இவரது சமயப் பணியைப் பாராட்டி 'ஸ்ரீசடகோபன் பொன்னடி' என்ற விருதையும், தமிழக அரசு திரு. வி. க. விருதையும் வழங்கிச் சிறப்பித்தன. இனிமை, எளிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச் சிறப்புகளாகும்.

---

MK Color Process, Madras-14 Phone : 848311
Design by P. N. Anandan